# வரலாறு கற்பித்தல்

ஆர். திருஞானசம்பந்தம்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண்—776

# வரலாறு கற்பித்தல்

(பட்டப்படிப்பிற்குரியது)

(திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி வெளியிடப்படுகிறது)

ஆசிரியர்
**ஆர். திருஞானசம்பந்தம்**, எம். ஏ., எல். டி.,
முதல்வர்,
அரசினர் பயிற்சிக் கல்லூரி,
உரத்தநாடு.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition, November—1977
Number of Copies—1000

T.N.T.B.S. (C.P.) No. 776

© Government of Tamilnadu

# TEACHING OF HISTORY

R. THIRUGNANASAMBANDAM

*Price Rs.* **11-40**

Published by the Tamilnadu Text-book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

*Printed by*

Sri Rajarajeswari Combines (Art Colour Printers), 42, Badrian Street, Madras-600 001.

# அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினே மூாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் இளங் கலை வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1969 ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர் களின் ஊக்கம், பிறபல துறைகளில் தொண்டு செய்வோர் இதற் கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன்வந்துள்ள நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில் கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகமும் சென்னைப் பல்கலைக்கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சி யைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாற்றியல், அரசியல், உளவியல், பொருளியல், மெய்ப் பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணித வியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டவியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூலநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்று இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **வரலாறு கற்பித்தல்** என்னும் இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **776**ஆவது வெளி யீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **811** நூல்கள் வெளிவந்துள் ளன. இந் நூல் மைய அரசு, கல்வி சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்ட'த் தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம்பெற வேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயிலவேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிடத் தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ்; எங்கும் தமிழ்' என்னும் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தமிழக ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்த தாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவி களுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக!

செ. அரங்கநாயகம்

# பொருளடக்கம்


பக்கம்

**1. அறிமுகம்** 1

1. வரலாறு 1

இதன் பொருள்—வரலாற்றுப் பாடத்தின் வரம்பு

2. வரலாறு வகிக்கும் சிறப்பிடம் ... 9

3. வரலாற்றின் வரலாறு ... 12

4. வரலாற்றின் பல்வேறு கருத்துக் கோடல்கள் ... 24

வாழ்க்கை வரலாறு பற்றிய கருத்துக்கோடல்——வரலாறு ஒரு கடந்தகாலப் பதிவேடு—படிமுறை வளர்ச்சிக் கருத்துக் கோடல்.

5. வரலாறு—அறிவியல் பாடம் ... 30

**2. பொதுத்தன்மைகள் ... 35**

1. வரலாற்றுப் பாடத்தின் அளவுகள் ... 35

தொடர்ச்சி—வளர்ச்சி—காலம்—இடம்

2. நிலநூல்—வரலாற்றின் அடித்தளம் ... 41

3. வரலாற்றின் கால வரிசையின் பிரிவுகள் ... 46

4. கால வரிசையின் முக்கியத்துவம் ... 48

**3. நோக்கங்களும் பயன்களும் ... 54**

1. வரலாறு கற்பிப்பதன் நோக்கங்கள் ... 54

பொது நோக்கம்—சிறப்பு நோக்கங்கள்

2. வரலாறு கற்பிப்பதால் ஏற்படும் பயன்கள் ... 58

நடைமுறைப் பயன்கள்—பண்பாட்டுப் பயன்—அறநெறிப் பயன்—கட்டுப்பாட்டுப் பயன்.

**4. வரலாற்றுப் பாடத்திட்டம் ... 68**

1. பொருளடக்கம் ... 68

பக்கம்

கல்வி ஏற்பாடு—கல்வி ஏற்பாட்டை உருவாக்குதல்—பாடப் பொருள்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய தன் அவசியம்—விரிவான பாடத்திட்டம் இருக்க வேண்டியதன் அவசியம்—வரலாற்றின் வகைகள்—உள்ளூர் வரலாறு—நாட்டு வரலாறு—உலக வரலாறு—கதைகளும் புராணங்களும்— வாழ்க்கை வரலாறு—அரசியல் வரலாறு—சமூக வரலாறு—பொருளாதார வரலாறு—அரசியல் அமைப்பின் வரலாறு—மதம், கலை, கட்டடக் கலை ஆகியவற்றின் வரலாறு.

2. தரப்படுத்துதல் ... 103

பள்ளி வகுப்புப் பிரிவுகள்—பாடப் பொருளைத் தேர்ந்தெடுப்பதில் மாறுதல் உண்டுபண்ணும் கோட்பாடுகள்—இயல்பான நாட்டம், கவர்ச்சிபற்றிய கோட்பாடுகள்—பண்பாட்டு வரன்முறைக் கொள்கை—அண்மையிலிருந்து சேய்மைக்குச் செல்லும் தத்துவம்—சிறப்பான நோக்கு—குழந்தையின் மனவியலின் வளர்ச்சிக்கும் பாடப்பொருளின் தேவைக்குமான ஏற்றமுறை.

3. வரலாற்றுப் பாடப்பொருளின் அமைப்பு முறைகள் ... 114

கால வரிசை முறை—பொது மைய முறை—சுருள் முறை—அலகு முறை—தலைப்புச்சார் முறை—பின்னோக்கு முறை.

4. வரலாறு கற்பிக்குங்கால் பிற பாடங்களுடன் தொடர்புறுத்தல் ... 125

இடைநிகழ் தொடர்புறுத்தல்—வரலாறும் குடிமை நூலும்—வரலாறும் நிலநூலும்— வரலாறும் இலக்கியமும்—செய்யுள்—நாடகம்—புனைகதைகள்.

5. வரலாறு கற்பிக்கும் முறைகள் ... 136

பழைய முறைகள்—பாடப்புத்தக முறை—விரிவுரை முறை—வாய்மொழி மூலம் கற்பித்தல்—விதிவரு முறை—ஒன்றுகூடி உரையாடல்முறை—மீள்பார்வையும், பன்முறைப் பயிற்சியும்—புதிர்தீர் முறை—செயல் திட்ட முறை—ஆய்வுக்கூட முறை—டால்டன் திட்டம்—மேற்பார்வைப் படிப்பு—மூல முறை—நடித்தல்—கடந்த காலத்தை மெய்ப்பிக்க உதவும் சாதனங்கள்,

பக்கம்

6. பாடத்தைத் திட்டமிடுதல் ... 193

பாடத்தைத் திட்டமிடலின் அவசியம்—பாடத் திட்டமிடுதலின் தேவைப்பாடுகள் — பாடத்திட்டங் களின் பலவித அமைப்புகள்.

7. வரலாறு கற்பிக்க உதவும் தளவாடங்களும் மூலங் களும் ... 209

பாடப்புத்தகங்கள்—இணைவழிப் படிப்பு—வரலாற்று மேற்கோள் நூலகம்—காட்சி-கேள்விக் கருவிகள்—வரலாற்றுப் பாட அறை—சிறு தொலைப் பயணங்கள்—சமுதாய வளங்களைப் பயன்படுத்துதல்—மாணவர் களின் பதிவேடுகள்—வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்—இக்கால நிகழ்ச்சிகளைக் கற்பித்தல்—மதிப்பீட்டின் நோக்கும் தேர்வுகளும்.

**பின்னிணைப்பு ... 300**

1. வமிசாவளி(டியூடர், ஸ்டுவர்ட், ஹனோவர் வமிசங்கள்) 300
2. கூர் உருளை அனுபவங்கள் ... 302
3. கற்பிக்க உதவும் துணைக் கருவிகள் ... 303
4. காலக்கோடு-விளக்கப்படம்(1850—1950) ... 305
5. வட்டவடிவக் காலக்கோடு—பாபர் ... 307
6. விளக்கப்படம்—சர்வதேச சங்கத்தில் உலக மக்கள் தொகையின் வீதம் ... 308
7. ,, ஐக்கிய நாடுகள் அமைப்பு ... 309
8. ,, மறுமலர்ச்சி ... 310
9. ,, தொழிற்புரட்சி ... 311

**மேற்கோள் நூற்பட்டியல் ... 312**

# 1. அறிமுகம்
(Introduction)

## 1. (அ) வரலாறு—இதன் பொருள்
(Meaning of History)

எல்லாவகை அறிவுத் தொகுதிகளையும் இருவகைப் படுத்தலாம். அவையாவன :

(a) இயற்கையியல் (Natural Science)

(b) சமூகவியல் (Social Science)

படைப்பின் இயக்கங்களைக் கூறும் அறிவுத் துறைகளான **இயக்கவியல்** (Physics), **இயைபியல்** (Chemistry), **நில உட்கூற்றியல்** (Geology), **உயிரியல்** (Biology), **விலங்கியல்** (Zoology), **தாவரவியல்** (Botony) போன்ற உட்பிரிவுகளைக் கொண்ட இயலுக்கு இயற்கையியல் என்று பெயர்.

மனிதனுடைய வாழ்க்கையும் சமூகத்தில் அவன் ஆற்றும் செயல்களும் சமூகவியலில் அடங்கும். அவை பின்வரும் பாடத் தலைப்புகளின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை வரலாறு (History), நிலநூல் (Geography), பொருளாதாரம் (Economics), அரசியல் (Politics), மனித இன வரலாறு (Anthropology) போன்றவை.

ஒரு குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட காலத்தில் வாழ்ந்த மனிதனின் வாழ்க்கையைச் சமூகப் பாடம் விவரிக்கின்றது. மனிதத் தொடர்புகளை விவரித்துக் கூறும் பாடங்களுக்கு அளிக்கப் பட்டுள்ள பெயர் சமூகப் பாடம் என்பதாகும். அவற்றுள் சிறப் பான இடத்தைப் பெறுவது வரலாறு ஆகும்.

**வரலாறுபற்றிய கருத்துகள்** (Opinion about History)

ஆசிரியர்களால் பலவகையாக வரலாறு வரையறுத்துக் கூறப் பட்டுள்ளது. வரலாற்றின் தன்மை, பலன்பற்றிய கருத்து வேறு

படுவதால் வரையறுத்துக் கூறப்பட்டவைகளும் வேறுபட்டுள்ளன. ஒரு சிலரின் கூற்று வரலாறு பயனுள்ள ஒரு பாடமாகக் கருத முடியாது என்பதாகும். கிறித்தவ மத ஸ்தாபனத்திற்கு எதிர்ப் பான கருத்துகளை மக்கள் மனத்தில் தோற்றுவிப்பதால் வரலாறு கற்பிப்பதை இயேசு சங்கத்தினர் எதிர்த்து வந்தனர். வரலாறு அறிவுறுத்தும் தன்மை (instructive) இல்லாமல் இருப்பதால், அதைக் கல்வித் திட்டத்தில் சேர்க்கக் கூடாதென்று **ஹெர்பெர்ட் ஸ்பென்ஸர்** (Herbert Spencer), **அலெக்சாந்தர் பெயின்** (Alexander Bain) போன்றவர்கள் கூறினர்.

இதற்கு மாறாகச் சில அறிஞர்கள் வரலாறு கற்பிப்பது மிகவும் சிறந்தது என்று கூறினார்கள். ஆசிரியர் ஹியூம் (Hume) கூற்றுப் படி 'வரலாறு கற்பனைப் படைப்பால் மனமகிழ்ச்சியை ஏற்படுத்து கின்றது; அறிந்துகொள்ளும் திறனை வலிமை பெறச் செய்கின்றது; நற்குணச் செயல்கள்மீது விருப்பும் பெறச் செய்கின்றது'. 'நேர்மை, தவறு பற்றிய விதிகளைப் பல நூற்றாண்டுகளாகப் பறை சாற்றிவரும் அதன் குரல் எப்பொழுதும் ஒலித்துக்கொண்டிருக் கின்றது,' என்று ஆசிரியர் **பிரௌடு** (Froude) வரலாற்றை வர்ணிக்கின்றார். ஆசிரியர் **ஜோன்ஸ்** (Jones) கருத்துப்படி 'வரலாறு என்பது வாழ்க்கை அனுபவங்களை மெய்ப்பிக்க உதவும் சுரங்கம் என்பதும், மனித இனத்தின் அனுபவங்களைக் கொண்டு நன்மை பெறுவதற்குத் தற்கால இளைஞர்கள் அதைக் கற்க வேண்டும்,' என்பதும் விளங்கும். பள்ளிக்கூடத்தில் ஒரு மையப் பாடமாக வரலாற்றை அமைத்து அதைச் சார்ந்த மற்றப் பாடங் களைக் கற்பிக்க ஆசிரியர் **ஜில்லர்** (Ziller) ஒரு திட்டத்தை அமைத்தார்.

மேற்கூறிய கருத்து வேறுபாடுகளை நாம் உற்று நோக்குவோ மாயின், வரலாற்றுப் பாடத்தின் பொருள் விளக்கத்தை நாம் நன்கு உணரவேண்டுமென்பது தெளிவாகும்.

### வரலாறு என்பது என்ன ? (What is History ?)

வரலாறு பற்றி அறிஞர்கள் சிலர் வரையறுத்துக் கூறியிருப் பதை எடுத்துக் கூறலாம். ஆசிரியர் **ஹென்றி ஜான்ஸன்** (Henry Johnson) கூறியிருப்பதாவது : 'பொது நோக்கமாகப் பார்த்தால், இதுகாறும் நடந்தவை எல்லாம் வரலாறு ஆகும். அஃது எப்படி யிருப்பினும் கடந்த காலமே வரலாறு ஆகும்.' 'நிகழ்ச்சிகளைக் கோவைப்படுத்தி, அவற்றின் தொடர்புகளை இணைத்துக் கூறுவது வரலாறு,' என்று ஆசிரியர் **ஃபிண்ட்லே** (Findlay) வர்ணித்துள்ளார். பேராசிரியர் **மெயித்லாந்து** (Maitland) கருத்துப்படி, 'மனித இனம்

கூறியது, செயலாற்றியவை, அவற்றிற்கு மேலாக அவர்கள் நினைத்த எண்ணங்கள் யாவுமே வரலாறு ஆகும்'. இம் மேற்கோள் களை நாம் ஆராய்வோமாளுல், வரலாற்றின் பொருள் மிகவும் விரிவானது என்பதை நாம் அறிகின்றேம்.

மனித இனத்தின் முன்னேற்றத்தை நன் முறையில் குழந்தை களுக்குப் புகட்ட வரலாற்றின்மூலம் நாம் முயலுகிறேம். பல நூற்றுண்டு காலப் பகுதியில் எவ்வாறு மனிதன் முன்னேற்றம் அடைந்தான் என்னும் கவர்ச்சியான வரலாற்றைக் குழந்தை களுடன் சேர்ந்து ஆராய ஆரம்பிக்கின்றேம். மனிதன் தன் சூழ்நிலையோடு கடந்தகாலத்தில் நடத்திய போராட்டங்களையும், இப்போது நடத்திவரும் போராட்டங்களையும், நாகரிக வளர்ச்சி யின் தன்மையையும் விவரித்துக் கூற முற்படுவது வரலாற்றின் பொருளடக்கமாகும்.

**வரலாறு** (Historia) என்ற சொல் கிரேக்க மொழியிலிருந்து உருவாயிற்று. சட்டத்துறைபற்றிய பூசலில் சான்றுகளை ஆய்வு செய்வதை **ஹோமர்** (Homer) வரலாறு என்ற தொடரால் குறிப் பிட்டார். ஆய்வு செய்வதால் ஏற்படும் செய்திகளைக் குறிப்பிடு வதற்குப் பதிலாக உண்மையை வெளிப்படுத்தும் முயற்சியை இத் தொடர் குறிப்பிட்டது. **ஹெரடட்டஸ்** (Herodotus) காலந் தொட்டு இவ்வித வரையறை செய்யப்பட்ட கருத்தில் இச் சொல் வழங்கப்பட்டது. அதாவது மனிதர்களைப் பற்றிய கடந்த கால நிகழ்ச்சிகளை வர்ணிப்பதாகும்.

### பண்டைய கருத்துக் கோடல் (Old Concept of History)

தொடக்கக் காலத்தில் கூறப்பட்ட கதைகள் எல்லாம் மக்களின் மனமகிழ்வுக்காகவும், நாட்டின் இளைஞர்களை ஊக்குவிப் பதற்காகவும், அவர்களின் கற்பனைச் சக்தியைத் தூண்டவும், கடந்த காலத்தில் வீரச் செயலாற்றியவர்களைப் பற்றிக் கூறுவதாக வும் இருந்தன. அந்தக் கதைகளைக் கூறுகின்றவர்கள் தாங்கள் கூறும் செய்திகளைப் பற்றி ஆய்வு செய்ததாகத் தோன்றவில்லை. நற்குணங்களையும், தீய செயல்களையும் மிகைப்படுத்தி வர்ணித் தனர். உண்மைச் செய்திகளையும், கற்பனைச் செய்திகளையும் விவரித்துக் கூறினர். ஐரோப்பாவின் இடைக்காலம் வரையிலும் வரலாறு சமயவியலின் **பணிப்பெண்**ணுகை (handmaid) இருந்தது. அதன் பயன்களைப் பெறவேண்டியதற்காக வரலாறு கற்கப்பட்டு வந்தது. காலவரையறை முறையைப் பின்பற்றிக் கூறும் முறையைப் பற்றிக் கவலைப்படவில்லை. யூதர்களைப் பற்றிய வர்ணனைச் செய்தி களுக்குக் கிறித்தவ சமயத் தலைவர்கள் உலக வரலாற்றில் முதலிடம்

அளித்தனர். பெரிய பேரரசுகளைப் பற்றிய வர்ணனையைப் புறக் கணித்தனர். அதிசய நிகழ்ச்சிகளைப் பற்றி தாராளமாக வர்ணித் தனர்.

**கருத்துக் கோடலில் மாற்றம்**

19ஆம் நூற்றுண்டில் **அறிவியல் முறையில்** (Scientific method) செய்திகளை ஆராயும் வழக்கு நடைமுறைக்கு வந்தது. **வரலாற்று ஆவணங்களின்** (Historical records) முக்கியத்தினை எல்லோரும் உணர ஆரம்பித்தார்கள். அறிவியல் முறையைப் பின்பற்றி வரலாற்று அறிஞர்கள் வரலாற்றை எழுத ஆரம்பித்தார்கள்.

பழைய முறையில் வரலாறு எழுதப்பட்டதின் குறைகளில் மூன்றினைக் கூறலாம்:

(i) வரலாற்று நிகழ்ச்சிகள் உண்மையின் அடிப்படையில் எழுதப்படவில்லை. (ii) மேற்போக்காக வரலாறு எழுதப்பட்டது. அரசர்கள், அரசிகள், படைத்தலைவர்கள், அமைச்சர்களின் செயல்கள் மட்டுமே எடுத்துக் கூறப்பட்டு வந்தன. போர் நிகழ்ச்சி களும், அரசியல்பற்றிய செய்திகளும் வர்ணனையில் இடம் பெற்றன. மக்கள் வாழ்க்கையைச் சார்ந்த சமூக, பொருளாதாரக் கருத் துகள் வர்ணனையில் இடம் பெறவில்லை. (iii) வரலாறு எழுதும் முறையும் ஆய்வு அடிப்படையில் இல்லை. **மூலங்களை** (sources) ஆராய்வதற்கும் சிரமம் எடுத்துக்கொள்ளப்படவில்லை. வரலாற் றுக்கும் புராணக் கதைகளுக்கும் வேறுபாடில்லாமலிருந்தது.

**வரலாற்றின் பொருள்** (Meaning of History)

வரலாறு என்பது எதைக் குறிக்கின்றது என்பதை இப்பொழுது தெளிவாக விளங்கிக்கொள்ள இயலும்.

மனிதனின் முன்னேற்றத்தையும், நாகரிக வளர்ச்சியையும் அறிவியல் முறையைப் பின்பற்றி வர்ணித்துக் கூறுவதே வரலாறு ஆகும். வெறும் **செய்திகளையும்** (facts) **தேதிகளையும்** (dates) கூறுவது வரலாறு அன்று. நிகழ்ந்துகொண்டிருக்கின்றதும், உற் சாகமூட்ட வல்லதுமான மனிதனின் கதையையும், அவனுடைய **சாதனைகளையும்** (achievements) வரலாறு கூறுகின்றது. பழைய நிகழ்ச்சிகளைக் கொண்டு தற்கால வாழ்க்கையின் நிலைகளை விளக்கு வதற்கு வரலாறு முயல்கின்றது. நாகரிகத்தின் தோற்றத்தை யும், அதன் வளர்ச்சியையும் வர்ணிக்கின்றது. விலங்கு நிலையி லிருந்து நாகரிகம் மிகுந்த இவ்வுலக வாழ்க்கைக்கு மனிதன் வளர்ச்சி பெற்றதைக் கூறுவதே வரலாறு என்று கூறப்படுகின்றது.

மனிதன் உலகத்தில் தோன்றியதிலிருந்து அவனது வரலாறு ஆரம்பமாகின்றது. மனிதன் தன் வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்துவதற்காக அவன் சென்று தங்கிய இடங்களும், கண்டங் களும் அதில் இடம் பெறுகின்றன. மனித வாழ்க்கையின் வளர்ச் சிக்குத் தொண்டாற்றியவர்களையும், அரசியல், சமயம், சமூகம், இலக்கியம், கலை மேம்பாட்டுக்கு உதவியவர்களையும்பற்றி வரலாறு எடுத்துக் கூறுகின்றது. பலதரப்பட்ட செய்திகளை ஆய்வு செய்து, ஒருங்கமைத்து, அறிவியல் முறையில் நிகழ்ச்சிகளை வரலாறு எடுத் துக் கூற ஆரம்பித்தது. சுருங்கக் கூறுவோமாயின், 'இவ்வுலகில் மனிதனின் படிமுறை வளர்ச்சியை (Evolution of man on earth) விவரித்துக் கூறுவதே வரலாறு எனப்படும்.

கடந்த காலத்தில் உண்மையாக நடந்த நிகழ்ச்சிகளை நேர்மை யாக எடுத்துக் கூறுவது வரலாறு என்று நாம் கண்டோம். வரலாறு என்ற சொல்லில் இரண்டு கருத்துகள் உள்ளடங்கியிருக்கின்றன. அவையாவன : (i) நிகழ்ச்சிகளின் தொகுப்பு (a sum of events). (ii) அந் நிகழ்ச்சிகளைப் பற்றிய வர்ணனை (a narrative account of these events). இந்த இரண்டு கருத்துகளைக் கூறுவதற்கு ஒரே சொல் வழக்கிலிருப்பதால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. நிகழ்ச்சிகளின் தொகுப்பைக் குறிப்பது வரலாறு. அந்த நிகழ்ச்சி களை எடுத்துக் கூறுவது 'எழுத்தாண்மைக் கலை' (Historio-graphy) என்ற சொல்மூலம் குறிப்பிடவேண்டும்.

**வினாக்கள்**

(1) வரலாறுபற்றி அறிஞர்கள் வரையறுத்துக் கூறியுள்ள வற்றில் இரண்டைக் கூறுக.

(2) வரலாறு என்பது என்ன ?

(3) வரலாறுபற்றிய பண்டைக் கருத்துக் கோட்பாட்டையும், புதிய கருத்துக் கோட்பாட்டையும் எடுத்துக் கூறுக.

## (ஆ) வரலாற்றுப் பாடத்தின் வரம்பு

(Scope of History)

வரலாற்றுப் பாடத்தின் வரம்பு மற்றைய பாடங்களின் வரம்பு களைவிட மிகவும் விரிவானது. நடைமுறையில் பார்த்தோமானால்

அதன் கவர்ச்சியும் எல்லையற்றதாக இருக்கிறது. 'வரலாறு' என்ற சொல் கிரேக்க வார்த்தை 'ஹிஸ்டோரியா' (Historia) என்பதிலிருந்து வழக்கில் வந்துள்ளது. இந்தக் கிரேக்க வார்த்தையின் பொருள் 'ஆராய்வு' (Enquiry or investigation) என்பதாகும். எதிர்காலத்தைப்பற்றி ஆராய்வது இயலாது. கடந்த காலத்தைப் பற்றி ஆராய்வது இயலும். நடப்புக் காலம் வெகு விரைவில் கடந்த காலமாக மாறிவிடும் தன்மையுடையது. எனவே, வரலாற்றுசிரியன் கடந்த காலத்தைப்பற்றி ஆய்வுசெய்யவேண்டியதாக உள்ளது. ஆனல், கடந்தகாலத்தின் எப் பகுதியை ஆய்வுக்கு உள்ளாக்குவது? மிகவும் பழமையான காலத்தை ஆய்வுக்கு உட்படுத்துவது மிகவும் கடினமானதாகும். ஏனெனில் அப்போது மனிதன் நாகரிக உலகிற்கு வரவில்லை. அக் காலத்தைப்பற்றிய அறிவு தெளிவற்றதாக இருப்பதால் அக் காலத்தைப் பற்றிய செய்திகளை வரலாற்றில் இடம் பெறச் சாத்தியமில்லை. ஏனெனில், அப்போது மனிதனுடைய செயல்கள் இயற்கையுடன் ஒன்றியிருந்ததால் அவற்றைப் புவியியல் பகுதியில் சேர்க்கவேண்டும்.

**இவ்வுலகில் மனிதன் அடைந்த மாற்றம் (Evolution of man on earth)**

பழைய கற்காலத்திலும், புதிய கற்காலத்திலும், உலோகக் காலத்திலும் மனிதனின் வாழ்க்கை பிற்கால சமூக வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைந்திருப்பதால் அதன் விவரம் மிகவும் கவர்ச்சியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனினும், தன் நிலையைப் பற்றிச் சிந்திக்கும் திறன் மனிதனிடம் அப்பொழுது இல்லை. அவ் வாழ்க்கையைப்பற்றி அறிய வரலாற்று ஆதாரங்கள் தொகுத்துக் கூறுவதற்கு ஏற்றவையல்ல. பிற்காலத்தில் சமூக வாழ்க்கையை மேற்கொண்டதும், எழுத்துக் கலையை உணர்ந்ததும், உடலுழைப்பிலிருந்து சக்தியை இயந்திர முறையில் பயன்படுத்துவதும், விவசாயம், மட்பாண்டம் செய்தல், நெருப்பின் பலனை அறிந்தது, உறைவிடம் அமைத்தல் போன்றவை மனிதனின் நாகரிக வாழ்க்கையின் தோற்றத்தின் அறிகுறிகளாகும். இவற்றைப் பற்றி வரலாறு ஆராய ஆரம்பிக்கின்றது. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும், மனித இன வரலாற்று அறிஞர்களும் வரலாற்று ஆய்வாளரின் கூட்டாளிகளாகும். மனிதனின் சமூக வாழ்க்கை வளர்ச்சியைப்பற்றி வரலாறு விவரமாக எடுத்துரைக்கின்றது.

**மனித இனத்தின் நாகரிக வளர்ச்சி (Growth of human civilization)**

வரலாறு கடந்தகால நிகழ்ச்சிகளைப் பற்றியதாக இருக்கின்றது. இந்தக் கடந்தகாலம் பலவிதத் தோற்றத்தில் காணப்

படுகின்றது. வரலாறு வளர்ச்சியடைந்து வருவதைப்பற்றிச் சிலர் புகழ்ந்து கூறுகின்றனர். மற்றும் சிலர் அதன் குறைபாடுகளைக் கண்டு வெறுக்கின்றனர். வால்டேர், கிப்பன் போன்ற வரலாற்று அறிஞர்கள் கூற்றை எடுத்துக் கூறலாம். 'குற்றங்களையும், இடையூறுகளையும் வர்ணிப்பது வரலாறு' என்று **வால்டேர்** (Voltaire) கூறுகிறார். 'மனித இனத்தின் குற்றச் செயல்கள், தவறுகள், இடையூறுகள் போன்றவற்றின் பதிவேடுதான் வரலாறு' என்று **கிப்பன்** (Gibbon) கூறியுள்ளார். ஆனால் வரலாறு கடந்த காலத்தில் நடைபெற்ற செயல்களின் தன்மைகளைப்பற்றி எடுத்துக் கூறுவது வரலாற்றின் வேலையில்லை. **நிகழ்ச்சிகளைக்** (events) கூறுவதே அதன் பணியாகும்.

### கோட்பாடுகளும் எண்ணங்களும் (Concepts and ideas)

மனிதர்கள் செய்துவந்த ஒவ்வொரு செயலும், மனத்தால் கருதிய ஒவ்வொரு எண்ணமும் கூட, நாம் அவற்றைச் சரிவரத் தெரிந்துகொள்வதற்கு வேண்டிய ஆதாரங்கள் இருந்தால், வரலாற்றிற்கு ஏற்பப் பகுதிகளாக அமைக்கமுடியும். அரசியல் திட்டங்களும் கோட்பாடுகளும், விவசாயம், கைத்தொழில், வாணிகம் முதலியவைகளும், மனிதர்களுடைய ஊண், உடை, நடத்தை, விளையாட்டு முறைகள் முதலியவை எல்லாம் வரலாற்றில் அடங்கும். எனவே, வரலாற்றின் பரப்பில் மனிதனின் சமூக வாழ்வு, முன்னேற்றச் செயல்கள், நாகரிக வளர்ச்சிகள், அரசியல், பொருளாதார முன்னேற்றங்கள் எல்லாம் அடங்கும். அவ்விதமே, சிறந்த கருத்துகள், பண்பாடுகள், நல்ல மரபுகள் போன்றவற்றின் தோற்றமும், வளர்ச்சியும் வரலாற்றின் எல்லைக்குள் அடங்கும்.

### பெரியோர்களின் சாதனைகள் (Achievements of Great men)

மனித இனம் நாகரிக வளர்ச்சியில் ஈடுபடும்பொழுது ஒரு சில பெரியோர்களின் சிறந்த செயல்களும், அவர்களின் வாழ்க்கையும் பிறருக்கு வழிகாட்டும் முறையில் இருக்கின்றன. எனவே, வரலாற்று ஆசிரியன் அப் பெரியோர்களின் வாழ்க்கையைப்பற்றி அறிய முற்படுகிறான்.

### பாமர மனிதனின் தொண்டு (The service of an ordinary Citizen)

சமூகத்தில் சிறப்பான இடத்தை இவ்விதத் தலைவர்கள் வகிப்பார்கள். இவர்களுக்கு வரலாற்றில் முக்கியத்துவம் கொடுப்பதைச் சிலர் விரும்புவதில்லை. பாமர மனிதன் புறக்கணிக்கப்படுகிறான் என்பது அவர்களின் வாதமாகும். நல்லாட்சி நடைபெறும்

பொழுதும், கொடுங்கோன்மை ஆட்சி நடைபெறும்பொழுதும் பாமர மனிதன் இடையூற்றுக்கு உள்ளாகிறான். ஆனால், அவனது தொண்டு மிகவும் சிறப்பு வாய்ந்தது. வயலில் வேலை செய்து உணவுப் பொருள் உற்பத்தி செய்வதிலிருந்து, பெரிய தொழிற் சாலையில் சிறந்த இயந்திரங்களை இயக்கும் தொழில் வரையிலும் அவன் ஈடுபட்டுத் தன் தொண்டைச் சமூகத்துக்கு அளித்து வருகின்றான். அவனது சேவை பணிவானதாகும். எனினும், சமுதாய முழு வளர்ச்சியில் அவனுக்கும் ஒரு பங்கு ஏற்படுகின்றது. அவனது ஆரம்ப நிலை அடிமைத்தனத்திலிருந்தது. இப்பொழுது நாட்டின் அரசியல் அமைப்பை உருவாக்கும் சக்தியாகிய வாக்குரிமையைப் பெற்றிருக்கின்றான். மனித இனத்தின் முழுமை நிலையைப் பெற்றுள்ள வரலாற்றில் (Total History of mankind) பாமர மனிதர்களின் சாதனைகளும் இடம்பெறவேண்டியதாக உள்ளது. அவர்களைப் பற்றிய நிகழ்ச்சிகள் வரலாற்றில் எடுத்துரைக்கப்பட வேண்டும்.

**வரலாற்று எல்லையின் பகுதிகள்**

வரலாற்றின் வளர்ச்சியில் கீழ்க்காணும் நிலைகளை வரிசைப் படுத்திக் கூறலாம்:

(i) அரசர்கள், அவர்களின் போர்ச் செயல்கள், வெற்றிகள் போன்றவை பற்றியதாக வரலாறு இருந்தது.

(ii) அரசர்களின் வமிசங்கள் (dynasties), அரசியல் மாற்றங்கள், அரசியல் சூழ்ச்சிகள், போர்கள்பற்றிய செய்திகள் எல்லாம் வரலாற்றில் இடம் பெற்றன.

(iii) நாட்டின் அரசியல் செய்திகளோடு, பல நாட்டு அரசியல் தொடர்புகளும் வரலாற்றில் இடம் பெற்றன.

(iv) பொருளாதாரக் கருத்து வளர்ச்சி பெற்றுச் சமூக வாழ்வு நலம்பெற அமைக்கப்பட்ட நிலையங்களையும் அவற்றின் சாதனைகளையும் வரலாறு எடுத்துரைக்கின்றது.

(v) மனித இன வளர்ச்சியின் பொருட்டு நடைபெறும் செயல்கள்பற்றியதும் சமூக வாழ்வுபற்றிய பல பிரிவுகளான மதம், இலக்கியம், நுண்கலை, அறிவியல், தொழில் துறை முன்னேற்றக் கலை, பல நிலையங்களின் தோற்றம், வளர்ச்சி—யாவும் வரலாற்றின் பரப்பிலடங்கும்.

இவ்வாறு வரலாறு எல்லா விவரங்களேயும் உட்படுத்திய வரலாற்று நூலாக (Universal or total History) வளர்ச்சி பெற்றிருக்கின்றது.

**வினுக்கள்**

'வரலாற்றுப் பாடத்தின் வரம்பு மிகவும் விரிவானது.'— விவரித்து எழுதுக.

## 2. வரலாறு வகிக்கும் சிறப்பிடம்

பள்ளிக்கூடங்களில் கற்பிக்கும் பாடங்களில் ஒன்ருக வரலாறு எப்பொழுது சேர்க்கப்பட்டது என்பதைக் கூறுவது சற்றுக் கடின மானதாகும். மன்னர்கள், வீரர்கள் பற்றியச் செய்திகளேக் கிரேக்க, ரோமானிய பள்ளிக்கூடங்களில் கற்பித்தனர். கிறித்தவ மதக் கோயில்களின் வரலாற்றுச் சுருக்கம் இடைக்காலத்தில் கற்பிக்கப் பட்டு வந்தது. 16ஆம் நூற்ருண்டிலிருந்து வரலாறு கற்பிப்பது பள்ளிகளில் நிலேயான ஓரிடத்தைப் பெற்றது. மதச் சீர்திருத்தத் தலேவர்களும், மார்டின் லூதரும் (கி.பி. 1483—1546) கிறித்தவ மதக் கோயில்களேப் பற்றிய கருத்துகளே எடுத்துரைப்பதின் அவசியத்தை உணர்த்திஞர்கள். 1632-ல் **காமினியஸ்** (Comenius) என்ற வரலாற்ருசிரியர் ஒவ்வொரு மாணவனும் உலக வரலாற்றைக் கற்கவேண்டுமென்று கூறிஞர்.

கி.பி. 1800ஆம் ஆண்டு முதல் ஜெர்மனி, பிரான்ஸ் நாடுகளில் பல பள்ளிக்கூடங்களில் வரலாறு கற்பிக்கத் தொடங்கினர்.

இடைக்காலத்தில் நடைமுறையில் இருந்த தொடர் வரலாற் றைப் (Chronicles) பின்பற்றி உலக வரலாற்றின் சுருக்கத்தைப் பள்ளிக்கூடங்களில் கற்பித்தனர். சமீபகால நிகழ்ச்சிகளும், உள்ளூர் வரலாற்றுச் செய்திகளும் பாடத் திட்டத்தில் இடம் பெற்றன. நாட்டு மக்களேப் பற்றியும் வரலாற்றில் கூறவேண்டு மென்றும், வரலாறு சமூகமயமாக்க வேண்டுமென்றும் **ரூஸோ** (Rousseau), (கி.பி. 1712—1778) கூறிஞர். **பேஸ்டோ** (கி.பி. 1723—1790) வரலாற்றை உயிர்ப்பிக்கவேண்டுமென்று வலியுறுத்திக் கூறியதோடு பல படங்களேயும் தயார் செய்தார். மாணவர்கள் தற்கால நிகழ்ச்சிகளே எளிமையில் கற்கும் பொருட்டு வரலாற்றைக் **காலவரிசையைப்** (sequence of time) பின்பற்றிக் கற்பிக்கவேண்டு மென்று ரூஸோவும் பேஸ்டோவும் கூறிஞர்கள்.

கி. பி. 1800ஆம் ஆண்டுக்குப் பிறகு **தேசிய உணர்ச்சிக்கு** (National feeling) ஆதரவாக வரலாறு ஆதரிக்கப்படலாயிற்று. **நெப்போலியப் போர்**களின் (Napolconic Wars) பலனால், ஒவ்வொரு நாடும் தன் நாட்டின் வரலாறு, பண்பாடு, நாகரிகம் போன்ற வற்றைப் பாதுகாக்க முன்வந்தது. அதன் பொருட்டு வரலாற்றைக் கற்பிக்க முழு ஆதரவு அளிக்க ஐரோப்பிய நாடுகள் திட்டமிட்டன. ஃபிரான்ஸ், பெல்ஜியம், இத்தாலி நாடுகளில் வரலாற்றுப் பாடத் திட்டத்தை மாற்றி அமைத்து, புதிய சூழ்நிலைக்கு ஏற்ப வரலாற் றைக் கற்பித்தார்கள். முதல் உலக யுத்தம் இம் முயற்சியை ஐரோப்பிய நாடுகள் யாவற்றிலும் பரப்புவதற்கு ஏதுவாயிருந்தது. **மெக்காலேயின் குறிப்பு** (Minutes of Macaulay) அறிவிக்கப் பட்டது முதல் நமது நாட்டில் தற்பொழுது வழக்கிலுள்ள **உயர்நிலைக் கல்வித் திட்டம்** (High School Syllabus) நடை முறைக்கு வந்தது. வரலாறு பள்ளிகளில் கற்பிக்கும் பாடங்களில் ஒன்றாகும். இங்கிலாந்து வரலாறும் இந்திய வரலாறும் கற்பிக்கப் படலாயின. 1911ஆம் ஆண்டு உயர்நிலைக் கல்விக்குழு (Board of Secondary Education) நிறுவப்பட்டதும், பள்ளிகளில் கட்டாயப் பாடங்களில் ஒன்றாக வரலாறு அமைந்தது.

**கல்வித் திட்டத்தில் வரலாற்றின் சிறப்பிடம்**

ஆசிரியர் **பிண்ட்லே** (Findlay) வரலாற்றின் சிறப்பினை இவ்விதமாக விவரித்துள்ளார், 'எவ்வளவு தூரம் வரலாற்றை ஒரு தனிப் பிரிவாக நாம் வைத்திருக்க விரும்பினாலும், அவ்வாறு தனித் திருக்க வரலாற்றினால் முடியாது.' ஆசிரியர் கதைகளை மாணவர் களுக்குச் செய்திகளைக் கூறுவதற்காக வகுப்பில் **வாய்மொழி** மூலம் (oral lesson) கற்பித்தாலும், மாணவர்களின் மனத்தில் அன்பு, வெறுப்பு போன்ற உணர்ச்சிகள் இயல்பாகவே ஏற்படும். மாணவர் களின் உள்ளம் நாம் கூறுவதை மட்டும் ஏற்றுக்கொள்ளாது. அத்துடன் இணைந்த **மனக்கிளர்ச்சி** (emotion), **மனப்போக்கு** (attitude) போன்றவற்றை வளரச் செய்யும். பிள்ளைப் பருவத் திலும், குமரப் பருவத்திலும் உள்ளுணர்ச்சி தூண்டப்படுகின்றது. நிகழ்ச்சிகளைப் பற்றிக் கதைகளில் கேட்கும்பொழுதும் அல்லது படிக்கும்பொழுதும் மாணவர்கள் மனத்தில் இவை தோன்று கின்றன. கதைகளில் நாம் அறநெறியைப் பற்றிக் கூற வேண்டிய தில்லை; மாணவர்களே அவற்றை ஏற்றுக்கொள்வார்கள். அறநெறி வளர்ச்சி மாணவர்களிடத்தில் தொடக்கப்பள்ளி வகுப்புகளில் சிறந்த முறையில் கதைகளை வாய்மொழிமூலம் கற்பிக்கும் பொழுதே துவங்குகின்றது.

மேலும், ஒரு நாட்டின் ஒழுக்கத்தை (Nation's Character) அந் நாட்டின் வரலாற்றைக் கற்கும்பொழுது தெரிந்துகொள்ள முடிகின்றது. ஒரு நாடு வளர்ச்சி பெறுகின்றது அல்லது பிந்திய நிலையிலேயே இருக்கின்றது என்பதை அந் நாட்டின் ஒழுக்கமே திட்டம் செய்கின்றது. பின்தங்கிய நாடுகள் மற்றைய நாடுகளின் வரலாற்றுடன் தங்கள் நாட்டு வரலாற்றை ஒப்பிட்டுப் பார்த்தால், தங்கள் நாட்டின் குறைபாடுகளைத் தெரிந்துகொள்ள முடிகின்றது. நமது மூதாதையர்கள் செய்த தவற்றினால் நம்நாடு வெளி நாட்டினரின் ஆதிக்கத்திலிருந்தது என்பதை நாம் கற்கமுடிகின்றது.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு வேண்டிய கூறுகளைப் பற்றி முன்னோடியாக **மாண்டஸ்குயூ** (Montesquieu) எடுத்துக் கூறினார். ஒரு நாட்டின் வரலாற்றில் காணப்படும் பொதுப்போக்கு (general tendency) அல்லது கருத்து அந்த நாட்டின் வளர்ச்சியைப் பற்றி அறிமுகப்படுத்த உதவும். இந்தப் போக்குகளை அறிய வரலாறு உதவுகின்றது. எடுத்துக்காட்டாகப் பின்வருவனவற்றை நாம் குறிப்பிடலாம். நாட்டு மக்களின் நல்வாழ்வு தனிப்பட்ட பெரியோர் ஒருவரின் செயலால் ஏற்படுவதுண்டு. மனித இனத்தின் காரியங்களும், அரசியல் தலைவர்களின் செயல்களும் அந் நாட்டில் உருவாகி வரும் கருத்துகளைச் சார்ந்தும் வளர்வதுண்டு. ஒரு நாட்டின் அரசாங்க அமைப்பு தானாகவே ஏற்படுவதில்லை. நாகரிக வளர்ச்சியும், மக்களிடையே பரவியிருக்கும் ஒற்றுமை உணர்வும், கல்வி, நெறிமுறை, சமூக, பொருளாதார வாழ்க்கை அம்சங்களும் அந் நாட்டில் உருவாகிவரும் பொதுப்போக்கும் சேர்ந்து திட்டம் செய்கின்றன. வரலாறு கற்கும்பொழுது அவ்விதப் போக்குகளைக் கண்டுகொள்ள முற்படவேண்டும். அப்பொழுது அந்த நாடு மேற்கொண்டும் உயர்நிலையை அடையும் என்பதில் சந்தேகமில்லை. **லெக்கி** (Lecky) கூறுவதை நாம் இங்குக் கவனிக்கவேண்டும். 'ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு உதவும் சிறப்பான கூறுகள், அந் நாட்டின் நெறிமுறைக் கொள்கையேயாகும். அரசியல் அல்லது இராணுவத் தவறுகள் அந்த நாட்டின் செல்வாக்கைத் தடை செய்யும் என்பது உண்மையே; ஆனால் நிலையான நல்வாழ்வு அந் நாடு நெறிமுறைகளைப் பின்பற்றுவதினாலேயே ஏற்படுவது உறுதியானது. அந் நாட்டின் நெறிமுறைகளைக் கூர்ந்து கவனித்தால், அந்த நாடு முன்னேற்றம் பெறுகின்றதா? அல்லது தாழ்வுறுகின்றதா? என்பதைக் கூறிவிடலாம்.' ரோம் நாட்டின் வரலாற்றைப் படிக்கும் மாணவன் முதல் பாடத்தில் பெரும் தலைவர்களின் சிறப்பான பண்புகளைப் படிக்க முடிகின்றது. எடுத்துக்காட்டாக, சின்சின்னட்டஸ் (Cincinnatus), ஹொரேஷியோ (Horatio), கோரியோலானஸ் (Coriolanus) போன்றவர்களின் நேர்மையான

செயல்களேயும் பண்புகளேயும் அவன் படிக்கும்பொழுது, அந்த நாட்டு மக்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்பதைத் தொடக்கத்திலேயே அவன் உணர்வது திண்ணம்.

எனவே, கல்வித் திட்டத்தில் வரலாறு கற்பித்தல் ஒரு நிலேயான இடத்தைப் பெற்றிருக்கவேண்டுமென்பதின் தத்துவத்தை நாம் உணரவேண்டும்.

**வினுக்கள்**

நமது பள்ளிகளின் கல்வித் திட்டத்தில் வரலாறு ஒரு சிறப்பான இடத்தை எவ்வாறு பெற்றிருக்கின்றது என்பதை விளக்கவும்.

## 3. வரலாற்றின் வரலாறு

### (History of History)

**கிரேக்கர்களின் பணி**

வரலாறு என்ற சொல் கிரேக்க மொழியிலிருந்து உருவாயிற்று. சட்டம் பற்றிய பூசலில் (legal dispute) சான்றுகளேப் பற்றிய ஆய்வு நடத்துவதை 'வரலாறு' என்ற தொடரால் முதன்முதலாக ஹோமர் குறிப்பிட்டார். ஆய்விஞல் வெளிப்படும் விவரங்களேக் குறிப்பிடுவதைவிட, உண்மையை வெளிப்படுத்தும் ஆய்வுக்கு இத் தொடர் பயன்படுத்தப்பட்டது. மனிதனேப் பற்றிய கடந்த கால நிகழ்ச்சிகளின் வர்ணனேயைக் குறிக்கும் தொடராக ஹெராடட்டஸ் காலந்தொட்டு இது வழங்கப் படலாயிற்று.

**ஹெராடட்டஸ் (Herodotus) (கி. மு. 485 — கி. மு. 425)**

ஹெராடட்டஸ் பண்டைப் புகழ்பெற்ற கிரேக்க வரலாற்ருசிரியர். ஹெராடட்டஸ் தம்முடைய வரலாற்று நூலே அயோனிய கிரேக்க மொழியில் எழுதினுர். இவரை 'வரலாற்றின் தந்தை' (Father of History) என்று போற்றுவர். வரலாற்றை ஒரு சிறந்த வர்ணனேயாக (Narrative History) இவர் எழுதினுர். வரலாற்றை வர்ணனேயாக எழுதும் துறையில் இவரே தலேவர் என்றும், பின் பற்றுவதற்கு 'வழிகாட்டி' என்றும் ஹெராடட்டஸைப் **பேராசிரியர் ஜான்ஸன்** (Prof. Johnson) கூறுகின்ருர்.

ஹெராடட்டஸ் அதிக அளவில் சுற்றுப் பயணம் செய்தார். இவர் கண்ட பல நாடுகளின் மக்களைப் பற்றிய செய்திகளைச் சேகரித்தார். இவர் ஆய்வு செய்து, விவரங்களைச் சேகரித்த போதிலும், இவரது ஆய்வு அறிவியல் முறையைப் பின்பற்றியதல்ல என்பதை நாம் மறக்கலாகாது. இவர் தாம் கேட்டு அறிந்த எல்லாவிதச் செய்திகளையும் தமது வர்ணனையில் இடம் பெறச் செய்தார். அச் செய்திகளில் நம்பத்தகாத விவரங்களும் அடங்கியிருந்தன. மக்கள் நினைவில் எவ்விதச் செய்திகள் நிலைத்திருக்க வேண்டுமென்று ஹெராடட்டஸ் கருதினரோ, அவற்றை எல்லாம் தமது வர்ணனையில் குறிப்பிட்டார். எனவே, ஹெராடட்டஸ் ஒரு சிறந்த கதை கூறுபவராகவும் உரைநடையில் ஒரு சிறந்த எழுத்தாளராகவும் கருதப்படுகின்றார். இவர் நூல், கதைகள் போலவே இன்பமூட்டுகின்றது. இவருடைய நூலின் அடிப்படைக் கருத்து ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்குமுள்ள சச்சரவேயாகும். இவர் கிரேக்க நாடுகளுக்கும் பாரசீகப் பேரரசுக்கும் நடந்த நீண்ட காலப் போரைப் பற்றி எழுதியுள்ளார். அப்படி எழுதும்போது அவர் ஆராய்வு என்ற முறையைப் பின்பற்றியே எழுதியுள்ளார்.

**தூசிடிடீஸ்** (Thucydides) **(கி. மு. 464 — கி. மு. 404)**

கி. மு. 5ஆம் நூற்றாண்டின் இறுதியில் தூசிடிடீஸ் என்னும் பண்டைக் கிரேக்க வரலாற்றாசிரியர் ஆதன்ஸ் நகரில் செல்வக் குடும்பத்தில் பிறந்தவர். **பெலப்பனீஷியப் போர்** (Peloponnesian War) பற்றி ஒரு வரலாறு எழுதினார். இந்த நூல் இவருடைய அரிய முயற்சியின் மாபெரும் சாதனையாக விளங்குகிறது.

இவர் வரலாறு எழுதும் முறையில் ஒரு புதிய தத்துவத்தை ஏற்படுத்தினர். அதாவது, 'முன்பு நடந்த நிகழ்ச்சிகளின் உண்மையான முழு வர்ணனை பலனுடையதாகும்; மனித இனத்தின் செயல்களில் இவ்வித நிகழ்ச்சிகள் பிற்காலத்திலும் நடைபெறும்'. இதன் அடிப்படை யாதெனில் வரலாற்று நிகழ்ச்சிகள் மறுபடியும் நிகழும் என்பதாகும். எனவே, அவர் துவக்கிய வரலாறு எழுதும் முறை நமக்குப் 'படிப்பினையளிப்பதாகும்' (didactic type). தூசிடிடீஸ் காலத்திற்குப் பின்பு அரசியல் தலைவர்களும், இராணுவத் தளகர்த்தர்களும், இளவரசர்களும், தத்துவ நிபுணர்களும் வரலாற்றிலிருந்து அறிவுரைகளையும் வழிகாட்டும் நிகழ்ச்சிகளையும் உணரும் பொருட்டு வரலாற்றைப் படிக்கலாயினர். இவ்வாறு வரலாறு எடுத்துக்காட்டுமூலம் தத்துவத்தைக் கற்பிக்கும் நூலாக மாறியது (Philosophy teaching by example).

**பாலிபியஸ்** (Polybius) **(கி. மு. 198 — கி. மு. 117)**

பாலிபியஸ் என்பார் மற்ருெரு கிரேக்க வரலாற்று ஆசிரியர் (Biographer of Greek History) ஆவார். இவர் ரோமாபுரியில் சிப்பியோக்களின் (Scipios) ஆதரவில், மத்திய தரைக்கடலைச் சூழ்ந்துள்ள நாடுகளின் வரலாற்றை விரிவாக நாற்பது தொகுதி களில் எழுதினுர். உலக வரலாற்றை எழுத முற்பட்ட முதல் வரலாற்ருசிரியர் இவராவார். இவரே முதலாவதாக வரலாற்றுக்கும் இலக்கியத்திற்கும் உள்ள வேறுபாட்டை வெளிப்படுத்திஞர். 'உடல் சிலிர்க்கச் செய்யும் செய்திகளை எழுதி, படிப்பவர்களை வியப்படையச் செய்வது வரலாற்று ஆசிரியர்களின் நோக்கமாக இருப்பதற்குப் பதிலாக, நடந்த செய்திகளை உண்மையுடன் எழுதுவதே வரலாற்ருசிரியரின் கடமையாகும்,' என்று பாலிபியஸ் கூறியுள்ளார்.

**புளூட்டார்க்** (Plutarch) **(கி. பி. 50 — 125)**

இவர் கிரேக்க எழுத்தாளர்; வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் (Biographer). இவர் நாற்பத்தாறு கிரேக்கர்கள், நாற்பத்தாறு ரோமர்கள் ஆகியவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கிரேக்கர், ரோமர் என்று இரண்டிரண்டு பேராக ஒப்பிட்டு எழுதினுர். நால்வருடைய வாழ்க்கை வரலாற்றைத் தனித்தனியாக எழுதினுர். இந்த நூல் உலகத்திலுள்ள மிகச் சிறந்த நூல்களுள் ஒன்று. இது 'புளூட்டார்க் எழுதிய வாழ்க்கை வரலாறுகள்' என வழங்கும். இவர் எழுதிய வாழ்க்கை வரலாறுகளில் குறிப்பிடக் கூடியவை பின்வருவன: **திஸியஸஸும், ரோமுலஸஸும்** (Theseus and Romulus); **டெமோஸ்தனிஸஸும், சிசரோவும்** (Demosthenes and Cicero); **அலெக்சாந்தரும், சீசரும்** (Alexander and Caesar) ஆகும்.

**ரோமானிய வரலாற்ருசிரியர்கள்**

ரோமானிய வரலாற்ருசிரியர்களில் முதலாவதாகக் குறிப்பிட வேண்டியவர் ஜூலியஸ் சீசர் ஆவார். **ஜூலியஸ் சீசர்** (Julius Caesar) (கி. மு. 100—கி. மு. 44) அரசியல், இராணுவத் துறைகளில் சிறப்பு வாய்ந்தவர். இவர் எழுதியவற்றுள் சிறப்பாகக் கருதப் படுவது **காலிக் யுத்தம்** (Gallic War) பற்றியதாகும். **கால்** (Gaul), **பிரிட்டன்** (Great Britain) நாடுகளின் புவியியல் பற்றியும், பாலங்கள், கப்பல்கள்பற்றிய வர்ணனைகளையும் நாம் அவரது வரலாற்று நூலில் காணமுடிகிறது.

**சிசரோ** (Cicero) **(கி. மு. 106 — கி. மு. 43)**

வரலாற்று நூல்களைப் பற்றிய விளக்கக் குறிப்புகள் (Commentaries) சிசரோவினுல் எழுதப்பட்டன. வரலாறு எழுதுவதற்கு மூன்று முக்கியக் கோட்பாடுகளை இவர் வகுத்தார் : (i) உண்மைக்குப் புறம்பானவற்றை வரலாற்ருசிரியர்கள் எழுதக் கூடாது; (ii) உண்மைகளை அடக்கி வைக்கக் கூடாது; (iii) வரலாற்று ஆசிரியர் ஒருதலைப்பட்சமாகவும் இருக்கக் கூடாது.

**லிவி** (Livy) **(கி. மு. 59 — கி. மு. 17)**

டைட்டஸ் லிவி ஒரு சிறந்த கதை சொல்லும் அறிஞர். ரோம் நகரம் தோற்றம் முதல் அதன் வரலாற்றை அவரது காலம் வரையிலும் எழுதியுள்ளார். 142 தொகுதிகளில் ரோமின் 770 ஆண்டு வரலாற்று நிகழ்ச்சிகளை எழுதியிருக்கிருர். ரோம் நகரத்தின் சிறப்பை வெளிப்படுத்தவும், ரோம் நகர இளைஞர்களிடம் நாட்டுப் பற்றை அதிகரிக்கச் செய்யவும் லிவி தமது நூலில் முற்பட்டார். **ரோமானிய சாம்ராச்சியம்** (Roman Empire) சீக்கிரமே அழியக் கூடுமென்று முன்கூட்டியே அறிவித்தார்.

**கார்னிலியஸ் டேசிட்டஸ்** (Cornelius Tacitus) **(கி.பி. 55 — 120)**

டேசிட்டஸ் ரோமானிய வரலாற்ருசிரியர்களில் கடைசியாகக் குறிப்பிடவேண்டியவராவார். ரோமானிய வரலாற்று ஆசிரியர்களில் மிகவும் சிறப்பான இடத்தைப் பெறுகின்றவரும் இவரே ஆவார். வரலாற்றை அறிவியல் கருத்துக் கொண்டு எழுதும் முறையை இவர் பின்பற்றியவராவார். இவரது நூல்களில் சொல்லாட்சிக் கலை (Rhetoric) தனிச் சிறப்பிடத்தைப் பெற்றது.

**கிறித்தவ மத எழுச்சி**

கிறித்தவ மதம் வலிமை பெற்றதின் காரணமாக வரலாற்று எழுத்தாண்மைக் கலையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. வரலாறு விவிலிய நூலை அடிப்படையாகக் கொண்ட மத நூலாகக் கருதப்படலாயிற்று. யூதர்களின் பழைய ஏற்பாட்டின்படி எதிர் காலத்தில் ஒரு தலைவர் தோன்றுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட மெஸ்ஸையா (Messiah) ஏசுநாதர். இதன் அடிப்படையில் கிறித்தவ சமயம் யூதர்களின் வரலாற்றுடன் இணைக்கப்பட்டது. வரலாறு, சமயத்தை மையமாகக் கொண்ட பாடமாக மாறியது. வரலாறு ஒரு **தெய்விகப் புராணமாக** (Divine History) மாறியது. இந்தத் தெய்விகப்புராணம் மனிதன் தோன்றியதிலிருந்து தொடங்குகிறது. கிறித்தவ சமயத்திற்காக உயிரிழந்த மதத் தலைவர்கள்,

அவர்களின் **அற்புதச் செயல்கள்** (Miracles) ஆகியவை வரலாற்றில் இடம் பெற்றன. பண்டைய கிரேக்க, ரோம வரலாற்று அறிஞர்கள் காட்டிய வழியிலிருந்து மாறுபட்ட வழிக்கு வரலாறு திருப்பிவிடப் பட்டது.

மதச் சார்புடைய வரலாற்று நூல்கள் தவிர வேறு வகையான வரலாற்று நூல்களும் தோன்றின. கிறித்தவ மடாலயங்களில் வாழ்ந்த கிறித்தவத் துறவிகள் தங்கள் மடாலயங்களில் நிகழ்ந்த சில முக்கியச் செயல்களைக் காலக் கணக்கில் குறித்துவரத் தொடங்கினர். இவை **ஆண்டு நிகழ்ச்சித் தொகுப்பு** (Annals) என்று வழங்கப்படுகின்றன. ஆண்டு நிகழ்ச்சித் தொகுப்பிலிருந்து **தொடர் வரலாறு** (Chronicles) எழுதப்பட்டது. மடாலயங்களில் பல அலுவல்களோடு தொடர் வரலாறு எழுதுவதும் ஓர் அலுவலாகக் கருதப்பட்டது. தொடர் வரலாறு எழுதுவதுடன் கிறித்தவ மதத் தலைவர்கள் வரலாறு நூல்களும் எழுத வேண்டியவர்களாயினர். ரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்குக் கிறித்தவ மதமே காரணம் என்று புற மதத்தினர் (Pagans) குறை கூறினர். இதற்கு எதிர்ப்பாகக் கிறித்தவ மதத்தின் பெருமையை எடுத்துரைக்க முன்வந்தனர். அவர்களில் குறிப்பிட வேண்டியவர் புனித அகஸ்டின்.

**புனித அகஸ்டின்** (St. Augustine) **(கி. பி. 354—430)**

கிறித்தவ மதப் பெரியார்களில் ஒருவர், புனித அகஸ்டின். இவர் இயற்றிய நூல்களில் சுயசரிதமும் (Confessions), இறைநகர் (Decivitate Dei) என்னும் நூலும் சிறப்பானவை.

கிறித்தவரல்லாதவர்கள் கிறித்தவ மதமே ரோமானிய சாம்ராச்சியத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று குறை கூறி வந்தனர். இக் கூற்றை மறுக்கவே அகஸ்டின் இறைநகர் என்னும் நூலை இயற்றினர். இவ்வுலகில் கடவுளை மதியாது தனக்கென வாழ்ந்துவரும் கூட்டத்தினரின் சமூகம் மண்(ண)நகர் என்றும், தனக்கென வாழாது இறைவனையே ஆராய்பவர்களது சமூகம் இறைநகர் என்றும் இவர் வேறுபாடு காண்கிறர்.

**பாலஸ் ஒரோஸியஸ்** (Paulus Orosius) **(கி. பி. 380—420)**

புனித அகஸ்டினின் சீடர் பாலஸ் ஒரோஸியஸ். இவர் கிறித்தவ மதத்தைச் சேராதவர்களுக்கு எதிராக 'வரலாற்றின் ஏழு புத்தகங்கள்' எழுதினர், புராதனக் கடவுள்களைத் தொழுவதற்குப் பதிலாகப் புதிய மதத்தை ஏற்றுக்கொண்டதால், நாட்டில்

பல கெடுதல்கள் ஏற்படுகின்றன என்று கிறித்தவ மதத்தை ஏற்காதவர்கள் கூறியதற்கு மறுப்பாக இவர் தமது நூல்களில் கடவுள் தமது ஆணையை மீறியதற்காக ஆதி மனிதனுக்குக் கொடுத்த சாபத்தால் உலகிற்குக் கெடுதல் ஏற்படுகிறது என்றும்; போர்க் கொடுமைகள், பஞ்சம், அழிவு, நில நடுக்கம், வெள்ளம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு இவை அனைத்தும் கடவுளின் தூண்டுதல்களால் ஏற்பட்டன என்றும் குறிப்பிட்டார். **ராபின்ஸன்** (Robinson) கூறுவதுபோல, அகஸ்டினின் சீடரின் பார்வையிலிருந்து பண்டைய நாகரிக நாடுகளான எகிப்து, கிரீஸ், ரோம்— இவற்றின் சாதனைகள் மறைந்துபோய் விட்டன.

கிறித்தவ வரலாற்று எழுத்தாண்மைக் கலையில் இரண்டுவிதக் குறைகள் காணப்படுகின்றன: (i) ஒரு திட்டவட்டமான பலனைக் கருதி வரலாறு எழுதப்பட்டது. அந்த நோக்கத்தின் காரணமாகக் கிறித்தவ மதத்தைச் சேராத பிற மதத்தைக் குறை கூறியதாகும். (ii) அவர்கள் மேற்கொண்ட கால வரையறை உலக நிகழ்ச்சியைப் பற்றியதல்லாமல் மதச் சித்தாந்தத்தின் அடிப்படையிலமைந்தது.

## இடைக்காலம் (Middle Ages)

புனித அகஸ்டின், அவரது சீடர் ஒரோஸியஸ் கருத்துகள் ஆயிரம் ஆண்டுகள்வரை மக்கள் மனத்தில் பதிந்திருந்தன. சமூக வரலாறு பற்றிய எண்ணமே மக்களிடம் ஏற்படவில்லை. கடவுள் சித்தப்படியே எல்லாம் நடைபெறும் என்ற கொள்கை பரவியிருந்ததால், இயற்கை நிகழ்ச்சிகளின் காரணங்கள், அவற்றின் போக்குகள்பற்றிய சிந்தனை இல்லாமலிருந்தது. இடைக்காலம் மத நம்பிக்கை மிகுந்த காலமாக இருந்ததால், மதக் கருத்துகளையும், நம்பிக்கைகளையும் அப்படியே மக்கள் ஏற்றுக் கொண்டனர். மத நூல்களில் கூறியவற்றை எதிர்த்துக் கூறும் துணிவு மக்களிடம் கிடையாது. மத நூல்களில் பூமி தட்டையானதென்றும், ஸ்பெயின் நாட்டிற்கு மேற்கே நானூறு மைல்களுக்கப்பால் பூமியின் முடிவு உள்ளதென்றும் கூறுவார்களாயின், அதையும் மக்கள் ஏற்றுக்கொள்ளும் நிலைமையிலிருந்தனர். அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் மத எதிர்ப்பாளர் (heretic) என்று கருதப்பப்பட்டு மத விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டு உயிருடன் எரிக்கப்பட்டனர். இவ்விதச் சூழ்நிலையில் ஆவணங்களை ஆராய்தல் நினைக்க முடியாத செயலாகும், மேலும் அச்சு இயந்திரம் கண்டு பிடிக்காத காலமானதால், புத்தகங்கள் கிடைப்பதும் மிக அரிதானதாகும். செல்வந்தர்களிடம் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்வதற்கு வாய்ப்பே இல்லாம

விருந்தது. இடைக்காலத்திலும் சிறந்த தொடர் வரலாறுகள் சில எழுதப்பட்டன என்பது நமக்கு வியப்பை அளிக்கின்றது. இக்காலத்தில் எழுதப்பட்ட ஆங்கிலோ-சாக்சன் தொடர் வரலாறும் (Anglo-Saxon Chronicle), **மாத்யூ பேரிஸ்** (Matthew Paris), **லாம்பர்ட்** (Lambert), **ஜீன் பிராஸ்ஸார்ட்** (Jean Froissart) போன்றவர்களின் தொடர் வரலாறுகளும் மிகவும் நம்பத் தகுந்தவைகளாக மதிக்கப்படுகின்றன.

### நவீன கால ஆரம்பம் — மறுமலர்ச்சியும், மத சீர்திருத்தமும்

15ஆம் நூற்றுண்டு நவீன கால ஆரம்பம் என்று கருதப்படுகின்றது. மக்களின் உள்ளங்கள் சுயேச்சைப் பெற்றன. மத நம்பிக்கைக் காலம், ஆய்வு செய்யும் காலமாக மாறியது. வரலாற்று நூல்களில் ஆராயும் மனப்பான்மை வெளிப்படையாகத் தோன்ற ஆரம்பித்தது. புதிய கல்வியின் தலைவர்களான பெட்ரார்க் (Petrarch), பொக்காஷியோ (Boccaccio) ஆகியோர் நவீன எழுத்தாண்மைக் கலையின் பிதாக்கள் என்று புகழ்ந்துரைக்கப்படுகின்றுர்கள். மக்கள் நலக் கொள்கை காலத்தில் (The Humanist Age) குறிப்பிட வேண்டியவர் மாக்கியவெல்லி என்பார்.

### நிக்கோலா மாக்கியவெல்லி (Niccolo Machiavelli) (கி.பி. 1469—1577)

இவர் வரலாற்றை மதத் தொடர்பிலிருந்து விடுவித்து, உலகியல் சார்ந்ததாக அமைத்தார். இவர் இத்தாலி நாட்டில் பிளாரென்ஸில் பிறந்தவர். 'குறிக்கோள் நல்லதாக இருந்தால் போதும்; அதை அடையும் வழி தீயதா அல்லது நல்லதா என்பது முக்கியமல்ல' என்ற கொள்கையை உடையவர். **பிளாரென்ஸ்** வரலாறு, **போர்க் கலை**, இளவரசன் (The Prince) முதலிய பல நூல்களை இவர் எழுதியுள்ளார். வலிமைமிக்கதோர் ஆட்சியை இத்தாலியில் நிறுவுவதற்காக மன்னரொருவர் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை 'இளவரசர்' என்ற அவரது நூல் விரிவாக எடுத்துரைத்தது. வெளிநாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுவித்து வலிமைமிக்கதோர் இத்தாலியை உருவாக்கும் திறமை கொண்ட இளவரசர் ஒருவரை இந் நூலில் மாக்கியவெல்லி படம் பிடித்துக்காட்டியுள்ளார். இந்த நூல் எதேச்சாதிகாரர்களுக்குரிய துணை நூலாக அமைந்தது.

### மதச் சீர்திருத்தக் காலம்

மதக் கருத்து வேறுபாடுகள் காரணமாகக் கிறித்தவ உலகம் இரண்டாகப் பிரிந்தது. **கத்தோலிக்கர்** (Catholics) ஒரு பிரிவாக

வும், அதற்கு மாறான கருத்துக் கொண்டவர்கள் பல பிரிவு களாகவும் பிரிந்தனர். கத்தோலிக்கர்களும் அவர்களின் எதிரி களான பிராடெஸ்டெண்டுகளும் (Protestants) வரலாற்றை ஆதார மாகக் காட்டி, தங்களின் கருத்து சரி என்று வாதாடத் தொடங் கினர்.

மனித நலக் கொள்கை வளர்ச்சிக்குத் தடையாக மதச் சீர்திருத்த இயக்கம் தோன்றியது. மார்டின் லூதர் வரலாற்றை ஆதரித்தார். **மார்டின் லூதர்** (Martin Luther) பிராடஸ்டெண்ட் எழுத்தாளர்களில் சிறப்பிடம் பெறுபவர். இவர் தம்முடைய கொள்கைகளுக்கு வரலாற்றில் ஆதாரங்களைக் கண்டுபிடித்து வெளியிட்டார். கடவுள் கத்தோலிக்க மதத்தின்மீது கொண்ட அருளையும், கருணையையும் வரலாறு நிரூபிக்கிறது என்று கத்தோலிக்க வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டனர்.

### ஜாக்யுஸ் பாஸெட் (Jacques Bossuet) (கி. பி. 1627—1704)

தனது உலக வரலாற்றில் (Universal History) கடவுள் வெளி யிட்ட போதனையின் வழியிலிருந்து மாறுபட்ட வழியில் பிரிந்து சென்றவர்கள்மீது தேவன் கொண்ட கோபத்தை வாலாற்றிலிருந்து அறியலாம் என்று வெளியிட்டார்.

இதற்கு எதிராக லூதரைப் பின்பற்றியவர்கள் ஒரு விரிவான திருச்சபை வரலாற்று நூலைத் தொகுத்தார்கள். இவை 'மாக்டிபர்க் நூற்றுண்டுகள்' (Magdeburg Centuries) என வழங்கலாயின. இதில் போப்பாண்டவரின் தவறான தோற்றத்தையும், கத்தோ லிக்கத் திருச்சபை ஆகியவற்றின் வரலாற்றையும் எழுதி வெளி யிட்டனர். இதை மறுப்பதற்குப் போப்பாண்டவரின் அரண்மனை யிலிருந்த ஆவணங்களையும், குறிப்புகளையும் மேற்படி சபை ஆராய்ந்தது. **பெரோனியஸ்** (Baronius) என்பவர் 'திருச்சபை சார்ந்த ஆண்டு நிகழ்ச்சிக் குறிப்புகள்" (The Ecclesiastical Annals) என்று பன்னிரண்டு தொகுப்புகளில் வெளியிட்டார். இந்த நூல் மதச் சீர்திருத்த எதிர்ப்பு இயக்கத்திற்கு மிகவும் உதவியாக இருந்தது. இவ்வாறு முன்னூறு ஆண்டுகள் வரையிலும் மதக் கருத்து வேறுபாடுகளை விவரித்துக் கூறுவதற்கு வரலாற்று ஆவணங்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன.

### அறிவாட்சிக் காலம் (The Age of Intellectualism)

18ஆம் நூற்றுண்டில் புதிய வரலாற்றுக் கருத்துகள் தோன்ற லாயின. வரலாறு மதச்சார்பிலிருந்து பிரிக்கப்பட்டு, எதையும்

காரணகாரிய முறையில் மதிப்பீடு செய்தல் என்ற கருத்து உருவாயிற்று. இக் காலத்தில் **வால்டேர்** (Voltaire), **மாண்டெஸ்கியூ** (Montesquieu), **கியூம்** (Hume), **இராபர்ட்சன்** (Robertson), **கிப்பன்** (Gibbon) போன்ற சிறந்த வரலாற்று ஆசிரியர்கள் தோன்றினர். ஐரோப்பிய மக்கள் பழையனவற்றிலிருந்து விடுபட்டனர். ஐரோப்பா முழுவதும் அறிவொளி வீசியது. அறிவியல் முறை ஆராய்ச்சியின் அடிப்படையில் வரலாறு எழுதப்பட்டது.

### மான்ட்டெஸ்க்யூ (Montesquieu) (கி. பி. 1689 — 1755)

பிரெஞ்சு வரலாற்று அறிஞர் 'சட்டங்களின் சாரம்' (The Spirit of the Laws) என்ற நூலில் இவரது கருத்துகளை நன்கு விளக்கியுள்ளார். வரலாற்றை மத நூலிலிருந்து வேறுபடுத்தித் தமது கருத்துகளை விளக்கியுள்ளார். சட்ட வரம்புக்குட்பட்ட மன்னராட்சியின் சிறப்பை விவரித்துள்ளார். அரசாங்கத்தின் அமைப்பை, நிர்வாகம், சட்டம், நீதி என்று பிரித்தமைத்தால்தான் அரசியல் சுதந்திரத்தைப் பேண முடியும் என்பது இவரது கருத்து.

### வால்டேர் (Voltaire) (கி. பி. 1697 — 1778)

வரலாற்றில் பகுத்தறிவுக் கொள்கையை (Rationalistic thought) உருவாக்கியவர் வால்டேர் என்பவர். ஆய்வு, சிந்தனை, அறிவியல் கருத்துக்கு இவர் முதலிடம் அளித்தார். நாகரிக வளர்ச்சி இடைக்காலத்தில் நடைபெற்றதற்கு இக் கொள்கைகள் புறக்கணிக்கப்பட்டன என்பதை வெளியிட்டார். இவரது ஒழுக்கம் பற்றிய கட்டுரையில் (Essaisurles mouers) ஐரோப்பிய மக்களின் ஒழுக்கம், சமூகம், பொருளாதாரம் கலை உணர்வு இலக்கிய ஆர்வம்பற்றிய செய்திகளைச் சிறப்புமிக்க சார்லஸ் அரசர் கால முதல் (Charles the Great) பதினான்காம் லூயி (Louis XIV) அரசர் காலம் வரையிலும் உள்ளவற்றை விவரித்து எழுதியுள்ளார். செய்திகளைப் பதிவு செய்தல் முறைக்குப் பதிலாக நாகரிக வளர்ச்சியை எழுத ஆரம்பித்தவர் வால்டேர் ஆவார்.

### ரூசோ (Rousseau) (கி. பி. 1712 — 1778)

ஒரு சிறந்த பிரெஞ்சுச் சிந்தனையாளர். இவருடைய நூல்களுள் மிகவும் சிறந்ததாகக் கருதப்படுவது "கன்பெஷன்ஸ்" (Confessions) என்னும் இவரது சுயசரிதமாகும். கல்வி, கலை, இவற்றின் செல்வாக்குப் பற்றிய ஆராய்ச்சி, சமமின்மையின் காரணம் பற்றிய ஆராய்ச்சி, **சமூக ஒப்பந்தம்** (Social Contract),

எமிலி (Emile) போன்றவை இவரது சிறந்த நூல்கள். இந் நூல்கள் அக்கால மக்களின் மனத்தை மாற்றி, அவர்களைச் சிந்திக்குமாறு தூண்டின.

**தேசிய உணர்ச்சியின் வளர்ச்சி**

பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு, நாம் தேசிய உணர்ச்சியின் வளர்ச்சியைக் காண்கிறோம். இதனால் வரலாற்றில் புதிய கருத்து வெளிப்படலாயிற்று. ஹெகலின் (Hegel) தத்துவத்தில் இக் குறிப்பு கிடைக்கின்றது. ஒவ்வொரு காலத்திலும் தலை சிறந்த நாடுகளின் வாயிலாக உலக எழுச்சி (World Spirit) தெரிய வருகின்றது. பாரசீகம், கிரீஸ், ரோம், ஜெர்மனி போன்ற நாடுகளின் எழுச்சியை எடுத்துக்காட்டாகக் கூறுகிறார். ஜெர்மனி நாட்டின் எழுச்சியே புதிய உலகத்தின் எழுச்சி ஆகும். **லெஸிங்** (Lessing), **டர்காட்** (Turgot), **ஹெர்டர்** (Herder) போன்ற அறிஞர்கள் பரந்த மனப் பான்மையை வரலாற்றுக் கருத்தின்மூலம் வெளிப்படுத்திய போதிலும், ஹெகல் (Hegel) தேசிய உணர்வுக்கு அடிமைப்பட்டவராக இருந்தார். இவ்விதமாகப் புதிய தேசிய உணர்வு வரலாற்று ஆவணங்களை ஆய்வு செய்வதற்கு ஒருவித ஊக்கத்தை அளித்தது. 1814ஆம் ஆண்டில் ஜெர்மனி நாட்டின் வரலாற்றை ஆய்வு செய்ய ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டது.

வரலாற்று ஆவணங்களை ஆய்வு செய்யும் முயற்சி தன் நாட்டின் வரலாற்றை உருவாக்கும் கருத்துடன் ஏற்பட்டதாகும். தன் நாட்டின் சிறப்புகளை எடுத்துக் கூறுவதற்கே அம் முயற்சி பயன்படுத்தப்பட்டது.

சமூக அறிவியல், அறிவியலுடன் இணைக்கப்பட்டது. **அகஸ்ட்—டி—காம்டி** (August—de—Comedi) இவ்வியக்கத்தின் முன்னோடியாக இருந்தார். இவர் மனித சமுதாயத்தை வரலாற்று ஆராய்ச்சிக்கு மையமாகக் கொண்டார். சமூக அடிப்படையில் வரலாற்று நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்பதை வலியுறுத்தினார். "காம்டியை" அடுத்து "**பக்கில்ஸ்**" (Buckles) என்ற பெரியார் (கி.பி. 1821—62) வரலாற்று **எழுத்தாண்மைக்கு** (Histriography) அறிவியல் முறையைப் பயன்படுத்தினார். இங்கிலாந்து நாட்டில் பரந்த மனப்பான்மையுடன் கூடிய முற்போக்கு நோக்கம் வளர்ந்தது. '**மெக்காலே**' (Macaulay) இக் காலத்தின் முன்னோடியாக விளங்கினார். '**கார்லைல்**' (Carlyle) வரலாற்றில் சிறப்புப் பெற்றவர்கள்பால் அக்கறை காட்டினார். பெரிய மனிதர்களின் வாழ்க்கையே வரலாறு என்று குறிப்பிட்டார்.

19ஆம் நூற்றுண்டில் **அறிவியல் கருத்துக்கோடல்** (Scientific conception) உருவாயிற்று. வரலாற்று நிகழ்ச்சிகள் திரும்பவும் நடக்காது என்றும், அந் நிகழ்ச்சிகள் தனி இயல்பினையுடையவை என்றும், முன் நடந்த நிகழ்ச்சி திரும்பவும் நடைபெருது என்றும் அறிஞர்கள் கருத ஆரம்பித்தனர். இயல்பு அறிவியலிலிருந்து டார்வினுடைய படிமுறை வளர்ச்சிக் கொள்கையும் (Theory of Evolution), வளர்ச்சி முன்னேற்றம், மாறுபடும் உலகம், ஒருமைப்பாடு, தொடர்ச்சி போன்ற கருத்துகளை மனத்தில் கொண்டு வரலாறு எழுதப்பட்டது. இதனுல் வரலாற்றின் பழக்கம் அல்லது வரலாற்று மனப்பான்மை வலியுறுத்தப்படலாயிற்று. அதாவது நிகழ்ச்சிகளைப் பற்றிய காரணம், பலன் இவற்றிடையேயுள்ள தொடர்பை (Cause and effect) உணரும்படிச் செய்தல். இவ்வித முறை அறிவியல் கருத்து முறைப்படி வரலாறு எழுதுதல் எனப்படும். இதற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த **ரேங்கே** (Ranke) என்பவராவார்.

இவ்வித எழுத்தாண்மைக் கலைக்கு வழிகாட்டியாக இருந்தவர் **நெபூர்** (Niebuhr) (கி.பி. 1776—1831) என்ற டேனிஷ் வரலாற்று அறிஞர். அவர் ஜெர்மன் மொழியில் வரலாறு எழுதினுர். அவரது **'ரோமன் வரலாறு'** (History of Rome) மிகவும் சிறப்பு வாய்ந்தது. தகுந்த ஆதாரங்கள் இன்றியும், உண்மைக்குப் புறம்பானதும் ஆகிய செய்திகளை இவர் நூலில் குறிப்பிடவில்லை என்று கூறியுள்ளார். ஜெர்மனி நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர் வான் ரேங்கே என்பவராவார்.

வரலாற்றை ஒரு தனி அறிவியல் பாடமாக உயர்த்திய பெருமை ஜெர்மனி நாட்டின் வரலாற்று ஆசிரியர் **லியோபோல்ட் வான் ரேங்கே** (Leopold Von Ranke) (கி.பி. 1795—1886) என்பவரைச் சார்ந்ததாகும். இவர் வரலாற்று ஆதார ஆவணங்களை மதிப்பீடு செய்வதற்காகவே நூல் ஒன்றை எழுதியுள்ளார். அறிவியல் ஆராய்ச்சி வழி முறையில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் அனுமான முறையை வரலாற்று ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தும் வழியை இவர் ஏற்படுத்தினுர். இவர் எழுதிய வரலாற்று நூல்கள் உண்மையை நாடி நடுநிலையுடன் எழுதப்பெற்றவை. இவர் ஐம்பத்து நான்கு தொகுதிகளில் வரலாறு எழுதியுள்ளார். ரேங்கேயின் சாதனைகளை **ஆசிரியர் கூச்** (Gooch) பின்வருமாறு கூறுகிருர்: (i) கடந்த கால நிகழ்ச்சிகளை அவை நடந்த விதத்திலேயே எடுத்துக் கூறியுள்ளார்; (ii) தற்காலத்தில் கிடைக்கும் ஆவணங்களின் அடிப்படையில் வரலாற்றுத் தொகுப்பை உருவாக்கினுர்; (iii) விவரங்களை ஆராய்ந்து அறிவியல் முறையைப

பின்பற்ற வரலாற்றை எழுதும் கலையை ஆரம்பித்தார். இவரெழுதிய நூல்களுள் ஆறு தொகுதிகளடங்கிய இங்கிலாந்தின் வரலாறும், ஒன்பது தொகுதிகளாகிய உலக வரலாறும் மிகவும் சிறப்பு வாய்ந்தவை.

ராங்கேயின் அறிவியல் ஆராய்ச்சி வழிமுறையைப் பின்பற்றி பிரான்ஸ் நாட்டில் **மிகனட் மச்சிலட்** (Mignet Michelet), **குஸாட்** (Guizot), **டி டோக்வில்** (De Tocqueville) போன்ற அறிஞர்களும், இங்கிலாந்து நாட்டில் **திரில்வல்** (Thrilwall), **ஆர்னல்டு** (Arnold); **ஹாலம்** (Hallam), **விங்கார்ட்** (Yingard), **பிரிமென்** (Freeman), **ஸ்டப்ஸ்** (Stubbs), **எஸ். ஆர். கார்டினர்** (S. R. Gardiner), **லெக்கி** (Lecky), **ஸீலி** (Seeley), **ஆக்டன்** (Acton), **மெயிட்லண்ட்** (Maitland) போன்ற அறிஞர்களும் வரலாறு எழுத ஆரம்பித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**வினுக்கள்**

(1) வரலாற்று எழுத்தாண்மைக் கலைக்குக் கிரேக்கர்களின் பணியினை மதிப்பிடுக.

(2) வரலாற்று எழுத்தாண்மைக் கலை வளர்ச்சியில் புளுட்டார்க் என்பவரது இடம் யாது?

(3) ரோமானிய வரலாற்ருசிரியர்கள் வரலாற்றின் வளர்ச்சிக்கு எவ்விதத் தொண்டாற்றியுள்ளனர்?

(4) கிறித்தவ மத எழுச்சியினுல் வரலாற்று எழுத்தாண்மைக் கலைக்கு ஏற்பட்ட மாற்றம் என்ன?

(5) குறிப்பு வரைக: (i) புனித அகஸ்டின்; (ii) பாலஸ் ஒரோஸியஸ்; (iii) தொடர் வரலாறு; (iv) 'மாக்டிபர்க் நூற்ருண்டுகள்.'

(6) எவ்வாறு வரலாற்றை மதத் தொடர்பிலிருந்து விடுவித்து, உலகியல் சார்ந்ததாக மாக்கியவெல்லி அமைத்தார்?

(7) மான்ட்டெஸ்க்யூ; வால்டேர்; ரூசோ—இவர்கள் வரலாற்று எழுத்தாண்மைக் கலைக்கு ஆற்றிய சேவை என்ன?

(8) லியோபோல்ட் வான் ரேங்கேயின் சிறந்த தொண்டை விவரிக்க.

## 4. வரலாற்றின் பல்வேறு கருத்துக்கோடல்கள் (Different Conceptions of History)

### (a) வாழ்க்கை வரலாறு பற்றிய கருத்துக் கோடல் (Biographical Conception)

கார்லைல் கருத்தின்படி 'வரலாறு என்பது எண்ணிக்கையிலடங்காத வாழ்க்கை வரலாறுகளின் சாரம் ஆகும்.' வரலாற்றில் "பெரியவர்களின் தத்துவம்" (Great Men theory of History) என்பதை மக்களிடையே பரவச் செய்த பெருமை கார்லைலைச் சேரும். 'பெரியவர்களின்' வாழ்க்கை, மனித குலத்தைப் பிரதிபலிப்பதால், அவர்களின் வாழ்க்கையை எமிலி (Emile) கற்க வேண்டுமென்று ரூஸோ (Rousseau) விரும்பினர்.

இந்த கருத்துக்கோடல் நமது பள்ளிகளில் வரலாறு கற்பிப்பதை அதிக அளவில் வசப்படுத்தியிருக்கின்றது. இவ்வித அணுகு முறை வரலாறு கற்பிப்பதன் நெறிமுறைப் பலனுடன் தொடர்புடையதாக இருக்கின்றது. தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு வாழ்க்கை வரலாறுமூலம் வரலாறு கற்பிப்பது மிகவும் சிறந்ததாகும். மனித இனத்தின் முன்னேற்றத்தை நாம் அறிவதற்குப் பெரிய தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை நாம் பயன்படுத்தலாம். அதுவே மிகவும் எளிமையான முறையாகும். இப்பெரியோர்கள் அவர்கள் வாழ்ந்த காலத்தின் சிறப்பானவர்களாகக் கருதப்படுவார்கள். அவர்கள் பிறந்து, வளர்ந்த நாட்டின் தலைவர்களாகவும் உருவாகியுள்ளனர். அவர்களின் எண்ணங்களும், செயல்களும் வரலாற்றில் வலிமையுள்ள ஒரு சக்தியை உருவாக்கியிருக்கின்றன (Formative force in History). நிகழ்ச்சிகள் அவர்கள்மூலமாகவும் அல்லது அவர்களுடன் தொடர்புடையதாகவும் ஏற்பட்டிருக்கின்றன.

எனவே, இந்தப் பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்றை நாம் கற்பிப்பதற்குத் தேர்ந்தெடுக்கும் பொழுது மிகவும் சிறப்பு வாய்ந்தவர்களைப் பற்றியதாக இருக்கவேண்டும் என்பதை நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும். அவர்களைப்பற்றிப் படிக்கும்பொழுது அவர்கள் வாழ்ந்த காலத்தை நாம் நன்கு அறியும் வாயிலாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, கி. பி. 1920—1950ஆம் ஆண்டு காலத்தை இந்திய வரலாற்றில் நாம் பார்த்தோமானால், இது காந்தியின் யுகம் என்பதை நாம் உணருவோம். பல கோடி மக்களின் உணர்ச்சிகளையும், எண்ணங்களையும் பிரதிபலிக்கும் தலைவராகக் காந்தி மகான் வாழ்ந்தார். அவரை ஒரு தியாகியாகவும், எதிர்ப்பாளராகவும் எடுத்துரைப்பார்கள். எனினும்,

அக் காலத்தின் இந்திய மக்களின் தலைசிறந்த தலைவராக வாழ்ந்தார். இவ்வாறு சிறந்த பெரியோர்கள் ஒவ்வொரு நாட்டிலும். ஒவ்வொரு காலப் பகுதியிலும் வாழ்ந்துள்ளார்கள். அவர்களைப் பற்றிக் கூறும் வாழ்க்கை வரலாற்றைத் தேர்ந்தெடுத்துக் கற்பித்தல் இன்றியமையாததாகும்.

வாழ்க்கையின் ஒவ்வொரு துறையைப் பற்றிய பெரியோர்களையும் நாம் தேர்ந்தெடுக்கவேண்டும். எல்லோருடைய பார்வையையும் ஈர்க்கும் பெரிய போர்த் தளகர்த்தர்கள், வீரர்கள்பற்றிய வாழ்க்கை வரலாறு அக் கால சமூகத்தின் அரைகுறையான வர்ணனையாக அமையும். பெருமை வாய்ந்த அரசியல் தலைவர்கள் (Statesmen), அறிவியல் அறிஞர்கள், சிந்தனையாளர்கள், கலைஞர்கள், மதப் பெரியோர்கள், சமூகத் தொண்டர்கள் போன்றவர்களின் வரலாற்றையும் மாணவர்கள் கற்கவேண்டும்.

வரலாற்றின் எல்லா நிகழ்ச்சிகளும், இயக்கங்களும் (movements) வாழ்க்கை வரலாறு கற்பிப்பதன்மூலம் நாம் மாணவர்களுக்குத் தெளிவுபடுத்த முடியாது என்பதை உணரவேண்டும். வரலாற்றைக் காலத்தொடர்பாகக் கற்பிப்பதற்கு வாழ்க்கை வரலாறு முறையைப் பயன்படுத்துவது இயலாது என்பதையும் எடுத்துக் கூறுவார்கள்.

மேலும் இப் பெரியோர்களின் வாழ்க்கையை நாம் கற்பிக்க விரும்புவது அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றியது அல்ல; அவர்கள் பொது வாழ்வில் ஈடுபட்டு, சிறந்த செயல்கள் புரிந்தமையால் எனபதை வலியுறுத்த வேண்டியதாக இருக்கின்றது. எனவே 'பாட்டிகள் கூறும் கதைகளாக' (Grand mothers' tales) இவற்றை நாம் மாற்றிவிடக் கூடாது. இவர்களின் வாழ்க்கையைப் பற்றிய அற்பத் தன்மையுள்ளவற்றை நீக்கிவிடவேண்டும். 'ஆல்பிரடின் அப்பம்' (Alfred's Cakes), 'விட்டிங்டன்னின் பூனை' (Whittington's Cat), 'ஷாஜிபான்ஸ்லே யானையின் எடையை மதிப்பீடு செய்தல்' போன்றவற்றை நீக்கிவிடவேண்டும். இக் கதைகள் எவ்வித வரலாற்றையும் உரைப்பதில்லை என்பதை நாம் அறியவேண்டும். எனவே, வாழ்க்கை வரலாற்றைக் கற்பிக்கத் தொடங்குமுன், இவ்வித வினவை நாம் எண்ணவேண்டும்: குழந்தைகளுக்கு எவ்வித வரலாற்றை இக் கதை கற்பிக்கும்? இவை ஒரு காலத்தை ஒளிபெறச் செய்கின்றதா அல்லது ஒரு குறிப்பிட்ட வரலாற்றின் போக்கை அல்லது நிகழ்ச்சியைக் குறிக்கின்றதா? இவ்வாறு நாம் ஆய்வுசெய்து வாழ்க்கை வரலாற்றைத் தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்குக் கற்பிப்பதால்

சிறந்த பலன்களைப் பெற முடியும் என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். மேல் வகுப்பு மாணவர்களுக்குத் தொடர்பு முறையில் வரலாற்றைக் (Narrative method) கற்பிக்கும் பொழுதும் வாழ்க்கை வரலாற்று முறை பயனுடையதாக அமையும்.

(b) **வரலாறு ஒரு கடந்தகாலப் பதிவேடு (History is a record of the past)**

19ஆம் நூற்றாண்டுவரை வரலாறு செய்திகளடங்கிய புனைக் கதையாகத் தோற்றமளித்து வந்தது. பழைமையான முறையில் வரலாறு தொகுக்கப்பட்டதில் மூன்றுவித முக்கியக் குறைபாடுகளை நாம் காணலாம். அவைகளாவன: (i) வரலாறு அதன் பொருட்டு கற்பதற்கோ, அல்லது எழுதுவதற்கோ முற்படவில்லை. இலக்கியம் அல்லது கலைபற்றிய பயனைப் பெறுவதற்காக வரலாறு எழுதப் பட்டது. அரசியல் அல்லது மதக் கருத்துகளை எடுத்துரைப் பதற்காக வரலாறு பயன்படுத்தப்பட்டது. (ii) பழைய கொள் கைப்படி, வரலாறு தனித்தன்மை உடையதாகவும், மேலோட்டமாக எழுதப்பட்டதாகவும் அமைந்திருந்தது. அதில் அரசர்கள், இராணிகள், அமைச்சர்கள், போர் வீரர்கள்பற்றி எழுதப்பட்டதே தவிர, சமூகத்தைப்பற்றியோ மக்களின் வாழ்க்கையைப்பற்றியோ எழுதப்படவில்லை. அரசியல், இராணுவம்பற்றிய செய்திகளை விவரித்துக் கூறியது. சமூக வாழ்க்கையைப்பற்றியும் பொருளா தார நிலைமையைப்பற்றியும் வரலாற்றில் விவரிக்கப்படுவதில்லை. (iii) வரலாறு எழுதும் முறை ஆய்வு முறையில் அமையவில்லை. ஆவணங்களைவும், மூலங்களையும் பயன்படுத்தி வரலாறு எழுதப் படவில்லை. கேட்டதையும், நம்பினதையும் வரலாற்று ஆசிரியர்கள் தங்கள் நூலில் எழுதினார்கள். வரலாறுக்கும், புராணக் கதை களுக்கும் (Mythology) வேறுபாடில்லாமலிருந்தது.

19ஆம் நூற்றாண்டின் அறிவியல் முறையில் வரலாறு எழுதப் படுவதற்கு ஜெர்மனி நாடு வழிகாட்டியாக இருந்தது. நெபூர் (Niebuhr), லியோபோல்ட் வான் ராங்கே (Leopold von Ranke) போன்ற வரலாற்றாசிரியர்கள் அறிவியல் முறையில் வரலாறு எழுது வதை அறிமுகப்படுத்தினார்கள்.

கடந்த காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளைக் கொண்ட பதிவேடே வரலாறு என்ற கருத்து உருவாகியது. இந்தப் பதிவேட்டில் தொகுக்கப்பட்டவைகள் ஒரு நாட்டைப் பற்றியதோ அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்தைப் பற்றியதாகவோ அமையாது.

பூமியில் மனிதன் தோன்றிய காலத்திலிருந்து வரலாறு ஆரம்பிக்கின்றது. மனிதன் சென்று வாழ்ந்த இடங்கள், பகுதிகள் கண்டங்கள் யாவற்றைப் பற்றியும் விவரித்துக் கூறும். தனிப்பட்டவர்களைப் பற்றிக் கூறுவதில் வரலாறு முன்னிருக்காது; மனித இனத்தின் முன்னேற்றத்திற்கு உதவியவர்களையும், அரும் பெரும் சாதனைகளைப் புரிந்தோர்களையும், வரலாறு வர்ணித்துக் கூறும் அரசியல், மதம், சமூகம், இலக்கியம், கலை போன்ற துறைகளில் மக்கள் இன முன்னேற்றத்திற்குக் காரணமாயிருந்தவர்களைப்பற்றியும் அறிந்து கொள்ள வரலாறு முற்பட்டது. இவ்விதச் செயல்கள் பற்றிய விவரங்களைத் தேடி, நேர்ந்தெடுத்து, உண்மையானவற்றை வகைப்படுத்தி, ஆய்வு செய்து விவரித்துக் கூறுவதற்கு வரலாறு முற்பட்டதை அறிவியல் முறை என்று கூறுவார்கள். பிறர் புகழ்வதையோ அல்லது குறை கூறுவதையோ கவனிக்காமல் உண்மையை எடுத்துரைக்க வரலாறு முற்பட்டது. பூமியில் மனித இனம் பெற்ற படிமுறை வளர்ச்சியைக் கூறுவதே வரலாறு என்ற கருத்து உருவாயிற்று.

'வரலாறு கடந்த காலப் பதிவேடாகவே இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ஆண்டுகள் இருந்து விட்டது' என்று இராபின்ஸன் கூறுகின்றார். நடந்த செய்திகளை வர்ணிப்பதோடு வரலாற்றாசிரியர் நின்று விடக் கூடாது. அவை ஏன், எவ்வாறு ஏற்பட்டன என்பதை நிர்ணயம் செய்யவேண்டும். நிகழ்ச்சிகள் ஏற்பட்டதின் காரணங்களையும், அதனால் ஏற்பட்ட பலன்களையும் (Cause and effect) அறிவதற்கு வரலாறு முற்படலாயிற்று. விவரங்களிடையில் நிலவியிருக்கும் தொடர்பை விவரித்துக் கூறுவது வரலாற்றாசிரியரின் கடமையாகும். அவற்றைப் பற்றிய பொதுக் கருத்தை வெளிப்படுத்துவது இன்றியமையாததாகும். லெங்காஸ்டர் வமிசத்தினர்கள் (Lancaster Dynasty) காலத்தில் பாராளுமன்றக் கொள்கை ஏன் தோல்வியுற்றது? ஏன் 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜெர்மனியில் மதச் சீர்த்திருத்தம் ஏற்பட்டது? ஏன் அதற்கு முன்பு ஏற்படவில்லை? ஏன் பிரெஞ்சுப் புரட்சியில் இரத்தம் சிந்தப்பட்டது? ஆங்கிலப் புரட்சியில் ஏன் இவ்விதமாக இரத்தம் சிந்தப்படவில்லை (Bloodless revolution)? ஏன் முதலாம் சார்ல்ஸ் காலத்தில் அரசருக்கும், பாராளுமன்றத்திற்கும் பிணக்கு ஏற்பட்டது? ஏன் டியூடர் (Tudor) வமிசத்தினர் ஆட்சிக் காலத்தில் பாராளுமன்றத்திற்கும், அரசர்களுக்கும் நல்ல விதமான ஒத்துழைப்பு இருந்தது? இவ்வித ஆய்வினால் ஏற்படும் பொதுக் கருத்தினால் எவ்விதப் பலனும் பிற்காலத்தினருக்கு ஏற்படப் போவதில்லை என்றாலும், குறிப்பிட்ட விவரத்திலிருந்து, பொதுக் கருத்து உருவாகும் முயற்சி வரலாற்றை அறிவியல் நிலைக்கு

உயர்த்துவதாகும். ஆசிரியர் பிண்ட்லே கூறுவது போல் வரலாற்றின் பொதுக் கருத்தை வெளிப்படுத்துவதால், 'ஒரு நிகழ்ச்சி மற்றொரு நிகழ்ச்சியைத் தொடர்ந்து ஏற்படுகின்றது' என்பதை நமக்குத் தெரிவிக்கின்றது. இந்தக் காரண காரிய முறையில் வரலாற்று நிகழ்ச்சிகளை மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

கடந்த கால நிகழ்ச்சிகளைக் கற்பது, தற்காலத்தை நன்கு அறிவதற்கே என்பதை உணரவேண்டும். **'தற்காலம் என்பது கடந்த காலத்தின் குழந்தை'** (The present is the child of the past). தற்கால நிலையில் நம்நாடு, நமது மக்கள், நமது அலுவலகங்கள், மதம், பழக்கவழக்கங்கள், பிரச்சினைகள் போன்றவற்றை அறிவதற்குக் கடந்த காலச் செய்திகள் எவை தேவையாக இருக்கின்றனவோ, அவற்றையே நாம் மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். எனவே, முற்கால நிகழ்ச்சிகளுக்கும், தற்கால நிலைமைகளுக்கும், இடையேயுள்ள தொடர்பை விவரித்துக் கூறுவது வரலாற்றின் பணியாகும்.

கடந்த கால நிகழ்ச்சிகள், தற்கால நிகழ்ச்சிகளை விளக்க வைக்கும் பொருட்டு விவரித்துக் கூறப்படவேண்டும். தற்கால நிகழ்ச்சிகளை ஒளி பெறச் செய்யவும், அதில் கவர்ச்சியை ஏற்படுத்தும் அளவுக்கே கடந்தகால நிகழ்ச்சிகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

## (c) படிமுறை வளர்ச்சிக் கருத்துக் கோடல் (Evolutionary Conception)

டார்வினுடைய படிமுறை வளர்ச்சிக் கோட்பாட்டின் தொடர்பால் வரலாற்றில் படிமுறை வளர்ச்சிக் கோடல் உருவாயிற்று.

வரலாற்றைக் கூர்ந்து கவனித்தால் இவ்வுலகம் 'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராய்' வளர்ந்து, மாறி வருகிற பரிணாம முறையை அறியலாம். ஊர்வன, பறப்பன, விலங்குகள் முதலிய எல்லாவற்றிற்கும் பின்னர் தோன்றிய மனிதன், தனது பகுத்தறிவின் வன்மையினால் அவற்றை வென்று விளங்குகிறான். மனிதன் காட்டுமிராண்டித்தனமான வாழ்க்கையிலிருந்து நாகரிக வாழ்க்கைக்குப் படிப்படியாய் உயர்ந்துவந்த கதையே 'வரலாறு' என்று கருதப்படுகின்றது.

வரலாறு, முன்னேற்ற விதிக்கு (Law of Progress) உட்பட்டது என்ற கருத்து 19ஆவது நூற்றுண்டில் பிரபலமடைந்தது. வரலாற்றில் முன்னேற்றம் என்பதற்கும், இயற்கையில் முன்னேற்றம் என்பதற்கும் வேறுபாட்டினை நாம் அறிவது அவசியமானது என்று R. C. காலிங்வுட் (R. C. Collingwood) கூறுகின்றுர். படிமுறை என்பது இயற்கையில் புதிய அமைப்புகள் ஏற்பட்டதைக் குறிப்பிடுவதால் 'படிமுறை வளர்ச்சி' என்ற சொல் இயற்கையில் முன்னேற்றம் என்ற கருத்தை உள்ளடக்கப் பெற்றிருக்கின்றது. அவர் கூறுவதாவது: 'இயற்கை முறையைப் படிமுறை வளர்ச்சி என்று கூறுவதும் அது முன்னேற்றம் அடைந்துள்ளது என்று கூறுவதும் ஒன்ருகும்.' இயற்கையின் தத்துவம் முன்னேற்றம் என்பதே ஆகும் என்று தோன்றுகின்றது.

மனித வரலாறு முன்னேற்ற விதிக்கு உட்படுமா? வரலாறு முன்னேற்றத்தைக் கூறுகின்றது என்பதை நாம் நம்ப வேண்டுமாஞல், வரலாற்றின் முழுப்பலனையும் நாம் ஏற்கவேண்டியதாகவே அமையும்.

முன்னேற்றம் என்ற கருத்தைத் தெரிவிக்கும் 'படிமுறை வளர்ச்சி' என்ற பதத்திற்குப் பதிலாக 'வரலாற்று மாறுதல்' என்று குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானதாகும். வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி முன்னேற்றப் பாதையிலிருக்கின்றதா அல்லது சாதாரண மாறுதலா என்பதை வரலாற்று ஆசிரியரே முடிவுசெய்யவேண்டியதாகும். வரலாற்றில் ஒவ்வொரு நிகழ்ச்சியும், நிகழ்ச்சியின் வரிசையில் அமையும். எடுத்துக்காட்டாக, பிரெஞ்சுப் புரட்சியைக் கூறலாம். உலக வரலாற்றில் பிரெஞ்சுப் புரட்சியானது ஓர் இணையற்ற நிகழ்ச்சியாகும். மற்றைய புரட்சிகளுடன் அதை ஒப்பிடக்கூடும். மனித வாழ்க்கையின் பல துறைகளில் எதிர்பார்க்க முடியாத அளவில் பலவித மாற்றங்கள் அப் புரட்சியினுல் ஏற்பட்டன. எனினும், அதை ஒரு முன்னேற்ற நிகழ்ச்சி என்று வர்ணிக்கமுடியாது.

சமூகவியல் கருத்துப்படி (Scoiologically), மாறுதல் ஒரு முன்னேற்ற முயற்சி என்று கூறுவதை ஏற்பதில்லை. நமது பழைய தலைமுறையினர்கள் வாழ்க்கையில் ஏற்படும் மாறுதல்களை எதிர்ப்பார்கள். ஆனுல், இளைஞர் சமுதாயம் மாறுதல்களை ஏற்படுத்த முயல்வார்கள். எனவே, பழைய தலைமுறையைச் சேர்ந்த ஒருவருக்கு மாறுதல் நிகழ்ச்சி ஒரு முன்னேற்றமாக இருக்கவேண்டுமென்பது அவசியமானதல்ல. அதற்கு மாருக அது பின்னேக்கிய முயற்சியாகத் தோன்றலாம். 'கெட்டவைகளை

நீக்கி நல்லதை ஏற்படுத்துவது முன்னேற்றம் என்று கருதுவதற்கில்லை; எனினும் நல்லதைவிட சிறந்தது அமைவதே முன்னேற்றம்' என்று காலிங்வுட் கூறுகின்றார். மேலும், வரலாற்றில் முன்னேற்றம் என்பது ஒன்றன்பின் ஒன்று ஏற்படுவதையும், தொடர்ச்சியாக நிகழ்ச்சிகள் ஏற்படுவதையும் ஒட்டியே அமையும். முன் நூற்றாண்டுகளில் அறிவியல் அறிஞர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் திரண்ட மரபுரிமையினால் இன்றைய அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் வானமண்டலத்தைத் துருவி ஆராய (to explore space) முடிகின்றது. எனவே, தவிர்க்க முடியாத முன்னேற்றம் என்ற முறையில் பேசுவது நகைப்பிற்கிடமானதாகும்.

'படிமுறை வளர்ச்சி' (Evolution) 'முன்னேற்றம்' (Progress) என்ற வார்த்தைகளைப் பயன்படுவதால் ஏற்படும் குழப்பத்தையும், இரு பொருள் மயக்கத்தையும் நீக்க 'வளர்ச்சி பெறுதல்' (Development) என்ற சொல்லைப் பயன்படுத்துவதால் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு முடியும். வளர்ச்சி பெறுதல் என்றால் முன்னேற்றம் என்ற கருத்தைக் குறிக்காது.

**வினாக்கள்**

(1) வரலாற்றின் பல்வேறு கருத்துக் கோடல்களின் முக்கியத்துவத்தை விவரிக்கவும்.

(2) வாழ்க்கை வரலாறுபற்றிய கருத்துக் கோடலை விளக்கி எழுதுக.

(3) 'வரலாறு ஒரு கடந்த காலப் பதிவேடு'—என்பதை விவரிக்கவும்.

(4) படிமுறை வளர்ச்சிக் கோடலை ஆராய்ந்து எழுதவும்.

## (5) வரலாறு—அறிவியல் பாடம்

கி.பி. 1903ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பேராசிரியர் J. B. பியூரி (Bury) கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையின் பேராசிரியராக ஆக்டனுக்குப் பிறகு பதவி ஏற்றபொழுது தம் துவக்கவுரையில் "வரலாறு ஓர் அறிவியலே, அதற்கு குறைவுமில்லை, அதிகமுமில்லை" என்றார். இந்த வாக்கியம் (simply a science, no less and no more) வரலாற்று ஆசிரியர்களிடையே ஒரு பிரச்சினையைத் துவக்கியது. பியூரி ஆசிரியர் 19ஆம் நூற்றாண்டிலிருந்த ஜெர்மனி பேராசிரியர்

லியோபால்ட் வோன் ரேங்கேயின் (Leopold von Ranke) கருத்தினை எடுத்துக் கூறினர் என்றே தோன்றுகிறது. ரேங்கே தமது சிறப்பு வாய்ந்த கொள்கையைத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிருர். 'வரலாற்றின் முக்கிய வேலை கடந்த காலத்தை மதிப்பிடுவதல்ல; பிற்காலத்தின் நன்மைக்காகத் தற்காலத்தில் அறிவுரை செய்வதுமல்ல; அதனுடைய முக்கியப் பணி உண்மையாக நடந்தவற்றைக் கூறுவதேயாகும்.' (Its business is to show what actually happened). இந்தக் கடைசித் தொடர் (Wiees Eigentich Gewesen) ஆவணங்களின் உதவி கொண்டு புறவழி நிலையில் நடந்தவற்றை எடுத்துக் கூறும் ராங்கேயின் அறிவியல் கொள்கையை நமக்குத் தெரிவிக்கின்றது.

அறிவியல் (Science) என்ற சொல் இரண்டு வித கருத்துகளைக் குறிப்பிடுகின்றது. ஆங்கில மொழி வழக்கிலுள்ள நாடுகளில் அறிவியல் குறிப்பிட்ட துறைகளைக் குறிக்கின்றது. இயக்க இயல் (Physics), இயைபியல் (Chemistry) என்பதையும், கணிதத்தையும் அறிவியல் என்ற சொல் குறிப்பிடுகின்றது. ஆனல், ஐரோப்பாக் கண்டத்தில் (Continent) விசாரணையினுல் அறியப்படும் அறிவுத் தொகுதியை அறிவியல் என்ற சொல் குறிப்பிடுகின்றது. வரலாறு என்பதும் விசாரணையால் அறியும் செய்திகளைக் குறிப்பிடுவதால் அறிவியல் என்று கருதப்படுகின்றது. எனவே, உண்மையைக் கண்டுபிடிப்பது என்பது வரையிலும் அறிவியல் என்ற சொல் வரலாற்றுக்குப் பொருந்தும். இந்தக் கருத்தினை ஏற்றுக் கொண்டால் கருத்து வேறுபாட்டிற்கு இடமேயில்லை. J. B. பியூரி அறிவியல் என்ற சொல்லைக் கண்டத்தில் பயன்படுத்துகின்ற முறையில் குறிப்பிட்டுக் கூறினர் என்பது தெளிவானதாகும்.

இயக்கவியல், இயைபியல் பாடங்களைப் போல், வரலாற்றை, அறிவியல் பாடமாகக் கருதமுடியாது. வானநூல் போல் உற்று நோக்கும் அறிவியல் பாடமாக வரலாற்றைக் கருத முடியாது. இயக்க இயல், இயைபியல் போல் சோதனை செய்து, விவரங்களை அறியும் (Science of experiment) அறிவியல் நூலாக வரலாற்றைக் கருதவும் முடியாததாகும். அறிவியல் கலையில் நாம் ஆராயப்புகும் சக்திகளின் தன்மைகளையும், குணங்களையும் தனித்தனியே சோதனை செய்தும், ஒரே சோதனையைப் பல தடவை செய்து பார்த்தும் ஐயமில்லாமல் நிருணயித்துக் கொள்ளமுடியும். வரலாற்று ஆசிரியனே, நடந்த செய்திகளைத் தன் கைக்கெட்டிய ஆதாரங்களைக் கொண்டு அறிய முயலுவதைத் தவிர, சோதனைகள் செய்து, மனிதரின் நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்ள முடியாது. மேலும் கணிதத்தில், இரண்டும் இரண்டும் நான்கு

என்று எல்லோரும் ஒப்புக் கொள்வதைப் போல், வரலாற்று ஆதாரங்களிலிருந்து ஊகிக்கக்கூடும் செய்திகளில் ஒற்றுமை ஏற்படுமென்று எதிர்பார்க்க ஏது இல்லை. ஆனால், அறிவியல் அறிஞர்கள் கையாளும் தருக்க முறைகளுக்கு வரலாற்று நிருமாணத்தில் இடமே இல்லை என்று கூறுவதும் தவறாகும்.

வரலாறு திறனாய்வு நடைபெறும் அறிவியலாகும் (Science of criticism). திறனாய்வில் நடைபெறும் முக்கிய நிலைகள் பின்வருவன:

(i) தேவையான செய்திகளைச் சேகரிக்கத் திறமையான சோதனையில் ஈடுபடுதல்.

(ii) அந்தச் செய்திகள் உண்மையானவயா அல்லது நம்பத் தகுந்தவையா அல்லது தவறானவையா என்பதை மிகவும் கவனமாகத் திறனாய்வு செய்தல்.

(iii) அறிந்த செய்திகளை விளக்கிக் கூறுதல். மேற்கூறிய இந்த முறைகள் தன் விருப்பு அல்லது வெறுப்பின்றி உண்மையான செய்திகளை அறியும் முயற்சியாக இருக்கவேண்டும். இவ்வித அறிவியல் கண்கொண்டு செய்திகளைச் சேகரிக்கும் முயற்சிக்கு அறிவியல் முறை எனப் பெயர். எனவே, வரலாறு ஓர் அறிவியல் பாடமாகக் கருதப்படுகின்றது. வரலாற்று ஆசிரியருக்கு ஒரு பொது விதி அல்லது தத்துவத்தை (General Principles or Laws) முன்கூட்டி கூறுவதற்கு இயலாது என்பது உண்மையே. ஆனால் அவருக்கு வரலாற்றுச் செய்திகளை, அறிவியல் முறையைப் பின்பற்றி, ஆய்வு செய்வதற்கு இயலும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். பொது விதிகளை அமைக்கமுடியாத அறிவுத் தொகுதிகளுக்கு அறிவியல் பண்பை நிராகரிப்பது தவறான செயலாகும். ஹக்ஸ்லி (Huxley) கூறுவதை நாம் கவனிக்கவேண்டும். 'சான்றுகளையும் பகுத்தறிவாராய்ச்சியையும் கொண்டு அறியும் எல்லா அறிவுத் தொகுதியும் அறிவியல்' என்று ஹக்ஸ்லி கூறுகின்றார். இந்தக் கூற்றுப்படி வரலாறு ஓர் அறிவியல் நூலாகும்.

வரலாறு அறிவியல் நூலாகக் கருதப்படுமானால், அதை ஒரு கலையாகக் கருதமுடியாது. ஆனால், வரலாற்று அறிஞர்கள் வரலாற்றை ஒரு கலைப்பாடமாகக் கருதுகின்றார்கள். அறிவியல் வெறும் எலும்புக் கூட்டைப்போல் செய்திகளை அறிவிக்கின்றது. அந்த எலும்புக் கூட்டிற்குச் சதையும், உருவமும் அளித்து அழகுபடத் தோன்றச் செய்வது கவியின் இலக்கியத் திறமையினாலேயே ஆகும். இலக்கிய நயத்தையும், கற்பனை சக்தியையும் பயன்படுத்தி வரலாற்றுச் செய்திகளை உயிருள்ளவைகளாக

விளங்கும்படி செய்வது வரலாற்று அறிஞரின் எழுத்துத் திறமை யினுலாகும் என்பதை நாம் மறக்க முடியாது. இவ்வுலகிலுள்ள மனித இனத்தின் செயல்களை ஒரு காவியமாகப் படைத்துக் கூறுவது ஆசிரியரின் சொல்வன்மையாலாகும். எனவே, வரலாறு இலக்கியப் பண்புகளையும் கலையுணர்வுகளையும் பெற்றிருக்கவேண்டு மென்பது தெளிவாகின்றது.

மனித இனத்தின் கடந்த கால செயல்களின் பதிவேடு வரலாறு. அந்தப் பதிவேட்டில் கடந்த காலத்தின் மக்கள் வாழ்க்கையையும், அவர்களின் செயல்களும், உள்ளக் கிளர்ச்சி களும், திடுக்கிடச் செய்யும் சம்பவங்களும் உள்ளடங்கியுள்ளன. இவற்றை வர்ணிப்பதற்கு இலக்கியத் திறமை வேண்டியதாகும். எனவே வரலாறு நமக்கு மனக்கிளர்ச்சியைக் கொடுப்பதாலும், அதைப் படிக்கும் பொழுது நாம் உணர்ச்சி வசப்படுவதாலும் வரலாற்றைக் கலைப் பாடமாகக் கொள்ளலாம்.

எனவே வரலாறுக்கு, அறிவியல் கூறும், கலைபற்றியக் கூறும் உண்டு என்பதை நாம் அறியவேண்டும். உண்மையை நாடி விசாரணை நடத்துவதால் வரலாறு அறிவியலாகக் கருதப்படு கின்றது. அந்த உண்மைச் செய்திகளைத் தொகுப்பாகப் பதிவு செய்து கூறுவதால் கலைப்பாடமாகவும், கருதப்படுகின்றது. வரலாறு என்ற சொல் இரண்டு கூறுகளையும் குறிக்கப் பயன்படுத்து வதால் இந்தக் குழப்பம் ஏற்படுகின்றது. கடந்தகால நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்து, தொடர்பாக எடுத்துக் கூறுவதை ஒரு சொல்லாலும், உண்மையை நாடி, விசாரணைச்செய்து செய்திகளைச் சேகரிப்பதை வேறு சொல்லாலும் அழைப்பதால் இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இயலும். எனவே உண்மைச் செய்திகளை அறிவியல் முறையில் ஆய்வுசெய்து சேகரிக்கும் கூறுக்கு வரலாறு என்றும், அவ்விதமாக சேகரித்த விவரங்களை அழகுபட எடுத்துரைக்கும் கூறுக்கு எழுத்தாண்மைக்கலை (Historiography) என்றும் கூறுவது பொருத்தமானதாகும்.

வரலாறு அறிவியல் பிரிவு என்னும், கலைப் பிரிவு என்றும் இரண்டாகக் கருதப்படவேண்டும். வரலாற்றைக் கற்பிக்கும் பொழுது பெரும்பாலான ஆசிரியர்கள் கலைப்பகுதியைத் தொடக்கப் பள்ளி நிலையில் அதிக அளவில் பயன்படுத்த விரும்புவார்கள். அறிவியல் பிரிவை மேல் வகுப்புகளிலும், கல்லூரியிலும் பயன் படுத்துவதற்கு முன்வருவார்கள். ஆசிரிசிர் F. R. வோர்ட்ஸ் (F.R. Worts) வரலாற்றின் அறிவியல் அம்சத்தைக் கல்லூரி வகுப்பு களுக்கே ஒதுக்கு வைத்து பயன்படுத்த வேண்டும் என்று கூறு கின்றுர். அவர் கருத்துப்படி, ‘வயது வந்தவர்களுக்கு வரலாறு

3

ஒரு விதமாகவும், குழந்தைகளுக்கும், பள்ளி மாணவர்களுக்கும் அது வேறு விதமாகவும் தோற்றமளிக்கும்.' அவர் கருத்துப்படி வரலாறு அறிவியல் அம்சத்தைவிட கலை அம்சத்தை அதிக அளவில் பெற்றிருக்கின்றது என்பதாகும்.

**வினாக்கள்**

(1) வரலாறு முழு அளவான அறிவியல் பாடமன்று என்பதற்குக் குறிப்பிட்ட காரணங்களைத் தெரிவிக்கவும்.

(2) 'வரலாறு அறிவியல் பாடமும் கலைப்பாடமும் ஆகும்,' விவரிக்க.

(3) வரலாறு ஓர் அறிவியல் பாடமாகக் கருதப்படுவதற்குக் காரணங்களைத் தொகுத்துக் கூறுக.

(4) வரலாற்றுக்குக் கலைபற்றியக் கூறும் உண்டு என்பதற்கு காரணம் கூறுக.

# 2. பொதுத்தன்மைகள்
## (General Aspects)

### 1. வரலாற்றுப் பாடத்தின் அளவுகள்
### (Dimensions of History)

(அ) தொடர்ச்சி (Continuity)

19ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்து வரலாற்று ஆசிரியர்கள், குறிப்பாக இங்கிலாந்தில் லீக்கியும் (Lecky), பிரான்ஸ் நாட்டில் கைஸாட் (Guizot) என்பவரும் வரலாற்றின் எழுத் தாண்மைக் கலையில் ஒரு மாறுதலைத் துவக்கினுர்கள். பெரியோர் களின் வாழ்க்கை வரலாறுகளை எழுதுவதற்குப் பதிலாக, மக்கள் இனத்தினரிடையிலேயே பரவியிருக்கும் பொது எண்ணங்களையும், சக்திகளையும், படிமுறை வளர்ச்சிக் கருத்தையும், வளர்ச்சி ஒற்றுமை போன்ற கருத்துகளையும் வலியுறுத்தி எழுத ஆரம்பித் தார்கள். இவை வரலாற்றின் வரம்புகள் அல்லது சிறப்புக் கூறுகளாகக் கருதப் படலாயின. கடந்த காலத்திலிருந்து, தற்காலம் எவ்வாறு வளர்ச்சிப் பெற்றிருக்கின்றது என்பதையும், நாகரிகத்தின் முழு வளர்ச்சியைப் பற்றியும் விவரித்துக் கூறும் நோக்கத்துடன் வரலாற்றை எழுதத் தொடங்கினுர்கள். அறிவியல் கருத்துக் கொள்கைப்படி வரலாறு எழுதுவது முக்கிய நோக்கமாக மாறியது.

அறிவியல் கருத்துக் கோடல் ஏற்றுக் கொண்டமையால் ஏற்பட்ட பலன்களில் சிறப்பானது படிமுறை வளர்ச்சிக் கோடலின் கருத்தாகிய ஒற்றுமை, தொடர்ச்சியைப் பற்றி அறிய ஆரம்பித்த தாகும். ஒரு காலத்தைப் பற்றிய நிகழ்ச்சிகள் அல்லது செய்திகளை அவற்றின் தன்மையை ஒட்டி வகைப்படுத்தி ஒன்று திரட்டி விவரித்துக் கூறும் பொழுது அக்காலத்தில் உருவாகும் வரலாற்றுப் போக்குகள், விவரங்கள் ஆகியவை சரிவரத் தெளிவுபடுத்தப்படு கின்றன. நிகழ்ச்சிகள் தொடர்புடையனவாகவும் இருக்கின்றன. ஒரு நூற்றுண்டின் நிகழ்ச்சி பிற நூற்றுண்டு நிகழ்ச்சிக்கு வித்திட்ட முறையிலிருப்பதை அறிய முடிகின்றது. அதாவது ஒரு வரலாற்று இயக்கத்திற்கும், அதற்குமுன் ஏற்பட்ட வரலாற்று

இயக்கத்திற்கும், நிலவி இருக்கும் தொடர்பை அறிய முடிகின்றது என்பதாகும். பல நூற்ருண்டுகளில் ஏற்பட்ட முன்னேற்றமும் தெளிவாகின்றது. மனித இனத்தினிடம் காலப் போக்கில் ஏற்படும் மாற்றங்கள் ஓர் ஓடையின் நீரோட்டத்தின் போக்கை ஒத்திருக் கின்றது.

(ஆ) **வளர்ச்சி** (Development)

இது வரையிலும் சமூகத்தைச் சீர்திருத்தம் செய்ய விரும்பு பவர்கள் தற்காலத்தில் காணும் குறைபாடுகளைப் 'பழைய நல்ல காலத்தை'க் (the good old times) குறிப்பிட்டுக் கூறுவார்கள். படிமுறை வளர்ச்சி என்பது 'மாற்றங்களின் தவிர்க்க முடியாத நிலைமையை' எடுத்துரைக்கின்றது. 'இதுவே கால உணர்ச்சி' (Time sense) என்று வழங்கப்படலாயிற்று. இதுவும் அறிவியல் வரலாற்றுக் கோடலினின்று பெறும் பலன்களில் ஒன்ருகும். நாம் காணும் ஒவ்வொன்றுக்கும் தோற்றமும், வளர்ச்சியுமுண்டு. எனவே, அதன் வளர்ச்சியை நாம் புறக்கணிக்க முடியாது. நாம் தற்காலத்தில் காணும் அமைப்புகள் எல்லாம் பல நூற்ருண்டு களுக்குமுன் தோன்றிய அமைப்புகளிலிருந்து உருவாகியிருப்பன வாகும். ஆசிரியர் **ராபர்ட்ஸன்** இந்தத் தொடர்ச்சியையும், ஒற்றுமையையும் (unity and development) வரலாற்றின் அளவுகள் (dimensions) என்று கூறுகின்ருர்.

வரலாற்று ஆசிரியர்கள் இவ்வுண்மையை மாணவர்களுக்கு விளங்கும் முறையில் எடுத்துரைக்கவேண்டும். ஆசிரியர் மார்லியின் (Morley) கூற்றை இங்குக் குறிப்பிடலாம். 'நாம் 13ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த மக்கள் என்ன நினைத்தார்கள், செயலாற்றி ஞர்கள் என்பதைப் பழைமையை உணரும் ஆசையினுல் விரும்புவ தல்ல. 19ஆம் நூற்ருண்டின் மக்கள் நினைப்பதற்கும், செயலாற்று வதற்கும் 13ஆம் நூற்ருண்டு மக்களின் எண்ணங்களும், செயல் களும் வித்துகளாக இருப்பதுதான்.'

வரலாறு பற்றிய இந்த அறிவியல் கருத்துக்கோடல் வரலாற்று மனப்பான்மையைத் தெளிவுப்படுத்துகின்றது. வரலாற்று ஆசிரி யர்கள் வரலாற்றுப் பழக்கம் அல்லது வரலாற்று மனப்பான்மையை (Historical mindedness) மாணவர்களிடம் வளரச் செய்வதற்கு முற்படவேண்டும். **ஆவலூக்கம்** (curiosity) ஏற்படுவதால் மாணவர்கள் ஒவ்வொரு நிகழ்ச்சியின் காரணங்கள், பலன்கள், அவற்றிற் கிடையில் உள்ள தொடர்புகள் போன்றவற்றை அறிய விரும்புவார்கள். நடந்த காலத்திலிருந்த நிலைமையையும், தற் காலத்திலுள்ள நிலைமையையும் ஒப்பிட்டு விளக்க முன்வர வேண்டும்.

(இ) **காலம்** (Time)

வரலாற்றுச் செய்திகள் செறிவுற்ற செய்திகளாக இருக்கின்றன. அவற்றிற்கு எப்பொழுது என்ற காலமும், எங்கு என்ற இடமும் உள்ளன. செய்திகளை ஓரிடச் செறிவுப் படுத்துதல் உய்த்துணர்தலாக இருக்கலாம்; திட்டவட்டமாகக் கூற முடியாமலும் இருக்கலாம். இடம், காலம்பற்றிய தொடர்புகளை விளக்கவில்லையானல், அச் செய்தி வரலாற்றுச் செய்தியாக இருக்கும் தகுதியை இழக்கின்றது.

வரலாற்றில் காலம் என்பது நிகழ்ச்சிகள், செய்கைகள், வாழ்க்கைப் போன்றவற்றுடன் தொடர்புள்ளக் காலத்தைத்தான் குறிக்கும். இரண்டாவதாக, ஒரு நிகழ்ச்சிக்கும், மற்ருெரு நிகழ்ச்சிக்கும் இடையில் உள்ள தொலைவையும் தெரிந்துகொள்ள வேண்டும். அதாவது, ஒரு நிகழ்ச்சியைப்பற்றிய முக்கியத்துவத்தை உணர முடியாது. அதை மற்ருெரு செய்தியோடு அல்லது தற்காலத்தோடு தொடர்புறுத்தல் வேண்டும். மூன்ருவதாக, நிகழ்ச்சியின் காலவரையறையையும் (duration) கவனிக்கவேண்டும். வரலாற்றுச் சம்பவங்கள், வமிசங்கள் எவ்வளவு காலம் செயலாற்றின என்பதையும் தெரிந்துகொள்ளவேண்டும். கடந்த காலச் செய்திகளைப் பற்றிச் சரிவர உணரவேண்டுமானல், இம் மூன்றும் தேவைப்படுகின்றன. எனவே, கால உணர்வு (Time sense) என்ருல் ஒரு நிகழ்ச்சியைப் பற்றி குறிப்பிடுதல் (locate), தொலைவு (distance) நிகழ்ச்சியின் காலவரையறை (duration) ஆகிய மூன்றையும் உள்ளடக்கியது என்பதை நாம் மனத்தில் கொள்ளவேண்டும்.

இடங்காணல் (location) முதல் கூற்ருகும். காலம் என்ற வரிசையில் ஒரு நிகழ்ச்சி நடந்ததைக் குறிப்பிடுதல் இடங்காணல் என்று கூறுவர். காலம் என்பது எல்லையில்லாதது; இடை நிறுத்தமின்றி சென்று கொண்டிருக்கும் செய்திகளைக் காலத்தைப் பற்றியும், நிகழ்ந்த இடத்தைப் பற்றியும் நாம் குறிப்பிடாவிட்டால், நாம் காலத்தை அளவிட முடியாது. மேலும், ஒரு சம்பவம், மற்ருென்றுடன் தொடர்புடையது. சிவாஜி கி.பி. 1680-ல் இறந்தார் என்றும் ஔரங்கசீப் கி.பி. 1707-ல் இறந்தார் என்றும் நாம் கூறும் பொழுது, நாம் ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிருேம். காலக் கோட்டில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளின் தொடர்பு கொண்டு, நம்முடைய நிலையைத் திட்டம் செய்கின்ருேம். சுருக்கமாகக் கூறுவோமாயின், பல நிகழ்ச்சிகளின் தேதிகளைக் குறிப்பிடுகிருேம் என்பதே பொருளாகும். எந்த ஒரு நிகழ்ச்சியும் வாலாற்றில் தனித்திருக்க முடியாததால், அந் நிகழ்ச்சிகளின் தொடர்புகளைக் கொண்டு அவை நடைபெற்ற இடங் காணுதல் எளிமையாகும்,

வரலாற்றுப் பெரியோர்கள் அல்லது நிகழ்ச்சிகளுக்கும், நமக்கும் இருக்கும் காலத்தின் இடைவெளியைத் தொலைவு என்று கூறுகின்றோம். நாம் இதை உணர்வதற்கு முக்கிய நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும். கி.பி. 1526 என்பது டில்லி சுல்தான்களின் ஆட்சி முடிவு என்பதும்; மொகலாயர்கள் ஆட்சியின் தோற்றம் குறிக்கின்றது. கி.பி. 1707 என்பது மொலயர்களின் வீழ்ச்சியின் ஆரம்பம் என்பதைக் குறிப்பிடுகின்றது. கி.பி. 1757 என்பது மற்றொரு முக்கிய தேதியாகும். பிளாஸி சண்டைக்குப் பிறகு இந்தியாவில் ஆங்கிலேயரின் செல்வாக்கு அடித்தளம் இட்ட தேதியாகும். இவ்விதத் தேதிகளின் உதவியால் அவற்றுடன் தொடர்புடையவர்களையும் நாம் குறிப்பிடுகின்றோம். இரண்டு நிகழ்ச்சிகளுக்கு இடையிலுள்ள காலத்தில் சமூகம், இலக்கியம் போன்றவற்றின் வளர்ச்சி அல்லது தடைபெற்றிருப்பது பற்றியதையும் குறிப்பிட இயலுகின்றது. இவ்வாறு மக்களின் வாழ்க்கையையும், அவர்களின் செயல்களையும் அளவிட முடிகின்றது.

நிகழ்ச்சிக்காலம் (duration) உதவியினால் ஒரு சமயம் அல்லது தத்துவம் செல்வாக்கிலிருந்த காலத்தை வரையறையிட்டுக் கூற முடிகின்றது. இதன் உதவி கொண்டு நமது மதிப்பீட்டை அறிவிக்க முடிகின்றது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது என்பதை எளிதாகக் கூற முடியும்.

எனவே, இடங்காணல், தொலைவு, காலவரையறை என்பவை காலத்தின் வரம்புகளாகும். காலத்தையொட்டி மனிதத் தொடர்புகளை எடுத்துக் கூறுவது வரலாறு. காலத்தின் அடிப்படையில் வரலாறு அமைகின்றது. 'காலம் நகராமல் ஓரிடத்திலேயே நின்றுவிட்டால், வரலாறு நடைபெறுவதும் நின்று விடும்' என்று V.H. கால்பெரய்த் கூறுகின்றார். கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய இம்மூன்றும் ஒன்றாக இணைந்து முடிவில்லாத நிகழ்ச்சிகளடங்கிய சங்கிலித் தொடராகத் தோன்றுகின்றன. காலம் என்றால் மாறுதல்; உலகத்திலுள்ள எல்லா இயற்கைப் பொருள்களும் மாறுதலடைகின்றன; மனித இனமும் மாறுதல்களையடைகின்றது. எந்த நிலையமும் மாறுதலின்றி இருக்கமுடியாது என்ற உண்மையை வரலாறு தெரிவிக்கின்றது. உலகம் நிலையமைதியைப் (Static) பெற்றிருப்பின், வரலாறுபற்றிக் கூறுவதில் பொருளில்லை. நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியை எடுத்துக்கூறுவது வரலாறு. ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் நடைபெறுகின்றது.

காலம் அழிக்கும் சக்தியைப் பெற்றிருக்கின்றது. பெரிய பேரரசுகளும், ஞாபகச் சின்னங்களும் இருக்குமிடம் தெரியாமல் மறைந்து விடுகின்றன. உயிரினங்களும் மறைகின்றன. கடந்த கால நிகழ்ச்சிகளை அறிவதில் ஒருவித இன்பத்தை நாம் பெறுகின்றோம். எனவே, நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியை எடுத்துக் கூறுவது வரலாறு. ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் முன்வரலாறும் (antecedents) பின்னிகழ்ச்சியும் (consequences) உண்டு. ஒரு நிகழ்ச்சி மற்றொன்றிலிருந்து துவங்குகிறது. இந்தப் போக்கை வளர்ச்சிபெறுதல் (development) என்று கூறுகின்றனர். எனவே, காலப்போக்கில் மனித இனம் அடைந்த வளர்ச்சியை வரலாறு வர்ணிக்கின்றது என்பதை அறிகின்றோம்.

## (ஈ) இடம் (Place)

வரலாற்று நிகச்சிகளுக்குக் காலத்தைப் போலவே இடமும் முக்கியமாகும். காலமும், இடமும் வரலாற்றின் இரண்டு கண்கள்; இரண்டு விளக்குகள். வரலாற்று நிகழ்ச்சிகளைக் காலமும், இடமும், இருட்டிலிருந்து வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் இரண்டு விளக்குகளாக அமைந்து உதவுகின்றன. நிகழ்ச்சிகள் ஏதாவது ஒரு காலத்தையும், இடத்தையும் பற்றியன. நிகழ்ச்சிகள் தனித் தனியாகக் காணப்பட்டாலும் அவற்றின் காலத் தொடர்பையும், இடத் தொடர்பையும் உணராமல் இருக்கமுடியாது. காலமும், இடமும் புறக்கணிக்கப் பட்டுச் சொல்லப்படும் விவரங்கள் உண்மையான வரலாறாகக் கருதப்பட மாட்டாது.

நிலநூலும், வரலாறும் கூட்டாளிப் பாடங்களாகும். ஒரு பாடத்தில் காலம், மற்றொன்றில் இடம் சிறப்புறக் கூறப்படுகிறது. உலகம் என்ற மேடையில் மனிதன் தன் ஆட்டத்தைச் செயல் படுத்துகின்றான். அந்த உலக மேடையை நிலநூலும், அம்மேடையில் செயலாற்றும் காரியங்களை வரலாறும் எடுத்துரைக்கின்றன. ஒரு நிகழ்ச்சியைப் பற்றிய முழு விவரம் அறிவதற்கு அது நடைபெற்ற காலம், அல்லது வருடம் எவ்வாறு தேவைப்படுகின்றதோ, அதே அளவு அந்நிகழ்ச்சி நடைபெற்ற கண்டம் அல்லது நாடு அல்லது பிரதேசம் பற்றிய விவரமும் தேவைப்படுகின்றது.

பூமியின் மேல்பரப்பில் இடங்களைக் குறிப்பிடுவதற்கு நிலநூல் பற்றிய ஒரு குறிப்பிட்ட சொல் தொகுதி (vocabulary) மாணவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும். பேராசிரியர் தாரன்டைக் (Thorndike) பட்டியலிலிருந்து அடுத்துக் கொடுக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கவும்:

| | |
|---|---|
| தெற்கு | உயரம் (Altitude) |
| வடக்கு | உயர்த்துதல் (Elevation) |
| கிழக்கு | வெப்பப்பகுதி (Equatorial region) |
| மேற்கு | கடற்பிரதேசம் (Coastal region) |
| திசை (Direction) | நடுநிரல் கோடு (Equator) |
| பகுதி (Area) | அட்சரேகை (Latitude) |
| மண்டலம் (Zone) | தீர்க்க ரேகை (Longitude) |
| உட்புறம் | |

வரலாற்றில் அடிக்கடி நிகழ்ச்சிகள் நடைபெற்ற நகரங்கள், நாடுகள், இராச்சியங்கள், ஆறுகள், கடல்கள் போன்றவற்றைக் கூறவேண்டியதாக இருக்கும். அவற்றின் இருப்பிடங்களைப் பற்றிய சரியான அறிவு பெருவிட்டால் வரலாற்று நிகழ்ச்சிகளின் தொடர்புகளைச் சரிவர புரிந்து கொள்ள இயலாது. தாரன்டைக்கின் முதல் 2500 வார்த்தைகளின் பட்டியலில் கீழ்வரும் இடங்களின் பெயர்கள் குறிப்பிடப் பட்டிருக்கின்றன:

| | |
|---|---|
| நியூயார்க் | 501—1000 |
| இங்கிலாந்து | ,, |
| அமெரிக்கா | 1001—1500 |
| ஆப்பிரிக்கா | 1501—2000 |
| ஆசியா | ,, |
| அட்லாண்டிக் | ,, |
| ஜெர்மனி | ,, |
| ஸ்பெயின் | ,, |
| ரோம் | ,, |
| கலிபோர்னியா | 2001—2500 |
| எகிப்து | ,, |
| ருஷ்யா | ,, |
| வர்ஜினீயா | ,, |

ஸெயின்ட் லூயி நகரம் இருப்பிடத்தை மாணவர்கள் அறியாம லிருக்கும் பொழுது, அங்குப் பாதணிகள் உற்பத்தி செய்யப்படு கின்றன என்று கற்பிப்பதில் எவ்விதப் பொருளுமில்லை என்பதை நாம் உணரவேண்டும். டூர்ஸ் சண்டை (Battle of Toures) யைப் பற்றிக் கற்பித்தால், அந்த இடத்தின் இருப்பிடத்தை உணராமல் எவ்வித வரலாற்று அறிவை மாணவர்கள் பெறமுடியும்? இராக் நாட்டைப் பற்றிய வரலாற்று நிகழ்ச்சியைக் கூறினுல் என்ன செய்தியை மாணவர்கள் பெற முடியும்? அவர்களுக்கு இராக் என்ற நாடு இருக்குமிடம் பற்றிய விவரம் ஒன்றுமில்லை என்ருல் ஏதோ ஒரிடத்திலுள்ள ஒரு நாடு என்றே (some where) கருதுவார்கள்.

எனவே, வாலாற்று ஆசிரியர்கள் இருப்பிடங்களைப் பற்றி (place) அடிக்கடி மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டுமென்பதின் அவசியத்தை உணரவேண்டும். இதற்குத் தேசப்படம், பூமி உருண்டை (glole) யைப் பயன்படுத்துவதுடன், அடிக்கடி ஆராய மாணவர்களுக்கு வாய்ப்பளித்தல், விளக்கம் கூறுதல், பன்முறைப் பயிற்சி (drill) அளித்தல் போன்றவற்றைப் பயன்படுத்தி வரலாறு கற்பிக்க வேண்டியதாகும்.

**வினுக்கள்**

(1) 'தொடர்ச்சியும்', 'வளர்ச்சியும்'—வரலாற்றுப் பாடத்தின் சிறப்புமிக்க அளவுகள் என்பதை விவரிக்கவும்.

(2) 'காலம்', 'இடம்'—இவை இரண்டும் வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு இன்றியமையாதவை என்பதற்குக் காரணங்கள் கூறும்.

(3) வரலாற்றின் நான்கு தனிச் சிறப்புக் கூறுகளைக் கூறி, அவை எவ்வாறு அளவுகளாக அமைந்திருக்கின்றன என்பதை விளக்கவும்.

## 2. நிலநூல்—வரலாற்றின் அடித்தளம்
(Geographical Foundation of History)

மனிதத் தொடர்புகளை விவரிக்கும் நூல்களில் நிலநூலும் ஒன்றாகும். பேராசிரியர் **பேர்கிரீவ்** (J. Fairgrieve) நிலநூலைப் பின்வருமாறு வரையறுத்துக் கூறியுள்ளார். 'இந்த மாபெரும் உலக மேடையில் நிகழும் பிரச்சினைகளைப்பற்றித் திருத்தமாகக் கற்பனை செய்வதில் பிற்காலத்தில் குடிமகனாக ஆகும் மாணவர்களுக்குப் பயிற்சி தரவும், அவர்களைச் சூழ்ந்துள்ள உலகத்தில் காணும் அரசியல், சமூக பிரச்சினைகளைத் தெளிந்த அறிவு நிலையுள்ளவாறு சிந்திக்கவும் உதவி செய்வதுதான் நிலநூலின் கடமையாகும்.'

நிலநூலின் எல்லை விரிவானது. இந் நூல் பல பிரிவுகளாகக் கற்பிக்கப்படுகின்றது. அவையாவன: (i) **இயற்கை அமைப்பைக் கூறும் நிலநூல்** (Physical geography); (ii) **செடிகொடிகள், உயிரினங்களின் பகிர்வு பற்றிய நிலநூல்** (Vegetation and animal geography); (iii) **பொருளாதார நிலநூல்** (Economic geography);

(iv) **மக்கள் நிலநூல்** (Human geography); (v) **கணித நூல்** (Mathematical geography); (vi) **அரசியல் நிலநூல்** (Political geography).

இயக்க அறிவியல் நூலுக்கும் (Dynamic Science), சமூக இயல் நூலுக்கும் ஒரு தொடர்புபடுத்தும் பாடமாக நிலநூல் அமைந்திருக்கின்றது. எனவே, இஃது ஓர் இணைப்புப் பாடமாகவுள்ளது. இயற்கை அறிவியல் நூலோடு அதிகமாகத் தொடர்புள்ளது. வரலாறு, பொருளாதாரம், அரசியல் போன்ற பாடங்களும் நிலநூலோடு தொடர்புபடுத்தாமல் கற்பிக்க முடியாத நிலையிலுள்ளன.

நிலநூல் மனிதனுக்கும் இப்பூமிக்கும் உள்ள தொடர்பை விவரிக்கின்றது. வரலாறு, இப்பூமியில் பல்வேறு காலங்களில் பலவகைப்பட்ட சூழல்களில் மனிதன் எவ்வாறு வாழ்ந்தான் என்பதைப் பற்றியதாகும். நிலநூல் பற்றிய உண்மைகள் மனிதனின் அன்றாட வாழ்க்கைக்குக் காரணிகளாக விளங்குகின்றன. எனவே, நிலநூல் பற்றியவிவரங்களை நாம் தெரிந்து கொண்டால், மனிதன் ஒவ்வொரு காலத்திலும் தன் இயற்கைச் சூழ்நிலைக்கேற்ப எங்ஙனம் வாழ்ந்தான் என்பதைப் பற்றிய செய்திகளை மிக எளிதாக அறிந்து கொள்ளலாம். எனவே, நிலநூல் அறிவு வரலாறு கற்பவர்களுக்கு இன்றியமையாதது என்பது நன்கு விளங்கும்.

கார்லைல் கூற்றுப்படி 'நிலநூல் வரலாற்றின் ஒரு கண்' ஆகும் (Geography is one eye of History). வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு இப்பூமி நாடக மேடையாக இருக்கின்றது. ஹார்டர் (Harder) என்னும் வல்லுநரும் 'நிலநூல் இயக்கத்தின் அமைப்பு வரலாறு ஆகும்' என்று வர்ணித்துள்ளார்.

நிலநூல் இரண்டு கூறுகளாக அமைந்திருப்பது வரலாறு கற்பதைத் தெளிவுபடுத்த உதவுகின்றது. அவையாவன: (i) மனிதனின் வாழ்க்கை அவன் சூழ்நிலையைப் பற்றியதாக இருக்கின்றது. அதாவது அவனது உணவு, உடை, வாழ்க்கை முறை போன்றவை, அவன் வாழும் இடத்தின் இயற்கை அமைப்புகள், தட்பவெப்பநிலை, அவ்விடத்தின் விளைபொருள் போன்றவற்றைகளை ஒட்டி அமைகின்றன. (ii) இயற்கைச் சக்திகள் மனிதனின் செய்கையால் மாற்றி அமைக்கப்படுகின்றன. அதாவது எங்கெங்கு இயற்கைச் சக்திகள் அவனுக்கு ஆதரவாக இல்லையோ அங்கங்கு மனிதன் அவ்வியற்கையை வென்று தனக்குக் கீழ்ப்படுத்துகிறான்.

இந்த இரண்டு கூறுகளையும் சற்று விரிவாகப் பார்ப்போம்,

### (i) வரலாற்றில் நிலநூல் கூற்று (Geographical factor)

மனிதனின் வாழ்க்கை அவன் வாழும் சூழ்நிலையை ஒட்டி அமைகின்றது என்பதை உலகத்தின் ஒவ்வோர் இயற்கைப் பகுதியிலிருந்தும் எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கலாம். எனினும், நாம் இங்கு இரண்டு எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்.

தூந்திரவெளிப் பிரதேசத்தை எடுத்துக்கொள்வோம். ஆர்க்டிக் கடலைச் சார்ந்த பாகங்கள் பனி உறைந்திருக்கும். கோடையில் பனி உருகினாலும் இரண்டு அடிக்குக் கீழ்த் தோண்டினாலும் பனி உறைந்திருப்பதைத்தான் காண முடியும். எனவே, பயிர்த்தொழில் என்பதை நினைத்துப் பார்க்கக் கூட முடியாது. உணவுப் பொருள்கள் பயிரிட முடியாது. கடலிலும், ஆறுகளிலும் கிடைக்கும் மீன்களையே உண்டு வாழ்வர் அப் பிரதேச மக்கள். தென்பகுதியில் காணும் காடுகளின் வரம்புகளில் உரோமம் அடர்த்தியாக இருக்கும் மிருகங்கள் உள்ளன. அவற்றை வேட்டையாடியும், கலைமான்களை நம்பியும் மக்கள் வாழ்கின்றனர். உணவுக்கும், உடைக்கும், ஆயுதங்களுக்கும் அம் மிருகங்களையே நம்பி வாழ்கின்றனர். அம் மிருகங்கள் உணவைத் தேடி அப்பிரதேசத்தில் அலைந்து திரியும். எனவே, மக்களும் அதைத் தொடர்ந்தே பின்சென்று நாடோடி வாழ்க்கை நடத்துகின்றனர்; வாழ்க்கையும் மிகவும் கடினமானது. இதனால்தான் வயது வந்தோர், நோயுற்றோர், தேவைக்கு மீறிய குழந்தைகள் எல்லோரும் பட்டினியால் வேதனைப்பட்டு இறக்கும்படி கைவிடப்படுகின்றார்கள். இவ்வாறு உணவு, உடை, குடும்பத்தினரிடம் நடந்து கொள்ளும் பண்பு எல்லாம் இருப்பிடத்தைச் சார்ந்தே அமைகின்றன என்பன விளங்கும்.

வட அமெரிக்காவில் ஆர்க்டிக் கடலைச்சார்ந்த **தூந்திர வெளியில் (The Tundra region)** எஸ்கிமோக்கள் வாழ்கின்றனர். இவர்கள் குளிர்காலத்தில் **'இக்லூக்கள்'** (Igloo) என்னும் பனி வீடுகளில் வாழ்வர். பனியை உருக்கினால்தான் தண்ணீர் கிடைக்கும். எனவே, இங்குள்ள பெண் மகளிர் தங்கள் குழந்தைகளின் முகத்திலுள்ள அழுக்கை நாக்கினால்தான் துப்புரவு செய்வர்.

அடுத்தபடியாக, **ஸ்டெப்ஸ்** (Steppes) புல்வெளிப் பிரதேசத்தைக் கவனிப்போம். ஆடுகள், மாடுகள், குதிரைகள், ஒட்டகங்களை வளர்த்து மக்கள் இங்கு வாழ்கின்றனர். இம் மிருகங்கள் புல் தரையைத் தேடிச் செல்லும்பொழுது மேய்த்தல் தொழிலை நடத்தும். இப் பிரதேச மக்களும் அவற்றைப் பின்பற்றிச் செல்லுவர். எனவே, இப் பிரதேச மக்களும் நாடோடி வாழ்க்கை நடத்துவர். கோடையில் கூடாரங்களிலும், குளிர்காலத்தில் சிறு

வீடுகளிலும் வாழ்க்கை நடத்துவார்கள். மாமிசம், வெண்ணெய், பால், பாலாடைக்கட்டி போன்றவைகளே மக்களின் உணவாகும். ஒட்டகத்தின் உரோமத்தை நெய்தல், கம்பள விரிப்புகள் தயாரித்தல், ஆட்டு உரோமத்தை நெய்தல் போன்ற குடிசைத் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். தூந்திர வெளிப் பகுதியைவிட இப் பகுதியில் உணவுப் பொருள் அதிகம் கிடைப்பதால் நோயுற்ற வரும், கிழவர்களும் இறக்கும்படி விடப்படுவதில்லை. மந்தைகளை மேய்ப்பதற்கு அதிக மக்கள் வேண்டியிருப்பதால், ஒவ்வோர் ஆண் மகனும் பல பெண்களை மணந்து கொள்வான். இவ்வாறு உணவு, உடை, தொழில், குடும்ப உறவு போன்றவைகள் மனிதன் வாழும் சூழ்நிலையை ஒட்டித்தான் அமையும் என்பது நன்கு விளங்கும்.

### (ii) நிலநூலில் வரலாற்றுக் கூறு (Historical factor)

எவ்வாறு இயற்கை, மனிதனுல் பழக்கப்பட்டு, அவனுடைய தேவைக்கேற்பக் கட்டுப்படுத்தப்பட்டு உபயோகிக்கப்பட்டு வருகின்றது என்பதைக் கவனிப்போம். இங்கும் இரண்டு எடுத்துக் காட்டுகள் தரலாம்.

மனிதன் பாலைவனங்களிலும், குளிர் நிறைந்த இடங்களிலும் சென்று வாழ்கிருன். அவனுக்கு அங்கு வருமானம் கிடைத்தால் இயற்கையின் தன்மையை வென்று தனக்குச் சாதகமாக அதை மாற்றிக்கொள்கிருன். மேற்கு ஆஸ்திரேலியாவில் ஆண்டு மழை எட்டு அங்குலத்திற்குக் குறைவாகயிருப்பதால், ஒரு வறண்ட பாலைவனமாக இருக்கின்றது. அங்குக் கால்கூர்லி, கூல்கார்டி என்ற இடங்களில் தங்கம் வெட்டி எடுக்கப்படுவதாக அங்கு மக்கள் சென்று குடியேறியுள்ளனர். அனேக மைல்களிலிருந்து குழாய்கள் மூலம் குடி தண்ணீர் கொண்டுவரப்படுகின்றது. தென் அமெரிக்காவில் பெரு நாட்டிலுள்ள உயர்ந்த பீடபூமியில் செரோடீபாஸ்கோ என்ற இடத்திலுள்ள சுரங்கம் 4352.5 மீட்டர் உயரத்தில் உள்ளது. அங்கு வாழ்க்கை நடத்த முடியாத கடுமையான வெப்பதட்பநிலை இருக்கின்றது. வாழ்க்கை நடைபெறும் சிறப்புக்குரிய நிகழ்ச்சிகள் நடைபெருது; குழந்தைகள் பிறக்காது; அங்குள்ள லாமாஸ் என்னும் மிருகம் குட்டிகள் போடாது; கோழிகள் முட்டையிடாது. எனினும் அங்கு வெள்ளி, சுரங்கத்திலிருந்து எடுக்கப்படுவதால் மனிதன் சென்று வாழ்க்கை நடத்துகின்ருன்.

மனிதன் இயற்கையை வெல்லும் காரியங்களை நான்கு வகையாகப் பாகுபடுத்தலாம். அவையாவன:

(i) வறண்ட நிலங்களைச் சீர்திருத்தம் செய்தல் (The Redemption of the thirsty land);

(ii) நீரில் அமிழ்ந்திருக்கும் நிலத்தைப் பண்படுத்துதல் (The Reclamation of land from water);

(iii) போக்குவரத்து பிரச்சினையைத் தீர்த்தல் (Solving the transport problem);

(iv) தொழில்கள் நடத்தும் பொருட்டுத் தண்ணீரைப் பயன் படுத்துதல் (The Harnessing of water for industrial purposes).

எனவே, தற்காலத்திய உலகம் இயற்கை தோற்றுவித்தது போல் இல்லை. அது மனிதனால் கீழ்படுத்தப்பட்டு (subdued), சீர்திருத்தப் பட்டு (replenished), திருத்தியமைக்கப்பட்டு (recast), சுருக்கி யமைக்கப்பட்டு (contracted) இருப்பதை நிலநூல் விரித்துக் கூறுகின்றது. முன்பெல்லாம் இயற்கைச் சாதனங்கள் அதிகம் உள்ள நாடுகள் செல்வம் பொருந்தியவைகளாகக் கருதப்பட்டன; ஆனால், தற்காலத்தில் மனிதன் எந் நாடுகளில் சுறுசுறுப்பாக ஆக்க வேலைகளில் ஈடுபட்டுள்ளானோ அந் நாடுகளே செல்வம் படைத்தவைகளாகக் கருதப்பட்டு வருகின்றன.

ஜெ. டூயி (J. Dewey) 'மக்கள் ஆட்சியும் கல்வியும்' என்ற நூலில் கூறியுள்ளபடி நிலநூல் 'இங்கு ஒரு மலையின் உயரத்தையும், அங்கு ஓர் ஆற்றின் போக்கையும், இந்தப் பட்டணத்தில் உற்பத்தி யாகும் பொருளைப் பற்றியும், மற்றோர் இடத்தில் ஒரு கப்பலில் ஏற்றுமதி செய்யும் பொருளின் எடையையும், ஒரு நாட்டின் எல்லையையும், ஓர் இராச்சியத்தின் தலைநகரத்தையும் இது காறும் கற்பித்து வந்துள்ளது'. ஆனால், தற்காலத்தில் உலகத்தின் இயற்கை அமைப்புகளைப் பற்றிக் கற்பிப்பதோடு மட்டும் நின்று விடாமல் நிலநூல் மனிதத் தொடர்புள்ள பகுதியையும், பண் பாட்டுப் பகுதியையும் கற்பிக்க உதவுகின்றது. இவ்வாறு வரலாற்றில் நடந்த பல்வேறு நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும் நில நூல் பங்கு பெற்றுள்ளது என்பதை நாம் எளிதில் உணரலாம்.

**வினுக்கள்**

(1) வரலாற்றில் புவியியல் ஒரு முக்கியக் கூறு என்பதைத் தெளிவாக்குக.

(2) வரலாற்றின் அடித்தளம் புவியியல் என்ற கருத்தை விவரிக்கவும்.

(3) வரலாற்றில் நிலநூல் கூற்றையும், நிலநூலில் வரலாற்றுக் கூற்றையும் தெளிவுபடுத்துக.

## 3. வரலாற்றின் கால வரிசையின் பிரிவுகள்
## (Chronological Divisions of History)

வரலாற்றுக்கு முந்திய காலம் எப்பொழுது ஆரம்பமாகின்றது என்பதை உறுதியாகக் கூறுவதற்கில்லை. ஆதி மனிதன் முதன் முதலில் உலகில் எங்குத் தோன்றினான் என்பதை உறுதியாகக் கூற முடியாது. ஆனால், மிகப் பழங்காலத்தில் உலகின் பல பகுதிகளிலும் ஆங்காங்கே மக்கள் இனம் தோன்றிய நாளிலிருந்து, அவர்கள் காட்டுமிராண்டி வாழ்க்கையை நீக்கிப் பல படிகளைக் கடந்து, நாகரிக வாழ்க்கைக்குச் சென்றுள்ளார்கள் என்பது நன்கு தெரிகிறது. அவர்கள் பயன்படுத்திய கருவிகளும், ஆயுதங்களும் மேற்கூறிய உண்மையைப் புலப்படுத்துகின்றன. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட இக்காலத்தை வரலாற்றாசிரியர்கள் கற்காலம் என்றும், உலோக காலம் என்றும் இரு வகையாகப் பிரித்துள்ளார்கள். வரலாற்றுக் காலத்திற்கு முன்னர் வாழ்ந்த மனித இனத்தைப் பற்றி நாம் அறிந்துகொள்ள நமக்குச் சான்றுகளாய் இருப்பவை தொல்பொருட்களே ஆகும்.

**பழைய கற்காலம்** (Old Stone Age)
**(கி.மு. 50,000 — கி.மு. 10,000)**

கற்காலத்தில் வாழ்ந்த மக்கள் பெரும்பாலும் நாடோடிகளாக வாழ்ந்திருக்கவேண்டும். கற்காலத்தைப் பழைய கற்காலம் (Palaeolithic), இடைக் கற்காலம் (Mesolithic). புதிய கற்காலம் (Neolithic) என மூன்று வகையாகப் பிரித்துள்ளார்கள். பழைய கற்காலத்தில் வாழ்ந்த மக்கள் கற்களாலான கைக் கோடரிகள், வெட்டுக் கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி வந்தார்கள். இக் கருவிகள் கரடுமுரடாகச் செதுக்கப்பட்டவை. பழைய கற்கால மக்கள் கி.மு. 50,000 முதல் கி.மு. 10,000 ஆண்டுவரை வாழ்ந்திருக்கக் கூடும்.

**புதிய கற்காலம்** (New Stone Age) **(கி.மு. 10000—கி.மு. 5000)**

இக் கால மக்கள் பயன்படுத்திய கருவிகள், தேர்ந்தெடுத்த கற்களில் செம்மையாகவும், வழவழப்பாகவும் செதுக்கப்பட்டவை. இம் மக்கள் பயிர்செய்ய அறிந்து கொண்டனர். ஆடுமாடுகளுக்கென நல்ல மேய்ச்சல் தரையை நாடி இவர்கள் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்றனர். புதிய கற்கால நாகரிகச் சின்னங்களும் மக்கள் பயன்படுத்திய கருவிககளும் இந்தியா, தென் மேற்கு ஆசியா, எகிப்து, பாலஸ்தீனம், சிரியா, மெசபடோமியா முதலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வகை மக்கள்

கி.மு. 10,000 முதல் கி.மு. 5,000 ஆண்டுவரை வாழ்ந்திருக்கக் கூடும்.

**உலோக காலம் (கி.மு. 5000 — கி.மு. 1500)**

கற்காலத்திற்குப் பின் உலோக காலம் தோன்றியது. மக்கள் உலோகங்களின் பயனை அறிந்தனர் முதன் முதலில் உலோகக் கருவிகளை ஆக்குவதற்குச் செம்பு பயன்படுத்தப்பட்டது. உலோக காலம் ஆசிய நாடுகளில் கி.மு. 4,0000-ல் தோன்றியதெனக் கூறப் படுகிறது. ஐரோப்பாவில் கி.மு. 2,000 வரை உலோக காலம் தோன்றவில்லை. செம்பு உறுதியாக இல்லாததால், நாளடைவில் வெண்கலத்தால் கோடரிகள், கத்திகள் முதலியன அமைக்கப் பட்டன. இதன் பின்னர் இரும்புக் காலம் தோன்றியது. கி.மு. 1,500 ஆண்டு வரை இரும்பின் பயனை மக்கள் அறிந்திருக்க வில்லை. இவ்வாறு படிப்படியாக மக்கள் நாகரிக வளர்ச்சி பெற்றனர். இது முதல் வரலாற்றுக் காலம் ஆரம்பம் என்று கூறுவர்.

**வரலாற்றுக் காலம்**

வரலாற்றுக் காலத்தை ஆசிரியர்கள் நான்கு காலங்களாகப் பிரித்திருக்கிறார்கள். அவை பழையகாலம், இருண்டகாலம், இடைக்காலம், நவீனகாலமெனப்படும்.

மேற்கு ரோமானியப் பேரரசின் வீழ்ச்சியுடன் (கி.பி. 476) பழைய காலம் முடிவடைகிறது. கி.பி. 5ஆம் நூற்றுண்டிலிருந்து 10 ஆம் நூற்றுண்டு வரை இருண்டகாலம். கி.பி. 1000-ல் இருந்து 1453 வரை உள்ள காலம் இடைப்பட்ட காலமாகும். கி.பி. 1453 ஆம் ஆண்டு கான்ஸ்டான்டிநோப்பிள் துருக்கியர் வசமானது. இதிலிருந்து நவீன காலம் ஆரம்பிக்கிறது.

**வினுக்கள்**

(1) வரலாற்றின் காலப் பிரிவுகள் யாவை?

(2) வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பது எதைக் குறிக் கின்றது?

## 4. கால வரிசையின் முக்கியத்துவம்
(The Importance of Chronology)

வரலாற்றில் காலப்பிரிவு பெற்றிருக்கும் இடத்தைப் பற்றி நாம் சற்றுத் தெளிவாகக் கவனிக்கவேண்டும். தேதிகளை மனப்பாடம் செய்வது வரலாற்றின் புகழ் மங்குவதற்கு ஒரு காரணமாக இருந்தது. சமீப காலந்தொட்டு காலவரிசையைப் பற்றிய அறிவு இன்றியமையாதது என்று எல்லோரும் உணர ஆரம்பித்துள்ளனர். இடங்களின் பெயர்கள் இல்லை யென்றால் நிலநூல் இருக்க முடியாது; அவ்வாறே தேதிகள் இல்லை யென்றால் வரலாறும் இருக்க முடியாத தாகும். **பேராசிரியர் ஜான்ஸன்** கூறுவது போல், 'காலவரிசையும் நிலநூலும் வரலாற்றின் இரு கண்களாகும்'. வரலாறு என்பது காலத்தில் நடந்த ஒரு படிமுறையாகும். எனவே வரலாற்றின் அமைப்பும், காலவரிசையை ஒட்டியே இருக்கவேண்டும். வரலாற்றுச் செய்திகள் செறிவுற்ற செய்திகளாக இருக்கின்றன. அவற்றிற்கு எப்பொழுது என்ற காலமும், எங்கு என்ற இடமும் உள்ளன. செய்திகளை ஓரிடச் செறிவுப் படுத்துதல் உய்த்துணர் தலாக இருக்கலாம்; திட்ட வட்டமாகக் கூற முடியாமலும் இருக் கலாம். இடம், காலம்பற்றிய தொடர்புகளை விளக்கவில்லை யானால் அச் செய்தி வரலாற்றுச் செய்தியாக இருக்கும் தகுதியை இழக்கின்றது. இதனால்தான் பேராசிரியர் ஜான்ஸன் கால வரிசையைக் கற்கவேண்டுமென்று வற்புறுத்திக் கூறுகின்றார்.

வரலாற்றில் காலம் என்பது நிகழ்ச்சிகள், செய்கைகள், வாழ்க்கை போன்றவைகளுடன் தொடர்புள்ள காலத்தைத்தான் குறிக்கும். இரண்டாவதாக, ஒரு நிகழ்ச்சிக்கும் மற்றொரு நிகழ்ச்சிக்கும் இடையில் உள்ள தூரத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது ஒரு நிகழ்ச்சியைப் பற்றி தனிமையாகக் கூறினால் அதைப் பற்றிய முக்கியத்துவத்தை உணரமுடியாது. அதை மற்றொரு செய்தியோடு அல்லது தற்காலத்தோடு தொடர்புறுத்தல் வேண்டும். சிவாஜி கி.பி. 1627-ல் பிறந்தார்; கி.பி. 1707ஆம் ஆண்டு அவுரங்கசீப் இறந்தார் என்றால் ஒரு தனி நிகழ்ச்சியைத் திட்டமாகக் குறிப்பிடுகிறோம். பிறகு அந்த நிகழ்ச்சிக்கும், மற்றைய பிற நிகழ்ச்சிகளுக்கும் உள்ள தொடர்பையும் தெரிந்து கொள்ளவேண்டும். அச் செய்திக்கு முன்பும், பின்பும் நடந்த நிகழ்ச்சிகளைக் குறிப்பிட இது உதவும். எனவே, ஒரு செய்திக்கும் மற்றொன்றுக்கும் உள்ள காலத்தின் தூரத்தை அறிய முடிகின்றது. மூன்றாவதாக, நிகழ்ச்சியின் காலவரையறையையும் (duration) கவனிக்கவேண்டும். வரலாற்றுச் சம்பவங்கள், வமிசங்கள்

எவ்வளவு காலம் செயலாற்றின என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். கடந்த காலச் செய்திகளைப் பற்றி சரிவர உணர வேண்டுமானல் இம்மூன்றும் தேவைப்படுகின்றன. எனவே, கால உணர்வு (Time sense) என்ருல் ஒரு நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிடுதல் (locate), தூரம் (distance), நிகழ்ச்சியின் காலவரையறை (duration) ஆகிய மூன்றையும் உள்ளடக்கியது என்பதை நாம் மனத்தில் கொள்ள வேண்டும்.

**கால அறிவை எவ்வாறு குழந்தைகளுக்குக் கற்பிப்பது?**

**தொடக்கநிலை வகுப்புகள்**

பத்து வயதிற்கு முன்பு குழந்தைகள் நூறு ஆண்டு அல்லது ஆயிரம் ஆண்டுகள் என்னும் தொடர்களின் கருத்தை உணர மாட்டார்கள் என்பது உண்மைதான். ஆனல், அவர்களின் மன வளர்ச்சி ஏற்படுகின்ற வரையிலும் கால அறிவைப் பெற எவ்வித உதவியும் செய்யாமல் இருக்கவேண்டுமென்பதில்லை. குழந்தைகள் பள்ளிக்கு வருவதற்கு முன்பு அவர்கள் வீடுகளிலேயே பெற்ருேர்களால் இது பற்றிய ஆக்கவேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அந்த அனுபவங்களை ஒன்று திரட்டி, கால அறிவைப் பெறும்படி ஆசிரியர்கள் செய்யவேண்டும். எடுத்துக்காட்டாக 'முன்பு', 'பின்பு' போன்றவற்றின் கருத்துகளை உணரும்படி செய்தல் வேண்டும். பிறகு குழந்தைகள் 'காலை', 'இரவு', 'நேற்று' என்பவற்றைத் தங்கள் அனுபவங்கள் கொண்டு தெரிந்து கொள்வார்கள். மாலை நேரத்தில் குழந்தை விளையாட்டுப் பொம்மையைக் கேட்கின்றது. 'கடை மூடியாகிவிட்டது; நாளை வாங்கித் தருகிறேன்' என்று சொல்லி குழந்தையைத் தாய் அன்று இரவு தூங்கச் சொல்லுகின்ருள். விடிந்ததும் கடைக்குப்போய் பொம்மையை வாங்கித் தருகின்ருள். மாலையில் பொம்மையை உடைத்ததும் 'இன்று காலையில்தான் வாங்கித் தந்தேன்' என்று கோபிக்கின்ருள். இவ்வாறு காலை, மாலை, இரவு போன்ற வார்த்தைகளின் கருத்துகளைக் குழந்தைகள் புரிந்துகொள்கின்றன.

இதற்குப் பிறகு, குறிப்பிட்ட கால அளவைப்பற்றிக் கவனிக்க வேண்டும். அவைகளாவன: வாரம், மாதம், வருடம் போன்றவைகளாகும். சனி, ஞாயிறு விடுமுறைகளைக் கொண்டு ஒரு வாரம் என்பதின் பொருளை எளிதில் குழந்தைகள் தெரிந்துவொள்வர். மாதத்தின் அளவை தன் தகப்பனர் 'சம்பளம் வந்ததும் இனிப்புப் பண்டம் வாங்கித் தருகிறேன்' என்று கூறுவதிலிருந்து அவர் சம்பளம்பெறும் தினத்துடன் தொடர்புபடுத்தி மாதத்தின் அளவை அறிவார்கள். தான் படிக்கும் வகுப்பிலிருந்து மேல் வகுப்புக்குத் தேர்விற்குப் பிறகு உயர்த்தப்பட்டுத் தன்னைத் தலைமை ஆசிரியர்

அனுப்புவார் என்னும் தொடர்புகொண்டு ஒரு வருடத்தின் அளவைத்தெரிந்துகொள்கின்றனர். பள்ளிகளில் விடும் கோடை விடுமுறை, தசரா பண்டிகை விடுமுறை போன்றவற்றைக் கொண்டு பருவ காலங்களைப் பற்றிய அறிவையும் பெறுவர். சில பள்ளிகளில் மாதாந்திரத் தேர்வு, பருவத் தேர்வு போன்றவற்றைக் கொண்டும் கால அறிவை ஏற்படுத்த முடிகின்றது. கீழ் வகுப்பு களில் கால அளவைப் பற்றிய பயிற்சிகளும் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படவேண்டும். எனவே, வரலாறு, நிலநூல், கணிதம் ஆகிய பாடங்களிடையே தொடர்புறுத்தல் நடைபெறவேண்டும்.

குழந்தைகள் வாழும் ஊர்களுக்கு மின்சார விளக்குகள் போட்டது அல்லது பெரும் கட்டடம் கட்டியது பற்றிக் கூறும்போது ஐம்பது ஆண்டுகால அளவை உயர்த்த முடியும். இதற்குள் அவர்கள் வீடுகளிலும் பாட்டிமார்கள், கதைகள் கூறும்போது 'முன் ஒரு காலத்தில்' என்றுத் தொடங்கிப் பல கதைகள் கூறியிருப்பர். இவ்வாறு கடந்தகால நிகழ்ச்சிகளின் கால அளவைப்பற்றிச் சிறிது உணர்ந்து குழந்தைகள் பள்ளிக்கு வருகின்றனர்.

பொதுவாகக் குழந்தைகள் யாவரும் தற்காலத்தை ஆரம்ப மாகக்கொண்டு பிற்காலத்திற்குச் செல்வர். தற்காலம் மாறுபடும் தன்மை வாய்ந்ததாலும், நீரோட்டத்தை எதிர்த்துச் செல்வதுபோல் மனம் செல்லவேண்டியிருப்பதால் தற்காலத்தைத் தொடக்கமாகக் கொண்டு காலத்தைக் கணக்கிடக்கூடாது. வரலாற்று நிகழ்ச்சி களின் முறைமை இதனால் கெட்டுவிடும். எனவே, 5ஆம் வகுப் புக்குக் குழந்தை வருவதற்கு முன், கடந்த காலத்தில் நடந்த ஒரு பெரும் நிகழ்ச்சியைக் கொண்டு காலத்தைக் கணக்கிடும் முறையைத் தெரிந்துகொள்ளவேண்டும். எடுத்துக்காட்டாகக் கி மு. கி. பி.யின் வழக்கை அவர்களுக்கு அறிமுகப்படுத்தல்வேண்டும். இதைப்போல் 'கொல்லம் ஆண்டு' மலையாள நாட்டினரும், முகம்மதியர் 'ஹிஜிரா' வையும் கையாளுகின்றனர் என்பதையும் குறிப்பிடலாம். எவ்வாறு இருப்பினும், ஆரம்பப் பள்ளிகளில் குழந்தைகள்மூலம் வரலாறு, நிலநூல் கற்கும்பொழுது தேதிகளைக் கற்கும்படிக் கட்டாயப்படுத்தக்கூடாது. கதைகளின் வரிசையைத் (sequence of stories) தெரிந்துகொண்டால் போதும். அதாவது புத்தருக்குப் பிறகு அசோகர்; சந்திரகுப்தனுக்குப் பிறகு ஹர்சர் போன்ற வரிசைப்படி புத்தகங்களில் வரலாறு, கதைகள் எழுதப் பட்டிருக்க வேண்டும்.

ஆறும் வகுப்புக்கு குழந்தைகள் வந்ததும், காலத்தைப் பற்றிய அறிவைக் கற்பிக்க ஆரம்பிக்க வேண்டும். அப்பொழுதும் கூட

அதிகமான தேதிகளைக் கற்பிக்க வேண்டியதில்லை. 6ஆவது வகுப்பில் 10 தேதிகளும், 7ஆவது வகுப்பில் 15 அதிகப்படியான தேதிகளையும், 8ஆவது வகுப்பில் இன்னும் 20 அதிக தேதிகளையும் கற்பிக்கப் பாடத்திட்டத்தில் ஏற்பாடு செய்தல்வேண்டும். புத்தகத்தில் அளவற்ற தேதிகள் கொடுக்கப்பட்டிருப்பினும், ஆசிரியர் பாடத்திட்டத்தில் உள்ள தேதிகளைக் கற்பித்து அவற்றை மையமாகக்கொண்டு பிற செய்திகளையும் கற்பிக்கவேண்டும். கீழ் வகுப்புகளில் தளமட்டமான காலக்கோட்டை (Horizontal time line) உபயோகிக்கவேண்டும். இவ்விதக் காலக்கோடு செங்குத்தான காலக்கோட்டினை (Vertical time line) விடச் சிறந்ததாகும். ஏனெனில், காலக்கோட்டிற்கு இணையாக அந் நிகழ்ச்சிகளோடு தொடர்புள்ள தலைவர்களின் படங்களையும் தொங்கவிட வாய்ப்பு இருக்கின்றது.

இவ்விதக் கால அறிவைப்பெற்று 8ஆவது வகுப்புக்குக் குழந்தைகள் செல்லும்பொழுது இந்த அடிப்படைத் திறமையைப் பயன்படுத்தி மேற்கொண்டு செய்திகளையும், தேதிகளையும் கற்பிப்பது எளியதாக அமையும். இதோடு சிறு திறமான செய்திகளுடன் தொடர்புள்ள தேதிகளையும் மேல் வகுப்பில் கற்பிக்கலாம். ஆரம்ப வகுப்புகளிலும், மேல் வகுப்புகளிலும் தேதிகளைக் கற்பிக்கும்பொழுது தகுந்த தொடர்புகளைக் கூறி அவற்றைப் புரிந்துகொள்ளும்படி செய்யவேண்டும். தேதிகளை மனப்பாடம் செய்வதினுல் எவ்விதப் பயனும் ஏற்படாது. எனவே, தகுந்த தொடர்புகளை ஏற்படுத்த இரண்டுவிதமான முறைகளை ஆசிரியர்கள் மேற்கொள்ளவேண்டும். அவையாவன:

(i) உட்புறமான தொடர்புகள் (Internal Associations).

(ii) வெளிப்பகுதியான தொடர்புகள் (External Associations).

**உட்புறமான தொடர்புகள்**

ஒரு நாட்டின் வரலாற்றைக் கற்கும்பொழுது, அதன் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் பற்றி நன்கு உணர்ந்து கற்கவேண்டும். இல்லாவிட்டால் கால இட மயக்கம் (anachranism) ஏற்படும். 16ஆவது நூற்றுண்டு மதப் புரட்சிக் காலம் என்று தெரியும். எனவே, 'மத ஆதிபத்யச் சட்டம்' அல்லது 'மடாலயங்களை அழித்தல்' போன்ற நிகழ்ச்சிகள் 14ஆவது அல்லது 15ஆவது நூற்றுண்டில் நடந்திருக்க முடியாது. அது போலவே, 17ஆவது நூற்றுண்டில் ஸ்டூவர்ட் வமிசத்தினர் (Stuart dynasty) இங்கிலாந்தில் ஆட்சி செய்தனர். அந் நூற்றுண்டில் அரசர்களுக்கும் பார்லிமெண்டிற்கும் பிணக்கு ஏற்பட்டது என்பது இங்கிலாந்து நாட்டு வரலாறு கற்றவர்களுக்குத்

தெரியும். எனவே, பாராளுமன்றத்துக்கும் அரசனுக்கும் இடையே ஏற்பட்ட பிணக்கினால் ஏற்பட்ட பெரும் உள்நாட்டுக் கலகம் 16ஆவது நூற்றாண்டில் நடந்திருக்க முடியாது, ஏனென்றால் 16-ஆவது நூற்றாண்டில் ஆட்சி செய்த டியூடர் வமிசத்தினருக்கும் பாராளுமன்றத்திற்கும் நல்ல கூட்டுறவு இருந்ததை நாம் அறிவோம். இவ்வாறு செய்திகளைத் தொடர்புபடுத்தி அறிந்துகொள்ளவேண்டும். வரலாற்றுப் பேராசிரியர்கள் எல்லோரும் தேதியை இவ்வித மாகத்தான் ஞாபகத்தில் வைத்துக்கொள்வார்கள்.

## வெளிப் பகுதியான தொடர்புகள்

ஒரு நாட்டின் வரலாற்றைக் கற்றுக் கொண்டதும், அவ்வறிவைக் கொண்டு மற்றொரு நாட்டின் வரலாற்றை அறிய முற்படும்பொழுது அவ் வறிவானது கால வரிசையைப் பற்றி வழிகாட்டியாக அமையும். எடுத்துக்காட்டாக, நம் நாட்டின் வரலாற்றைப் பற்றிக் கூறுவோம். வடநாடு, தக்காணம், தென்னிந்தியா என்ற மூன்று பெரும் கூறுக நம் நாட்டின் வரலாற்றைக் கற்கலாம். வடநாட்டின் வரலாற்றினைக் கொண்டு தக்காணம், தென்னாட்டு வரலாற்றின் தேதிகளைக் கற்க முடிகின்றது. ஹர்ஷர் ஆட்சியின் காலத்தை (கி.பி. 607—647) தக்காணத்தில் இரண்டாம் புலிகேசியும், தென்னிந்தியாவில் நரசிம்மவர்ம பல்லவனும் அதே காலத்தில் ஆட்சி செய்த வரலாற்றுத் தேதிகளுடன் தொடர்புறுத்தலாம், இதுவே மகம்மது நபியின் காலமாகும். இவ்வித ஒத்து நிகழ் தேதிகளைப் பயன் படுத்துவதால் தேதிகளை நினைவில் இறுத்திக் கொள்ள முடிகின்றது. மேல் வகுப்பில் 'ஒத்த நிகழ்ச்சிகளை விளக்கும்' (synchronoistic charts) படங்களை வகுப்பறையில் உபயோகிக்க வேண்டும். எனவே, இவ் வகுப்புகளில் செங்குத்தான காலக்கோடு (vertical time line) உபயோகித்தல் சிறந்த செயலாகும்.

## தேதிகளைக் கற்பிக்க உதவும் சாதனங்கள் (Devices)

இடைவெளி பற்றிய கருத்தைக்கொண்டு காலத்தைக் கற்பிக்க முயல்கின்றோம் காலத்தைப்பற்றி கற்பிக்கச் சில காட்சித் துணைக் கருவிகள் உள்ளன. அவையாவன: **காலக்கோடு** (Time line), **கால விளக்கப்படம்** (Time chart), **காலவரைபடம்** (Time graph).

**காலக்கோடு** என்பது ஒரு குறிப்பிட்ட கால அளவைக் காட்ட வரையும் கோடாகும். எடுத்துக்காட்டாக, பின் வருவனவற்றைக் கூறலாம். பத்து செ.மீ. ஒன்று வரைந்து அதைப் பத்து சரிப்பங்குகளாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவும் பத்து ஆண்டு காலத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம். முழுக்கோடும் ஒரு

நூற்றுண்டைக் குறிக்கும். இக்கோடு செங்குத்தாகவும் அல்லது தரைமட்டமாகவும் வரையலாம். இக்கோட்டின் ஒரு புறத்தில் முக்கியத் தேதிகளையும், அதன் மறுபுறத்தில் அத் தேதியோடு தொடர்புள்ள நிகழ்ச்சியையும் எழுதி விளக்கவேண்டும். வரலாற்றின் வளர்ச்சியையும், ஒரு நிகழ்ச்சிக்கும் மற்றொன்றுக்கும் உள்ள கால அளவின் வேறுபாடு போன்றவற்றையும் எளிதில் குழந்தைகள் கற்பார்கள்.

காலக் கோட்டைவிட, **விளக்கப்படங்கள்** நுணுக்க விரிவுடைத் தன்மையுள்ளனவாகும். பல இணைபோகு பத்திகளை (parallel columns) வரைந்து ஒவ்வொன்றிலும் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலத்தில் நடந்த அரசியல், சமூகம், பொருளாதாரம், மதம் போன்ற தலைப்புகளில் குறிப்பிடவேண்டிய செய்திகளை எழுதுதல் வேண்டும். மற்றொரு முறையில் பல இணைபோகு பத்திகளில், ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நாட்டின் குறிப்பிடவேண்டிய நிகழ்ச்சிகளை எழுதுவதும் உண்டு. மேலும், இவ்விதக் காலப் படத்தில் (Time chart) குழந்தைகளைக்கொண்டு தேதிகளைத் தொடர் புறுத்தும் நிகழ்ச்சியோடு ஒட்டிய தலைவர்களின் படங்களையும் வரையும்படிச் செய்யலாம்.

**கால வரைபடங்கள்** 'தனிப்பட்ட தலைவர்களின் எழுச்சி வீழ்ச்சியை விளக்கவும்' ஒரு வமிசத்தின் துவக்கம், வளர்ச்சி, வீழ்ச்சி போன்றவற்றையும் கற்பிக்க உதவும் சிறந்த கருவியாக உதவுகின்றன.

**வினாக்கள்**

(1) கால அறிவு (Time sense) என்பதை விளக்கவும்.

(2) கால அறிவை எவ்வாறு மாணவர்களுக்குக் கற்பிப்பது?

(3) தேதிகளைக் கற்பிக்க உதவும் சாதனங்களை விவரிக்கவும்.

# 3. நோக்கங்களும் பயன்களும்
## (Aims and Values)

### 1. வரலாறு கற்பிப்பதன் நோக்கங்கள்
### (Aims of Teaching History)

கல்வித் திட்டத்தில் உள்ள எல்லாப் பாடங்களும் மாணவர்கள் நல்ல குடிமக்களாக வளர்வதற்குப் பயிற்சியளிப்பதற்காகவே ஏற்பட்டனவாகும். பொருளடக்கத்தின் தன்மையாலும், அப் பொருள்களைக் கற்பிக்க ஆசிரியர் மேற்கொள்ளும் முறைகளாலும் வரலாறு இளம் மாணவர்கள் பிற்காலக் குடிமக்களாகத் திகழ் வதற்கு வேண்டிய பயிற்சியை அளிக்கும் பொறுப்பையும் வாய்ப் பையும் அதிகம் பெற்றிருக்கின்றது.

பள்ளியில் வரலாற்றைக் கற்பிப்பதால் பல பலன்களை மாணவர்கள் அடைவார்கள். குறிக்கோள் ஒன்றைக் கொண்டு வரலாற்றைக் கற்பிக்கும் பொழுது பலன் வேறுபட்டதாக முடிவடை வதும் உண்டு. எனவே, நோக்கத்தையும், பலன்களையும் பற்றிய தெளிவான கருத்தை நாம் கொள்ளவேண்டும். ஏன் வரலாறு கற்க வேண்டும் என்ற வினவுக்கு பின்வரும் விடைகளை பொதுவாகக் கூறுவர். அவையாவன:

(i) மாணவர்களின் நினைவாற்றல், கற்பனை, ஆய்வு செய்யும் திறன்—இவற்றை வளர்க்க வரலாற்றை நாம் கற்பிக் கின்றோம்.

(ii) அதன் அறநெறி பலன் பற்றி வரலாற்றைக் கற்பிக் கின்றோம்.

(iii) தாய்நாட்டுப் பற்றை வளர்க்க நாம் வரலற்றைக் கற்பிக் கின்றோம்.

(iv) தற்கால அரசாங்க அமைப்பில் பற்று ஏற்பட வரலாற்றைக் கற்பிக்கின்றோம்,

(v) 'வரலாறு கடந்த கால அரசியலாகும்' என்ற கருத்துக் கேற்பப் பிற்கால அரசியல் வல்லுநர்களை உருவாக்குவதற்கு வரலாற்றைக் கற்பிக்கின்றோம்.

இவ்வித கருத்துகளை நாம் ஆராய்ந்து பார்த்தால் இவை எல்லாம் வரலாறு கற்பிக்கப்படுவதால் ஏற்படும் பலன்களேயாகும். இவற்றை நோக்கங்களாகக் கருதுவதற்கில்லை. நினைவாற்றலை வளர்க்க வரலாறு கற்பிக்கப்படுவதாகக் கருதுக்கூடாது. இந்த ஆற்றலை மாணவர்களிடம் வளர்ப்பதற்கு மற்றைய பாடங்களாலும் முடியும். வரலாற்றுத் தலைவர்களைப் பற்றிக் கற்பிக்கும்பொழுது ஒழுக்க சீலர்களையும், ஒழுக்க நிலையில் தவறியவர்களையும் நாம் கற்பிக்கவேண்டியதாக இருக்கின்றது. நன்னெறி நடத்தை என்பது கற்பதால் ஏற்படும் பலன் என்பதை நாம் உணருவோம். வரலாறு ஓர் அறிவியல் என்ற கொள்கைக்கு இணங்க ஒரு நாட்டின் நிகழ்ச்சிகளை விருப்பு, வெறுப்புணர்ச்சியின்றிக் கற்பிக்க வேண்டும். தாய்நாட்டுப் பற்று வரலாறு கற்பதால் ஏற்படும் பலன் என்பதையும் நாம் மனத்தில் கொள்வோமாக. வரலாறு கற்பிப் பதன் நோக்கம் உண்மையை நாடுவதேயல்லாமல், தாய்நாட்டுப் பற்றை வளர்ப்பதல்ல. அரசியல் அமைப்பைப் பற்றிப் பயிற்சி யளிப்பதும் நோக்கமாக ஏற்றுக்கொள்வதற்கில்லை. அரசியல் நூல் வரலாற்றின் ஒரு பிரிவாகும். சமூக, பொருளாதார, சமயம், கலை போன்ற பிரிவுகளை வரலாறு தன்னுள் அமையப் பெற்றிருக்கின்றது. எனவே, வரலாற்றுப் பாடத்தின்மூலம் அரசியல் வல்லுநர்களே உருவாக்குவது நோக்கமாக ஏற்றுக் கொள்வதற்கில்லை. சிறந்த குடிமகனை உருவாக்குவதே சிறந்த நோக்கமாக இருக்கவேண்டும்.

### (அ) பொது நோக்கம்

வரலாறு கற்பிக்கப்படுவதின் நோக்கத்தை வரலாற்றின் அறி வியல் கருத்தை வலியுறுத்துவோர் எடுத்துரைத்திருக்கின்றனர். தற்காலத்தை மாணவர்களுக்குத் தெளிவாக்கவேண்டும் (should explain the present) என்பதே வரலாறு கற்பிப்பதின் நோக்க மாகும். நம் நாட்டின் தற்கால நிலை, நமது மக்கள், நமது நிறு வனங்கள், சமயம், பழக்க வழக்கங்கள், பிரச்சினைகள் போன்ற தற்காலச் செய்திகளைத் தெளிவுபடுத்தி அவற்றை நாம் தெரிந்து கொள்ள வரலாறு உதவவேண்டும். நாம் வாழும் இடமும் அதன் சூழ்நிலையும் எவ்வாறு உருவாயின என்பதை நாம் தெரிந்துகொண் டால் நமக்கும், நமது சூழ்நிலைக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள இயலும். 'தற்காலம் கடந்த காலத்தின் குழந்தை' என்பதை நாம் உணரவேண்டும். அது கடந்த காலத்திலிருந்து வளர்ச்சியுற்றிருக்கின்றது. தற்காலத்திய சமூக, அரசியல், பொரு

ளாதார நிலைமைகள் யாவும் இதற்கு முன் இருந்த சூழ்நிலைகளி லிருந்து ஏற்பட்டவை. இவ்விதம் வெகு காலத்தியச் சூழ்நிலை யுடன் தற்காலம் தொடர்புடையதாக உள்ளதை நாம் காணலாம். இந்தக் காரண, காரியத் தொடர்பை மிகவும் பழமையான காலத் துடன் இணைத்துக் கூறமுடியும். எனவே, தற்காலத்தை நன்கு தெரிந்துகொள்ள மறைந்துள்ள கடந்தகால நிகழ்ச்சியை நாம் ஆராய வேண்டியிருக்கின்றது. வரலாறு என்பது இறந்த காலத் தைப் பற்றித் தெரிந்துகொள்வது என்பதல்ல. தற்காலத்தைப் பற்றி அறிந்துகொள்வது என்பதாகும். இந்தக்கருத்தைப் **பிண்ட்லே** (Findlay) பின்வருமாறு விளக்கியுள்ளார்: 'வரலாற்றின் முக்கிய நோக்கம் கற்பவர்களின் மனத்தில் வரலாற்று மனப்பான்மையை (Historic mindedness) வளர்ப்பதேயாகும்.' ஆராய்வூக்கத்தால் ஒரு நிகழ்ச்சியின் காரணத்தையும், பலனையும் (cause and effect) தெரிந்துகொள்ள மாணவர்கள் தூண்டப்படுவதே வரலாற்றுப் பாடம் கற்பிப்பதன் நோக்கமாகும்.

### (ஆ) சிறப்பு நோக்கங்கள் (Special Aims)

#### (i) முந்திய நிலைகள் (Early Stages)

(அ) வாழ்க்கை வரலாறுபற்றிய கதைகளைக் கூறி மாணவர் களின் கற்பனை, மனவெழுச்சிகளை வளர்க்கவேண்டும். இதற்குப் படங்கள், மாதிரி உருவங்கள், துணைக் கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி வரலாறு கற்பிக்கவேண்டும். கைவேலைகள் அதிகம் இடம் பெறவேண்டும். முறையணைந்த வரலாறு கற்பித்தல் இப்பருவத்தில் நடைபெற வேண்டியதில்லை.

(ஆ) சமூகத்தைப் பற்றிய சில அடிப்படைச் செய்திகளையும், சமூக வாழ்க்கையையும் குடிமை நூல்மூலம் தெளிவுபடுத்த வேண்டும்.

(இ) முன் காலத்திய கிராம வாழ்க்கை, கோயில், விழாக்கள், சத்திரங்கள் போன்றவை எவ்விதம் இயங்கின என்பதைக் கூறி அதன்மூலம் கால அறிவை (Time sense) சற்றுத் தெரிந்துகொள்ள உதவ வேண்டும்.

(ஈ) தற்கால நிலையையும், முற்காலத்திய நிலையையும் தொடர்புபடுத்தி, வளர்ச்சியைப் பற்றிய எண்ணத்தை மாணவர்கள் உணரும்படியும் வரலாறு கற்பிக்கப்படவேண்டும்.

#### (ii) அடுத்த நிலை (இடைநிலை வகுப்புகள் — ஆறு முதல் எட்டு வகுப்புகள் வரையிலும்)

ஆரம்ப நிலையில் வரலாறு கற்பிப்பதன் நோக்கம் கற்பனை யையும், மனவெழுச்சியையும் தூண்டுவதே என்பதைப் பார்த்தோம். அறிவுறுத்துவதைவிட (instructive), கவர்ச்சியாற்றலுள்ளதாகக் கற்பித்தல் (interesting) இருக்கவேண்டும் என்பது நோக்கமாக இருந்தது. இந்தப் பருவத்தை ஆசிரியர் **கிளாப்பர் 'அறிமுகப் படுத்தும் பருவம்'** (presentative stage) என்று கூறுகிருர். புலனீடான அனுபவங்களைக் குழந்தைகள் ஏற்றுக்கொள்ளும் பருவம் இதுவாகும். அதனுல் கைவேலைகள் வாயிலாகவும், படங்கள், மாதிரி உருவங்கள் போன்ற துணைக் கருவிகளைக் கொண்டும் கற்பித்தல் நடைபெறவேண்டும் என்று கூறுவர்.

நடுநிலைப் பருவத்தில் மாணவர்களிடம் அதிக நினைவாற்றல் திறமை காணப்படுகின்றது. புலனீடான துணைக் கருவிகள் அதிகம் தேவை இல்லை. முன்பு பெற்ற அனுபவங்களை மீள்பார்வை செய்யும் திறனை மாணவர்கள் இந்த இரண்டாவது பருவத்தில் பெற்றிருப் பார்கள். ஆசிரியர் கிளாப்பர் இப்பருவத்தை **'மீட்டுண்டாக்கும் நிலை'** (Representative or Reproductive stage) என்று கூறுகிருர். எனவே, இப்பருவத்தில் வரலாற்றை முறையணைந்த நிலையில் (formal manner) கற்பிக்கவேண்டும். நினைவாற்றல், திரும்பக் கூறல் போன்ற திறமைகளை மாணவர்கள் இப் பருவத்தில் பெற்றிருப் பதால், வரலாற்றுப் பாடத்தைத் தொடர்பான நிகழ்ச்சிகளாகக் கற்பிக்கமுற்படலாம். கால வரிசை முறைப்படிச் செய்திகளை வரிசைப்படுத்தியும், ஆசிரியர் கற்பிக்கவேண்டும்.

(ஆ) இப்பருவத்தில் சமூக, கலாச்சார, அறவழிப் பண்புகளை எடுத்துரைக்கவும் முயல வேண்டும்.

(இ) தனித்துப் படிக்கும் பழக்கத்தையும் இப் பருவத்தில் துவக்க வேண்டும்.

(iii) **மூன்ருவது நிலை** (Third stage) — (ஒன்பது பத்தாவது வகுப்புகள்)

முன் இரண்டு பருவங்களின் முக்கிய நோக்கம் கவர்ச்சி (interest) என்பதைப் பார்த்தோம். மாணவர்களின் மூன்ருவது பருவத்தில் கவர்ச்சியைவிட, பயன் (values) முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

(அ) வரலாற்று மனப்பான்மையை மாணவர்களிடம் செலுத் தும்பொருட்டு வரலாற்றை ஓர் அறிவியல் பாடமாகக் கற்பிக்க முற்படவேண்டும். தலைப்புச்சார்முறை, அலகுமுறை, ஆய்வக

முறை போன்றவற்றைப் பயன்படுத்தி வரலாறு கற்பிக்க முற்பட வேண்டும்.

(ஆ) செய்திகளை வரிசைப் படுத்தி, காரணங்களின் விதிகளை ஆராய வேண்டும். நாட்டின் வரலாற்றில் காணப்படும் பெரும் நிகழ்ச்சிகளையும், அவற்றால் ஏற்பட்டுள்ள போக்குகளையும் அவற்றைச் சார்ந்த படிமுறை வளர்ச்சியையும் மாணவர்கள் உணரும்படி வரலாறு கற்பித்தல் நடைபெற வேண்டும்.

(இ) வாழ்க்கை வரலாறு பற்றிய கதைகள் பின்னணியிலிருக்க வேண்டும். பெரும் தலைவர்கள், அரசர்கள் போன்றவர்களின் குண இயல்புகளை அறிவதற்கும், அவர்களின் சாதனைகளை மதிப்பீடு செய்வதற்கு மட்டும் வாழ்க்கை வரலாறு கதைகளைப் பயன் படுத்த வேண்டும்.

(ஈ) உலக வரலாறு, நாட்டின் வரலாற்றில் அரசியல் வளர்ச்சி, மதம், பண்பாடு நிகழ்ச்சிகள் ஆகியவை வாலாறு பாடத்தில் இடம் பெற வேண்டும்.

(உ) மூலமுறையைப் பயன்படுத்திக் கற்பிக்க ஆரம்பிக்க வேண்டும்.

மேல் வகுப்புகளில் வரலாற்றை அறிவியலாகவும், கலையாகவும் கருதிக் கற்பிப்பது ஆசிரியரின் நோக்கமாக இருப்பது சிறப்பானதாகும்.

**வினாக்கள்**

(1) வரலாறு கற்பிப்பதின் பொது நோக்கங்கள் யாவை?

(2) நமது பள்ளிக் கூடங்களில் பல நிலைகளில் வரலாறு கற்பிக்கப்படுவதற்கு நாம் கடைப்பிடிக்கும் சிறப்பு நோக்கங்களைத் தெளிவுப்படுத்துக.

## 2. வரலாறு கற்பிப்பதால் ஏற்படும் பயன்கள்
(Values of Teaching History)

### (அ) நடைமுறைப் பயன்கள் (Practical Values)

காலத்தை நன்றாகப் புரிந்துகொள்வதற்கு வரலாற்றுப் பாடம் உதவுகின்றது. மாணவர்கள் பிற்காலத்தில் நல்ல குடிமகனாக

வாழ்வதற்கு இந்த அறிவு அவனுக்கு மிகவும் தேவைப்படுகின்றது. ஆசிரியர் சீலி (Seeley) என்பவர் வரலாற்று ஆட்சியாளர்களுக்கும், அரசியல் வல்லுநர்களுக்கும் அறிவு புகட்டும் என்ற நம்பிக்கையில் வரலாறு நூல்களை எழுதினர். 'வரலாறு தொடர்பில்லாத அரசியல் நூலுக்கு வேர் இல்லை; அரசியல் தொடர்பில்லாத வரலாறு எவ்விதப் பயனையும் அளிக்காது' என்றும் சீலி கூறியுள்ளார். 'வரலாற்று நிகழ்ச்சிகள் திரும்பவும் நடைபெறும்,' என்ற நம்பிக்கையை சீலி போன்ற ஆசிரியர்கள் கடைப்பிடித்தார்கள். ஆனுல், தற்காலத்திய அறிவியல் பண்புள்ள வரலாற்று ஆசிரியர்கள் இதை ஏற்றுக் கொள்வதில்லை. சமூகம் முன்னேற்றப் பாதையில் வளர்ந்து கொண்டிருக்கின்றது என்ற கருத்தை மாணவர்கள் புரிந்து கொண்டால் அவனது தற்காலத்திய நிகழ்ச்சிகள் பற்றிய அறிவு தெளிவு பெறும். பிற்காலத்தில் முன்னேற்றத்திற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன என்பதையும் மாணவன் அறிவான். சமூக முன்னேற்றத்தை மாணவன் அறிந்துகொள்வதே சிறந்த செயல்முறைப் பலனுகும்.

கடந்தகால நிகழ்ச்சிகளை இதுவரையிலும் கற்று வந்ததின் நோக்கம் என்ன என்று பார்ப்போம். கடந்தகால நிகழ்ச்சிகள் யாவும் சிறப்பான பொற்காலத்தைப் பற்றியவை. கடந்தகால அறிவு நமக்கு நல்ல படிப்பினை நல்கும், கடந்தகால நிகழ்ச்சிகள் மறுபடியும் நடைபெறும் என்ற நம்பிக்கை ஆகிய காரணங்களால் கடந்த காலத்தை இதுவரையிலும் கற்று வந்தனர். அண்மைக் காலத்தைப் பற்றியும் இதுவரையில் கற்பிக்கவில்லை. தற்கால நிகழ்ச்சிகள் யாவும் அரசியல் நூலில் அடங்கும் என்ற கருத்தினை ஒட்டியதாகும். 'விக்டோரியா மகாராணி காலத்தோடு வரலாறு கற்பது போதும்' என்ற கருத்து நிலவியது. இவ்விதக் கருத்துடன் வரலாறு கற்பிப்பது தவறுனது என்ற கொள்கையை இப்பொழுது அறிஞர்கள் ஒத்துக்கொள்கின்றனர். வரலாறு கற்பதன் நோக்கத்தைத் தவருகப் புரிந்துகொண்டதால் இவ்விதக் கருத்துகள் உலவின. தற்காலத்தைப் புரிந்துகொள்ள கடந்த காலத்தைக் கற்கவேண்டும். ஆசிரியர் A. A. காக் (A. A. Cock) கூறுவதாவது, 'மாணவன் பள்ளியைவிட்டு உலக வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு முன்பு சமூக வாழ்வு எவ்வித தோற்றங்களில் நடைபெறுகின்றன என்பதை நன்கு தெரிந்துகொள்ளவேண்டும்.' இடத்தைப் பற்றிய நிகழ்ச்சிகளைப் புவியியல் வர்ணிப்பதுபோல் வரலாறு காலத்தைப் பற்றிய நிகழ்ச்சிகளை வர்ணித்துக் கூறுகின்றது. எனவே, வரலாற்றுப் பாடத்திட்டம் முன்காலத்தில் நடைபெற்றதையும் தற்காலத்தில் நடைபெறுவதையும் தொடர்புபடுத்தி விளக்கிக் கூற வேண்டும். தற்காலத்தை விளங்கவைக்கும் வரலாறு அரசியல்

வல்லுநர்களுக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு குடிமகனுக்கும் தேவை என்பதை ஆசிரியர் **ராபின்சன்** (Robinson) வலியுறுத்திக் கூறுகின்றார். ஒவ்வொரு குடிமகனும் சமூக வாழ்வு செம்மையாக நடைபெற உதவவேண்டும் என்பதால் அவனிடம் வரலாற்று மனப் பான்மை ஏற்படவேண்டும் என்பதை மறுத்துக் கூறுவதற்கில்லை.

### (ஆ) பண்பாட்டுப் பயன் (Cultural Value)

#### (i) விரிந்த மனப்பான்மையை வளர்த்தல் (Breadth of out look)

இவ்வுலகத்தில் படிப்படியாக ஏற்பட்ட மாறுதல்களை வரலாற்றில் எடுத்துக் கூறப்படுகின்றது. மாறுதல்களில் காணப்படும் பெரும் போக்குகளை (movements) மேல்வகுப்பு மாணவர்களுக்குக் கற்பிக்கக் கூடும். ஆனால் கடந்த காலத்தின் வாழ்க்கையை எடுத்துக் கூறும் வரலாற்றுப் பகுதியையும், பெரிய மனிதர்களின் செயல்களைப் பாராட்டுதலும், பலவகைப் பட்ட மக்களின் பழக்க வழக்கங்களையும் ஆரம்ப வகுப்புகளில் பயிலும் இளம் மாணவர் களுக்கும் கற்பிக்கவேண்டும். கடந்த காலத்தில் வாழ்ந்து இறந்த பெரும் தலைவர்களுடன் நேரில் பழகும் வாய்ப்பை மாணவர்கள் பெற முடியாது. அவர்களின் சாதனைகளை அறிய வரலாறு உதவு கின்றது. அப்பெரியோர்களின் எண்ணங்கள், ஆவல்கள், செயல்கள் ஆகியவை வரலாற்றில் பதிவு செய்யப்பட்டிருப்பதால் மாணவர்கள் எளிதில் கற்கமுடிகின்றது. இவ்வாறு வெகு எளிமையான மாணவனும், வரலாற்றுப் பாடத்தின்மூலம் பெருந்தன்மையையும், உயர்குடும்பத்தைச் சார்ந்த பெருந்தலைவர்களின் நட்பும் பெறுகின் றனர். தன் பள்ளி, சூழ்நிலை, குடும்பம் போன்றவற்றிற்கு அப்பாற்பட்ட மக்களுடன் மாணவர்கள் நட்புறவு கொள்வதால் சிறந்த அனுபவத்தைப் பெறுகின்றனர். இதனால் அவர்களின் மனப்பான்மை விரிவடைகின்றது. வரலாறு பயிலும் மாணவனை உல்லாச யாத்திரை புரிபவருடன் ஒப்பிடலாம். மாணவன் புதிய சமூக நிலைக்கு அழைத்துச் செல்லப்படுகிறான். புதிய நடையுடைப் பழக்கங்களை அவன் பார்க்க முடிகின்றது. கடந்த காலம் என்ற கண்ணாடிமூலம் சமூகத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைக் கற்று ணர்வதால் அவனது மனம் விரிவடைகின்றது. ஆசிரியர் **கீட்டிங்** (Keatinge) கூற்றுப்படி 'இவ்வாறு பயிலும் மாணவன் தான்வாழும் சமூக நிலைக்கு மாறாகப் புதிய சமுதாய நாகரிகத்துடன் தொடர்பு கொள்வதால் அவனிடம் இனம், வகுப்பு பற்றிய தவறான எண்ணம் குறையும்.' 'மலைகளுக்கு அப்பாலும் மக்கள் வாழ்கின்றனர்' என்ற பழங்காலக் கருத்தை மாணவர்களுக்கு வரலாறும், புவியியலும் கற்பிக்க உதவுகின்றன.

இந்தக் குறிக்கோளை நாம் செயலாற்றத் தன்னாட்டு வரலாறு கற்பிப்பதுடன் உலக வரலாற்றின் சுருக்கத்தையும் மாணவர்

களுக்குக் கற்பிக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது. இவ்வித மனப்பான்மையை வளர்ப்பதின் மூலம் நாம் வரலாற்றுப் பாடத்தை மனிதத்தன்மையுள்ள (Humanities) நூலாகக் கருதமுடியும். வரலாறும் இலக்கியமும் தொடர்புபடுத்திக் கற்பிப்பதால், நற்பண்பு பற்றிய மரபு நீடிக்கமுடியும். தொழில் முன்னேற்றத்தினலும், அறிவியல் கண்டு பிடிப்பாலும் ஏற்படும் அழிவுச் சக்திகளை ஒதுக்கி மாணவர்களிடம் பரந்த மனப்பான்மை உலக அமைதியின் தேவை போன்றவைகளை வரலாற்று மாணவர்களுக்கு அளிக்கின்றது.

### (ii) சமூக அனுபவங்கள் (Social Experiences)

நாகரிக வளர்ச்சியை எடுத்துரைப்பது வரலாறு என்று கூறுவர். நாகரிகம் என்பது மக்கள் ஒரு சமூகத்தில் சேர்ந்து வாழும் கலையைக் கூறுவதாகும். மனித இனம் படிப்படியாக நாகரிக வளர்ச்சியைப் பெற்றுள்ளது. வேட்டையாடுதல், மேய்த்தல், திரிந்து வாழ்தல் ஆகிய நிலைகளைக் கடந்து கிராமங்களில் சிறுசிறு குடும்பங்களாகச் சேர்ந்து வாழும் பண்பை மனித இனம் பெற்றது. நகர அரசுகள், பேரரசுகள், பலமுள்ள அரசரின் ஆட்சிக்கு உட்பட்டு இருத்தல். படைமானிய அமைப்பில் சமூகம் இயங்கியது, தேசிய அரசுகள், தற்கால பொதுநல ஆட்சியில் வாழ்தல், சுதந்திர அரசுகள், கூட்டாட்சி அமைப்பில் அரசு அமைத்தல போன்ற நாகரிகப் படிகளில் மனித இனம் முன்னேற்றமடைந்துள்ளது. தனி மனிதனின் செயலைவிடக் கூட்டு வாழ்க்கைபற்றிய வர்ணனை அதிகம் வரலாற்றில் காணப்படுகின்றது. போர்க்களத்திலும் பொது அமைப்பில் கூடியே அவதியுறும் மனித இனம் ஒரு தலைவனின் கீழ்க் கூடிச் செயலாற்றும் பண்பினை வளர்த்து வந்துள் ளது. வரலாறு கற்பிப்பதில் போர்க்களத்தைப் பற்றியும் இராணுவத் தலைவர்களையும் போற்றி எடுத்துரைக்கப்பட்டு வந்தது. இந்தத் தவற்றை நாம் இனி தொடர்ந்து செய்வதைத் தவிர்க்கவேண்டும். வரலாற்றில் படைத் தலைவர்களையும், சமாதானத் தலைவர்களையும் போற்றிக் கற்பிக்கவேண்டும். நாம் எவ்வாறு **மார்ல்பரோ கோமகன்** (Duke of Marlborough), வுல்வ், நெல்சன் போன்ற வீரர் களின் சாதனைகளை வர்ணிக்கின்றேமோ, அவ்விதமே இளையபிட், வெஸ்லி, பிளாரன்ஸ் நைட்டிங்கேல், ஜியார்ஜ் ஸ்டீவன்சன் போன்றவர்களையும் வர்ணிக்கவேண்டும். நாகரிகம் சமாதான காலத்தில்தான் வளர்ச்சிபெறும். போர்க் காலத்தில் அதன் வளர்ச்சி தடைபெறும் என்பதை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். 'சமாதானத்தினல் ஏற்படும் வெற்றிகள், போரினல் ஏற்படும் புகழைவிடக் குறைந்தது அல்ல' என்பதை வரலாறு எடுத்துரைக்க வேண்டும், வாழ்வதற்குச் சில சமயங்களில் போர்கள் தேவைப்படுகின்றன. ஆனல், போரில் ஈடுபடுவதற்காக மனித

இனம் வாழ்வதில்லை. எனவே, வரலாறு போர்களைப் பற்றிய தொடர்ச்சியாகக் கூறிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. வரலாறு கற்பிப்பது மனிதர்களைச் சமூக, இனப்பற்றுள்ளவர்களாக ஆக்குவதே பொது நோக்காக உடையது.

தற்காலச் சமூக வாழ்க்கைச் சிக்கல்கள் நிறைந்தது. ஒரு குடிமகன் தன் குடும்பம், இனம், சாதி, மதம், சமூகநிலையம், அரசியல் கட்சி, தொழிற்கட்சிகள் போன்ற பல அமைப்புகளுக்குக் கட்டுப்பட்டு வாழ்க்கை நடத்த வேண்டியவனாக இருக்கிறான். அவனது உண்மைப் பற்று (loyalty) இவ்வித எல்லா அமைப்புகளுக்கும் இடம் அளிக்க வேண்டியதாக இருக்கின்றது. ஒவ்வொரு அமைப்புக்கும் அவனது உண்மைப்பற்று எவ்விதம் விதிகளுக்கு உட்பட்டுச் செயல்பட வேண்டும் என்பதைச் சமூக அறிவியலின் தலைமையிடத்தைப் பெற்றுள்ள வரலாறு எடுத்துரைக்கின்றது. ஆசிரியர் டாக்டர் **வில்லியம் பாயிட்** (William Boyd) கூறுவதாவது: 'குடிமை என்பது நமது பல உண்மைப் பற்றுதல்களைச் செம்மையாக வகைப்படுத்துதல்', தன் சமயத்திற்குச் செலுத்த வேண்டிய பற்றைப் போல் தன் நாட்டிற்கும் நல்ல குடிமகன் செலுத்தவேண்டும் என்பது தெளிவாகின்றது. வேற்றுமைகளுக்கிடையில் ஒற்றுமை என்ற தத்துவத்தை ஒவ்வொரு குடிமகனும் வரலாறு கற்பிப்பதன் மூலம் அறியவேண்டும்.

### (iii) மனிதத் தன்மைபற்றிய அறிவு (Study of Human Nature)

மனிதத்தன்மைபற்றிய அறிவு சமூகத்தில் சேர்ந்து வாழ்வதால் பெறுகின்ற ஒரு பயனாகும். தற்கால உலகில் வாழ்வதற்கு வேண்டிய கட்டுப்பாட்டு உணர்ச்சியை வளர்ப்பதற்கு இவ்வறிவு உதவி செய்கின்றது. செய்திகளை ஆராய்ந்து காரண காரிய இயல்புகளைச் சீர்தூக்கிப் பார்த்து தகுந்த முடிவு எடுக்கும் பயிற்சி மாணவர்களுக்கு அளிக்கப்படுகின்றது. சிறந்த தலைவர்களின் எண்ணங்களையும் அவர்கள் மேற்கொண்ட முறைகளையும், அவர்கள் எடுத்த முடிவுகளையும் வரலாறு எடுத்துரைக்கின்றது.

வரலாற்றில் கூறப்படும் தலைவர்களின் உள் எண்ணங்கள் நல்லது பற்றியும், தீயது பற்றியதுமாக இருப்பதும் உண்டு. அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து, ஆராய்ந்து, ஏற்றுக் கொள்ள வேண்டியவற்றைமட்டும் மாணவர்களுக்கு விளக்கவேண்டும். வரலாற்றுப் பாடத்தின் பொருளடக்கம் மனிதத் தொடர்பைப் பற்றியிருப்பதால், மாணவர்களுக்கு மனிதத் தொடர்புகளையும், சமூகத்தில் பழகும் தன்மைகளையும் பற்றி இயல்பாகக் கூறுவதற்கு முடியும். ஆசிரியர் **கிட்டிங்** (Keatinge) கூறுவது போல் 'செயலில்

ஈடுபட்டிருக்கும் வரலாற்றுப் பாத்திரங்களின் அடுக்கணிக்காட்சியே வரலாறு' ஆகும். (A panorama of character in action). வரலாற்றுப் பாடம் மனிதத் தன்மைகளைப் பற்றிய உலகுக்கு ஓர் அறிமுகம் என்று சுருக்கமாகக் கூறலாம். மனிதத் தன்மைகளைப் பற்றிய அறிவைப் பெறுவதற்கு வரலாற்றுப் பாடத்தில் இருக்கும் சந்தர்ப்பங்கள்போல் கணிதத்திலோ அல்லது அறிவியல் பாடத்திலோ இல்லை.

## (இ) அறநெறிப் பயன் (Ethical Value)

ஆசிரியர் **பாலிங் புரோக்** (Bolingbroke) வரலாற்றைப் பின்வருமாறு வரையறுத்துக் கூறியுள்ளார்: 'வரலாறு என்பது எடுத்துக்காட்டுகளுடன் மெய்யறிவைக் கற்பிக்கும் நூல்' (History is Philosophy Teaching by example). வெறும் அறக்கொள்கைகளை மாணவர்களுக்குக் கற்பிப்பதால் மட்டும் எதிர்பார்க்கும் பலன் ஏற்படாது. அதுபற்றிய கோட்பாடுகளும் விதிமுறைகளும் மாணவர்களிடம் மாறுதல்களை நாம் எதிர்பார்க்கும் அளவிற்கு உண்டாக்குமென்று கூறுவதற்கில்லை. வரலாற்றில் வரும் சம்பவங்களைப்பற்றிக் கூறும்பொழுது அதன் அடிப்படையில் அமைந்திருக்கும் அறக்கொள்கைகளை எடுத்துக்கூறுவதால் மாணவர்கள் மனத்தில் அவை ஆழ்ந்து படிவது திண்ணம். நல்லதைப் போற்றவும், தீயவற்றை வெறுக்கவும் நாம் தயங்குவதில்லை. வரலாற்றில் அறச் செயல்களைக் கற்பதினால் மாணவர்களின் உள்ளம் விரிவடைந்து நல்ல பண்புகளை ஏற்றுக்கொள்ளவும், நல்ல செயல்களைப் பாராட்டவும் முன்வருவார்கள்.

எனினும், வரலாற்றில் நற்செயல் எப்பொழுதும் வெற்றிபெறுவதில்லை. முரட்டுத்தனம், நம்பிக்கைத்துரோகம், கொடுமைச்செயலில் ஈடுபடுவதைப் போன்றவற்றை நாம் வரலாற்றை உருவாக்கிய தலைவர்களிடம் காணுவதும் இயல்பு. 'பழிச்செயல், மடமை, மனித இனத்தின் இடையூறுகள் போன்றவற்றின் பதிவேடுதான் வரலாறு' என்று ஆசிரியர் **கிப்பன்** கூறுகின்றார். எனினும் **பிரடரிக் ஹாரிஸன்** கூற்றையும் நாம் கவனிக்கவேண்டும். 'கொடுமை நிறைந்த எண்ணங்களையும், செயல்களையும் மிகைப் படுத்திக் கூறுவதைவிட எவ்வாறு மனித இனம் நாகரிகத்தில் முன்னேற்றமடைந்துள்ளது என்றும், மனித இனத்தின் ஒற்றுமையும், தனிப்பட்ட மனிதர்களின் தூய்மையான தியாகங்களும், நற்செயல்களும் எவ்வாறு போர்க்களத்திலும், இயற்கையின் போராட்டத்திலும் வெற்றியடைந்து மிருகத்தன்மையிலிருந்து விடுபட்டு, நாகரிப் பாதையில் மனித இனத்தை அழைத்துச் சென்றுள்ளன என்பதையும் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டும்.'

இதை வலியுறுத்த லார்டு **ஆக்டன்** (Lord Acton) 'வரலாறு நற்செயல்களின் தொகுப்பு என்றும், வாழ்க்கை வழிகாட்டி' என்றும் கூறுகிறார்.

வரலாற்றில் காணும் பெரும் தலைவர்களின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால் தூய வாழ்வுடன் பணியாற்றிய **ஆல்பிரட்** (Alfred), அசோகர், பிளாரன்ஸ் நைட்டிங்கேல், **வில்பர் போர்ஸ்** (Wilber Force) போன்ற சில ஒப்பற்ற மேதைகளைத்தான் குறிப்பிட முடியும். நற்செயல்களும், தீச் செயல்களும் கலந்த வாழ்க்கை வரலாற்றை நாம் அதிக அளவில் கற்பிக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். வாரன்ஹேஸ்டிங்ஸ், டியூடர் வமிசத்து எலிசபெத் அரசி, மாரல்பரோ கோமகன், **வால்போல்** (Walpole) போன்றவர் களின் வாழ்க்கை வரலாற்றின்மூலம் எவ்வித நற்பண்புகளை நாம் மாணவர்களுக்கு எடுத்துக்காட்ட முடியும்? எனவே, நாம் நற்குணங் களும், தீய எண்ணங்களும் நிரம்பிய பெரியோர்களின் வாழ்க் கையையும், அவர்களின் சாதனைகளையும் மாணவர்களுக்குக் கற்பிக் கின்றோம். தீயவற்றை அகற்றி, நற்செயல்களைப் போற்றும் திறனை மாணவர்களுக்கு அளிக்கும் பணியில் நாம் ஈடுபட்டிருக்கின்றோம்.'

**தாய்நாட்டுப் பற்றை வளர்த்தல்**

தாய்நாட்டுப் பற்று என்ற சிறந்த பண்பு வரலாற்றுப் பாடம் கற்பதினால் ஏற்படுகின்றது. நாட்டின் மூவர்ணக்கொடி அல்லது யூனியன் ஜாக் என்பது வண்ணம் தீட்டப்பட்டுள்ள துணி என்று கருத முடியுமா? அது ஒரு நாட்டின் சின்னம்; அதைக் காப்பாற்ற ஒப்பற்ற பல தலைவர்கள் தங்கள் உயிர், பொருள், யாவற்றையும் அற்பணித்துள்ளனர் என்பதை அவ்விதத் தியாகச் செயல்களைக் கற்பதினால் நம் முன்னோர்களுக்கு நாம் கடமைப்பட்டிருக் கின்றோம் என்பதை உணரும்படி ஏற்படுகின்றது. அவ்விதத் தியாகச் செயல்களை நாமும் நம் நாட்டிற்குச் செய்யவேண்டும் என்ற உள் உணர்வைப் பெறுகின்றோம்.

இந்தத் தாய்நாட்டுப் பற்று மிகவும் சிறந்த நிலையில் மாணவர் களிடம் உருவாக்கப்படவேண்டும். 'என்நாடு செய்வது சரியாக இருந்தாலும் சரி; அல்லது தப்பாக இருப்பினும் அதற்காகப் போராட நான் தயார்' என்ற எண்ணத்தை வளர்ப்பதற்கு வரலாறு கற்பிக்கப்படுவதில்லை. மற்ற நாடுகளின் பெருமைகளைப் போற்ற வேண்டும். நம் நாடுபோல் மற்றைய நாடுகளும் முன்னேற்றப் பாதையில் செல்லவேண்டும் என்ற நல்லெண்ணம் ஒவ்வொரு மாணவனிடமும் ஏற்படவேண்டும். இதன் பொருட்டுத்தான் நாட்டு வரலாற்றுடன் உலக வரலாற்றையும் கற்பிக்கவேண்டும் என்று கூறுவர், மனித இனத்தின் முன்னேற்றத்தை அடிப்படை

யாகக் கொண்டதும், உலக மக்கள் யாவரும் சகோதரர்கள் என்ற எண்ணத்தையும் உருவாக்கும் தாய் நாட்டுப்பற்று மாணவர்களிடம் வளர்ச்சியடைய வேண்டும். வெறுப்புணர்ச்சியின்றி தூய்மையான தாய்நாட்டுப்பற்றுடைய பெருந்தலைவர்களான **ஜியார்ஜ் வாஷிங்டன்** (George Washington), **அப்பிரஹாம்** (Abraham Lincoln), **வுட்ரோ வில்சன்** (Woodrow Wilson) போன்றவர்களின் வாழ்க்கை வழி காட்டியாக இருப்பதை மாணவர்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். இந்தக் கருத்தை வலியுறுத்தும் முறையில் நமது பாடத் திட்டத்தில் போர்த் தலைவர்களைக் (Heroes of war) கற்பிக்கத் திட்டமிடுவதுடன், சமாதானத் தலைவர்களையும் (Heroes of Peace) கற்பிக்கத் திட்டமிட வேண்டும். நம் நாட்டின் நற்செயல்களையும், சிறப்பு மிகுந்த நிகழ்ச்சிகளையும் கற்பதோடு, பிறநாட்டு மக்களின் நற்செயல்கள், சிறப்புச் சாதனைகளையும் கற்கவேண்டும் என்பதே வரலாறு கற்பிப்பதன் நோக்கமாகயிருக்கவேண்டும்.

### (ஈ) கட்டுப்பாட்டுப் பயன் (Disciplinary Value)

வரலாறு கற்பதால் மனப்பயிற்சி (Mental Training) தொடர்பாகக் கீழ்க்காணும் பலன்கள் ஏற்படுகின்றன:

(i) கற்பனை வளர்ச்சி (Development of imagination)

(ii) திறனாய் சிந்தனைப் பழக்கம் (The habit of critical thinking)

(iii) நினைவாற்றல் வளர்ச்சி (Development of memory)

#### கற்பனை வளர்ச்சி

சீஸர் அல்லது தாமஸ்பெக்கட் கொலை செய்யப்பட்ட காட்சியும், சாந்த் பீபி அல்லது ஜோன் ஆப் ஆர்க் தன் நாட்டைக் காப்பாற்றச் செய்த போர்களையும் அல்லது பாஸ்டல் சிறைச்சாலையைத் தாக்கி அழித்தது போன்ற சம்பவங்களையும் கற்பனைத் திறனின்றி மாணவர்கள் புரிந்து கொள்ளமுடியாது. தொடக்கப் பள்ளி, நடுநிலை பள்ளி வகுப்பு மாணவர்களுக்குக் கற்பனைத் திறனையும், மனவெழுச்சியையும் வரலாற்றுப் பாடத்தினால் வளரச் செய்ய இயலும். இந்தத் திறனை வளர்ப்பதற்கு உதவாத ஆசிரியர்களை வரலாறு கற்பிப்பதற்கு ஏற்றவர்களாகக் கருத முடியாது: வரலாற்று நிகழ்ச்சிகள் மெய்பிக்கப்படவேண்டுமானால் மாணவர்களின் கற்பனையைக் கொண்டுதான் சாதிக்க முடியும்.

#### திறனாய் சிந்தனைப் பழக்கத்தை வளர்த்தல்

வரலாற்றில் செய்திகளைச் சேகரிப்பதோடு, மாணவர்களின் திறனாய் திறமையையும் வளர்த்தல் வேண்டும். சிந்தனையும்,

திறனும் திறமையும் செய்திகளின்றி நடைபெருது. அவற்றைச் சேகரிப்பதோடு, இணையானவற்றை வகைப்படுத்தவேண்டும். வகைப்படுத்தப்பட்ட செய்திகள் சிந்தனையை வளர்ச்சியடையத் தூண்டுகின்றன.

பாடப்பொருளை அடிப்படையாகக் கொண்டு முடிவுகாணும் திறனும் பழக்கம் வளர்ச்சியடைகின்றது. எனவே, பாடப் புத்தகத்தைப் பயன்படுத்துவதோடு வேண்டிய அளவு இணைவழி படிப்பிலும் மாணவர்களை ஈடுபடுத்தவேண்டும். பல புத்தகங்களைப் படித்துத் தனக்கு வேண்டிய பாடப்பொருளைச் சேகரிக்கும் திறமை மாணவர்களிடம் இயல்பாக வளர்ச்சியடையும்.

**நினைவாற்றல் வளர்ச்சி**

வரலாற்றுப் பாடப்பொருளை மாணவர்கள் மனப்பாடம் செய்வதினால் எவ்விதப் பயனும் ஏற்படாது. பாடப்பொருளை அறிந்துகொள்வதற்கும், அவற்றைப்பற்றிய விளக்கங்களைப் புரிந்து கொள்வதற்கும் அறிவுசார்ந்த தொடர்புகளை அமைத்துக்கொள்ள வேண்டும்.

**உட்புறமான தொடர்புகள் (Internal association)**

ஒரு நாட்டின் வரலாறு பற்றிய செய்திகளையும், நிகழ்ச்சி களையும் நினைவில் வைத்துக்கொள்வதற்கு நிகழ்ச்சிகள் வளர்ச்சி யடைந்ததைக் காலவரையறை முறையைப் பின்பற்றிக் கற்க வேண்டும். வெளிப்பகுதியான தொடர்புகளாலும் (External association) அறிவுத் திறனை வளர்த்துக்கொள்ளமுடியும். ஒரு நாட்டின் பல பகுதிகளில் ஒரே காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி களைத் தொடர்புபடுத்திக் கூறும்பொழுது, அவற்றின் தொடர்பைக் கொண்டு மாணவர்கள் எளிதில் நினைவில் வைத்துக்கொள்ள முடிகின்றது. எடுத்துக்காட்டாக ஒரே காலத்தில் வட இந்தியாவில் ஆட்சி செய்த ஹர்ஷர் அரசரின் சாதனைகளையும், தக்காணத்தில் ஆட்சி செய்த இரண்டாம் புலிகேசியைப்பற்றியதும் சாளுக்கிய வமிசத்து வரலாற்றுச் செய்திகளையும், தென்னாட்டில் காஞ்சியில் அரசாட்சி செய்த நரசிம்மப் பல்லவனது சாதனைகளையும் தொடர்பு படுத்திக் கற்பிக்கும்பொழுது நினைவாற்றல் நன்கு வளர்ச்சியடை கின்றது.

**வினுக்கள்**

(1) பள்ளிக்கூடங்களில் வரலாறு கற்பிப்பதினுல் ஏற்படும் நடைமுறைப் பயன்களை விவரிக்கவும்.

(2) வரலாறு கற்பிப்பதால் ஏற்படும் பண்பாட்டுப் பயன்களைத் தெளிவுபடுத்துக.

(3) வரலாறு கற்பிப்பதால் ஏற்படும் அறநெறிப் (ஒழுக்கம்) பயன்களை விவரிக்கவும்.

(4) வரலாறு கற்பிப்பதால் மாணவர்களிடம் மனப்பயிற்சி தொடர்பாக ஏற்படும் கட்டுப்பாட்டுப் பலன்களை விவரித்து எழுதவும்.

# 4. வரலாற்றுப் பாடத் திட்டம்
## (History Syllabus)

### 1. பொருளடக்கம்

**(அ) கல்வி ஏற்பாடு (Curriculum)**

**(i) கல்வி ஏற்பாட்டை உருவாக்குதல்**

கல்வி ஏற்பாட்டை உருவாக்கும் பொழுது சில கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. (1) கல்வி ஏற்பாடு மாணவர்களிடம் பல்வேறு பண்புகள் வளர்வதற்கும், மதிப்பு மிகுந்த அனுபவங்கள் ஏற்படுவதற்கும் தேவையான செயல்களை உருவாக்கித் தரவேண்டும். (2) மாணவர்களுக்கு முழுமையான அனுபவம் கிட்டுவதற்குரிய ஏட்டுக் கல்விப் பாடங்களும் பாட இணைச் செயல்களும் கல்வி ஏற்பாட்டில் இணைந்திருக்கவேண்டும். (3) கல்வி ஏற்பாடு செயல் நிறைந்ததாகவும் அன்றாட வாழ்க்கையோடு தொடர்புடையதாகவும் இருக்கவேண்டும். (4) பிற்கால வாழ்க்கைக்கு மாணவர்களை ஆயத்தம் செய்யவேண்டும் என்னும் கருத்தின் அடிப்படையில்தான் பல்துறைப் பாடங்களுக்குமான வாய்ப்புகள் ஏற்படுத்தப் படுகின்றன. (5) நமது நாட்டின் நாகரிகத்தையும், பண்பாட்டையும் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு அளிப்பதற்கான வசதி கல்வி ஏற்பாட்டில் இருக்கவேண்டும். ஏனெனில், கல்வியின் அடிப்படை நோக்கங்களில் ஒன்று சமூக மரபுரிமையை அடுத்து வரும் தலைமுறையினருக்கு அளித்தலாகும். இதை நிறைவு செய்வதற்காகத்தான் மொழி, இலக்கியம், கணிதம், அறிவியல், வரலாறு போன்ற பண்பாட்டியல் பாடங்கள் சேர்க்கப் படுகின்றன. (6) சூழ்நிலைக் கேற்பத் தங்களை மாற்றியமைத்துக் கொள்ளவும் கல்வி ஏற்பாடு மாணவர்களுக்குத் துணை புரிய வேண்டும். (7) சமூகத்தின் தேவையும், குழந்தையின் இயல்பு, மற்றும் கல்விக் குறிக்கோள்களையும் நிறைவு செய்வதாகக் கல்வி ஏற்பாடு அமையவேண்டும். (8) தொடக்கக் கல்வி நிலையிலிருந்து உயர்கல்வி நிலைவரை தொடர்ச்சியான தன்மையைக் கல்வி பெற்றிருக்கவேண்டும்.

(ii) **பாடப்பொருளைத் தேர்ந்தெடுக்க வேண்டியதின் அவசியம்** (The need for choice of materials)

கல்வி ஏற்பாட்டில் வரலாறு போன்ற சமூகப் பாடங்கள் இடம் பெறவேண்டும் என்பதைப் பார்த்தோம். அடுத்தபடியாக வரலாற்றுப் பாடத்தில் மாணவர்கள் கற்க வேண்டிய பாடப்பொருளைத் தேர்ந்தெடுப்பதில் ஒரு சில அம்சங்களை மனத்தில் கொள்ளவும் வேண்டும்.

(1) கற்பித்தலுக்குத் தேர்ந்தெடுக்கும் பொருள் வரலாறு கற்பிப்பதன் நோக்கங்களை நேரிடையாக வெளிப்படுத்தும் தன்மை பெற்றவைகளாக இருத்தல்வேண்டும். மாணவர்களின் அறிவு வளர்ச்சி, திறன், மனப்பான்மைகள் ஏற்ற முறையில் வளர்ச்சி பெறுவதற்கு உதவும் பாடப்பொருளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒவ்வொரு விவரமும், கல்விப் பயனுடையதாகவும் இருக்கவேண்டும். எடுத்துக்காட்டாகப் பின்வரும் குறிக்கோளைக் கூறலாம். தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பது கற்பிப்பதன் நோக்கமாக இருக்கவேண்டும் என்று நினைத்தால், மற்றைய இராச்சியங்களுடன் ஒத்துணர்வு மனப்பான்மை வளர்ப்பதற்கு வேண்டிய பாடப்பொருளைப் பாடத் திட்டத்தில் இடம் பெறச் செய்தல் அவசியமாகும். அவ்விதமே, பன்னாட்டு மனப்பான்மையை வளர்ப்பது நாம் வரலாறு கற்பிப்பதன் நோக்கமாகக் கொள்ளுவோமானல், பிற நாடுகளின் வரலாற்றுப் பாடப்பொருளைப், பாடத் திட்டத்தில் சேர்க்கவேண்டுமென்பதும் தெளிவானதாகும். சுருக்கமாகக்கூறுவோமாயின், வரலாறு கற்பிப்பதன் பலவித நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான பாடப்பொருளைப் பாடத் திட்டத்தில் இடம் பெறச்செய்வது இன்றியமையாததாகும்.

(ii) கற்றலில் தொடர்ச்சி இருக்கும் முறையில் உண்மைகள் (facts) இருக்கவேண்டியதாக உள்ளது. மனித இனத்தின் வளர்ச்சியைப் பல பாகங்களாக அமைத்துக் கற்க முடியாது. ஆதிகாலம் முதல் ஏற்பட்ட முன்னேற்றங்களை எடுத்துரைக்கும் முறையில் பாடப்பொருள் அமையவேண்டும். ஒரு தலைப்பில் அடங்கிய விவரங்கள் முன் தலைப்பிலுள்ள விவரங்களின் தொடர்பாக அமைதல் அவசியமாகும்.

(iii) ஒவ்வொரு வகுப்புக்கும் கற்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ள விவரங்கள் அந்த வயது நிலையிலுள்ள மாணவர்கள் கற்கும் தன்மை பெற்றதாகவும் (learnability), பயன் அளிப்பதாகவும் (utility) இருக்க வேண்டும். மாணவர்கள் என்ன கற்கவேண்டும், எவ்வளவு கற்க முடியுமென்பதையும் நாம் மனத்தில் கொள்ளவேண்டும்.

(iv) வளர்ச்சிக்கேற்பப் பழைய விவரங்கள் களையப்பெற்று, புதிய விவரங்களைச் சேர்ப்பதும் வேண்டப்படுகின்றது.

(v) கற்பிக்கப்பட வேண்டிய பாடப்பொருள் செங்குத்தான தாகவும், கிடையானதாகவும் (Vertical and horizontal articulation) உள்ள இணைப்பாக இருக்கும்படி அமையவேண்டும். ஒவ்வோர் ஆண்டிலும் கற்பிக்கப்படவேண்டிய பாடப்பொருள் முன் ஆண்டு கற்பித்த விவரத்தை ஒட்டியதாக இருப்பது அவசிய மானதாகும். இரண்டாவதாகக் கவனம்பெறவேண்டியது, ஒவ்வொரு வகுப்பிலும் கற்பிக்கும் பாடப்பொருள் யாவும், ஒன்றுபட்டதாகவும் ஒருமுகப்படுத்தப்பட்டதாகவும் இருக்கவேண்டும்.

(vi) நாம் கற்பிக்கத் திட்டமிடும் பாடப்பொருள் யாவும் நாட்டுப் பற்றையும், பன்னாட்டு மனப்பான்மையையும் வளர்ப்பன வாகவும், உலக சமாதானத்தை வலியுறுத்துவனவாகவும் இருக்க வேண்டும். ஒவ்வொரு நாடும் மனித இன வளர்ச்சிக்கு உதவிய பங்கையும், பண்பாட்டின் வளர்ச்சிக்கு அடிகோலிய இயக்கங் களும், வரலாற்றுப் போக்குகளும், அத் துறையில் செயலாற்றிய பெருந்தலைவர்களின் சாதனைகளும் பாடத் திட்டத்தில் இடம் பெறுவதை உறுதிபடுத்துவதாகவும் இருக்கவேண்டும்.

(vii) வரலாற்றுப் பாடத் திட்டத்தின்கீழ்க் கொடுக்கப்பட்ட வைகள் இடம் பெறவேண்டும். இவை பேராசிரியர் **மாரிஸ்-பி-மோவட்** என்பவரால் **மூன்று பிரிவுகளாக** வகுக்கப்பட்டுக் கூறப் பட்டுள்ளன. அவையாவன:

**(I) அறிவையொட்டிய பாடப்பொருள்** (Knowledge)

(i) கடந்த காலத்தின் சாதனைகளும், அவற்றோடு தொடர் புள்ள தற்கால நிகழ்ச்சிகளும் பிற்காலத்தில் நிகழ்வனவைகளும்;

(ii) சமூக, இயற்கைச் சூழ்நிலைகளுக்கும், மனிதனுக்கும் உள்ள தொடர்பும், சார்பு நிலையையும்;

(iii) ஆண்டு பூரரவும் தனது தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ள மனிதன் சூழ்நிலையோடு ஒட்டி வாழ்க்கை நடத்துதல்;

(iv) சமூகச் சூழ்நிலை, இயற்கைச் சூழ்நிலை போன்றவற்றைக் கொண்டு மனிதனின் குடும்பம், பள்ளி, சமூகம்பற்றிய பிரச்சினை களை ஆராய்தல்;

(v) தான் வாழும் பகுதியின் அனுபவத்தைக் கொண்டு இராச் சியம், தன் நாடு, பன்னாடு சார்ந்த பிரச்சினைகளை ஆராய்தல்;

(vi) நமது பண்பாட்டுக்கும், நாகரிக வளர்ச்சிக்கும் பல நாட்டு மக்கள் அளித்த தொண்டுகள்;

(vii) மக்களாட்சியும் அதனுல் மனித இனத்தில் நலமும் மகிழ்ச்சியும் ஏற்படுதல் பற்றிய செய்திகள்;

(iii) காலம், இடம் (time and place), மனிதன் இவற்றிற்கு இடையே ஏற்பட்டுள்ள தொடர்புகள்.

## (II) வரலாற்றுப் பாடம் கற்பிப்பதால் வளர்க்கக்கூடிய மனப்பான்மைகள் (Attitudes)

(i) இனம், நாடு, மதம் போன்றவைகளால் பாதிக்கப்படாமல் எல்லா மனித இனமும் சுதந்திரமாக வாழவும், களிப்படையவும், வாழ்க்கை நடத்தவும் உரிமையுடையவர்கள்.

(ii) மனித இனத்தின் நலனுக்கு எல்லா மக்களும் தொண்டாற்ற வேண்டும்.

(iii) மக்களிடத்தில் காணப்படும் எல்லாப் பிரச்சினைகளைப் பற்றியும் எல்லாரும் சிந்தித்துத் தீர்க்க முயலும் மனப்பான்மை.

(iv) எல்லா மக்களின் விழிப்புணர்ச்சியால், மக்கள் ஆட்சியினுல் ஏற்படும் இடையூறுகளை நீக்கி நல்வழியில் அம்முறை இயங்கிவரப் பணி புரிதல்.

## (III) வரலாற்றுப் பாடத்தின்மூலம் வளர்க்கவேண்டிய திறன்களும், திறமைகளும் (Skills and abilities)

(i) ஆய்வு சிந்தனை கொண்டு பிரச்சினைகளைத் தீர்த்தல்.

(ii) குழுமுறை உரையாடலில் கலந்துகொள்ளுதல்.

(iii) குழுவாகக்கூடி, திட்டமிட்டு அதன்படி தலைவர்களின்கீழ் செயலாற்றுதல்.

(iv) தேவைப்படும் கருத்துகளையும், பாடப்பொருளையும் கொண்டு செயலாற்றுதல்.

(v) கருத்துகளையும், பாடப்பொருளையும் மதிப்பிடுதல்.

(vi) சான்றுகளைக் கொண்டு கருத்துகளை அமைத்தல்,

(vii) கடந்த காலத்தோடும், தற்காலத்தோடும் தொடர்புள்ள பண்பாட்டின் தன்மையை அனுபவித்தலும், பாராட்டுதலும்.

(viii) பள்ளியிலும், சமூக வாழ்க்கைக்லும் மக்கள் முன்னேற்றத்திற்கும், நலனுக்கும் உதவும் செயலில் ஈடுபடுதல்.

எனவே, வரலாற்றுப் பாடத்தில் மேற்கூறியவற்றைச் சாதிக்க வல்ல பாடங்களும், அனுபவங்களும், செயல்முறைகளும் இடம் பெறுதல் வேண்டும். இதுவேதான் பொதுப்படையாக 'மனிதத் தொடர்பு உடைய பொருளும், அனுபவங்களும்' என்று வழங்கப்படு கின்றன. இவற்றைப்பற்றி விவரித்துக் கூறுவதுதான் வரலாற்றுப் பாடம் என வழங்கும்.

**(iii) விரிவான பாடத்திட்டம் இருக்க வேண்டியதின் அவசியம்**
(Need for a detailed study of the syllabus of studies)

வரலாற்றுப் பாடத்தில் மாணவர்கள் கற்க வேண்டிய பாடப் பொருள்கள் யாவை என்பதைத் திட்டம் செய்ததும், அவற்றைத் தரப்படுத்த வேண்டும். வரலாற்றின் தொடர்ச்சியைப் பின்பற்ற 'சுருள்வட்ட முறையும்', 'பகுதி முறையும்' பாடத் திட்டம் அமைக்கும் முறைகளில் சிறப்பானவைகளாகும்.

பாடத் திட்டத்தின் அம்சங்களில் நான்கு சிறப்பானவை களாகும். அவையாவன:

(1) அறிவுத்திரட்டல் (Acquistion of knowledge)

(2) மாணவர்களிடம் வளர்க்கக் கூடிய மனப் பான்மைகள் (Development of attitude)

(3) வளர்க்கவேண்டிய ஆற்றல்களும், திறன்களும், (Development of abilities, skills)

(4) மாணவர்கள் ஈடுபடும் செயல்முறைகள்.

பாடத்திட்டத்தில் குறிப்பிட்டவாறு நோக்கம், செய்திகள், வளர்க்கவேண்டிய மனப்பான்மைகள், திறன்கள், ஆற்றல்கள், செயல்கள் (activities) இவற்றைத் தெளிவுபடுத்திக் கூறவேண்டும்.

தொடக்கப் பள்ளியின் மூன்றுவது வகுப்பு முதல் எட்டாவது வகுப்பு வரை ஒரு தொடர்ச்சியான பாடத்திட்டமும் தனித்தனியாக அமைத்திட ஆசிரியர்கள், கல்வி நிபுணர்கள் அடங்கிய குழு முற்படும்.

ஒவ்வொரு வகுப்புக்கும், வாரத்திற்கும் எத்தனைப் பிரிவேளைகள் வரலாற்றுப் பாடத்திற்கு அளிக்கப்படுகின்றன; ஆண்டின் வேலை நாள்கள் போன்றவற்றை மனத்தில் கொண்டு பாடத்திட்டம் அமைத்திடுவர். ஒவ்வோர் ஆண்டிலும் கற்பிக்கவேண்டியவற்றை வகுப்புவாரியாக அமைத்திடுவர்.

முதலாவதாக, அறிவுச் செய்திகள் எத்தனை அலகுகளாக (units) இருக்கவேண்டுமென்பதைத் திட்டமிடுவர். ஒவ்வோர் அலகிலும் கற்பிக்கவேண்டிய செய்திகளை விவரமாகத் தெளிவு படுத்தவேண்டும். எடுத்துக்காட்டாகப் பத்தாவது வகுப்பிற்கு 'அடிமை வமிசம்' என்ற அலகிற்கு எவ்வளவு செய்திகள் கற்பிக்க வேண்டுமென்பதை விரிவு படுத்திக் குறிப்பிடவேண்டும். 'குத்புதீன்—(கி.பி. 1206—1210) அடிமை—சுல்தான் பதவிபெறுதல் —ஆல்டாமிஷ் (கி.பி. 1211—36)—மங்கோலியர் படையெடுப்பு—செங்கிஸ்கான்—ஆல்டாமிஷின் வெற்றிகள்—குதுப்மினர்—சுல்தானு ரஸியா (கி.பி. 1236—40)—பகராம்—மூஸாத்—பால்பன்—முதல மைச்சர்—பிரபுக்களை அடக்குதல்—துக்ரில் கலகம்—பால்பனின் சாதனைகள்—அடிமை வமிச முடிவு.'

ஒவ்வோர் அலகு பற்றிய செய்திகளைக் கற்பிப்பதன் நோக்கம் என்ன என்பதைத் தெளிவு படுத்தியிருப்பதோடு, அச் செய்திகளைக் கற்பிப்பதால் மாணவர்களிடம் எதிர்பார்க்கும் மாற்றங்களைப் பற்றியும் தெளிவுறுத்தவேண்டும். வரலாற்று விவரங்களைக் கற்பிக்கும் காலத்தில் மாணவர்கள் பின்பற்ற வேண்டிய செயல் முறைகளைப் பற்றியும் கூறவேண்டும். இவ்விதம் கற்பிக்க ஒவ்வோர் அலகுக்கும் ஒதுக்க வேண்டிய பிரிவேளைகளும் திட்டமிட்டிருக்கவேண்டும்.

ஆசிரியர்கள் பாடத் திட்டத்தில் குறிப்பிட்டவாறு ஒவ்வோர் அலகிலும் விவரித்துள்ள தலைப்பின்கீழ்ப் பாடப் பொருள்களை (materials) பல முறைகளைப் பின்பற்றிக் கற்பிக்க முற்படுவர். அச் செய்திகளை நல்ல முறையில் கற்பதற்கு ஏதுவாகச் செயல்களை (activities programmes) மாணவர்களுக்கு அளித்திடல் வேண்டும். ஒவ்வோர் அலகுக்கும் உரிய செய்திகளைக் கற்பிப்பதன் நோக்கமும், மாணவர்களிடம் வளர்க்கக் கூடிய மனப்பான்மைகள், திறன்கள், ஆற்றல்கள் பற்றிய விவரங்களும் பாடத்திட்டத்தில் இடம்பெறும். வரலாற்றுப் பாடப் பொருள்களை இவையே சிறப்பானவைகள் என்பதையும் இவற்றில் ஆசிரியர்கள் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறவேண்டும்.

**வினாக்கள்**

(1) கல்வி ஏற்பாட்டை உருவாக்கும்போது நாம் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகள் யாவை?

(2) வரலாற்று விவரங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியதின் அவசியத்தை விவரிக்கவும்.

(3) விரிவான பாடத்திட்டம் இருக்கவேண்டியதின் முக்கியத் துவத்தை விளக்குக.

**(ஆ) வரலாற்றின் வகைகள்** (Kinds of History)

(1) **உள்ளூர் வரலாறு** (Local History)

மாணவர்களுக்கு அருகிலுள்ள இடங்களின் வரலாற்றுச் செய்திகள், நாட்டு வரலாற்றைவிட அதிகமாக வரலாற்றுக் கருத்தை அளிப்பதோடு, அவை உண்மையான நிகழ்ச்சிகள் பற்றியவை என்ற எண்ணமும் ஏற்படுத்த முடியுமென்று அநேக ஆசிரியர்கள் கூறுகின்றார்கள். மாணவர்கள் அருகிலுள்ளதைப் பற்றி முதலில் தெரிந்துகொள்ளட்டும்; பிறகு கொஞ்சம், கொஞ்சமாகக் கடந்த காலத்தைப் பற்றிய செய்திகளையும், வெகு தொலைவிலுள்ள இடங்களில் நிகழ்ந்தனவற்றையும் கற்றுக்கொள்ள முற்படலாம் என்பன அன்னார் கருத்து. உள்ளூர் வரலாறு தொடக்கப் பள்ளியிலும், நாட்டு வரலாறு இடைநிலைப்பள்ளி வகுப்புகளிலும், உலக வரலாறும், ஆங்கில நாட்டு வரலாறும் உயர்நிலைப்பள்ளி வகுப்புகளிலும் கற்பிக்கப் படலாம்.

உள்ளூர் வரலாற்றைக் கற்பிக்க வேண்டுமென்று கூறுகின்றவர்களின் கருத்துப்படி அண்மைக்கால வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றிய விளக்கங்கள் மாணவர்களுக்குத் தெளிவாக இருக்குமென்பதாகும். இந்தக் கருத்தை ஆதரிப்பவர்கள் தொடக்கநிலையில் உள்ளூர் வரலாறு கற்பிக்கவேண்டுமென்று கூறுகின்றனர். பள்ளிக்கூடத்தின் சுற்றுப்புறத்திலுள்ள வரலாற்றுச் சின்னங்களை நன்கு புரிந்துகொள்வார்கள் என்றும் கூறுகின்றனர். இவ்விதமாக வரலாறு காட்சிப் பொருளாக (Concrete) மாறுகின்றது. இக்கருத்தை நாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. இவ்விதமான வரலாற்றுச் சின்னங்களின் தன்மைகளை விளங்கிக்கொள்ளும் திறன் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு ஏற்படுவதற்கில்லை. ஆசிரியை பர்த் (Firth) சொல்வதை நாம் ஏற்றுக்கொள்ளலாம். 'பள்ளிக்குச் செல்லும் வழியில் காணும் கட்டடங்களைப் பற்றிய அனுபவம் எட்டு வயதுக்குக் குறைந்த மாணவர்களுக்கு நாம் நினைப்பதைவிட மிகவும் குறைந்த நிலையில் இருக்கும். தொல்பொருள் ஆய்வாளர்களுக்குப் பழைய சின்னங்களில் ஏற்படும் ஆர்வம் பள்ளிச் சிறுவர்களிடம் எதிர்பார்க்க முடியுமா? சின்னங்களைப் பார்ப்பதைவிட அருகிலுள்ள மோட்டார் கார்களில் ஆர்வம் அதிகமாகக் காணப்படும். அவனது வீடு ரோமானியர் கட்டிய சுவற்றின் மீது கட்டப்பட்டிருந்தாலும், அதுபற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்ள முற்படமாட்டான். ஆனால், செயின்ட் ஜார்ஜ், வேதாளம் (Dragon) போன்றவர்களைப்பற்றித் தெரிந்துகொள்ள நாட்டமுடையவனாக இருப்பான்.' கடந்த காலத்தைப்பற்றித் தெரிந்துகொள்வதற்கு உள்ளூர் வரலாறு அறிமுகமாக இருப்பதற்குப் பதிலாக, ஒவ்வொரு நிலையிலும் விளக்கம் தருவதற்குப்

பயன்படுத்த உதவும். உள்ளூர் வரலாற்றைத் தனி வரலாருகவும், நாட்டு வரலாற்றுக்குப் பதிலாகவும் தொடக்கப்பள்ளி நிலையிலும் நாம் கற்பிக்கவேண்டியதில்லை. ஆனுல் நாட்டு வரலாற்றுக்குத் துணையாகவும் (auxiliary), அதற்கு விளக்கம் கூறும் அளவிலும் உள்ளூர் வரலாற்றைக் கற்பிக்கவேண்டும் என்பதே ஆசிரியை பர்த் அம்மையார் கூறுவதின் சுருக்கமாகும். நாட்டிலுள்ள ஒவ்வொரு பகுதியும் ஏதாவதொரு வகையில் வரலாற்று இயக்கம் அல்லது நிகழ்ச்சியோடு தொடர்புடையதாயிருக்கும். பின்வரும் எடுத்துக்காட்டை இங்கு நாம் திரும்பக் கூறலாம்:

இங்கிலாந்து நாட்டு வரலாறு கற்பிக்கும் பொழுது, ஆக்ஸ் போர்டு நகரிலுள்ள ஓர் ஆசிரியர் நாட்டு வரலாற்றின் நிகழ்ச்சி களுக்கு ஆதரவாக உள்ளூர்பற்றிய செய்திகளைக் கூற முடியும் என்ற எடுத்துக்காட்டை நாம் இங்குக் குறிப்பிடலாம். **ஆங்கிலோ சாக்ஸானியர்கள்** (Anglo-Saxons) காலத்தில் ஆக்ஸ்போர்டு ஒரு சிறு கிராமமாக இருந்தது; **எத்தெல்ரெட்** (Ethelred) அரசர் காலத்தில் **டேனர்கள்** (Danes) படையெடுப்பால் அந்தர் கிராமம் எவ்வாறு பாதிக்கப்பட்டதென்பதையும், நில உடமைக் கணிப்பேடு (Domesdey Book) காலத்தில் எவ்வித நிலையில் இருந்தது என்றும், அந்தக் கிராமம் உரிமைச் சாஸனம் எப்பொழுது பெற்று ஒரு நகர மாக வளர்ந்தது என்றும்; மூன்ரும் ஹென்றி அரசர் காலத்தில் அஃது எவ்வாறு பல்கலைக் கழகத்தின் இருப்பிடமாக மாறியது என்றும் ஆசிரியர் கருத்துக்கூற இயலும். இவ்வாறு நாட்டு வரலாறு கற்பிப்பதற்கு உள்ளூர் வரலாறு ஒரு துணைக் கருவியாகப் பயன்படுகிறது. இம் முறையினுல் நாட்டு வரலாறு இளம் மாணவர் களுக்கு தெளிந்த அனுபவங்கள் அளிக்கும் வகையில் உதவியாக இருக்கின்றது என்பதை நாம் நன்கு உணரலாம். நாட்டு வரலாறு வெகு தொலைவில் நடக்கும் நிகழ்ச்சிகள் அல்ல என்பதையும், நாட்டு வரலாற்றைத் தொடக்கப்பள்ளி மாணவர்கள் நன்கு தெரிந்துகொள்வதற்கும், உள்ளூர் வரலாறு நாட்டு வரலாற்றுடன் இணைத்துக் கற்பிக்கவேண்டும். ஆசிரியர் **ஹாஸ்லக்** (Hasluk) கூறுவதுபோல் உள்ளூர்ச் சம்பவங்கள் மிகச்சிறிய அளவினை உடை யதாக இருப்பினும், நாட்டு வரலாற்றை உயிருள்ளதாக்குவதற்கும், அதன்பால், மாணவர்களுக்கு ஒரு தனி ஆர்வத்தையும், கவர்ச்சி யையும் ஏற்படுத்துவதற்கும் உள்ளூர் வரலாறு உதவுகின்றது. உள்ளூர் வரலாற்றை ஒரு தனிப் பாடமாகக் கற்பிப்பதைவிட, நாட்டு வரலாற்றுடன் இணைத்துக் கற்பிக்கும் பொழுது இவ்விதப் பலன்களைப் பெற முடியும் என்பதை நாம் உணரவேண்டும்.

கவர்ச்சியினை அளிக்கும் உட்கதைகளும், வீரமிக்க தலைவர் களும், உள்ளூர் வரலாற்றுடன் தொடர்புள்ளவர்களைப் பற்றிய

வரலாற்று விவரங்களையும் நாம் சேகரிக்க இயலாது. பள்ளியின் அருகிலுள்ள பகுதிகளைப் பற்றிய வரலாற்று நிகழ்ச்சிகளையும், தலைவர்களையும் நாம் எல்லாப் பகுதிகளிலும் காண இயலாது. ஒரு பெரும் பகுதியினைப் பற்றிய வரலாற்றை எழுத வேண்டுமானால், அதுபற்றிய விவரங்கள் கிடைக்கக்கூடும். எடுத்துக்காட்டாக, பெண்ணையாற்றுக்குத் தென்புற நாடுகளைப்பற்றிய வரலாற்றை எழுத முற்பட்டால், அதுபற்றிய செய்திகளைச் சேகரிக்க முடியும். அந் நிலையிலும் சில இடங்களைப் பற்றித்தான் கோவையாகக் கால வரிசையைப் பின்பற்றிய செய்திகளைத் திரட்ட இயலும். எடுத்துக் காட்டாக, மதுரை, தஞ்சாவூர், காஞ்சிபுரம் போன்ற நகரங்களைப் பற்றிய உள்ளூர் விவரங்களை நாம் பெறமுடியும். அவ்வூர்களைப் பற்றிய வரலாற்றிலும் பண்டைக் காலம் முதல் தற்காலம் வரை யிலும் கோவையாகச் செய்திகளைக் கொண்ட கதைகளைத் தேர்ந் தெடுப்பது மிகவும் கடினமான செயலாகும் மாவட்ட வரலாறு பற்றிய புத்தகங்களை நாம் படித்துப் பார்த்தோமானால் இது பற்றிய உண்மை நன்கு விளங்கும். பல அரசர்களைப்பற்றிய அட்டவணை யாகத்தான் மாவட்ட வரலாறுகள் அமைந்துள்ளன. ஒரே வித செய்திகளும், அரசர்களின் பெயர்களும் திரும்பத் திரும்பக் கூறி யிருப்பதை நாம் கவனிக்கவேண்டும். இந்தக் குறைபாட்டினை இங்கிலாந்து நாட்டில் வழக்கிலுள்ள உள்ளூர் வரலாற்று நூல் களிலும் நாம் காணலாம்.

உள்ளூர் வரலாறும், நாட்டு வரலாறும் ஒருங்கிணைந்த முறையில் நமது தொடக்கப்பள்ளிகளில் பின்பற்ற வேண்டுமென்ற முடிவை நாம் ஏற்றுக் கொள்வது சிறப்பான முறையாகும். நாட்டு வரலாற்றின் பின்னணியாக (back ground) உள்ளூர் வரலாறு அமையவேண்டும். தொடக்கப் பள்ளியில் மூன்று, நான்கு வகுப்பு களில் சுருள் வட்ட முறையில் (spiral plan) உள்ளூர் விவரங்களைச் சீரமைத்துக் கதைகள்மூலமாக நாம் கற்பிக்கலாம். மூன்றுவது வகுப்பில் கற்காலம், மேய்த்தல் தொழிலை மேற்கொண்ட காலம், இந்திய வரலாற்றின் முற்பகுதி பற்றிய செய்திகளடங்கிய நாட்டு வரலாறும், எவ்விதம் கற்பிக்கத் திட்டமிடலாம் என்பதைக் கவனிப் போம். நாம் தேர்ந்தெடுக்கும் கதைகள் நாட்டு வரலாறு பற்றிய தாகவும், உள்ளூர் வரலாறு பற்றியதாகவும் இருக்கவேண்டும். ஒவ்வொரு காலத்தையும்பற்றிய கதைகளில், ஒன்று நாட்டு வரலாறு பற்றியதும், மற்றொன்று உள்ளூர் வரலாறு பற்றிய தாகவும் இருக்கும்படி அமைத்திட வேண்டும். எடுத்துக் காட்டாகப் பின்வரும் கதைகளைக் கூறலாம். மகாபாரதம், இராமாயணம், ஹரிச்சந்திரன், சிபிச்சக்கரவர்த்தி, அசோகர், சந்திரகுப்த மௌரியர், விக்கிரமாதித்தர் போன்ற அரசர்கள்

பற்றிய கதைகளும்; உள்ளூர் வரலாற்றைச் சார்ந்த கதைகள்—கோவலன் போன்ற உள்ளூர் பள்ளி இருக்கும் இடத்தைப் பற்றிய கதைகளையும் நாம் சேர்த்துக் கற்பிக்கவேண்டும். நான்காவது வகுப்பில், வடஇந்திய வரலாறு பற்றிய கதைகள் (ஹர்ஷர், இராஜ புத்திர அரசர்கள், டெல்லி சுல்தான்கள்), உள்ளூர் வரலாற்றைச் சார்ந்த கதைகள்—(எடுத்துக்காட்டாக ஆழ்வார்கள், நாயன்மார்கள்புற்றிய கதைகள், பல்லவ அரசர்கள், சோழ அரசர்கள், இராமாநுஜர், ஹோய்சல அரசர்கள், விஜயநகர அரசர்கள்) சேர்த்து நாம் கற்பிக்கப் பாடத்திட்டம் அமைக்கவேண்டும். இவ்விதமாக ஐந்தாவது வகுப்புக்கு, மொகலாய அரசர் பாபர் முதற்கொண்டு, தற்காலம் வரையிலும் உள்ள நாட்டு வரலாற்றுக் கதைகளும், உள்ளூர் வரலாற்றுக் கதைகளும் இடம் பெறவேண்டும்.

**உள்ளூர் வரலாறு பற்றிய செயல்முறைகள்**

உள்ளூர் வரலாறு கற்பிப்பதன் சிறந்த நோக்கம் மாணவர்களுக்கு வரலாறு கற்பதில் ஆர்வத்தை ஏற்படுத்தவும், வரலாறு நிகழ்ச்சிகள் யாவும் உண்மை என்பதனையும், தங்கள் சமூகமும், முன்னோர்களின் வாழ்க்கையும் எவ்வாறு பயனடைந்தன என்பதையும் மாணவர்களுக்கு எளிய முறையில் கற்பித்தலும் ஆகும். நாட்டு வரலாற்று நிகழ்ச்சிகளை ஒளிப்பெறச் செய்யவும், விளக்கம் தருவதற்கும் (illustrate and illuminate) உள்ளூர் வரலாறு துணை புரிகின்றது.

உள்ளூர் வரலாறுபற்றிய கதைகளையும், நிகழ்ச்சிகளையும் ஆசிரியர் வாய்மூலம் கற்பிக்கும்பொழுது பின்வரும் செயல்முறைகளைப் பின்பற்ற முற்படவேண்டும்.

(i) பள்ளிக்கு அருகிலுள்ள வரலாறுபற்றிய சின்னங்கள் காணப்படும் இடங்கள், கோட்டைகள், கோவில்கள் போன்றவைகளைப் பார்ப்பதற்கு மாணவர்களைக் கல்விப் பயணமாக அழைத்துச் செல்லவேண்டும். வெளிப்பயணம் முடிவடைந்ததும் மாணவர்கள் பார்த்து வந்த கட்டடங்களின் வரைபடங்கள் தயாரித்தல், கட்டுரை எழுதுதல் போன்ற பயிற்சிகள் தரவேண்டும்.

(ii) தங்கள் ஊரிலுள்ள தெருக்களின் பெயர்கள், அருகிலுள்ள முக்கிய நகரங்கள், அவற்றின் பெயர்கள் எவ்வாறு ஏற்பட்டன என்றும் அவை எவ்விதம் வளர்ச்சியடைந்தன என்பதைப் பற்றியும் மாணவர் கற்கவேண்டிய பயிற்சிகளைக் கொடுக்கவேண்டும். எடுத்துக்காட்டாக, சென்னை, பம்பாய், கல்கத்தா நகரங்கள் எவ்வாறு வளர்ச்சி அடைந்துள்ளன என்றும்,

பழமை மிகுந்த நகரங்களாகிய பீஜப்பூர், கோல்கொண்டா, குல்பர்கா போன்றவைகள் எவ்வாறு சீரழிந்தன என்பதை ஆராய் வதற்கு மாணவர்களைத் தூண்டுதலும் நடைபெறலாம். இந்தச் செயல் முறை மேல் வகுப்பு மாணவர்களுக்கு ஏற்றதாகும்.

## (ii) நாட்டு வரலாறு (National History)

### (அ) நாட்டு வரலாறு — உலக வரலாற்றின் ஒரு பகுதி

வரலாற்றின் வகைகள் என்று கூறும்பொழுது நம் கவனத்தில் இடம்பெற வேண்டியது ஒன்றுகும். இந் நிலப் பரப்பில் மனித இனம் அடைந்த மாறுதல்களைக் கூறும் முழு விவரமே வரலாறு என்று நாம் முன்பே படித்துள்ளோம். அதுவே உலக வரலாறு என்றும், சமூக வரலாறு என்றும் வழங்கப்படுகின்றது. மனித இனத்தின் ஒரு புறத்தின் வளர்ச்சியைப்பற்றி மட்டும் அறிய நாம் முயலுவதில்லை. எல்லாவிதமான வளர்ச்சிகளையும், எல்லாக் காலங் களிலும் நடந்த நிகழ்ச்சிகளையும் நாம் கற்பிக்கவேண்டியதாக உள்ளது. அதுவே நமது நோக்கமாகவும் இருக்கவேண்டும். ஆனல், பள்ளிக்கூட ஆண்டுகளில் உலகச் செய்திகள் யாவற்றையும் நம்மால் கற்பிக்கமுடிவதில்லை. மாணவர்களின் வயது, நாட்டம், மன வளர்ச்சிக்கு ஏற்ப விவரங்களைத் தொகுக்க வேண்டியதாக இருக்கின்றது. எனவே, கற்பிக்க வேண்டிய வரலாற்றுச் செய்தி களைப் பல பகுதிகளாகப் பிரித்துக் கற்பிக்க முயல்கின்றோம்.

வரலாற்றுப் பாடத்திட்டத்தில் நாட்டு வரலாறு முக்கிய இடத் தைப் பெறுகின்றது. உலக வரலாற்றைவிட நம் நாட்டு வரலாறு நமது வாழ்க்கையுடன் தொடர்புகொண்டு இணைந்துள்ளது. நம் நாட்டில் நிகழும் எந்த நிகழ்ச்சியும் நேர்முகமாகவோ, மறைமுக மாகவோ நம்மைப் பாதிக்கும். நாட்டின் கடந்தகால வரலாற்றின் அடிப்படையிலேயே நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. எனவே, நம் நாட்டு **'இக்கால நிகழ்ச்சிகளைப்** (Present happenings) புரிந்துகொள்வதற்கு நம் நாட்டு வரலாறு இன்றியமையாதது. உலக வரலாற்றைவிட நாட்டு வரலாற்றைத் தெரிந்து கொள்வது எளிமையானதாகும். நாட்டு வரலாற்றில் அந் நாட்டில் நடந்த நிகழ்ச்சிகள் இடம்பெறவேண்டுமென்ற கொள்கையின் அடிப்படை யில் நிகழ்ச்சிகள் தொகுக்கப்படுகின்றன. உலக மக்களில் ஒரு சிறிய பகுதியினரே கவனம் பெறுகின்றனர். மற்றைய நாட்டு மக்களின் விவரங்கள் நாட்டு வரலாற்றின் வரம்பில் அடங்குவ தில்லை. மேலும், நாட்டு வரலாற்றைத் தனியாகக் கற்றுக் கொடுக்காமல் உலக வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு கற்பிக்கவேண்டும்.

**(ஆ) நாட்டு வரலாற்றை ஏன் கற்பிக்க வேண்டும்?** (Why should we teach National History?)

(i) நாட்டு வரலாற்றினைப் படிப்பதன் வாயிலாக, மனித குலத்தின் உயரிய தத்துவங்களை நாம் எத்துணை இடுக்கண்கள் வந்தபோதிலும் இடையருது கடைப்பிடித்து வருகின்றோம் என்பது வெள்ளிடைமலை. அயலவர் படையெடுப்பாலும், புற மாற்றங்களாலும் நாம் நம்முடைய உயரிய தத்துவங்களை, கோட்பாடுகளை இழந்துவிடவில்லை. நம்முடைய உயரிய சித்தாந்தங்களும், கோட்பாடுகளும் புறத்தாக்குதல்களால் அழிக்கப்படாமல் போனதோடு, நாம் புறச்சக்திகளை — கோட்பாடுகளை — வென்றதோடல்லாமல், அவற்றைச் செரித்தும் இருக்கிறோம். இந்தியர்கள் எதையும் தாங்கும் இயல்பையும், தமதாக்கிக்கொள்ளும் சிறந்த பண்பையும் பெற்றுள்ளனர்.

(ii) அலைமேல் அலைபாய்வதுபோல் இந்தியாவின்மீது பல நாட்டவர், இனத்தவர் படையெடுப்புகளை நடத்தியும், இந் நாட்டு மக்களின் பெரும்பான்மையோரின் கலாச்சாரம் சிந்தாமல், சிதையாமல் கட்டிக் காக்கப்பட்டு வருகிறது. அத்துடன் இந்து கலாச்சாரம் புதிய பொலிவினையும், ஏற்றத்தினையும் பெற்றதென்றால் மிகையாகாது. முஸ்லிம் ஆட்சியின் உச்சக் கட்டத்தில் பூத்த நறுமலர்கள்தான் கபீர்தாஸும், இராமானந்தரும், மீராவும், துளசிதாஸரும் ஆவார்கள். அதைப்போலவே, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆட்சி இந்தியாவில் நடைபெற்றபொழுதுதான் இராமகிருஷ்ண பரமஹம்ஸரும், விவேகாநந்தரும், இராமலிங்க அடிகளும், இறுதியாகக் காந்தியடிகளும் இந்தியப் பண்பாட்டைக் காக்கும் கரங்களாக, உலகிற்கு எடுத்தியம்பும் பேரிகைகளாக விளங்கினார்கள்.

(iii) அடுத்து, கிராமியவாழ்வு இந்தியாவில் எக் காலத்திலும் தொய்வு உறாது, ஆயிரமாயிரம் ஆண்டுகளாகக் கிராமமே இந்திய சமுதாயத்தின் அடிப்படையாக விளங்கி வருவதைக் காணலாம். கிராமங்கள் அன்றுதொட்டு இன்றுவரை, எத்துணையோ படையெடுப்புகளும், ஆட்சிகளும் தோன்றி மறைந்த போதிலும், அமைதியின் உறைவிடங்களாய், சுதந்திரத் தனித்தன்மையையும் தனிவாழ்க்கையும் இழக்காமல் விளங்கி வருவதை இன்றும் காணலாம்.

(iv) அடுத்து, அனைத்து இந்தியாவிலும், சிற்சில மாறுபாடுகளோடு ஒரு பொது அடிப்படை நியதி தொன்று தொட்டு — ஆரியர்களின் வருகை முதல் ஆங்கிலேயர் ஆதிக்கம் முடிய — நிலவி

மக்களை இணைத்து வந்திருக்கின்றது என்பது மறைக்க முடியாத, மறுக்க முடியாத அம்சமாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்திய மக்கள் மேலைநாட்டு இலௌகீகத்திற்கு இடமளியாது, துன்பத்திலும், துயரத்திலும் எதிர் நீச்சல் போட்டு வந்துள்ளார்கள் என்றால், அதற்கு இந்தியர்களின் ஆன்மீக பலமே காரணமாகும். இந்தியர்களின் ஆன்மீக உணர்வே இந்தியர்கள் அனைவரையும்—அவர்கள் மொழியால், மதத்தால், நிறத்தால், இடத்தால் மாறுபட்டு இருந்தபோதிலும் — ஒன்றாக ஒரே மக்களாக இணைத்து வைத்திருக்கின்றது என்பதை இந்திய வரலாற்றினைக் கற்போர் அனைவரும் உணர்வர். இத்தகைய இழையோடும் ஒற்றுமை உணர்வையே இந்திய வரலாறு வலியுறுத்துகின்றது. தத்துவம் விளக்கும் அனுபவமே வரலாறு என்று கூறப்படும். ஒருவன் தன்நாட்டு வரலாற்றினைப் படிக்கும் போது, அது பல நிகழ்ச்சிகளின் தொகுப்பாக—சாரமாக— விளங்குவதைக் காணலாம்.

(v) தன் நாட்டு வரலாற்றினைப் படிப்பதன் வாயிலாகவே, ஒருவன் வரலாற்று உணர்வு பெற்றவனாக விளங்கமுடியும். எத்துணையோ நிகழ்ச்சிகள்—உடல் சிலிர்க்கும் நிகழ்ச்சிகள்—இந்த மண்ணில் நிகழ்ந்திருந்தும், அதைப் பெரும்பான்மையான இந்தியர்கள் உணராமல் போனதற்குக் காரணம் இந்தியர் களிடையே வரலாற்று உணர்வு இல்லாமல் போனதே ஆகும். ஆதலால், ஒருவன் தன்நாட்டு வரலாற்றினை உணர்ந்திருப்பது எவ்வளவு முக்கியம் என்பதை உணரலாம். பல தனி மனிதர் களின் வாழ்க்கை வரலாற்றின் சாரமே ஒரு நாட்டின் வரலாறு ஆகும். ஆனால், நம் மக்கள் அந்த நீண்ட நெடிய வரலாற்றில் நெஞ்சில் நிற்கக் கூடிய நிகழ்ச்சிகளையும், சான்றோர்களையும், வீரர் களையும் செவிவழியாக—காவிய வடிவாகப்—போற்றிப் புகழ்ந்து வந்துள்ளனர். இல்லையெனில் இராமரையும், கிருஷ்ணரையும், கரிகாலனையும், இராஜராஜனையும், செங்குட்டுவனையும், போஜ ரையும், அசோகரையும், விக்கிரமாதித்தரையும் நாம் மறந்தே போயிருப்போம். எத்துணையோ வரலாற்றுச் சம்பவங்களை இந்தியர்கள் மறந்திருந்த போதிலும், இவர்களை மறக்கவில்லை.

(vi) தேசிய வரலாற்றினைக் கற்பிப்பதன் நோக்கம் மாறிக் கொண்டே வருகின்றது. இது தவிர்க்க முடியாத ஒன்றாகும். அறிவியல் உலகில் நாம் வாழ்கின்றோம். சந்திரமண்டலம் சென்று கண்டு தெளியும் காலத்தில் நாம் வாழ்கின்றோம். அறிவியல் காலத்தையும், தூரத்தையும் வென்று உலக மக்கள் அனைவரையும் ஒரே குடும்பமாக ஆக்கிக்கொண்டு வருகின்றது.

மேற்கு ஐரோப்பாவில், தேசிய அரசுகள் தோன்றிய காலத்தில் தன்நாட்டு வரலாற்றினைப் படிப்பது, மற்ற நாடுகளைவிட தன்நாடு எவ்வகையில் எல்லாம் உயர்ந்திருக்கிறது என்பதை உணர்த்துவதற்காகவே அமைந்திருந்தது: அக்காலத்தில் தன்நாட்டு வரலாற்றினைப் படிப்பது ஒரு புனித காரியமாகக் கருதப்பட்டது.

ஆனால், பின்னர் உலகில் நடந்த ஆதிக்கப் போட்டிகளும் — ஆவணப் போராட்டங்களும், எல்லாவற்றிற்கும் மேலாக இருபெரும் உலகப் போர்களும், மக்கள் மனத்தில், 'உலக மக்கள் அனைவரும் வாழ்ந்தால் ஒன்றாக வாழ்வது, வீழ்ந்தால் ஒன்றாக வீழ்வது' என்ற உணர்ச்சியைப் பலப்படுத்தியுள்ளது. அதன் விளைவாகத் தேசிய வரலாற்றினைப் படிப்பதுபற்றிய மாறுபட்ட கருத்து ஓங்கி நிற்க ஆரம்பித்துள்ளது. 'தேசிய வரலாற்றினைப் படிப்பது' கலப்பற்ற சாபக்கேடு என்று ஒரு சிலரால் கருதப்படுவதும் உண்டு. ஆனால், உண்மை இந்த இரு தீவிர வாதங்களுக்கும் இடையே அமைந்துள்ளது.

தேசிய வரலாற்றினைப் படிப்பதன்மூலமே ஒருவன் தன் நாட்டின் பெருமையினை உணரவும், தன் நாட்டு மரபினைக் கட்டிக் காக்கவும் முடியும். அதன்மூலமே தங்களின் தேசிய உணர்வுகளையும், ஒழுக்கத்தையும் காப்பாற்றிக்கொள்ளமுடியும். தேச வரலாறே நெருக்கடியின்போது மக்களைத் தியாக வாழ்விற்கு இட்டுச்செல்ல முடியும்.

சான்றாக, இருபெரும் போர்களால் அடியோடு அழிந்துபோன ஜெர்மனி இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றது என்றால், அந் நாட்டு மக்கள் தன்நாட்டின் புகழ்மிக்க வரலாற்றினைக் கற்றிருப்பதால் ஏற்பட்ட விழுமிய பயனே ஆகும்.

(vii) ஒருவன் தன்நாட்டு வரலாற்றினை ஆழமாகக் கற்று உணர்ந்து தெளியவில்லை என்றால் அந் நாட்டு மக்களிடையே உயரிய எண்ணங்களும், தேசிய உணர்வுகளும் வேர்விடாது.

ஒரு நாட்டின் பழம்பெருமைகள் ஒருவனுக்குப் புத்துணர்ச்சியூட்டும் அம்சமாக விளங்குகின்றன. கடந்தகால பெருமையை மீண்டும் நிலைநாட்ட வேண்டும் என்ற உணர்வும் தன் முன்னோர்கள் நாட்டிற்கு ஆற்றிய தொண்டினைவிடப் பன்மடங்கு, தானும் ஆற்றவேண்டும் என்ற வேட்கையும், தன் நாட்டின் தனிப் பண்பினைக் கட்டிக்காக்கவேண்டும் என்ற துடிப்பும் தன்னாட்டு வரலாற்றினைக் கற்பதால் ஏற்படும் நற்பயன்களாகும்.

(viii) இந்தியாவின் பெருமை இந்திய ஆன்மீகத்தில் தோய்ந்திருப்பதை இந்திய வரலாற்றைக் கற்கும்பொழுதே உணரலாம். மற்றதை எல்லாம்விட உயரிய மனமே மேலானது என்ற உண்மையையும் இந்திய வரலாற்றைக் கற்கும்போது உணரலாம்; செல்வத்தைவிட செம்மையான வாழ்வினையே இந்தியர்கள் போற்றி வந்துள்ளார்கள் என்பதையும் இந்திய வரலாற்றினைக் கற்கும் போது உணரலாம். செல்வத்தின் ஆற்றலுக்கு இந்தியர்கள் தந்த மதிப்பைவிட, மனத்தின் ஆற்றலுக்கு இந்தியர்கள் தந்த மதிப்பே மேலானது என்பதை இந்திய வரலாற்றினைக் கற்போர் அனைவரும் உணரலாம்.

## நாடுகள் ஒன்றையொன்று சார்ந்திருத்தல் (Inter-dependance of Nations)

ஒரு நாட்டின் வரலாற்றைக் கற்பிக்கும்பொழுது, அந்த நாடு உலகத்தின் ஒரு பகுதி என்பதை நாம் மறக்கக்கூடாது. அந்த நாடு மற்றைய நாடுகளின் வரலாற்றுடன் தொடர்புடையதாக இருக்குமென்பதையும் நாம் உணர வேண்டும்.

எந்த நாடும் தனித்திருக்க முடியாது. நம் நாட்டின் வரலாற்றை எடுத்துக்கொள்வோம். நம் நாடு மலைகளாலும், கடல்களாலும் பிறநாடுகளின் படையெடுப்பிலிருந்து தடுக்கப்பட்டு வருவதாக நாம் படிக்கிறோம். அது தவறான கருத்தாகும்.

பிற நாடுகளுடன் தொடர்பின்றி இந்தியா எந்தக் காலத்திலும் இருந்ததில்லை. பண்டைக்காலம்முதல் கணவாய்களின் வழியகாவும், கடல்மூலமாகவும் வெளி நாட்டினர் இந்தியாவிற்கு வந்துள்ளனர். இந்தியர்களும் மலைகளையும், கடல்களையும் தாண்டி மத்திய ஆசியா, மெசபடோமியா, சீனா, ஜாவா, கம்போடியா, இந்தோ-சீனா நாடுகளுக்குச் சென்றுள்ளனர். நாம் இந்திய நாட்டு வரலாற்றைத் தனித்துக் கற்பிக்க முடியாது. இந்தோ—ஆரியர்களுக்குப் பிறகு, பாரசீகர்களும், கிரேக்கர்களும் இந்தியாவுடன் தொடர்பு கொண்டனர். மத்திய ஆசியாவிலிருந்து யூச்சீஸ், ஹுணர்கள் போன்ற முரட்டு இனத்தவர்களும் நம் நாட்டிற்கு வந்தனர். அரேபியர்கள் பாரசீகர்கள் போன்ற இனத்தவர்களும், மொகலாயர்களும் இந்தியாவிற்கு வந்துள்ளனர். தென்னிந்தியர்கள் கிழக்கிந்தியத் தீவுகள், இந்தோ-சீனா நாடுகளுக்குச் சென்று இந்தியப் பண்பாட்டைப் பரவச் செய்தனர். எனவே, நாம் நம் நாட்டின் வரலாற்றைத் தனித்துக் கற்பிப்பது என்பது இயலாது. நம் நாடு என்றைக்கும் தனித்து இருந்தது இல்லையாதலால், மற்றைய உலக

நாடுகளுடன் தொடர்பின்றி நம் நாட்டின் வரலாற்றைக் கற்பிப்பது என்பது எளிமையானதல்ல என்பதை நாம் உணர வேண்டும்.

**நாட்டு வரலாறும், தேசிய ஒருமைப்பாடும் (National History and National Integration)**

இந்தியாவைப் போன்ற வேற்றுமைகள் மிகுந்த ஒரு நாட்டைக் காண்பதரிது. இந்தியாவின் இயற்கையமைப்பைப் பற்றி நீங்கள் அறிவீர்கள். கடற்கரையோரத்தில் சமவெளிகள் உள்ளன; மிக உயர்ந்த பீடபூமிகள் உள்ளன. நிலப் பரப்பில் சற்றேறக் குறைய மூன்றில் ஒரு பங்கு மலைகள் அடர்ந்த அசாம், அருணாசலப் பிரதேசம் இராச்சியங்கள் இந்தியாவில் உள்ளன. மழை மிகக் குறைவான இராசபுதனப் பகுதி ஒரு புறத்திலும், ஆண்டு சராசரி மழை 1000 செ.மீ மேல் பெய்யும் சிரபுஞ்சி மற்றொரு புறத்திலும் உள்ளன. இதே போன்று தட்ப வெப்ப நிலைகளிலும், தாவரவகை களிலும், விலங்கினங்களிலும், இந்தியாவில் இடத்திற்கிடம் வேறு பாடு மிகுந்து காணப்படுகிறது. மக்களில் பல்வேறு இனத்தவர் இந்தியாவில் காணப்படுகின்றனர். மிக்க உயரமும், பருமனும், வெண்சிவப்பு நிறமும் உடைய வடமேற்குப் பகுதி மக்களிலிருந்து, குறைந்த உயரமும், மெலிந்த உருவமும், சிறிது கருமை நிறமுடைய தென்னிந்தியர்கள் வரையிலும் பல திறப்பட்ட மக்களைக் காண் கிறோம். இனவகையில் நம்நாட்டு மக்கள் ஆரிய, திராவிட, மங் கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொதுவாகக் கூறலாம். முஸ்லிம்களை மட்டும் எடுத்துக்கொண்டால் பாரசீக, ஆப்கானிய, துருக்கிய, மங்கோலிய, அராபிய இனத்தவர்களைச் சேர்ந்த மக்கள் நம்நாட்டில் வாழ்கின்றனர்.

மொழி அடிப்படையில் இந்தியர்கள் பதினைன்கு முக்கியமான மொழிகளைப் பேசி வருகின்றனர். ஆனால், பேச்சுவழக்கு மொழிகள் ஐந்நூறுக்கும் மேற்பட்டவையாகும். மதத்துறையில் முக்கியமான உலக மதங்களில் பெரும்பாலானவற்றைப் பின்பற்றும் மக்கள் இங்கு உள்ளனர். இங்கு மக்கள் பின்பற்றும் முக்கியமான மதங்கள்—இந்துமதம், கிறித்தவமதம், இஸ்லாம், சீக்கியர்மதம், பௌத்தம், சமணம் போன்றவை. சமூக நிலையிலும் பல்வேறு பாகுபாடுகள் காணப்படுகின்றன. ஆனால், உண்மையில் ஆழ்ந்து நோக்குபவர்களுக்கு இவ்வளவு வேற்றுமைகளுக்கும் இடையில் ஊடுருவித்தோன்றும் பொதுவான அடிப்படை ஒற்றுமை ஒன்று தெற்றெனப் புலனாகும். அதுவே இந்தியப் பண்பாட்டின் சிறப் பாகும். வெளிப்படையாகத் தோன்றும் பற்பல வேற்றுமைகளி டையேயும் ஒருவித ஒற்றுமை காணப்படுகிறது. இந்நிலையை வேற்றுமையில் ஒற்றுமை (unity in diversity) என்று கூறுவர்.

நாகரிகமுள்ள நாடாக நாம் நிலைக்க வேண்டுமென்றால் தேசிய ஒருமைப்பாட்டினை உறுதிப்படுத்துவது அடிப்படையானது. வடக்கே இமயத்தாலும், தெற்கே கடல்களாலும் சூழப்பட்ட இந்த நிலப் பரப்பில் வாழ்பவர் அனைவரும் இந்தியரே. இந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர், கிறித்தவர் எந்தப் பிரிவினரும் இந்தியரே. இப் பகுதியில் வாழ்பவர் அனைவருக்கும் தாயகம் இந்தியா. ஒருமைப்பாட்டை, நாட்டு வரலாற்றைக் கற்பிப்பதன்மூலம் வளர்க்கவேண்டியதை நாம் உணரவேண்டும்.

(i) வேற்றுமையில் ஒற்றுமையை நிலை நாட்ட நம் வரலாற்றுத் தொடக்கத்திலிருந்தே, இந்தியா பாடுபட்டு வந்துள்ளது. எனவே, வரலாற்றுப் பாடத்திட்டத்தின் உள்ளடக்கத்தில் பின்வரும் விவரங்கள் இடம் பெறுதல் வேண்டும். அசோகரின் தூதுவர் அவர் கொள்கைகளையும், கருத்துகளையும் ஆசிய நாடுகளிடையே பரப்பி, ‘சமவாய ஏவ சாது’ என்ற கோட்பாட்டைக் கல்லிலே செதுக்கினார். உடன்பாடும், ஒற்றுமையுந்தான் உயர்ந்தவை. அலெக்சாந்தரும் அசோகரும் வகுத்த வாய்க்கால்கள் வழியாகத்தான் இந்தியக் கருத்துகளின் கருப்பொருள்கள் ரோம சாம்ராச்சியத்திற்குள் புகுந்தன. கி.பி. 320 முதல் 480 வரை நிலவிய குப்தர்களின் பொற்காலத்தில், மதத்துறையில் சமரச உணர்வு ஓங்கியது என்பதற்குக் கி. பி. 401 முதல் 410 வரை இந்தியாவில் பிரயாணம் செய்த பாஹியான் ஆதாரங்கள் தருகின்றார். குப்த மன்னர்கள் வைணவர்கள், ஆனால் பௌத்தர்களும், தங்கள் சமயத்தைத் தடையின்றிப் பின்பற்றவும், புனிதத் தொழுகைக்குரிய இடங்களில் அறக்கட்டளைகள் நிறுவவும், அவர்களுக்கு முழு உரிமை அளிக்கப்பட்டது. கி.பி. 606 முதல் 647 வரை இந்தியாவின் பெரும்பகுதிமீது ஆட்சி செலுத்திய மன்னர் ஹர்ஷ வர்த்தனர் சிவபக்தர்; ஆனால் சூரிய பகவானையும், புத்தரையும் அவர் வணங்கினார். மொகலாய மாமன்னரில் தலைசிறந்தவரான அக்பர், மதத்துறையில் சமரச உணர்வை மேற்கொண்டிருந்தார். சமரச உணர்வும், நல்லெண்ணமும் இன்றியமையாதவை என்ற படிப்பினையை, நம் வரலாற்றின் சோதனைகள் நமக்கு உணர்த்துகின்றன.

(ii) நம் வரலாற்றின் தொடக்கத்திலிருந்தே, பல்வேறு மொழி, மதத்தொகுதிகளைச் சேர்ந்ததொரு சமுதாயமாகவே இந்தியா விளங்கியுள்ளது. பல்வேறு இனங்களும், காலாச்சாரங்களும் சந்திக்கும் இடமாக அது அமைந்துள்ளது.

(iii) எல்லாச் சமயங்களையும் ஏற்றுக்கொண்டு, சிறப்பு எங்குக் காணப்படுகிறதோ, அதை ஏற்றிப் போற்றுவதே இந்திய மரபு. வேறுபாடுகளின் தன்மையைப் பற்றி நம் மெய்யறிஞர்கள் தெளிவாக

உணர்ந்திருந்தனர். உபநிடத மெய்யறிஞர்கள், புத்தர், மகாவீரர், ஆச்சாரியர்கள், இராமானந்தர், கபீர், நானக்மேலும் அண்மையில் இராமகிருஷ்ணர், ராம்மோகன்ராய், தாகூர், காந்திஜி ஆகியோர் இறைவன் ஒருவனே என்ற உண்மையை இந்திய மக்களுக்கு எடுத்துரைத்தனர். நாம் கோயிலில் வணங்கினுலும் சரி, மசூதியில் தொழுதாலும் சரி, நாம் அனைவரும் ஒரே இறைவனின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே. நம் அரசு மதச்சார்பற்ற அரசு என்று கூறும்போது, எந்த ஒரு மதத்துடனும் அரசு சேராமல், பல்வேறு மதங்களையும் பின்பற்றுவோர், நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஊறு செய்யும் வகையிலோ, ஒழுக்க உணர்வையும், மக்கள் மனச்சான்றையும் மீறும் வகையிலோ நடக்காதவரை, எல்லா மதங்களையும் ஏற்று, மதித்துப் போற்றும் என்றுதான் பொருள்.

(iv) சாதி தடைகளிலிருந்தும், தீண்டாமைக் கொடுமைகளிலிருந்தும் நம்மை விடுவிக்க மகான்கள் அவ்வபோது நம்மிடையே தோன்றியுள்ளனர். நமது அரசியல் சட்டம், சாதி தடைகளை அனுமதிக்கவில்லை. தீண்டாமையைப் பின்பற்றுவது சட்டப்படி குற்றமாக்கப் பட்டுள்ளது. ஆனல், அரசியல் சட்டவிதிகள் இயற்றுவது மட்டும் போதாது. நம் எண்ணப் போக்கையும், நடத்தை நெறியையும் மாற்றிக்கொள்ளப் பழகவேண்டும்.

(v) பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தேசப்பற்றை இளைஞர்களுக்கு வரலாற்று பாடமூலம் போதிக்கவேண்டும். வெறும் தகவல்களைச் சொல்லிக்கொடுப்பது மட்டுமல்ல கல்வி, அது உணர்ச்சிகளைப் பண்படுத்தவேண்டும். மொகஞ்சோதாரோ, ஹாரப்பா காலத்திலிருந்து இன்றுவரை நம் கலாச்சாரம் வளர்ச்சியடைந்துள்ளதையும், அவ்வப்போது தன்னைப் புதுப்பித்துப் பலப்படுத்திக் கொண்டுள்ளதையும் நம் வரலாற்றுப் பாடப்புத்தகங்களில் இடம்பெறச் செய்யவேண்டும்.

(vi) பல மொழித் தொகுதிகள், பல சமயத்தொகுதிகள் சேர்ந்துவாழும் ஒரு சமுதாயத்தில் எல்லா மதங்களையும் நாம் மதிப்பது போலவே, எல்லா மொழிகளையும் நாம் மதிக்கவேண்டும். நம் மொழியைத் தவிர மற்ற மொழிகளிடம் நாம் அனுதாபமும், நல்லெண்ணமும் காட்டவேண்டும்.

(vii) நாட்டு வரலாற்றைக் கற்பிப்பதில் இந்திய தேசிய உணர்ச்சி ஏற்பட்டு, சுதந்தரம்பெற்ற நிகழ்ச்சியை மாணவர்களுக்கும் கற்பிக்கத் திட்டமிடவேண்டும். இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை தோன்றியதிலிருந்து, நாடு சுதந்தரம் பெற்றது வரையிலும் உள்ள வரலாற்றை மிக எளிமையாகவும்,

சுருக்கமாகவும் மாணவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்தோரும், பல சமயத்தைச் சேர்ந்தவர் களும், பல மொழிகளைப் பேசியோரும் எவ்வித வேறுபாடின்றி தேசிய இயக்கத்தில் ஈடுபட்டு, பல தியாகங்கள் செய்து, நாட்டின் விடுதலைப் போரில் ஈடுபட்டதை வரலாற்றில் தெளிவுபடுத்த வேண்டும். தேசத் தலைவர்களின் தியாகங்களையும், சிறப்புவாய்ந்த நிகழ்ச்சிகளாகிய தண்டி யாத்திரை, சத்தியாக்கிரகப் போர், ஒத்துழையாமை இயக்கம், ஜாலியன்வாலாபாக் நிகழ்ச்சி, 'வெள்ளை யனே வெளியேறு' என்ற முழக்கம், நௌகாளி சம்பவம் போன்ற நிகழ்ச்சிகள் பாடத்திட்டத்தில் சேர்க்கப்படவேண்டும்.

(vii) பூகோள அடிப்படையில் ஒற்றுமை, பொதுவான கலாச் சாரப் பாரம்பரியம், வரலாறு, பொதுவான பொருளாதார குறிக் கோள்கள், இவை அனைத்தும் நம் தேசிய ஒருமைப்பாட்டினை வளர்க்கின்றன. நம் நாடு வளர்ச்சி அடையவேண்டுமானால், பொதுவான குறிக்கோள்களை அடைய மக்கள் ஒன்று சேர்ந்து உழைத்த ஒற்றுமை உணர்வும், வருங்காலத்தில் ஒன்றுசேர்ந்து உழைக்கும் ஆர்வ உறுதியும் வேண்டும். நாம் ஒன்று சேர்ந்து உழைத்துக் கூட்டு முயற்சியின் பயனாக, அற்புத சாதனைகள் பல ஆற்றியுள்ளோம். நாட்டு விடுதலையையே நாம் போராடிப் பெற்றுள் ளோம். இன்றும் மகத்தானதோர் எதிர்காலத்தை நாட்டுக்கு உருவாக்க வேண்டுமென்ற உறுதியும் நாம் கொண்டுள்ளோம். இந்த மாபெரும் பணிக்கு நாம் விவேகத் தெளிவுடனும், வீர உணர் வுடனும், அன்புடனும் நாட்டின் ஒற்றுமைக்கும், வளர்ச்சிக்கும் உழைக்க நம்மை அர்ப்பணம் செய்துகொள்ளவேண்டும்.

### (iii) உலக வரலாறு (World History)

மனிதன் இப் பூவுலகில் ஆதிகாலம் முதல் அடைந்த படிமுறை வளர்ச்சியைப் பற்றிக் கூறுவதே வரலாறு ஆகும் என்பதை நாம் அறிவோம். எனவே, அது சமூக வரலாறு, உலகவரலாற்றை எந்தப் பருவத்தில் மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்பதை திட்டம் செய்ய அறிஞர்கள் முற்பட்டனர். சில அறிஞர்கள் உலக வரலாறு வயது வந்தவர்களுக்குக் கற்பிக்கவேண்டிய பாடமென்ற கருத்தை வெளியிடுகின்றனர். உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு உலக வரலாறு கற்பித்தால், அது அவர்களுக்குச் சரிவரப் புரிவது கடினமென்று கூறுகின்றனர். ஆனால், மற்றொரு பிரிவினர் பள்ளி மாணவர்கள் உலக வரலாற்றை ஒரு சிறப்புப் பாடமாகக் கற்க வேண்டியதில்லை என்றும், நாட்டு வரலாறுமூலமாக உலக வரலாற்றின் நிகழ்ச்சிகளைத் தொடர்பு படுத்திக் கற்பிக்கத் திட்ட

மிடுவது சிறந்தது என்றும் கூறுகின்றனர். பேராசிரியர் **ஆல்டாமிரா** (Altamira) என்பவர் தொடக்கப்பள்ளிக் குழந்தைகளுக்கும் உலக வரலாற்றைக் கற்பிக்கக்கூடுமென்று கூறுகின்ருர். **H.A.L. பிஷ்ஷர்** (H.A.L. Fisher) 'வரலாற்றைக் கற்பித்தல்' என்ற நூலில் 'நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்தையும் உலகவரலாற்றைக் குகை மனிதர்கள் வாழ்க்கையைப் பற்றித் தொடங்கி, பாபிலோன் நாட்டு மக்கள், எகிப்தியர்கள்பற்றிய வரலாற்றின் சுருக்கத்தையும், யூதர்கள், அரேபியர்கள், ரோமானியர்கள்பற்றிய வரலாற்றையும் கற்க வேண்டும் என்று கூறியுள்ளார். பன்னிரண்டு வயது முடிந்து ஆங்கில நாட்டு வரலாறு கற்கத் தொடங்குவதற்குள் மேற்கூறிய முறையில் உலக வரலாற்றின் தொடக்கத்தைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளவேண்டுமென்ற கருத்தைத் தெளிவு படுத்தியிருக்கின்ருர். எல்லா வரலாற்று ஆசிரியர்களும் அந்தந்த நாட்டு வரலாற்றைக் கற்பிக்கத் தொடங்குமுன் உலகவரலாற்றைப் பற்றிய பொது விவரங்களை மாணவர்களுக்குக் கற்பிக்கவேண்டுமென்பதில் ஒருமித்த கருத்துடையவர்களாக இருக்கின்றனர். இந்த முதனிலைப் பிரிவாக (Preliminary Course) உலக வரலாற்றுப் பாடத்திட்டம் மிகவும் சுருக்கமாகவும், எளிமையானதாகவும் இருக்கவேண்டும் என்பதும் இன்றியமையாததாகும்.

உலக வரலாற்றின் சுருக்கத்தை (outline) மாணவர்கள் உயர்நிலைப் பள்ளியின் கடைசி ஆண்டில் மறுமுறையும் கற்பதற்கு வாய்ப்பளிக்கவேண்டுமென்ற கருத்தும் நம் கவனத்தைப் பெற வேண்டியதாகும். உலக வரலாற்றை முழு விவரத்துடன் கல்லூரிகளில் கற்பிப்பது சிறப்பானதாகும் என்பதை ஆசிரியர்கள் பெரும்பாலோர் ஒத்துக்கொள்கின்றனர்.

பாடத்திட்டத்தில் உலக வரலாறு சேர்க்கப்பட வேண்டியதற்குக் கூறும் காரணங்கள் பின்வருவன:

(i) நாட்டுப்பற்று ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததும், எல்லோரிடமும் கட்டாயம் இருக்க வேண்டியதுமான ஓர் உணர்ச்சி என்பதில் ஐயமில்லை. 'மக்களிடம் நாட்டுப்பற்றின்றி நாடு முன்னேற முடியாது. ஆனல், தீவிரமான குறுகிய நாட்டுப் பற்று பல தீய விளைவுகளைத் தரவல்லது என்பது மறுக்கமுடியாத ஓர் உண்மை. நாட்டுப்பற்று பெரும்பாலும் ஒரு நாட்டவரிடம் குறுகிய மனப்பான்மையைத் தோற்றுவிக்கிறது. தனது நாடு பிற நாடுகளைக் காட்டிலும் எல்லாவற்றிலும் சிறந்தது என்றும், தன்னுட்டவர் தவறு செய்யவே மாட்டார்கள் என்றும் உண்மைக்கு மாருன பல எண்ணங்கள் குறுகிய நாட்டுப்பற்றினுல் எழுகின்றன.

குறுகிய, மற்றும் நாட்டுப்பற்று பிற நாட்டினரைப் பற்றிய உண்மை அறிவை நாம் அறியாவண்ணம் செய்கிறது. சார்பெண்ணங்கள் பெருகி, நாடுகளுக்கிடையே போராட்டம் எழக்கூடியநிலை இதனால் ஏற்படுகிறது. பரந்த பன்னாட்டு மனப்பான்மையை மாணவர்களிடம் வளர்க்க உலக வரலாறு கற்பிக்கவேண்டியது இன்றியமையாததாகும்.

(ii) இன்றைய உலகில் காணப்படும் பூசல்கள், போராட்டங்கள் ஆகியவற்றின் முக்கியக் காரணம் குறுகிய நாட்டுப் பற்றுதான் என்பது கற்றறிந்தோரின் கருத்து. இன்றைய உலகம் விஞ்ஞான வளர்ச்சியால் 'சுருங்கிய' உலகம். மனிதன் காலத்தையும் தூரத்தையும் வென்றிருக்கிறன். நம் உலகின் ஒரு மூலையில் தோன்றும் பூசலும் இன்று வெகுவிரைவில் உலக முழுதும் பரவி மற்றோர் உலகப் போராகவும் மாறக்கூடும். இவ்வுலகை மற்றொரு போரிலிருந்து மீட்க ஒரே வழி நாட்டுப்பற்றுடன் உலகப்பற்று, அல்லது சர்வதேச மனப்போக்கை ஒவ்வொருவரும் பெறுவதுதான் ஐக்கியநாட்டு நிலையத்தைச் சேர்ந்த பல பிரிவுகள் உலக மக்களை ஒன்றுபடுத்தும் பெரும்பணியில் இன்று ஈடுபட்டிருக்கின்றன. சமூகப் பக்குவம் பெற்று உலக நோக்குடன் மாணக்கர் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள உதவும் கல்வி அவர்கட்கு அளிக்கப்படல் வேண்டும். இவ்விதக் கல்வியை அளிக்க உலக வரலாறு உதவுகின்றது.

(iii) உலக நாகரிகம் ஒரு நாட்டின் வளர்ச்சியினால் ஏற்பட்டதல்ல. பல நாடுகளில் ஏற்பட்ட வளர்ச்சியே உலக நாகரிகமாக நமக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. பல நாடுகளின் ஒத்துழைப்பால் உருவானது உலக நாகரிகம். உலக வரலாற்றைக் கற்பிப்பதால் உலக நாகரிக வளர்ச்சியை மாணவர்கள் அறிந்துகொள்ள இயல்கின்றது.

(iv) முதல் உலக யுத்தத்திற்குப் பிறகு, இங்கிலாந்து, வேல்ஸ் நாட்டில் மாணவர்களிடம் உலக ஒற்றுமை வளர்ச்சியை ஏற்படுத்த ஒவ்வொரு பள்ளியிலும் சர்வதேச சங்கத்தின் (League of Nations) கிளைகள் ஏற்படுத்தி, அது பற்றிய கையேடுகளை மாணவர்கள் படிக்க ஏற்பாடு செய்தனர். தற்பொழுது ஏற்பட்ட நிலைமைக்குத் தகுந்தவாறு ஐக்கிய நாட்டு நிறுவனம் (UNO), யுனெஸ்கோவின் (UNESCO) கிளைக் கழகங்களை ஒவ்வொரு பள்ளியிலும் அமைத்துள்ளனர். இக் கிளை அமைப்புக்கள் வரலாற்றுப் படிப்பின் சிறப்பு மிகுந்த தனிப் பிரிவுகளாகக் கருதப் படவேண்டும்.

(v) இருபதாம் நூற்றாண்டில் அறிவியல் துறையிலும், தொழில் நுணுக்கத்திலும் அளவில்லாத வளர்ச்சியை அடைந்துள்ளோம்.

இவ்வளர்ச்சியினுல் உலக வரலாற்றிலும், சர்வதேச உறவிலும் புதியதொரு சூழ்நிலை உருவாகி உள்ளது. இச் சூழ்நிலையில் உலக மக்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் சார்ந்து இருக்கவேண்டிய நிலை தெளிவாகக் காணப்படுகிறது. எல்லோரும் உலகத்தின் குடி மக்கள் என்ற உணர்வுடன் மனிதகுல நல்வாழ்வுக்காகச் செயல்பட வேண்டும் என்ற உணர்வு ஏற்படவேண்டும். எனவே, உலகக் குடிமகனுகச் செயல்பட உலக வரலாறு கற்கவேண்டியது அவசிய மாகும்.

(vi) நாகரிகம் வளர ஆரம்பித்த காலத்திலிருந்து எந்த நாடும் தனித்து இயங்கியது கிடையாது. யூப்ரட்டீஸ், டைகிரீஸ் ஆற்று வெளிப்பிரதேசம் பாபிலோனியர் ஆட்சியின்கீழ் வந்தது. பிறகு பாரசீகர்களின் ஆட்சியின்கீழ்வந்த காலத்திலும் அங்கு நாகரிக வளர்ச்சி தொடர்ந்து ஏற்பட்டது. கிரேக்கர்கள், ரோமானியர்களை வென்றதாகப் பறைசாற்றிக் கொண்டாலும் அவர்களின் நாகரிகத் திறல் அடிமையாக்கப் பட்டவர்களாகவே இருந்தனர். நாகரிகத்தில் மிகவும் பழமையான நாடுகளில் நமது இந்திய நாடும் ஒன்றுகும், இந்திய நாகரிகமும், கிரேக்கர்கள், ஹூணர்கள், மொகலாயர்கள். ஆங்கிலேயர்களின் தொடர்பினுல் பாதிக்கப்பட்டு ஒருவித கலப்புத் தன்மையைப் பெற்றது. நமது பழமையான நாட்டிற்கு வெளி நாட்டிலிருந்து வந்தவர்களினுல், நமது நாகரிகமும் பல மாறுதல்களைப் பெற்றுள்ளது. இந்தியப் பண்பாட்டின் வளர்ச்சியை அறிவதற்கு உலக வரலாற்றின் பின்னணியில் நம்நாட்டு வரலாற்றைக் கற்கவேண்டியதாக இருக்கின்றது.

(vii) உலக வரலாற்றின் மற்றொரு தன்மையை நாம் புறக் கணிக்க இயலாது. ஒவ்வொரு நாட்டிலும், பெரியோர் (Great men) பலர் தோன்றி, அவர்களின் சாதனைகளால் நாட்டின் வரலாற்றுப் போக்கையும், உலக நிகழ்ச்சிகளையும் மாற்றும் அளவில் செயலாற்றி யிருக்கிருர்கள். அவர்கள் 'உலகத் தோன்றல்கள்' (World figures) என்ற நிலையை அடைந்தவர்கள். லெனின், காந்தி, சர்ச்சில், ஐன்ஸ்டீன், நேரு, கென்னடி போன்ற பெரும் மேதைகள் உலகில் எங்கும் அவர்களின் அறிவுரைகளைப் பயனுடையதாகத் தந்துள் ளார்கள். காலம் என்ற மணற்பரப்பில் அவர்களுடைய காலடிச் சுவடுகளை (foot prints) விட்டுச் சென்றுள்ளார்கள். அவர்களுடைய சிறப்பான குறிக்கோள்களையும், தியாகச் செயல்களையும், அவர் களாற்றிய அருஞ்செயல்களையும் எல்லா நாட்டைச் சேர்ந்த வருங்காலக் குடிமக்களாகிய தற்கால மாணவர்கள் நன்கு தெரிந்து கொள்ளவேண்டியது அவசியமானதாகும். எனவே, உலக வர லாற்று அறிவு தவிர்க்க முடியாத ஒன்றுகும்.

(viii) மேற்கூறிய செயல்களெல்லாம் பண்பட்ட மனப் பான்மையை வளர்க்கத் துணைக் கருவிகளாகவே உள்ளன. இந்த நோக்கத்தை நேரிடையாக வளர்ப்பதற்கு உலக வரலாற்றை மாணவர்களுக்குக் கற்பிக்கத் திட்டமிடுவதே சிறந்த முறையாகும். உலக வரலாற்றைக் கற்பிப்பதன்மூலம் **கீழ்க்காணும் பயன்களைப் பெறலாம்.**

(அ) உலக நாடுகளின் தற்கால நிலைமைகளை நன்கு அறியலாம்.

(ஆ) மனித இனத்தின் ஒற்றுமையை (Solidarity of mankind) நன்கு புலப்படுத்துவதற்கு உதவும்.

(இ) இனம், சமயம், சாதி, நிறம் பற்றிய வேற்றுமைகளைத் தாண்டி மனித சமூகத்தினிடம் அன்பு செலுத்தும் உணர்வை வளர்க்க ஏதுவாகும்.

(ஈ) பிற நாட்டு நாகரிகங்களைப் பற்றி அறியும் பொழுது தங்கள் நாடுகள் எவ்வாறு பயனடைந்துள்ளன என்றும், நாகரிக வாழ்க்கையைத் தன் சமூகத்தினரும் அடைவதற்கு எவ்வாறு அவை உதவி செய்துள்ளன என்பதையும் மாணவர்கள் அறிந்து கொள்ள உதவும்.

இவ்விதப் பயன்களை மாணவர்கள் பெறவேண்டுமென்ற கருத்து கொண்டு ஐரோப்பிய நாடுகளில் பத்துமுதல் பன்னிரண்டு வயது வரையிலும் உள்ள மாணவர்களுக்கு உலக வரலாற்றைப் பாடத் திட்டத்தில் சேர்த்துள்ளனர். ஆசிரியர் **வான்லூன்** (Von loon) எழுதிய, 'மனித இனத்தின் கதை' (The Story of Mankind) என்ற புத்தகத்தைப் பாட நூலாகப் பயன்படுத்துகிறார்கள். நமது இந்திய மாணவர்களுக்கு உலக வரலாற்றிலுள்ள முக்கிய நிகழ்ச்சிகளைப் (land marks) பற்றிய கதைகளை எளிமையாக அமைத்து அவற்றைக் கற்பிக்க வேண்டியது அவசியமானதாகும்.

**உலக வரலாற்றின் முதனிலைப் பிரிவு** (Preliminary Course)

உலக வரலாற்று முதனிலைப் பிரிவு இரண்டாண்டுகளில் கற்பிக்கத் திட்டமிட்டுக் கற்பிக்கப்படலாம். நாட்டு வரலாற்றுக்கு இணைந்த பின்னணியாக அமைந்திருக்கும்படி விவரங்களைத் தேர்த் தெடுக்க வேண்டியதாகும். உலகிலுள்ள பல நாடுகளும் நாகரிக வளர்ச்சிக்குத் தொண்டாற்றியிருக்கின்றன என்பதைத் தெளிவு படுத்தும் முறையில் இப் பாடத் திட்டம் இருக்கவேண்டும். சுமேரி

யர்கள் பாசனத் திட்டங்களேயும், இந்துக்கள் கணித இயலேயும், பொனீஷியர்கள் எழுத்து வடிவத்தையும், சீன மக்கள் பட்டு, வெடி மருந்து, தேர்வு முறை, மாலுமி திசைக்காட்டும் கருவி போன்றவை களேயும், கிரேக்கர்கள் கட்டடக் கலே, சிற்பக் கலேயையும், ரோமானியர்கள் சாலேகள், வடிகால் போன்றவைகளேயும் உலகத் திற்கு அளித்திருக்கின்றனர் என்ற விவரத்தை நாம் மாணவர் களுக்குத் தெரிவிக்கவேண்டும். தற்காலத்தில் ஜெர்மானியர்கள் அச்சுப் பொறியையும், ஆங்கிலேயர்கள் நீராவி இயந்திரத்தையும், இத்தாலியர்கள் கம்பியில்லாத் தந்தி முறையையும் அளித்துள்ள தையும் நாம் கற்பிக்கவேண்டும். உலகக் குடிமகன் என்ற உணர்வை ஏற்படுத்த இவ்வித விவரங்களடங்கிய உலக வரலாறு மாணவர்களுக்கு உயர்நிலேப்பள்ளி நிலேயிலேயே அளிக்கத் தேவைப்படுகின்றது.

இவ்விதப் பாடத்திட்டத்தை ஆசிரியர் **V. D.** கேட் (Ghate) நமக்குத் தந்துள்ளார். அதை எடுத்துக்காட்டாக நாம் இங்குக் குறிப்பிடலாம்.

(i) வேட்டையாடும் மனிதன்—நிலேயான வீடில்லே—ஒழுங் கான உணவு விதிகளில்லே.

(ii) ஆட்டிடையன்—கால்நடைகளே மேய்த்தல்—பசுமையான இடங்களேத் தேடிச்செல்லுதல்—இறைச்சி, பால், துணி—போன்ற வற்றைத் தவருமல் அடைதல்—ருஷ்யாவின் தென் பகுதி—பூர்வீக இருப்பிடம்.

(iii) பயிர்த்தொழிலே மேற்கொண்ட மனிதன்—தானியங் களின் பயனே அறிதல்—புதிய கண்டுபிடிப்பு—நிலவளம்—பருவ காலங்கள் பற்றிய அறிவைப் பெறுதல்—கூட்டு வாழ்க்கை—வீட்டில் நடைபெறும் கைத்தொழில்கள்—விதைத்தல்—அறுவடை செய்தல் —மாவு அரைத்தல்—உணவு சமைத்தல்.

(iv) எகிப்து நாட்டு மனிதன்—உணவுத்தானியம் உற்பத்தி செய்தல்—நூற்பும், நெய்தலும்—பிரமிடுகள் கட்டுதல்.

(v) பாபிலோனிய நாட்டு மக்கள்—கால்வாய்—பாசனம்— குழாய்ப் பாசனம்—எழுத்து முறை—மணற் பலகையில் எழுதுதல்.

(vi) மொகஞ்சதாரோ—ஹரப்பா—சிந்துசமவெளி நாகரிகம்— குடியானவர்கள்—வாணிகம்—களிமண் முத்திரைகள்—சுட்ட செங் கல்லால் வீடு கட்டுதல்—கழிவறைகள்—குளங்கள்—பருத்தியின்

பயனைக் கண்டுபிடித்தல்—பருத்தி ஆடைகள்—காளை மாடுகளைப் மயன்படுத்துதல்.

(vii) இந்தோ — ஆரியர்கள் — குதிரை வீரர்கள் — குடும்ப வாழ்க்கை—இலக்கம்.

(viii) பொனீஷியர்கள்—கடல் பயணம்—கடல் வாணிபம்—போனிக் எழுத்து முறை.

(ix) கிரேக்கர்கள்—சுதந்திர மக்கள்—மேய்த்தல்—விவசாயம் குதிரையைப் பயன்படுத்துதல்—விளையாட்டில் விருப்பம்.

(x) ரோமானியர்கள் — சட்டம் தொகுத்தவர்கள் — நகர அமைப்பு—சாலைகள்—குளங்கள்—வீடுகள் கட்டுதல்—'கிரேக்கர்கள் அழகுக் கலையை மேற்கொள்ளுதலும், ரோமானியர்கள் வடிகால் வசதியை மேற்கொள்ளுதலும்'.

(xi) யூதர்கள்—கடவுள் பற்றிய பொதுக் கருத்து உருவாகுதல்.

**(இ) (i) கதைகளும், புராணங்களும்**

கதைகள் என்பன பண்டை மக்கள் உலகத்தைப் பற்றியும், மனிதனைப் பற்றியும் பிற உயிர்களைப் பற்றியும், சமயத்தைப் பற்றியும் கற்பனையில் புனைந்துரைத்தவைகளாகும். இந்திய, எகிப்திய, கிரேக்க, ரோமானியப் பழங்கதைகள் உலகமெங்கும் பெயர் பெற்றவை.

'வரலாறு கற்பித்தல்' என்னும் நூலில் ஆசிரியர் ஜார்விஸ் (Jarvis) கதைகளை மூன்று வகைகளாகப் பிரித்துள்ளார்:

(i) உண்மையான நிகழ்ச்சிகளைப் பற்றிய கதைகள். கொலம்பஸ், வாஸ்கோடாகாமா, முதலாம் ரிச்சர்டு, சீசர், அசோகர் ஹர்ஷவர்த்தனர் போன்றவர்கள்பற்றிய கதைகளை எடுத்துக் கூறலாம்.

(ii) புராணங்கள் (legends)—அரிச்சந்திரன், சத்தியவான்—சாவித்திரி, இங்கிலாந்தில் ஆண்ட ஆர்தர் அரசர் போன்றவர்களைப் பற்றியவைகள்.

(iii) பழம் புனைவுகள் (myths)—கடவுளின் அவதாரங்கள், கிரேக்க, உரோம நாட்டின் கடவுள்கள், அவர்களின் செயல்கள் பற்றிய கதைகள்.

இவ்விதக் கதைகளில் வரலாற்றுத் தொடர்புள்ளவற்றையே நாம் அதிகமாகக் கையாளவேண்டும். J.N. ஆலன் என்னும் அறிஞர் எவ்விதக் கதைகளையும் 14 வயதிற்கு மேற்படாத மாணவர் களுக்குக் கற்பிக்கக்கூடாது என்று கூறுகின்றார். எவ்வித வரலாற்று அறிவையும் குழந்தைகளால் பெறமுடியாது என்பது அவரின் கருத் தாகும். எனினும், இக் கூற்றை நாம் ஏற்றுக் கொள்வதற்கில்லை. இளங்குழந்தைகளுக்கு வரலாறு பற்றிய கதைகளைக் கூறுவதில் பயன் ஏற்பட்டே தீரும். அவர்களின் கற்பனை, ஆவல், தீரச் செயல்களைச் செய்யவேண்டும் என்ற எண்ணம் போன்றவை வளர்ச்சியடைவதற்குக் கதைகளைக் கூறவேண்டும். 'கதையும், கதையைச் சொல்பவரும் வரலாற்றுக்கும், இலக்கியத்திற்கும் வாயில்களாவர்.'

ஹின்ஸ்டேல் (Hinsdale) என்னும் ஆசிரியர், ஆரம்ப வகுப்பு களில் குழந்தைகளுக்குக் கற்பிக்கும் கருவியும் ஆசிரியரேயாவர் என்று கூறுகிறார். பாடப் புத்தகத்தின் உதவியே தேவையில்லை. ஜெர்மனி நாட்டில் கதை சொல்லும் திறமையுள்ளவர்களே ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள். கிளாப்பர் (Klapper) ஆசிரியரின் கூற்றுப்படி முதல் நான்கு ஆண்டுகள் வரையிலும் வாய்மொழியால் வரலாற்றுப் பாடம் கற்பிக்கவேண்டும். உணர்ச்சியூட்டும் வகையிலும், மனவெழுச்சியை மாணவர் களிடத்தில் ஏற்படுத்துதலும், குரல் வேறுபாடு செய்வதும், நடிப் புடன் கதையைச் சொல்லுதலும் ஆசிரியரிடம் காணவேண்டியவை களாகும். இவ்விதத் திறமையில்லாதவர்கள் மற்ற பாடங்களைக் கற்பிக்க ஏற்றவர்களாயிருப்பினும் வரலாற்றுப் பாடத்தைக் கற்பிப் பதற்குத் தகுதியடைந்தவர்களாக இருக்க மாட்டார்கள்.

### (ii) வாழ்க்கை வரலாறு (Biography)

நம்நாட்டு வரலாற்றிலும், உலக வரலாற்றிலும் தோன்றிய 'பெரியோர்களை'க் காலவரையறை முறைப்படி, தேர்ந்தெடுத்து அவர் களின் வாழ்க்கை வரலாற்றைத் தொடர்பாக வரலாறு கற்பிக்க வேண்டும் என்ற கொள்கையைச் சில அறிஞர்கள் வலியுறுத்திக் கூறுகின்றனர். 14 வயது வரையிலும் மாணவர்களுக்கு அறிவியல் முறையைப் பின்பற்றிய வரலாறு விளங்காது என்பது கூறுவர். அவ்வயது மாணவர்கள் பொது நிகழ்ச்சிகளையும், குறிப்பிட்ட தகவல்களையும் புரிந்து கொள்வதைவிட தனிப்பட்ட தலைவர்களைப் பற்றிய கதையை விரும்பிக் கேட்பார்கள் என்ற கருத்தைப் பற்றியே 'பெரியோர்கள்' தத்துவம் உருவாகியுள்ளது. இந்தப் பெரியோர்கள், அவர்கள் வாழ்ந்த காலத்தின் பிரதிநிதிகளாகக் கருதப்படுகின் றார்கள். அவர்களின் முயற்சியினால் வரலாற்று நிகழ்ச்சிகளும்,

போக்குகளும் ஏற்படுகின்றன. இந்தப் 'பெரியோர்களின்' கொள் கையைக் கார்லைல் (Carlyle) ஆதரித்துக் கூறுகின்றார்.

இந்தக் கொள்கையை மறுத்துக் கூறும் காரணங்கள் பின்வருவன:

(i) ஜனநாயகப் பணிக்கு இக்கொள்கை ஏற்றதல்ல. பொது வாழ்வு அல்லது பொது மக்கள் சாதனைகள் புறக்கணிக்கப் பட்டுள்ளன.

(ii) இந்தப் பெரியோர்கள் பொதுவாகக் கிளர்ச்சியாளர் களாகவே காணப்படுகின்றனர். அவர்கள் காலத்திய மக்களுக்கு மேம்பட்டவர்களாகயிருக்கலாமேயொழிய அவர்களின் காலத்து மக்களைப் பிரதிபலிக்கின்றனர் என்று கூறுவதற்கில்லை.

(iii) இந்த மேலோர்கள் அவர்கள் பின்பற்றிய செயலைப் பற்றியதில் புகழ்வாய்ந்தவர்களாக இருக்கலாம். சமூக நடவடிக்கை களின் பல பிரிவுகளில் அவர்களது தொண்டு தொடர்பில்லாம லிருக்கும் என்பதையும் நாம் புறக்கணிக்க முடியாது.

(iv) வரலாற்றில் மேதைகளின் வாழ்க்கையைப் பற்றிய கதைகள் மட்டும் கூறுவோமானால் வரலாற்றின் தொடர்பை நாம் பாதுகாக்கவும் இயலாது.

இவை முழுவதையும் நாம் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், சில உண்மைகளை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். பெரியோர் களின் வாழ்க்கை வரலாறு தனிப்பட்டவர்களின் கதை என்பதால் வரலாற்றில் இடம் பெறுவதில்லை; பொதுநலத்திற்கு அவர்களது சேவை தேவைப்பட்டிருந்தாலும், மனிதப் பண்பாட்டிற்கு அவர் களது செயல்கள் உதவியாக இருந்திருப்பினும் நாம் அத்தலைவர் களின் வாழ்க்கையை வரலாற்றில் கற்பிக்க வேண்டியதாக இருக்கும். அத்தலைவர்களின் சொந்த வாழ்க்கையிலமைந்த அற்பச் செய்திகளை விவரித்துக் கூற வேண்டியதில்லை. இவர்களின் கதையைச் சொல்லுவதால் 'எவ்வித வரலாற்றுச் செய்தியை' மாணவர்கள் பெறுவார்கள் என்று நாம் ஆராய வேண்டும்: ஒரு குறிப்பிட்ட காலத்தை விளங்கவைப்பதாக இருந்தாலும், அல்லது ஒரு வரலாற்று நிகழ்ச்சியை ஒளிபெறச் செய்வதாக இருந்தாலும் அத்தலைவர்களது வாழ்க்கை வாலாற்றைப் பற்றிய கதையைத் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்குக் கற்பிக்கத் திட்டமிடுதல் வேண்டும்.

(iii) **அரசியல் வரலாறு** (Political History)

மனிதனின் சமூக வாழ்வின் எல்லாக் கூற்றுகளைப் பற்றி வரலாறு தொடர்புள்ளதாக இருப்பினும், சில வரலாற்று அறிஞர்கள் ஒரு கூற்றைப் பற்றி அதிகக் கவனம் செலுத்த விரும்புகின்றனர். ஆசிரியர் **பிரீமென்** (Freeman) கருத்துப்படி 'அரசியல் நிகழ்ச்சிகளின் **பதிவேடு** (Record) வரலாறு என்றும், வரலாறு கடந்த காலஅரசியல்' என்றும் வர்ணிக்கின்றார். இக் கருத்திலும் உண்மைகள் இருப்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஒரு சமூகத்தின் வாழ்க்கை நிலையை அரசியல் அதிகமாகப் பாதிக்கின்றமையால், சமூக, பொருளாதார நிலைகளில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுகின்றன. அரசியல் வரலாற்றைக் கூறும் பொழுது, தொடர்ச்சியையும், வளர்ச்சியையும் நாம் காண்கிறோம். அரசர்களின் ஆட்சி மாறி, மாறி ஏற்படும் பொழுதும், சண்டைகள்பற்றிக் கூறும் பொழுதும் தெளிவான காலவரையறை முறையை நாம் காண்கிறோம்.

வெறும் அரசியல் நிகழ்ச்சிகளை மட்டும் வரலாற்றில் இடம் பெறச் செய்வது தவறான செயலாகும். ஏனெனில்;

(i) வரலாற்றில் எல்லா சமூகக் கூற்றுகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கவேண்டும்;

(ii) அரசியல் மாற்றங்களினால், சமூக, பொருளாதார அமைப்பிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. வரலாற்றின் சில கட்டத்தில் பொருளாதாரக் காரணங்களும் அரசியல் நிலையைத் திட்டம் செய்கின்றன என்பதையும் நாம் மறக்கலாகாது.

(iii) அரசியல் வரலாற்றில் அரசர்கள், இராணிகள், போர்த் தலைவர்கள் போன்றவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றியும், அவர்கள் ஈடுபட்ட போர்களைப் பற்றியும் ஆகிய செய்திகள் அதிக அளவில் இடம் பெறலாயின. அரசியலைவிடப் போர் நிகழ்ச்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டன.

வரலாற்றின் ஒரு சிறப்பான பிரிவாக அரசியல் இருப்பினும் அதைத் தனித்து உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்குக் கற்பித்தால், வரலாறு கற்பிப்பதன் பலனை அடையமுடியாது. வரலாற்று நிகழ்ச்சிகளின் முக்கியப் பகுதிகளைக் கூறும்பொழுது, அரசியல் பற்றிய செய்திகளை மையமாகவைத்து, அதைச்சார்ந்த சமூக, பொருளாதார வளர்ச்சியையும் எடுத்துக் கூறுதல் சிறப்பான செயலாகும்.

(iv) சமூக வரலாறு (Social History)

E.A. பிரீமென் (E.A. Freeman) கருத்துப்படி 'வரலாறு கடந்த கால அரசியலாகும்.' (History is past politics). இக் கருத்தை மிகக் குறுகிய நோக்குடையதென்று முதன் முதலில் குற்றம் சாட்டியவர் ஹெர்பட் ஸ்பென்ஸர் (Herbert Spencer), வரலாற்றில் அரசியல் கருத்துகளை அதிக அளவில் விவரிக்கக் கூறுவதற்குப் பதிலாக நாட்டுமக்களைப் பற்றிய வர்ணனைக்குச் சிறப்பிடம் அளிக்கச் சில வரலாற்று ஆசிரியர்கள் முற்பட்டனர்.

இதற்கு முன்னோடியாக இருந்தவர் மெக்காலே (Macaulay) ஆவர். அடுத்து ஜான் ரிச்சர்ட் கிரீன் (John Richard Green) கி. பி. 1874-ல் 'ஆங்கில மக்களின் சுருக்கமான வரலாறு' (A short History of English people) என்ற நூலை வெளியிட்டார். அரசர்களைப்பற்றியும், அவர்கள் ஈடுபட்ட சண்டைகளைப் பற்றியும் அதிகமாக எழுதுவதற்குப் பதிலாக, மக்களின் வாழ்க்கையைப் பற்றி அதிகமாக எழுதினர். அவரது புத்தகத்தில் கிரெஸி (Battle of crecy) சண்டையைவிட சாஸர் (Chaucer) இலக்கியத் துறையில் ஆற்றியுள்ள தொண்டினைப் பற்றி விவரமாக எழுதியிருந்தார்.

சமூக வரலாறு (Social History) என்பது மனித இனத்தின் வரலாற்றைக் குறிக்கும் (History of Human society) என்ற வழக்கு உருவாயிற்று. 'சமூக வரலாறு என்பது அரசியல் விவரங்கள் தவிர்க்கப்பட்ட வரலாறு' (It is History with the politics left out) என்று ஜி. எம். டிரெவெல்யன் (G. M. Trevelyan) வரையறுத்துக் கூறியுள்ளார்.

எனவே சமூக வரலாற்றில் 'அரசியல் விவரங்கள், அரசர்களின் வமிசங்கள் (dynasties), அரசியல் அமைப்பு போன்ற தலைப்புகள் பின்னணியில் தள்ளப்பட்டு, சமூகம் பற்றிய தலைப்புகளாகிய மதம், நாட்டின் பொருளாதாரம், ஒழுக்க விதிகள் (morals), மக்களின் பழக்க வழக்கங்கள் (manners), உடை, கலை, இலக்கியம் போன்ற தலைப்புகள் சிறப்பிடம் பெறுகின்றன. சுருங்கக் கூறுவோமாயின் சமூக அமைப்புகளின் தோற்றம், வளர்ச்சி (origin and development of institutions) யைப் பற்றிக் கூறுவதே சமூக வரலாறு ஆகும்.

சமூக வரலாறு என்ற பிரிவு மிகவும் விரிவானதாகும். 'சமூக மாறுதல்' என்ருல் சமூகத்தில் ஏற்பட்டுள்ள எல்லா வகையான மாற்றங்களையும் குறிக்கும். விவசாயம், தொழில், கல்வி, குடும்பம், குடும்பவாழ்க்கை, உணவு, உடை, பொழுதுபோக்கு, உழைப்புக்

கூலி, வேலையளித்தல், இலக்கியம், கட்டடக்கலை, சாலை அமைத்தல், நகர் அமைக்கும் திட்டம், பாசனம், பழக்கவழக்கங்கள், சமூக நிலையங்கள், சட்டங்கள் — இவை பற்றிய முன்னேற்றங்கள், மாற்றங்கள் யாவும் சமூக வாழ்க்கையோடு பிணைக்கப்பட்டிருக்கின்றன. அரசியல், பொருளாதாரத் துறையில் ஏற்படும் மாறுதல்களும் சமூக வரலாற்றில் இடம் பெறவேண்டியவை. இவற்றை உள்ளடக்கிய ஒரு பாடத் திட்டத்தை உருவாக்குவது எளிமையான காரியமல்ல. அரசியல், வரலாறு தொடர்பின்றி சமூக வரலாறு பாடத்திட்டத்தை அமைப்பதும் முடியாததாகும். சமூக வரலாற்றின் பொருளடக்கத்தைப் பற்றிய செய்திகளை எவ்வாறு சேகரிக்க முடியும்? மாணவர்களுக்குத் தேவையான செய்திகள் யாவை? அவற்றை வகைப்படுத்துவதற்கு எந்தக் கோட்பாட்டைப் பின்பற்றுவது போன்ற பிரச்சினைகளை நாம் எதிர் நோக்கவேண்டியதாக இருக்கின்றது.

எனவே, ஒரு நாட்டின் வரலாற்றைக் கற்பிக்கும்பொழுது, ஒவ்வொரு பகுதியின் சிறப்புத் தன்மைகளை வலியுறுத்திக் கூற வேண்டும். அவற்றுடன் அப் பகுதி பாடப்பொருளுடன் இணைந்த பொருளாதாரம், மதம், பண்பாடுபற்றிய வளர்ச்சியைக் கற்பிக்க முயற்சி எடுப்பது இப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதாகும்.

### (v) பொருளாதார வரலாறு (Economic History)

**காரல் மார்க்ஸின்** (Karl Marx) கொள்கையைப் பின்பற்றியவர்கள் பொருளாதாரக் கோட்பாடுகளை விவரித்துக் கூறுகின்றனர். சமூக நடத்தைக்கு மூலகாரணம் பொருளாதார நிலைமையே என்று வாதிக்கின்றனர். போர்கள் ஏற்படுவதற்கும், சமாதானங்களை நிர்ணயிப்பதற்கும் பொருளாதாரமே முக்கிய கூற்றாகும். பொருளாதாரக் கருத்துகள் அரசியல் நிகழ்ச்சிகளைத் தோற்றுவிப்பதற்கும், இயக்குவதற்கும் காரணங்களாயிருக்கின்றன. அரசியல் போராட்டங்கள், சமய சச்சரவுகள், அறிவியல் வளர்ச்சியில் ஈடுபடுதல், கலை, முன்னேற்றம் — இவை எல்லாம் பொருளாதார அடிப்படையில் உருவாகின்றன. எனவே, வரலாற்று அறிஞரின் முக்கியப் பணி பொருளாதாரக் காரணங்களையும், அதன் பலன்களைப் பற்றிய செய்திகளையும் ஆராய்வதாகும்.

வரலாற்றில் பொருளாதாரக் கூற்று (Economic factor) மிகவும் முக்கியமானதாகும். அரசியல் கூற்றுக்கு இது வரையிலும் சிறப்பிடம் அளிக்கப்பட்டு வந்ததால், பொருளாதாரக் கூற்று வரலாற்றில் அதிகப் பங்கைப் பெற முடியவில்லை என்பதை மறுப்பதற்கில்லை.

மனிதனின் முன்னேற்றம், ஆர்வம் எல்லாம் பொருளாதார அடிப்படையில் அமைகின்றன என்று முடிவு செய்வதும் பொருத்த மானதல்ல. மனிதன் உண்பதற்கு மட்டுமே வாழ்வதில்லை: அவன் தன் செயலில் மனநிறைவு காண விரும்புகின்றான். தன் நாட்டிற்காகவும், சமயத்திற்காகவும் தனிப்பட்டவர்கள் செய்துள்ள தியாகங்கள்பற்றிய நிகழ்ச்சிகளை நாம் வரலாற்றில் காணலாம். மனிதனின் தனிப்பட்ட கூற்றைப் (personal factor) பொருளாதாரக் கோட்பாட்டை விரித்துரைப்பவர்கள் சரியாகப் புரிந்துகொள்ள வில்லை. பொருளாதார நிலைமைகள் பொதுமக்களை எவ்விதம் பாதிக்கின்றன என்பதைக் கூறுவதோடு, தனிப்பட்ட சில தலைவர் களின் செயல்கள் எவ்வாறு பொருளாதார, சமூக மாற்றங்களைப் பாதிக்கின்றன என்பதையும் அறியவேண்டும்.

உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குப் பொருளதார வரலாறு தனிப் பாடமாகக் கற்பிப்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வதில்லை. அதைத் தனிப்பாடமாகக் கற்பிப்பதையும் ஒப்புக்கொள்வதில்லை. கீழ்வகுப்பு மாணவர்களுக்குப் பொருளாதார வரலாறு கற்பிப்பதால் எந்தப் பலனையும் அடைய முடியாது. பொருளாதாரக் கருத்துக் களைப் பள்ளி மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளமுடியாது.

பொருளாதார வரலாறு, சமூகவரலாறு, மதவரலாறு, அரசியல் அமைப்பு வளர்ச்சி வரலாறு ஆகியவை பொது வரலாற்றிலிருந்து தனியாகப் பிரிக்கப்பட்டுக் கற்பிக்கப்படுகின்றன. உயர்தரப்பள்ளி களில் வரலாற்றின் பல்வேறு துறைகளை அறிமுகப்படுத்துவதை நாம் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

### (vi) அரசியல் அமைப்பின் வரலாறு (Constitutional History)

அரசியல் வரலாறுக்கு அடுத்தபடியாக அரசியல் அமைப்பின் வரலாறு ஒரு நாட்டின் அரசியல் அமைப்பையும் அது இயங்கும் முறையைப்பற்றி அறியவும் நமக்கு உதவுகின்றது. அரசியல் அமைப்பு என்பது 'சட்டத்தினால், சட்டம் வழியாக நிறுவப்பட்ட ஓர் அரசியல் சமூகத்தின் அமைப்பு; அதாவது, தெரிந்த அலுவல் களையும் தெளிவான உரிமைகளையும் உடைய நிலையான நிறுவனங் களைச் சட்டம் நிறுவியுள்ள ஓர் அரசியல் சமூக அமைப்பு', என **ஜேம்ஸ் பிரைஸ்** (James Bryce) விளக்குகிறார். மேலும், அரசாங் கத்தின் அதிகாரங்களையும், ஆளப்படுவோரின் உரிமைகளையும் இரண்டின் தொடர்புகளையும் ஒழுங்குபடுத்துகின்ற கொள்கை களின் தொகுப்பே அரசியலமைப்பு எனக் கூறலாம்.

அரசாங்கத்தின் அமைப்பு, அதன் உட்பிரிவுகள், அதுபற்றிய சட்டதிட்டங்கள், குடிமையின் தன்மை, குடிமக்களின் உரிமைகள்,

கடமைகள், நீதிநிர்வாகம், அரசின் தலைமைச் செயல்துறை, வருமானம், செலவினங்கள், நாட்டின் நிருவாக அமைப்பு போன்றவைகளெல்லாம் இப் பிரிவிலடங்கும். தற்காலத்தில் அரசியல் அமைப்பு எழுதப்பட்டு அதன்படி இயங்கி வருகின்ற முறை வழக்கிலுள்ளது. அமெரிக்க அரசியல் அமைப்பு திட்டவட்டமாக எழுதப்பட்டிருப்பதை ஒட்டி ஒவ்வொரு நாட்டிலும் அதன் அரசியல் சட்டம் இயற்றப்பட்டு வருகின்றது. அரசியலமைப்பு வரலாற்றில் அரசியல் நிறுவனங்களின் தோற்றம், வளர்ச்சியைப் பற்றி கூறப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பாராளுமன்றம், அதன் வளர்ச்சி, நிர்வாக அலுவலகங்கள் போன்றவற்றின் செயல்முறைகள் தெளிவாக்கப்பட்டுள்ளன.

அரசியல் அமைப்பு வரலாறு எளிய முறையில் மாணவர்களுக்குக் கற்பிக்கவேண்டியதாகும். மக்களாட்சி நடைபெறும் காலத்தில் வாழும் மாணவர்கள், பிற்காலத்தில் அதன் நிர்வாகத்தில் உரிய பங்கு பெறுவதற்கும், சிறந்த குடிமகனுகைப் பணியாற்றுவதற்கும், பிறநாட்டினருடன் சேர்ந்து வாழ்வதற்கும் தன்னுட்டு அரசியலமைப்போடு மற்றைய நாடுகளின் அமைப்பைப் பற்றியும் சுருக்கமான அளவில் மாணவன் கற்கவேண்டும். மக்களாட்சிக்காலத்தில் இது இன்றியமையாததாகும். தொடக்கப் பள்ளிக் காலத்தில் குடிமை ஆட்சி (civics) என்ற வடிவத்திலும், மேல் வகுப்புகளில் சற்று விரிவாகவும் கற்பிக்க வரலாற்றுப் பாடத் திட்டத்தில் இப் பிரிவு இடம் பெறுகின்றது.

### (vii) மதம், கலை, கட்டடக்கலை ஆகியவற்றின் வரலாறு (History of religion, art and architecture)

கடவுள், கடவுளுடன் மனிதன் தொடர்புகொள்ள வேண்டிய தேவை போன்ற கருத்துகள் மதம் அல்லது மதத்தின் அடிப்படைகளாகும். மதகுருமார்கள், வழிபாட்டு முறைகள், சடங்குகள் போன்ற மத அமைப்புகள், மதக் கருத்துகள் சமூகத்தில் பரவி மக்களுக்குப் பயன்பட உதவுகின்றன. மனித சக்திக்கு அப்பாற்பட்ட உயர்ந்த சக்தி ஒன்று உண்டு; அச்சக்தியே உலகத்தை இயக்குகிறது என்னும் நம்பிக்கையே மதங்களின் அடிப்படை. மனித சமூகத்தின் முன்னேற்றத்தில் மதங்களுக்கும், மத நிலையங்களுக்கும் நிச்சயமான ஒரு பங்கு உண்டு.

பண்டைக்கால இயற்கை வழிபாடு, நீத்தோர் வழிபாடு போன்றவற்றில் மதம் தொடங்கியது. பின்னர் இது பல கடவுள்களில் நம்பிக்கையாக மாறி, ஒரே கடவுள் கொள்கையாக இன்று மலர்ந்துள்ளது என்று சமூகவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

அறநெறிகளுக்கு மதமே அடிப்படையாக அமைகிறது. அறநெறி போதனை, மதப் பணிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. 'கடவுள் நம்பிக்கை அறநெறி வாழ்க்கையின் ஆதார விதியாகும்.'

எனவே, வரலாற்றில் மதம் தோன்றியதுபற்றிய விவரம் இடம் பெறுகின்றது. மதத்தின் தேவையை மனித இனம் எப்பொழுதும் உணர்கின்றது. 'கடவுள் ஒருவர் தோன்றவில்லை என்றால், அவரை புதிதாக அமைக்கவேண்டியது (invent) அவசியம்' என்று **வால்டேர்** கூறியுள்ளார். சமயங்களின் தோற்றங்களைப்பற்றியும், அவற்றின் மறைவுகளைப் பற்றியும் வரலாறு எடுத்துரைக்கின்றது. மனித வரலாற்றில் பெரும் மாற்றங்களை மத இயக்கங்கள் ஏற்படுத்தி யுள்ளன. புத்தர், இயேசு, தீர்க்கதரிசி போன்றவர்கள் புதிய மதத் தைத் தோற்றுவித்ததும், ஐரோப்பாவில் ஏற்பட்ட மத சீர்திருத்த இயக்கமும், இந்தியாவில் தோன்றிய பக்தி மார்க்கமும் இதற்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

நம் நாடு மதச்சார்பற்ற நாடு எனப்படும்போது நம் நாட்டில் மதங்களுக்கு இடமில்லை என்று பொருளன்று. நம் நாட்டு அரசுக் கென்று ஒரு தனிப்பட்ட மதக் கொள்கை கிடையாது. நம் நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் தமது மதக் கருத்துகளுக்கு உகந்த வகையில் வாழ்க்கை நடத்த உரிமை பெற்றவர்கள் என்பதுவே மதச்சார்பற்ற அரசு என்பதன் உண்மைப் பொருளாகும்.

ஆனால், குறுகிய, வெறித்தன்மை கொண்ட மதங்களினால் நாம் பயன்பெறமுடியாது. இத்தகைய மதங்களை உண்மை மதங்களாக எண்ணுவது தவறு. வரலாற்றுப் பாடத்தில் மதக் கருத்துகள், மதத்தின் தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி போன்றவைகள் இடம் பெறுவது இன்றியமையாதனவாகும். மதக் கருத்துகளைத் தனிப் பாடமாக மாணவர்களுக்குக் கற்பிப்பதைவிட, வரலாற்றின் நிகழ்ச்சிகளைக் கூறும் பொழுதும், கால வரிசையைப் பின்பற்றி வரலாறு கற்பிக்கும் பொழுதும் அந்தந்தக் காலத்தில் தொடர்பு கொண்ட மத இயக்கங்களைக் கூற வேண்டியது வரலாற்று ஆசிரியரின் கடமையாகும்.

மதக் கருத்துகளைக் கற்பிப்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். புறவயத் தன்மையில் மதத்தைப் பற்றி விவரித்துக்கூற வேண்டும். எல்லா மதத்தின் தத்துவங்களையும் எளிய முறையில் மாணவர்களுக்கு விளங்கும்படிச் சீரமைத்துச் சுருக்கமாக வரலாற்றுப் பாடத் திட்டத்தில் இடம் பெறச் செய்யலாம்.

**கலை**

கலைகளும், மதமும் மனிதனது மனவெழுச்சிகளின் உயர் வடிவங்களாகும். ஓவியம், சிற்பம், இலக்கியம் ஆகியன யாவும் கலைகள் என்பதுள் அடங்கும். கலைகளினுல் உருவாக்கப்படும் அழகுப்பொருள்கள் பண்பாட்டின் முக்கியப் பகுதிகளில் ஒன்ருகத் திகழ்கின்றன. கலைகள், மிக்க கல்விப் பயன் வாய்ந்தவை. வாழ்க்கையைச் சீர்படுத்தி உயர்த்தும் கருவியாகவும் கலைகள் அமைகின்றன.

அழகினை அனுபவிப்பதற்கும், கவிதை, இசை, ஓவியம் போன்ற துறைகளில் பல்வேறு அழகுப் பொருள்களைக் தமது ஆற்றல் கொண்டு தாமே படைப்பதற்கும் கலைக்கல்வி பல வாய்ப்புகளை மாணுக்கர்களுக்கு ஏற்படுத்தித் தருவதாகும்.

இலக்கியம், செய்யுள், இசை போன்றவற்றில் சுவைத்தல் பாடங்கள் அழகுணர்வு திறன் வளர்ச்சிக்கு உதவும். கவிதைகள், கலைகள், நாடகம், கைப்பணிகள் ஆகிய துறைகளில் அழகுப் பொருள்களைத் தமது ஆற்றலின் துணைக் கொண்டு தாமே படைக்கும் வாய்ப்புகள் பள்ளியிலே மாணுக்கர்களுக்கு அளிக்கப் படவேண்டும். நல்ல திரைப்படங்கள், வானெலியின் இசை, கலை நிகழ்ச்சிகள் ஆகியவை மற்றும், கலைப்பொருட்காட்சிகள், கல்விப் பயணங்கள் போன்றவையும் மாணுக்கர்களது கலையுணர்வு வளர்ச் சிக்குப் பயன்படுத்தப்பட வேண்டும்.

ஒவ்வொரு நாட்டின் கலை வளர்ச்சியைப்பற்றித் தனிப் பாடமாக அமைத்துக் கற்பித்தல் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு எளிதில் புரிவது கடினமானதாகும். எனினும், நாட்டின் பண்பாட்டு வளர்ச்சியைப்பற்றி அறிவதற்குக் கலை வளர்ச்சியைப் பற்றிய அறிவு இன்றியமையாததாகும். நாட்டின் வரலாற்றினைப் பல காலப் பகுதி களாகப் பிரித்துக் கற்பிக்கும்பொழுது, ஒவ்வொரு காலப் பிரிவிலும் அடங்கும் விவரங்களைக் கற்பிக்கத் திட்டமிடும்பொழுது, அக் காலப் பகுதியில் அடங்கும் கலை வளர்ச்சியைப்பற்றிக் கூறினுல் மாணவர் களுக்கு எளிதில் விளங்கும். எடுத்துக்காட்டாகக் கூறுவோமாயின் மொகலாயர் காலத்து வரலாற்றைக் கற்பிக்கும்பொழுது, பாபர், ஹுமாயூன், ஜஹாங்கீர், ஷாஜகான் ஆட்சியின் காலத்தில் இலக் கியம், கலை, கட்டடக்கலை எவ்வாறு ஆதரிக்கப்பட்டன என்பதை எடுத்துக்கூறும் முறையைப் பின்பற்றலாம்.

**கட்டடக் கலை**

கட்டடம், கட்டடக் கலையாக இருக்க வேண்டுமாயின், அது பார்ப்பவரின் கற்பனையைத் தூண்டக்கூடியதாக இருக்கவேண்டும்,

கற்பனை பல வகைகளில் தூண்டப் பெறலாம். வரலாற்றுத் தொடர்பால் சில கட்டடங்கள் கற்பனையைக் கவரக்கூடும். வேறு சில அவற்றின் புனிதத்தன்மையால் மக்களைக் கவரக்கூடும். அவை அழகுள்ளதாக இருந்தால் அவற்றைக் கட்டடக்கலை என்று கருதலாம்.

பண்டைக் காலத்தில் உலகத்தின் பல்வேறு பாகங்களிலும் ஆங்காங்குள்ள சூழ்நிலைகளுக்கேற்ப தனித்தனியான கட்டடக்கலை மரபுகள் தோன்றி வளர்ந்தன. அக் காலக் கட்டடங்களிலிருந்து பண்டை நாகரிகம், வரலாறு, பண்பாடு முதலியவற்றைப்பற்றி அறிந்துகொள்ளலாம். இடைக்காலத்தில் கட்டடக் கலையின் அழகைச் சிற்பங்களாலும், ஓவியங்களாலும் உயர்த்தினர்.

இந்தியக் கட்டடச் சிற்பக்கலை இந்தியாவிற்கே உரியது. இந்தியர் பழங்காலத்திலிருந்தே கட்டடச் சிற்பக் கலையைப் பேணி வருகின்றனர். பண்டைக் கட்டடச் சிற்பச் சிதைவுகள், பண்டை இந்திய நாகரிகத்தின் மேன்மைக்குச் சான்றுகளாக உள்ளன. மொகலாய ஆட்சிக்காலம், இஸ்லாமியக் கட்டடச் சிற்பக் கலையின் பொற்காலமாகும். இந்து இஸ்லாமிய, பாரசீக மரபுகள் ஆகிய மூன்றும் கலந்து கட்டடச் சிற்பத்தை வளப்படுத்தின. ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கியபின் ஐரோப்பியக் கட்டடக்கலை இந்தியாவில் இடம் பெற்றது.

பொதுவாக ஒவ்வொரு நாட்டின் கலையும், அந்தந்த நாட்டின் சமூக பொருளாதார நிலையினைப் பொறுத்தே அமையும். இந்திய நாட்டின் கலை அதனுடைய பழைய இலக்கியத்தைப்போன்றே, மத நிலையை ஒட்டியே எழுந்தது. கட்டடக் கலையை எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு சிற்பியும் மதத்திற்காகத் தனது கடமையைச் செய்வதாகவே எண்ணி, அப் பணியை மேற்கொண்டான். வாழையடி வாழையாக, அவனது முன்னோர்கள் பெற்ற அனுபவத்தின் திரட்சியே அவனது வேலைப்பாடாகும்.

**வினாக்கள்**

(1) உள்ளூர் வரலாற்றின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடவும்.

(2) உள்ளூர் வரலாற்றைக் கற்பிக்கும்பொழுது மாணவர்கள் ஈடுபடும் செயல் முறைகளைக் கூறுக.

(3) (அ) நாட்டு வரலாற்றைக் கற்பிப்பதன் முக்கியத்துவத்தை விளக்குக.

(ஆ) உலக வரலாற்றின் தொடர்புகொண்டு நாட்டு வரலாற்றைக் கற்பிக்கவேண்டியதின் அவசியத்தை எடுத்துக் கூறவும்.

(4) (அ) பாடத்திட்டத்தில் உலக வரலாறு சேர்க்கப்படவேண்டியதற்கு நீவிர் கொடுக்கும் காரணங்கள் யாவை ?
(ஆ) உலக வரலாற்றைக் கற்பிப்பதன்மூலம் பெறும் பலன்கள் யாவை?

(5) கதைகளின் வகைகள் யாவை? ஏன் அவை தொடக்கப் பள்ளி மாணவர்களுக்குக் கூறவேண்டும்?

(6) 'வாழ்க்கை வரலாற்றுக் கொள்கை'யை மறுத்துக் கூறும் காரணங்கள் யாவை?

(7) **குறிப்பு வரைக**

அரசியல் வரலாறு; சமூக வரலாறு; பொருளாதார வரலாறு; நாட்டு வரலாறும், இந்திய தேசிய உணர்வும்.

(8) வரலாற்றுப் பாடத்திட்டத்தில் அரசியல் அமைப்பின் வரலாறு ஏன் இடம்பெற வேண்டும்?

(9) மதமும், கலையும், கட்டிடக் கலையும்—வரலாற்றுப் பாடத் திட்டத்தில் சிறப்பான இடத்தினைப் பெறவேண்டியதின் முக்கியத்துவத்தை விளக்கவும்.

## 2. தரப்படுத்துதல்

## (Gradation)

(I) **பள்ளி வகுப்புப் பிரிவுகள்** (Divisions of the School Course)

வரலாறு பாடங்களைத் தரப்படுத்தி பள்ளிக்கூடத்தில் வகுப்புகளுக்கு ஏற்பக் கற்பிக்கவேண்டும். பள்ளிக்கூடங்களில் இரண்டு நிலைகள் உள்ளன. அவையாவன:

(i) தொடக்கநிலை (Primary Stage)

(ii) இடை நிலை (Middle Stage)

(iii) உயர்நிலை (Secondary Stage)

தொடக்கநிலைப் பிரிவில் அடிப்படை வகுப்புகளும், இடைநிலை வகுப்புகளும் அடங்கும். ஒன்றுமுதல் எட்டு வகுப்புகள் வரை

இப்பிரிவில் அடங்கும். தொடக்கப்பள்ளி வகுப்புக்களில் ஆறு வயது முதல் பதினொன்று வரையில் பயிலும் மாணவர்களும், இடைநிலை வகுப்புகளில் 11 முதல் 14 வயது வரையிலுமுள்ள மாணவர்களும் கற்பார்கள்

6 முதல் 10 வயது வரையிலுமுள்ள மாணவர்கள் 5ஆவது வகுப்பு வரையிலும் கற்பார்கள். அவர்கள் கதைகள் கேட்க மிகவும் விருப்பமுள்ளவர்களாக இருப்பர். வரலாற்று நிகழ்ச்சிகளைக் கதைகள் மூலமாக எளிமையாகக் கற்பிக்கவேண்டும். கதைகளை உற்சாகத்துடன் எடுத்துக்கூறவேண்டும். படங்கள், விளக்கப் படங்கள், மாதிரி உருவங்கள், தேசப் படங்களைப் பயன்படுத்தி வரலாற்றுக் கதைகள் கற்பிக்கப்பட திட்டமிடவேண்டும். தொடக்கப் பள்ளி காலத்தில் கரும்பலகையை அதிக அளவில் பயன்படுத்திக் கற்பிக்க வேண்டும். பாடப் புத்தகமும் அறிமுகப் படுத்துவது இன்றியமையாதது. தொடக்கப் பள்ளி வகுப்புகளிலிருந்தே கால அறிவையும் மாணவர்களுக்குப் புகட்டவேண்டும்.

இடைநிலை வகுப்புகளில் 11 முதல் 13 வயது மாணவர்கள் பயில்வர். இந்த வயது மாணவர்கள் கதை கேட்க ஆர்வமில்லாதவர்களாகயிருப்பார்கள். அவர்களிடம் நினைவாற்றல், ஆய்வுத்திறன், முதலியவை காணப்படும். எனவே, உளநூல் கோட்பாட்டுக்கு இணங்க வரலாறு கற்பிக்க இவ்வயது மாணவர்களுக்குத் திட்டமிட வேண்டுமென்பது விளங்கும். வரலாற்று நிகழ்ச்சிகளின் இயல்புகளைப் பற்றியும், நாகரிக வளர்ச்சியின் பயன்கள் பற்றியும் அறிய விரும்புவார்கள். கால அறிவும் இதிக அளவில் இவர்களுக்குத் தேவைப்படுகிறது.

வரலாற்றுச் செய்திகளை ஒழுங்கமைத்து, காலவரையறை முறையிலும், சமூகப்பிரச்சினைகளைத் தொடர்புபடுத்தியும் கற்பிக்கத் திட்டமிடுவது இன்றியமையாதது.

மாணவர்கள் கற்றதைத் திரும்பப் படிக்க உதவும் வகையில் எழுதப்பெற்ற பாடப் புத்தகங்களும், 'செய்து கற்றல்' விதிக்கு ஏற்பச்செயல் முறைகளும் கையாளப்பட்டு வரலாறு கற்பிக்க வேண்டியபருவமாகும்.

வீட்டுப் பயிற்சியும், கரும்பலகைச் சுருக்கமும், படங்கள், தேசப் படங்கள் போன்றவற்றை அதிக அளவில் பயன்படுத்துவதும் இவ் வயது மாணவர்களின் தேவைகளாகும்.

**உயர்நிலை வகுப்புகள்**

ஒன்பதாவது, பத்தாவது வகுப்பில் படிக்கும் 14 முதல் 16 வயது வரையிலும் உள்ள மாணவர்கள் குமரப் பருவத்தை (adolescence) அடையும் நிலையிலுள்ளவர்கள். இந்த வயது மாணவர்கள் தாங்களே செய்து கற்றல் முயற்சியில் ஈடுபடுவார்கள். அறிவியல் முறையில் பிரச்சினைகளைத் தீர்க்க முயல்வார்கள்.

கரும்பலகைச் சுருக்கத்தைப் பயன்படுத்திப் பாடத்தைக் கற்கும் முயற்சியில் ஈடுபடுவர். பாடத்தை முன்கூட்டித் தயாரிக்கப் பாடப் புத்தகத்தைப் பயன்படுத்த முன்வருவார்கள். 'ஒன்றுகூடி ஆராய்தல்' 'மூலமுறை' 'ஆய்வுக்கூடமுறை' போன்றவற்றைப் பயன்படுத்திக் கற்பிக்க முயல்வது உளநூல் தத்துவத்திற்கு ஏற்றதாக இருக்கும். உலக வரலாற்றுப் பின்னணியில் வரலாறு கற்பிக்கப் பாடத் திட்டம் இவ்வாறு மாணவர்களுக்கு ஏற்ப அமைக்கப்பட வேண்டும் என்பதை நாம் உணர வேண்டும்.

## II பாடப்பொருளைத் தேர்ந்தெடுப்பதில் மாறுதல் உண்டுபண்ணும் கோட்பாடுகள் (Theories influencing selection of materials)

### (அ) இயல்பான நாட்டம், கவர்ச்சிபற்றிய கோட்பாடுகள் (Doctrine of natural tastes and interests)

வரலாற்றுப் பாடப்பொருளைத் தரப்படுத்துவதற்கு உதவும் சரியான கோட்பாடுகள் ஒன்றுமில்லை. கணிதம் போன்ற பாடங்களில் செய்திகளைத் தரப்படுத்துவதற்குப் பின்பற்றும் முறைகள் எளிமையாக அமைந்துள்ளன. ஓர் இலக்கம் உள்ள எண்களைக் கூட்டுதல், பிறகு இரண்டு இலக்கங்களைக் கூட்டுதல் போன்றவைகளும், பிறகு கழித்தல், பெருக்கல், வகுத்தல், பின்னங்கள் பற்றிக் கூறுதல் போன்ற முறைகளைப் பின்பற்றிக் கற்பிக்கத் திட்டமிடப்படும். கணிதத்திலிருந்து எழுத்துக் கணக்குக்கும், வடிவக்கணிதத்துக்கும், முக்கோணக் கணக்குக்கும் மாணவர்களை அறிமுகப் படுத்தத் திட்டமிடப்படுகின்றது. அவ்வித முறைகளை வரலாற்றுப் பாடத்திற்கு அமைக்கமுடியுமா? வரலாற்றுச் செய்திகளை இவ்விதமாக முறைப்படுத்த இயலாது. எனினும், வரலாறு தொடக்கப் பள்ளியிலிருந்து கல்லூரிப் படிப்புவரைக்கும் கற்பிக்கப்பட்டு வருவதிலிருந்து சில கோட்பாடுகளைப் பின்பற்றி வரலாற்றுப் பாடப்பொருளை தேர்ந்தெடுத்துக் கற்பிக்கமுடியும் என்று நாம் கூறஇயலும்.

**முதலாவதாக,** மாணவர்களின் இயல்பான நாட்டமும், கற்றலில் அவர்களுக்கு உள்ள கவர்ச்சியையும் எடுத்துக் கூறுவோம். வரலாற்றுப் பாடத்திற்கு அறிவியல் கூறும், கலைபற்றிய கூறும் உண்டென்பதை நாம் பார்த்தோம். பாடத்தில் கவர்ச்சியையும்,

பயனையும் அடைவதற்கு நாட்டமும், இன்ப உணர்ச்சியையும், கட்டுப்பாட்டை வளர்க்கவும் வரலாற்றுப் பாடத்தினுல் முடியுமென் பதும் நாம் அறிந்தவை, எனவே, மிகவும் எளிமையாக இப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம். தொடக்கப்பள்ளி மாணவர் களுக்குக் கவர்ச்சிப் பகுதியைப் பயன்படுத்தி (interest side) பாட விவரங்களைத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். வரலாறு கற்பிப் பதால் ஏற்படும் பயன்களை உறுதிப்படுத்துவதற்கு மேல் வகுப்பில் கற்பிக்கும்பொழுது பார்த்துக்கொள்லாம். 'வரலாற்றுப் பாடம்' என்ற நூலில் ஆசிரியர் **A. A. காக்** (A. A. Cock) கூறுவதாவது: பன்னிரண்டு வயதிற்கு முன்பு முக்கியமான நிகழ்ச்சிகள் பற்றிய வரலாறு கற்பிக்க வேண்டியதில்லை; கடந்தகாலத்தில் நடந்த நிகழ்ச்சிகளையும், வாழ்ந்த மக்களைப் பற்றியும் அறிந்து கொள் வதற்கு மாணவர்களுக்கு ஆவலுண்டாகும் வகையில் சிறந்த கதை களைக் கூறவேண்டும். ஆனல் 12 வயதுக்கு முன்பாக வரலாறு கற்பிக்க வேண்டியதில்லை என்று கூறுகின்றுர்.

மாணவர்களின் மனநிலை வளர்ச்சிக்கும், வரலாற்று எழுத் தாண்மைக் கலை வளர்ச்சிக்கும் ஒரு வித ஒப்புமையை ஆசிரியர் **கிட்டிங்** எடுத்துக் காட்டுகின்றுர். மூன்று வித நிலையைப்பின்பற்றி வரலாற்று எழுத்தாண்மைக்கலை வளர்ந்துள்ளது. முதலில் வரிசை யாகக் கூறவும் (narrative), இரண்டாவது நிலையில் அறிவூட்டத் தக்கதாகவும் (instructive), மூன்றுவது நிலையில் காரண காரிய விளக்கம் (cause and effect) கூறுவதாகவும் வரலாற்று எழுத் தாண்மைக்கலை வளர்ந்துள்ளது. இவ்விதமே மாணவனுடைய நாட்டமும் (attitude) கவர்ச்சிபற்றியதாகவும், அறிவுறுத்துவ தாகவும், சிந்திக்க வைப்பதாகவும் வளர்ச்சி பெறுகின்றது என்பதை நாம் அறிகின்றோம். மாணவர்களின் புரிந்துகொள்ளும் திறமையின் அடிப்படையைக்கொண்டு மூன்று வித நிலையை ஆசிரியர் **கிளாப்பர்** கூறுகின்றுர். அவையாவன: அறிமுகப்படுத்தல் (Presentative) மீட்டுண்டாக்கும் நிலை (Representative or reproductive), சிந்திக்கும் (Thought stage) என்பனவாகும். இந்த அடிப்படையை மேலோட்ட மாகக்கொண்டு மாணவர்களின் மனநிலையை நாம் காணமுடியும். இந்த நிலைகளை மனத்தில் கொண்டு மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டிய பாடப்பொருளைப் பாடத் திட்டத்தில் இடம்பெறும் வகையினை முடிவுசெய்யவேண்டும்.

### (ஆ) பண்பாட்டு வரன்முறைக் கொள்கை (Culture epoch Theory)

ஸ்டான்லி ஹால் (Stanley Hall) கருத்தின்படி, மனித இனம் நாகரிக வளர்ச்சியில் பல நிலைகளைக் (யுகங்களை) கடந்து வந்திருக்

கின்றது. குழந்தைகளும் தங்கள் வளர்ச்சிக் காலத்தில் மனித இனம் கடந்துவந்த நிலைகளை மறுபடியும் அனுபவிக்க வேண்டி யிருக்கின்றது. சுருக்கமாகக் கூறுவோமாயின், குழந்தைகளின் வாழ்க்கை வரலாற்றிலுள்ள யுகங்களை மனித இன வளர்ச்சியின் நிலைகளோடு ஒப்பிட்டுக் கூற முடியும்.

மனித இனம் கடந்துவந்த பண்பாட்டு நிலைகளுக்கு ஏற்பக் குழந்தைகளின் மன வளர்ச்சியும் அதே நிலைகளைக் கடந்து வருகின்றது என்று கூறப்படுகின்றது.

(i) நாகரிகம் தோன்ற ஆரம்பித்த காலத்தில் மக்கள் எதிர் கால நிகழ்ச்சியைப்பற்றி நினைக்காமலும், விளையாட்டிலும், சண்டை செய்வதிலும், குடிப்பதிலும், உண்பதிலும் ஆர்வமுற்று வேட்டையாடும் வாழ்க்கையை அனுபவித்தனர். இவ்விதத் தன்மை களை இன்னும் குழந்தைகளிடம் நாம் காணலாம்.

(ii) கற்பனைபற்றிய மூட நம்பிக்கைகள், இயற்கை இகந்த நிலை பற்றிய விருப்பம், தீவிரச் செயலில் ஆர்வம், கூட்டத்துடன் இணைந்து செயலாற்றுதல் போன்ற பண்புகள் மேய்த்தலில் ஈடுபட் டிருந்த நிலையில் வாழ்ந்த மக்களிடம் காணப்பட்டவைகளாகும். இந்தப் பண்புகளை மாணவர்களின் இளமைப் பருவத்தில் நாம் காணலாம்.

(iii) ஒர் இடத்தில் நிலைத்து வாழும் தன்மை, பயிர்த்தொழிலை மேற்கொள்ளுதல், வாணிபம், கை வேலைகளில் ஈடுபடுதல், அறிவியல் பற்றிய கண்டுபிடிப்புகள் போன்ற பண்புகளை மிகவும் நாகரிகம் முதிர்ச்சிபெற்ற நிலையில் நாம் காண்கின்றோம். பகுத் தறிந்து செயலாற்றும் திறன் பிறகு உருவாகின்றது. இந்தப் பண்புகளைக் குமரப் பருவத்தினரிடம் நாம் காணலாம்.

இளம் மாணவர்களுக்குக் குழந்தைப் பருவ வரலாற்றையும், இளமைப் பருவத்தினருக்கு இளமைப் பருவ வரலாறும், குமர நிலையிலுள்ள மாணவர்களுக்குக் குமரப்பருவ வரலாறும் கற்பிக்க வேண்டும் என்பதே பண்பாட்டு வரன்முறைக் கொள்கையின் கருத்தாகும்.

**இக் கொள்கைப் பற்றிய மதிப்பீடு** (An estimate of this theory)

(i) தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு வரலாறு கற்பித்தல் வேட்டையாடும் காலத்தில் துவங்கி அதுபற்றிய விவரங்களோடு கற்பித்தல் முடிவுற்றால், தொடக்கப்பள்ளியோடு படிப்பை முடிக்கும்

மாணவர்களுக்குப் பிற்காலத்திய நாகரிக முன்னேற்றங்களைப் பற்றி அறிவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடும்.

எனவே, இந்தப் பருவத்திலுள்ள மாணவர்களுக்கும் வரலாறு பற்றிய எல்லா விவரங்களையும் சுருக்கமாகவும் எளிமையானதாகவும் கற்பிக்கத் திட்டமிடல் வேண்டும்.

(ii) உலகத்தின் பல பகுதிகளில் வாழும் மக்களின் நாகரிக வளர்ச்சி ஒரே சீராக இருக்குமென்ற கருத்திலும், அவ்வித வளர்ச்சிக்கு எற்பக் குழந்தைகள் வளரும் நிலைகள் உள்ளன என்ற அடிப்படையில் பண்பாட்டு வரன்முறைக் கொள்கை உள்ளது. இந்த இரண்டுவிதக் கருத்துகளும் தவறானவை. சமூக வளர்ச்சியில் மக்கள் இனம் வேறுவிதமான முன்னேற்றங்களை அடைந்து வந்துள்ளன. இப்பொழுது உலகின் பல பகுதிகளில் வாழும் மனித இனத்தைப் பார்த்தால் அவர்களின் படிமுறை வளர்ச்சி வேறு பட்டிருப்பதை நாம் பார்க்கலாம். ஒரவேிதமான நிலையைத் தாண்டி மக்கள் இனம் முன்னேற்றம் அடையும் என்ற நியதி ஒன்றும் இல்லை. எடுத்துக்காட்டாக, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு ஜப்பான் நாடு நாகரிக வளர்ச்சியில் இடைக்கால நிலையிலிருந்தது. மிகவும் குறுகிய காலத்தில் நவீனகால நாகரிக நிலைக்கு ஒரேயடியாகத் தாவி வந்துள்ளது. இவ்விதமே குழந்தைகளில் பலரும் பிறரைப்பின்பற்றி அதிதீவிரமாக வளரும் தன்மையைப் பெற்றுள்ளனர்.

(iii) குழந்தைப்பருவம் பிடிவாதத் தன்மையும், கற்பனையில் ஈடுபாடுமுள்ளதால் மனித வளர்ச்சியின் காட்டுமிராண்டி நிலைக்கு ஒப்பிடுவது சரியல்ல. ஆதிகால மனிதன் தன் சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்க்கையைத் துவக்கினான். குகை மனிதன் நிலைக்குத் தற்காலக் குழந்தைகளின் மனநிலையை ஒப்பிடுவது பொருத்தமாகாது. தற்காலக் குழந்தைகள் சூழ்நிலைக்கு ஏற்ப வளர்ச்சிபெறும் என்ற உண்மையை உளநூல் எடுத்துரைக்கின்றது. எனவே, குழந்தைகளின் அனுபவங்கள் முன்னேற்றப் பாதையிலிருக்கும்பொழுது ஏன் குகையில் வாழும் மனித நிலைக்கு அவற்றை அழைத்துச் செல்ல வேண்டும்? இதனால் இக்கொள்கையைப் பின்பற்றிப் பாடத்திட்டம் சீர் அமைப்புப் பெறுவது சிறந்ததல்ல என்பது நன்கு விளங்கும். எனினும், இந்தக் கோட்பாட்டுக்கு இணங்க நாம் மேற்கொள்ளும் கற்பிக்கும் முறைகளை வகுக்க இயலும். குழந்தைகளின் மனநிலை கற்பனையிலும், மனவெழுச்சியிலும் ஆர்வமுற்று இருக்குமாதலால், நாம் துவக்கப்பள்ளி வகுப்புகளில் கதைகளையும், புராணக்கதைகளையும் கூறி வரலாற்றுப் பாடம் கற்பிக்க ஆரம்பிக்கலாம். கதைகள்

வாயிலாக இந்திய வரலாற்றைத் தற்காலம் வரையிலும் உள்ள செய்திகளை உள்ளிட்டுக் கற்பிக்கக் கூடும் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

### (இ) அண்மையிலிருந்து சேய்மைக்குச் செல்லும் தத்துவம் (Proceeding from the near to the remote)

தொடக்க வகுப்பு மாணவர்களுக்குத் துணைக் கருவிகள், கைவேலைகள் அளித்தல் முறைகளைப் பயன்படுத்திக் கதைகள் மூலம் வரலாறு கற்பிக்கவேண்டும் என்று ஒரு சாரார் கூறுகின்றனர். மற்றொரு சாரார் அருகிலிருக்கும் விவரங்களைக் கூறி வரலாறு கற்பிப்பதைத் துவக்கவேண்டுமென்றும் கூறுகிறார்கள். மாணவர்கள் சுற்றுப்புறத்திலுள்ள வரலாற்று விவரங்களை முதலில் கற்று அதன் பிறகு நாட்டைப் பற்றியும், மற்ற உலக நாடுகளைப் பற்றியும் கற்பிக்கப்பட வேண்டும் என்பது அவர்களின் கூற்றாகும்.

உள்ளூர் வரலாற்றைத் தொடக்கப்பள்ளி வகுப்புகளில் கற்பிப்பதன்மூலம் வரலாற்றை அறிமுகப் படுத்தவேண்டும். உள்ளூர் வரலாறு கடந்த காலத்திற்கு அறிமுகமாக இருப்பதுடனில்லாமல் எல்லா நிலையிலும் கடந்த காலத்தை விவரிக்கவும், விளக்கமாகவும் அமைகிறது. உள்ளூர் வரலாற்றில் மாணவர்கள் நேரிடையாக ஈடுபடுவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன. தங்களுடைய கிராமம், நகரம் ஆகியவற்றின் வரலாற்றைத் தெரிந்துகொள்ள மிகவும் ஆவலாக இருப்பார்கள். உள்ளூர் வரலாற்றுடன் நாட்டு வரலாற்றை இணைத்து மேல்வகுப்புப் பாடத் திட்டத்தில் அமைக்க முற்படவேண்டும்.

தற்கால வரலாறு பல சிக்கல்கள் நிறைந்துள்ளனவென்றும், அவற்றைப் பற்றிக் கீழ்வகுப்பு மாணவர்களுக்குக் கற்பித்தால் விளங்காது என்றும் சிலர் கூறுவார்கள். எனினும், இக்கால நிகழ்ச்சிகளையும், சமீபகால வரலாற்றையும் மாணவர்களுக்குக் கற்பிக்கும் முறையில் பாடத்திட்டம் அமையவேண்டும். பள்ளி மாணவர்களுக்கு விளங்கும் செய்திகளை எளிமைப்படுத்திக் கற்பிக்க முயற்சியெடுத்தால் வரலாற்றில் பற்றும், ஆர்வமும் மாணவர்களுக்கு ஏற்படும்.

வரலாறு உள்ளூரில் ஆரம்பித்துப் படிப்படியாக விரிந்து கொண்டே இருக்கவேண்டும். காலத்தை எடுத்துக்கொண்டால் வரலாறு நிகழ்காலத்தில் தொடங்கி, கொஞ்சம், கொஞ்சமாகக் கடந்த காலத்திற்குப் போகவேண்டும். இக் கோட்பாட்டை அப்படியே ஏற்றுப் பாடத்திட்டம் தயாரிக்கப்படாவிட்டாலும் இதில்

அடங்கியுள்ள சில சிறப்பு அம்சங்களை மனத்தில் கொள்ள வேண்டும்.

**(ஈ) பாடப்பொருளைத் தேர்ந்தெடுப்பதற்கானச் சிறப்பான நோக்கு (Ideal approach to selection of materials)**

**(குழந்தையின் மனவியலின் வளர்ச்சிக்கும் பாடப் பொருளின் தேவைக்குமான ஏற்ற முறை)**

மாணவர்களிடம் இயல்பாகக் காணப்படும் விருப்பங்களும், வாட்டங்களும், ஆவலும் அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கும். மாணவர்களின் உடல், உள்ள உணர்ச்சிகளில் ஏற்படும் மாற்றங்களை எல்லாம் நாம் தெரிந்துகொண்டால் அதை அடிப்படையாகக் கொண்டு அவர்களிடம் காணப்படும் இயற்கையான ஆவலையும், விருப்பங்களையும், நாட்டங்களையும் தெரிந்து அதற்கான வரலாற்றுப் பாடப்பொருளை நாம் தேர்ந்தெடுத்துப் பாடத்திட்டத்தில் சேர்க்கலாம்.

அடுத்துப் பண்பாட்டு யுகக் கொள்கையைப் பின்பற்றி பாடத் திட்டம் அமைக்கும் திட்டத்தையும் அறிந்தோம். மனித இனம் பல நிலைகளை அல்லது யுகங்களைக் கடந்து நாகரிக நிலையை அடைந்தது என்றும், அந்தப் படிமுறை வளர்ச்சிக்கு ஏற்பக் குழந்தைகளும் தங்கள் வளர்ச்சியில் மனித இனம் கடந்து வந்த படிகளை அல்லது நிலைகளைக் கடந்து வருகின்றன என்றும் சுருக்கமாக அக் கொள்கையைக் கூறலாம். எனவே, அப் படிமுறை வளர்ச்சிக்கு ஏற்பக் குழந்தைகளின் அனுபவங்கள் இருக்குமென்றும் அதையொட்டிப் பாடத்திட்டம் குழந்தைகளுக்கு அமைக்க வேண்டுமென்றும், அக் கொள்கையில் கூறப்பட்டது. அக் கொள்கையின் படி வரலாற்றைக் கீழ்க்காணும் அட்டவணைப்படி கற்பிக்கலாம்:

(i) தொடக்கப்பள்ளி வகுப்புகளுக்குப் புராதனக் கால வரலாறு;

(ii) நடுநிலைப்பள்ளிக் குழந்தைகளுக்கு இடைக்கால வரலாறு.

(iii) உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு நவீனகால வரலாறு.

இந்தப் படிமுறை வளர்ச்சிக் கொள்கை அறிவியல் கருத்தின் அடிப்படையில் அமையவில்லை என்றும், கற்பனையில் உருவான கோட்பாடு என்றும் நாம் பார்த்தோம்.

காலவரிசையைப் பின்பற்றி வரலாற்றில் காணப்படும் பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளை வரிசைப்படுத்தி, அவற்றைக்

கற்பிக்கப் பாடத்திட்டம் அமைத்தல் முறையைப் பற்றியும் நாம் பார்த்தோம். பெரியோர்களின் வாழ்க்கை வரலாறு அக் கால மக்களின் வரலாற்றைப் பிரதிபலிக்கவில்லை என்றும் நாம் ஆராய்ந்தோம். இந்த இரண்டு கொள்கைகளும் விவரங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு உதவி செய்வதைவிட, அவற்றை எவ்விதம் கற்பிக்கலாம் என்பதற்கு நமக்கு வழி காட்டுகின்றன.

இந்தப் பாடத்தில் நம்முடைய முக்கியக் கவனமெல்லாம் நாம் வரலாற்றுப்பாட உள்ளடக்கத்திற்குத் தரப்பட்ட விவரங்களைத் தேர்ந்தெடுக்க அணுகுவதிலுள்ள சிறப்பான நோக்கை ஆராய்வ தாகும். குழந்தைகளுடைய மன வளர்ச்சிக்கும் அதாவது, அவர்களின் பல்வேறு பருவங்களில் தோன்றும் ஆவலையும், விருப்பங்களையும், நாட்டங்களையும் மனத்திற் கொண்டும் பாடத்தின் தேவைகளையும், ஒன்றுடன் ஒன்று இயைபுடையதாக்க வேண்டும். இந்தக் கோட்பாடு எல்லா மாணவர்களுக்கும் விளங்கும்படியாகவும், அவர்களின் விருப்பத்தையும், ஆவலையும் பூர்த்தி செய்யும் வகையிலும் அமைந்துள்ள வரலாற்று நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுக்கச் சில வழி முறைகளை நமக்குக் காட்டுகின்றன.

எந்த முறை நமக்கு வழிகாட்டுவதாக இருக்கும்? இதற்கு விடையை நாம் எளிதில் கூறிவிடலாம். வரலாற்றைக் கற்பிக்க நாம் தேர்ந்தெடுக்கும் நோக்கம், விவரங்களைத் தேர்ந்தெடுக்க நமக்கு உதவவேண்டும் என்பதாகும்.

பிள்ளைப் பருவத்தினர் பலவற்றைப்பற்றி அறியவும், கருவிகளின் துணைகொண்டு வேலை செய்யவும் விருப்பு மிகுதி உள்ளவராய் இருப்பார்கள். இவ் விருப்பங்கள் நிறைவுறும் வாய்ப்புகள் வரலாறு கற்பிப்பதில் ஏற்படவேண்டும். பிள்ளைப் பருவத்தினர் தம் மதிப்புக்குரிய, தம்மைவிட மூத்தோரிடம் வீர வணக்க மனப்பான்மையோடு நடந்து கொள்வர். மற்றும் அவர்களைப் பின்பற்றி நடக்கவும் விழைவர். எனவே, ஆசிரியர்கள் கற்பனு சக்தியும், உள்ளக் கிளர்ச்சியையும் ஏற்படுத்தும் முறையில் விவரங்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அவர்கள் அதிகமாக விரும்புவது கதைகளேயாகும். வரலாறு கற்பது மாணவர்களுக்கு உற்சாகமூட்டுவதாக அமையவேண்டும். எனவே, இந்தப் பருவத்தைக் கிளாப்பர் அறிமுகப்படுத்தும் நிலை (Presentative stage) என்று கூறுகின்றுர். குழந்தைகள் பொருள்களைப் பார்த்தும், கையாண்டும் விவரங்களைப்பற்றி அறிவார்கள்.

அடுத்து வரும் பருவம் குமரப்பருவம். இப் பருவம் கிட்டதட்ட பன்னிரண்டு வயதில் தொடங்குகிறது. பதினெட்டு அல்லது

இருபது வயதிற்குள் முடிவடைகிறது. இப் பருவத்தினர் நடுநிலே வகுப்புகளிலும், உயர்நிலே வகுப்புகளிலும் பயிலுவார்கள். இப் பருவத்தில் நுண்ணறிவு வளர்ச்சி அடைகிறது. ஆய்வுத் திறனில் முழுவளர்ச்சி அடைகிறது. அதிக ஞாபகச் சக்தியையும், கால உணர்வையும் பெற்றவர்களாக இருப்பார்கள் இவர்களுக்குக் கற்பனேயும், சிந்திக்கும் திறமையும் அதிகரித்திருக்கும். துணைக் கருவிகளின்றி விவரங்களேப் புரிந்துகொள்வார்கள். எனவே, இப் பருவத்தைக் கிளாப்பர் மீண்டுண்டாக்கும் நிலே (Representative period) என்று கூறுகின்ருர். வரலாற்று நிகழ்ச்சிகளேக் கால வரிசைக்கிரமத்தில் முறையாகக் கற்பிக்க ஆரம்பிக்கலாம்.

மூன்ருவது நிலேயில், மாணவர்களுக்குப் பயனேப் பற்றிய விவரங்களேத் தேர்ந்தெடுக்கவேண்டும். எனவே வரலாற்று மனப் பான்மையை வளர்க்க உதவும் விவரங்கள் தேவைப்படுகின்றன. விவரங்களே ஆராய்ந்து காரணகாரிய தத்துவங்களேப்பற்றிச் சிந்திப் பார்கள். விவரங்களேத் தேர்ந்தெடுக்க **V. D. காடே** கீழ்வரும் கருத்துகளேக் கூறியிருக்கின்ருர்:

(i) ஒரு மத்திய கருத்தைத் தேர்ந்தெடுத்து அதுபற்றிய பாடப்பொருளே அத்துடன் இணைத்துக் கீழ்வகுப்பு மாணவர் களுக்குக் கற்பிக்கலாம்.

(ii) மனித இனத்தின் முன்னேற்றத்தை விவரிக்கும் பாடப் பொருளேத் தேர்ந்தெடுத்துப் பாடத்திட்டம் அமைக்கலாம்.

(iii) தொடர்ச்சியினே வலியுறுத்தும் பாடப்பொருளேக் கோவையாக அமைத்து வரலாற்று நிகழ்ச்சிகளேக் கற்பிக்கத் திட்டமிடலாம்.

(iv) தற்கால உலகநிலேகளேக் குழந்தைகளுக்குத் தெளிவாகக் கூறஉதவும் விவரங்களேத் தேர்ந்தெடுத்து மாணவர்களுக்குக் கற்பிக்கத் திட்டமிடலாம்.

இந்தக் கருத்துகளே ஒட்டி கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள பாடத் திட்டத்தையும் V. D. காடே அமைத்துள்ளார்.

**வயது 7—8**

(1) இராமாயணம், மகாபாரதம் ஆகிய நூல்களில் காணும் கதைகள்.

**வயது 9—12**

(2) பண்டைக் காலத்தைப் பற்றிய உலக வரலாற்றின் சுருக்கம்.

(3) தன் சொந்த இராச்சியத்தின் வரலாறு.

(4) இந்திய வரலாற்றின் கதைகள்.

**வயது 13—16**

(5) இந்திய வரலாற்றைக் கூற்று முறையில் விவரித்துக் கூறுதல்.

(6) குடிமைநூல், உலக வரலாறு.

எனவே, வரலாற்று விவரங்களைத் தேர்ந்தெடுப்பதில் **மூன்று விதப் பண்புகளைப் பெற்றிருப்பதே** சிறப்பான நோக்காகக் கருதலாம் அவையாவன:

(i) மாணவர்களின் வயது நிலைக்கும், அவர்களது திறமைக்கும் ஏற்ற முறையில் கற்பிக்கும் செய்திகள் இருக்கவேண்டும். கற்றறிந்து கொள்ளப்படும் ஆற்றல் (Learnability) முதலாவது நோக்கமாகும்.

(ii) இரண்டாவது, மாணவனுக்குப் பலனைத் தரும் பாடப் பொருளாகவும் இருக்கவேண்டும். பயனுடையதாக (utility) இருத்தல்.

(iii) மூன்றுவது, வரலாறு கற்பிக்க நாம் திட்டமிட்ட நோக்கங்களைப் பூர்த்தி செய்யும் பாடப்பொருளை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, நாட்டின் ஒற்றுமை உணர்வை (National integration) வளர்ப்பது ஒரு நோக்கமாக இருப்பின் இந்தியாவிலுள்ள எல்லா இராச்சியங்களைப் பற்றியும், அவர்களின் மொழி, கலாச்சாரம், இலக்கிய வரலாற்றையும், வரலாற்று மரபையும்பற்றிய விவரங்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

**வினுக்கள்**

(1) வரலாற்றுப்பாட உள்ளடக்கத்திற்குப் பாடப்பொருளைத் தேர்ந்தெடுப்பதில் கவனம் பெறும் பல்வேறு கோட்பாடுகளை விவரிக்கவும்.

(2) மாணவர்களிடம் காணும் இயல்பான நாட்டமும், கவர்ச்சியும் வரலாற்றுப் பாடப்பொருளைத் தொகுப்பதில் உதவுகின்றன என்பதை விளக்கவும்.

(3) **குறிப்பெழுதுக**

'அண்மையிலிருந்து சேய்மைக்குச் செல்லும்' தத்துவம்.

(4) பண்பாட்டு வரன்முறைக் கொள்கையென்றுல் என்ன? அக் கொள்கையை மதிப்பீடு செய்க.

(5) வரலாற்றுப்பாட உள்ளடக்கத்திற்கு தரப்படுத்தப்பட்ட பாடப்பொருளைத் தேர்ந்தெடுக்க அணுகுவதிலுள்ள சிறப்பான நோக்கை விவரிக்கவும்.

## 3. வரலாற்று பாடப்பொருளின் அமைப்பு முறைகள் (Organization of Materials)

### (i) காலவரிசை முறை (Chronological and the Periodical)

மாணவர்கள் பள்ளியில் கற்கவேண்டிய வரலாற்று பாடப் பொருள் பல பகுதிகளாகப் பிரிக்கப்படவேண்டும். ஒவ்வோர் ஆண்டும் சில பகுதிகளாக மாணவர்களுக்குத் திட்டமிட்டு, பள்ளிப் படிப்பு முடிவதற்குள் எல்லா விவரங்களையும் கற்பிக்க இம் முறையில் திட்டமிடப்படுகின்றது. ஒர் ஆண்டில் கற்பித்த விவரம் பிந்திய ஆண்டுகளில் கற்பிக்கப்படுவதில்லை. எனவே, பள்ளிப் பிடிப்பின் காலத்தில் கற்கவேண்டிய விவரங்கள் முக்கிய நிகழ்ச்சிகளை மையமாகக்கொண்டு பல பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. இப் பகுதிகளைத் தொடர்ச்சியாகக் கற்பிக்கப் படுவதால் இம்முறை தொடர்ச்சிமுறை (continuous method) என்றும், காலக்கிரமத்தை யொட்டிக் கற்பிக்கப்படுவதால் காலக்கிரம முறை (Periodic plan) என்றும் வழங்கும். இப்பகுதிகள் ஒவ்வொன்றும் காலக்கிரமப்படி கற்பிக்கத் திட்டமிடுவார்கள். இங்கிலாந்து நாட்டு வரலாற்றில் **டி.எவ். டவுட்** (T.F. Tout) என்னும் ஆசிரியர் இம் முறையைப் பின் பற்றி எழுதியிருப்பதை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். இங்கிலாந்து நாட்டுவரலாறு பின்வரும் காலப்பகுதிகளாகப் பிரிக்கப் படுகின்றது;

(i) ஆங்கிலோ—சாக்ஸானியர் காலம்;

(ii) நார்மானியர் ஆட்சிக்காலம்;

(iii) மத்திய காலம்;

(iv) டியூடர் வமிசம்;

(v) ஸ்டுவர்ட் வமிசம்;

(vi) நவீன காலம்.

இந்திய வரலாற்றையும் கீழ்க்காணும் பகுதிகளாகப் பிரிக்கலாம்:

(i) புராதனக் காலம்.

(ii) மத்திய காலம்.

(iii) முகலாயர் ஆட்சிக் காலம்.

(iv) மராத்தியரின் ஆட்சிக் காலம்.

(v) ஆங்கிலேயர் ஆட்சிக்காலம்.

**இம் முறையின் சிறப்புகள்**

(1) இம் முறைபடி வரலாற்று நிகழ்ச்சிகள் காலக்கிரமப்படி வரிசையாகக் கற்றுக்கொடுக்க இடமளிக்கப்படுகிறது. மணவர்கள் ஒரு நூற்ருண்டிலிருந்து மற்ருெரு நூற்ருண்டுக்கு அழைத்துச் செல்லப்படுவதால், அறிவைத் தெளிவாகப் பெறுகின்ருர்கள்.

(2) வரலாற்றில் மிகவும் முந்திய காலத்தை ஆரம்ப வகுப்புகளில் கற்றுக்கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. முந்திய காலத்து வரலாற்று நிகழ்ச்சியில் சிக்கல்கள் குறைந்து காணப்படுகின்றன. மாணவர்களின் உள்ள வளர்ச்சிக்கும் வரலாற்று விவரங்களுக்கும் இணைப்பு ஏற்படுகிறது. சிக்கல்கள் அதிகமாக உள்ள பகுதிகளை மாணவர்கள் முதிர்ச்சிபெறுங் காலத்தில் கற்கின்றனர். பண்பாட்டு யுகக் கொள்கையை அனுசரித்து இம் முறை அமைந்துள்ளது.

(3) இம் முறையில் ஆண்டுதோறும் புதிய வரலாற்று விவரங்கள் கற்றுக்கொடுக்கப்பட்டு வருவதால் பாடத்தில் மாணவர்களின் ஆவலும் அக்கறையும் தொடர்ந்து நிலைத்து இருக்கும்.

(4) ஓர் ஆண்டில் கற்பிக்கவேண்டிய விவரங்கள் குறைவாக இருப்பதால் ஆசிரியர் நவீன முறைகளைப் பின்பற்றி கற்பிக்கலாம். மாணவர்கள் கற்றல் நிகழ்ச்சிகளில் ஈடுபாடு பெற்று அவர்கள் வரலாற்றுப் பாடத்தைக் கற்க நல்ல வாய்ப்பினைப் பெறுவர்.

**குறைபாடுகள்**

(1) முந்திய காலத்து வரலாற்று நிகழ்ச்சிகள் சிக்கல்கள் அதிகம் இல்லாதவை என்பதும், சமீபகால நிகழ்ச்சிகளில் சிக்கல்கள் அதிகம் உள்ளன என்பதும் ஏற்றுக்கொள்வதற்கில்லை. முந்திய காலத்து வரலாற்று நிகழ்ச்சிகளிலும் சிக்கல்கள் அதிகம் நிறைந்துள்ளன.

(2) பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் சமீபகால வரலாற்றைக் கற்றுக்கொள்ள பல ஆண்டுகள் காத்திருக்கவேண்டியதாக இருக்கின்றது. பள்ளிப் படிப்பை இடையில் விட்டுச்செல்லும் மாணவர்கள் சமீபகால வரலாற்றை அறிந்துகொள்ளும் வாய்ப்பை இழந்துவிடுகின்றனர்.

(3) ஒரு வகுப்பில் கற்ற விவரங்கள் பின்பு கற்பிக்கப்படுவதற்கு வாயப்பு இல்லாததால் கீழ் வகுப்புகளில் கற்றதை மேல் வகுப்பிற்கு வரும்பொழுது மாணவர்கள் மறந்துவிடுவார்கள் என்ற குறையையும் எடுத்துக் கூறுவர்.

(4) ஆரம்ப வகுப்புகளில் கற்பிக்கப்படும் முந்திய காலத்து நிகழ்ச்சிகள் மாணவர்கள் வயதுக்கு இணங்கச் சுருக்கமாகவும், எளிமையாகவும் திட்டமிடப்பட்டுக் கற்பிக்கப்படுகின்றது. அக் காலத்தைப் பற்றிய விவரங்கள் அனைத்தையும் விரிவாகக் கற்பதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பில்லாமல் போய்விடுகின்றது என்பதும் ஒரு குறையாக உள்ளது.

### (ii) (அ) பொது மைய முறை (Concentric Plan)

பொது மைய முறையை ஏக மைய முறை என்றும் கூறுவர். இம் முறையைப் பற்றி இரண்டுவித விளக்கங்கன் கூறப்படுகின்றன.

ஒரு நாட்டின் வரலாற்றுச் செய்திகள் எல்லாவற்றையும் ஓர் ஆண்டில் ஒரு வகுப்பு மாணவர்களுக்குத் திட்டமிட்டுக் கற்பிக்கப் படவேண்டும். மாணவர்கள், மேல் வகுப்புகளுக்குச் செல்லும் பொழுது அதே வரலாற்றுச் செய்திகளை மறுபடியும் கற்பிக்கப்படும் பொழுது அதிக விவரங்கள் சேர்த்துக் கூறப்படும். இம் முறையில் செய்திகளின் சிறப்பான அம்சங்களுக்குப் பதிலாக (quality), அதிகச் செய்திகள் கூறப்படுவதற்கு (quantity) வாய்ப்புகள் உள்ளன.

மற்றொருசாரார் கருத்தின்படி மேல்வகுப்புக்கு வரலாறு கற்பிக்கப்படும்பொழுது மாணவர்கள் மன வளர்ச்சிக்கு ஏற்ப நாட்டின் வரலாறுபற்றிய சிறப்பு அம்சம் ஒன்றை அடிப்படையாகக்கொண்டு வரலாறு ஒவ்வோர் ஆண்டும் கற்பிக்கப்படவேண்டும் என்பதாகும். எடுத்துக்காட்டாக, ஆறுவது வகுப்பு மாணவர்களுக்கு வாழ்க்கை வரலாறு (biographies) மூலம் நாட்டின் வரலாற்றைக் கற்பிக்க வேண்டும். ஏழாவது வகுப்பில் அதே நாட்டு வரலாற்றைச் சமூகச் செய்திகளை அதிகமாகச் சேர்த்துக் கற்பிக்கவும், எட்டாவது வகுப்பில் மத சம்பந்தமான செய்திகளை அதிக அளவில் சேர்த்தும், ஒன்பதாவது வகுப்பிற்கு வெளிநாட்டுக் கொள்கைகளை (Foreign Policy) விரிவு படுத்தியும், பத்தாவது வகுப்பில் அரசியல் அமைப்புச் செய்திகளையும்(Constitutional), பதினொன்ருவது வகுப்பில் பேரரசுக் கொள்கை, குடியேற்றக் கொள்கை ஆகியவற்றை (Imperial and Colonial policies) அதிகரித்தும் கூறுவதாகும். இதுவே பொது மைய முறையின் சரியான விளக்கமாகும்.

**இம் முறையின் சிறப்புகள்**

(1) மாணவர்கள் பள்ளிப் படிப்பை முடிப்பதற்குள் வரலாற்றுப் பாடம் திரும்பத் திரும்பக் கற்பிக்கப்படுகின்றது. எனவே, கீழ் வகுப்புகளில் கற்றவை திரும்பவும் கற்பிக்கப்படுவதால் அவற்றை மறந்துவிடுவதற்கு வாய்ப்பில்லை.

(2) கற்பிக்க வேண்டிய பாடப்பொருளைத் தரப்படுத்திக் கற்பிக்கவும் முடிகின்றது. கடினமான செய்திகளை மேல் வகுப்புகளில் சேர்த்துக் கற்பிக்கவும், எளிமையான விவரங்களைக் கீழ் வகுப்புகளில் கற்பிக்கவும் முடிகின்றது.

**குறைபாடுகள்**

(1) ஒரு நாட்டின் வரலாற்றைக் கற்பிப்பது ஓர் அம்சத்தைப் பற்றியதாக இருப்பினும் ஓர் ஆண்டுக்காலம் போதாது. எல்லா விவரங்களையும் முழு விளக்கத்துடன் கற்பிப்பது மிகவும் கடினமானதாகும்.

(2) குறைந்தது இரண்டாயிரம் வருடம் பற்றிய விவரங்களை ஒரு வகுப்பில் ஓர் ஆண்டுக்காலத்தில் கற்பிக்கும்பொழுது சரியான காலவரிசைப் பற்றிய எண்ணத்தை (Time sense) மாணவர்களிடம் ஏற்படுத்த முடியாது.

(3) வரலாற்றின் தன்மைகளை வேறுபடுத்திக் கற்பிப்பது சரியானதல்ல. மனித இனத்தின் முன்னேற்றத்தை முழுமையானதாகக் கற்பித்தலே சிறப்பான முறையாகும். மேல் வகுப்புகளில் அவ்வித முறையைக் குறிப்பிட்ட அளவுக்குப் பின்பற்றலாம். கீழ்வகுப்புகளில் அம் முறையைப் பின்பற்றிக் கற்பிப்பது மாணவர்களின் மனவளர்ச்சிக்கு விரோதமானதாகும். வரலாற்றில் உள்ள பல நிகழ்ச்சிகளிடையே அமைந்துள்ள தொடர்பு துண்டிக்கப்படுகின்றது.

(4) ஓர் ஆண்டு முழுவதும் மதசம்பந்தமான அல்லது அரசியல் அமைப்பு முறையைப் பின்பற்றி வரலாற்றுப் பாடம் கற்பிக்கப் பட்டால் மாணவர்களிடம் உற்சாகம் குறைந்து விடும். மாணவர்கள் ஆவலுடன் புதிய பாடத்தைக் கற்பிக்க ஆயத்தமாக இருப்பது என்ற நிலை நாளாவட்டத்தில் மறைந்துவிடும்.

(ii) **(ஆ) சுருள்முறை** (Spiral Plan)

பொதுமைய முறையின் குறைகளை நீக்கிச் சீர் செய்யப்பட்ட திட்டமே, சுருள்முறை (improved concentric method) என வழங்கப்படுகின்றது.

பொதுமைய முறையில் சிறு வட்டங்கள் பெருவட்டங்களாகப் பெருகிக்கொண்டு போகும். சுருள் முறையில் வட்டங்கள் ஒன்றை ஒன்று சுற்றிச் சுற்றி வளர்ந்து கொண்டே இருக்கும். வட்டங்களின் முனைகள் பொதுமைய வட்டத்தில் சந்திப்பதுபோல் சுருள்முறையில் சந்திப்பது இல்லை.

பள்ளியில் மாணவர்கள் கற்கும் காலத்தில் இரண்டு அல்லது மூன்று முறையாவது பாடங்களைத் திரும்பக் கற்கும் வாய்ப்பைப் பெறவேண்டும் என்பது இம் முறையின் நோக்கமாகும். ஒன்பது ஆண்டுக் காலத்தை மூன்று சுருள்களாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு சுருளும் மூன்று ஆண்டுகளுக்கு வேண்டிய செய்திகளைத் தன்னுள் பெற்றிருக்கும். பள்ளியில் படிக்கும் காலப்பகுதியை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கவேண்டும். தொடக்கநிலை வகுப்புகள், மத்திய வகுப்புகள், உயர்நிலை வகுப்புகள் ஆக மூன்று தரங்களாகப் பிரிக்கலாம். கற்கவேண்டிய வரலாற்றுச் செய்திகளை மூன்று ஆண்டுகளில் கற்பிக்கவேண்டும். முதல் சுருள் மூன்று, நான்கு, ஐந்து வகுப்புகளுக்கும்; இரண்டாவது சுருள் ஆறு, ஏழு, எட்டு வகுப்புகளுக்கும்; மூன்ருவது சுருள் ஒன்பது, பத்து வகுப்புகளுக்கும் கற்பிக்கப்படவேண்டும்.

முதல் சுருளில் வரலாற்றுப் பாடப்பொருள் யாவும் மூன்று முதல் ஐந்து வகுப்புகளில் கற்பிக்கப்படும். மூன்ருவது வகுப்பில் கற்ற பாடப்பொருளை ஆறும் வகுப்பிலும், நான்காம் வகுப்பில் கற்றதை ஏழாம் வகுப்பிலும், ஐந்தாம் வகுப்பில் கற்றதை எட்டாம் வகுப்பிலும் திரும்பக் கற்கும் வாய்ப்பு ஏற்படும். இதைப் போலவே கடைசி சுருளில் இடைநிலை வகுப்புகளில் கற்ற வரலாற்றுப் பாடப் பொருளை மறுபடியும் உயர் வகுப்புகளில் விரிவாகக் கற்றுக் கொடுக்கப்படும். இம் முறைக்குத்தான் சுருள்முறை என்று பெயர்.

**இம் முறையின் சிறப்புகள்**

(1) பொது மைய முறையில் காணப்படும் குறைகள் நீக்கப் பட்டுள்ளதால் இம் முறை சற்றுச் சிறந்தது என்பது விளங்கும்.

(2) மாணவர்களின் உள்ள வளர்ச்சிக்கு ஏற்றது. பாடத்தில் ஆண்டுதோறும் புதுமையைக் காண்கின்றனர். கற்ற பாடங்களை மூன்று ஆண்டுகள் கழித்து மறுபடியும் கற்றுக் கொடுப்பதால் தெளிவு ஏற்படுகிறது.

(3) வரலாறு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளில் கற்பிக்கப்படுவதால், விவரமாகப் படிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.

(iii) **(அ) அலகுமுறை** (Unit Plan)

அலகுமுறை என்பது சற்றேறக்குறைய தலைப்புச்சார் முறையை ஒத்திருக்கின்றது. தலைப்புகள் பல செய்திகளை உட்கொண்டதாக இருக்கின்றன. ஆனால், அலகு முறையில் ஒன்றுபட்டச் செய்திகள், ஒருங்கமைக்கப்படுகின்றன. தனிச் சிறப்பு பெற்றவைகளாக இருப்பதால் அலகுகள் பெரும்பகுதியைக் குறிப்பிடுவதுபோல் தோன்றும்; ஆனால், மாணவர்களுக்கு அவற்றை முழுமையானதாகக் கற்கும் பொழுது ஒரு சிறிய பகுதியாகவே தோற்றமளிக்கும்.

எடுத்துக்காட்டாக, தொழிற் புரட்சியை ஓர் அலகாகக் கூறலாம். அதில் அடங்கிய பல பிரிவுகள்: பருத்தித் தொழிலில் ஏற்பட்ட முன்னேற்றங்கள்; புதிய கண்டு பிடிப்புகள்; போக்கு வரத்துத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் யாவும் பல தலைப்பு களாகும். எனவே, தன்னிடத்தே பல தலைப்புகளை உள்ளடக்கிய ஒரு பெரும் பகுதியே அலகு என்று அழைக்கப் படுகின்றது. பின் வரும் வரலாற்று நிகழ்ச்சிகளை அலகுகளாகப் பிரித்துக் கற்பிக்கலாம்:

(1) ஆற்றுச் சமவெளி நாகரிகம்;

(2) ஜனநாயக நாகரிகம்;

(3) தேசிய மன்னர்கள் ஆட்சி;

(4) வரலாற்றுக்கு முந்திய காலத்திலும், புராதனக் காலத்திலும் மக்கள் வாழ்க்கை.

அலகில் பாடப்பொருளை ஒழுங்கமைக்கும் பொழுது, அந்த அலகைப் பற்றின பாடப்பொருளே இடம் பெறல்வேண்டும். அவ்வலகைப் புரிந்து கொள்வதற்குத் தொடர்பு இல்லாதிருக்கும் விவரங்களை விலக்கவேண்டும்.

**அலகு முறையின் சிறப்புகள்**

(1) கல்வித்துறையில் தற்காலத்தில் வழங்கும் சிறந்த கொள்கைகள் எல்லாம் அலகுத் திட்டத்தில் மேற்கொள்ளப்படு கின்றன.

(2) மாணவர்களுக்கு மங்காத ஊக்கம் தொடர்ந்து அளிக்கப் படுகின்றது.

(3) தனிப்பட்டதும், தொடர்பற்றதுமான சில பாடப் பொருளைக் கற்பதற்குப் பதிலாக கற்றல் முறையின் முழுமையை எல்லா மாணவர்களும் பெறுகின்றனர்.

(4) அலகு முறையில் கற்பிப்பதற்கு டாக்டர் மாரிசன் (Dr. Morrison) ஒருவகை கற்பிக்கும் முறையை ஏற்படுத்தி உள்ளார். அதைப் பின்பற்றி அலகுகள் கற்பிக்கப்பட்டால் மாணவர்களுக்கு அப் பாடப் பகுதியில் முதிர் திறம் ஏற்படும்.

டாக்டர் மாரிஸன் திட்டத்தில் ஐந்து படிகள் கூறப்பட்டுள்ளன (five steps). அவைகளாவன:

(i) துருவி ஆய்தல் (exploration).

(ii) எடுத்துக் கூறல் (Presentation).

(iii) தன்வயப்படுத்தல் (Assimilation).

(iv) ஒழுங்குபடுத்துதல் (Organisation).

(v) விவரங்கூறல் (Recitation).

முதல்படி **துருவி ஆய்தல்** எனப்படும். புதிய அலகைக் கற்பிப்பதற்கு முன்பாக, மாணவன் எவ்வித முன்னறிவு பெற்றிருக்கிறன் என்பதை அறிய ஆசிரியர் முற்படுவார். இரண்டாவதுபடி, **எடுத்துக்கூறல்.** உரையாடல் அல்லது விரிவுரைமூலம் ஆசிரியர் பாடத்தின் முக்கியச் செய்திகளை (major essentials) எடுத்துக் கூறுவார். மூன்ருவதுபடி, **தன்வயப்படுத்துதல்** (Assimilation). அலகில் அடங்கிய பாடப்பொருள்களைக் கற்றறிந்துகொள்ள மாணவர்கள் முற்படுவர். இதற்கு ஐந்து அல்லது ஆறு வாரங்கள் ஒதுக்கப்படும். தனியாள் வேற்றுமை (individual differences) ஏற்ப இந்தப் பகுதி திட்டமிடப்பட்டு நடத்தப்படும். மாணவர்கள் மேற்பார்வைப் படிப்பு, ஆய்வுக்கூட முறையில் பாடப்பொருள்களைக் கற்றுக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருப்பார்கள். நான்காவதுபடி, **ஒழுங்குபடுத்துதல்** (Organisation) ஆகும். மாணவர்கள் வகுப்பில்கூடி தாங்கள் கற்ற பாடத்தைக் காரண காரிய ஒழுங்கு முறையில் (logical and convincing outline) பாடச் சுருக்கத்தை எழுதுவார்கள். ஐந்தாவதுபடி, **விவரங்கூறல்** (Recitation). மாணவர்கள் எழுதிய பாடச்சுருக்கங்களில் மூன்று அல்லது நான்கை வகுப்பில் ஆய்வு செய்தல். ஒன்றுகூடி உரையாடல் வகுப்பில் நடைபெறும். இவ்வாறு ஐந்துபடிகள்மூலம் அலகுபற்றிப் பாடப்பொருளைக் கற்பிக்க முற்படுவதால் மாணவர்கள் முழுத் திறமையைப் பெறுகின்றனர்.

**இடையூறுகள்**

(1) வரலாற்றுப் பாடத்தில் இவ்வித அலகுகளை அமைப்பது கடினமானதாகும். வரலாற்று பாடம் ஒற்றுமை, தொடர்ச்சி போன்ற

வற்றைச் சிறப்பாகப் பெற்றதாகும். ஒரு நிகழ்ச்சியின் தொடர்ச்சியைக் கடந்த காலத்திலேயே நாம் பார்க்கலாம். ஒரு நூற்றுண்டில் காணப்படும் தூண்டல் அடுத்து வரும் நூற்றுண்டின் நிகழ்ச்சிகளையும் இயக்குகின்றது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

(2) கால வரையறையையும் நாம் புறக்கணித்து விடக் கூடாது. மாணவர்களுக்கு விளங்கும் வகையில் தொடர்புள்ள செய்திகளை ஒருங்கமைக்கும் பொழுது, காலவரையறைப்படி ஏற்படுத்துவது முடியாத காரியமாகும்.

இங்கிலாந்து நாட்டின் வரலாற்றின் பெரும் பகுதிகளைக் கீழே குறிப்பிட்டவாறு பல அலகுகளாக அமைக்கலாம்.

மதச் சீர்திருத்தம், 17ஆம் நூற்றுண்டில் ஸ்டூவர்ட் அரசர்களுக்கும், பார்லிமெண்டிற்கும் ஏற்பட்ட பிணக்கு, கட்சி ஆட்சியின் வளர்ச்சி, தொழிற்புரட்சி, பாராளுமன்றச் சீர்திருத்த இயக்கம் போன்றவற்றை அலகுகளாக அமைத்துக் கற்பிக்கலாம். மற்றையச் செய்திகளை வழக்கம்போல் பல தலைப்புகளாகக் கற்பிக்க வேண்டும்.

(iii) **(ஆ)** வரலாற்றுப் பாடப்பொருள்கள் பல பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. பகுதிகள் மறுபடியும் சிறு கூறுகளாகப்பிரிக்கப் படுகின்றன. இந்தச் சிறு கூறுகள் தலைப்புகள் என வழங்கப்படுகின்றன. இந்தக் கூறுகள் வரலாற்றில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி அல்லது போக்கை மையமாகக் கொண்டதாகயிருக்கும். படிமுறை வளர்ச்சிக்கு (evolutionary plan) ஏற்பத்தலைப்புகள் அமைக்கப்படுகின்றன. வமிசாவளி அடிப்படையில் தலைப்புகள் ஏற்படுத்தப் படுவதில்லை. ஒவ்வொரு தலைப்பும் நாட்டின் வரலாற்றுப் போக்கின் சிறப்பு மிக்க அம்சத்தைப் பற்றியதாக இருப்பதால், ஒவ்வொரு தலைப்பும் மற்றொரு தலைப்புடன் வேறுபட்டிருக்கும் என்பது தெளிவு. இங்கிலாந்து நாட்டுவரலாற்றைத்தலைப்புச்சார் முறையில் **வார்னரும், மார்டினும்** (Warner aud Martin) எழுதியிருப்பதை நாம் குறிப்பிடலாம். கி.பி. 1066 முதல் 1189 வரையிலும் உள்ள பகுதியை இரண்டு தலைப்புகளாக அமைந்திருப்பதை இங்குக் குறிப்பிடலாம். ஒரு முக்கியப் போக்கை விளக்கிக் கூறுகின்ற முறையில் இத் தலைப்புகள் உள்ளன. வலிமையுள்ள மன்னர்கள், பெரிய பிரபுக்கள், மதத்தலைவர்களின் அதிகாரத்தைக் கட்டுப் படுத்துதல் ஆகிய தலைப்புகளைப் பற்றினதாகும். இந்த இரண்டு அம்சங்களும் தனித்தனித் தலைப்புகளாக அமைக்கப் பட்டிருக்கின்றன.

செய்திகளையும், தேதிகளையும், தனித்தனியே படிப்பதற்குப் பதிலாக அவற்றை ஒரு பெரும் நிகழ்ச்சியுடன் தொடர்பு செய்து

கற்கத் தலைப்புச்சார் முறையில் திட்டமிடப் படுகின்றது. எனவே, தலைப்புகள் பல செய்திகளை உட்கொண்டதாகவும், பெரும் பரப்பினை யுடையதாகவும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக பின்வரும் தலைப்புகளைக் கூறலாம்:

(அ) இந்தியாவின் சிறப்புமிக்க தலைவர்கள்;

(ஆ) முகலாய மன்னர்கள் இராஜபுத்திரர்களிடம் மேற்கொண்ட கொள்கை;

(இ) முகலாய மன்னர்கள் பின்பற்றிய மதக் கொள்கை;

(ஈ) குப்த மன்னர்களின் பொற்காலம்.

எனவே தலைப்புகள் அமைப்பதற்கு அந்த நாட்டின் வரலாற்றை முன்கூட்டி நன்கு கற்று, நாட்டின் வளர்ச்சியில் காணப்படும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த இயக்கங்களை (significant movements) தலைப்புகளாக அமைத்துக் கற்பிக்க முற்படுதல் 'தலைப்புச் சார்முறை' எனப்படும். செய்திகளை வகைப் படுத்தி, பெரும் பகுதிகளாக அமைத்துத் திறமையுள்ள ஆசிரியர்கள் மேல் வகுப்புகளில் இம் முறையைப் பின்பற்றிக் கற்பிக்கலாம்.

**இம் முறையின் சிறப்புகள்**

(1) வரலாற்றைக் காரணகாரிய முறையில் மாணவர்களுக்குக் கற்பிக்க முடிகின்றது.

(2) வரலாற்றின் படிமுறை வளர்ச்சியை வெளிப்படுத்துகின்றது.

(3) வரலாறு என்பது பல அரசர்களின் வமிசாவளியாகக் கூறும் செய்திகள் மட்டும் இல்லை. அது பல மணிகளால் கோக்கப் படாமல், மனித இனத்தின் முன்னேற்றத்தைச் சிறந்த முறையில் எடுத்துரைக்கும் இயக்கங்களை வகைப்படுத்திக்கூறும் திட்டமாகவே காட்சியளிக்கின்றது.

(4) மனப்பாடம் செய்வதைவிட ஆய்வுத் திறனை இம் முறை வளர்ச்சியடைய உதவுகின்றது.

(5) மேல் வகுப்புகளில் இம் முறையிவ் பாடத்திட்டம் அமைக்கும்பொழுது பல செயல்முறைத் திட்டங்களைப் பின்பற்றி வகுப்பறையில கற்பிக்க ஆசிரியருக்கு வாய்ப்புகள் ஏற்படுகின்றன,

பிரச்சினை தீர்க்கும் முறை, ஆய்வுக்கூட முறை போன்றவற்றைப் பின்பற்றி வரலாறு கற்பிக்க முடியும்.

**குறைகள்**

(1) இம் முறையைக் கீழ்வகுப்புகளில் மேற்கொள்ளுவது எளிதல்ல.

(2) நாட்டின் வரலாறு பற்றிய முழு விவரமும் தெரிந்த பிறகு தலைப்புகளை வகைப்படுத்தி அமைக்க முடியுமானதால், கீழ் வகுப்பு களில் இம் முறையைப் பின்பற்றினால் கால வரன்முறையில் மாணவர்களுக்குக் குழப்பம் ஏற்படும். இம் முறையை மேல் வகுப்பு களில் 'பாடம் திருப்புதல்' நடைபெறும்பொழுது மேற்கொள்ளப் படலாமே தவிர, தினமும் இம் முறையைப் பின்பற்றி செய்திகளைக் கற்பிக்கத் திட்டமிடுவது விரும்பத்தக்கதல்ல.

### (iv) பின்னோக்கு முறை (Regressive Method)

தற்கால நிகழ்ச்சிகளையும், அமைப்புகளையும் கூறி அவற்றைப் பற்றிய கடந்தகால பாடப்பொருளை விவரித்துக் கூறும்படியான பாடவிவரங்களை முறைப்படுத்தப்படுகின்ற திடடம் 'பின்னோக்கு முறை' எனப்படும். இத் திட்டத்தின்படி நிகழ்காலத்தில் இருந்து வரலாற்றைத் தொடங்கவேண்டும். நிகழ்காலத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகவும், படிப்படியாகவும் கடந்த காலத்திற்குச் செல்ல வேண்டும்.

இம் முறைப்படி பாடத்திட்டத்தை எவ்விதம் அமைப்பது? தொடக்கப்பள்ளி வகுப்புகளுக்கு நவீன, மத்திய காலத்து வர லாற்றுச் செய்திகளையும்; மேய்த்தல் தொழில் நடைபெற்ற யுகத்தை மத்திய பள்ளி வகுப்புகளுக்கும்; வரலாற்று முந்திய காலத்தைப் பற்றிய செய்திகளை உயர்நிலைப்பள்ளி வகுப்புகளுக்கும் கற்பிக்கத் திட்டமிடப்படவேண்டும்.

இம் முறையை ஆதரித்துக் கூறுகின்றவர்கள் பின்வரும் கருத்தை வலியுறுத்திக் கூறுகின்றார்கள். வரலாற்றைக் கற்பிக்கும் முக்கிய நோக்கம் தற்காலத்தை விளக்கிக் கூறுவதாக இருக்கும் பொழுது, ஏன் தற்காலத்து நிகழ்ச்சிகளில் ஆரம்பித்து அவற்றைப் பற்றிய கடந்தகாலச் செய்திகளை விவரித்துக் கூறுவதற்கு முயலக்கூடாது என்பதாகும். தற்காலத்தில் உள்ள நிலைமையைக் கூறி, அவை எவ்வாறு இந் நிலையை அடைந்தன என்பதை விளக்கவேண்டும். அவ்விதம் விளக்கிக் கூறும்பொழுது அது பற்றிய கடந்தகால நிகழ்ச்சிகளுக்குச் செல்லவேண்டியதாக இருக்

கின்றது. அந்தச் சமீப கடந்தகால நிகழ்ச்சியை ஆராயும் பொழுது அதற்கு முந்திய கடந்தகால நிகழ்ச்சிக்குச் செல்ல வேண்டியதாகவும் ஏற்படுகின்றது. இவ்வாறு நாம் வெகுகாலத்திய விவரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டிய நிலை ஏற்படு கின்றது. எனவே, தற்காலத்தில் காணப்படும் சமூக அமைப்பு நிலையங்கள், நிகழ்ச்சிகள் போன்றவற்றை நன்கு புரிந்து கொள்வதற்கு அவைபற்றிய கடந்தகால வரலாற்றை அறிய பின்னேக்கித் தேடிச்சென்று விவரங்களைச் சேகரிக்கவேண்டிய தாகும்.

**இம்முறையைப் பின்பற்றுவதால் ஏற்படும் பிரச்சினைகள்**

(1) மனித இனத்தின் முன்னேற்றத்தைப் புரிந்துகொள் வதற்கு, வரலாற்றைக் கடந்தகாலத்திலிருந்து ஆரம்பித்துத் தற்கால நிலைக்கு விவரித்துக் கூறினுல் மாணவர்கள் நாகரிகத்தின் முன் னேற்றத்தையும் வளர்ச்சியையும், தொடர்ச்சியையும் புரிந்துகொள் வார்கள். பல நூற்றுண்டுகளில் எவ்வாறு முன்னேற்றப் பாதையை மனித இனம் கடந்து வந்துள்ளது என்பதையும், கால வரன்முறை யின் அறிவையும் மாணவர்கள் தெரிந்துகொள்ளவும் வரலாற்றை ஆதிகாலம் முதல் தொடர்ச்சியாகக் கற்பிக்கவேண்டும் என்பது விளங்கும்.

(2) தற்கால வரலாறு அதிகப் பிரச்சினைகள் நிறைந்துள்ள தாக இருக்கின்றது. அதிகப் பிரச்சினைகள் நிறைந்த தற்கால சமூகத்தைப்பற்றி அறிந்துகொள்வதற்கு, பிரச்சினைகள் அதிகம் இல்லாத ஆதிகால வரலாற்றில் தொடங்கி, கற்பிக்க முயல்வதே சிறந்த முறையாகும்.

(3) சில தலைப்புகளைப் பின்னேக்கு முறையில் கற்பிக்க முடிந் தாலும், வரலாறு செய்திகள் யாவற்றையும் பின்னேக்கு முறையில் திருப்தியளிக்கும் வகையில் ஒரு திட்டமும் இது வரையில் வகை செய்து கூறப்படவில்லை. எனவே, இம்முறை அனுபவ சாத்தியமான முறையாக ஏற்றுக்கொள்வதற்கில்லை.

**முடிவுரை**

பின்னேக்கு முறைப்படி வரலாற்றுப் பாடப்பொருளைத் தொகுப் பது சரியானதாக இல்லாவிட்டாலும், வரலாற்றைக் கற்பிக்கும் பொழுது அடிக்கடி நிகழ்காலத்தில் ஆரம்பித்துக் கடந்த காலத் திற்குச் செல்லவேண்டும். 'நிகழ்காலம் கடந்த காலத்தின் நன் கொடை' (The present is the gift of the past) என்பதை நாம் மறக்கலாகாது. கடந்தகால வரலாற்றை அடிக்கடி குறிப்பிட்டு

இப்பொழுது ஏற்பட்டுள்ள வளர்ச்சியையும், மாற்றத்தையும் மாண வர்கள் உணரும்படிச் செய்யவேண்டும். வரலாற்றுப் பாடத்தைக் கற்பிக்கும் பொழுது நிகழ்கால நிகழ்ச்சிகள் பற்றிய விளக்கம் தருவதற்கு அடிக்கடி கடந்த காலத்து செய்திகளுக்குச் செல்ல வேண்டியிருப்பதால் **V. D. காடே** (V. D. Ghate) இம் முறையை ஊசல் முறை (Pendulum method) என்று கூறுகின்றார்.

**வினாக்கள்**

(1) வரலாற்றுப் பாடப்பொருளைத் தொகுக்க உதவும் முறை களில் ஏதாவது இரண்டினைப்பற்றி விவரித்துக் கூறுக.

(2) கால வரிசை முறையின் சிறப்புகளைக் கூறுக.

(3) பொது மைய முறையென்றால் என்ன? அதன் சிறப்பு களையும், குறைகளையும் எழுதுக.

(4) சுருள் முறை என்றால் என்ன? இம் முறையின் சிறப்பு களை வரிசைப்படுத்துக.

(5) தலைப்புச்சார் முறையை விளக்கி அதன் சிறப்புகளைக் கூறுக.

(6) அலகுமுறை என்றால் என்ன? அதன் சிறப்புகள் யாவை? அதனைப் பயன்படுத்தும்போது ஏற்படும் இடையூறுகள் யாவை?

(7) 'பின்னோக்கு முறை'யை விவரி. அதனைப் பின்பற்று வதால் ஏற்படும் பிரச்சினைகள் யாவை?

## 4. வரலாறு கற்பிக்குங்கால் பிற பாடங்களுடன் தொடர்புறுத்தல்

### (Correlation of History with other subjects)

**தொடர்புறுத்தல்**

கல்வித் திட்டத்திலுள்ள பல பாடங்களும் **'நீர் உட்புகாத பிரிவுத்துறைகள்'** என வெகுகாலம் கருதப்பட்டு வந்தன. எனினும், 1531ஆம் ஆண்டு **விவஸ்** (Vives) என்னும் அறிஞர் எல்லாப் பாடங்களிடத்தும் ஓர் இணக்கம் இருப்பதாகக் கூறி அவற்றைத் தொடர்புபடுத்திக் கற்பித்தல் வேண்டும் என்றார். வகுப்பறையில்

பாடங்களைக் கற்பிக்குங்கால் பிற பாடங்களின் பொருள்களையும் கையாண்டு விளக்கங் கூறும் முறைக்குத்தான் 'தொடர்புறுத்தல்' (Correlation) எனப்படும். இவ்விதம் தொடர்புறுத்தல் வரலாற்றில் மிகவும் எளிதாக உள்ளது என்று விவஸ் கூறினர். அவருடைய கருத்துப்படி 'வரலாறு ஒன்றுதான் எல்லாக் கலையையும் பெற்றெடுத்தோ அல்லது பேணி வளர்த்தோ இருக்கின்றது.' மருத்துவக்கலை வரலாற்றில்தான் உருவாக்கப்பட்டது; தத்துவ நூல் வரலாற்றில்தான் தோன்றியது; வரலாற்றிலிருந்துதான் நீதித்துறை உருவாயிற்று; மத சித்தாந்தம் வரலாற்றின் ஒருபகுதி என்றே கூறலாம். சில வரலாற்று ஆசிரியர்கள் 'வரலாற்றை மையமாகக் கொண்டு மற்ற பாடங்கள் அதைச் சுழன்று திகழ வேண்டும்' என்றும் கூறுகின்றனர். இவ்வித தீவிரக் கொள்கையை நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாவிட்டாலும், பல விதத்திலும் பிறபாடங்கள் வரலாற்றுடன் கட்டுண்டு இருக்கின்றன என்பது தெளிவாக இருக்கின்றன.

**தொடர்புறுத்தலின் வகைகள்**

தொடர்புறுத்தல் இரண்டு வகையாக ஏற்படலாம். அவை யாவன:

(1) இடைநிகழ் தொடர்புறுத்தல் (incidental)

(2) ஒழுங்கு முறையான தொடர்புறுத்தல்

வரலாறு என்பது மனிதனின் தோற்றம், வளர்ச்சி, முன்னேற்றத்தை விவரிக்கின்றது. நாகரிக வளர்ச்சியையும் எடுத்துக் கூறுகின்றது. எனவே, மற்ற பாடங்களுக்கு வரலாறு அடிப்படைக் கருத்துகளை அளிக்கின்றது. இதனல் இயற்கையாகத் தொடர்புறுத்தல் நடைபெறப் பல வாய்ப்புகள் ஏற்படுகின்றன. பிற பாடங்களைக் கற்பிக்கும்பொழுது சில கருத்துகளை வரலாறு உதவியின்றி விளக்கமுடியாது. அதுபோல மற்ற பாடங்களின் துணையில்லாமல் வரலாற்றிலும் சில பகுதிகளை விளக்கமுடியாது.

ஒழுங்கு முறையான தொடர்புறுத்தல் தேவைப்படுவதோடு, விரும்பவும் பயன்படுகின்றது. ஒவ்வொரு பாடமும் தனியாக இயங்கமுடியும் என்று கருதுவது தவறுதலான கருத்தாகும். கல்வித்திட்டம் வகுக்கும்பொழுது இம் முறையை மனத்தில் கொள்ள வேண்டும். குறிப்பாக சமூகப் பாடத் திட்டத்தில் அடங்கியுள்ள பல பிரிவுகளிடையே தொடர்புறுத்தல் மிகவும் எளியதான செயலாகும். மற்ற பாடங்களுடனும் தொடர்புறுத்தத் திட்டமிடுதல் வேண்டும். எவ்வாறு தொடர்புறுத்தல் மேற்கொள்ளப்படும் என்பதை நாம் கவனிப்போம்.

**(அ) இடைநிகழ் தொடர்புறுத்தல்**

(i) **வரலாறும் குடிமை நூலும்** (Correlation with Civics)

குடிமைநூல் என்னும் சொல் இலத்தீன் மொழியிலிருந்து வழக்கிற்கு வரலாயிற்று. 'சிவிக்ஸ்' என்றால் குடிமகன் என்று பொருள்படும். ஆனால், பொதுவாக இத் தொடர் கீழ்க்கொடுக்கப்பட்டுள்ளவற்றைக் குறிப்பிடுவதற்கு வழங்கப்படுகின்றது:

(i) தற்காலத்தில் நடைபெறும் ஆட்சித்துறை அல்லது அரசு;

(ii) அரசியல் நிலையங்களின் வளர்ச்சி—அடுத்தடுத்த பகுதிகளாக எவ்வாறு அரசியல் முறை உருவாயிற்று;

(iii) மாணவர்கள் குடிமைப் பண்புகளைப் பெறும்படி பயிற்சி அளிக்க உதவுவதற்கு ஏற்ப அமையும் சமூக அறிவியல்.

ஆட்சி முறைகள் எவ்வாறு உருவாகி, வளர்ந்தன என்பதே வரலாறு என்று நாம் கருதினால், வரலாற்றுக்கும், ஆட்சி நூலுக்கும் இணைப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லை. ஐரோப்பிய நாடுகளில் ஆட்சிநூல், வரலாற்றின் ஒரு பகுதியாக அமைக்கப்பட்டுக் கற்பிக்கப்பட்டு வருகின்றது. **பிரீமென்** (Freeman) போன்ற வரலாற்று அறிஞர்கள் வரலாற்றின் முக்கிய வேலை அரசியல் முன்னேற்றங்களைத்தீட்டுதலே ஆகும் என்கிறார். நினைவில் வைக்கத்தகுந்த அவர் கூறிய அறிக்கை பின்வருவதாகும்: 'ஆட்சிநூல் கலப்பில்லாத வரலாறு எவ்விதக் கனியையும் அளிக்காது; வரலாறு கலப்பில்லாத அரசியல் நூல் வேர் இல்லாததாகும்.' (History without political science has no fruit; political science without History has no root).

இந்தக் கருத்தையே ஆசிரியர் **சீலி** (Seely) வலியுறுத்தியுள்ளார். வரலாறு கற்பது ஆட்சிமுறையின் தோற்றம், வளர்ச்சி போன்றவற்றைத் தெரிந்துகொள்வதற்கே என்பதாகும். ஆட்சிமுறை தனிப் பாடமாகக் கற்பிக்கப் படாமல் வரலாற்றோடு இணைத்துக் கற்பித்தால் அதன் சிறப்பு மங்கிவிடும் என்றும், அதற்கு எவ்வளவு நேரம் ஒதுக்கவேண்டுமோ அவ்வளவு காலம் அளிக்கப்படாதென்றும் சிலர் ஐயப்படுகின்றனர். நாட்டின் அரசியல் அமைப்பும், இயங்கும் முறைகளும் குழந்தைகளுக்கு விளக்கப்படாமல் போய்விடும் என்றும் கவலைப்படுகின்றனர். எனவே, ஆட்சிநூல் வரலாற்றுடன் தொடர்புபடுத்தாமல் தனிமுறையில் கற்பித்தல் வேண்டுமென்று கூறுகின்றனர். இக் கருத்தையே ஆசிரியர் **பிரைஸ்** (Bryce), தற்கால ஆட்சியையும், தற்கால உலகத்தையும் விளக்க வரலாற்றை

நல்ல முறையில் கற்பித்தல்வேண்டும். எனினும், வரலாற்றைவிட ஆட்சிநூல் கற்பதற்கு எளிதாக இருப்பதனுல் தனிப்பாடமாக அதைக் கற்பிப்பது ஏற்றது' என்று கூறுகின்ருர்.

ஆட்சிநூல், வரலாற்றின் ஒரு பகுதியாகக் கற்பிக்கப்பட்டால் கல்வியின் ஒரு சிறந்த பிரிவாகிய ஆட்சி முறைநூல் புறக்கணிக்கப் பட்டுவிடும் என்று அமெரிக்க நாட்டு அறிஞர்கள் கருதுகின்றனர். ஆகையால்தான், ஆட்சிநூலைத் தனிப்பாடமாகக் கருதி ஆரம்ப வகுப்புகளிலிருந்து கற்பித்து வருகின்றனர். தற்கால ஆட்சி முறையைக் குழந்தைகளுக்குப் புகட்டி விரும்பத்தக்கக் குடிமைப் பண்புகளை ஊக்கமளிக்கின்றனர். அரசாங்க அமைப்பையும், ஆட்சிமுறைகளையும் மட்டும் ஆட்சிநூல் விரிவாக்காமல் வரலாறு, நிலநூல், சமூக இயல், உளநூல், சுகாதாரம், பொருளாதாரம் போன்ற நூல்களின் பல தலைப்புகளையும் விவரிக்கின்றது. ஒருங் கமைக்கப்பட்ட சமூகத்தில் வாழும் ஒரு குடிமகனின் வாழ்க்கை யோடு தொடர்புள்ள தலைப்புகள், குறிப்பாக குடும்ப உறவு, சமூக உறவு, சுகாதாரப் பழக்கங்கள் போன்றவைகளும் ஆட்சிநூலில் இடம் பெற்றுள்ளன.

இவ்விதமாகப் பாடத்திட்டம் அமைத்தல் குழந்தைகளுக்கு குடிமைப் பயிற்சி அளிப்பதற்கே ஆகும். சமூக விருப்பும், உணர்வும் ஏற்படுத்துதலே நோக்கமாக இருக்கின்றது. ஆட்சிநூல் சரிவரத் திட்டமிடப்பட்டால் அது வரலாற்ருேடு மட்டுமில்லாமல், பிற நூல்களோடு இணைத்துக் கற்பிப்பதற்கும் வாய்ப்புகள் உள்ளன.

குறிப்பாக ஆட்சிநூலோடு வரலாறு எவ்விதம் இணைக்கப்பட்டுக் குடிமைப் பண்புகளை வளர்க்கக்கூடும் என்பதைச் சற்று ஆராய் வோம். வரலாறு சரிவரக் கற்பிக்கப்பட்டால் மனச் சமநிலையுள்ள நாட்டுப்பற்று (level-headed patriotism) குழந்தைகளிடம் ஏற்படும். தன் நாட்டின் நடவடிக்கைகளில் எவை சரியானவை, எவை தவருனவை என்பதைச் சீர்தூக்கிப் பார்த்து மற்ற நாடுகளுடன் ஒத்த முறையில் பழகவும், முயலவும் ஆரம்பிப்பான். உலக வரலாற்றையும், கிரேக்க, உரோம வரலாறுகளையும் கற்பதால் சமூகமும், நாகரிகமும் ஒன்ருேடொன்று பின்னப்பட்டிருப்பதை உணரவும், நம்முடைய சிறப்புற்ற மரபுரிமை, பல நாடுகளின் தொடர்பினுல் ஏற்பட்டுள்ளதையும் அறிவர். உலக வரலாற்றின் சிறப்பாகக் கூறத்தகுந்த பாடங்களை எல்லா நாட்டு மக்களுக்கும் கற்பித்தல் மக்களிடையே காணும் செருக்குமிகுந்த தன்மையும், தான் என்ற உணர்ச்சியும் மறைந்துவிடுமென்று பேராசிரியர்

H. G. வெல்ஸ் (H. G. Wells) கூறுகின்றார். பன்னாட்டு உணர்ச்சியை வளர்ப்பதற்கு இது மிகவும் தேவைப்படும். இதனால் சிறந்த குடிமகனாக நம் மாணவர்கள் வளருவர்.

இக் கால நிகழ்ச்சிகளில் அதிக அக்கறை கொள்ளும்படிச்செய்தற்கும் வரலாறு தேவைப் படுகின்றது. கடந்த காலத்தின் பிரச்சினைகளை வரலாற்றில் கற்பிக்கும்பொழுது, அவை பல பிரிவுகளாகத் தற்காலத்தில் காணப்படுகின்றன என்பதையும் சுட்டிக் காட்டவேண்டும். இதனால் இக் கால நிகழ்ச்சிகளைக் குழந்தைகள் நன்கு உணர்வார்கள். அவற்றின் வரலாற்று அடிப்படைகளையும் நன்றாகப்புரிந்து கொள்ளமுடியும். எடுத்துக்காட்டாக, ஷெர்ஷாவின் நிலவரிச் சீர்திருத்தத்தைப் பற்றி நடத்தும்பொழுது, தற்காலத்தில் வழக்கிலுள்ள நிலவரித் திட்டத்தோடு ஒப்பிட்டுக் காட்டவேண்டும். இலண்டனில் ஏற்பட்ட பிளேக் நோய்பற்றிக் கூறும்பொழுது, தற்காலத்தில் வாழ்க்கை நல ஏற்பாடுகள் செய்துள்ளவற்றையும், ஊசிமூலம் நோய்களைத் தடுத்தலும் குறிப்பிடப்படவேண்டும். இவ்வாறு கடந்தகால நிகழ்ச்சிகளையும் தற்காலத்தவைகளோடு தொடர்புபடுத்தி வரலாறு கற்பிப்பதால் குழந்தைகளுக்கு இக் காலச் செய்திகள் நன்றாகப் புரிகின்றன. வரலாறு கடந்த காலத்தைப் பற்றியதென்றும், குடிமை தற்காலத்தைப் பற்றியதென்றும் ஆசிரியர் உணர்தல்வேண்டும். தகுந்த, குடிமகனாக ஒருவனை ஆக்குவது வரலாறு கற்பிப்பதின் நோக்கங்களில் ஒன்றாக இருப்பதால், இந்த இரண்டு கருத்துகளும் இங்குக் குறிப்பிடவேண்டியதாயிற்று. வரலாற்றுச் செய்திகளை இதற்குத் தகுந்த முறையில் ஒழுங்குமுறை யெய்தல்வேண்டும்.

குழந்தைகள் நேரிடையாக ஈடுபட்டுள்ள சமூகத்தைப் பற்றி வரலாறு விவரிப்பதால் வரலாறு குழந்தைகளின் உள்ளத்தைக் கவர்கின்றது. மேலும், கடந்த நிகழ்ச்சிகளைத் தெரிந்துகொள்ளாமல், இக் கால நிகழ்ச்சிகளை அறிந்துகொள்ள முடியாது. எனவே, பலனுடைய கடந்தகால நிகழ்ச்சிகள் என்பது தொடர்ந்து செயல்புரியும் இக் கால நிகழ்ச்சியாகும். சுருங்கக் கூறின், கடந்த கால நிகழ்ச்சிகள் இக் காலத்தில் நடைபெறுபவைகளுக்கு விளக்கம் தருதல் வேண்டும். இக்காலத்திய அலுவலகங்கள், நிகழ்ச்சிகள் யாவும் பழைய நிகழ்ச்சிகளின் விதைகளிலிருந்தே முளைத்தனவாகும். அதனால் அவ் விதைகள் முளைத்திருக்கின்ற நிலத்தைப் பற்றி நாம் அறியவேண்டும். அதுவேதான் சமூக, அரசியல் வாழ்க்கையாகும். இவ்வாறு குடிமைப் பண்பை உருவாக்க வரலாறு உதவிகொண்டு ஆசிரியர்கள் முயலவேண்டும். 'நேற்றைய தினத்தின்மூலம் இன்றைய தினம்' (Today through yesterday) என்பது அவர்களது மேற்கோளுரையாகவேண்டும்.

குடிமைப் பண்பைக் கற்பித்தல் வரலாறுமூலம் நடைபெறும் பொழுது, அறிவுச் செய்திகளைவிட கற்கும் முறைதான் முக்கியத் துவம் பெறுதல்வேண்டும். குடிமைப் பண்பு என்பது ஒரு பாடத் தின்மூலம் கற்கப்படுவதல்ல; மனத்திற் பதியவைக்கவேண்டிய மனப்பான்மையாகும். இந்த மனப்பான்மையைப் பழக்கத்தின் மூலம் வளர்க்கவேண்டும். இந்தக் காரியம் வரலாறு கற்பிப்பதின் மூலமே முடிவுறும். இதனால் குழந்தைகள் சிறந்த மனப்போக்கு களையும், பழக்கத்தையும் பெறும்படிச் செய்யமுடியும். இதனால்தான் ஆட்சிமுறை கற்பிக்கும்பொழுது எல்லாவிதமான சந்தர்ப்பங் களிலும் வரலாற்றுடன் இணைத்தே அதனைக் கற்பிக்கவேண்டும் என்று கூறப்படுகின்றது.

### (ii) வரலாறும் நிலநூலும் (Correlation with Geography)

வரலாறும் நிலநூலும் ஒத்த (allied) பாடங்களாகும். ஒரு பாடத்தில் காலம், மற்றொன்றில் இடம் சிறப்புறக் கூறப்படுகின்றது.

பல காலத்தில் வாழ்ந்த மக்களைப்பற்றி வரலாறு கூறுகின்றது. பல இடங்களில் வாழ்கின்ற மக்களைப்பற்றி நிலநூல் கூறுகின்றது. நிலநூல் பாடங்களைத் துவக்குவதற்கு வரலாற்றுப் பாடத்தை பயன் படுத்தலாம். அதுபோல மனித இனத்தின் நடவடிக்கைகளை விளக்க நிலநூலையும் பயன்படுத்தலாம். உலகம் என்ற மேடையில் மனிதன் தன் ஆட்டத்தைச் செயல்படுத்துகின்றான். அந்த உலக மேடையை நிலநூலும், அம் மேடையில் செயலாற்றும் காரியங்களை வரலாறும் எடுத்துரைக்கின்றன.

'நிலநூல் வரலாற்றின் ஒரு கண்' என்று கார்லைல் (Carlyle) கூறியுள்ளார். 'நிலநூலின் இயக்கந்தான் வரலாறு' என்று ஹர்டர் (Herder) விளக்கியுள்ளார்.

வரலாறு கற்பிப்பதில் நிலநூல் தொடர்புறுத்தலை மூன்று தலைப்பின்கீழ் நாம் கவனிக்கலாம். வரலாற்றைத் தீர்மானிக்கும் புவியியல் கூறுகள் (Geographical factors in History) என்று இவற்றைக் கூறுவர்.

#### (1) இயற்கையமைப்பினால் ஏற்படும் மாறுதல்கள்

ஒரு நாட்டின் இயற்கையமைப்பு அதாவது மலை, மேடு, பள்ளத் தாக்கு, மலைத்தொடர், ஆறுகளின் போக்கு போன்றவைகள் வரலாற்று நிகழ்ச்சிகளைத் திட்டம் செய்கின்றன.

இந்த இயற்கை அமைப்புகள் நாகரிக வளர்ச்சியின் போக்கை அடக்கி ஆளுகின்றன. எடுத்துக்காட்டாகக் கிரேக்க நாட்டில்

ஏற்பட்டிருந்த நகர ஆட்சி முறைகள், உரோமில் ஏற்பட்டிருந்த ஏழு நகரங்கள், மலேகளில் அமைப்பிற்கேற்ப ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்புகள் என்று கூறலாம். நம் நாட்டின் வரலாற்றிலிருந்து இரண்டு எடுத்துக்காட்டுகளைக் எடுத்துக் கொள்வோம். சிந்து கங்கைச் சமவெளியின் செழுமையால் பல நாட்டினர் படையெடுத்து வந்தனர். கைபர் கணவாய் ஒரு வாயிலாக இருந்தமையால் பானிப்பட்டு என்ற இடம் இராணுவ நிகழ்ச்சியில் ஒரு சிறப்பிடத்தைப் பெறலாயிற்று. தென்னிந்தியா இப்படையெடுப்புகளில் சிக்காமலிருந்தது அதன் இடஅமைப்பே ஆகும். ஆங்கிலேயர் செல்வாக்கு இந்தியாவில் ஏற்பட்டதற்கும் அவர்கள் வடக்கிலிருந்து தெற்கில் தங்கள் ஆட்சியைப் பரப்பியதே ஆகும். அதற்கு மாருக டூப்ளே தென்னிந்தியாவிலிருந்து இராச்சியப் பரப்பைத் துவக்கினுர். தென்ஞடு அவ்வளவு இயற்கைச் சாதனங்களைப் பெருத காரணத்தால் அவர் தோல்வியுற்ருர்.

கான்ஸ்டான்டி நோபிளின் இருப்பிடமும் ஓர் எடுத்துக்காட்டாக இருந்தது. கி . பி. 1453-ல் அது துருக்கியர் வசம் வந்தமையால் கீழ்நாடுகளுக்குச் செல்ல ஐரோப்பியர் வேறு வழிகளைத் தேட முயன்றனர். கொலம்பஸ் பிரயாணம் இதனுல்தான் ஏற்பட்டது. புதிய உலகம் கண்டுபிடித்ததும், அட்லாண்டிக் பெருங்கடல் இரு உலகத்தை இணைக்க ஆரம்பித்ததும், இங்கிலாந்து வாணிபத் துறையில் வளர்ச்சியுற்று ஒரு தேசிய நாடாக ஒற்றுமைப்பட்டதும் இயற்கையமைப்பின் காரணமாகவே ஏற்பட்டதாகும் என்பது தெற்றென விளங்கும். போலந்து நிலநூலின் ஒரு சாபக்கேடாக ஏற்பட்டுள்ளது. சுவிட்சர்லாந்தின் காப்பவராகவும் நிலநூல் ஏற்பட்டுள்ளதை நாம் உணர்ந்திருக்கிறேம்.

### (2) தட்பவெட்பத் தொடர்புகள்

பக்கிள் (Buckle) என்பவர் கூறியுள்ளபடி வெப்பப் பிரதேசத்தில் இயற்கைச் செல்வம் வளம் பெற்றும், குளிர்ப்பிரதேசத்தில் வாழ்க்கை நடத்துவதற்கே பொருள்கள் கிடைக்காதென்றும், அதனுல் மக்களின் வாழ்க்கை முறையில் பலவிதப்பட்ட மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. மிதமண்டலத்தின் வெப்ப தட்பம் வாழ்க்கை நடத்த உகந்ததாக இருக்கின்றது. எனவே, அப் பகுதிகளில் நாகரிக வளர்ச்சி உயர்நிலேயை அடைந்துள்ளது. இதனுல் நமக்கு ஒன்று நன்கு விளங்குன்றது. இயற்கையமைப்பு, வெப்பதட்பநிலே, தாவர வகைகள்,இவற்றையொட்டியே மக்களின் வாழ்க்கை அமைகின்றது. நிலநடுக்கோடு காட்டுப்பிரதேசத்தை ‘மனிதனின் வலிவைக் கேடாக்கும் பிரதேசம்’ என்றும் பருவக்காற்றுப் பிரதேசத்தையும்,

மத்தியதரைக்கடல் பிரதேசத்தையும் 'கூடுதல் அளிக்கும் பகுதிகள்' என்றும், மிதக் குளிர் மண்டலத்தை (திபெத் வகை) 'நீடித்திருக்கிற இக்கட்டுப் பிரதேசம்' என்றும், தூந்திரப் பிரதேசத்தை 'வறுமை மிக்க பிரதேசம்' என்றும் கூறுவர்.

### (3) மண்ணின் வளம்

பயிர்த் தொழில், கனிச் செல்வம் போன்ற இயற்கைச் செல்வங்களும் மக்களின் வாழ்க்கைச் செயல்களைத் திட்டம் செய்கின்றன. ஆதிகாலத்தில் நீரையும், மண்ணையும் நம்பி மனிதன் வாழ்ந்தான்; காலப் போக்கில் காட்டுச் செல்வம் கனிச் செல்வம் போன்றவற்றையும் மனிதன் உபயோகிக்க ஆரபித்தான். இதனால் வரலாறு நிகழ்வதற்கு நிலநூல் தூண்டுதலாக இருக்க ஆரம்பித்தது. எடுத்துக்காட்டாக ஐரோப்பிய நாடுகள் குடியேற்ற நாடுகளை ஏற்படுத்த முயன்றதும், பிரான்சு ஜெர்மனி நாடுகளிடையே ஏற்பட்ட அல்ஸேஸ்லொரைன் பிரதேசத் தகராறுகளையும் கூறலாம். இயற்கைச் செல்வத்தைக் கைப்பற்றுவதில் நாடுகளிடை ஏற்பட்ட போட்டிகளும், பிணக்குகளும் எடுத்துக் கூறக் கணக்கில் அடங்கா. சுருங்கக் கூறுவோமாயின் 'இன்றைய நிலநூல் நாளைய வரலாறாக' மாறுகின்றது.

வரலாற்றைத் தீர்மானிக்கும் புவியியல் கூறுகள்போல் நிலநூலைத் தீர்மானிக்கும் வரலாற்றுக் கூறுகளும் உள்ளன. அதாவது, எங்கு இயற்கைச் சக்திகள் மனிதனுக்கு ஆதரவாக இல்லையோ, மனிதன் அவ் இயற்கையை ஓரளவு வென்று தனக்குக் கீழ்ப்படுத்துகிறான். நிலநூலில், நிலத்தின்மீது மனிதனின் வாழ்க்கையைக் கூறுவதோடு, மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையே நடைபெறும் செயல், எதிர்ச் செயலைப்பற்றிக் கூறுவதுதான் நிலநூல் என்று கூறவேண்டும்.

இந்த இரண்டு கூற்றுகளையும் எடுத்துரைப்பதற்கு நாம் வரலாற்றை நிலநூலுடன் தொடர்புபடுத்திக் கற்பிக்கவேண்டும்.

### (ஆ) வரலாறும் இலக்கியமும் (Correlation with Literature)

சிறந்த ஆசிரியர்களால் எழுதப்பட்ட நூல்கள் தொட்டனைத்து ஊறும் ஊற்றுகளாம். இலக்கியங்கள் நம் முன்னோர்களாகிய தெய்வப் புலமைச் சான்றோர்கள் தம் வாழ்நாள்களில் பட்டறிந்து கண்டுவைத்த உண்மைகளாகிய விலைமதிக்கவொண்ணா மணிகள் நிரம்பி வைத்திருக்கின்ற பொற்பேழைகளாம்.

வரலாற்றை இலக்கியத்துடன் தொடர்புறுத்திக் கற்பித்தலில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஒரு சாரார் கொள்கைப்படி

வரலாறும் இலக்கியமும் பின்னியிருக்கின்றன வென்றும், வரலாற்றின் மூலத்திலிருந்துதான் சில சிறப்பான இலக்கியங்கள் உருவாயிருக்கின்றன என்றும் கூறுகின்றனர். ஒத்துணர்வைத் தூண்டவும், குழந்தைகளின் கற்பனைத்திறனை ஊக்குவிக்கவும், கற்பனைத்திறன் நிறைந்த கவிதையை உபயோகிக்கவேண்டும். கவிதை, உயிரையும், உண்மையான கருத்துகளையும், வரலாற்றுக்கு அளிக்கின்றது. 'வரலாறு வர்ணிக்கின்றது; கவிதை வண்ணம் தீட்டு கின்றது.' கற்பனை ஆற்றலை வளர்க்கும் பொருட்டு வரலாற்றில் நாம் காணும் புதுமைக் கதைகளையும், நாடோடிக் கவிதைகளையும் கையாள வேண்டும். இந்தக் கருத்தை நாம் மேற்கொள்வோமானல், வரலாறு என்பது தனிப்பாடமாக இருப்பதற்குப் பதிலாக இலக்கி யத்தின் ஒரு பகுதியாக ஆகிவிடும்.

மற்ருெரு சாரார் வரலாற்றை ஓர் அறிவியலாகக் கருதி, இலக்கியம் ஒரு கலையானதால் அத்துடன் எவ்விதத் தொடர்பும் இருக்கக்கூடாதென்று கூறுவர். இதையும் நாம் ஏற்றுக்கொண்டால் இரண்டு பாடங்களுக்கும் பொதுப்படையாக ஒன்றும் இராது. மேலும் இரண்டையும் தொடர்புறுத்தலும் நடவாது.

எனவே, இரண்டுக்கும் இடைநிலைக் கொள்கையை நாம் ஏற்க வேண்டும். ஏனென்ருல், வரலாறு ஓர் அறிவியலாகவும், கலை யாகவும் இருக்கின்றது.

இரண்டு பாடங்களும் ஒரே விதப்பொருளைப் பற்றி விவரித்தால் தொடர்புறுத்தல் மேற்கொள்ளமுடியாது. இரண்டு பாடத் திட்டங் களும் அவற்றின் தேவைகளுக்கு ஏற்ப வேறுபட்டிருக்கவேண்டும்.

ஆனல், வரலாற்றுப் பாடங்கள் கற்பிக்கும்பொழுது தகுந்த சூழ்நிலையை உருவாக்கவும், சமூக நிலைகள், பழக்க வழக்கங்கள், நிலையங்கள், உரையாடல் போன்றவற்றை விவரித்துக் கூறவும் இலக்கியத்தின் மேற்கோள் தேவைப்படுகின்றது. வரலாறு கற்பிப் பதற்கு வேண்டிய செய்திகளையும், கால முறைகளையும் இலக்கியத் திலிருந்து அடைய முயலக் கூடாது. தகுந்த சூழ்நிலையை உருவாக்கவும், பாடத்தில் கவர்ச்சியை ஏற்படுத்தவும் மாத்திரம் இலக்கியத்தை மேற்கொள்ளவேண்டும்.

### செய்யுள் (Poetry)

ஒரு புலவர் தம்மைச் சூழ்ந்துள்ள இயற்கைப் பொருள்களையும், தம் நுண்மாண் நுழைபுலத்தாற் கூர்ந்து நோக்கி, அவற்றைத் தம் மனத்திலேயே பின்னர் நினைவுறுத்திக் கொள்ளுவர். பிறகு

அவற்றைச் சிறந்த செய்யுட்களின் வாயிலாய், புதிய கற்பனையோடு தாம் கண்டவற்றைப் புதியதான ஒரு கவின்பெறு காட்சியாக, சொல்லோவியமாக ஆக்குகின்றனர். இவற்றைப் படிப்போருக்கும் ஒரு சிறந்த மனக்காட்சியாக, வாழ்க்கைச் செயல்களும், நிகழ்ச்சிகளும் காட்சியளிப்பது கண்கூடு.

விளக்கம் கூறுவதற்கும், சமூக சூழ்நிலையை எடுத்துரைக்கவும், மனத்தின் கண்தோன்றும் உணர்ச்சியை வெளிப்படுத்தவும், வரலாற்று நிகழ்ச்சிகளைத் திரும்பக் கூறவும் செய்யுள் பயன்படுகிறது. எனவே, செய்யுள் வரலாற்றுடன் தொடர்பு படுத்திக் கற்பிப்பதற்கு ஒரு சிறந்த சாதனமாகக் மேற்கொள்ளவேண்டும். செய்யுளின் பயன்களாவன:

(i) செய்யுளின் சந்தம், எதுகை, வரலாற்று நிகழ்ச்சிகளை மாணவர்கள் மனத்தில் பதிய வைக்க உதவுகின்றன.

(ii) உணர்ச்சியைத் தூண்டும் செய்திகளை உணர்ச்சியுள்ள சொற்களால் மக்களின் ஆவல்கள், போராட்டங்கள் கிளர்ச்சிகள் போன்றவை செய்யுளில் வர்ணிக்கப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தி வரலாற்று நிகழ்ச்சிகளை எடுத்துரைக்கும்பொழுது, கடந்த கால நிகழ்ச்சிகள், உயிர்ப்பிக்கப்பட்டு மாணவர்களின் உள்ளக் கிளர்ச்சி தூண்டப்படுகின்றது.

(iii) ஆசிரியர் வகுப்பறையில் செய்யுளை வரலாற்றின் பணிப் பெண்ணாகப் பயன்படுத்துவதால் மற்ற கற்பித்தல் முறைகளைவிட நினைவாற்றல் திறமை அதிகமாக வளர்க்க முடிகின்றது.

(iv) புலவரின் நடையும், செய்யுள் வடிவமும் அவை எழுந்த காலத்தையும், அக் கால மக்களது பழக்க, வழக்க, நடை, உடை, எண்ணங்களையும், பிறவற்றையும் உள்ளபடியே எடுத்துக்காட்டும் கண்ணாடியாகவும் இருக்கின்றன.

**நாடகம் (Drama)**

வாழ்க்கை என்பது இன்பம், துன்பம் முதலான உணர்ச்சி இடையறாப் போராட்டம். நாடகம் அதைச் சித்திரித்துக் காட்டும். நாடகக் கதை இரண்டு பிரிவாகும். ஒன்று முதன்மை நிகழ்ச்சி; மற்றொன்று துணைக்கதை. அடிப்படைக் கதையான முதன்மை நிகழ்ச்சியின் போக்கை விரிவாக எடுத்துக்காட்ட உதவுவது துணைக்கதை. இவ்விரண்டையும் இணைத்துப் புணையும் பொழுதே நாடக வாய்ப்புகள் ஏற்படுகின்றன. ஒரு நாடகத்தை ஐந்து

அங்கங்களாகவும், ஒவ்வோர் அங்கத்தையும் பல்வேறு காட்சிகளாக வும் வகுப்பது வழக்கம்.

வரலாற்று நிகழ்ச்சிகளை எடுத்துரைக்கும்போதும், பிரச்சினை களைத் தீர்க்கும்பொழுதும் நாடக நூல்களைக் குறிப்பிட்டுப் பாட விளக்கத்திற்கு ஆசிரியர் பயன்படுத்த வேண்டும். நாடக நூல்களை இணைவழி படிப்பிற்கும் பயன்படுத்த மாணவர்களைத் தூண்ட வேண்டும். வரலாற்றுப் பாடத்தில் மாணவர்கள் ஆவலுற்றுப் படிக்கும் பழக்கத்தை இதனுல் மேற்கொள்வர்.

**புனை கதைகள்** (Fiction)

வாழ்க்கையைச் சித்திரிக்கும் இலக்கிய வகையைச் சார்ந்தது புனை கதைகள். அதாவது வாழ்க்கையில் காணக்கூடிய பாத்திரங் களையும் அவர்களுக்கு நேரக்கூடிய நிகழ்ச்சிகளையும் கொண்டு ஆசிரியர், நம் கண்முன் வாழ்க்கை நடப்பதுபோன்ற அரிய படைப்பைச் செய்கின்ருர். புனை கதைகள் வரலாற்றுக் காலம் ஒன்றில் நடந்ததாகப் படைக்கும் நிகழ்ச்சிகளைக் கொண்டவை. பிரெஞ்சுப் புரட்சியை வைத்து **டிக்கென்ஸ்** (Dickens) எழுதிய 'இரண்டு நகரங்களின் கதை' (A Tale of Two Cities) என்பதையும், தமிழில் கல்கி எழுதிய 'பார்த்திபன் கனவு' 'சிவகாமியின் சபதம்' என்பனவற்றையும் இதற்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம். ஆங்கில நாவலாசிரியர்களில் **சர் வால்ட்டர் ஸ்காட்** (Sir Walter Scott) என்பவரை ஆங்கில வரலாற்றுப் புனை கதைகளின் தந்தை என்று கூறுவர்.

புனைகதைகளில் காலம் தவருகவும், நிகழ்ச்சிகள் சில தவருகவும் வர்ணிக்கப்படுவதுமுண்டு. எனினும், புனைகதைகள் வரலாற்றைப் பற்றிய அறிவை எளிதில் மாணவர்கள் மனத்தில் பதியவைப்பதற்கு உதவுகின்றன. வரலாற்றில் தணியாத காதலையும் ஆர்வத்தையும், விருப்பத்தையும் ஏற்படுத்துகின்றன. வரலாறு பாடத்தில் கற்ற செய்திகளை எளிமையாகப் புரிந்து கொள்ளவும், மனத்தில் இருத்திக்கொள்ளவும் புனைகதைகள் பயன்படுகின்றன.

புனைகதைகளில் கூறப்படும் நிகழ்ச்சிகளை அறிந்து கொள்வ துடன், அக் கால சூழ்நிலையையும் மாணவர்கள் அறிந்து கொள் கின்றனர். வரலாற்று நிகழ்ச்சிகளிலிருந்து எவ்வாறு புனைகதை களில் கூறப்படும் நிகழ்ச்சிகள் மாறுபட்டிருக்கின்றன என்பது பற்றி வகுப்பில் உரையாடல் நடத்தவேண்டும். மாணவர்கள் படிப்பதற்குக் கொடுக்கப்படும் புனைகதைகளை ஆசிரியர் முன் கூட்டியே படித்திருக்கவேண்டும்.

**வினுக்கள்**

(1) கற்பித்தலில் 'தொடர்புறுத்தல்' என்ருல் என்ன? தொடர்புறுத்தலின் வகைகளே எழுதுக.

(2) வரலாற்றை நிலநூலுடன் எவ்விதம் தொடர்புறுத்திக் கற்பிக்க இயலும் என்பதை விவரி.

(3) வரலாற்றைத் தீர்மானிக்கும் புவியியல் கூறுகளே எடுத்துரைக்கவும்.

(4) 'ஆட்சிநூல் தொடர்பில்லாத வரலாறு எவ்விதப் பலனேயும் அளிக்காது; வரலாறு தொடர்பில்லாத அரசியல் நூல் வேர் ஊன்றி இல்லாததாகும்'—இக் கூற்றை விளக்கவும்.

(5) வரலாற்றுப் பாடத்தை இலக்கியம், செய்யுள், நாடகம், புதினம் — ஆகியவற்றுடன் தொடர்புறுத்துவதற்கான வாய்ப்பினைப் பரிசீலிக்கவும்.

## 5. வரலாறு கற்பிக்கும் முறைகள்
(Methods of Teaching History)

### (1) பழைய முறைகள்

#### (அ) பாடப்புத்தக முறை (The Textbook Recitation)

தொடக்கப்பள்ளிக் குழந்தைகளுக்கு வரலாறு கற்பித்தல் ஆசிரியர்களின் வாய்மொழிமூலம் நடைபெறவேண்டும் என்று பார்த்தோம். வரலாறு பற்றிய அறிவுச் செய்திகள் ஆசிரியரின் வாய்மொழிமூலம் கற்பிக்கப்படுகிறது. வாய்மொழிமூலம் முதலில் வரலாறு கற்பிக்கப்பட்டபோதிலும், அடுத்த சிறப்பான கருவி பாடப்புத்தகமாகும்.

பாடப்புத்தக முறையும், வாய்மொழி முறையும் பழைய முறைகள். இவை நீண்ட காலமாக வரலாறு கற்பித்தலில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இக் காலத்திலும இவ்விரண்டு முறைகளேயும் புறக்கணிப்பதற்கில்லே.

**புத்தகத்தைப் பயன்படுத்தும் முறைகள்**

நம் பள்ளிகளில் அண்மைக்காலம் வரையிலும் பாராமல் பாடத்திலடங்கிய செய்திகளேத் திரும்பக் கூறும் முறையைப் பின்பற்றி வந்தோம். மாணவர்கள் மனப்பாடம் செய்து, வகுப்பில் பாராமற் சொல்வதை ஆசிரியர்கள் சோதித்து வந்தனர்,

அத் திறமையைப் பெற்ற மாணவன் சிறப்பானவனுகக் கருதப் பட்டான். இம் முறையில் கற்பித்தல் என்பதே நடைபெறவில்லை. மாணவன் கற்றதைச் சோதிப்பதற்குக் கூட வேறு நல்ல முறைகள் உள்ளன. வகுப்பின் நேரத்தைப் பாடத்திலடங்கிய கருத்துகளைப் பற்றிய விளக்கம் கூறுவதற்குச் செலவழிக்கப்படவேண்டுமேயொழிய மாணவன் பாராமற் சொல்வதைச் சோதிப்பதற்கு அல்ல என்பதை நாம் உணருதல் வேண்டும். பாடப்பொருளைத் தான் கற்றலின் முடிவு என்று தவறுதலாகக் கருதவும் கூடாது. மாணவர்கள் தாங்களே படித்து புத்தகத்திலிருந்து பாடப்பொருளைத் தெரிந்துகொள்வார்கள். கற்பித்த பாடப்பொருள்களிடையே அமைந்திருக்கும் தொடர்புகளை விளக்கம் செய்வதே ஆசிரியரின் கடமையாகும். முதலில் மாணவர்கள் பாடப்பொருளை அறியவேண்டும்; பிறகு அவற்றி னிடையே ஆழ்ந்திருக்கும் தொடர்புகளைப் புரிந்துகொள்ளவேண்டும். எனவே, புத்தகத்தில் உள்ள பாடப்பொருளை மனப்பாடம் செய்து, பாராமற் கூறும்படிச் செய்வது விரும்பத்தக்க முறையல்ல என்பதைக் கிளாப்பர் ஆசிரியர் வலியுறுத்தியுள்ளார்.

**மேற்கொள்ளவேண்டிய முறை யாதுவாகும்?**

பாடப்புத்தகங்களை உபயோகிப்பதில் **ஜான்சன்** பேராசிரியர் வகுத்துள்ள முறையைப் பின்பற்றலாம். அவர் கூறும் மூன்று முறைகளும் அடுத்தடுத்து உபயோகிக்கப் படவேண்டியதாகும். இம் முறையை **டிரையான்** ஆசிரியரும் (Tryon) ஒத்துக்கொண்டு தன் ஒப்புதலை அளித்திருக்கிறுர்.

**அவையாவன:**

(i) முன்கூட்டிய எவ்விதத் தயாரிப்பும் இல்லாமல் மாணவர் களும் ஆசிரியரும் சேர்ந்து வகுப்பில் பாடத்தைப் படிக்கவேண்டும். மொழிப்பாடங்களை நடத்துவதுபோல் ஒவ்வொரு பத்தியும் படித்து விட்டு விளக்கம்கூற ஆசிரியர் முற்படுவது தவருன காரியமாகும்.

5ஆவது, 6ஆவது வகுப்பில் படிக்கும் மாணவர்கள் புத்தகத்தில் உள்ள பாடத்தைப் படித்து அதன் தலைப்பு, பாடத்தின் பொதுக்கருத்து, ஒவ்வொரு பத்தியின் பொருளடக்கம், செய்தி களின் தொடர்பு போன்றவற்றைத் தெரிந்துகொள்ளும் அனுப வத்தைப் பெறவேண்டும். தலைப்புக்குப் புறம்பாக உள்ள செய்திகளைப் புறக்கணிக்கவேண்டும். எனவே, இம் முறைப்படி, குறிப்பிட்ட பாடத்தை வகுப்பில் ஆசிரியர் முதலில் படித்துக் காட்டவேண்டும். எந்தத் தலைப்பை அப் பாடத்திற்குக் கொடுக்கலாம் என்று மாணவர் களுடன் கலந்து ஆலோசிக்கவேண்டும். அடுத்து எவ்வாறு பல சிறு தலைப்புகளாக அப் பாடத்தைப் பிரிக்கலாம் என்பதையும்

ஆலோசிக்கவேண்டும், பிறகு ஆசிரியர் கரும்பலகையில் பாடத்தின் உதவிக் குறிப்பை (Guidance outline) பல தலைப்புகளின்கீழ் எழுதுவார். ஒவ்வொரு தலைப்பின்கீழ் எழுதவேண்டிய செய்திகளைப் புத்தகத்திலிருந்து படித்துக்கூறும்படி மாணவர்களுக்குப் பயிற்சி யளிக்கவேண்டும்.

(ii) முதல் முறையில் சற்றுப் பயிற்சி பெற்றவுடன், 2ஆவது படியில் மாணவர்களை அழைத்துச் செல்லவேண்டும். புத்தகத்தில் உள்ள ஒரு பாடத்தை முன்கூட்டியே படித்துவிட்டு வகுப்புக்கு வரும்படி மாணவர்களுக்குக் கட்டளையிடவேண்டும். அப் பாடத்தின் பொருளடக்கத்தைப் பல தலைப்புகளாகப் பிரித்து, அவ்வுதவிக் குறிப்புகளைக் கரும்பலகையில் ஆசிரியர் எழுதுவார். மாணவர்களைக் கேள்விகேட்டு, அத் தலைப்புகள்பற்றிய செய்திகளை ஆசிரியர் வரவழைத்து, அச் செய்திகளினிடையில் அமைந்திருக்கும் தொடர் பையும், பாடத்தின் தலைப்போடு கூடிய தொடர்புபற்றியும் விளங்கும் படி ஆசிரியர் செய்வார். கரும்பலகையில் தீட்டப்பட்டுள்ள உதவிக் குறிப்பின்படி மாணவர்களே பாடத்தின் சுருக்கத்தைத் தயாரிப் பார்கள்.

(iii) மூன்றாவது படியில் மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட பாடத்தைப் படித்துவிட்டு வருவதோடு இல்லாமல், அப் பாடத்தை ஒட்டிய உதவிக் குறிப்புகள் தயார்செய்துகொண்டு வரும்படியும் கோரப்படுவார்கள். வகுப்பு ஆரம்பமானதும், மாணவர்களில் ஒருவர் தன் குறிப்பைக் கரும்பலகையில் எழுதும்படி ஆசிரியரால் அழைக்கப்படுவார். மற்ற மாணவர்கள் அக் குறிப்புப் பற்றித் தங்கள் கருத்துகளைக் கூறுவர். எனவே, ஆசிரியரின் மேற்பார்வையில் மற்ற மாணவர்களின் ஒத்துழைப்பால் சீர்திருத்தப்பட்டு அமைக்கப் படும்.

இவ்விதப் பயிற்சிகள் 5ஆவது, 6ஆவது வகுப்புகளில் நடைபெற வேண்டும். மாணவர்கள் 7ஆவது வகுப்புக்கு வந்ததும் அமெரிக்க நாட்டு ஆசிரியர்கள் வகுத்துள்ள 'தலைப்புச்சார் ஆராயும் முறையை' (Topical Rocitation Method) மேற்கொள்ளவேண்டும்.

**பாடப்புத்தகமும் தலைப்புச்சார் ஆராயும் முறையும்**

முன்கூட்டியே தயாரித்த ஒப்படைப்பை (Assignment) மாண வர்களுக்குக் கொடுப்பதை அடிப்படையாகக் கொண்டது இம் முறையாகும். சென்ற வகுப்பில் 10 நிமிடங்கள் இவ்வொப்படைப் பைப் பற்றி ஆசிரியர் கூறி, பாடத்தின் சுருக்கத்தை மாணவர் களுக்கு உதவும் முறையில் 'உதவிக்குறிப்பாக' அது அமையும். புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் பாடத்தின் பொருளை

எவ்வாறு பல தலைப்புகளில் பிரிக்கவேண்டும் என்பதுபற்றி அந்த ஒப்படைப்பு இருத்தல் வேண்டும்.

வகுப்பு நடைபெறும் தினத்தன்று எல்லா மாணவர்களும் ஒப்படைப்புக்கு ஏற்பத் தயார் செய்துகொண்டு வருவார்கள். பிரிவேளையில் முதல் பகுதியில் மாணவர்கள் ஈடுபடும் 'கலந்து ஆலோசனை' நடைபெறும். மாணவர்கள் அப் பாடத்தின் செய்திகளைப் படித்துப் புரிந்துகொண்டார்களா என்பதை ஆசிரியர் சோதித்து அறிவார். பின்பு, மீதி நேரத்தைச் செய்திகளின் தொடர்புகளை விளக்க உபயோகிப்பார். கடைசியாக மாணவர்களுடைய ஒத்துழைப்பின் பேரில் கரும்பலகையில் பாடத்தின் சுருக்கத்தை எழுதுவார்.

இந்த முறையைப் பின்பற்றி **A. A.** காக் (A.A. Cock) என்னும் ஆசிரியர் வேறு ஒரு திட்டத்தை வகுத்துள்ளார். புத்தகத்தில் உள்ள ஒரு புதிய பாடத்தை நடத்துவதற்கு முன், ஆசிரியர் இரண்டு வித தலைப்புகளில் வினாக்களைத் தயாரிப்பார்:

(i) அவற்றில் ஒரு பிரிவைச்சார்ந்த வினாக்கள் பாடத்தை மாணவர்கள் படிப்பதற்குமுன் கொடுக்கப்படவேண்டும்.

(ii) மற்றொரு பிரிவைச்சார்ந்த வினாக்கள் மாணவர்கள் புத்தகத்திலுள்ள பாடத்தைப் படித்ததும் கொடுக்கப்படவேண்டியவைகள். எனவே, முன்பிரிவைச் சேர்ந்தவை பாடத்தைப் படித்து அறிவதற்கு உதவும் பல தலைப்புகளாக அமையும். அவை முன்நோக்கு (Prospective) வினாக்கள் எனப்படும். அடுத்த பிரிவைச் சேர்ந்த வினாக்கள் மாணவர்கள் படித்த பாடத்தின் கருத்துகளை மனத்தில் பதியும்படியும், அவற்றை உபயோகிக்க உதவும் முறையில் அமையும். இவை பின்நோக்கு (Retrospective) வினாக்கள் எனப்படும். கடைசியாக ஆசிரியரின் மேற்பார்வையில் பாடத்தைப் பற்றிய விவாதித்தல் நடைபெறும்.

**புத்தகத்தை உபயோகிப்பதினால் ஏற்படும் நன்மைகள்**

(1) மாணவர்களுக்கு வேண்டிய பாடப்பொருளைத் திட்டவட்டமாக, நல்லமுறையில் பாகுபாடு செய்யப்பட்டு அளிக்கப்படுகின்றன.

(2) மாணவர்கள் கற்கவேண்டிய செய்திகளை ஒரே காலத்தில் எல்லா மாணவர்களுக்கும் அளிப்பதற்கு இதுவே சிக்கனமான முறையாகும்.

(3) பெரும்பாலான ஆசிரியர்கள் கூறும் செய்திகளைவிட, பாடப்புத்தகத்தில்தான் மாணவர்கள் கற்கவேண்டிய செய்திகளின் சுருக்கம் தெளிவாகவும், நல்ல நடையிலும் அளிக்கப்படுகின்றன.

(4) கற்கும் பாடத்தில் மாணவர்களுக்கு விளக்கம் தரும் முறையில் தேசப்படங்கள், விளக்கப்படங்கள் போன்ற பிற துணைக் கருவிகள் பாடப்புத்தகத்தில் இடம் பெறுகின்றன.

(5) ஆசிரியர் வகுப்பில் பாடத்தை நடத்தியபிறகு, மாணவர்கள் அச் செய்திகளை மறந்துவிடக்கூடும். அவற்றை நிலையாக எடுத்துரைக்கும் முறையாகப் புத்தகங்கள் இருக்கின்றன. ஆண்டின் முடிவில் பாடங்களைத் திருப்புங்கால் புத்தகங்கள் அதிக உதவியாக இருக்கின்றன.

**குறைபாடுகளும், அவற்றை நீக்கலும்**

பாடப்புத்தகத்தில் பொதுப்படையான கருத்துகளும், கருத்தியலான சொற்களும் (abstract terms) இயற்கையாகவே காணப்படுகின்றன. ஒவ்வொரு பாடத்தைப் பற்றிய செய்திகளின் முழு விபரமும், விளக்கமும் ஆசிரியர்கள் கொடுக்கமாட்டார்கள். பாடத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ள எல்லாத் தலைப்புகளையும் விவரித்து எழுதினால் புத்தகத்தின் அளவு பெரியதாகப் போய்விடும். எத்தலைப்பையும் விட்டுவிடவும் கூடாது. எனவே, சில கருத்தியலான சொற்கள் பாடங்களில் கொடுக்கப்படவேண்டிய நிலை ஏற்படும். அவற்றை ஆசிரியர் வாய்மொழியினால் கூறும்பொழுது விரிவுபடுத்திக் கூறவேண்டும். ஆசிரியர் செய்திகளைக் கொடுக்கும் பொழுது காரண காரிய முறையைத்தான் (Logical plan) பின்பற்றுவார். மனநூல் தழுவிய முறையைப் (Psychological) பின்பற்றமாட்டார். பொதுவாகப் பாடப்புத்தங்கள் யாவும் பாடப் பொருளைக் கூறுவதில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டிருக்குமே யொழிய மாணவர்களின் கற்ற திறமைக்கு ஏற்ப இருக்கமாட்டா.

இக் குறையை ஆசிரியர் நீக்கவேண்டும். பாடப்பொருளைப் பாகுபாடு செய்து மாணவர்களுக்கு விளங்கும் முறையில் மாற்றி அமைத்துப் படங்கள், விளக்கப்படங்கள், மேற்கோள்கள், தெரிந்த செய்திகளுடன் தொடர்புறுத்திக் கூறுதல் போன்றவற்றை ஆசிரியர்கள் செய்யவேண்டும். இம் முறையைத்தான் 'மனநூல் முறை' என்று கூறுவர்.

**(ஆ) விரிவுரை முறை (Lecture Method)**

வாய்மொழிப் போதனையை முறையாக மேல் வகுப்பில் மேற்கொண்டால் அது விரிவுரை முறை எனப்படும். நம் பள்ளிக்கூடங்

களில் விரிவுரை முறையைத் தனித்துக் கற்பிக்கும் முறையாகக் கையாளவே கூடாது.

**விரிவுரை முறையின் இகழ்ச்சிக்குப் பின்வரும் காரணங்களைக் கூறலாம்:**

(1) விரிவுரையை எல்லா மாணவர்களும் பின்பற்றிக் கேட்கிருர்கள் என்று திட்டமாகக் கூறமுடியாது.

(2) அப்படிப் பின்பற்றினுலும், கேட்டதை எல்லாம் நினைவில் வைத்துக் கொள்வார்கள் என்பதையும் உறுதியாகக் கூறமுடியாது. மாணவர்கள் செயலற்ற நிலையிலே இருக்கும்படி ஏற்படுகின்றது, மாணவனின் செயல்களெல்லாம் குறிப்பு எடுப்பதோடு நின்றுவிடும். மேலும், விரிவுரையை ஆசிரியர் நடத்தும்பொழுது, மாணவர்களின் எண்ணங்களெல்லாம் இன்பகரமான நிகழ்ச்சிகளைப் பற்றியதாக இருக்கும்.

( ) மாணவனிடம் தான் தொடங்காற்றல் (initiative) செயல் ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லாமல் போய்விடுகின்றது. இம்முறையில் மாணவனுக்குப் பாடப்பொருளைக் கூறுவதில் கவனம் செலுத்தப்படுகின்றதே தவிர, மாணவனிடமிருந்து அவன் திறமைகளை வெளிப்படுத்துவது புறக்கணிக்கப்படுகின்றது. எனவே, விரிவுரைமுறை 'புனல்முறை' எனப்படுகின்றது.

(4) மாணவர்களுக்குச் சிறப்பிடம் கொடுப்பதற்குப் பதில் பாடத்தின் பொருளுக்கு முதலிடம் அளிக்கப்படுகின்றது. மாணவன் தன் கருத்தை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பே ஏற்படாது.

(5) விரிவுரை முறையைப் புறக்கணிக்க வேண்டுமென்று **ட்ரமண்ட்** (Miss Drummond) என்னும் அம்மையார் கூறுகின்ருர். 'எந்த ஆசிரியர் சொல்வன்மையுடன் சொற்பொழிவு நடத்துகின்ருரோ, அவரை அதிகக் கவனத்துடன் மாணவர்கள் கூர்ந்து கவனிப்பது இயல்பாக நடைபெறும். அத்தகைய ஆசிரியர்களிடத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை' என்று **ட்ரமண்ட்** (Drummond) கூறுகிருர். ஆசிரியரின் சொல்வன்மையில் மாணவர்கள் மூழ்கி விடுகின்ருர்கள். அதனுல் அவர்கள் சிந்திக்கும் திறனை நாளடைவில் இழந்து விடுவார்கள்.

**எச் சமயங்களில் விரிவுரை முறையை மேற்கொள்ளலாம்?**

விரிவுரை முறையை அன்ருடம் கற்பிக்கும் முறையாகப் பயன் படுத்தக்கூடாது. தேவைப்படும் சில சமயங்களில்தான் இம் முறையைப் பயன்படுத்தவேண்டும்.

(1) வேறு எம்முறையாலும் கற்பிக்கமுடியாது என்ற நிலை ஏற்படும்பொழுது, விரிவுரை முறையைப் பின்பற்றலாம். எடுத்துக் காட்டாகப் பின்வரும் தலைப்புகளைக் கூறலாம். அரசியல் பற்றிய வரலாற்றுப் பாடங்களாகிய 'குழுமுறை ஆட்சி' (Cabinet Government) 'கட்சி ஆட்சியின் வளர்ச்சி', பிரிட்டிஷ் பொதுநலக் கூட்டுறவு', 'வெஸ்ட் மின்ஸ்டர் சட்டம்' போன்றவற்றையும் மதத் தொடர்புள்ள தலைப்புகளையும் விரிவுரை செய்யாமல் மாணவர்களுக்கு விளக்கிக் கூறமுயாது. இங்கு விரிவுரையானது ஒரு கற்பிக்கும் முறையாகக் கருதப்படாமல், துணைக்கருவியாகத் தான் கருதப்படுவதைக் கவனிக்கவேண்டும்.

(2) புதிய பாடத்தை அல்லது புதிய அலகைத் தொடங்கும் பொழுது மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் பாடத்தைப் பற்றிய முக்கிய நிகழ்ச்சிகள், தலைவர்கள், பிரச்சினைகள் போன்றவற்றைப் பற்றிய சிறு விரிவுரை ஒன்றை நடத்தவேண்டியிருக்கும். படிக்கவேண்டிய முக்கிய நிகழ்ச்சிகளை முன்கூட்டிக் கூறுவது மாணவர்களின் கவனத்தைப் பெறுவதற்கேயாகும்.

(3) விரிவுரை முறையை ஒரு பிரிவேளை முழுவதும் நடத்தக் கூடாது. வேண்டிய சமயங்களில் 5 அல்லது 7 நிமிடங்களுக்கு மேற்படாமல் நடத்தலாம். அப்பொழுது கூட அது தயார் செய்யப் பட்ட பேச்சாகத்தான் (Planned Talk) இருக்கவேண்டும். ஆசிரியர் மாணவர்களுக்கு ஒப்படைப்புக் கொடுக்கும்பொழுது, அதைப் பற்றிய பொதுவான சுருக்கத்தை வாய்மொழியாகச் சில நிமிடங்களில் எடுத்துக் கூறலாம்.

(4) மாணவர்களின் மனவெழுச்சியைப் பெறவேண்டுமென்று கருதும்பொழும் விரிவுரையை மேற்கொள்ளலாம். ஒரு நிகழ்ச்சியை வகுப்பு முழுவதும் ஆதரிக்கும்படியும் அல்லது ஏகோபித்த கண்டனத்தைக் தெரிவிக்கும்படியும் செய்யவேண்டுமென்று ஆசிரியர் நினைத்தால், அப்பொழுது அவரின் சொல்வன்மையைப் பயன்படுத்தி வகுப்பில் விரிவுரையை நிகழ்த்தலாம். இதை வேறு எந்த முறையாலும், அதாவது வினவுதல், விடையை வரவழைத்தல், உரையாடல் போன்றவையால் செய்ய முடியாது. ஆசிரியரின் திறமைமிக்கதும், உணர்ச்சியூட்டும் சொற்களே பயன்படும்.

(5) பாடத்தில் வரும் பொருளைக் கற்பதில் தெளிவுபெறுவதற்கு இணைவழிப் படிப்பை மாணவர்கள் மேற்கொள்ளும்படித் தூண்டப் படுகிறார்கள். அவ் இணைவழிப் படிப்பையும், வகுப்புப் பாடத்தையும் தொடர்புபடுத்தவேண்டிய சமயங்களில் ஆசிரியரின் பேச்சு வேண்டியதாக இருக்கின்றது. ஆசிரியரின் பரந்த அறிவும், அவரின்

பல மேற்கோள் புத்தகங்களிலிருந்து எடுத்துரைக்கும் வாக்கியங்களும், மாணவர்களை அத்தகைய புத்தகங்களைப் படிக்கத் தூண்டுதலைச் செய்யும் என்பதை மறுக்க முடியாது.

(6) பாடங்களை நடத்திய பிறகு, கற்பித்த செய்திகளைத் திரும்பவும் கூறவேண்டும். வினாக்களின்மூலம் பொருளைக் கூறும்படி செய்யலாம். ஆசிரியர் பாடத்தைத் திருப்பிக் கூறும் பொழுது, தொடர்பற்ற எண்ணங்களெல்லாம் தெளிவுபெறும். மீள்நோக்கு நடைபெறும்பொழுதும் ஆசிரியரின் பேச்சு நடைபெற வேண்டியதாகவுள்ளது.

**விரிவுரையை நடத்துவதற்கு ஏற்ற குறிப்புகள்**

(i) ஆசிரியரின் பேச்சானது கல்லூரி ஆசிரியர்களின் விரிவுரையைப் பின்பற்றியதாக இருக்கக்கூடாது ஆசிரியரின் பேச்சு முன்கூட்டியே திட்டம் செய்யப்பட்டதாக இருக்கவேண்டும். பொருளைப் பல தலைப்புகளின்கீழ் ஒருங்கமைத்திருக்கவேண்டும். ஒவ்வொரு தலைப்பின்கீழ் குறித்திருக்கும் பொருளைத் தொடர்பாகக் கூற வேண்டும்.

(ii) தலைப்பையோ அல்லது எடுத்துக்கொண்ட பொருளையோ, நாம் கூறும் பொருளை மறைத்துவிடாத முறையில் இருக்க வேண்டும்.

(iii) ஆசிரியரின் பேச்சு, உரையாடல் பாணியில் இருக்க வேண்டும். சொற்பொழிவாளரின் குரல், அவர் நடந்துகொள்ளும் முறைகளைப் பின்பற்றக் கூடாது. மெதுவாகவும், தெளிவாகவும் பொருளைக் கூறவேண்டும்.

(iv) மாணவர்களைப் பார்த்து ஆசிரியர் தன் பேச்சை நடத்த வேண்டும். அவர்களின் முகங்களில் ஏற்படும் மாற்றங்களைக் கூர்ந்து கவனித்து, தன் பேச்சைப் புரிந்து கொள்கின்றனர்களா அல்லது விளங்காமல் தவிக்கின்றனர்களா என்பதையும் நிதானிக்கவேண்டும்.

(v) ஆசிரியர் தன் பேச்சை வெகு விரைவில் செய்து முடித்து விடலாம். ஆசிரியருக்கு விரைவாகப் பேசுவது எளிய காரியமாகும். ஆனால், அதைப் பின்பற்றுவது என்பது மாணவர்களுக்குக் கடினமான செயலாகும். கேட்டதைக் கிரகித்துக் கொள்வது அவ்வளவு சுலபமாக நடைபெறும் செயலல்ல

(vi) விரிவுரை செய்யும் பொழுது. ஒரு பொருளைப் பற்றிக் கூறினதும், ஆசிரியர் சற்றுத் தன் பேச்சை நிறுத்தி, மாணவர்

களைக் கேள்வி கேட்டு, அதைப் புரிந்துகொண்டார்களா என்பதைச் சோதிக்கவேண்டும். பிறகு அப் பொருளைக் கரும்பலகையில் எழுத வேண்டும். பிறகுதான் அடுத்த பொருளைப் பற்றிக் கூறவேண்டும்.

(vii) கரும்பலகைச் சுருக்கம் வளர்ச்சி அடையும் போக்கிலேயே ஆசிரியரின் பேச்சும் தொடர்ந்து நடைபெறவேண்டும். பேச்சு முடிந்ததும் அது பற்றிய உரையாடலை வகுப்பில் நடத்த வேண்டும்.

(viii) ஒப்பிடுதல், விளக்கங்கூறுதல், சுவைமிகுந்த செய்திகளைக் கூறுதல் போன்றவற்றையும் ஆசிரியர் பயன்படுத்தி விரிவுரையை நடத்துதல் வேண்டும்.

எனவே, வரலாற்றுப் பாடத்தைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் பின்பற்றவேண்டி ஒரே முறையாக விரிவுரை முறை அமையாமல், அவர் பயன்படுத்தும் பல முறைகளில் இதுவும் ஒன்றாக இருப்பதை எல்லோரும் ஏற்பர்.

## (2) வாய்மொழி மூலம் கற்பித்தல் (The Oral Method)

வரலாறு கற்பிப்பதற்கு உதவும் முறைகளில் சிறப்பான இடத்தைப் பெற்றிருப்பது வாய்மொழிமூலம் கற்பித்தல் முறையாகும். இம் முறை வெகுகாலமாகப் பல தலைப்பின்கீழ் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. விரிவுரைமுறை, பன்முறைப் பயிற்சி, மீள் பார்வை, ஒருங்குகூடி ஆராய்தல் போன்ற தலைப்பில் இம் முறை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால், இம் முறையைத் தவறான வழிகளில் பயன்படுத்தப்பட்டு வந்ததால், இதைப் பற்றின தவறான கருத்து நிலவ ஆரம்பித்துள்ளது. எனினும், இந்த முறையை எவ்விதமாகவோ, மற்ற முறைகளுடன் இணைத்துக் கற்பிக்க முற்படலாயினர். வாய்மொழிமூலம் கற்பித்தல் முறை வரலாறு கற்பிப்பதில் சிறப்பான பங்கினைப் பெறுகின்றது. பலவித நுட்பங்கள், மூலங்கள், கருவிகள், சாதனங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி வாய்மொழிமூலம் கற்பிக்கும் முறை அதிக பயன்களை அளிக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

### வய்மொழிப் பாடத்தின் சிறப்பியல்புகள்

(i) வாய்மொழிப் போதனை தொடக்கப்பள்ளி வகுப்புகளில் கதை சொல்வதற்குப் பயன்படுத்தவேண்டும். ஆசிரியரின் குரல், முகபாவம் கதைகளுக்கு ஏற்ப மாறுதலடையும். கதை உண்மையாக நடப்பதுபோல் குழந்தைகளுக்குத் தோன்றும்.

(ii) தொடக்கப்பள்ளிகளில் மாணவர்களுக்கு வரலாற்று நிகழ்ச்சிகளைக் கற்பனை செய்துகொள்ள அவர்களுக்கு வாய்மொழிப் பாடம் உதவி செய்யும். வாய்மொழிப்பாடம் கேட்கும்போதும் ஆசிரியர் உணர்ச்சி ததும்பச் சொல்லும்போதும் மாணவர்கள் விவரங்களைத் தங்கள் கற்பனையில் வைக்கின்றனர்.

(iii) சொல்லவேண்டிய செய்திகளை ஆசிரியர் முன்கூட்டியே ஒருங்கமைக்கவேண்டும். வேண்டாத பாடப்பொருளை விட்டுவிட வேண்டும்.

(iv) ஆசிரியரின் கூற்று அவரது சொந்த மொழியிலிருக்க வேண்டும். மாணவர்கள் புரிந்துகொள்ளும் நடையில் இருப்பதும் கடுமையான தொடர்களை நீக்குவதும் ஆசிரியரால் மேற்கொள்ளப் படவேண்டும்.

(v) வாய்மொழி போதனையில் ஆசிரியர்களும் மாணவர்களும் பங்கு பெறுகின்றனர். வினவுதல், உரையாடுதல், வெளியிடுதல் போன்ற அம்சங்களுக்கு வாய்மொழி கற்பித்தலில் சிறப்பிடம் கொடுக்கப்படும்.

(vi) வாய்மொழிப் பாடத்தில் துணைக் கருவிகள் வகிக்கும் இடம் என்ன என்பதையும் ஆராய்தல் வேண்டும். கற்பித்தல் சாதனங்களைச் சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தவாறு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

(vii) வாய்மொழிமூலம் கற்பிக்கும் விவரங்களை விளக்கும் முறையில் கைவேலைகளும், குழந்தைகளுக்கு அளிக்கப்பட வேண்டும்.

தொடக்கப் பள்ளிகளில் கதைகள் சொல்வதற்கு வாய்மொழிப் பாடம் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. மாணவர்கள் உயர்நிலைப்பள்ளி வகுப்புகளுக்கு வரும்பொழுது, வரலாறு கற்பிப்பதன் நோக்கம் வேறுபடுவதை நாம் மறக்கலாகாது. முறையான வரலாறு (Formal History) கற்பிக்கத் திட்டமிடுதல் வேண்டும். ஆய்வு செய்தல், சிந்தித்தல் போன்ற திறன்களை வளர்க்கும்படியான முறைகளை நாம் பயன்படுத்தவேண்டியதாக இருக்கின்றது. எனவே, மேல் வகுப்புகளில் வாய்மொழிமூலம் கற்பித்தல் இரண்டாம் இடத்தினைப் பெறுகின்றது. பாடப் புத்தகத்தை மையமாகக் கொண்ட மாணவர்கள் பல செயல்களில் ஈடுபடும் முறைகள் முக்கியம் பெறுகின்றன. இணைவழிப் படிப்பும் நடைபெறவேண்டும்.

உயர்வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு ஒப்படைப்பு அளிக்கும் முறையில் கற்பித்தல் தொடர்ந்து நடைபெறும். ஒருங்குகூடி ஆராய்தலும், மாரிஸன் முறையைப் பின்பற்றி அலகு திட்டத் தின்படி வரலாறு கற்பித்தலும் நடைபெறலாம்.

மற்ற முறைகளைப் பற்றிக் கற்பதற்குமுன் வாய்மொழிமூலம் தொடக்கப்பள்ளிகளில் வரலாறு எவ்வாறு கற்பிக்கவேண்டு மென்பதைக் கவனிப்போம்.

**கதை சொல்லுதல் (Story Telling)**

கதை சொல்லுவதற்கு இன்றியமையாதவை:

கதை சொல்லுவதற்கு ஏற்ற ஏதுக்களை ஆசிரியர்கள் **கென்டால், ஸ்டைக்கர் (Kendall and Styker)** பின்வருமாறு கூறியுள்ளனர்:

(i) **ஆர்வம்:** கதைகளின் நிகழ்ச்சிகளில் ஆசிரியர் ஈடுபட்டு, அவற்றை எடுத்துரைப்பதில் மகிழ்ச்சியடைபவராக இருக்க வேண்டும். அவர் கதையில் ஆழ்ந்துவிட்டால், அதைச் சொல்லும் பொழுது அவரது முகபாவம், குரல் எல்லாம் மாறுதலடையும்; கதை உண்மையாக நேரில் நடப்பதுபோல் குழந்தைகளுக்குத் தோன்றும். எனவே, குழந்தைகள் கவர்ச்சி மேலிட்டு, அதிகக் கவனத்துடன் கதையைக் கேட்பார்கள்.

(ii) **வேண்டிய அளவு தயாரிப்பு:** கதை சொல்ல ஆரம்பித் ததும், அதன் நிகழ்ச்சிகளை நினைவுபடுத்திக் கூறும் வகையில் ஆசிரியர் இருக்கக்கூடாது. அதைப்பற்றிய பாடப்பொருளை நன்கு முன்கூட்டியே படித்துக்கொள்ளவேண்டும். ஆசிரியருக்குக் கதை யைப்பற்றி அதிகம் தெரியுமென்றும், தங்களுக்கு மிகவும் சுருக்கிக் கூறுகின்றார் என்றும் மாணவர்கள் நினைக்கும்படிச் செய்ய வேண்டும். பாடப்புத்தகத்தில் இருப்பதைவிட, அதிகப் பாடப் பொருள் தெரிந்தவராக ஆசிரியர் இருத்தல் விரும்பத்தக்கது. அதிகப் பாடப்பொருள் தெரிந்திருந்தால்தான், கதையைத் தடை யின்றியும் கவர்ச்சி ஏற்படும் வகையிலும் கூற இயலும்.

(iii) **பாடப்பொருளை ஒருங்கமைத்தல்:** மூன்றாவது தேவை யானது கதையைப் பற்றிய பாடப்பொருளை ஒருங்கமைத்தலாகும். வேண்டாத பாடப்பொருளை விட்டுவிடவேண்டும். கதையின் நிகழ்ச்சிகளைக் கூறுகின்ற முறை, அதன் உச்சநிலையை அடையும்படி இருக்கவேண்டும்,

(iv) ஆசிரியரின் கூற்று அவரது **சொந்தமொழியில்** இருத்தல் வேண்டும். மாணவர்கள் புரிந்து கொள்ளும் நடையில் இருப்பதும், கடுமையான தொடர்களை நீக்குவதும் ஆசிரியரால் மேற்கொள்ளப் படவேண்டும். புதிய சொற்களை உபயோகிக்கவேண்டுமாயின், அவற்றைக் கரும்பலகையில் எழுதி மாணவர்களுக்கு விளக்கிக் கூறவேண்டும்.

(v) கதையைக் கூறும்பொழுது, நடுவில் **சில வினாக்களைக் கேட்பதால்** கதையில் மாணவர்களுக்குக் கவர்ச்சி அதிகம் ஏற்படும். எடுத்துக்காட்டாக, ஒன்று குறிப்பிடலாம். 'பாண்டிய அரசன் மாணிக்கவாசகரைக் குதிரை வாங்க அனுப்பியதைக் கூறிவிட்டு, அவர் குதிரை வாங்காமல் திரும்பி வந்தால் அரசரின் மனம் எவ்வாறு இருக்குமென்று' ஒரு மாணவனைக் கேட்கலாம். எனினும், வினவுதலால் கதையின் தொடர்பு கெடும் என்று ஆசிரியர் நினைத்தால் வினவுதலைக் கதை முடிந்தபிறகு பார்த்துக்கொள்ளலாம்.

**வாய்மொழியால் கற்பிப்பதற்கு உதவும் துணைக் கருவிகள்**

(1) கதைகளைக் கூறும்பொழுது, வகுப்பில் கதையைப் பற்றிய படங்கள், மாதிரி உருவங்கள் போன்ற காட்சி, கேள்விக் கருவிகள் போன்றவற்றை உபயோகிக்கவேண்டும்.

(2) ஆரம்ப வகுப்புகளில் படங்கள் நிறைந்த வரலாற்றுப் பாடப்புத்தகம் இருப்பதும் நல்லது. கதையைப் பற்றிய படங்கள் கவர்ச்சியை ஏற்படுத்தும் முறையில் இருக்கவேண்டும்.

(3) கதையைக் கேட்டு நாளானதும், இளங்குழந்தைகள் அவற்றை மறந்துவிடக்கூடும். எனவே பாடப்புத்தகம், கதைகளை நினைவுபடுத்திக்கொள்ளப் பயன்படலாம்.

(4) கதைகளில் வரும் நிகழ்ச்சிகளை விளக்கும் முறையில் **கைவேலைகள்** குழந்தைகளுக்கு அளிக்கப்படவேண்டும். மாதிரி உருவங்கள், ஆடம்பரமான காட்சிகளை அமைத்தல், பொம்மைகளுக்கு உடை தயாரித்து அணிவித்தல், கோட்டை, பாலம் போன்றவற்றைக் காகிதத்திலும் அட்டையிலும் தயாரித்தல் போன்றவை கைவேலையாக அமையலாம்.

(5) கதைகளைப் பற்றிய **நாடகங்களை** வகுப்பில் நடத்தும்படி குழந்தைகளுக்குப் பயிற்சி அளிப்பதும் சிறந்த முறையாகும். **ஃபிண்ட்லே** (Findlay) ஆசிரியர் கூறுவது போல், 'ஆசிரியர் துணைக் கருவிகளும், மாணவர்கள் செய்யும் கைவேலைகளும் கதை நிகழ்ந்த

காலத்தின் சமூகச் சூழ்நிலையை உருவாக்கி, குழந்தைகள் அறியும்படிச் செய்யவல்லதாகவும் இருக்கவேண்டும்'.

### (அ) விதிவரு முறை (Inductive Procedure)

பிரச்சினை ஒன்று எதிர்ப்படும்பொழுது அதனைத் தீர்ப்பதற்கு வரையறுத்த ஒரு திட்டத்தினை வகுத்துக்கொள்ளவேண்டும். அதாவது, முறைப்படுத்தப்பட்டதும் ஒழுங்குபடுத்தப்பட்டதுமான வழி ஒன்றை அமைத்துக்கொண்டு பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆராய்ச்சி நடத்த முயலவேண்டும். இவ்வாறு ஆய்ந்து தெளிவதின் மூலம் பிரச்சினையைத் தீர்க்கும் முறையைக் கல்வி வல்லுநர்கள் தொகுத்தறி முறை (Inductive Method) அல்லது விதிவரு முறை என்றும், பகுத்தறி முறை (Deductive Method) என்றும் இருவகைகளாகப் பிரித்துள்ளனர்.

தொகுத்தறி முறையில் (விதிவரு முறை) சிந்தனையானது தனிப்பட்ட கூறுகளிலிருந்து பொதுமை காணச்செல்லும். அறிவியல் பாடத்தைச் சோதனைகள் நடத்திக் கற்பிப்பதுபோல் வரலாற்றுப் பாடத்தில் இயலாது. விதிவரு முறையை எவ்விதம் வரலாறு கற்பிப்பதில் பின்பற்றலாம் என்ற வினா இயற்கையாக எழும். வரலாறு கற்பிக்குங்கால் மூலமுறையைப் பின்பற்றும்பொழுது விதிவரு முறைக்கு இடமுண்டு. மூலங்களைப் பயன்படுத்தி, விவரங்களை வகைசெய்து, ஒரு நிகழ்ச்சி எவ்விதம் நடைபெற்றிருக்கலாம் என்ற முடிவை எடுக்க மாணவர்களை ஈடுபடுத்தலாம்.

ஆய்வுக்கூட முறையில் மாணவர்கள் மேற்பார்வைப் படிப்பில் ஈடுபட்டிருக்கும்பொழுது சில பிரச்சினைகளை அவர்களுக்குக் கொடுத்து, எவ்விதம் அவற்றிற்குத் தீர்வு காணலாம் என்ற பயிற்சியைத் தரவேண்டும். வரலாற்றுப் பாடம் கற்பிப்பதிலும் விதிவரு முறையை மேல்வகுப்புகளில் பின்பற்றுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. மேல்வகுப்புகளிலும் குறிப்பிட்ட நிலையில்தான் இம் முறையைப் பின்பற்றமுடியும். எனினும், நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு ஹெர்பார்ட்டின் முறையைப் பின்பற்றி ஆசிரியர்கள் பாடங்களை நடத்தி வருகின்றனர்.

கற்பித்தலில் ஆசிரியர் மேற்கொள்ள உதவும் **ஹெர்பார்ட்டின் பல்வேறு படிகளும்** (Herbartian steps) தொகுத்தறி முறையின் படிகளும் ஒன்று என்று கூறலாம்.

(i) ஹெர்பார்ட் முறையின் முதற்படி **ஆயத்தம்செய்தல்** (Preparation) என்பதாகும், இந்தப் படியில், கற்பிக்க வேண்டிய

வற்ருேடு தொடர்புகொண்ட மாணவனது பழைய அனுபவங்களை நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும். எனவே, புதிய பாடத்தை எவ்விதம் துவக்குவது என்பது ஆசிரியர் முடிவுசெய்யவேண்டியது. தற்காலச் சம்பவங்களைக் கூறி அதனுடன் தொடர்புபடுத்திப் புதிய பாடத் தலைப்பை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்த ஆரம்பித்தல் முதற்படியேயாகும்.

(ii) **எடுத்துக்கூறல்** (Presentation) என்னும் இரண்டாம் படியில், மாணவர்கள் அறியவேண்டிய பாடப்பொருளை எடுத்துக் கூறுவது ஆசிரியரின் பொறுப்பாகும். வினுக்கள் கேட்டு, மாணவர்கள் கூறும் விடைகளைக் கொண்டு புதிய கருத்துகளை ஆசிரியர் எடுத்துக்கூறி, பாடப்பொருள்களிடையே அமைந்திருக்கும் தொடர்புகளுக்கு விளக்கம் தருவார். விவரங்கள், ஒப்புமைகள், நிகழ்ச்சிகள் அனைத்தையும் இரண்டாம் படியில் மாணவர்முன் திரட்டிக்காட்டுகிருர் ஆசிரியர்.

(iii) மூன்ரும் படியில் **ஒப்பிட்டுப்பார்த்தல்** (Comparison) நடைபெறவேண்டும். எடுத்துக் கூறப்பட்ட விவரங்களை ஆராய்ந்து அவற்றில் பொருந்தியுள்ள தொடர்புகளைக் காண மாணவர்கள் முயல்வார்கள்.

(iv) **பொதுவிதி காண்டல்**(Generalisation)என்னும் நான்காம் படியில் ஆசிரியர் கற்பித்தவற்றை ஒருங்குதிரட்டி, மதிப்பிட்டுப் பொது முடிவாகவோ, பொது விதியாகவோ ஆக்கித் தருகிருர். ஓர் இயக்கத்தின் தன்மை, முடிவைப்பற்றி மதிப்பிட்டுக்கூறுதலும் அல்லது ஒர் அரசனது ஆட்சியின் சிறப்புகளை ஆய்வு செய்வதும் வரலாற்றுப் பாடத்தில் நடைபெறும். எடுத்துக்காட்டாக, இங்கிலாந்தில் ஏற்பட்ட மதச்சீர்திருத்த இயக்கம் அல்லது எலிஸபெத் அரசி காலத்தில் நடைபெற்ற மத ஏற்பாடு போன்றவற்றின் தன்மையை உணரும்படிச் செய்வதாகும்.

(v) **பயிற்சி அல்லது செயற்படுத்துதல்** (Application) என்பது ஐந்தாவது படியாகும். கற்ற அறிவு, புதுநிலைமைகளில் பயன்பட வேண்டும். வரலாறு கற்பித்தலில் இவ்விதச் செயல்முறைகள் கொடுப்பதற்கு அதிக வாய்ப்பு இல்லை. எனினும், இணைவழிப் படிப்பை மேற்கொள்ளச் செய்தல், கைவேலை அளித்தல், தேசப்படங்கள் வரைதல், மாதிரி உருவங்கள் அமைத்தல், சோதனைகளுக்கு விடை தயாரித்தல் போன்றவற்றை மாணவர்களிடம் நடைமுறைப் படுத்தலாம்.

ஹெர்பார்ட்டின் முறையைப் பின்பற்றுவதால் அனுபவத்தின் மூலம் மாணவர்கள் கற்க முடிகின்றதா என்ற ஐயப்பாடு ஏற்படு

கின்றது. ஆசிரியர் கிளாப்பர் (Klapper) கருதுவதுபோல் பெரும்பாலும் ஆசிரியர் சிந்தித்த முறையிலேயே மாணவர்கள் சிந்திக்கின்றனர்; ஆசிரியர் அடைந்த முடிவையே மாணவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்; மாணவர்கள் ஆசிரியரிடம் நடைபெற்ற செயல்களையே பின்பற்றுகின்றனர். எனவே, இவ்விதம் கற்பிப்பது விதிவரு முறை என்று உறுதியாகக் கூறுவதற்கில்லை. எனினும், நம் பள்ளிகளில் நிலவுகின்ற சூழ்நிலைக்கேற்பக் கற்பிப்பதற்கு ஹெர்பார்ட்டின் முறையை ஆசிரியர்கள் தவிர்க்க முடியாதவர்களாயிருக்கின்றனர் என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டியதாக இருக்கின்றது.

## (ஆ) ஒன்றுகூடி உரையாடல் முறை (Socialized Recitation)

**தோற்றம்:** தற்காலத்தில் வரலாறு கற்பிப்பதில் அதிகக் கவனத்தைப்பெற்ற முறைகளில், ஒன்றுகூடி ஆராய்தல் அல்லது உரையாடல் முறையும் ஒன்ருகும். பழைய பாடங்கூறல் முறையின் குறைபாடுகள் வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்ததும் இம்முறையின் வளர்ச்சி ஏற்பட்டது. பழைய பாடங்கூறல் முறையின் குறைபாடுகள் பின்வருவனவாகும்:

(i) பாடங்கூறல் முறையில் மாணவனின் செயல்களுக்குப் பதில் ஆசிரியரின் செயலுக்குத்தான் அதிகச் சிறப்புத் தரப்பட்டிருந்தது.

(ii) ஆனல், மாணவன் செயலில் ஈடுபடுதல் (pupil activity) கற்றல் நிலைக்கு மிகவும் ஏற்றதாகும். இத்தகைய வாய்ப்பு மாணவனுக்கு இம் முறையில் ஏற்படவில்லை.

(iii) மாணவனுக்குச் சிறப்பிடம் தரப்படுவதற்குப் பதிலாகப் பாடத்திற்குத்தான் சிறப்பிடம் அளிக்கப்பட்டிருந்தது.

(iv) பாடப்பொருளை மாணவனின் மனத்தில் திரும்பத் திரும்பக்கூறிப் பதிய வைப்பதே ஆசிரியரின் முக்கிய வேலையாகக் கருதப்பட்டது.

(v) எனவே, பழைய பாடங்கூறும் (recitation) முறையில், மாணவர்கள் வகுப்பில் உற்சாகமில்லாமலும் வெறுப்புணர்ச்சி (apathetic) கொண்டவர்களாகவும் இருந்தனர்.

எனவே, இந் நிலையை மாற்றி அமைக்க அறிஞர்கள் முயன்றனர். கற்றலில் சிறப்பான பங்கு மாணவனுக்கு அளிக்கப்பட

வேண்டுமென்றும், வெற்றுப் பாடப்பொருளைக் கற்பிப்பதோடு இல்லாமல், சிறப்பாக நல்ல மனப்பான்மையை வளர்க்கவேண்டு மென்றும், வெறும் பாடப்பொருளைக் கற்பதில்கூட முழுப் பொறுப் பையும் மாணவர்களிடமே ஒப்படைத்துவிடவேண்டுமென்று கருத ஆரம்பித்தனர். இவ்வாறு சிந்திக்க ஆரம்பித்ததின் முடிவுதான் 'ஒன்றுகூடி ஆராயும் முறை' அல்லது 'உரையாடல் முறை' உருவாயிற்று என்று கூறலாம்.

மற்ற முறைகளைப்போல், இம் முறையையும் வகுப்பறையில் ஏற்படும் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்கவல்லது என்று கருதக் கூடாது. தனக்குப் பலனளிக்கும்படி இம் முறையைச் சிற்சில சமயங்களில் மட்டும் ஆசிரியர் மேற்கொள்ளவேண்டும். **வகுப்பின் திறமை, ஆசிரியரின் அனுபவம், பாடத்தின் நோக்கம்** போன்ற வற்றைக் கொண்டுதான், எக் காலங்களில் இம் முறையைப் பின்பற்றலாம் என்பதைத் திட்டம் செய்யவேண்டும்.

**ஒன்றுகூடி உரையாடல்—வரையறை செய்தல்:** ஒன்றுகூடி ஆராய்தல் என்றால் சமூகமாக்கப்பட்ட உரையாடல் என்றுதான் பொருள்படும். வகுப்பு நடைபெறுவதற்கு முந்திய தினமே மாணவர்களுக்கு ஓர் ஒப்படைப்பு (assignment) அளிக்கப்படும். வகுப்புத் தினத்தன்று மாணவர்களே உரையாடலை நடத்திப் பாடத்தைக் கற்பர். ஒன்றுகூடி ஆராய்தல் முறையின் சிறப்பான கூறுகள் பின்வருமாறு:

(i) உரையாடல் நடத்துவதின் பொறுப்பு, வெளிப்படையாக வகுப்புப் பூராவுக்கும் அளிக்கப்பட்டிருக்குமேயொழிய, ஆசிரியர்பால் அப் பொறுப்பு இருக்காது.

(ii) உண்மையான ஒன்றுகூடி ஆராய்தல் முறையில் உரை யாடல், கருத்துகளை வெளிப்படுத்துதல், கலந்து ஆலோசித்தல் போன்றவையெல்லாம் வகுப்பின் குழுவிற்கு மாற்றப்பட்டிருக்கும். வகுப்பில் உள்ள மாணவர்களுக்கும் ஆசிரியருக்குமிடையே உரை யாடல் நடைபெறாது. ஆசிரியர் வகுப்பின் அங்கத்தினர்களுள் ஒரு வராகவே கருதப்படுவார்.

(iii) உரையாடல், கலந்து ஆலோசித்தல் போன்றவற்றில் பிற மாணவர்களைப்போல் ஆசிரியரும் கலந்து கொள்வார்.

(iv) ஒரு குறிப்பிட்ட செயல் திட்டம் அல்லது புதிர் தீர்ப்பது போன்றவற்றைப்பற்றி மாணவர்கள் ஊக்குவிக்கப்படவேண்டும்.

இவ்வாறில்லாமல் ஆசிரியர் கூறியவற்றைப்பற்றி உரையாடல் நடத்தினுல் சொன்னதைத் திரும்பச்சொல்வதுபோலவே முடியும். எனவே, உண்மையான ஒன்றுகூடி ஆராய்தல் முறை என்ருல் இயல்பாகவே ஒரு திட்டமான தலைப்பைப்பற்றி ஆராய மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டிருக்கவேண்டும்.

(v) மாணவர்கள் கலந்து ஆலோசிப்பதில் ஈடுபடும்பொழுது பின்வருவன நடைபெற வேண்டும்:

மாணவர்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளுதல், எழுச்சியூட்டும் உரையாடலை நடத்துதல், வகுப்பு முழுவதும் கூடி ஆராய்தல், பெரும்பாலான மாணவர்கள் ஏற்றுக்கொள்ளும் திட்டமான முடிவை அடைதல் இவை நடைபெறும் செயலுக்கு 'ஒன்றுகூடி ஆராய்தல்' என்ற பெயர் பொருந்தும்.

**ஒன்றுகூடி ஆராய்தலின் வகைகள்: A. D. முல்லர்** (A. D. Muller) என்னும் பேராசிரியர், ஒன்றுகூடி ஆராய்தல் முறைகளை இரண்டு கூறுகளாகப் பிரித்துள்ளார்:

முதல் முறை **விதிகளுக்கு இசைந்த வகை** (formal type) எனப்படும். இதை நிலைய அமைப்புப் பெற்ற வகை (institutionalized type) என்றும் கூறுவர். வகுப்பு, ஒரு பாராளுமன்ற அமைப்பை ஒட்டிக் கூட்டப்படும். தலைவர், துணைத்தலைவர், செயலாளர் போன்ற அலுவலர்கள் நியமிக்கப்படுவார்கள். உரையாடலின் கருத்தைச் செயலாளர் குறித்துக் கொள்வார். தலைப்புப் பற்றிய பாடப்பொருளை விளம்பரப் பலகையில் ஒரு குழு எழுதி அல்லது படங்களை ஒட்டி விளம்பரம் செய்யும். நூலகத்திலிருந்து உரையாடலுக்கு வேண்டிய புத்தகங்கள், படங்கள் போன்றவற்றைச் சேகரிக்க ஒரு மாணவனும், எடுத்துக்கொண்ட தலைப்பைப் பற்றிய அசைவுப்படச் சுருள், புறத்தேற்று நுண்கருவிகள் (projection equipment) போன்றவற்றைச் சேகரிக்க மற்றொரு மாணவனும் பொறுப்பு ஏற்பான்.

**முறையணையா வகை** (informal type) எனப்படுவது எப்பொழுதும்போல் வகுப்பில் மாணவர்கள் கூடி, கலந்து ஆலோசனையை நடத்துவர். ஆசிரியர் அல்லது மாணவர்களில் ஒருவர் தலைமை வகித்து உரையாடலை நடத்துவார். முதலில் ஆசிரியரின் மேற்பார்வையில் உரையாடல் தொடங்கவேண்டும். மாணவர்களின் திறமை வளர்ச்சியடைந்துகொண்டு செல்லும்பொழுது ஆசிரியர் பின்னணிக்குச் செல்வார். உரையாடல் நடத்தும் பொறுப்பு முழுவதும் நாளாவட்டத்தில் மாணவர்களிடமே மாற்றப்பட்டு விடும். **பைனிங்** ஆசிரியர் கூறுவதுபோல், உரையாடல் நடக்கும்

பொழுது குழுவுணர்ச்சியும், ஒவ்வொரு மாணவனும் தனது பொறுப்பை உணர்தலும் ஏற்பட்டால், அதுவே சிறந்த ஒன்று கூடி ஆராய்தல் முறையாகும்.

**உரையாடல் நடத்தும்பொழுது ஆசிரியர் செய்யவேண்டியவை:** (i) இத் திட்டத்தைப் பின்பற்றும்பொழுது ஆசிரியர்கள் முன் கூட்டியே தயாரிப்புச் செய்யவேண்டும்.

(ii) மாணவர்த் தலைவர்களுடன் முன்கூட்டியே கலந்து செய்திகளைச் சேகரித்தல், ஒருங்கமைத்தல், எடுத்துக்கூறல் போன்றவற்றைத் தெளிவுபடுத்தவேண்டும்.

(iii) உரையாடல் நடத்தும்பொழுது கருத்துகள் தொடர் பற்றவையாக இருந்தாலும், பொருத்தமற்றதாக இருந்தாலும், கவனக் குறைவினால் கூறப்பட்டவையாக இருந்தாலும், அவற்றைக் கண்டுபிடித்து விலக்கும் திறமையை ஆசிரியர் பெற்றிருக்க வேண்டும்.

(iv) உரையாடல் மேற்கொண்டு வளர்ச்சியடையும்பொழுது, சில பாடப்பொருளை வலியுறுத்திக் கூறவேண்டியிருக்கும். அவற்றை, மாணவர்களின் கவனத்திற்கு ஆசிரியர் கொண்டுவர வேண்டும்.

(v) இச் செய்கைகளையெல்லாம், தான் ஆசிரியர் என்ற உரிமையில் மாணவர்களிடம் அதிகாரத்துடன் கூறக்கூடாது. மாணவர்களில் ஒருவராகத் தன்னை ஆக்கிக்கொண்டு இச் செயல் களை ஆசிரியர் செய்யவேண்டும்.

**இம் முறையின் பயன்கள்:** (i) ஒன்றுகூடி ஆராய்தல் முறையை மேற்பார்வைப் படிப்பு முறையுடனும், இக்கால நிகழ்ச்சியைக் கற்பித்தலுக்குப் பயன்படுத்தலாம்.

(ii) மாணவர்களின் சிந்திக்கும் திறமையை வளர்க்க உதவுகின்றது.

(iii) உழைப்பு, தான் தொடங்காற்றல், தன்னம்பிக்கை, தன் வெளியீடு போன்றவற்றை மாணவர்களிடம் வளர்ச்சியடையும்படி இம் முறை தூண்டுகின்றது.

(iv) ஊக்குவித்தல் என்ற பிரச்சினையைச் சமாளிக்க முடிகின்றது. எடுத்துக்கொண்ட தலைப்பினால் உந்தப்பட்டு மாணவர்கள் தாங்களே உரையாடலில் தீவிரமாக ஈடுபடுவார்கள்.

(v) மாணவர்த் தலைவன் கருத்துகளை வகுப்பின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் கேட்கும்பொழுது, வகுப்பு அறையின் காட்சி ஊக்கமளிக்கும்படியாக இருக்கும். வாதங்களும், எதிர் வாதங்களும் தொடர்ந்து நடக்கும்பொழுது எந்த ஒவ்வாத கருத்து வெளியிடப்படும் என்று மாணவர்கள் கூர்ந்து கேட்பதும், தங்கள் கருத்துகளைப் பிறர் ஏற்கும்படி அழகுபடக் கூறுவதும், வகுப்பு அறையில் உற்சாகம் மிகுதியாக ஏற்படுவதையும் நாம் காணலாம்.

(vi) ஒரு தலைவனின்கீழ்க் கூட்டுறவு முறையில் கலந்து ஆலோசனை நடத்தும் திறமையை ஒவ்வொரு மாணவனும் அடைகின்றான்.

(vii) நல்லெண்ணம், பிறருக்கு மரியாதை அளித்தல், தனக்கு புறம்பாகவுள்ள கருத்தை வெளியிடுவோரை மரியாதையுடன் கூறக் கேட்கவும், அன்புடனும், வரம்புக்குட்பட்ட முறையில் மாறுபட்ட கருத்தைத் தெரிவிக்கவும் மாணவர்களுக்கு இம் முறையில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இப் பண்பும் மாணவனைச் சிறந்த குடிமகனாகும் தகுதியை அளிக்கின்றது.

**குறைபாடுகள்:** (i) ஒன்றுகூடி ஆராய்தல் பெயரளவில் இருக்குமே தவிர, மாணவர்கள் உண்மையில் எவ்விதத் தூண்டுதலும் பெறாமல், ஆசிரியரைத் திருப்தி செய்வதே நோக்கமாகக் கொண்டு உரையாடலில் ஈடுபடுவார்கள். நாளடைவில் கவனக் குறைவானதாகவும் (perfunctory) பொறிகளை இயக்குவது போலவும் (mechanical) ஆகிவிடும்.

(ii) தொடர்பில்லாததும், பலனில்லாததுமான உரையாடலை நடத்துவது காலத்தை வீணாக்குவதாக முடியும். தலைப்புக்குப் புறம்பாக உரையாடலில் ஈடுபடவும், தன் கருத்துத் தவறாக இருப்பினும், உரையாடலில் கலந்துகொள்ளவேண்டுமென்பதற்காக வாதத்தில் ஈடுபடுவதும் சில மாணவர்களால் மேற்கொள்ளப்படும். இந்தத் தவறுகளை ஆசிரியர் தவிர்க்க எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். மாணவர்களின் உற்சாகத்தைக் குறைக்காமலும் அவர்களின் உரிமையைப் பறித்துவிடுவதாகக் கருதுவதற்கு வாய்ப்பு அளிக்காமலும் ஆசிரியர் இவ் வேலையைச் செய்யவேண்டும்.

(iii) திறமைமிக்க மாணவர்களில் சிலர் உரையாடலில் தாங்களே ஈடுபடுவார்களேயொழிய, பிறர் கலந்துகொள்வதற்கு வாய்ப்பே தரமாட்டார்கள். அறிவுத் திறமையில் குறைபாடுடையவர்கள் தங்கள் கருத்தைக் கூறினால் பரிகசித்தலுக்கு உள்ளாகு

வோமோ என்று பயந்து முன்வரமாட்டார்கள். எனவே, உரையாடலைச் சில மாணவர்களே அதிகப் பங்கு எடுத்துக்கொள்ளாமல் தடுத்தும், பிந்திய மாணவர்கள் பின்னணிக்குச் செல்வதைத் தடை செய்வதும் கைகூடிய ஆசிரியரின் திறமையைப் பொறுத்திருக்கின்றது.

(iv) ஒன்றுகூடி ஆராய்தல் முறையைப் பின்பற்றினால் எடுத்துக்கொண்ட பாடத்தில் மாணவர்களுக்கு முதிர் திறமை (maturity) ஏற்படாது என்று சிலர் குறை கூறுகின்றனர். மற்ற முறைகளையும் பின்பற்றினால்தான் பாடத்தை நன்கு கற்பிக்க முடியுமென்றும், எல்லாப் பகுதிகளையும் புரிந்து கொள்வார்கள் என்றும் கூறுகின்றனர்.

இக் குறைபாட்டைப் பெரிதாகக் கருதக்கூடாது. இம் முறையினால் ஏற்படும் பிற தன்மைகளைக் கருதுவோமாயின், ஒன்றுகூடி ஆராய்தல் முறையை வகுப்பில் ஆசிரியர்கள் சில பாடங்களை நடத்துவதற்காகவாவது உபயோகிக்கவேண்டும். சிறந்த குடிமைப் பயிற்சி, இம் முறையை மேற்கொள்ளுவதால் மாணவர்களுக்கு அளிக்கப்படுகிறது என்பதை நாம் மறக்கலாகாது.

## (இ) மீள்பார்வையும் பன்முறைப் பயிற்சியும் (Review and Drill)

**மீள்பார்வை:** நிலையானதும் பயனுள்ளதுமான கற்றல் நிலையை ஏற்படுத்த வெகுகாலமாக ஆசிரியர்கள் பயன்படுத்திவந்த சாதனம் மீள்பார்வை அல்லது பாடத்தைத் திரும்பக் கூறுதல் என்பது வெளிப்படையானதாகும். மீள்பார்வை அல்லது மறுபடியும் கற்றதைத் திருப்புதல் என்பது முன்பு கற்றதையும், பெற்ற அனுபவத்தையும் மறுபடியும் கற்பது அல்லது அனுபவிப்பது என்று பொருள் தராது. மீள்பார்வை எனப்படுவது கற்ற பாடப் பொருளைப் பற்றிப் பின்நோக்கும் செயல் (retrospective view) என்று சுருக்கமாகக் கூறலாம். மீள்பார்வை எனப்படுவதில் ஐந்து நிலைகளை நாம் குறிப்பிடலாம்.

(i) அச் செயல், புதிய அனுபவங்களுடன் ஈடுபாடுகொள்ளுதல்;

(ii) புதிய இணைப்புகளை அமைத்தல்;

(iii) புதிய திறன்களை வளர்த்தல்;

(iv) புதிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழிமுறைகளைக் காணுதல்;

(v) கற்ற பாடப்பொருளேயும் திறன்களேயும் நிலைத்திருக்க வைத்தல்.

எனவே, மீள்பார்வை செய்யும்பொழுது நாம் முன்பு கற்ற பாடப்பொருளை அல்லது விவரங்களைத் திரும்பவும் புதிய கருத்துடனோ அல்லது வேறு கோணத்திலோ பார்ப்பதாகும். கற்ற பொருளை மறுபடியும் பார்வை செய்து புதிய பாடச் சுருக்கம் அல்லது உதவிக் குறிப்புகள் தயாரித்தலில் மாணவர்களை ஈடுபடுத்தலாம்.

**மீள்பார்வைபற்றிய பலன்களைப் பெறுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முறைகள் :**

(i) கற்ற பாடப்பொருளைத் திரும்பவும் எடுத்துக்கூறி, அவற்றை வகைப்படுத்தி, அவைகளிடையே அமைந்திருக்கும் தொடர்பை விளக்கி மனத்தில் நிலைத்திருக்கச் செய்தல்.

(ii) பாடப்பொருளையும், அனுபவங்களையும் பெரிய அலகுகளாக அமைப்பதற்கு மாணவர்களுக்கு உதவி செய்யும் வகையில் ஆசிரியர்கள் மீள்பார்வையை மேற்கொள்வது.

(iii) முன்பு கற்ற அறிவை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் அதுபற்றிய ஆழ்ந்த கருத்தும், பரந்த முழுமையான தொலை நோக்கையும் (broader perspective) அடைய மாணவர்களுக்கு உதவி செய்வதற்கும் மீள்பார்வையைப் பயன்படுத்தலாம்.

(iv) கற்பித்தல் — கற்றல் (Teaching - Learning) முறையில் காணும் குறைகளை வெளிப்படுத்துவதற்கும் மீள்பார்வையை வகுப்பில் மேற்கொள்ளலாம்.

**மீள்பார்வையின் வகைகள்** (Types of Reviews): மீள்பார்வையைப் பல வகைகளாகப் பயன்படுத்தலாம். அவையாவன:

(i) அன்றாடப் பாட மீள்பார்வை (Daily lesson review)

(ii) தலைப்புசார் மீள்பார்வை (Topical review)

(iii) கூட்டுறவுச் செயலடங்கிய மீள்பார்வை (Co-operative review)

(iv) மீள்பார்வையின்மூலம் செயல்படுத்துதல் (Review by application)

(v) வரைபடங்கள், விளக்கப் படங்கள்மூலம் மீள்பார்வை செய்தல் (Review by making diagrams etc.).

(i) **அன்றாடப் பாட மீள்பார்வை:** புதிய பாடத்தைத் துவக்கு வதற்குமுன் சென்ற வகுப்பில் கற்பித்த பாடத்தை ஆசிரியர் மீள் பார்வை செய்து, பழைய பாடத்தின் சுருக்கத்தைக் கூறிப் புதிய பாடத்துடன் தொடர்புகொண்டு வகுப்பில் கற்பிப்பதில் மேற் கொண்டு ஈடுபடுவார்.

(ii) **தலைப்புசார் மீள்பார்வை:** முன்பு கற்பித்த பாடத்தை மறுமுறையும் மீள்பார்வைக்குக் கொண்டுவருதல் என்பது தலைப் புச்சார் மீள்பார்வை எனப்படும். குப்தர் கால அரசர்களைப்பற்றிக் கற்பித்த பிறகு, இரண்டு பிரிவேளைகளில் குப்தர்களின் ஆட்சி யினைப்பற்றிய எல்லாப் பாடப்பொருளையும் மீள்பார்வைக்குட் படுத்துதல் எடுத்துக்காட்டாக இங்குக் குறிப்பிடலாம். வேறு முறையிலும் மீள்பார்வையை ஆசிரியர் மேற்கொள்ளலாம். குப்த அரசர்களின் ஆட்சியினைப்பற்றிக் கற்பித்த பிறகு 'குப்தர் காலத்திய வாழ்க்கை' என்ற தலைப்பில் ஒரு பிரிவேளையில் கற்ற பாடப்பொருள்களை மீள்பார்வை செய்யலாம். காலவரிசையைப் பின்பற்றிப் பல அரசர்களைப்பற்றிக் கற்பித்தபின், ஒரு பிரச்சினை யைத் தீர்ப்பதற்குக் கற்ற பாடங்களை மீள்பார்வைக்கு உட்படுத்தும் செயலிலும் ஆசிரியர் ஈடுபடலாம்.

(iii) **கூட்டுறவுச் செயலடங்கிய மீள்பார்வை:** இம் முறை யில் ஆசிரியரும் மாணவர்களும் ஈடுபடுவர். வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களும் உரையாடலில் கலந்துகொண்டு ஆசிரியரின் மேற்பார்வையில் தாங்கள் கற்ற பாடத்தின் பாடப்பொருளைப் பற்றித் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்துவார்கள்.

(iv) **செயல்படுத்தும் மீள்பார்வை:** தாங்கள் கற்ற வரலாற்று அறிவைப் புதிய சூழ்நிலையில் பயன்படுத்துவதற்கு மாணவர் களுக்குப் பயிற்சி அளித்தல்மூலம் மீள்பார்வை மேற்கொள்ளப் படலாம்.

(v) **மாதிரி உருவங்கள், விளக்கப் படங்கள் வரைதல்மூலம் மீள்பார்வை செய்தல்:** ஆசிரியர் கரும்பலகையைப் பயன்படுத்திக் கற்பித்த பொருளை மாணவர்களுக்கு விளக்கம் தருவது எளிய முறையில் மீள்பார்வை நடைபெறுவதாகக் கூறலாம். வரை படங்கள், விளக்கப்படங்கள் வரைந்து அதன்மூலம் கற்பித்த பாடத்தின் நுணுக்கங்களை மாணவர்கள் சுலபமாகப் புரிந்து கொள்ளும்படி ஆசிரியர்கள் ஈடுபடுகின்றனர். இவ்விதம் பாடப்

பொருளைத் திரும்ப தொடர்புபடுத்திக் கற்பிப்பதால் மாணவர்களின் மனத்தில் அவை நிலைத்து நிற்கும்.

**மீள்பார்வையைச் சிறந்த பயனுடையதாக அமைக்க ஆசிரியர்களுக்குச் சில கருத்துகள்:**

(i) மீள்பார்வை செய்வதனுல் புதிய கற்றல் ஏற்படும்படி அவை இருக்கவேண்டும்.

(ii) ஒரு வரலாற்றுத் தலைப்பினுள் அடங்கிய பாடப்பொருளினிடையே ஓர் ஒற்றுமையையும், அவற்றிடத்தில் இயைந்த பொருத்தத்தையும் நிறுவுதல் ஏற்பட மீள்பார்வை நடைபெறவேண்டும்.

(iii) மாணவர்களுக்குச் சிறந்த தெளிவு ஏற்படவேண்டிய பகுதிகளைப்பற்றிய தலைப்புகள், பாடப்பொருளில் மிகவும் முக்கியமானதாகவும் உள்ள பகுதிகள் ஆகியவற்றின் மீள்பார்வைக்கு எடுத்துக்கொள்வது விரும்பத்தக்கதாகும்.

(iv) மாணவர்கள் கற்ற அறிவைச் சோதிப்பதற்கும், கற்பித்தல் முறையின் பலனை மதிப்பிடும் வகையாகவும் மீள்பார்வை அமையவேண்டும்.

(v) அதிக இடைவெளிக்குப் பிறகும், குறுகிய இடைவெளிக் காலத்திலும் ஆசிரியர் மீள்பார்வையைச் செயல்படுத்துவது சிறந்த பயனை அளிக்கும்.

(vi) பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டிருக்கும் பாடப் பயிற்சிகளை மீள்பார்வை செய்வதற்கு ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

**பன்முறைப் பயிற்சி** (Drill): கற்றலில் நிலையான பலனை ஏற்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் பழமையான சாதனம் பன்முறைப் பயிற்சியாகும். ஓர் அனுபவத்தைத் திரும்பச் செய்வதால் அதன் கருத்து மாணவர்கள் மனத்தில் நிலையாக அமையும். 'பயிற்சி, கற்றலுக்கு முழுமையை அளிக்கின்றது' (Practice makes perfect) என்ற கூற்று பன்முறைப் பயிற்சியின் முக்கியத்துவத்தை விளங்கவைக்கின்றது. கற்றதை மறுபடியும் கற்பதனுல் பழக்கத்தின்மூலம் அவற்றை மறப்பதற்கு வழியேயில்லாமல் போய்விடுகிறது. அதனுல் மாணவர்கள் கற்கும் கோட்பாடு, பொதுமையான கருத்து, அல்லது ஓர் அடிப்படைக் கருத்து, எப்பொழுதும் மாணவர்கள் ஞாபகத்தில் இருக்கும்படியான நிலையை உருவாக்குகின்றது.

தாங்கள் கற்ற பாடப்பொருளில் ஆழ்ந்த கருத்துகளை உணர்வதற்கும், வரலாற்று உண்மைகளைப் புரிந்து கொள்வதற்கும், வரலாற்று நிகழ்ச்சிகளின் போக்குகளைத் தெரிந்து கொள்வதற்கும், பன்முறைப் பயிற்சி நல்ல சந்தர்ப்பங்களை மாணவர்களுக்கு அளிக்கின்றது.

கற்றல் என்றால் திரும்பச் செய்யும் பழக்கத்தைத் தோற்றுவித்தல் (Habit formation) என்பதை நடைமுறையில் நாம் உணர்கிறோம். பன்முறைப் பயிற்சி வேறு ஒரு பலனையும் நமக்குத் தருவதாக உள்ளது. திரும்பச் செய்வதோடு, ஆழ்ந்த அறிவை அளிப்பதும், கற்றதனால் ஒரு மனத்திருப்தியையும் அளிக்கும் தன்மையைப் பன்முறைப் பயிற்சி தன்னுள்ளிட்டிருக்கின்றது.

**பன்முறைப் பயிற்சியின் பழைய, புதிய கருத்துகள்**

தான் கற்ற பகுதி எவ்வித அறிவு நிகழ்ச்சிகளும் ஏற்படாத முறையில் திரும்பக் கூறுவதற்கு ஏற்ப மனத்தில் நிலைக்கச்செய்யும் வரையிலும் திரும்பத்திரும்பப் படிப்பது பன்முறைப் பயிற்சி என்று கருதப்பட்டது. தான் கற்கும் பாடத்தின் கருத்தினை உணர்வது இதில் முக்கிய இடம் பெறவில்லை. பாடப்பொருளைத் திரும்பக் கூறும் ஆற்றல் பெறுவதே சிறப்பானச் செயலாகக் கருதப்பட்டது.

தான் கற்கும் பாடத்தின் பொருளை நன்கு உணரும்படியான செயலில் ஈடுபடும் செயலே, பன்முறைப்பயிற்சி என்று தற்காலத்தில் கருதப்பட்டு வருகின்றது. இவ்வாறு பொருளுணர்ந்து கற்பதனால் பின்பு புதிய சூழ்நிலையில் தேவைப்படும்பொழுது இவ்வாற்றல் பயன்படுவதாக அமையும் என்பதில் ஐயப்பாடில்லை.

**பன்முறைப் பயிற்சியை மேற்கொள்ளும்பொழுது கருத்தில் கொள்ளவேண்டியவை:**

(1) பன்முறைப் பயிற்சிக்கு அளிக்கப்படும் பாடப்பொருள் கருத்து நிறைந்ததாக இருத்தல் வேண்டும்.

(2) பன்முறைப் பயிற்சிகள் அளிக்கப்படும் பாடப்பொருள் சுவையானதாகவும் மாணவர்களின் கவனத்தைக் கவர்வனவாகவும் இருக்கும்படித் தேர்ந்தெடுத்தல் இன்றியமையாததாகும்.

(3) பன்முறைப் பயிற்சி அதிக காலத்தைச் செலவழிக்கும்படி இருக்கக்கூடாது. சிறிய பகுதிபற்றியதாகவும் பல வாரங்களுக்கிடையில் ஏற்படுவனவாகவும் அவை இருக்கவேண்டும்.

(4) பன்முறைப் பயிற்சி என்பது தனியாள்பற்றிய செயலாகும். எனவே, அடிக்கடி மாணவர்களுக்கு ஊக்கமளித்து அவர்களைப் பன்முறைப் பயிற்சியில் ஈடுபடுத்தவேண்டும்.

(5) பன்முறைப் பயிற்சி பலவகையினதாக அமையவேண்டும். மாணவர்களுக்கு அவை மன நிறைவு அளிப்பதாகவும் இருக்க வேண்டும்.

(6) பன்முறைப் பயிற்சி மாணவர்களுக்கு உடற்களைப்பை (fatiguing) ஏற்படுத்தும். ஆகையால், வெகுநேரம் மாணவர்களை அதில் ஈடுபடுத்துவதை தவிர்த்தல் நலமாகும்.

வரலாற்றுப் பாடத்தில் தேசப்படம் வரையும் பகுதி பன்முறைப் பயிற்சிக்கு மிகவும் ஏற்றதாகும் என்பதை நாம் உணரவேண்டும்.

**மீள்பார்வையும், பன்முறைப் பயிற்சியும்—ஒப்பிடல்:** மீள் பார்வையும், பன்முறைப் பயிற்சியும் மாணவர்கள் ஞாபகத்தில் படித்த பாடப்பொருளை நிலையாக இருக்கவைக்க உதவும் சாதனங்கள் என்று நாம் பார்த்தோம். ஆனால் நோக்கத்திலும், முறையிலும், பலனிலும் இவை வேறுபட்டவை

(1) பன்முறைப் பயிற்சியின் நோக்கம் திறன் வளர்ச்சியாகும் (skill development). மீள்பார்வையின் நோக்கம் கற்ற பாடத்தின் பொருளை நன்றாகவும் தெளிவாகவும் ஏற்றுக்கொள்ளுதல் என்பதாகும்.

(2) பன்முறைப் பயிற்சியின்போது மேற்கொள்ளப்படும் முறை எவ்வித மாற்றமும் இல்லாமல் திரும்பத்திரும்பச் செய்வதேயாகும். ஆனால், மீள்பார்வையில் முன்பு கற்ற பாடப்பொருளைப் புதிய கண்ணோட்டத்துடன் திரும்பவும் எடுத்துக் கூறுதல் நடைபெறுகின்றது.

(3) பன்முறைப் பயிற்சியில், ஒவ்வொரு விவரமும் எவ்வித மாறுதலுமின்றித் திரும்பக் கூறுதல் அல்லது செய்தல் ஏற்படுகின்றது. மீள்பார்வையில் ஞாபகத்தில் இருக்கவேண்டிய முக்கியப் பாடப்பொருள்கள் மட்டும் திரும்ப எடுத்துரைக்கப்படுகின்றன.

(4) பன்முறைப் பயிற்சியில் மனப்பாடம் செய்தல் வலியுறுத்தப்படுகின்றது. மீள்பார்வையில் காரண காரியத்துடன் கற்ற பல பாடப்பொருள்கள் சிந்தனைக்குட்படுத்தப்படுகின்றன.

(5) பன்முறைப் பயிற்சி ஆர்வம் இன்றி அமையும்; மீள் பார்வை ஆர்வம் ஊட்டி நடைபெறும்.

## (3) (அ) புதிர் தீர்முறை (Problem Method)

புதிர் தீர்க்கும் முறை வரலாற்றுப் பாடம் கற்பிப்பதற்கு ஏற்ற தாகவுள்ளது. பாடம் நடத்துங்கால், மாணவர்களின் சிந்தனையைத் தூண்டும் சில பகுதிகள் ஏற்படுவதை நாம் உணர்வோம். ஒவ்வொரு பாடத்திலும் அத்தகைய பிரச்சினைகள் ஏற்படும். அவற்றைத் தீர்ப் பதற்கு அதிகப்படியான புத்தகங்களைப் படிக்கும்நிலை ஏற்படாது. ஹெர்பார்ட் திட்டத்தை ஒட்டி ஆசிரியர்கள் பாடத்தைத் துவக்கும் பொழுது புதிர் நிறைந்த சில வினாக்களை மாணவர்களிடம் கேட்டு அவர்களின் சிந்தனையைத் தூண்டுவார்கள். அவர்கள் அளிக்கும் விடைகளைக்கொண்டு பாடத்தைத் தொடர்புபடுத்தி, மாணவர் களின் ஊக்கத்தைப் பெறுவார்கள். இவ்வித முறையை நாம் புதிர் தீர்முறை என்று கூறுவதில்லை. வரலாறு கற்பிக்குங்கால் சில புதிர்கள் நிறைந்த பிரச்சினைகளை மாணவர்களுக்கு அளித்து, அவற்றைத் தீர்க்க ஒவ்வொரு மாணவனும் தனிப்பட்ட தயாரிப்பும், வேண்டிய காலத்தை எடுத்துக் கொள்வதும், சிந்தனையில் ஈடுபடு வதும் போன்ற செயல்களை உள்ளடக்கிய முறையைப் 'புதிர் தீர் முறை' எனக் கூறுகிறோம்.

வரலாற்றுப் பகுதி பூராவும், தொடர்ச்சியாக உள்ள புதிர்களைத் தீர்க்கும் முறையில் அமைக்கப்படவேண்டும் என்று சில தீவிர வாதிகள் கூறுகின்றனர். இந்தக் கருத்துப்படி ஆசிரியர் **பைனிங்** (Bining) பல தொடர்ச்சியான பிரச்சினைகளை எழுப்பி, அவற்றைத் தீர்க்கும் முறையில் அமெரிக்க நாட்டின் வரலாற்றை அமைத் துள்ளார். ஆனால், இவ்விதம் வரலாற்றுப் பாடத்தை அமைப்பதை மற்ற ஆசிரியர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. வரலாறு என்பது ஒற்றுமை, தொடர்ச்சி என்ற பண்புகளை உடையதாகும். இவ்வித புதிர் தீர் முறைப்படிப் பாடத்தை அமைத்தால், வரலாற்றின் அடித் தளத்தையே தகர்ப்பதற்கு ஒப்பாகும். விடப்பட்டதும், ஒட்டுப் போட்டதுமான செயலாக வரலாறு கற்பிப்பது ஆகிவிடும்.

எனவே, புதிர் தீர்க்கும் முறையை நடுத்தரமான கருத்துப்படி (moderate view) மேற்கொள்ள வேண்டும்.

### புதிர் தீர்ப்பதில் அடங்கிய முறைகள் (Process in Problem-solving)

ஆசிரியர் டூவி (Dewey) கூற்றுப்படி, புதிர் தீர்ப்பது என்றால் திட்டமான ஐந்து நிலைகள் (steps) மனத்தில் ஏற்படுவதாகும். அவையாவன:

(i) புதிர்களை உணர்தல்.

(ii) திட்டவட்டமாக உணரப்படும் புதிரைத் தீர்க்க முடிவு செய்தல்

(iii) **பலவித முறைகளைச் சீர்தூக்கிப் பார்த்தல்.**

(iv) ஒரு விளக்கத்தைத் தேர்ந்தெடுத்தல்.

(v) அடைந்த முடிவைப் பரிசீலனை செய்தல்.

எனவே வரலாற்றுப் பாடத்தில் புதிர் தீர்க்கும் முறை என்றால், புதிர்களைத் தீர்ப்பதில், மனம் மேற்கூறிய ஐந்து நிலைகளை மேற்கொள்ளுதலாகும்.

**புதிர் தீர்க்கும் முறையின் நுட்பம் (Technique of problem solving)**

(i) புதிர்கள் தங்களுடையது என்று மாணவர்கள் கருதும்படி செய்யவேண்டும். ஆசிரியர் பாடத்தை நடத்தும்பொழுது தன் திறமையைக்கொண்டு புதிர்களை உருவாக்கி அவற்றை மாணவர் தாங்களே ஏற்படுத்தியதாகக் கருதும்படிச் செய்து, அவற்றைத் தீர்க்கும் முயற்சியில் ஈடுபடும்படிச் செய்ய அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

(ii) உயர்ந்த புதிரை விளக்கமாகப் புரிந்துகொள்ளவேண்டும். அடிக்கடி அப் புதிரை மாணவர்களுக்கு எடுத்துக்கூற வேண்டும்.

(iii) ஏற்பட்ட புதிரைத் தீர்ப்பதற்கு வழிகளை அமைத்துக் கொடுக்கவேண்டும். எந்தப் புத்தகத்தில் எந்தத் தலைப்பைப் படிக்க வேண்டும் என்பது போன்ற உதவியை ஆசிரியர் மாணவர்களுக்குப் புரிய வைக்கவேண்டும். புதிரைத் தீர்க்கும் முறை திட்டவட்டமற்றதாக ஒருக்காலும் இருத்தல் கூடாது

(iv) மாணவர்கள் அடைந்த முடிவும் திட்டவட்டமானதாக இருக்கவேண்டும். தங்கள் கருத்தை எழுதும்படி ஆசிரி ர் கூறும்படி செய்து, அது பற்றி வகுப்பில் உரையாடல் நடத்தவும் வேண்டும். இதனால் தெளிவுறாத நிலையில் உள்ள முடிவுகள் எல்லாம் தெளிவு பெறும்.

**வகுப்பறையில் எவ்விதம் புதிர்களை உருவாக்குவது**

(v) ஆசிரியர் பாடத்தைப் பற்றிய செய்திகளைக் கூறிவரும் பொழுது, இயல்பாகவே ஒரு புதிர் ஏற்படுவதுபோல் செய்யவேண்டும். இதற்கு ஆசிரியர் திறமையுள்ளவராக இருத்தல் இன்றியமையாதது.

பாடத்தை விளக்கி வரும்போது, ஒரு வாக்கியத்திற்கு முன்பு 'ஏன்' 'எப்படி' என்ற ஒரு சொல்லை உபயோகிப்பதால் அதை ஒரு புதிர் என்று சொல்லிவிட முடியாது. மாணவனின் மனத்தைச் சிந்திக்கும்படி தூண்டும் நிகழ்ச்சிதான் புதிராகும். அந்தப் புதிரை, தான் உணர்ந்ததாக மாணவன் எண்ணவேண்டும். ஆசிரியர் எந்தப் புதிரை மனத்தின் கண் கொண்டுள்ளாரோ அதையே மாணவர் நினைக்கும்படியாக வாய்மொழிப் போதனையை ஆசிரியர் நடத்த வேண்டும். அவர் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை விவரித்துக் கூறும் பொழுது, மாணவர்களை ஏன் அவ்விதம் அந்த நிகழ்ச்சி ஏற்பட்டது என்று கேட்கும் நிலைமையை ஏற்படுத்துவதில்தான் ஆசிரியரின் திறமை அமையும்.

இதற்கு ஓர் எடுத்துக்காட்டு இங்குக் கூறுவோம். மதச் சீர் திருத்தத்தைப் பற்றி ஆசிரியர் ஹெர்பார்ட் முறைப்படி நடத்தி வரும்பொழுது, அவ்வியக்கம் ஜெர்மனி நாட்டில் ஏற்பட்டதென்றும், அதுபற்றி ஏற்பட்ட சண்டைகள், உயிர்ச்சேதம் முதலியவற்றைக் கூறுவார். ஆனால் இங்கிலாந்தில் மதச் சீர்திருத்தம்பற்றி உள் நாட்டுக் கலகம் ஏற்படவில்லை என்றும் கூறுகிறார். இந்தக் கட்டத்தில் மாணவர்கள் இதன் காரணத்தை அறிய ஆவல் அடைகின்றார்கள். எனவே, அது ஒரு புதிராக மாணவர்கள் உணரும்படி ஆசிரியர் செய்கின்றார் என்பது விளங்கும். இதைத் தீர்ப்பதற்கு படிப்பு, காலம், சிந்தனை மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றன. இந்தப் புதிரைத் தீர்ப்பதற்கு எந்தப் புத்தகங்களைப் படிக்கவேண்டும் என்று ஆசிரியர் கூறி, அதற்கு வேண்டிய உதவிகளையும் அளிக்கின்றார்.

இதற்கு மாறாக, 'ஜெர்மனியில் ஏற்பட்ட மதச் சீர்திருத்தம் இங்கிலாந்தில் ஏற்பட்டதைவிட வேறுபட்டது என்பதை இன்று படிப்போம்', என்று ஆசிரியர் பாடத்தைத் துவக்கக்கூடாது. 'ஏன் 1688ஆம் ஆண்டில் ஏற்பட்ட புரட்சி கீர்த்தி பொருந்திய புரட்சி என்று வழங்கப்படுகின்றது?' என்று கூறி அதன் காரணங்களைக் கூற முற்படக்கூடாது. இந்தப் புதிரை வகுப்பில் ஏற்படுத்த ஆசிரியர் முன்கூட்டிய திட்டம் செய்துகொண்டுவரவேண்டும். முதலாம் சார்லஸ் காலத்தில் உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டது. இரண்டாம் ஜேம்ஸின் செயல்கள் கொடுமையானவையாக இருப்பினும், தன் தகப்பனுக்கு ஏற்பட்ட மரண தண்டனையை அடையவில்லையென்று கூறும்பொழுது, ஏன் என்று மாணவர்களே கேட்க ஆரம்பிப்பார்கள். இதற்கு விடை காணுவதற்குப் படிக்கவேண்டிய தலைப்புகளையும், புத்தகத்தையும் ஆசிரியர் கூறுவார்.

(ii) சில சமயங்களில், பாடத்தை ஆசிரியர் நடத்திவரும் பொழுது, திறமையுள்ள மாணவர்கள் சில புதிர்களை எழுப்பு

வார்கள். அவை உடனே தீர்க்கமுடியாதவையாக இருக்கலாம். அதை வகுப்பு பூராவுக்கும் ஒப்படைப்பாக அளிக்கலாம். இங்கு ஊக்குவித்தல் மாணவர்களிடமிருந்து ஏற்படுகின்றது.

(iii) ஓர் ஆண்டின், முதல் இரண்டு பகுதிகளில் (terms) வழக்கம்போல் வரலாறு கற்பிப்பதை முடித்துவிட்டு மூன்ருவது பகுதியில் சில புதிர்களைத் தீர்க்கும் முறையில் நடத்திய பாடங்களைத் திருப்பி மீள்பார்வை முறைப்படிக் கற்பிக்கலாம்.

**புதிர் தீர்க்கும் முறையின் பயன்கள்**

(i) மாணவனின் நினைவாற்றலுக்குப் பதிலாக, அவர்களின் அறிவுக் கூர்மையை அறைகூவுகின்றது.

(ii) அச்சிட்டப் பக்கங்களினின்றும் எண்ணங்களையும், புதிய கருத்துகளையும் மாணவன் பெறுகிருன்.

(iii) இம்முறை வாழ்க்கையோடு ஒட்டினதாக இருக்கின்றது. வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் புதிர்கள் ஏற்படுகின்றன. வகுப்பிலேயே புதிர்களைத் தீர்க்கும் திறனை மாணவர்கள் பெறுவதால் பிற்காலத்தில் அத் திறன் அவர்களுக்குப் பயன் உடையதாக இருக்கும்.

(iv) மாணவர்கள் குடிமைப் பண்பைப் பெறவேண்டும். மக்கள் ஆட்சிக்கேற்ப தன் திறமையை அவன் வளர்த்துக்கொள்ள வேண்டும். இக்கால நிகழ்ச்சிகளைச் சீர்தூக்கிப் பார்த்து, நல்ல முடிவை அடையும் பழக்கத்தைப் பெறவேண்டும் என்பதே சமூகப் பாடம் கற்பிப்பதன் நோக்கங்களில் ஒன்ருகும். எனவே, புதிர் தீர்க்கும் முறை, மாணவர்களுக்கு நல்ல முடிவைபெறும்படி செய்கின்றது.

(v) மாணவர்கள் வகுப்பில் செயலற்றவர்களாக இருப்பதற்குப் பதில் செயலில் தீவிரமாக ஈடுபட்டுக் கற்றலில் ஈடுபாடு பெறுகின்றனர்.

(vi) குழு முறையில் வேலையில் ஈடுபடுதல், ஒருங்கு கூடி ஆராய்தல் போன்ற முறைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

(vii) ஒரு புதிருக்கு ஒன்றுக்குமேற்பட்ட கருத்துகள் உள்ளன என்பதை மாணவர்கள் உணர்வார்கள். திறந்த மனமுடைமை, இணைவிணக்கம் போன்ற நற்பண்புகள் மாணவர்களிடத்தில் வளர்ச்சியடைய வாய்ப்புகள் உள்ளன.

**குறைபாடுகள்**

(1) புதிர் தீர்ப்பது என்பது புத்தகங்களினின்றும் பாடப் பொருளை அறிவதாக இருப்பதால், சோம்பல் மிகுந்த சில மாண வர்கள் தங்கள் பொறுப்பினின்றும் நழுவிவிடுவார்கள். அதை ஆசிரியர் தவிர்க்க வேண்டும்.

(2) குறிப்பாக வரலாறுகள் கற்பித்தலில் புதிர் தீர்க்கும் முறையைப் பின்பற்றினால், பாடத்தின் எல்லாப் பாடப் பொருளை யும் மாணவர் கற்க வாய்ப்பில்லாமல் போய்விடும். சில புதிர்களைத் தீர்ப்பதில் மாணவர்களை ஈடுபடுத்துவதனுல், இந்தக் குறையைப் பெரிதாகக் கருத வேண்டயதில்லை.

(3) புதிர்களைத் தீர்க்கும்பொருட்டு, புத்தகத்தை மாணவன் படிக்கும்பொழுது, அதன் பொருளை அறிந்து கொள்வதற்குப் பதில், தன் புதிரைத் தீர்க்கும் விடைகளையே சேகரிப்பதில் மாணவன் ஈடுபடக்கூடும். புத்தகத்தை எவ்வாறு படித்துப் பயன்பெறுதல் வேண்டும் என்று மாணவர்களுக்கு நல்ல பழக்கத்தை ஏற்படுத்து வோமாயின், இக் குறையும் நீங்கிவிடும்.

**(ஆ)** செயல்திட்ட முறை (Project Method)

உயர்நிலைக் கல்விக்குழு அறிக்கை (Secondary Education Commission Report) கற்பிப்பதில இயங்குமுறையை (dynamic method) பின்பற்ற வேண்டியதன் அவசித்தை வலியுறுத்திக் கூறு கின்றது. வேலை செய்வதில் பிரியம்; சிந்திப்பதற்குத் திறமை, மாணவர்களின் கவர்ச்சி, வாய்ச்சொல் போதனையைக் குறைப்பது, தனி ஆள் வேற்றுமைக்கு ஏற்ற நிலைகளை ஏற்படுத்துவது, தன் பொறுப்பை உணர்வது போன்றவற்றை அளிக்கும் முறைகள்தான் இயங்கு முறையாகும்.

இவ்வித முறைகளில் ஒன்று செயல்திட்ட முறையாகும். இத் திட்டம் அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள கொலம்பியா பல்கலைக் கழ கத்தில் தோன்றியது. முதலில் மாணவர்கள் தச்சுவேலைப்பயிற்சியில் மாதிரி உருவங்களைச் செய்யப் பழகினர். இம் முறையில் கற்பனைத் திறன் வளர்ச்சியடைய வாய்ப்பு இல்லை. எனவே, உருவங்களைப் பார்க்காமல் ஏதாவது ஒர் உருவத்தைச் செய்வதற்கு முதலில் எந்த உருவத்தைச் செய்யவேண்டும் என்பதுபற்றிய திட்டம் ஒன்றும் உருவாக்கவேண்டும். பின் திட்டப்படி உருவத்தைச்செய்து முடிக்க வேண்டும். இவவாறு, எந்த வேலையையும் திட்டம் ஒன்று வகுத்து இத் திட்டத்தின்படி செய்து முடிப்பதற்குச் 'செயல் திட்டமுறை' என்று பெயர்.

டாக்டர் கில்பாட்ரிக் (Dr. Kilpatriek) என்பவர் 'சமூக வாழ்க்கைக்குப் பயனை அளிக்கும் ஏதாவது ஒரு தொழிலை மாணவர்களே தேர்ந்தெடுத்து அதை முடிப்பதே இம் முறையின் முக்கிய நோக்கம்' என்று கூறியுளளார். அவர் செயல் திட்ட முறையைப் பின்வருமாறு வரையறுத்துக் கூறியுள்ளார்.

(அ) 'கல்வியைப் பயிற்றுவிப்பதில் மேற்கொள்ளப்படும் பயன் உள்ள செயலே செயல்திட்ட முறையாகும்'

(ஆ) 'சமூகச் சூழ்நிலையில் மனப்பூர்வமானதும், பயனுள்ளதுமான செயல் நடைபெறுவதே செயல்திட்ட முறையாகும்' (The project is a whole-hearted purposeful activity proceeding in a social environment)

டாக்டர் ஸ்டீவன்ஸன் (Dr. Stevenson) கூற்றுப்படி இயற்கையான சூழ்நிலையில் ஒரு புதிரிடைச் செயலைப் பூர்த்தி செய்து முடிப்பதே செயல் திட்டம் ஆகும்' (A project is a problematic act carried to completion in its natural setting).

**செயல்திட்ட முறையின் நுட்பம்**(Technique of the project method)

செயல்திட்ட முறையில் மேற்கொள்ளப்படவேண்டிய நிலைகள் நான்காகும். அவையாவன:

(i) செயலைத் தேர்ந்தெடுத்து, அதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளுதல் (purposing)

(ii) வேலையை முடிக்கத் திட்டம் வகுத்தல் (Planning)

(iii) வேலையைச் செய்து முடித்தல் (Execution)

(iv) முடிந்த வேலை சரிவர முடிவுபெற்றதா என்று மதிப்பிடுதல் (Judging)

**செயலை ஏற்றுக்கொள்ளுதல்**

செயல் திட்டத்தை மாணவர்கள் தங்கள் இச்சைப்படித் தேர்ந்தெடுக்கவேண்டும். இந் நிலையின் மேற்கோளுரை ஊக்குவித்தல் நிலைபெறுது. மாணவர்களே செயல் திட்டத்தைத் தேர்ந்தெடுத்தால்தான், அதைப் பூர்த்தி செய்யும்படி உந்தப்படுவார்கள். தலைப்பைத் தேர்ந்தெடுக்க வகுப்பில் உரையாடல் நடத்தவேண்டும். ஆசிரியரின் மேற்பார்வையில் உரையாடல் நடந்து முடிந்ததும், மாணவர்கள் தாங்களே செயல் திட்டத்தைத் தேர்ந்தெடுத்துவிட்டதாக எண்ணும்படி ஆசிரியர் செய்யவேண்டும்.

**திட்டமிடுதல்**

தேர்ந்தெடுத்த செயலை எவ்வாறு முடிக்கவேண்டும் என்ற மாணவர்களால் திட்டம் வகுக்கப்படவேண்டும். மாணவர்களின் திறமையையும், பள்ளிக்கூடத்தில் கிடைக்கும் துணைக்கருவிகளையும் மனத்தில் கொண்டு செயலைச் செய்து முடிக்கும் வழிகளைத் திட்டமிடுதல் அவசியமானதாகும். செய்யவேண்டிய காரியங்களை அட்டவணைப்படுத்தி எழுதி வைத்துக்கொள்வது மாணவர்களுக்கு நல்ல முறையில் பயிற்சி அளிப்பதாகும்.

**செய்து முடித்தல்**

முதல் இரண்டு நிலைகளில் ஆசிரியர் வழிகாட்டியாக இருந்து, தக்க யோசனைகளைக் கூறுவார். திட்டம் தீட்டியதையொட்டி மாணவர்கள் செயலாற்ற வாய்ப்பு அளிக்கப்படுவது மூன்றாவது நிலையிலாகும். தான் தொடங்காற்றல், செயலைத் திட்டப்படி செய்யும் திறமை போன்றவற்றை மாணவர்கள் பெறுகின்றனர். மாணவர்கள் செயலாற்றினாலும் அது ஆசிரியர்களின் மேற்பார்வையிலும், கண்காணிப்பிலுமே நடக்கும்.

**மதிப்பிடுதல்**

பயனுள்ள செயலைத் திட்டப்படி மாணவர்கள் செய்து முடிக்கப்பட்டது என்று மாணவர்களே மதிப்பிடுதல் வேண்டும். குறைகள் யாவையென்றும், அவற்றை நீக்க எவ்வித முயற்சிகள் எடுத்தல் வேண்டும் போன்றவற்றை ஆலோசிப்பார். இதற்கு ஒருங்குகூடி ஆராய்தல், சொல்லாடல் நடத்துதல், கருத்தரங்கு போன்ற முறைகளில் ஒன்றைப் பின்பற்றலாம்.

**செயல் திட்டமுறையின் சிறப்பான இயல்புகள்** (Chief features of the project)

செயல் திட்டமுறையின் சிறப்பான இயல்புகளில் குறிப்பிடத்தக்கவை பின்வருவன:

(i) செயல் பூர்த்தியடையவேண்டும்.

(ii) மாணவர்களே திட்டம் செய்துள்ளதாக இருக்கவேண்டும்.

(iii) படித்தல் அல்லது கேட்பதுபோல் உள்ள மறைமுக அனுபவத்திற்குப் பதிலாக மாணவர்களுக்கு நேரடியான அனுபவங்களை அளிப்பதாக இருக்கவேண்டும்.

(iv) மனிதன் செயலாற்றலுக்குப் பதிலாக உடல் உழைப்பு இருக்கவேண்டும்.

(v) உடல் பற்றிய செயல் நடப்பதோடு புதிர் தீர்க்கும் செயலும் நடைபெறவேண்டும்.

(vi) சிறு செயலுக்குப் பதில் பெருமளவுள்ள செயலாக அமையும்.

(vii) தனி ஆள் செயலில் ஈடுபடுவதற்குப் பதிலாக பல மாணவர்களின் கூட்டுறவினுல் செய்து முடிக்கவல்லதாக இருக்கும்.

(viii) பாடங்களின் எல்லைகள் புறக்கணிக்கப்பட்டு, பல பாடங்களைத் தொடர்புறுத்தல் மேற்கொள்ளப்படும்.

(ix) வெறும் புத்தகப் படிப்பாக அமையாமல், வாழ்க்கையில் காணப்படும் நிலைமைகளில் செயல்திட்டமுறைகளாகத் திட்டங்கள் உள்ளன.

(x) செய்து முடிக்கும்பொழுது நுணுக்கங்களுக்கும் கவனம் செலுத்தப்படுகின்றது.

**வரலாறு கற்பிப்பதில் செயல் திட்டமுறையின் பெரும்பங்கு**

ஆசிரியர் பைனிங் கூறுவதுபோல் புதிர்தீர்க்கும் முறைக்குத் தான் அதிக வாய்ப்புகள் வரலாறு கற்பிப்பதில் உள்ளன. செயல் திட்டமுறைக்கு அதிக வாய்ப்புகள் இல்லையென்று கூறலாம். புதிர் தீர்க்கும் முறையில் வாழ்க்கை நிலைகளை ஒட்டிய செயல்கள் தேவை யில்லை. ஏற்படும் புதிர்களைத் தீர்க்கப் புத்தகங்களைப் படித்தால், மனத்தில்தான் விளக்கம் ஏற்படும். ஆனுல் செயல்திட்ட முறையில் செயலாற்றுவதால், உண்மையான சூழ்நிலையை ஒரு பொருள் உருவாகவேண்டும்.

அரசியல், வரலாறு கற்பிக்கும் பொழுது செயல்திட்ட முறை களைப் பின்பற்றக் கூடும். பின்வரும் செயல்திட்டங்களைக் குறிப்பிடலாம்:

ஆட்சி நூல்—பள்ளி இல்லத்தின் பரிபாலனத்தை எற்று நடத்தல், பள்ளியின் வருடாந்திர இதழ் வெளியிடுதல், பள்ளிக் கூடத்தில் மாணவர் தேர்தல், சுகாதார வாரம் கொண்டாடுதல், சாலைப்பாதுகாப்பு விதிகளைப் புரிந்து கொள்ளச் செய்தல் போன்றவை.

வரலாறு— இந்தியா சுதந்திரம் அடைதல், ஐக்கியநாட்டு சங்கம் போன்றவை.

**செயல்திட்ட முறையின் நற்பயன்கள்**

(i) வரலாற்றுப் பாடத்தில் மாணவர்களுக்குக் கவர்ச்சி ஏற்படுகின்றது.

(ii) கற்றலில் ஈடுபடும்பொழுது ஆசிரியருக்கு அல்லாமல், மாணவர்களிடமே முழுப் பொறுப்பும் கொடுக்கப்படுகின்றது.

(iii) பொருள்களை உருவாக்குதல், கூட்டுறவு முறையில் ஈடுபடுதல், கையாற் செய்தல் போன்ற இயல்பூக்கங்கள் நல்ல முறையில் செயல் மாற்றப்படுகின்றன.

(iv) செயல்திட்டம் முன்னேறும்பொழுது தலைமை தாங்குதல், தன் முயற்சியாகச் செயலில் ஈடுபடுதல், பொறுமை, விடா முயற்சி போன்ற பண்புகள் வளர்ச்சியடைகின்றன.

(v) செயற்கையாக அமைக்கப்பட்ட பள்ளிக்கூட வகுப்பு அறைகாட்சி வேறு விதமாக மாறுதல் அடைகின்றது.

(vi) மாணவர்கள் கற்கும் அறிவு பயனுடையதாக ஏற்படுகின்றது.

**குறைபாடுகள்**

(i) செயல்திட்ட முறைகளைக் கீழ்வகுப்புகளில் பொரும்பாலும் உபயோகிக்கமுடியும்.

(ii) ஒரு செயல்திட்டத்தைத் தேர்ந்தெடுக்கவும், திட்டமிடவும், செய்து முடிக்கவும் அதிக காலம் செலவிடப்படுகின்றது. செயல்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்ற தளவாடப் பொருட்கள் எல்லாப் பள்ளிகளிலும் கிடைப்பது சுலபமான காரியமன்று.

(iii) செயல் முறையின்படி மாணவர்களுக்கு வரலாறு கற்பிக்கப்பட்டால், வரலாற்றுப் பாடத்தின் நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய புத்தகப்படிப்பு நடத்த அதிக காலம் இல்லாமல் போய்விடும்.

எனினும், வெறும் பாடப்பொருளைக் கற்பதால் எவ்விதப் பலனும் ஏற்படாது. மாணவர்களின் வளர்ச்சி, முன்னேற்றத்தைக் கருதுவோமானால் செயல் திட்ட முறையும் மாணவர்களைப் பயிற்றுவிக்கும் முறைகளில் இடம் பெறுதல் இன்றியமையாததாகும்.

### (4) ஆய்வுக்கூட முறை (The Laboratory Method)

ஆய்வுக்கூடம் என்ற தொடர் அறிவியல் பாடத்தைக் கற்பிக்க உதவும் ஆய்வுக்கூடங்களைப் பின்பற்றிக் கூறப்படுகின்றது. வரலாறு கற்பிக்கும்பொழுது சோதனைகளைப் பெரும் அளவில் செய்ய வாய்ப்புகள் அதிகம் இல்லை. எனினும் வரலாற்றுப் பாடத்தில் ஆய்வுக்கூடம் என்பது வரலாறு கற்பிக்கும் அறையைத்தான் குறிப்பிடும் என்பதை நாம் மனத்தில் கொள்ளவேண்டும். அவ்வறையில் வரலாற்றுப் பாடத்தைக் கற்பிக்கவேண்டிய கருவிகள், சாதனங்கள் எல்லாம் இடம்பெறவேண்டும்.

வரலாற்றுப்பாட ஆய்வுக்கூடத்தில் மாணவர்கள் கீழ்க்காணும் வேலைகளில் ஈடுபடலாம்:

(i) மாணவர்கள் விரும்பும் தனிப்பட்ட படிப்பை மேற்கொள்ள லாம்.

(ii) மேற்பார்வையிடப்பட்ட படிப்பை நடத்தலாம்.

(iii) இணைவழிப் படிப்பை மேற்கொள்ளலாம்.

(iv) செயல்முறைகளை நடத்தலாம். குறிப்பாக, தேசப் படங்கள், கருத்துப்படங்கள், கைப்படங்கள் போன்றவற்றை வரையவும், உருவப்படங்கள் போன்ற கைவேலைகளில் மாணவர்கள் ஈடுபடும்படியும் செயலாம்.

செயல்முறைகளைப் பற்றியும், இணைவழிப் படிப்புகளைப் பற்றி யும் முன்பே விவரிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, தனியாள் படிப்பைப் பற்றியும் இப் பகுதியில் விவரிக்கலாம்.

#### (அ) டால்டன் திட்டம் (Dalton Plan)

டால்டன் திட்டம், ஒப்பந்தமுறை (Contract Plan) என்றும் வழங்கும். மெஸாசூஸட்ஸ் நாட்டிலுள்ள டால்டன் என்ற ஊரில் ஹெலன் பார்க்ஹர்ஸ்ட் (Helen Parkhurst) அம்மையாரால் 1919ஆம் ஆண்டு இம் முறை விளக்கப்பட்டது.

(i) இம் முறையை 7ஆம் வகுப்பு 8ஆம் வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கு அளிக்கலாம். நாம் கற்பித்துவரும் பள்ளிகளில் வகுப்புகள் அமைக்கப்பட்டிருக்கும் திட்டம் இம் முறையில் இடம் பெறாது. அதற்குப்பதிலாக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு பாட அறை பள்ளியில் ஏற்படுத்தப்படும்.

(ii) ஒவ்வொரு பாடத்திற்கும், மாணவன் மாதாந்திர ஒப்பந்தத்தைப் பெறுவான். இந்த மாதாந்திர ஒப்பந்தம் மாணவர்களின் வயதுக்குத் தயார் செய்யப்பட்டிருக்கும்.

(iii) ஒவ்வொரு பாடத்திற்கும் அச்சிட்ட ஒப்படைப்புத்தாளை மாணவன் பெற்றுக்கொள்வான். அதில் ஒப்படைப்பை முடிப்பதில் எவ்வாறு முன்னேறுகிறான் என்பது நாள்தோறும் குறிக்கப்படும்.

(iv) ஒரு குறிப்பிட்ட பிரிவேளையில் வரலாற்றுப்பாட அறையில் மாணவர்கள் கூடுவதை நாம் நம் பள்ளிகளில் காண்கின்றோம். இவ்வித நிலை டால்டன் திட்டம் நடைமுறையிலுள்ள பள்ளிகளில் இருக்காது. ஒவ்வொரு பாடத்திற்கும் பிரிவேளை ஒதுக்குவது, வகுப்பில் பாடங்கூறுதல், வினாக்கள் கேட்டு விடைகளை வரவழைத்தல் போன்றவைகளும் நடைபெறா.

(v) மாணவர்கள் விருப்பப்படி எந்த நேரத்திலும், எந்த ஆய்வுக்கூடத்திற்கும் செல்லலாம். ஒரு பாடத்தின் ஆய்வுக் கூடத்தில் பல வயது நிரம்பியவர்களும், பலவித ஒப்பந்தங்களை பெற்றுள்ள மாணவர்களும் காணப்படலாம்.

(vi) ஓர் ஆய்வுக்கூடத்தில் மாணவன் எவ்வளவு நேரம் இருக்கவேண்டும் என்ற நியதியும் கிடையாது.

(vii) எல்லாப்பாடங்களையும் பற்றிய ஒப்பந்தங்களை முடித்து விட்டால், அத்தகைய திறமையுள்ள மாணவன், அடுத்த மாதத்திய ஒப்பந்தத்தைப் பெற்று, அவன் முன்னே செல்லலாம். பிந்திய மாணவனால் திறமையுள்ள மாணவனின் வளர்ச்சி தடைபடாமலிருப்பதற்கு ஏற்ப இம் முறை வகுக்கப்பட்டிருக்கின்றது.

(viii) வரலாற்றுப்பாடத்தை எடுத்துக்கொள்வோமானால், ஓர் ஆண்டில் நடத்தவேண்டிய பாடத்தைப் பத்து பகுதிகளாகப் பிரிக்கவேண்டும். ஒவ்வொரு பகுதியைப் பற்றியும் ஒப்படைப்பு (assignment) ஒன்று தயார் செய்யப்படும். அது மாதாந்திர ஒப்படைப்பாகும். இந்த ஒப்படைப்பை வாராந்திரப் பகுதியாகவும் பிரிக்கலாம். மாதாந்திர ஒப்படைப்பைப் பூர்த்தி செய்ததும் அந்தப் பாடத்தை ஒட்டிய தேர்வை மாணவன் ஏற்றுக் கொள்ளலாம். எல்லாப் பாடங்களைப் பற்றிய மாதாந்திர ஒப்படைப்புகளைப் பூர்த்தி செய்ததும், அம் மாணவன் எல்லாத் தேர்வுகளையும் ஒரே காலத்தில் ஏற்றுக்கொள்ளலாம். முதலாவது ஒப்படைப்புச் சீட்டை முடித்தபிறகுதான் இரண்டாவது ஒப்படைப்புச் சீட்டு மாணவனுக்கு அளிக்கப்படும்.

**ஆசிரியரின் கடமை**

ஆசிரியரின் கடமையை ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்:

(i) வரலாற்று அறையில் படிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்துதல்.

(ii) ஒப்படைப்புப்பற்றி ஏதாவது விளக்கம் தேவைப்பட்டால், அப் பகுதியை விளக்கி மாணவனுக்குக் கூறுதல்.

(iii) சமூகப்பாட ஆய்வுக்கூடத்திலுள்ள கருவிகளைப்பற்றிக் கேட்டால், அவற்றை எவ்விதம் உபயோகிக்கவேண்டுமென்று கூறி, அவற்றை மாணவர்கள் பயன்படுத்தும்படி செய்யவேண்டும்.

(iv) ஒப்படைப்புப் பற்றிய புதிர்களை மாணவர்கள் தீர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டால், அவற்றைத் தீர்க்க எவ்விதம் முற்பட வேண்டுமென்று ஆசிரியர் எடுத்துக்கூறவும் எதிர்பார்க்கப்படுகிறார்.

(v) ஒரு தலைப்பின் பாடப்பொருளைத் தெளிவாக மாணவர்கள் புரித்துகொள்ளத் தடை ஏற்பட்டால், அதை விவரித்துக் கூறிப் பாடத்திற்கும், அப் பாடப்பொருளுக்கும் உள்ள தொடர்பை ஆசிரியர் விளக்கவேண்டும்.

**டால்டன் முறையின் பயன்கள்**

(i) கற்றலில் ஈடுபடுவதில் ஒவ்வொரு மாணவனுக்கும் முழு உரிமை இம் முறையில் அளிக்கப்படுகின்றது.

(ii) ஒவ்வொரு மாணவனும் தன் திறமைக்கு ஏற்பக் கற்றலில் முன்னேறுவான். மந்த புத்தியுள்ள மாணவர்களால் திறமையுள்ள மாணவனது தேர்ச்சி தடைபடாது.

(iii) குறித்த காலத்தில் ஒப்படைப்புகளை முடிக்கவேண்டுமென்ற பொறுப்பு மாணவர்களுக்கு ஏற்படுகின்றன.

(iv) ஒவ்வொரு பாடத்திற்கும் எவ்வளவு காலம் செலவழிக்க வேண்டுமென்று மாணவனே முடிவுசெய்யும் வாய்ப்பு இம் முறையில் இருக்கின்றது.

(v) ஒப்படைப்புக்களைப் பூர்த்தி செய்வதில் இடையூறுகள் ஏற்படுமாயின், ஆசிரியர் உதவி எப்பொழுதும் கிடைக்கின்றது.

(vi) மாணவர்களின் ஒழுங்கு என்னும் பிரச்சினை இம் முறையில் எற்படாது. அது நல்ல முறையில் சமாளிக்கப்பட்டு விடுகின்றது.

(i) மாணவர்களை சமூக உணர்ச்சியுடையவர்களாக ஆக்கு வதற்கு இம் முறையில் வழியில்லை. இம்முறை தனி ஆள் பற்றிய தேயன்றி, குழு முறையைப் பற்றியது அல்ல.

(ii) புத்தகங்களிலிருந்து விடைகளை எழுதிவந்து ஆசிரியரிடம் காட்டிவிடக்கூடும். அவற்றைப்பற்றிச் சிந்திப்பதற்கும், அவற்றைச் சரிவரப் புரித்துகொள்வவற்கும் மாணவர்களுக்கு இம் முறையில் வாய்ப்பு ஏற்படவில்லை.

(iii) ஆசிரியரின் வாய்மொழிப் போதனைக்கு இம் முறையில் இடமில்லை. மாணவர்களும் தங்கள் கருத்துகளை எடுத்துரைக்க இடமில்லை.

(iv) பாடங்களில் மாணவர்களுக்குக் கவர்ச்சியை ஏற்படுத்த வும், ஊக்குவிக்கவும் இம் முறையில் இடமில்லை.

இக் குறைகளை நீக்கக் குழு முறையில் உரையாடல், ஒன்றுகூடி ஆராய்தல், புதிர் நிறைந்த ஒப்படைப்புகளைக் கொடுத்தல் போன்ற வற்றை டால்டன் முறையுடன் சேர்த்து இப்பொழுது மேற்கொளு கின்றனர். இவ்வாறு சீர்திருத்தம் செய்யப்பட்ட டால்டன் முறை தான் மாரிசன் முறை என்று உருவாகியிருக்கின்றது.

**மேற்பார்வைப் படிப்பு (Supervised study)**

மேற்பார்வைப் படிப்பு கண்காணிப்பு முறை என்றும் வழங்கப் படும். இது ஒரு தனி முறையாக மேற்கொள்ளப்படுதில்லை. மற்ற முறைகளுடன் இணைத்து உபயோகிக்கப்படவேண்டும். ஆசிரியர் கொடுக்கும் ஒப்படைப்புகளைச் செய்து முடிக்க ஒழிந்த பிரிவேளை களில் ஓர் அறையில் மாணவர்கள் கூடுவார்கள். இப் படிப்பு ஆசிரியரின் கண்காணிப்பில் நடக்கும். இதைத்தான் ‘மேற்பார் வைப் படிப்பு’ என்று கூறுகிறோம்.

மாணவர்கள் படிப்பதற்குப் பதிலாக வேறு விளையாட்டுச் செய லில் ஈடுபடாமலிருக்கும் பொருட்டு வகுப்பு அறையின் மேற்பார்வை யிடுதல் அவசியமாகும்.

மாணவர்களுக்குச் சந்தேகங்கள் ஏற்படுமாயின், அவற்றைத் தீர்ப்பதற்கு ஆசிரியர் எப்பொழுதும் தயாராக இருப்பது இம் முறை யின் சிறப்பாகும். மேலும் வகுப்பில் மூன்றுவித மாணவர்கள் இருப் பார்கள். நுண்ணறிவுள்ள மாணவர்கள், நடுத்தர மாணவர்கள், பிந்திய மாணவர்கள். நடுநிலை மாணவர்களுக்கு ஏற்ப ஆசிரியர் பாடத்தை நடத்துவார். மந்த புத்தியுள்ள மாணவர்கள அதைச்

சரிவரப் பின்பற்ற மாட்டார்கள். எனவே மேற்பார்வைப் படிப்பில் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு மாணவனும் கற்றலில் ஈடுபடு கிறான். தன் குறையைத் தெரிந்து அதைத் தீர்க்க முயல்வான். இம் முறையில் பாடங்களைக் கற்கும் பொறுப்பு மாணவனிடமே விடப்படுகின்றது.

ஆசிரியர் மேற்பார்வையில்லாமல் பயிற்சிகளை, ஏன் வீட்டில் மாணவர்கள் செய்யக்கூடாது என்று சிலர் நினைக்கின்றனர். அதைப்பற்றிய கருத்துகள் பின்வருவன:

வீட்டுவேலை (Home study)

(i) பாடத்தைப் பற்றிய வேலைகளை வீடுகளில் செய்து வரும்படிக் கூறக்கூடாது என்று சில ஆசிரியர்கள் கருதுவர். மாணவன் ஆசிரியர் கொடுத்த ஒப்படைப்பைச் செய்யும்பொழுது, சில ஐயங்கள் ஏற்படின், அதைத் தீர்த்துக் கொள்வதற்கு உதவியைப் பெற வீட்டில் வாய்ப்புகள் இல்லை. மேலும் சில மாணவர்கள். தங்கள் வீட்டிலுள்ள படித்தவர்களைக்கொண்டு ஒப்படைப்புகளைச் செய்து விடுவார்கள். வேறு புத்தகங்களைப் பார்த்தும் விடைகளை எழுதி வந்து விடுவார்கள்.

(ii) மாணவர்கள் படிப்பதற்கு ஏற்ற புத்தகங்கள் எல்லா வீடு களிலும் இருக்காது. மற்ற குழந்தைகளைக் கவனித்தல் போன்ற கவனத்தைத் திருப்பும் இடையூறுகளும் வீட்டில் ஏற்படும் எனவே, கல்வித் தொடர்புள்ள எல்லாச் செயல்களையும் பள்ளியிலேயே செய்து முடிக்கவேண்டுமென்பது வலியுறுத்திக் கூறப்படுகின்றது.

**மேற்பார்வைப் படிப்பை நடத்தும் முறைகள்**

**(i) இரண்டு பிரிவேளை முறை**

வரலாறு கற்பிப்பதற்கு இரண்டு பிரிவேளைகள் (Periods) வேண்டும். முதல் பிரிவேளையில் மேற்பார்வைப் படிப்பையும், அடுத்த பிரிவேளையில் பாடங்கூறல் ஆசிரியராலும் நடத்தப் படலாம். நாம் பள்ளியில் கற்பிக்கவேண்டிய பாடங்களில் வர லாறும் ஒன்று. எனவே, இம் முறையைப் பின்பற்றுவதென்றால், பள்ளிக்கூடத்தின் காலத்தை அதிகரிக்கவேண்டும்.

**(ii) பிரிவேளையைப் பிரிப்பது**

பாடவேளையை இரண்டாகப் பிரித்து; ஒரு பிரிவு காலத்தை, அதாவது முதல் 25 நிமிடத்தில் மேற்பார்வைப்படிப்பையும், பிந்திய 20 நிமிடத்தில் வாய்மொழிப் போதனையையும் செய்வது.

இம் முறையில் பாடங்களை நடத்துவதற்குவேண்டி நேரம் கிடைக்காமல் போய்விடும் என்று வேறுசிலரும் கூறுகின்றனர். இம் முறைகளும் கண்காணிப்புப் படிப்பு முறையை கடைபிடிக்கப் போதுமான காலத்தை அளிக்கவில்லை.

## (iv) தனி ஆசிரியர் முறை

இம் முறையின் படி ஒவ்வொரு பள்ளியிலும், மேற்பார்வைப் படிப்பைக் கவனிக்க ஒரு தனி ஆசிரியர் வேண்டும். இவ்வாசிரியர் எல்லாப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்றவராக இருக்கவேண்டும் இம் முறை உறை பள்ளிகளில் (Residential School) தான் மேற்கொள்ளப்படுத்தக்கூடும்.

## (v) சபைமுறை (Conference plan)

இதன்படி பாடசாலை முடிந்ததும், வரலாற்று ஆசிரியர் பிற்போக்கான பிள்ளைகளைத் தம்மிடம் வரவழைத்து அவர்களுடைய குறைகளை நீக்க முயற்சி எடுத்துக்கொள்வார். அன்றாடம் பள்ளிக்கூடம் முடிந்ததும், இதற்கென்று ஆசிரியர் சில நேரம் பள்ளிக்கூடத்தில் தங்கி இவ்வேலையைக் கவனிப்பார்.

## ஒப்படைப்புகள் (Assignments)

மேற்பார்வையிடப்பட்ட படிப்பில் சிறப்பான பகுதியை ஒப்படைப்பு பெறுகின்றது. மாணவர்களுக்கு அளிக்கப்படும் ஒப்படைப்புகள் திட்டவட்டமானதாக இருக்கவேண்டும்,

தனியாள் வேற்றுமைகளுக்கு ஏற்ப ஒப்படைப்புகளை ஆசிரியர் தயாரிக்கவேண்டும். பைனிங் ஆசிரியர் மூன்று விதமான ஒப்படைப்புகளை ஆசிரியர் தயாரிக்க வேண்டுமென்று கூறுகின்றார்.

வகுப்பிலுள்ள மாணவர்களைத் தாழ்நிலை (inferior), நடுத்தரம் (average), உயர்நிலை என்று மூன்று பிரிவினர்களாக்க வேண்டும். அதற்கேற்ப மூன்று வித ஒப்படைப்புகளைத் தயாரிக்கலாம். அவை யாவன:

மீச்சிறு (minimum), நடுநிலை (average), மீப்பெரு (maximum) என மூன்று வகை ஒப்படைப்புகளாகும்.

மீச்சிறு ஒப்படைப்பு தாழ்நிலையிலுள்ள மாணவர்களுக்கும், நடுநிலைப் பொது நிலையிலுள்ள மாணவர்களுக்கும், மீப்பெரு திறமை மிகுந்த மாணவர்களுக்கும் உரியனவைகளாகும். இந்த ஒப்படைப்புகளை எடுத்துக்காட்டுகள்மூலம் பைனிங் ஆசிரியர் (Bining) விளக்கியுள்ளார்.

**மீச்சிறு ஒப்படைப்பு**

(1) உலக வரலாறு புத்தகத்தில் 10 முதல் 20ஆம் பக்கம் வரையிலும் படிக்கவும். சால்தியர்கள், யூதர்கள், பாரசீகர்களைப்பற்றி மும்மூன்று வாக்கியங்கள் எழுதவும்

(2) உலகப்படத்தில் இவர்கள் வாழ்ந்த நாடுகளைக் குறிப்பிடவும்.

**நடுநிலை ஒப்படைப்பு**

(1) மீச்சிறு ஒப்படைப்பைச் செய்து முடிக்கவும்;

(2) உலக நாகரிக வளர்ச்சிக்கு யூதர்கள், சால்தியர்கள், பாரசீகர்கள் அளித்த சாதனைகளை விவரித்துக் கூறவும்.

**மீப்பெரு ஒப்படைப்பு**

(1) மீச்சிறு, நடுநிலை ஒப்படைப்புகளைச் செய்யவும்.

(2) உலக வரலாற்றில் பண்டைய காலத்தில் நாகரிகத் தொட்டில்கள் என்று கூறப்படும் பகுதிகள் யாவை என்று கூறவும்.

(3) ஏன் உலக வரலாற்றின் சால்தியர்கள், பாரசீகர்கள், யூதர்கள் சிறப்பாகக் கூறப்படுகின்றனர் என்பதற்கு உன் கருத்து யாது என்று விவரிக்கவும்.

இதுபோன்ற மூன்றுவித ஒப்படைப்புகளை மாணவர்களுக்கு அளிப்பது பைனிங் ஆசிரியர் கருத்தாகும்.

**மேற்பார்வைப்படிப்பின் பயன்கள்**

(i) பிற்போக்கான மாணவர்களின் வளர்ச்சி கவனிக்கப்படுகின்றது. திறமையுள்ள மாணவனின் முன்னேற்றம் தடைபடாமல் இருக்கின்றது.

(ii) 'தனி ஆள் வேற்றுமை' களுக்கு ஏற்ப இம் முறை இருப்பதால், எல்லா அறிவு நிலையிலும் உள்ள மாணவன் கற்றலில் ஈடுபடுவதற்கும். அவரவர் திறமைக்கேற்பச் செயலாற்றவும் முடிகின்றது.

(iii) ஆசிரியர்—மாணவர் உறவு விரும்பத்தக்கதாக மாறுகின்றது. ஆசிரியரை வெறுப்புடன் எண்ணுவதற்குப் பதிலாக, தங்களுக்கு உதவி செய்பவர் என்று மாணவர்கள் கருத ஆரம்பிப்பார்கள். மாணவர்களின் குறைபாடுகளைக் கவனித்து, அவற்றைத்

தீர்க்கவும் ஆசிரியர் முயல்வதற்கு இம் முறையில் வழி ஏற்படுகின்றது.

**குறைகள்**

(1) முற்போக்கான மாணவர்கள் இம் முறையில் எவ்விதப் பயனையும் அடைவதற்கு வழியில்லை.

(2) இம் முறை பள்ளிக்கூட நேரத்தை அதிகரிக்கச் செய்கின்றது.

(3) மாணவர்களின் தன்னம்பிக்கை பாதிக்கப்படுகின்றது.

குறைபாடுகள் இருப்பினும், மேற்பார்வை படிப்பு முறையை முடிந்தவரையில் பள்ளிகளில் பின்பற்றவேண்டும். அதிக நேரம் இதற்கென்று ஒதுக்கவேண்டியதிருப்பினும், பிற்போக்கான மாணவர்கள் முன்னேற்றத்தைக் கருதுவோமாயின் இம் முறையை மேற்கொள்ளத்தான்வேண்டும் என்ற முடிவை அடைவோம்.

**(5) மூலமுறை (Source Method)**

ஆசிரியரின் வாய்மொழி விளக்கத்தினாலும், புத்தகங்களின் உதவியினாலும் வரலாற்றுப் பாடத்தைக் கற்பிப்பதோடு நின்றுவிடக் கூடாது. நுண்ணறிவுள்ள மாணவன் வரலாறு கற்கும்பொழுது எவ்வாறு வரலாறு புத்தகத்தை எழுதியவர்கள் பாடப்பொருளைச் சேகரித்தனர் என்பதைக் கேட்பான். அதாவது எவ்வித மூலப் பொருள்களைத் தழுவி வரலாறு புத்தகம் எழுதப்பட்டுள்ளது என்பதை மாணவர்கள் தெரிந்துகொள்ள நினைப்பது இயல்பான செயலே ஆகும்.

மூலமுறையைப் பற்றித் தீவிரக்கருத்துள்ளவர்கள் வரலாறு முழுவதும், பாடப்புத்தகங்களின் உதவியேயில்லாமல் மூலங்களைப் பயன்படுத்தியே கற்பித்தல்வேண்டும் என்று கூறுகின்றனர். நம்முடைய அனுபவங்களை ஒட்டி நாம் பார்த்தோமானால், இவ்விதம் வரலாற்றைக் கற்பிப்பது நடைமுறைக்கு உகந்தது அல்ல என்பது விளங்கும். 'வரலாறு கற்பித்தல்' என்ற நூலில் கீட்டிங் ஆசிரியர் பின்வருமாறு கூறியுள்ளார்:

'அறிவியல் கற்பிப்பதற்குக் கண்டறி முறையைப் (Heuristic method) பின்பற்றுவதையே வரலாறு கற்பிப்பதற்கும் பயன்படுத்த வேண்டும்.'

அறிவு நிலையில் முன்னேற்றம் அடைந்தவர்களுக்கும், வயது முதிர்ந்த மாணவர்களுக்கும் இம் முறைப்படி, கற்பிப்பது விரும்பத்

தக்கதாகும். ஆனால் பதினாறு வயதிற்குக் கீழ்பட்ட மாணவர்களுக்கு இம் முறையை மேற்கொள்ளலாமா என்று சிந்திக்கவேண்டும்.

மூலமுறை என்பது எதைக் குறிக்கின்றது என்பதை நாம் கவனிக்கவேண்டும். மூலங்களின் உதவிகொண்டு வரலாற்றை மாணவனே தொகுத்துக்கூறவேண்டும் என்று ஆரம்ப காலத்தில் கருதப்பட்டது. ஒரு நிகழ்ச்சியைப் பற்றி முரண்பாடானதும், பொருத்தமில்லாததும், தவறானதுமான பொருள்களையுடைய இணையான பகுதிகளை மாணவர்களிடம் கொடுத்து முரண்பாடுகளையும், தவறுகளையும் நீக்கி நம்பத்தகுந்த விவரங்களை உருவாக்கும் செயல்தான் மூலமுறையில் எதிர்பார்க்கப்பட்டது. 1900ஆம் ஆண்டின் துவக்கத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டில் இவ்விதக் கருத்தை அறிஞர்கள் விட்டுவிட்டனர். மூலமுறை என்பதற்கு வேறுவிதமான விளக்கத்தைத்தர ஆரம்பித்தார்கள். **வரலாறு கற்பிக்கும்பொழுது மூலங்களைப் பயன்படுத்தும் முறைக்குத்தான் மூலமுறை என்று விளக்கம் தரலாயினர்.** பாடப் புத்தகத்தில் தரப் பட்டிருக்கும் நிகழ்ச்சிகளுக்கு உயிர்கொடுக்கவும், செழிப்பாகவும் மூலங்கள் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு மூலமுறையைப் பற்றிய எண்ணம் மாற்றி அமைக்கப்படலாயிற்று.

**மூலங்களின் வகைகள்**

எழுதப்பட்டதும், எழுதப்படாததுமான பலவிதப் பொருள் களுக்கு மூலங்கள் என்று வரலாற்றில் கூறப்படுகின்றது. சற்றேறக் குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் பற்றிய **ஆவணப்பொருள்கள் (documents)** தற்காலத்திய நிகழ்ச்சிகள்பற்றியச் செய்திகளைத் தருகின்றன. இக் காலப்பகுதிக்கு முந்தியகாலத்தின் வரலாற்றைப் **பரம்பரைக் கதைகளின்றும், புராணங்களினின்றும்** பெறுகிறோம். வரலாற்றுக்கு முந்திய காலத்தைப் பற்றியப் பாடப்பொருள்களை அறிய அக் கால மக்களின் **நாகரிகம் பற்றியச் சின்னங்களின்** உதவியை நாடவேண்டியதாகவுள்ளது. **ஆயுதங்கள், கருவிகள், பானைகள், அழிந்து புதைப்பட்டுக்கிடக்கும் கட்டடங்கள், சிலைகள்** போன்ற சின்னங்களைக் குறிப்பிடலாம். இவை எல்லாம் மூலப்பொருள்களாகும். இவற்றைப் பயன்படுத்தி வரலாற்றை உருவாக்குதல் ஒருவரால் முடியக்கூடிய செயலாகாது. தனி அனுபவம் பெற்றுள்ள தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், மொழி ஆராய்ச்சியாளர்கள் போன்றவர்கள் ஏற்படுத்திய முடிவுகளை வரலாற்று ஆசிரியர் ஏற்கவேண்டியிருக்கின்றது. எனவே, மூலமுறையைப் பற்றிப் பள்ளிக்கூடங்களில் குறிப்பிடும்பொழுது **ஆவணப்பொருள்களைத்தான் (documentary sources)** நாம் நினைக் கின்றோம். **ஆவணப்பொருள்களிலும் பல பிரிவுகள் உள்ளன.**

அவையாவன தொடர்வரலாறு (chronicles), நாள்குறிப்புகள் (diaries), கடிதங்கள், வாழ்க்கை வரலாறுகள், அரசியல் வெளியீடுகள் (official dispatches), சட்ட ஆவணங்கள் (legal documents), அரசரின் ஆணைகள் (firmans), பட்டயங்கள் (sanads) போன்றவை. இவற்றைப் பதிப்பித்துதான் மாண வர்களுக்கு அளிக்கவேண்டும். மாணவனின் தாய்மொழியில் மொழிபெயர்க்கப் படவேண்டும். எனவே, ஆங்கிலத்திலேயே இவ்வித ஆவணப்பொருள்கள் இருந்தால், மாணவர்கள் மேல்வகுப் பிற்கு வரும்வரையிலும் மூலமுறையை மேற்கொள்வது ஒத்திவைக் கப்படவேண்டும்.

இங்கிலாந்து நாட்டு வரலாறு பற்றிய மூலப்புத்தகங்கள் அதிகம் வெளிவந்துள்ளன. ஆனல், இந்திய வரலாற்றைப் பற்றிய மூலப் புத்தகங்கள் அதிகம் வெளியிடப்படவில்லை. இக் குறைபாட்டைத் தீர்க்க முயற்சிகள் எடுக்கப்படவேண்டும்.

**வரலாறு கற்பிக்கும்போது மூலமுறையை எவ்விதம் பயன்படுத்த வேண்டும்?**

மூலங்களிலிருந்து வரலாற்றை உருவாக்க வேண்டுமென்ற கருத்து கைவிடப்பட்டது என்பதை முன்னமே பார்த்தோம். மூலங்களை உபயோகிப்பது என்றால், அவற்றைப் பாடப்புத்தகத் திற்குத் தழுவினதாக (adjunct) மேற்கொள்ளப்படுதல் என்ப தைத்தான் குறிக்கின்றது. டாக்டர் கீட்டிங் ஆசிரியர் மூலங்களைப் பள்ளிகளில் **இரண்டு வழிகளில்** பின்பற்றவேண்டுமென்று கூறி யுள்ளார். அவையாவன:

(i) பயிற்சிகளாகவும் (exercises);

(ii) இயற்சூழ்நிலையை வகுப்பில் ஏற்படுத்தவும் மூலங்களை ஆசிரியர் உபயோகிக்கவேண்டும்.

மேற்கூறிய இரண்டு வழிகளைப் பின்வரும் செயல்களின்மூலம் பின்பற்றலாம்.

(i) **செய்து காட்டல்** (Demonstration)

பாடத்தோடு தொடர்புள்ள ஒரு பகுதியை மூலப்புத்தகத் திலிருந்து ஆசிரியர் வகுப்பில் படித்துக்காட்டுவது ஒரு சிறந்த முறையாகும். அந்த மூலத்தை எழுதிய ஆசிரியர், அவர் எவ்வாறு பாடப்பொருள்களைத் தொகுத்தார் போன்றவற்றையும் குறிப் பிடலாம். மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் ஆசிரியர்

எடுத்துக்கூறவேண்டும். இதனால் தகுந்த சூழ்நிலை ஏற்படுவதோடு வரலாறு கற்பது உயிருள்ள செயலாக மாறுகிறது.

இம் முறை அறிவியல் பாடத்தில் மாணவர்கள் சோதனை செய்வதற்கு ஒப்பாகும். சோதனையைச் செய்வதினால், புதிதான ஒரு பொருளை மாணவர்கள் கண்டுபிடிக்கவேண்டுமென்று நினைப்பதில்லை. எவ்வாறு பொருள்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன என்பதை விளக்கவும், அது பற்றிய அனுபவத்தை அளிப்பதற்கே ஆகும். இவ்வித மூலத்தைப் படித்துக் காட்டி விளக்குவதினால், வரலாற்று நிகழ்ச்சிகளைப் பற்றிய பாடப்பொருள்கள் எவ்விதம் சேகரிக்கப்படுகின்றன என்பதை மாணவர்கள் உணர்வார்கள். ஓர் ஆசிரியர் கூறியதுபோல், 'சேரவேண்டிய இடத்திற்குப்போய் சேர்வதைவிட பிரயாணம் செய்த பாதைதான் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதவேண்டும்.' எனவே, மூலங்களின்மூலம் இவ்வனுபவத்தை மாணவர்களுக்கு அளிக்கவேண்டும்.

### (ii) குறிப்பிட்ட பகுதிகளை ஒப்படைப்புகளாக மாணவர்களுக்கு அளித்தல்

பாடத்தில் விவரித்துள்ள நிகழ்ச்சிகளைப் பற்றிய பாடப் பொருள் மூலப்புத்தகங்களில் விளக்கிக் கூறப்பட்டிருக்கும். அப் பகுதிகளைப் படித்துவரும்படி சில குறிப்பிட்ட மாணவர்களுக்கு ஒப்படைப்புகளாக ஆசிரியர் அளிக்கவேண்டும். வகுப்பில் அம் மாணவர்கள் தாங்கள் படித்தறிந்த பாடப்பொருளை வாய்மொழியாகக் கூறுவர். அதுபற்றிய சொல்லாடல் வகுப்பில் தொடர்ந்து நடக்கவேண்டும். மற்ற மாணவர்களும் மூலப்புத்தகங்களைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டப்படுவார்கள் என்பது இதனால் நன்கு விளங்கும்.

### (iii) புதிர் தீர்ப்பதற்கு மூலங்களைப் பயன்படுத்தல்

வகுப்பில் பாடத்தை நடத்தும்பொழுது சில பிரச்சினைகள் ஏற்படும். அப் பிரச்சினைகளைத் தீர்க்க மூலங்களில் சில பக்கங்களைப் படிக்கும்படி மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தலும் மேற்கொள்ளவேண்டிய முறையாகும். எவ்வாறு ஒரு நிகழ்ச்சியைப் பற்றிய கருத்துகள் வேறுபட்டிருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டவேண்டும். புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் வர்ணனைகளையும் மூலங்களில் காணப்படும் பிறவர்ணனைகளையும் மாணவர்கள் படித்து, எவ்விதம் உண்மையான பாடப்பொருள்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றது என்பதை உணரும்படிச செய்யலாம். இதனால் முடிவைக்காணும் திறமையையும், ஆய்வுச் சிந்தனையையும் வளர்க்கமுடியும். எனினும், இவ்விதம் புதிர் தீர்ப்பதற்கு

மூலங்களை அடிக்கடி மேற்கொள்ளமுடியாது. அதற்கு வேண்டிய நேரமும் கிடைக்காது. எனவே, சில சமயங்களில் மட்டும் இம் முறையை மேற்கொள்ளலாம்.

(iv) எடுத்துக்காட்டுகளாக மூலங்களைப் (purposes of illustration) பயன்படுத்தவும் வேண்டும். இதற்கு எழுத்துமூலம் உள்ள மூலங்களோடு, எழுதப்படாதவைகளாகிய நாணயங்கள், கருவிகள், சட்டிபானைகள், செப்புப் பட்டயங்கள், கல்வெட்டுகள், சிலைகள் போன்றவற்றைப் பயன்படுத்தவேண்டும். மூலப்பொருள்கள்(originals) கிடைக்காவிட்டால் மாதிரி உருவங்கள், படங்கள் போன்ற வற்றையும் பயன்படுத்தலாம். வரலாற்றுப் பாட அறையிலுள்ள பொருட்காட்சியில் உள்ள பொருள்களைப் பயன்படுத்தலாம். பாடத்தில் வரும் நிகழ்ச்சிகளைத் தெளிவுபடுத்த இந்த மூலங்கள் தேவைப்படுவதை எல்லா அறிஞர்களும் வலியுறுத்திக் கூறி யுள்ளனர். ஆரம்ப வகுப்பு முதற்கொண்டே விளக்கம் தருவதற்கு மூலங்களைப் பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக ஒன்றைக் குறிப்பிடலாம்.

அசோகர் பாடத்தைக் கற்பிக்கும்பொழுது, வீட்டில் தாயாரால் சொல்லப்படும் கதைக்கு வேறுபட்டது அசோகர் கதை என்பதை மாணவர்கள் உணரும்படிச் செய்வதற்கு மூலம் உதவி புரிகின்றது. அசோகரின் கட்வெட்டுகளைப்பற்றிக் கூறி, இப்பொழுதும் கர்நாடக இராச்சியத்தில் அவ்விதக் கல்வெட்டு காணப்படுவதைக் குறிப் பிடலாம். கல்வெட்டுகளின் படங்களைக் காட்டி, அதில் பொறிக்கப் பட்டுள்ள பாடப்பொருளையும் படித்துக் காட்டலாம். இவ்வாறு செய்தால், வரலாறு கற்பிப்பதற்கு ஏற்ற இயற்சூழ்நிலையும், உற்சாகமும் வகுப்பில் ஏற்படும் என்பதை மறுக்க முடியாது.

**இம் முறையின் பயன்கள்**

மூலங்களைச் சரிவர உபயோகித்தால் நல்ல பயன்கள் ஏற்படும். அவையாவன:

(1) மாணவர்கள் மூலங்களைப் பயன்படுத்துவதால், பாடப் பொருளைப் பற்றிய சான்றுகளின் தன்மையை எளிதில் உணர்ந்து கொள்வார்கள். ஊகித்தலுக்கும், உறுதியாகக் கூறுதலுக்கும் உள்ள வேறுபாடுகளை மாணவர்கள் தெரிந்துகொள்ள முடிகின்றது.

(2) பாடப்பொருளைத் தெரிந்துகொள்வதுதான் கற்றலின் முடிவு என்று கருதக்கூடாதென்றும், கற்றலில் ஈடுபடும் செயலே மிகவும் சிறப்பானதாகக் கருதப்படவேண்டுமென்றும் அறிஞர்கள் கூறியுள்ளனர். இவ்வித முறையில் குழந்தைகளை ஈடுபடுத்துவதற்கு

மூலமுறை எளிதாக இருக்கின்றது என்பதை இங்குக் குறிப் பிடலாம்.

(3) முடிவைக் காண்பது, எச்சரிக்கையுடன் பாடப்பொருளைச் சீர்தூக்கிப்பார்த்துத் தொடர்புகளை அறிவது, சிந்தனையில் ஈடு படுதல், ஆய்வுத்திறனைப் பெறுதல் போன்ற பயிற்சியை மூலமுறை யினால் அளிக்கப்படுகின்றன.

(4) தாங்கள் கற்கும் பாடங்களெல்லாம் உண்மை நிகழ்ச்சி களென்றும், ஆதாரத்துடன் கூறப்பட்டுள்ளவை என்றும், மாண வர்கள் அறிந்துகொள்வார்கள். பாடத்தில் தெளிவுபெறவும் மாண வர்களுக்கு மூலங்கள் உதவுகின்றன.

**மாணவர்கள் மூலங்களைத் தவறுதலாகப் பயன்படுத்துதல்**

மாணவர்களிடம் தொடர்பற்ற மூலங்களைக் கொடுத்து, ஒரு கட்டுரை எழுதும்படி கூறுவது தவறான காரியமாகும். வரலாற்றை உருவாக்கும்படி மாணவர்களை எதிர்பார்ப்பது தவறான காரிய மாகும்.

(1) மாணவர்களை மூலங்களைப் பயன்படுத்துவதால், பாடப் பொருளைப் பற்றிய சான்றுகளின் தன்மையை எளிதில் உணர்ந்து கொள்வார்கள். ஊகித்தலுக்கும், உறுதியாகக் கூறுதலுக்கும் உள்ள வேறுபாடுகளை மாணவர்கள் தெரிந்துகொள்ளமுடிகின்றது.

(2) பாடப்பொருளைத் தெரிந்துகொள்வதுதான் கற்றலின் முடிவு என்று கருதிவிடக் கூடாதென்று, கற்றலில் ஈடுபடும் செயலே மிகவும் சிறப்பானதாகக் கருதப்படவேண்டுமென்றும் அறிஞர்கள் கூறியுள்ளனர். இவ்வித முறையில் ஈடுபடுத்துவதற்கு மூலமுறை எளிதாக இருக்கின்றது என்பதை இங்குக் குறிப்பிடலாம்.

(3) முடிவைக் காண்பது, எச்சரிக்கையுடன் பாடப்பொருளைச் சீர்தூக்கிப் பார்த்துத் தொடர்புகளை அறிவது, சிந்தனையில் ஈடு படுதல், ஆய்வுத்திறனைப் பெறுதல் போன்ற பயிற்சிகள் மூலமுறை யினால் அளிக்கப்படுகின்றன.

(4) தாங்கள் கற்கும் பாடங்களெல்லாம் உண்மை நிகழ்ச்சி களென்றும், ஆதாரத்துடன் கூறப்பட்டுள்ளவைகளென்றும் மாணவர்கள் அறிந்து கொள்வார்கள். பாடத்தில் தெளிவுபெறவும் மாணவர்களுக்கு மூலங்கள் உதவுகின்றன.

**ஆசிரியர்கள் மூலங்களைத் தவறுதலாகப் பயன்படுத்துதல்**

(1) மாணவர்களிடம் தொடர்பற்ற மூலங்களைக் கொடுத்து ஒரு கட்டுரை எழுதும்படி கூறுவது தவறான காரியமாகும்,

வரலாற்றை உருவாக்கும்படி மாணவர்களிடம் எதிர்பார்ப்பது மூலகங்களை உபயோகிப்பதன் நோக்கமல்ல என்பதை மறக்கக் கூடாது.

(2) மாணவர்களிடம் படித்துக்காட்டும் மூலங்களெல்லாம் எளியனவாக இருக்கவேண்டும். சிக்கல் நிறைந்த பாடப்பொருளை உள்ளடக்கிய மூலங்களை மாணவர்களிடம் கொடுப்போமாயின் மூலங்களைப் பற்றிய வெறுப்பு உணர்ச்சிதான் ஏற்படும்.

(3) மிகவும் எளியதாகவும் மூலங்கள் இருக்கக்கூடாது. தங்கள் திறமையைப் பற்றிப் பெருமைப்படுவார்கள். எந்தப் பிரச்சினையையும் எளிதில் தீர்த்துவிடலாம் என்று கருத ஆரம்பித்து விடுவார்கள். அவர்களின் சிந்தனையைத் தூண்டுவனவாக உள்ள மூலங்களையே தேர்ந்தெடுத்துக் கொடுக்கவேண்டும்.

(4) பள்ளிக்கூடத்தின் நூலகத்தில் மூலப்புத்தகங்களும், கருவிகளும், உருவங்களும் இல்லாமலிருக்கும் பொழுது மூல முறையை வகுப்பில் மேற்கொள்ள ஆரம்பிப்பதும் தவருன செய லாகும்.

எனவே ஆசிரியரின் திறமை, பள்ளியில் கிடைக்கும் சாத னங்கள் போன்றவற்றை மனத்தில்கொண்டு வாய்ப்பு ஏற்படும் பொழுதெல்லாம் மூலங்களை ஒவ்வோர் ஆசிரியரும் பயன்படுத்த வேண்டும்.

### (6) நடித்தல் (Dramatization)

வரலாறு கற்பிக்க உதவும் சிறந்த முறைகளில் ஒன்று நடித்தலாகும். நடிப்பதில் குழந்தைகள் இயற்கையாகவே ஆர்வம் உடையவர்களாகயிருப்பார்கள். நடிக்கும் இயல்பூக்கம் எல்லாக் குழந்தைகளிடமும் காணப்படும். அவ்வியல்பூக்கத்தைக் கற்றலில் பயன்படுத்தவேண்டும்.

கதை கேட்ட பின்பு கதையில் வரும் பாத்திரங்களைப் போல் நடிப்பதை மாணவர்கள் விரும்புவார்கள். பாடம் முடிந்தபின்பு பாடப்பொருள்களை நாடகமாக மாணவர்கள் நடிக்கும்பொழுது, அவர்களுக்கு எதிர்பாராத உணர்ச்சி ஏற்படுகின்றது. பாடத்தின் பாடப்பொருள்களை நன்கு அறிவதற்கும், நடித்தல் உதவுகின்றது. எனவே பாடத்தை நன்கு புரிந்துகொள்வதற்கும், மனவெழுச்சியை ஏற்படுத்தவும் நடித்தல் நடைபெறவேண்டும்.

**நடித்தலால் ஏற்படும் பலன்கள்**

(1) வகுப்பில் ஆர்வத்தையும், உணர்ச்சியையும் நடித்தல் ஏற்படுத்துகின்றது.

(2) மாணவர்களின் கற்பனைச்சக்தியைத் தூண்டிவிடுகின்றது.

(3) மனவெழுச்சியை அதிகரிக்கச் செய்கின்றது.

**டி. சி. கினேல்டன்,** (D. C. Knowlton) 'நடித்தல் மாணவனின் பார்வையையும், மனவெழுச்சியையும் ஒரே சமயத்தில் பயன்படுத்து கின்றது' என்று கூறுகிறார்.

(4) நடித்தல் பாடங்களை விட உயிருள்ளது போன்ற எண்ணத்தைக் குழந்தைகளிடத்தில் ஏற்படுத்திவிடும்.

(5) மாணவர்களுக்குக் கூட்டுறவு முறையில் செயலாற்றும் வாய்ப்பை நடித்தல் அளிக்கின்றது. ஒருவருக்கொருவர் உதவி செய்தல், மரியாதையுடன் நடந்துகொள்ளுதல், பிறக் கருத்துக்கு ஏற்பப் பரந்த பொறுமை மனப்பான்மையை ஏற்றுக்கொள்ளுதல் போன்றவை யெல்லாம் நடித்தலில் ஈடுபடுகின்றவர்களிடம் காணலாம்.

(6) குழந்தைகளின் கற்றல் நிலையை மதிப்பீடு செய்ய நடித்தல் உதவுகின்றது. குழந்தைகளின் மனவளர்ச்சி, சமூக அறிவு, குழு தொடர்புகளில் ஏற்படும் இடையூறுகள், தவறாக உச்சரித்தல் போன்றவற்றை ஆசிரியர் கவனித்துத் திருத்தம் செய்வதற்கும் நடித்தல் உதவுகின்றது.

**நாடகமாக்கல்—வகைகள்**

ஐந்து முதல் ஏழு வகுப்பு வரையிலும் பயிலும் மாணவர் களுக்குத் தானே இயங்குகின்ற நடிப்பு மேற்கொள்ளத் தகுந்தது. ஆசிரியர் ஒரு கதையைப் படித்துக் காட்டியும் அல்லது வாய் மொழியால் கூறியதற்குப் பிறகு, மாணவர்கள் எவ்வித முன்னேற் பாடும் இல்லாமல் அக் கதையை நடிக்கவேண்டும். இதை **முறை யில்லா நடிப்பு** (informal dramatization) என்று கூறுவர்.

மேல் வகுப்புகளில் இவ்வித முறையை மேற்கொள்ளமுடியாது. தன் மேம்பாடு, பிறர் நகைப்புக்கு அஞ்சுவது போன்ற உள்ளம் பற்றிய மாறுதல்கள் குமரப்பருவத்தில் ஏற்படுகின்றன. எனவே, வயது வந்த மாணவர்களுக்கு **முறையமைந்த நடிப்பு** (formal and conventional) ஏற்றதாகும். தங்கள் சொற்களை உபயோகிப்பதற்குப் பதில் பிறர் எழுதிய வார்த்தைகளையும், உரையாடல்களையும் மனப்

பாடம் செய்து பேச ஆரம்பிப்பார்கள். எனினும் நடிப்பதற்கும், உறுப்புகளின் அசைவுகளால் கருத்தை வெளிப்படுத்துவதற்கும் இச்சைப்படுவார்கள். இக் காரணங்களால் மேல்வகுப்புகளிலும் நடித்தல் இடம்பெறவேண்டுமென்று கூறப்படுகின்றது.

**வகுப்பில் நடித்தல்**

வகுப்பறை நடிப்பில் நாடகமேடை அமைப்பதும் (stage-setting) இயற்கைக் காட்சிகள் ஏற்படுத்துதலும் வேண்டப்படுவதில்லை. கரும்பலகை ஒரு வனமாகவும், வகுப்பறையின் ஒரு பகுதி கதைப்பாத்திரங்கள் கூடுமிடமாகவும் பயன்படுத்தப்படவேண்டும். நடிப்பு (action), பொருள்விளக்குதல் (gesture), உச்சரிப்பு (expression), குரல் (voice), திறங்கூறல் (interpretation) போன்றவைதாம் சிறப்பிடம் பெறவேண்டும். உடை, காட்சி, மேடை அமைத்தல் போன்றவைக்கு அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டியதில்லை. நாடகங்கள், உரையாடல்கள் போன்றவற்றை மாணவர்களே எழுதும்படித் தூண்டப்படவேண்டும்.

**நடிப்புக்கு ஏற்ற பகுதிகள்**

(1) உலகத்தில் பற்பல பகுதிகளில் வாழும் மக்கள் வாழ்க்கை.

(2) அரசியல் சபைகள், அரசியல் ஆலோசனைக் கூட்டங்கள்.

(3) பெரிய தலைவரின் வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள்.

(4) அலெக்சாந்தரும் புருஷோத்தமரும்; சந்திரகுப்த மௌரியரும் சாணக்கியரும்; அக்பரும் பைராம்கானும்; ஔரங்கசீப்பும் சிவாஜியும்; மான்சிங்கும் ராணாபிரதாபும்; கொலம்பஸ் போன்றவர்களைப் பற்றியவைகளும்; ஐந்தாண்டுத் திட்டங்கள், சுதந்திரம் பெற்ற வரலாறு; நல்ல குடிமகனின் பண்புகள் போன்றவைகளும் நடிக்கப்படலாம்.

**நடிக்கக்கூடாத பகுதிகள்**

போர் நிகழ்ச்சிகள், இறக்கும் காட்சிகள், கொலை செய்தல், தூக்கிலிடுதல், ஆற்றைக் கடத்தல் போன்றவை நடிக்கத் தகாதவையாகும். நல்ல சுவையை அளிப்பதும், பகுத்தறிவுக்கேற்றதுமானவை நடிக்கப்படவேண்டும்.

**நடித்தலை மேற்கொள்ளும்பொழுது நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியவை**

(1) நடிப்பதில் குறைகள் உள்ளன. நடித்தலுக்கு அதிக நேரம் செலவழிக்கப்படுவதும், முக்கியக் குறைவான பாடப் பொருளை வலியுறுத்தலும் குறைகளாகக் கருதப்படுகின்றன,

எனவே, இம் முறையைப் பின்பற்றும்பொழுது அதிக நேரத்தைச் செலவழிக்காமல் இருக்க முயலவேண்டும்.

(2) எல்லாப் பாடங்களேயும் நடித்தல் முறையைப் பின்பற்றிக் கற்பிக்க முயலக் கூடாது. இதனுல் மாணவர்களிடத்தில் உற்சாகக் குறைவு ஏற்பட்டுவிடும். அடிக்கடி இம் முறையைப் பின்பற்றினுல், மற்ற முறைகளே மேற்கொள்ளுவதற்கு வாய்ப்பு இல்லாமல்போய்விடும். எனவே, நடித்தல் முறையை அதிகக் கவனத்துடன் பின்பற்றவேண்டும் என்பது ஆசிரியரின் நோக்கமாக இருக்கவேண்டும்.

(3) பிறர் எழுதிய உரையாடலே ஒப்புவிப்பது, பிறர் நடத்திய செய்கைகளேப் பின்பற்றுவதினுலும் மாணவர்களுக்குப் பலவிதப் பலனும் ஏற்படாது. சில சமயங்களில்தான் இம் முறையைப் பின் பற்றலாம். வகுப்பில் நாடகம் நடித்தல் பயனுடையதாக அமைய வேண்டுமென்பதை நிலேயில் இருத்திக்கொள்ளல் வேண்டும்.

(4) வகுப்பில் நடித்தல் முறையை ஆசிரியர் மேற்கொள்ளும் பொழுது, சில மாணவர்கள் நட்சத்திரப் பதவியைப் பெறும்படியும், மற்றவர்கள் புறக்கணிக்கப்படுவதும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும். நல்ல பேச்சுத்திறமையுடைய குழந்தைகளே மட்டும் நடித்தலுக்குப் பொறுக்கி எடுத்துக்கொள்ளுதல் தவருன செயலாகும். எல்லா மாணவர்களும் ஈடுபடும்படிச் செய்ய வேண்டும். தனிப்பட்ட சில மாணவர்கள் ஈடுபடாமல், வகுப்பு முழு வதும் ஈடுபட்டு நடிப்பதுதான் நாடகமாகக் கருதப்படவேண்டும்.

(5) நடிக்கும் காட்சியானது எளிமையானதாகவும், கதையின் சூழ்நிலேயை எல்லா மாணவர்களும் புரிந்துகொள்ளும்படியும் இருக்கவேண்டும். மாணவர்கள் தங்கள் கருத்து, மனம், உடல் எல்லாவற்றையும் ஈடுபடுத்துகின்றவர்களாக இருக்கவேண்டும். அவ்வித நிலே ஏற்படவில்லேயென்ருல் நடிப்பை மேற்கொள்ளாமல் இருப்பதே மேலானதாகும்.

(6) நடித்தல் நடைபெற்ற பிறகு, அதுபற்றிய கலந்தாலோசித்தல் வகுப்பில் நடைபெறவும் வேண்டும்.

### (7) கடந்த காலத்தை மெய்ப்பிக்க உதவும் சாதனங்கள் (Making the past real)

உயர்நிலேப்பள்ளி கல்வித்திட்டத்தில் சிறப்பான இடத்தை வரலாறு பெற்றிருக்கின்றது. சமூக இயலில் மிகவும் பழைமையானது வரலாற்றுப்பாடம் ஆகும். அதன் வரலாறு கிரேக்கர் காலத்

தினின்றும் துவங்குகின்றது என்பதை நாம் அறிவோம். மனிதன் இப் புவியில் எவ்வித மாறுதல்களை அடைந்து முன்னேற்றம் அடைந்துள்ளான் என்பதை விவரித்துக் கூறுவது வரலாறு என்பதையும் நாம் நன்கு அறிவோம். வரலாற்றுப்பாடம் கடந்த காலத்தை வெளிப்படுத்துவதாலும், நிகழ்கால நிகழ்ச்சிகளை விவரித்துக் கூறுவதாலும், எதிர்காலத்தின் நிகழ்ச்சிகளை ஒளிமய மாகும்படி நமக்கு உணரவைப்பதாலும் அது பள்ளிப்பாடத் திட்டத்தில் சிறப்பான நிலையைப் பெற்றிருப்பதில் எவ்வித வியப்பும் இல்லை.

**கடந்தகாலமும் நிகழ்காலமும்**

குழந்தைகளுக்குச் சமூகத்தைப்பற்றிய அறிவுப் பாடப்பொருளை எடுத்துரைக்கும்பொழுது கடந்த காலத்தைப்பற்றிக் குறிப்பிட வேண்டியதாயிருக்கின்றது. அவ்விதப் பாடப்பொருளைக் கூறும் பொழுது நிகழ்காலத்தோடு தொடர்புபடுத்திக் கூறினுல் அது பற்றிய தெளிவான கருத்துகளை மாணவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள். தற்கால நிகழ்ச்சிகளுக்கு விளக்கம் கூறுவதற்குக் கடந்தகால நிகழ்ச்சிகள் உதவுகின்றதனுல் அதற்குச் சிறப்பிடம் கொடுக்கவேண்டியதாயிருக்கின்றது. கடந்தகால நிகழ்ச்சிகள் பல ஆண்டுகளுக்கு முன் நடந்தவை என்பதனுல் நாம் அவற்றைக் கற்க முயல்வதில்லை. தற்காலத்தை நன்கு தெரிந்துகொள்ளக் கடந்த காலத்தின் உதவியை நாம் நாடுகின்ருேம். 'நிகழ்காலம் கடந்த காலத்தின் நன்கொடை' என்று கூறுவது மிகவும் பொருத்த முடையது.

எனவே, கடந்தகால நிகழ்ச்சிகளை இளம்பள்ளி மாணவர் களுக்குக் கற்பிக்க முற்படும்பொழுது அவை கவர்ச்சியுடையன வாகவும், எளிதில் விளங்கிக்கொள்ள ஏற்றதாகவும் அமைக்க ஆசிரியர்கள் பலவித சாதனங்களைப் பயன்படுத்திக் கற்பிக்க வேண்டியது இன்றியமையாததாகின்றது. கடந்த காலத்தை உயிர்ப்பிக்கும் வகையில் வரலாறு கற்பிக்கப்பட்டால் மாணவர்கள் வரலாற்றுப் பாடத்தில் அதிக ஈடுபாடு பெற்று, உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும் கற்பதில் ஈடுபடுவார்கள். இறந்த காலத்தை உயிர்ப்பிக்கப் பின்வரும் முறைகளை ஆசிரியர்கள் பயன்படுத் தலாம்.

**(1) வாய்மொழிமூலம் கற்பித்தல்**

குழந்தைகள் வரலாறு பற்றிய பாடப்பொருளை ஆசிரியர் வாய் மொழிமூலம் முதலில் பெறுகின்ருர்கள். ஆசிரியர் பி. கிளாப்பரின் கருத்துப்படி 'பள்ளிகளில் முதல் நான்கு ஆண்டுவரையிலும் ஆசிரி

யரின் வாய்மொழிமூலமே மாணவர்கள் வரலாறு கற்கவேண்டும்', என்பதாகும். ஆசிரியர் குழந்தைகளின் மனநிலையை நன்கு உணர்ந்து, தன் சொந்த மொழியில், எளிமையாகக் கதைகளைக் கூறும்பொழுது அவர்களின் கற்பனை தூண்டிவிடப்படுகின்றது. ஆசிரியரின் குரல், முகத்தோற்றம், உற்சாகத்துடன் நிகழ்ச்சிகளை எடுத்துரைப்பது போன்றவை கடந்தகால வரலாற்று நிகழ்ச்சிகள் மறுபடியும் நடைபெறுகின்றன என்று தோன்றும்படிச் செய்கின்றன. அந் நிகழ்ச்சிகள் நேரில் நடப்பதுபோல் குழந்தைகள் உணர்ந்து அதைக் கேட்பதில் மிக்க ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர்.

## (2) கைவேலை மூலம் கற்பித்தல்

தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு வரலாறு பாடத்துடன் தொடர்புள்ள கைவேலைகளைக் கொடுப்பது 'செய்து கற்றல்' என்ற கூற்றுக்கிணங்க நடைபெறுவதாகும். பாடத்தின் பொருளை நன்கு புரிந்துகொண்டு, பொருள்களைச் செய்ய மாணவர்கள் முற்படுகின்றனர். படங்கள் வரைதல், மாதிரி உருவங்கள் அமைத்தல் போன்ற செயல்களில் மாணவர்கள் ஈடுபடுவதற்கு விரும்புவார்கள். வரலாறு நிகழ்ச்சிகள் யாவும் உண்மையாக நடைபெற்ற நிகழ்ச்சிகள் என்ற கருத்தை எளிய முறையில் அவர்கள் ஏற்றுக்கொள்ளக் கைவேலை உதவுகின்றது.

## (3) நாடகமுறை

கடந்தகால நிகழ்ச்சிகளை நன்கு உணர்வதற்கு உதவியாக இருக்கும் மற்றொரு சாதனம் நடித்தலாகும். விரிவுரையின்மூலம் கற்பிக்கும்பொழுது வகுப்பறையில் உற்சாகம் காணப்படுவது மிகவும் கடினமானதாகும். கடந்த காலத்துடன் குழந்தைகளைத் தொடர்புபடுத்தப் பள்ளிகளில் நாடகத்தின் உதவியை நாடவேண்டியிருக்கின்றது. வரலாறு பாடங்களில் காணப்படும் கருத்தியல் பொருள்கள், நடிப்பதன்மூலம் காட்சிப் பொருள்களாக மாற்றியமைக்கப்படுகின்றன. வரலாற்றில் காணப்படும் சிறந்த பெரியோர்களின் வாழ்க்கையைப் பற்றியும், அவர்களின் சாதனைகளையும் வகுப்பறையில் நடத்துவதன்மூலம் குழந்தைகள் அப் பெரியோர்களைப்பற்றிய பாடப்பொருள்களை நன்கு தெரிந்து கொள்கின்றார்கள். அவர்களைப் பற்றிய நாடக நிகழ்ச்சிகளைப் பார்ப்பதாலும் அல்லது நடித்தலில் பங்கு பெறுவதாலும், அந் நிகழ்ச்சிகளின் உண்மை நிலையை நன்கு தெரிந்துகொள்கிறார்கள். அவர்கள் நேரில் நடப்பவைபோன்ற காட்சியைக் காணுவதால், அவர்களின் மனவெழுச்சியும் கற்பனைத் திறனும் தூண்டப்படுகின்றன.

**(4) உள்ளூர் வரலாறு**

உள்ளூர் வரலாறு பற்றிய கருத்துகளை எடுத்துரைக்கும் பொழுது குழந்தைகள் மிக்க ஆவலுடன் கேட்பதை நாம் அறிவோம். கடந்த காலத்தில் போர் நடைபெற்ற இடங்கள், அல்லது படையினர் தங்கிச் சென்ற இடங்கள், அரசர்கள் கட்டிய கோயில்கள் அல்லது அரண்மனை, கோட்டை முதலிய சின்னங்கள், அகழிகள், சிற்பங்கள், ஓவியக்காட்சிகள் போன்றவற்றில் சில ஒவ்வொரு பள்ளியின் சுற்றுப்புறங்களிலும் உள்ளன. வரலாறு கற்பிக்கும்பொழுது அவற்றைக் குறிப்பிட்டு, அவற்றைத் தொடர்புபடுத்திப் பாடத்தை நடத்தும்பொழுது அவை உயிர் பெற்று மணவர்களின் ஆவலைத் தூண்டிவிடுகின்றன. வரலாறு என்பது 'உண்மை பற்றிய பாடப்பொருள்கள்' என்ற கருத்தைக் குழந்தைகள் பெறுகின்றுர்கள்.

**(5) கல்விப் பயணங்கள்**

வகுப்பறையில் ஆசிரியர் கூறும் பாடப்பொருள் பற்றிய அறிவினை உறுதிப்படுத்திக் கொள்ளக் கல்விப் பயணம் உதவுகின்றது. வரலாற்றுத் தொடர்புடைய இடங்களுக்கு மாணவர்கள் சென்று நேரில் பார்க்கும்பொழுது, அவற்றைப் பற்றிய முழுவிபரத்தை அறிந்து கொள்வதுடன் வரலாற்றின் நிகழ்ச்சிகளையும், அவற்றைப் போற்றிப் பாதுகாக்கவேண்டிய மனப் பான்மையையும் மாணவர்கள் பெறுகின்றனர். வரலாறு என்பது கடந்த காலம் பற்றிய வெறும் கதைகள் அல்ல; அது உண்மை நிகழ்ச்சிகளின் தொகுப்பு என்பதை மாணவர்கள் உணரும்படி கல்விப்பயணங்கள் உதவுகின்றன. எனவே கல்விப்பயணங்கள் நல்ல முறையில் திட்டமிடப்பட்டு, நல்ல முறையில் நடைபெற்று அதுபற்றிய தொடர்பான பயிற்சிகளை நல்ல முறையில் மாணவர்களுக்கு அளிக்கப்பட்டால், கல்விப்பயணங்கள் வரலாறு கற்பித்தலுக்குரிய சிறந்த முறைகளில் ஒன்றுகக் கருதப்படும்.

**(6) மூலமுறையைப் பின்பற்றிக் கற்பித்தல்**

மூலங்களை மாணவர்கள் கையில் கொடுத்து வரலாற்று நிகழ்ச்சிகளை உருவாக்கும் திறனைப் பள்ளி மாணவர்களிடம் எதிர்பார்ப்பது விரும்பத்தக்கதல்ல. ஆசிரியர் M. W. கீட்டிங் கருத்து: 'வகுப்பறையில் மூலங்களைப் பயன்படுத்தி வரலாற்றைக் கற்பிப்பதால் கடந்தகால நிகழ்ச்சிகள் யாவும் உயிர்ப்பிக்கப்படுகின்றன; மாணவர்கள் அதிக ஆர்வமும் பெறுகின்றனர்.' தொடக்கப்பள்ளி வகுப்புகளில் கதைகள் சொல்லும்பொழுது வரலாற்றுக்கதைகள் யாவும் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டவை என்பதனைத் தெரிந்து கொள்ளும்படிச் செய்வது ஆசிரியரின் கடமையாகும்.

எடுத்துக்காட்டாக அசோகர் பற்றி கற்பிக்கும்பொழுது, அவரது கல்வெட்டுகள், இக் காலத்திலும் கர்நாடக இராச்சியப் பகுதியில் காணப்படுகின்றன என்று குறிப்பிடவேண்டும். இதைக் கேட்கும் மாணவர்கள் அசோகர் பற்றியப் பாடப்பொருள்கள் யாவும் உண்மையானவை என்று எளிதில் உணர்வார்கள்.

### (7) இணைவழிப் படிப்பை மேற்கொள்ளுதல்

நடுநிலை உயர்நிலை வகுப்புகளில் வரலாற்றுப் பாடத்துடன் இணைவழிப் படிப்பையும் அதிகத் தொடர்புடையதாக ஆசிரியர் செயல்படுத்தவேண்டும். வரலாற்று நூல்களை அதிக அளவில் பயன்படுத்தும்பொழுது, ஆர்வம் மேலிட்டு மாணவர்கள் வரலாறு பற்றிய இலக்கியத்தின் சுவையை அனுபவிக்க ஆவலுறுகிறுர்கள். வரலாற்று இலக்கியத்தில் காணப்படும் தலைவர்கள், நிகழ்ச்சிகள் யாவும் உயிர் பெற்று மாணவர்களுடன் தொடர்பு கொள்ளும் ஒரு மனநிலை உருவாகின்றது. வாழ்க்கை வரலாறு, பயணக் கட்டுரைகள், நாடகநூல்கள், கவிதைகள், நவீனங்கள் போன்றவை ஆர்வத்தைத் தூண்டுவதோடு, அக் காலத்திய சமூகநிலை, பண்பாடு, மக்களின் மனப்போக்கு போன்றவற்றை அறியும் வாய்ப்பினையும் மாணவர்களுக்கு அளிக்கின்றன.

### (8) துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல்

**எட்கார் டேல்** (Edgar Dale) என்னும் அறிஞரின் கருத்தினை இங்குக் குறிப்பிடலாம். 'வாய்மொழியால் கூறப்படும் நிலையற்ற கருத்துப் பொருள்களுக்குச் சிறந்த உறுதியான வடிவம் தந்து சிந்தனைக்குரிய நிலையை ஏற்படுத்துவதில் காட்சி கேள்வித் துணைக் கருவிகள் சிறந்த இடம்பெறுகின்றன.' காட்சி கேள்விகளைப் பயன் படுத்தி வரலாறுகள் கற்பிக்கும்பொழுது, தாங்கள் படிக்கும் நிகழ்ச்சிகள் யாவற்றையும் மாணவர்கள் மணக்கண் முன் பார்க்க இயலும். அவை உயிர்பெற்று அவர்களுடன் கலந்து பேசுவது போல் ஓர் உணர்ச்சியையும் வகுப்பறையில் ஏற்படுத்தும். கடந்த கால நிகழ்ச்சிகளின் உண்மை வடிவத்தினை மாணவர்கள் மிகவும் எளிய முறையில் வகுப்பறையில் காணமுடிகின்றது.

**தேசப்படங்கள்** ஒரு சிறந்த துணைக்கருவியாகும். நிகழ்ச்சி நடந்த இடங்களைப் படத்தில் குறிப்பிடும்பொழுது மாணவர்கள் தெளிவு பெற்றுக் கருத்தினை ஏற்றுக்கொள்கின்றனர்.

**காலக்கோட்டுப் படங்கள்** பல நிகழ்ச்சிகளுக்கிடையேயுள்ள தொடர்பினை வெளிப்படுத்துகின்றன.

படங்களையும் ஒரு சிறந்த துணைக்கருவியாகப் பயன்படுத்த வேண்டும். அரசர்கள், தலைவர்கள், கோட்டைகள், வரலாற்றுச் சின்னங்கள்பற்றிய படங்களை மாணவர்கள் காணும்பொழுது அவற்றுடன் தொடர்புள்ள நிகழ்ச்சிகள்யாவும் உயிர்ப்பிக்கப் படுகின்றன. உண்மைப் பொருள்களையும், மாதிரி உருவங்களையும் காட்டமுடியாத இடங்களில் படங்களைப் பயன்படுத்திக் கற்பிக்கின் றனர். வரலாற்று நிகழ்ச்சிகளைக் கற்பிக்கும்போது வாய்மொழி மூலம் வருணிப்பதைவிடப் படத்தைக் காட்டிக் கூறுதல், கருத்துகள் மாணவர்கள் மனத்தில் பதிய சிறந்த முறையில் உதவுகின்றது. வரலாற்றுச் சின்னங்களை வகுப்பறையில் சிறிய வடிவத்தில் தோன்றச் செய்வது **மாதிரி உருவங்கள்** என்பதை நாம் அறிவோம். எடுத்துக்காட்டாகக் குதுப்மினர் மாதிரி உருவத்தைக் காணும் பொழுது டில்லியிலுள்ள குதுப்மினரை நேரில் பார்த்து அடையும் அறிவை வகுப்பறையில் வெகு சுலபமாக மாணவர்கள் பெறுகின் றனர். அவ்விதச் சின்னங்கள் உயிர்ப்பிக்கப்பட்டு மாணவர்களுக்கு வரலாற்றுப் பாடப்பொருள்களைத் தெரிந்து கொள்ளும் ஆர்வத் தினைத் தூண்டுகின்றன. வரலாற்று **நிகழ்ச்சிகளைப் பற்றிய சலனப்படங்களை** மாணவர்கள் பார்க்கும்பொழுது, அந்த நிகழ்ச்சி கள் நடைபெற்ற காலத்திற்கு அவர்கள் அழைத்துச் செல்லப் படுகிறார்கள். அவர்கள் மெய்மறந்து அவற்றைப் பார்க்கிறார்கள். பாடப்புத்தகத்தின்மூலமோ, அல்லது ஆசிரியரின் விரிவுரையின் மூலமோ பெறும் அறிவை விட எளிய முறையில் எல்லாப் பாடப் பொருளையும், உற்சாகத்துடன் கற்பதற்குச் சலனப்படங்கள் வழி காட்டுகின்றன.

### (9) பொருட்காட்சி நிலையம் (Museums)

கடந்த காலத்தை மெய்ப்பிக்க, பொருட்காட்சி நிலையங்கள் மிகவும் உதவுகின்றன. அந் நிலையங்களில் வரலாற்றுத் தொடர்புள்ள பழமையான இதழ்கள், சுவடிகள், நாணயங்கள், பட்டயங்கள், உருவங்கள், சிலைகள், படங்கள், உடைகள், ஆயுதங்கள், அணிகலன்கள் போன்றவை சேகரித்துவைத்திருப்பதால் ஒரு கல்வி நிலையமாகத் திகழ்கின்றது. அங்குள்ள பொருள்களை மாணவர்கள் பார்க்கும்பொழுது, வரலாற்று நிகழ்ச்சிகள் உண்மை யானவை என்ற உணர்ச்சி மாணவர்களின் மனத்தில் ஏற்படும். விக்டோரியா பொருட்காட்சி நிலையம், ஆலபர்ட் நிலையம், பிரிட்டிஷ் பொருட்காட்சி நிலையம் (National Gallery) போன்ற வற்றில் வரலாற்றின் தொடக்க காலத்திலிருந்து தற்காலம் வரை யிலுமுள்ள நிகழ்ச்சிகள் பற்றிய பொருள்கள் இடம் பெற்றிருக் கின்றன. ஹைதராபாத்திலுள்ள ஸாலர்ஜங் பொருட் காட்சியும், சென்னை, புதுக்கோட்டையிலுள்ள அரசாங்கப் பொருட்காட்சி

நிலையங்களும் சிறப்பு வாய்ந்தவை. வரலாறு கற்கும் மாணவர்கள் இந் நிலையங்களுக்குச் சென்று வருவார்களானால், கடந்த காலத்தை நன்கு உணர்வார்கள் என்பது திண்ணம்.

வகுப்பறையில் கற்பித்தல் உற்சாகமுடையதாகவும், கடந்த கால நிகழ்ச்சிகளை உயிர்ப்பிக்கவும் உதவும் சாதனங்களை வரையறுத்துக் கூறுவது எளிதல்ல. மேலே எடுத்துக்கூறப்பட்டவாறு சாதனங்களைப் பயன்படுத்தி இறந்த காலத்தை மெய்ப்பிக்கவும், உயிர்ப்பிக்கவும் திறமையும், ஆர்வமுமுள்ள ஆசிரியரால் இயலும் என்று கூறலாம்.

**வினாக்கள்**

(1) பாடப்புத்தகத்தைப் பயன்படுத்தும் முறையை விளக்கமாகக் கூறவும்.

(2) உயர்நிலைப்பள்ளியில் விரிவுரை முறைக்கு நீவிர் எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுப்பீர் என்பதைத் தெளிவுப் படுத்தவும்.

(3) (அ) நல்லதொரு வாய்மொழிப் பாடத்தின் இரண்டு சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.

(ஆ) கதை சொல்வதற்கு ஏற்ற ஏதுக்களை விவரிக்கவும்.

(4) விதிவரு முறையை எவ்விதம் செயல்படுத்துவீர்?

(5) 'ஒன்றுகூடி ஆராய்தல்'—என்றால் என்ன? அதன் வகைகள் யாவை? இம் முறையின் நற்பண்புகளையும், குறைகளையும் கூறுக.

(6) (அ) மீள்பார்வைப் பாடம்'—என்பது பற்றி நீவிர் அறிந்தது என்ன?

(ஆ) பன்முறைப் பயிற்சி—எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும்?

(இ) மீள்பார்வை, பன்முறைப் பயிற்சி—ஒற்றுமை, வேற்றுமைகளைக் கூறுக.

(7) புதிர் தீர்முறையை (பிரச்சினை முறை) விவரித்து எழுதவும்.

(8) (அ) செயல்திட்டமுறை (Project Method) என்றால் அதன் செயல்முறைகளை விளக்குக.

(ஆ) செயல் திட்டமுறையின் சிறப்புகளையும், குறைகளையும் எடுத்துக் கூறவும்.

(9) ஆய்வுக்கூட முறையை வரலாறு கற்பிப்பதில் எவ்விதம் பயன்படுத்துவீர்?

(10) பின்வருவனவற்றை விவரித்து எழுதுக.

(அ) டால்டன் திட்டம்

(ஆ) மேற்பார்வை படிப்பு.

(இ) ஒப்படைப்புகள்.

(11) உயர்நிலைப்பள்ளிகளில் (மூலமுறைக்கு) கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை ஆராய்க.

(12) (அ) நடித்தல் முறையை வரலாறு கற்பிப்பதற்கு எவ்விதம் பயன்படுத்துவீர்?
(ஆ) நடித்தல் முறையின் சிறப்புக்குக் காரணங்கள் கூறவும்.

(13) கடந்த காலத்தை மெய்பிக்க உதவும் சாதனங்களை விவரித்து எழுதவும்.

## (6) பாடத்தைத் திட்டமிடுதல் (Lesson Planning)

ஒரு செயலை வெற்றிகரமாகச் செய்து முடிப்பதற்குத் திட்டமிடுவது இன்றியமையாததாகும். செய்து முடிப்பதற்குரிய செயலைப் பற்றிய சுருக்கம் (outline) முன்கூட்டியே திறம்படச் செய்வதற்கு முதற் தேவையாகும். கற்பித்தலில் பாடச்சுருக்கம் எழுதுவது 'பாடத்தைத் திட்டமிடுதல்' (Lesson planning) என வழங்கப்படுகின்றது. இதன் முக்கியத்துவத்தைப் பின்வரும் கூற்றிலிருந்து நன்கு தெரிந்துகொள்ளலாம். பாடத்தைத் திட்டம் செய்து கற்பிக்கவில்லையென்றால், 'எவ்விதக் குறிக்கோளும், சேரவேண்டிய இடத்தைப்பற்றிய விபரமும் தெரியாமல் கடலில் செல்லும் ஒரு கப்பலுக்கு இணையாக ஆசிரியர் கருதப்படுவார்' என்று கூறப்படுகின்றது.

**(அ) பாடத்தைத் திட்டமிடுதலின் அவசியம்**

பாடத்தைக் கற்பிப்பதற்கு முன்கூட்டியே திட்டம் செய்வதால் ஏற்படும் பயன்கள் பின்வருமாறு:

(1) வரலாற்று ஆசிரியர்கள் தான் கற்பிக்கவேண்டிய பாடத்தைப் பற்றிய பாடப்பொருளைச் சிந்திப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

(2) மாணவர்கள் பெற்றிருக்கும் முன்அறிவைப் பற்றி ஆசிரியர் தெரிந்திருப்பதால் மாணவர்கள் கற்கவேண்டிய பாடப் பொருளை எவ்விதம் எளிய முறையில் அவர்களுக்குத் தெரிவிக்கலாம் என்று ஆசிரியர் திட்டம் செய்யமுடிகின்றது.

(3) பாடத்தைத் திட்டமிட்டுக் கற்பிப்பதால், மாணவர்கள் பெறும் வரலாற்று அறிவு நன்கு வகைப்படுத்தியனவாகவும், கோவை யானதாகவும் அமைவதற்கு வழி வகுக்கப்படுகின்றது. மாணவர் களின் உற்சாகத்தைப் பயன்படுத்தி ஆசிரியர் பாடப்பொருள்களை ஒன்றன்பின் ஒன்ருக, மாணவர்களின் கவனத்தை ஈர்த்து, கவர்ச்சியான முறையில் கற்பிக்கவும் இயலுகின்றது.

(4) இவ்விதம் திட்டம் செய்யப்பட்டுப் பாடம் கற்பிப்பதால் மாணவர்கள் பெறும் அறிவு தெளிவுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் அமைகின்றது.

(5) பாடத் திட்டமிட்டதின்படி ஆசிரியர் தம் செயலில் ஈடுபடும்பொழுது, அவர் மாணவர்களுக்கு எளிமையான பாடப் பொருளைக் கூறுவதிலிருந்து கடினமான பொருள்களைக் கற்பிக்கும் செயலில் தடையின்றி முன்னேறிச் செல்ல வழி ஏற்படுகின்றது.

(6) முறையாக எழுதிப்பார்க்கும்பொழுது ஆசிரியர் சிந்தனை யில் ஓர் ஒழுங்கு முறை ஏற்படுகின்றது. பாடப்போக்கை மாற்றி யமைக்கவும் திருத்தியமைக்கவும் வாய்ப்புகள் கிடைக்கின்றன.

**(ஆ) பாடத்திட்டமிடுதலின் தேவைப்பாடுகள் (Requirements of the lesson plan)**

பாடக்குறிப்புகளைப் 'பாடஆயத்தம்' எனக் கூறுவர். வரலாற் றுப் பாடம் கற்பிப்பதில் நோக்கமிருக்கவேண்டும். அறிவு பெறுவது (knowledge) கற்ற அறிவைப் பயன்படுத்துதல் (application), திறன் (skill), திறமை (ability) போன்றவற்றை வளர்க்கும் அனுபவங்களைப் பெறுவது நோக்கமாக அமையவேண்டும்.

பத்தாம் வகுப்பில் 'சிவாஜி'பற்றிய பாடத்தைக் கற்பிக்கும் பொழுது கீழ்க்கண்ட நோக்கங்களைக் குறிப்பிடலாம்.

(i) மாணவர்களிடத்தில் மகாராஷ்டிர நாட்டின் வரலாற்றைத் தெரிந்து கொள்ளும் ஆவலை அதிகரிக்கச் செய்வது.

(ii) சிவாஜியின் வாழ்க்கை வரலாற்றையும் அவரது சாதனைகளையும் படிப்பதால் மாணவர்களிடத்தில் ஒழுக்கம், கட்டுப்பாடு, தேசப்பற்று, பரந்த மனப்பான்மை போன்ற சிறந்த குண இயல்புகளை வளர்த்தல்.

(ii) 'சிறந்த மனிதர்களை'ப் பற்றி அறிந்துகொள்ளும் வகையில் அவர்களின் நாட்டுப்பற்றைப்பற்றித் தெளிந்த அறிவைப் பெறச்செய்தல். அவர்களிடம் காணப்பட்ட வீர உணர்ச்சியையும், பெருந்தன்மையையும் உணரச்செய்து அதன்மூலம் பண்ணாட்டு உணர்ச்சியையும், சகிப்புத் தன்மையையும் மாணவர்களிடத்தில் உருவாக்குதல்.

(iv) சிவாஜி மன்னரின் வாழ்க்கை வரலாறு, அவரது வெற்றிகள், நிர்வாகச் சீர்திருத்தம் போன்ற வரலாற்று நிகழ்ச்சிகளைத் தெளிவுறக் கற்பித்து சிவாஜியை மன்னராகவும், போர் வீரராகவும், அரசியல் தலைவராகவும் கண்டு அவர் ஆற்றிய சாதனைகளை மாணவர்கள் கற்கும்படி உதவுவதாகும்.

**(2) கேள்விக் காட்சிக் கருவிகளை ஆசிரியர் வகுப்பில் காட்டக்கூடிய துணைக்கருவிகள்:** வரலாற்றுப் பாடங்களை துணைக் கருவிகளின்றிக் கற்பித்தல் அறவே தவிர்க்கப்படவேண்டும். பாட விளக்கத்திற்கு வேண்டிய சாதனங்களை ஆசிரியர் பாடக்குறிப்பில் குறித்துக்கொள்ளவேண்டும். தேசப்படங்கள், விளக்கப்படங்கள், மாதிரி உருவங்கள், மூலங்கள், நாணயங்கள் போன்றவற்றைப் பாடத்தலைப்புக்கு ஏற்ற முறையில் தேர்ந்து எடுத்துக் குறிப்பிடல் வேண்டும்.

**(3) பாடப்பொருளைத் தொகுத்துக்கூறி ஊக்குவித்தல்:** முன்பு கற்பித்த பாடங்களைப் பற்றிய வினாக்களைக் கேட்டு, மாணவர்கள் அளிக்கும் விடைகளைக் கொண்டு முன்கற்பித்த பாடங்களையும் புதிய பாடத்தையும் ஒரு தொடர்ச்சியாக அமைத்துப் பாடத்தைக் கற்பிக்க முற்படுவது எளிய முறையாகும். புதிய பாடத்தலைப்பைக் கூறுவதற்கு முன்பு, மாணவர்களுக்கு நன்கு விளங்கும் தற்கால நிகழ்ச்சி ஒன்றினைக்கூறி, அதன் விபரங்களைப் பற்றி மாணவர்களிடம் கலந்து உரையாடி, பழைய நிகழ்ச்சியோடு அத் தலைப்

பிற்குள்ள தொடர்பைப் பயன்படுத்தி, புதிய பாடத்தைப் பற்றிய தலைப்பை மாணவர்களுக்கு அறிவித்தல் சிறந்த முறையாகும்.

**(4) பாடவளர்ச்சி என்பது பாட வளர்ச்சியில் பல சிறுபடிகள் உள்ளன.** இவை யாவுமே மிகவும் முக்கியமானவை. அவையாவன:

(i) கற்பிக்கவேண்டிய பாடத்தையும் அதே வரிசையில் தொடர்ந்து கற்பிக்கப்பெற்ற பாடங்களையும் இணைத்துப் பாடத்தைத் துவங்கவேண்டும். பாடத்தின் பாடப்பொருளைப் பல பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியையும் கற்பிக்கத் திட்டமிடல் இன்றியமையாத செயலாகும். ஒவ்வொரு பகுதிக்கும், வினாக்கள்மூலம் மாணவர்களிடம் பாடப்பொருளின் விவரங்களை வரவழைத்து (elicitation) பாடப்பொருளோடு இணைத்து, புதிய பாடப்பொருளை **விளங்கவைப்பது** முதற் சிறு படியாகும். ஒவ்வொரு புதிய பொருளையும் கூறி விளங்கவைத்ததும், **கரும்பலகையில் சுருக்கமாக எழுத முற்படுதல்** இரண்டாவது சிறு படியாகும். ஒவ்வொரு பகுதியையும் கற்பித்து முடிந்ததும் **பகுதி திருப்புதல்** என்பது மூன்றுவது சிறு படியாகும். மாணவர்கள் பாடப்பொருளைத் தெளிவுறப் புரிந்து கொண்டனரா என்பதை வினவுதல்மூலம் தெரிந்துகொள்ளலாம். இவ்வாறு எல்லாப் பகுதிகளையும் கற்பித்து முடிவுற்றதும் நடத்தின பாடத்தைப் பற்றிய **முழு பாடத்தைத் திரும்பக்கூறல் செய்வது** (Final recapitulation) நான்காவது சிறுபடியாக அமையும். கரும் பலகையில் பாடத்தின் திரண்ட கருத்தைச் சுருக்கமாக வரையலாம். பாடம் வளரும்பொழுதே இக் கரும்பலகைச் சுருக்கமும் வளர்ந்தால் பொருள் விளக்கத்துடன் காலச்சிக்கனமும் அமையும். பாட நிகழ்ச்சியில் ஆசிரியருக்கும் மாணாக்கர்களுக்கும் இடையில் ஏற்படவேண்டிய கூட்டுறவைப் பற்றியும் ஆசிரியர் சிந்திக்க வேண்டும்.

**(5) முடிவு கூறுதல்:** சில வினாக்களைக்கொண்டு கற்பித்த பாடக்கருத்துகளைத் தொகுத்துரைக்கும் வாய்ப்பினைத் தரவேண்டும். ஒப்பிடுதல், நிகழ்ச்சிகளை மதிப்பிட்டுக் கூறுதல் போன்றவை ஆசிரியர் குறிப்பில் இடம்பெறவேண்டும். அடுத்த நாளுக்குரிய சில வேலைகளையும் இங்குக் குறிப்பிடலாம்.

இவ்வாறு ஆயத்தம் செய்யப்பெற்ற பாடத்தைத் திட்டமிட்டபடி பயன்படுத்தும்பொழுது நாற்பத்தைந்து நிமிடங்கள் உள்ள ஒரு பாடவேலையில் ஐந்து நிமிடம் ஊக்குவித்தலுக்கும், முப்பது நிமிடங்கள் பாட வளர்ச்சிக்கும், பத்து நிமிடங்கள் தொகுத்துரைத்தல், கரும்பலகை வேலை, வீட்டுப் பயிற்சி அளித்தல் ஆகியவற்றிற்கும் செலவிடத் திட்டமிடலாம்.

## (இ) பாடத்திட்டமிடல்களின் பலவித அமைப்புகள் (Different forms of Lesson Plans)

(i) **பகுதிகளாகப் பிரித்தல்:** ஓர் ஆண்டுக்குரிய பாடநூலின் பகுதிகளைக் கால் ஆண்டுக்குரியவை, அரையாண்டுக்குரியவை, ஆண்டு இறுதிக்குரியவை என்று பிரித்துக்கொள்ளவேண்டும். இத் திட்டம் பள்ளியிலுள்ள ஒரு வகுப்பின் எல்லாப் பிரிவு கட்கும் பொதுவாக அமையும். பின்னர் அவற்றை மாதப் பகுதிகளாகப் பிரித்தல் வேண்டும். பின்னர் மாதப்பகுதிகளை வாரங்களுக்கு உரியனவாகத் திட்டமிடல் வேண்டும். இவ்வாறு திட்டமிட்டுக் கொண்டால் இன்ன வாரத்தில் இன்ன பகுதிதான் கற்பிக்கப்படும் என்பதனை ஆசிரியர் தெளிவாக உணர்வார்.

(ii) **கற்பித்தல் குறிப்பு** (Teaching Notes): ஒரு வாரத்தில் கற்பிக்கவேண்டிய பாடப்பகுதிகளனைத்தையும் ஆசிரியர் எண்ணிப்பார்த்து எழுதித் தயாரிக்கவேண்டும். ஒரு பிரிவேளையில் கற்பிக்கவேண்டியது பற்றி விரிவாக எழுதும் குறிப்பு, பாடக்குறிப்பு (Notes of lesson) எனப்படும்.

கற்பித்தல் குறிப்பில் கற்பிக்கவிருக்கும் பாடப் பகுதியின் சுருக்கம் இடம்பெறுவதுடன் விளக்கவேண்டிய வரலாற்றுக் கருத்து களும் அமைதல்வேண்டும். பயன்படுத்தவிருக்கும் துணைக்கருவி களையும் குறிப்பிடலாம். மாணவர்கள் மேற்கொள்ளவேண்டிய செய்முறை வேலைகளையும் குறிப்பிடுவது நல்லதாகும்.

(iii) **பாட அமைப்பு** (Lesson Plan): ஒரு வரலாற்றுப் பாடத்தை ஒரு பிரிவேளையில் கற்பிக்கத் திட்டமிட்டு எழுதிக் கொள்வதே பாடக்குறிப்பு ஆகும்.

பாட அமைப்பில் பாடம், பகுதி, நாள், வகுப்பு, மாணவர் தொகை அனைத்தும் குறிக்கப்படல் வேண்டும். அடுத்ததாக அப் பாடப்பகுதியின் நோக்கங்கள் குறித்தல்வேண்டும். அப் பிரி வேளையில் ஆசிரியர் பயன்படுத்தவிருக்கும் துணைக்கருவிகள், படங்கள் முதலியவற்றை எழுதுதல்வேண்டும். இனி, வரலாற்றுப் பாடப்பொருள்களைக் கற்பிப்பதற்கு அதனைப் பாடப்பொருள் (Subject matter), முறையும் வினாக்களும் மாணவரிடம் எதிர் பார்க்கும் திறன் (skills), பொதுக்குறிப்பு என்னும் தலைப்புகளாகப் பிரித்து எழுதுதல் வேண்டும். இவை தவிர, வகுப்பறையில் மேற் கொள்ளப்பெறும் வேலைகள், துணைக்கருவியைப் பயன்படுத்துதல், கரும்பலகையைப் பயன்படுத்துதல் போன்றவையும் இடம்பெறும். இவ்வாறு ஆசிரியர் கற்பிக்கின்ற பாடப்பொருளையும், மேற்

கொள்ளும் முறைகளையும் தெளிவாகக் காட்டுவதே பாடஅமைப் பாகும். முறையாகக் கற்பித்தலில் பயிற்சி பெறவும், நற்பயன் விளையும்படிக் கற்பிக்கவும் பாடக்குறிப்பு தயாரித்தல் இன்றியமை யாதது என்பதை வரலாற்று ஆசிரியர்கள் நன்கு உணர்வார்களாக.

(iv) **அலகுபாட முறையைத் திட்டமிடுதல்** (The Unit Lesson Plan): கல்வி பயிலும் மாணவர்கள் பாடத்தில் வரும் பாடப்பொருளை நன்குகப் பாகுபாடு செய்து, ஒப்பிட்டுத் தெளிவாகப் புரிந்துகொள் வதற்கு அலகுபாடமுறை இன்றியாதது ஆகும். இந்த முறை படித்த பாடப்பொருள்களை வாழ்க்கையில் பயன்படுத்துவதற்கும் உதவுகின்றது. கற்றல் என்பது மாணவனுடைய நடைத்தையோடு இணைந்ததாகும்; கற்றல் அர்த்தமுள்ள ஒரு செயலுமாகும். செயல் முறை வழிவந்த கல்வியே அலகுமுறைப் பாடத்திட்டத்தின் உயிர்நாடியாகும். குறிக்கோள், அதை அடைய வேண்டிய பாடங்கள், தொடர்ந்து வரும் செயல்கள், இவையே அலகு பாட முறைத் திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

பண்டைக் காலத்தில் ஆசிரியர்கள் அன்றுடந் தேவைக்காக அன்று நடத்தவேண்டிய பாடத்திற்கு மட்டும் திட்டம் வகுப்பார்கள். இந்த முறை மாணவர் அறிவு வளர்ச்சிக்கு அடிகோலாது, வளர்ச்சி என்பது படியாகத்தொடர்ந்து ஏற்படவேண்டும். எனவே, ஆசிரியர் பாடத்திட்டமிடுதல் மாணவர் வளர்ச்சிக்கு வழி வகுக்கக்கூடிய திட்டமாகும். அலகுபாடமுறை மாணவர் வளர்ச்சியையே குறிக் கோளாகக் கொண்டுள்ளது. மாணவர்கள் முழுமையான அறிவைப் பெறமுடியும். மேற்கூறிய காரணங்களால் அலகுபாடமுறையில் பாடத்திட்டமிட்டு ஆசிரியர் கற்பித்தலில் ஈடுபடவேண்டிய அவசியத்தை வலிறுத்திக்கூறுகின்றனர்.

மாணவர்கள் ஒழுங்கான, முழுமையான அறிவைப் பெற வேண்டும் என்ற கருத்தினை எல்லாக் கல்வி வல்லுநர்களும் ஏற்றுள் ளனர். செயல்முறை வழியாகத்தான் கற்றல் ஏற்படவேண்டும் என்பதனை இன்று வலியுறுத்துகின்றனர். இன்று வழக்கிலிருக்கும் செயல்திட்டமுறை, புதிர் தீர்க்கும்முறை ஆகியவை இந்தக் கருத்தின் வழிவந்தவை. அலகுபாடமுறைத் திட்டமிடல் பயன்தரக் கூடிய கண்ணோட்டத்தோடு அமையவேண்டும். அலகுபாடமுறை முழுமையை வலியுறுத்துகின்றது. இந்த முறை பொதுவான ஆர்வங்களையும், குறிக்கோள், செயல்திறன் இவற்றை மையமாகக் கொண்டுள்ளது. இது முழுமையானதும், கருத்து நிரம்பியதுமான ஓர் அனுபவத்தைக் கொடுக்கின்றது.

அலகுபாடமுறைத்திட்டமிடல் அவசர, அவசரமாக அன்றுடம் தயாரிக்கப்பட்ட பாடத் திட்டமிட்டதை ஒதுக்கித்தள்ளுகின்றது,

அலகுபாடமுறைத் திட்டமிடல் ஏற்றுள்ள பள்ளிகளில் இந்தத் திட்டம் கற்றலையும், பாடம் கற்பிக்கும் முறையையும் செம்மைப் படுத்துகிறது என்பதை ஏற்றுக்கொண்டுள்ளது என்பதை நாம் உணரலாம்.

**அலகுபாடமுறைத் திட்டத்தின் வகைகள்**

(i) **பாடத்தை மையமாகக்கொண்டு திட்டமிடல்** (Subject Unit): இத் திட்டத்தில் பாடமும் அதைக் கற்கவேண்டிய அவசியமும் வலியுறுத்தப்படுகின்றன. பாடத்திலிருந்து ஒரு தலைப்பை எடுத்து முழுமையாக வகுப்பில் போதிக்கப்படுகிறது. பாடத்தைப் பற்றிய செய்திகளைத் தனித்தனியாகக் கூறுமல், இணைத்தும் தொகுத்தும் ஒரு முழுமையான வடிவத்தைக் கொடுத்து மாணவர்களுக்கு அளிக்கப்படுகின்றது.

(ii) **அனுபவத்தையொட்டிய பாடத்திட்டமிடல்** (Experience Unit): இத் திட்டத்தில் மாணவனுடைய ஆர்வம் மையமாக உள்ளது. மாணவன் பாடத்தில் வரும் சிலவற்றில் மட்டும் ஆர்வம் கொண்டிருக்கலாம். அதை ஊக்குவிப்பதற்கு இந்த முறை உதவுகின்றது. கற்பவனுடைய ஆர்வத்தை உற்சாகப்படுத்தி, ஊக்குவிப்பதே இந்தத் திட்டத்தின் குறிக்கோளாகும்

(iii) **தகுதி வழிகாணும் பாடத்திட்டமிடல்** (Resource Unit): இது குறிப்பிட்ட காலத்திற்கும், வகுப்பிற்கும், மாணவர்களுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையாகும். இந்தத் திட்டத்தை எப்பொழுதும் மேற்கொள்ளமுடியாது. சில ஆசிரியர்களின் கூட்டு முயற்சியால் இது தயாரிக்கப்படுகிறது. இதை அமுல்படுத்த நூலறிவும், வல்லுநர்களின் உதவியும் தேவைப்படுகிறது. இந்த முறையில் மாணவன் அறிவைத் தேடிப்பெறுகிருன்.

(iv) **இயங்குமுறை** (Dynamic Unit): பாடத்திட்டமிடல் இந்த முறையில் பாடத்தைவிடக் கற்பவனுக்கு அதிகச் சிறப்பு அளிக்கப் படுகிறது. மாணவனுடையஅறிவு, திறன், ஆற்றல், செயல் ஆகியவற்றை வளர்ப்பதற்குச் சங்கிலி கோத்தாற்போல் சில திட்டங்களை வகுத்து மாணவனுக்கு அளிக்கிருேம். இதன் விளைவாக அவன் வாழ்க்கையில் வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடிகிறது. இந்த முறை மாணவனுடைய ஆற்றல் திறன், படைக்கும் திறன் போன்றவற்றை வளர்ப்பதே நோக்கமாகக் கொண்டுள்ளது.

**வினுக்கள்**

(1) பாடத்திட்டமிடுதலின் அவசியம் என்ன?

(2) பாடக்குறிப்பின் அடிப்படைப் பிரிவுகளை விவரித்துக் கூறுக.

(3) பாடத்திட்டங்களின் பலவித அமைப்புகளை விவரிக்கவும்.

பாடத்தைத் திட்டமிட்டுத் தயாரித்தல் — ஓர் எடுத்துக்காட்டு.

## பாடக் குறிப்பு (Lesson Plan)

ஆசிரியர் பெயர் : பாடம் — இந்திய வரலாறு நாள் :

பள்ளி : பகுதி — ஹர்ஷவர்த்தனர் காலம் :

வகுப்பு : பத்தாம் வகுப்பு.

மாணவர்களின் எண்ணிக்கை : (கி. பி. 606—647)

**கற்பித்தலின் நோக்கங்கள் :**
(Instructional objectives)

மாணவன் :

(1) அறிவு பெறுகின்றான் (acquires knowledge): ஹர்ஷர் காலத்திய வட இந்திய அரசியல், சமூக, பொருளாதார நிலையை அறிதல்;

(2) விளக்கம் பெறுகின்றான் (understands): ஹர்ஷரின் வெற்றி' நிர்வாகம், சீர்திருத்தம், மதச்சகிப்புத்தன்மை ஆகியவற்றை அறிதல்;

(3) திறன் வளர்த்தல் (develops skills): தேசப்படம் வரைதல், காலக்கோடு தயாரித்தல்;

(4) நல்ல மனப்போக்கை வளர்த்தல் (develops attitude): நம் நாட்டின் நல்ல மரபைப்பற்றிப் பெருமையடைதல்.

**துணைக்கருவிகள்**
(Teaching Aids)

(1) ஹர்ஷப் பேரரசின் எல்லையை விளக்கும் படம்.

(2) யுவான் சுவாங்கின் சுற்றுப்பயணததை விளக்கும் படம்.

| நோக்கக்கூறுகள் (Specifications) | பாடப்பொருள் (Content) | கற்றல் அனுபவம் (Learning Experience) | மதிப்பீடு (Evaluation) |
|---|---|---|---|
| நினைவுகூறுதல் (Recalls) | இந்தியப்பேரரசர் ஹர்ஷர்-புத்த மதத்தை ஆதரித்தார்-சீன யாத்திரிகர்-யுவான்சுவாங்கின் வருகை. | புதிய பாடத்தைத் துவக்குவதற்குப் பின்கண்ட வினுக்கள்மூலம் மாணவர்களை ஆசிரியர் ஊக்குவித்தல்.<br>(அ) ஹர்ஷர் யார்?<br>(ஆ) அவர் பின்பற்றிய மதம் என்ன?<br>(இ) ஹர்ஷருக்குப் பின் புத்தமதத்தைஆதரித்த சிறப்பு மிக்க பேரரசர் யார்?<br>வினுக்கள் மூலம் விடைகளை வரவழைத்தல்-புதிய பாடத் தலைப்பை அறிமுகப்படுத்துதல். | |
| மீட்டறிதல் (Recognises) | (1) ஹர்ஷர் ஆட்சிக்காலத்தைப் பற்றியமூலங்கள் (Sources);<br>(2) ஹர்ஷரின் இளமைப் பருவம்;<br>(3) அவரது போர் நடவடிக்கைகள்.<br>(4) அவரது மதக்கொள்கை | | |

| நோக்கக்கூறுகள் | பாடப்பொருள் | கற்றல் அனுபவம் | மதிப்பீடு |
|---|---|---|---|
| | ஹர்ஷர் காலத்தைப்பற்றிய மூலங்கள்:<br>(i) பாணரின் ஹர்ஷ சரிதம்;<br>(ii) யுவான்-சுவாங்கின் பயணக் குறிப்பு;<br>(iii) கல்வெட்டுகள். | ஹர்ஷர் ஆட்சியைப் பற்றிய மூலங்களை ஆசிரியர் விளக்கிக் கூறுதல். | |
| நினைவுகூறுதல் (Recalls) | பாணர் | ஹர்ஷ சரிதம்—காதம்பரி—நூல்களை எழுதியவர் யார்? | சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்;<br>'ஹர்ஷ சரிதையை' எழுதியவர்:<br>(அ) காளிதாசர்<br>(ஆ) பாணர்<br>(இ) விசாகதத்தர்<br>(ஈ) கௌடில்யர். |
| மீட்டறிதல் (Recognises) | பிரபாகர வர்த்தனர் — தானேஸ்வரம்—தலைநகரம்—குமாரர் இருவர்—இராஜ்ய வர்த்தனர், ஹர்ஷ வர்த்தனர்; குமாரி இராஜ்யஸ்ரீ—இராஜ்யஸ்ரீயின் கணவர் கன்னோசி அரசர் கிரகவர்மர் மௌகாரி—பிரபாகர வர்த்தனர் இறந்ததும் இராஜ்ய வர்த்தனர் அரசரானார். | | |

| | | | |
|---|---|---|---|
| | மாளவ நாட்டு மன்னர் தேவ குப்தர் கன்னேசியைத் தாக்கி, கிரகவர்மரைக் கொன்று இராஜ்ய ஸ்ரீயைச் சிறைப் படுத்தினர்—இராஜ்ய வர்த்தனர் மாளவ அரசருடன் போரிட்டுத் தோற்கடித்தார்-ஆனல், வங்காள மன்னன் சசாங்கன் இராஜ்ய வர்த்தனரை வஞ்சகமாகக் கொன்றன். | | |
| நினைவு கூறுதல் (Recalls) | பிரபாகரவர்த்தனரின் மகன் இராஜ்ய வர்த்தனர்-வங்க நாட்டு மன்னன் சசாங்கன். | ராஜ்ய வர்த்தனர் யார்? சசாங்கன் எந்த நாட்டு அரசர்? | இராஜ்ய வர்த்தனரைக் கொன்றது யார்?<br>(அ) தேவகுப்தர்<br>(ஆ) சசாங்கன்<br>(இ) ஹர்ஷ வர்த்தனர். |
| காரணம் கூறுதல் (Gives reasons) | தனது தமையனைக் கொன்றவரைப் பழி வாங்கவும், சகோதரியை மீட்கவும் ஹர்ஷர் தீர்மானித்தார். | ஏன் இராஜ்ய வர்த்தனர் மாளவ நாட்டு அரசருடன் போரிட்டார்? | |

| நோக்கக்கூறுகள் | பாடப்பொருள் | கற்றல் அனுபவம் | மதிப்பீடு |
|---|---|---|---|
| மீட்டறிதல் (Recognises) | கி.பி. 606-ல் ஹர்ஷ வர்த்தனர் அரசப் பொறுப்பை ஏற்றார். சகோதரியை மீட்டு வருதல்—ஆறாண்டுகள் எதிரிகளுடன் போர்—கன்னோசி மக்கள் விருப்பப்படியும், தமது தமையனது நினைவை மறக்கவும் தலைநகரைக் கன்னோசிக்கு ஹர்ஷர் மாற்றினார். | | எந்த ஆண்டு ஹர்ஷர் கன்னோசி அரசை ஏற்றுக் கொண்டார்?<br>(அ) கி.பி. 606<br>(ஆ) கி.பி. 608<br>(இ) கி.பி. 636. |
| இடத்தைக் குறிப்பிடுதல் (Locales) | இந்தியா படத்தில் வங்காளத்தின் இருப்பிடத்தைக் காட்டுதல். | ஒரு மாணவனை இந்தியா படத்தில் வங்காளம், கன்னோசி, ஸ்தானேஸ்வரம் இருப்பிடங்களைக் குறிப்பிடும்படிச் செய்தல். | |
| காரணம் காணுதல் (Gives reasons) | | ஹர்ஷர் தமது தலைநகரை கன்னோசிக்கு மாற்றியதற்குக் காரணம் காணுதல். | |

| | | | |
|---|---|---|---|
| மீட்டறிதல் (Recognises) | ஹர்ஷரின் போர்கள்-பஞ்சாபில் ஸட்லெஜ் நதிக் கரையிலிருந்து அஸ்ஸாம் வரையிலும்; இமயம் முதல் விந்தியமலை வரையிலுமுள்ள பிரதேசங்களை ஹர்ஷர் வென்ருர்—ஹர்ஷர் தக்காணத்தை வெல்ல முயன்ருர்—ஆனல், சாளுக்கியமன்னர் இரண்டாம் புலிகேசி மன்னரால் தோற்கடிப்பட்டார்—நர்மதை ஹர்ஷர் அரசின் தெற்கெல்லையாக அமைந்தது. | ஹர்ஷர் செய்த போர்களைப் பற்றி ஆசிரியர் விவரித்துக் கூறுதல். | நர்மதை நதிக்கரையில் ஹர்ஷரைத் தோற்கடித்த அரசர் யார்? (அ) சசாங்கன் (ஆ) தேவகுப்தர் (இ) இரண்டாம் புலிகேசி. |
| ஒப்பிடுதல் (Compares) | அசோகரைப் பின்பற்றி அரசியல் நிர்வாகம் அமைத்தல்—சீர்திருத்தங்கள் செய்தல்—நிர்வாகத்தை நேரிடையாகக் கவனித்தல்—நிலத்தின் மொத்த விளைவில் ஆறில் ஒரு பங்கை நிலவரியாகப் பெற்ருர். | அசோகர் ஆட்சி முறையுடன் ஹர்ஷர் ஆட்சியை ஒப்பிடுதல். | |

| நோக்கக்கூறுகள். | பாடப்பொருள் | கற்றல் அனுபவம் | மதிப்பீடு |
|---|---|---|---|
| மீட்டறிதல் (Recognises) | ஹர்ஷர் ஒரு சிறந்த புலவர்—வட மொழியில் அவர் எழுதியவை ரத்னுவளி, பிரியதர்சிகா, நாகானந்தம் என்ற மூன்று நாடகங்கள்—ஆதரித்த புலவர்களில் சிறந்தவர் பாணர்—பாணர், ஹர்ஷசரிதம், காதம்பரி என்ற நூல்களை வடமொழியில் எழுதினர்—ஹர்ஷரின் மதச் சகிப்பும், தெய்வ நெறியும். | ஹர்ஷரின் புலமையை ஆசிரியர் விளக்கிக் கூறுதல். | (அ) பாணர் எழுதிய நூல்கள் (1)...(2) .. ஆகும். (ஆ) ஹர்ஷர் எழுதிய நாடகங்கள் (1)...(2)...(3)...ஆகும். |
| எடுத்துக்காட்டுத் தருதல் (Illustrates) | ஹர்ஷர் முதலில் சிவனையும், சூரியனையும் வழிபட்டார்; பின்னர் மகாயான புத்தமதத்தைத் தழுவினர்—கி. பி. 643-ல் கன்னேசியில் புத்தமத மாநாட்டைக் கூட்டினர் — ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை அலகாபாத்தில் மாநாடுகளைக் கூட்டி கல்விமான்களுக்கு நன்கொடை வழங்கினர். | ஹர்ஷரின் மதத்தையும், அவர் கூட்டிய மாநாடுகளைப் பற்றியும் ஆசிரியர் விளக்கிக் கூறுதல். | |

| | | |
|---|---|---|
| மீட்டறிதல் (Recognises) | நாலந்தா பல்கலைக் கழகம்—குமாரகுப்தரால் தோற்றுவிக்கப் பட்டது. வெளிநாட்டிலிருந்து மாணவர்கள் கல்விபயில நாலந்தாவிற்கு வந்தனர்—காஞ்சியைச் சேர்ந்த தர்மபாலர் இப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர். | |
| நினைவு கூறல் (Recalls) | குமாரகுப்தர் | நாலந்தா பல்கலைக்கழகம் யாரால் தோற்றுவிக்கப்பட்டது? யார் காலத்தில் மிகவும் சிறப்புற்றது? |
| மீட்டறிதல் (Recognises) | யுவான்சுவாங்—சீனயாத்திரிகர்—கி.பி. 629 முதல் 645 வரை சுற்றுப் பயணம் செய்தார்—மத—நூல்களைத் திரட்டவும், புனித இடங்களைத்தரிசிக்கவும் வந்தார்—எட்டு ஆண்டுகள் ஹர்ஷர் பேரரசில் கழித்தார்—அவரது பிரயாண நூல் சியூகி என்று வழங்கப்படுகின்றது—அவரது குறிப்புகளிலிருந்து நாம் அறிந்து கொள்ளும் பாடப்பொருள்கள். | கன்னேசி நகரம்—புத்த மதங்களும், இந்து கோவில்களும் இருந்தன—புத்த மதம் செல்வாக்குக் குறைந்திருந்தது—அலகாபாத் கூட்டம்—ஹர்ஷரின் மதச் சகிப்புத் தன்மை—மக்களின் உடை, பழக்க வழக்கங்கள்—ஆசிரியர் விளக்கிக் கூறுதல். |

| நோக்கக்கூறுகள் | பாடப்பொருள் | கற்றல் அனுபவம் | மதிப்பீடு |
|---|---|---|---|
| உற்று நோக்குதல் (Observes) | யுவான் சுவாங்கின் இந்தியப் பிரயாணத்தை விளக்கும் படம் (Route of Hiuen-Tsang's Travel) | இந்தியப் படத்தில் யுவான் சுவாங் சென்ற இடங்களைக் குறித்துக் காட்டுதல். | |

**மீண்டும் நோக்குதல்**
(Reviews)

(1) ஹர்ஷர் ஆட்சியை அறிந்துகொள்ள உதவும் சான்றுகள் யாவை?

(2) ஹர்ஷப் பேரரசின் பரப்பைக் கூறுக.

(3) ஹர்ஷர் இயற்றிய நூல்கள் யாவை?

(4) யுவான் சுவாங் என்பவர் யார்? அவர் ஏன் இந்தியாவிற்கு வந்தார்?

(5) நாலந்தா பல்கலைக் கழகத்தைப்பற்றி நீ அறிந்ததைக் கூறுக.

**வீட்டு வேலை**
(Assignment)

(1) பிரபாகர வர்த்தனர், ஹர்ஷ வர்த்தனர் பற்றிய காலக்கோடு (Time line) வரைக.

(2) ஹர்ஷர் மதச் சகிப்புத் தன்மையுடையவர் என்பதை எவ்விதம் நிரூபிக்கலாம்?

(3) இந்தியாவின் தேசப்படத்தில் ஹர்ஷப் பேரரசைக் குறிப்பிடுக.

**(7) வரலாறு கற்பிக்க உதவும் தளவாடங்களும் மூலங்களும்** (Equipment and Resources)

**(1) பாடப்புத்தகங்கள்** (Text books)

**நல்ல பாடப்புத்தகத்தின் தனிச் சிறப்புக் கூறுகள்:** 'சிறு பையன், சிறுபுத்தகம்' என்பது முன்பெல்லாம் வழக்கிலிருந்த முது மொழியாகும். வரலாற்றுப் பாடப்புத்தகங்களை குறிப்பிடும்பொழுது இம் முதுமொழி மாற்று வீதமுறையில்தான் (Inverse proportion) உபயோகிக்கப்படவேண்டும். வயது நிரம்பிய மாணவன் தன் சிறு புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் சுருக்கத்தைக்கொண்டு கற்க முடியும். நல்ல முறையில் விளக்கப்பட்டிருக்கும் பாடப்பொருள் வர்ணனைகள், அதிகப்படியான பாடப்பொருள் உள்ள பெரிய புத்தகங்கள்தான் இளம் மாணவர்களுக்குத் தேவைப்படுகின்றன. விரித்துரைத்தல் இல்லாத, சாரமற்ற பாடப் பொருள்கள் அடங்கிய புத்தகங்களைப் பள்ளி மாணவர்கள் கையில் கொடுக்கவே கூடாது. உயர் வகுப்பு மாணவர்களுக்கு விளக்கம் அதிகம் உள்ள புத்தகங் களைக் கொடுப்பதால், ஆசிரியர் வகுப்பு நேரத்தை விளக்கங்கள் கூறுவதில் செலவழிக்கவேண்டியதில்லை. மாணவர்களே படித்துப் பயன்பெற வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

குறிப்புகள் மாத்திரம் அடங்கிய சிறிய புத்தகங்களை ஆதரிப் பவர்களின் கூற்று பின்வருவன:

ஆசிரியரின் குரலின் விரிவுரையால்தான் பாடத்தின் விளக்கம் நன்கு உணரப்பட்டு, பாடத்தில் கவர்ச்சியை மாணவர்கள் அடைவார்கள் என்பதாகும். இக் கருத்து ஆரம்ப பள்ளி மாணவர் களுக்குப் பொருத்தமானது. மேல்வகுப்பு மாணவர்கள் புத்தகங் களைப் படித்துத் தங்கள் முயற்சியினாலேயே விளக்கங்களைக் கற்றுக் கொள்ளவேண்டுமென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எனவே, அளவுக்குமீறிய விளக்கங்கள் நிறைந்த புத்தகத்தையும், மிகவும் சுருக்கப்பட்ட பாடப்பொருள் அடங்கிய புத்தகத்தையும் தவிர்க்க வேண்டும்.

பொருத்தமான புத்தகத்தைத் தேர்ந்தெடுக்கும் பொழுது கவனிக்க வேண்டியவை:

**(அ) ஆசிரியரின் புலமைபற்றிய ஆராய்வு**

(அ) புத்தகம் நல்ல ஆதாரங்களுடன் எழுதப்பட்டதா கவும், இக்கால நிகழ்ச்சிகள் உள்ளடங்கப் பெற்றதாகவும் (up-to-date) இருக்கவேண்டும்.

(ஆ) பெருந்தலைவர்கள் அல்லது நிகழ்ச்சிகள் பற்றிய பழமைசார்ந்த பாடப்பொருள் தொடர்ந்து கூறப்படாமல் இருக்க வேண்டும்.

(இ) வாழ்க்கை முறையும், உடைகளை அணியும் முறையின் வர்ணனையும் விளக்கப்படங்களில் காட்டியிருப்பதை ஒத்து இருக்க வேண்டும்.

(ஈ) ஆசிரியர் கருத்துகள் ஒரு புறமாகச் சாய்வின்றி (Unbiased) இருக்கவேண்டும்.

**(ஆ) போதனுமுறைபற்றிய ஆராய்வு (Pedagogic considerations)**

(அ) தேர்ந்தெடுத்துக் கூறப்படும் பாடப்பொருள் மாணவர்களின் மனவளர்ச்சிக்கு ஏற்ப இருக்கவேண்டும்.

(ஆ) எடுத்துக்காட்டாகக் கூறுவோமாயின் மேல்வகுப்புகளில் பாடப்பொருள்கள் காலவரிசைப்படி இல்லாமல் தலைப்புசார் முறையில் இருக்கலாம்.

(இ) இணைவழிப்படிப்பு, மூலங்கள்பற்றிய குறிப்புகள், பயிற்சிகள் போன்றவை அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

(ஈ) ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் பாடச்சுருக்கமும், வரலாறுபற்றிய நவீனங்கள், கதைகள் கவிதைகள் போன்றவற்றைப் பற்றிய குறிப்பிடல்களும் இருக்கவேண்டும்.

(உ) மாணவர்களுக்கு விளங்கும் எளிய முறையிலும், தெளிவான மொழியிலும் பாடங்கள் எழுதப்பட்டிருக்கவேண்டும். பாடங்களின் இறுதியில் வினுக்களுக்கும் பயிற்சிகளும் பாடங்களில் மாணவர்கள் தெளிவு பெறும் வகையில் உதவி செய்யும் முறையாக இருக்கவேண்டும்.

(ஊ) பாடங்கள் பற்றிய தேசப்படங்கள் விளக்கப்படங்கள் போன்றவைகளும் அதிகமாகக் கொடுக்கபபட்டிருக்கவேண்டும்.

**(இ) பொறிசார்ந்த ஆராய்வுகள் (Mechanical considerations)**

(அ) உரு ஒப்பனை (make up) கவர்ச்சியாக இருக்கவேண்டும்.

(ஆ) நல்ல காகிதத்திலும், தெளிவான அச்சுவடிவத்திலும், பொருளடக்கம், பொருளடக்க அகரவரிசை போன்றவையும் நல்ல புத்தகத்தில் இடம் பெறுதல்வேண்டும்.

**பேராசிரியர் ஜான்சன் கூறுவது:** 'வரலாறு கற்பிப்பதற்கு மிகவும் சிறந்த சாதனம் பாடப்புத்தகமே'. எனவே, பாடப்புத்தகம் கற்பிப்பதில் நல்ல முறையில் பயன்படுத்தப்படவேண்டும். மொழிப்பாடம் கற்பிப்பதில் போல வரலாற்றுப்பாடப்புத்தகம் பயன்படுத்துவது கூடாது. எவ்விதம் வரலாற்றுப்பாடத்தைப் பயன்படுத்தலாம் என்பது பற்றி முன் அத்தியாயத்தில் பார்த்தோம்.

தொடக்கப்பள்ளிக்குத் தேவைப்படும் புத்தகங்கள் 'கதை சொல்லும் முறையில்' (Story method) அமையவேண்டும். நடுநிலைப் பள்ளி மாணவர்களின் புத்தகங்கள் 'கூற்று முறையில்' (Narrative type) எழுதப்பட்டும், உயர் வகுப்பு மாணவர்களுக்குப் பயன்படும் புத்தகங்கள் பாடப்பொருள் விவரமாகவும், தெளிவாகவும், கூற்று முறையினைப்பற்றியதாகவும் அமைந்திருப்பவை சிறந்தவைகளாகக் கருதப்படும்.

**வினாக்கள்**

(1) பொருத்தமான பாடப்புத்தகத்தைத் தேர்ந்தெடுக்கும் பொழுது கவனிக்கவேண்டியவை யாவை?

(2) நல்ல தொரு வரலாற்றுப் பாடப்புத்தகத்தின் சிறப்பியல் புகளைத் தெரிவிக்கவும்.

### (2) இணை வழிப்படிப்பு (Collateral Reading)

உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் யாவரும் பாடப்புத்தகத்திற்குப் புறம்பாக உள்ள புத்தகங்களையும் படிக்கவேண்டும். வரலாற்றுப் பாடம் கற்பிக்கும்பொழுது வரலாறு புத்தகத்திற்கு உடன் துணைப் புத்தகங்களைப் படிக்கும் (Supplementary reading) வழக்கத்தை மாணவர்களிடத்தில் ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபடவேண்டும்.

**படிப்பதன் வகைகள்** (Types of reading): படிப்பதில் பல வகைகள் உள்ளதை மாணவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். அவைகளாவன:

(1) புரிந்து கொள்வதற்குப் படித்தல்.

(2) மனப்பாடம் செய்வதற்காக திரும்பத் திரும்பப் படித்தல்.

(3) குறிப்பிட்ட பாடப்பொருளைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு மேல் நோக்காகப் படித்தல்.

(4) அறிவை விரிவுபடுத்திக்கொள்ளும் பொருட்டுப் பல புத்தகங்களை வேகமாகப் படித்து முடிக்க முயற்சி செய்தல்.

(5) மகிழ்ச்சியடையவும், மனவெழுச்சி பெறவும் வரலாறு பற்றிய புனைக்கதைகள், கவிதைகள் போன்றவற்றைப் படித்தல்.

**இணைவழிப் படிப்பின் நோக்கங்கள்:** பாடத்தின் சிறப்பான பகுதிகளைப் புரிந்து கொண்டதற்குப் பிறகு மேற்கொண்டு உடன் துணைப்புத்தகங்களைப் படிப்பதற்குத்தான் இணைவழிப்படிப்பு என்று கூறப்படுகின்றது.

**மேற்கோள் புத்தகங்களைப் (Reference books) பயன்படுத்துவதன் நோக்கங்கள் பின்வருவன:**

(i) வரலாறுபற்றிய இலக்கியம் அன்றுடம் வளர்ச்சியடைந்து வருகின்றது. அவற்றை மாணவர்கள் படித்துப் பயன்பெறும்படிச் செய்யவேண்டும்.

முதலாவதாக ஆசிரியர் வரலாறு பற்றிய இலக்கியங்களைப் படிக்கவேண்டும். பரந்த அறிவு பெற்றிருந்தால்தான் வகுப்பில் மாணவர்களின் கவர்ச்சியைப் பெறமுடியும். கவர்ச்சியை ஏற்படுத்தி விட்டால், மாணவர்களே மேற்கோள் புத்தகங்களைப் படிக்க ஆரம்பிப்பார்கள். இதனால் வரலாற்றிலுள்ள பாத்திரங்கள் உயிர் பெற்று எழும் என்பது திண்ணம்.

(ii) இணைவழிப்படிப்பில் பயிற்சிபெற்ற மாணவர்கள், பள்ளிப் படிப்பிற்குப் பிறகு புத்தகங்களைப் படிக்கும் செயலில் ஈடுபடுவார்கள். எனவே, படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தவும் இணைவழிப்படிப்பு மேற்கொள்ளப்படவேண்டும்.

(iii) தானுகவே பல புத்தகங்களைக் குறைந்த கால அளவில் படித்து, வேண்டிய பாடப்பொருள்களைச் சேகரிக்கும் திறனும் வளர்க்கமுடிகின்றது. எனவே, தனிப்படிப்பின் நுணுக்கத்தை மாணவர்கள் அடையும்படிச் செய்வதும் ஒரு நோக்கமாகும்.

(iv) பாடத்தில் ஏற்படும் புதிர்களைத் தீர்க்கப் பல புத்தகங்களில் கூறப்பட்டிருக்கும் கருத்துகளை மாணவர்கள் படித்து, செய்திகளை மதிப்பிட்டு, ஒரு முடிவிற்கு வருவார்கள். நல்ல முடிவை அடையும் திறமையை இணைவழிப் படிப்பின்மூலம் மாணவர்களுக்கு அளிப்பது மற்றொரு நோக்கமாகும்.

**இணைவழிப் படிப்புக்கு ஏற்ற புத்தகங்களின் வகைகள்:** இரண்டு வகையான புத்தகங்கள், இணைவழிப் படிப்புக்கு ஏற்றவை அவையாவன:

(i) **ஆழ்ந்த படிப்புப் பற்றியவை** (Intensive reading): வரலாற்றுப் பாடப்பொருள்களைப் பற்றிய அறிவை இவை அளிக்கும்.

(ii) **பரந்த படிப்புப் பற்றியவை** (Extensive reading): பாடங்களைக் கற்பது நல்ல சூழ்நிலையையும், மனக்களிப்பையும் இவ்வகைப் புத்தகங்கள் அளிக்கும், ஆழ்ந்த படிப்புக்கு வேண்டிய புத்தகம் ஒவ்வொன்றும் மூன்று மாணவர்களுக்கு ஒன்று என்ற விகிதத்தில் வகுப்பு அறை நூலகத்திலிருக்கவேண்டும். பரந்த படிப்புக்குப் பலவிதப் புத்தகங்கள் (variety of books) சேகரிக்கப்பட்டு வைத்திருக்கவேண்டும்.

எனவே, இவ் வரலாற்றுப்பாட நூலகத்தில் கீழ்க்காணும் புத்தகங்கள் இருக்கவேண்டும்:

(1) பாடப்புத்தகத்திற்கு இணையாகவுள்ள புத்தகங்கள்.

(2) பாடப்புத்தகத்தைவிட அதிகச் செய்திகள் தரும் ஒரே தொகுதியாகவுள்ள புத்தகங்கள்.

(3) ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியின் வரலாற்றை விவரிக்கும் புத்தகங்கள். உலகத்தின் பல பகுதிகளைப் பற்றியவையும், வரலாற்றின் போக்குகளைப் பற்றியனவாகவும் உள்ள புத்தகங்கள்.

(4) வாழ்க்கை வரலாறு நூல்கள்.

(5) சமூகம், தொழில், பொருளாதார வாழ்க்கையைப் பற்றிய நூல்கள்.

(6) அரசியல், அரசியல் அமைப்பு, அரசியல் சூழ்ச்சித் திறம் பற்றிக் கூறும் நூல்கள்.

(7) மூலங்களும், ஆவணப் பொருள்களும்.

(8) ஞாபகக் குறிப்புகள், பிரயாணக் குறிப்புகள், நாட்குறிப்புகள் போன்றவையும்.

(6) தேசப்படங்கள், கருத்துப்படங்கள் போன்றவையும்

(10) வரலாறு தொடர்புள்ள புனைகதைகள், நாடகங்கள் போன்றவையும்.

(11) புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும் புத்தகங்கள், இவற்றில் சிஸ்ஹோம் எழுதிய 'பொருளாதார நிலநூல்',

கெண்ட்ரு எழுதிய 'கண்டங்களின் தட்ப வெப்பங்கள்', ஸ்டேட்ஸ் மன் ஆண்டுப்புத்தகம் போன்றவற்றையும் குறிப்பிடலாம்.

**இணைவழிப்படிப்பை நடத்தும் முறைகள்:** இணைவழிப்படிப்பை நடத்துவதற்குப் பின்வரும் முறைகளைக் குறிப்பிடலாம்.

**1. பாடப்புத்தக முறை** (Subject Method)

பாடப்புத்தகத்தில் உள்ள ஒப்படைப்புகளைச் செய்து முடிக்கப் பலவிதப் புத்தகங்களை உபயோகிக்கும்படிச் செய்யலாம்.

**2. புதிர் தீர்த்தலும், செயல்திட்டம் முறையும்** (Problems and Projects)

புதிர் தீர்க்கும் முறையை மேற்கொள்ளும்பொழுதும், செயல் திட்ட முறையைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய செய்திகளைச் சேகரிக்கும் பொழுதும் இணைவழிப்படிப்பு தேவைப்படும். வரலாறு, நிலநூல் பொருளாதாரம், அரசியல் பற்றிய குறிப்பிடத்தக்க தலைப்புகளை மாணவர்கள் கற்கும்பொழுது மேற்கோள் புத்தகங்களையும் படிக்கவேண்டியிருக்கும்.

**3. பாடச்சுருக்கம்** (Outline)

குறிப்பிட்ட புத்தகங்களைப் படித்துச் சில தலைப்புகளுக்குப் பாடச்சுருக்கம் எழுதிவரும்படிக் கூறலாம். மற்றொரு முறையில் பாடச்சுருக்கத்தை ஆசிரியர் கரும்பலகையில் எழுதி, அதைப்பற்றிய விளக்கங்களையும், முழுப் பாடப்பொருளையும் புத்தகங்களைப் படித்துத் தயார் செய்து வரும்படியும் செய்யலாம்.

**4. வாய்மொழி அறிக்கை** (Oral report)

சில வார இதழ்களில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரையையும், புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள சிறப்பான பகுதிகளையும் திறமையுள்ள சில மாணவர்களைக் கற்றுவரச்செய்து அதைப்பற்றி வகுப்பில் எடுத்துரைக்கும்படிச் செய்யலாம். புத்தகத்தின் பெயர், அதுபற்றிய எடுத்துக்காட்டுப் படங்கள் போன்றவற்றை செய்திப் பலகையில் 'இடத்தை கவனி' (watch the spot) என்ற தலைப்பில் விளம்பரம் செய்யலாம். தங்கள் கருத்தை வகுப்பில் எடுத்துரைக்கவும், கலந்து ஆலோசிக்கவும் மாணவர் இம் முறையில் பயிற்சி பெறுகின்றனர்.

**5. குறிப்பிடப்பட்ட சில பகுதிகளைப் பற்றிய உரையாடலை வகுப்பில் நடத்தல்** (Class discussion on assigned readings)

மேற்கோள் புத்தகத்திலிருந்து சில தலைப்புகளின்கீழ் மாணவர்கள் பாடப்பொருள்களைப் படித்துவரச் செய்வதற்கு

ஆசிரியர் ஒப்படைப்புகளைத் தரவேண்டும். அதுபற்றிய உரையாடலை வகுப்பில் நடத்தவும் வேண்டும். பாடப்புத்தகத்தில் காணப்படாததும், மேற்கோள் புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருப்பதுமான பாடப்பொருளைப்பற்றிய வினாக்களை ஆசிரியர் கேட்டு மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டவேண்டும்.

**6. மூலமுறை (Source method)**

மேற்கோள் புத்தகங்களில் மூலப் புத்தகங்களும் அடங்கும். ஆவணங்களை (documents) மாணவர்கள் ஆசிரியர் உதவியின்றிப் பயன்படுத்துவது எளிதல்ல. எனவே, மேற்பார்வைப் படிப்பை (supervised study) வகுப்பில் நடத்தவேண்டும். அக் காலங்களில் மூலங்கள் மேற்கோள் புத்தகங்களாகக் கருதப்பட்டன. பாடத்தோடு பாடப்பொருளைக் கற்பதால், பாடத்தில் நன்றாகத் தெளிவு பெறுவார்கள்.

**7. எழுதப்பட்டுள்ள விடுகதைகள் (Written quiz)**

மேற்கோள் புத்தகங்களில் கூறப்பட்டுள்ள பாடப்பொருளைப் பற்றிய புதிர்கள், விடுகதைகள் போன்றவற்றை மாணவர்களுக்கு அளிக்கவேண்டும். தேர்ச்சியடையாத மாணவர்களைப் பற்றித் தனிக்கவனம் செலுத்தவேண்டும்.

**8. குறிப்பெடுத்தல் (Note taking)**

பாடப்புத்தகத்திற்குப் புறம்பாகவுள்ள புத்தகங்களில் படிக்கும் செய்திகளைப் பற்றிய குறிப்புகளை மாணவர்கள் எழுதிவரும்படியான நியதியை ஏற்படுத்தவேண்டும். அவற்றைப் புரிந்துகொண்டு எழுதிவருகின்றார்களா என்பதைச் சொல்லாடலில் ஈடுபட்டிருக்கும்பொழுது கூர்ந்து கவனிக்க வேண்டும்.

**இணைவழிப்படிப்பு முறையில் தவிர்க்க வேண்டியவை:**

(i) இணைவழிப்படிப்பை ஒரு பளுவாக மாணவர்கள் உணரும்படிச் செய்துவிடக்கூடாது. அவர்களை அளவுக்குமீறி மேற்கோள் புத்தகங்களைப் படிக்கும்படியும், குறிப்புகள் எழுதும்படியும் கட்டாயப்படுத்துவதினால் இணைவழிப்படிப்பில் வெறுப்பு ஏற்படும்.

(ii) ஆசிரியரால் கண்காணிக்க முடியாத அளவுக்கு இணைவழிப்படிப்பைப் பற்றிய பயிற்சிகளையோ, ஒப்படைப்புகளையோ கொடுக்கக்கூடாது.

(iii) ஏழெட்டு புத்தகங்களைப் படித்து, பாடப்பொருளைச் சேகரிக்கும் முறையில் பயிற்சிகள் அளிக்கக்கூடாது.

(iv) பாடத்தின் தலைப்புகளைப் பற்றி இணைவழிப்படிப்பு எதிர்பார்க்க வேண்டுமேயொழிய, இவ்வளவு பக்கங்கள் ஒரு வாரத்தில் படித்துவர வேண்டுமென்ற ஒரு நியதியை ஏற்படுத்தலும் கூடாது.

(v) பாடத்தைப் பற்றிய பாடப்பொருள்களை விவரித்து கூறும் பல புத்தகங்களின் பெயர்கள் போன்ற விவரங்களைக் கூறுவதற்குத் தவறக்கூடாது.

(vi) இணைவழிப்படிபபில் ஆர்வம் உள்ள மாணவனைப் புகழ்ந்து கூறவேண்டும். ஒப்படைப்பைப் பூர்த்தி செய்வதோடு அம் மாணவன் கொண்டுவரும் பிற பாடப்பொருள்களைப் பயன்படுத்துவதினால், பாடத்தில் மாணவர்களுக்கு ஆர்வம் ஏற்படும்.

(vii) இணைவழிப் படிப்பின் முறையை மாற்றிக்கொண்டேயிருக்கவேண்டும். ஒரே முறையை மேற்கொண்டால் மாணவர்களிடம் உற்சாகக் குறைவு ஏற்பட்டுவிடும்.

**இணை வழிப்படிப்பை மேற்பார்வையிடுதல்:** இணைவழிப் படிப்புக்கு ஏற்ற புத்தகங்கள் தாய்மொழியில் அதிகம் இல்லையென்று சிலர் கூறுவர். எனினும், கிடைக்கும் புத்தகங்களைக் கொண்டு நற்பலனைப் பெற முயற்சி செய்தல்தான் விரும்பத்தக்க செயலாகும். மேற்கோள் புத்தகப்படிப்பை எவ்விதம் சரிபார்த்தல் என்பது ஒரு பிரச்சினையாக ஏற்படலாம். ஆசிரியர் கொடுக்கும் ஒப்படைப்புகளைச் செய்துமுடிக்க இணைவழிப்படிப்புத் தேவைப்படுகின்றது. இவ்வேலையைப் பள்ளியின் நூலகத்திலோ அல்லது வீட்டிலோ செய்யும்படி எதிர்பார்க்கவேண்டும். இவ்விதப்படிப்பு 'மேற்பார்வைப் படிப்பாகக்' கருதப்படமாட்டாது. எழுத்துமூலம் சோதனை செய்தும், உரையாடலை நடத்தியும் இணைவழிப்படிப்பை மதிப்பிட்டால் மாணவர்களிடம் சலிப்பு ஏற்படும்.

வரலாற்றுப் பாடத்தைக் கற்கும்பொழுது மாணவர்களின் இணைவழிப் படிப்பு அதிகம் நடைபெறவேண்டியிருக்கின்றது. இவற்றையெல்லாம் மதிப்பிடவேண்டுமானால் ஆசிரியரின் உழைப்பு அதிகம் தேவைப்படும். எனவே, ஆசிரியர் **டிரையன்** (Tryon) கூறியுள்ள 'அச்சிட்ட சீட்டுத்திட்டம்' (Printed Card system) மேற்கொள்ளப்படத்தக்கதாகும். மாணவனின் பெயர், வகுப்பு, தேதி, அப் புத்தகத்தைப் படித்து முடிக்க எடுத்துக் கொண்ட நாள்கள், புத்தகத்தின் பெயர், படித்து முடித்த பக்கங்களின் எண்ணிக்கை போன்றவற்றைச் சீட்டின் தலைப்பில் அச்சிட வேண்டும். இவற்றின் அடியில் சீட்டின் குறுக்காகக் கிடைக் கோடு ஒன்று வரைந்திருக்கவேண்டும். இக் கோட்டிற்குக் கீழ்

இருக்கும் பகுதியின் பாதியிடத்தில் மாணவன் தான் படித்த புத்தகத்தில் கூறப்பட்டிருக்கும் சிறப்புற்றத் தலைவர்களின் குண இயல்புகளைக் குறித்து வரும்படிச் சொல்லவேண்டும். இச் சீட்டுகளை மாதம் ஒரு முறை அல்லது இருமுறை ஆசிரியரிடம் கொடுக்க வேண்டும். அதிக நேரம் செலவழிக்காமல், இச் சீட்டுகளை ஆசிரியர் திருப்பித் தரவேண்டும். அப்பொழுது வரலாறு தொடர்புள்ள புனைகதையை மாணவன் ஒப்புக் கொள்கிருனு அல்லது பாடத்தில் வரும் நிகழ்ச்சிகளோடு அவை ஒத்திருக்கின்றனவா அல்லது வேறுபட்டிருக்கின்றனவா போன்றவற்றை ஆசிரியர் மாணவர்களிடம் வாய்மொழியாகக் கேட்கவேண்டும். இவ்விதம் புனைகதைகளில் மாணவர்களின் ஆர்வம் அதிகரிக்கும். புனைகதைகளை முதலில் படித்துதான் **ராங்கே** (Ranke) என்னும் ஜெர்மானியர் சிறந்த வரலாற்று ஆசிரியரானுர் என்பதை நாம் மறக்கலாகாது.

**வினுக்கள்**

(1) மேற்கோள் புத்தகங்களைப் பயன்படுத்துவதன் நோக்கங்கள் யாவை?

(2) இணை வழிப்படிப்புக்கு ஏற்ற புத்தகங்களைக் கூறுக.

(3) இணைவழிப் படிப்பை நடத்தும் முறைகளை விவரிக்கவும்.

**(3) வரலாற்று மேற்கோள் நூலகம்** (Library for reference):

ஒவ்வொரு பள்ளியிலும் வரலாறு பாடத்திற்குத் தனி அறை இருக்கவேண்டும்.

**புத்தகங்களின் முதன்மை:** (i) அறிவியல் ஆய்வுக்கூடத்திற்குச் **சோதனைக் குழல்கள்** (test tubes) எவ்விதம் தேவைப்படுகின்றனவோ, அவ்விதமே புத்தகங்கள் வரலாறு கற்பிப்பதற்கு வேண்டப்படுகின்றன. கற்றலுக்குவேண்டிய அடிப்படை மூலம் புத்தகத்திலிருந்து மாணவர்களுக்குக் கிடைக்கின்றது. அதை விளக்கிக் கொள்வதற்குப் பிற துணைக்கருவிகள் பயன்படுகின்றன.

(ii) மாணவனின் கண்ணில்படும்படியாகப் புத்தகத்தை வைத்திருப்பதனுல், அவற்றைப் படிக்கவேண்டும் என்ற ஆவல் இயற்கையாகவே ஏற்படும். அவை எல்லாவற்றையும் படிப்பதற்கு நேரம் கிடைக்காது என்பது உண்மைதான். எனினும், புத்தகத்தின் மேல் அட்டையில் உள்ள தலைப்புகளை அறிமுகப்

படுத்திக்கொள்ள முடிகின்றது. ஆசிரியர்களின் பெயர்கள், புத்த கத்தின் தலைப்பு போன்றவையே படிப்பதன் முதற்படியாகும்.

(iii) எல்லா அனுபவங்களையும் மாணவர்கள் நேரடியாகப் பெறமுடியாது. சிலவற்றைப் பிறர் நிலை நின்று கற்கவேண்டும். இதற்கும் புத்தகங்களைப் படித்தே ஆகவேண்டும்.

(iv) வரலாற்றுப் பாடத்தைத் திறமையுடன் கற்பித்தலின் தன்மையைச் சோதிக்க வேண்டுமானால், வரலாற்றுப்பாட நூலகமே எடுத்துக்காட்டாக விளங்கவேண்டும். ஆர்வமில்லாத ஆசிரியர் தான் புத்தகங்களைப் பற்றிக் கவலைப்படமாட்டார். நல்ல முறை களைப் பின்பற்றிக் கற்பிக்கும் ஆசிரியர் நல்ல புத்தகங்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தியே தீரவேண்டும்.

**நூலகத்தை வளமடையச் செய்வது:** (i) ஆசிரியர்களின் துணைகொண்டு புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பது பற்றித் திட்டம் செய்யவேண்டும்.

(ii) வேண்டிய புத்தகங்களின் பெயர்கள், ஆசிரியர்கள், விலை, கிடைக்கும் இடம் போன்றவை அடங்கிய பட்டியலை உருவாக்கி வைத்துக்கொண்டு இருக்கவேண்டும். அடிக்கடி அதுபற்றிய விண் ணப்பங்களை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பவும் வேண்டும்.

(iii) தலைமை ஆசிரியருக்குவேண்டிய புத்தகங்களின் அவசி யத்தை எடுத்துரைத்து அவரது சம்மதத்தைப் பெறவேண்டும்.

(iv) பெற்றோர்கள் சங்கத்தில் நூலகத்தை வளம்பெறச் செய்வது பற்றிக்கூறி அவர்களின் ஆதரவையும் பெறவேண்டும்.

(v) உள்ளூரிலுள்ள நூலகங்களிலிருந்து வேண்டிய புத்தகங் களைக் கடனாக வாங்கி மாணவர்களின் உபயோகத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

**புத்தகங்களைத் தேர்ந்தெடுத்தல்:** வேண்டிய பணத்தைப் பெற்றதும் புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதை ஒரு பெரும் பிரச்சினை யாகச் செய்துவிடக்கூடாது. திறமையுள்ள ஆசிரியர் எனப்படுவோர் வேண்டிய புத்தகங்களைப் பற்றிய விவரங்கள் அடங்கிய பட்டியலை எப்பொழுதும் வைத்திருப்பவராவர். புத்தகங்களைத் தேர்ந் தெடுக்கும்பொழுது கீழ்க்காணும் ஏதுக்களைப் பின்பற்றவேண்டும்:

(அ) சமூகத்தின் தேவையை முதலாகக் கவனிக்கவேண்டும்.

(ஆ) மாணவர்களின் திறமைக்கு ஏற்பப் புத்தகங்களைச் சேகரிக்க முயலவேண்டும்.

(இ) புத்தகங்களின் வடிவையும் அளவையும் (format) கவனிக்கவும் வேண்டும். ஏடுகளைத் தைத்தல், படங்கள், அச்சுகளின் வடிவம், தாளின் தன்மை போன்றவற்றையும் கவனிக்கவேண்டும்.

(ஈ) மாணவர்களின் தேவையை அடிப்படையாகக் கொண்டு புத்தகங்களைச் சேகரிக்கவேண்டும். அவர்களுக்குத் தேவையில்லாதவற்றைச் சேகரித்து வைப்பதில் எவ்விதப் பலனும் ஏற்படாது.

(உ) தேர்ந்தெடுக்கும் புத்தகங்கள் ஆசிரியருக்கு நன்கு தெரிந்தவைகளாக இருக்கவேண்டும்.

**நூலகத்தில் இடம்பெறவேண்டிய புத்தகங்கள்**

ஆசிரியர் இ.பி. வெஸ்லியின் கருதுப்படி பின்வரும் பிரிவுகளில் புத்தகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வரலாறு நூலகத்தில் இடம் பெறவேண்டும்.

(i) **மேற்கோள் புத்தகங்கள்** (Reference books), **கலைக் களஞ்சியங்கள்** (Encyclopaedia), ஆண்டுப் புத்தகங்கள் (Year books), இராச்சியங்களின் கையேடு புத்தகங்கள் (State manuals), தேசப்படப் புத்தகங்கள் (Atlases), **வாழ்க்கை வரலாறு** புத்தகங்கள் (Biographies) போன்றவை.

(ii) **பாடப்புத்தகத்திற்கு இணையான புத்தகங்கள்** (Parallel texts): வகுப்பிற்கு நியமிக்கப்பட்டிருக்கும் புத்தகத்தைத் தவிர, அதற்கு இணையாக எழுதப்பட்டுள்ள பல புத்தகங்களையும் சேகரித்துவைக்கவேண்டும்.

(iii) **மூலப் புத்தங்கள்:** வரலாறு, நிலநூல், பொருளாதாரம், அரசியல் பாடங்கள் பற்றிய மூலப்புத்தகங்கள்.

(iv) **தனிப்பகுதிகளைச் சிறப்பாக எழுதப்பட்ட நூல்கள்:** (Specialized studies): வரலாற்றுப்பாடத்தின் சிலபகுதிகளைப் பல ஆசிரியர்கள் சிறப்பாக ஆராய்ந்து, எழுதியுள்ளனர். எடுத்துக் காட்டாகச் சிலவற்றைக் கூறலாம். **ஸர்க்கார்** எழுதிய முகலாயர் வரலாறு, **கோபாலன்** எழுதிய பல்லவர்கள் வரலாறு, **ஸீவல்** எழுதிய விஜயநகரப் பேரரசு போன்றவை.

(v) **வாழ்க்கை வரலாற்று நூல்கள்:** நம் நாட்டில் வரலாறு, தொடர்புள்ள தலைவர்களின் வாழ்க்கை வரலாறுபற்றிய நூல்கள்.

(vi) **உள்ளூர், அரசியல், வரலாறு, நிலநூல் புத்தகங்கள்:** மாணவர்கள் வாழும் உள்ளூர் பற்றிய நிலநூல், வரலாறு பற்றிய பாடப்பொருள் அடங்கிய தனிப்புத்தகங்கள்.

(vii) **புனைகதை** (Fiction): வரலாறு, நிலநூல்பற்றிய பாடப் பொருள்கள், நவீனமாகவும், கவிதையாகவும், பிரயாணக் குறிப் பாகவும், நாடகமாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. அத்தகைய நூல்களும் வரலாற்றுப் பாடநூலகத்தில் இடம்பெறவேண்டும்.

(viii) **ஆசிரியருக்கு உதவும் புத்தகங்கள்:** வரலாறு பற்றிய அதிகத் தகவல்களை அளிக்கும் புத்தகங்கள் ஆசிரியருக்கு உதவும். திறமையுள்ள மாணவன் சில சமயங்களில் பயன்படுத்தவும் கூடும்.

(ix) **துண்டு வெளியீடுகள், பருவ வெளியீடுகள்** (Pamphlets and periodicals): தற்கால நிகழ்ச்சிகளைக் கற்பிக்க உதவும் நாள் இதழ், துண்டு வெளியீடுகள், பருவ வெளியீடுகள் போன்றவைகளும் வானிலை அறிவிப்புகள், தேசிய நிலநூல் வெளியீடு (National Geographical Magazine) போன்ற படங்கள் நிறைந்திருக்கும் புத்தகங்களும் சேகரித்து வைத்தல் நடைபெற வேண்டும்.

**ஆசிரியரும் நூலகமும்:** ஆசிரியருக்கு நூலகத்தில் உள்ள புத்தங்களைப் பற்றிய செய்திகள் தெரிந்திருக்கவேண்டும். மாணவர்களுக்கு அவற்றில் பற்று ஏற்படும்படிச் செய்யவேண்டும். அதற்குப் பின்வரும் முறைகளை மேற்கொள்ளவேண்டும.

(ii) சில புத்தங்களை வகுப்புக்கு எடுத்துச் சென்று, அவற் றைப்பற்றிச் சில வார்த்தைகளை மாணவர்களுக்குக் கூறவேண்டும்.

(ii) மாணவர்களை அடிக்கடி நூலகத்திற்கு அழைத்துச் சென்று, புத்தங்கள் எந்த முறையில் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும், புத்தகப் பட்டியலை எவ்வாறு பயன்படுத்துவது என்பதையும் விளக்கிக் கூறவேண்டும்.

(iii) ஒப்படைத்த புத்தங்களைப்பற்றிய குறிப்பை மாண வர்கள் எழுதிவரும்படிக் கூறவேண்டும். வகுப்பில் அதுபற்றிக் கூறும்படி செய்தால், மாணவர்கள் புத்தகங்களைப் படிக்கவும், அது பற்றிப் பாடப்பொருளைக் கூறவும் பெருமை அடைந்துவருவர்.

**வினுக்கள்**

(1) வரலாற்று நூலகத்தின் இன்றியமையாதத் தன்மையை விளக்குக.

(2) வரலாற்றுப் பாட நூலகத்தை எவ்விதம் வளம்பெறச் செய்வீர்?

**(3)** வரலாற்று நூலகத்தில் இடம்பெறவேண்டிய நூல்கள் யாவை?

**(4) காட்சிக் கேள்விக் கருவிகள்** (Audio Visual Aids)

காட்சிக் கேள்விக் கருவிகள் என்ற சொற்களை உபயோகித்ததும் நாம் அசைவுப்படம், அசைவுப்படத்துண்டு, வானொலி போன்ற வற்றை நினைக்கிறோம். இம் மூன்றைத்தவிர இன்னும் பல துணைக் கருவிகளும் உள்ளன. அவை யாவன:

(1) நேரடியாக, பலனுடன் ஏற்படும் அனுபவங்கள் (Direct, purposeful experiences)

(2) மாதிரி உருவங்கள் போன்று ஏற்பாடு செய்யப்பட்ட அனுபவங்கள் (contrived experiences)

(3) நடித்தலால் ஏற்படும் அனுபவங்கள் (Dramatized experiences)

(4) செய்துகாட்டல் (Demonstration)

(5) சிறுதொலைப் பயணங்கள் (Field trips)

(6) காட்சிப் பொருள்களும், கண்காட்சிகளும் (exhibits and exhibitions)

**(7)** அசையாப்படங்கள் (Still pictures)

**(8)** தேசப்படங்கள் (maps), கருத்துப்படங்கள் (charts) போன்ற காட்சிக் குறிகள் (visual symbols).

**டாக்டர் எட்கார் டேல்** (Dr. Edgar Dale) என்னும் பேராசிரியர் காட்சிக் கேள்விக் கருவிகளை ஒரு கூர் உருளை வடிவத்தில் வகைப்படுத்தித் தந்துள்ளார். அவை கூர் உருளை அனுபவங்கள் என்று வழங்கப்படுகின்றன.

**பலன்கள்:** சரியான முறையில் காட்சிக் கேள்விக் கருவிகளை வகுப்பில் உபயோகித்தால் பின்வரும் பலன்கள் ஏற்படும்:

**(அ)** கருத்துச் சார்ந்த சிந்தனையை (conceptual thinking) வளர்க்க இவை உதவுகின்றன. மாணவர்களால் கூறப்படும்

பொருள் இல்லாத வார்த்தைகளின் எண்ணிக்கையைக் குறைக்கவும் ஏதுவாகின்றது.

(ஆ) மாணவர்களிடத்தில் தாங்கள் கற்கும் பாடங்களில் அளவிடமுடியாதவாறு ஆர்வத்தை ஏற்படுத்த உதவுகின்றன.

(இ) கற்றலின் பலன் நிலேயானதாக ஏற்படுகின்றது.

(ஈ) உண்மையான அனுபவங்களே அளிப்பதால் மாணவர்கள் தாங்களே செயலில் ஈடுபடுகின்றனர்.

(உ) மாணவர்களின் எண்ணங்கள் தொடர்ந்து வளர்ச்சியடைய ஏதுவாகின்றது.

(ஊ) பொருள்களின் கருத்தை மாணவர்கள் தெளிவாகக் கற்பதால் அவர்களின் சொற்களஞ்சியம் வளர்ச்சியடைகின்றது.

(எ) மற்ற முறைகளால் எளிதில் பெறமுடியாத அனுபவங்களே மாணவர்கள் அடைவதால் அவர்களின் கற்றல் ஆழ்ந்தும், திறம் பட்டும் நடைபெறுவதற்கும் உதவியளிக்கப்படுகின்றது.

**எவ்வாறு காட்சிக் கேள்விக் கருவிகளே உபயோகிப்பது?**

காட்சிக் கேள்விக் கருவிகளே நல்ல முறையில் பயன்படுத்துவதற்குப் பின்வரும் குறிப்புகளேக் கொடுக்கலாம்:

(அ) இக் கருவிகளேத் துணைக்கருவிகளாகக் கருதவேண்டுமேயொழிய கற்பித்தலுக்குப் பதிலாக இவை உள்ளன என்று கருதக்கூடாது.

(ஆ) அதிகப் பலனேத்தரும் கருவிகளேயே தேர்ந்தெடுக்க வேண்டும்.

(இ) கருவிகளே உபயோகிப்பதைப் பற்றித் திட்டமிட வேண்டும். நல்ல சந்தர்ப்பம் ஏற்படும் பொழுதுதான் கருவிகளின் உதவியை நாடவேண்டும்.

(ஈ) கருவிகளினுல் எவ்விதப் பலனேப் பெறவேண்டும் என்பதைப் பற்றி வகுப்பு மாணவர்களே எதிர்நோக்கி இருக்கும்படி செய்யவேண்டும். கருவிகளே உபயோகப்படுத்திய பிறகு, அது பற்றிய பயிற்சிகள், உரையாடல்கள், வினுக்கள் போன்றவற்றை ஆசிரியர் கொடுக்கவேண்டும்.

(உ) உபயோகிக்கத்தக்க கருவிகளே விளக்கிக் கூறி மாணவர்களுடன் உரையாடலில் ஈடுபடவேண்டும்.

(ஊ) கருவிகளின் உபயோகத்தினுல் ஏற்பட்ட பலனை அளவிடவேண்டும். கருவிகளைப்பற்றிய மதிப்பிடல் நடைபெற்ருல் மற்ற ஆசிரியர்களுக்கு உதவியளிப்பதாகவும் இருக்கும்.

**குறிப்பிடத்தக்க காட்சிக் கேள்விக் கருவிகள்**

**(1) தேசப்படங்கள் (Maps):** வரலாற்றுப்பாடம் கற்பிக்கும் பொழுது ஆசிரியர்கள் பின்பற்றவேண்டிய மேற்கோள் வாசகம் எது என்று சிந்திப்போமாஞல், 'வரலாறு அல்லது நிலநூல் பாடமானது தேசப்படம் அல்லது கருத்துப்படம் இல்லாமல் பூர்த்தியாகாது' என்பதாகும். இக் கூற்றை ஒத்து மாணவர்களின் மேற்கோள்வாசகமும் 'எந்தத் தேர்வும் தேசப்படம் அல்லது கருத்துப்படம் இல்லாமல் பூர்த்தியாகாது' என்று அமையும். எனவே, நிலநூல் அல்லது வரலாறு கற்பிப்பதில் தேசப் படம் இல்லாவிட்டால் அப் பாடங்கள் பொருளற்றதாக இருக்கும் என்பதை மாணவர்களும் ஆசிரியர்களும் உணரவேண்டும்.

**தேசப்படம் என்ருல் என்ன?**

(i) நாம் வாழும் நிலத்தின் மேற்பரப்பின் ஒரு பகுதியின் தெரிவிப்புத்தான் தேசப்படம் ஆகும்.

(ii) பாடப்பொருளை அறிவிக்கும் முறையில் சிக்கலானதும் (complicated) சுருக்கமானதுமான (condensed) முறைதான் தேசப்படமாகும்.

(iii) தன்னிடம் உள்ளடங்கியிருக்கும் பாடப்பொருளைத் தானே புலப்படச் செய்யாமல், சில சாதனங்களைப் பயன்படுத்தி மாணவர்கள் தெரிந்துகொள்ளும்படிச் செய்கின்ற ஒரு கற்பிக்கும் கருவியாகும்.

(iv) தேசப்படத்தைப் படம் என்று நாம் கருதக்கூடாது; ஆஞல், ஒரு தெரிவிப்பு (representation) என்று கொள்ளவேண்டும்.

(v) தேசப்படம் ஒரு பொருளின் உண்மையான நிலையைக் (Reality) குறிக்கவில்லை. ஆஞல், அதை உண்மையான பொருளின் அடையாளம் (symbol of the reality) என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

**(2) தேசப்படங்களின் செயல்கள் (Functions of maps):** தேசப் படங்களின்றி வரலாறு கற்பிக்க முடியாது. இயக்கநூல் அல்லது இயைபு நூல் கற்பிக்கப்படும்பொழுது ஆய்வுக் கூடங்களில் செய் கருவிகளும், மற்றையக் கருவிகளும் இல்லையேல் எவ்வித நிலை

ஏற்படுமோ, அதே நிலைதான் தேசப்படங்கள் இல்லாத வரலாற்று வகுப்பு அறையிலும் ஏற்படும்.

நிலநூல் கற்பித்தலுக்கும் தேசப்படம் இன்றியமையாததாக உள்ளது. ஸர் ஹாட்போர்டு மேக்கன்ஸி (Sir Hadford Mackenzie) என்னும் பேராசிரியரின் கூற்றுப்படி, 'நிலநூல் கற்பிப்போரின் சிறந்த கைக்கருவி தேசப்படம் ஆகும்.' பல புத்தகங்களில் எழுதி விளக்குவதை விட ஒரு தேசப்படத்தின்மூலம் கருத்துகளை எளிதில் விளக்கி விடலாம்.

தேசப்படங்களின் செயல்கள் கணக்கற்றவை. செய்திகளை நிலையாகக் குறித்து வைப்பதற்கும், தெளிவாகக் கூறுவதற்கும், ஒப்பிட்டுக் கூறவும், செய்திப் போக்குவரத்துத் தொடர்பு ஏற்படுத்தவும் தேசப்படங்கள் உதவுகின்றன.

மாணவர்களுக்கு நிலநூல், பொருளாதாரம், வெப்பதட்பம், அரசியல், வரலாறு போன்ற விவரங்களைப் புலப்படச் செய்வதே தேசப்படங்களின் முக்கியச் செயலாகும். தேசப்படங்களின் செயல்களில் கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

(i) **இடங்குறித்தல் (Location):** நகரங்கள், இராச்சியங்கள், மலைகள், மடுவுகள், பண்ணைகள், தொழில் நடைபெறும் இடங்கள், குடாக்கள், முனைகள், பாலைவனங்கள், சமவெளிகள், பெருஞ்சாலைகள், இருப்புப் பாதைகள், பள்ளிகள், மதநிலையங்கள், கோட்டைகள், போர்க்களங்கள் போன்றவற்றையெல்லாம் தேசப்படத்தில் இடங்குறித்துக் காட்டமுடிகின்றது.

(ii) **வகுத்து அமைத்தல் (Arrangements):** தேசப்படத்தின் செயல்களில் குறிப்பிட்டுக் கூறத்தக்க இரண்டாவது செயலானது இடம், உருவம், தனிச்சிறப்புக்குரியவை போன்றவற்றை வகுத்து அமைத்தலாகும். தமிழ்நாடு இந்திய உபகண்டத்தின் தென்பகுதியிலிருப்பதையும், கங்கை ஆறு வங்கக்கடலில் கலப்பதையும், கேரள இராச்சியம் இந்தியாவின் தென்மேற்குப் பகுதியிலிருப்பதையும், இதுபோன்ற மற்றவற்றையும் ஓர் இந்திய தேசப்படத்தில் குறித்துக் காட்டலாம். எனவே, ஒரு நாட்டின் தேசப்படம் அந்த நாட்டின் ஓர் உண்மையான படமாக விளங்குகின்றது.

(iii) **தொடர்புகள் அமைத்தல்:** இருப்பிடம், உருவம், பரப்பு போன்றவற்றிற்கு மேற்பட்டுள்ள பலவிதத் தொடர்புகளைத் தேசப்படத்தில் குறிப்பிட்டு விளக்கலாம். ஹட்ஸன் ஆற்றின் முகப்பில் துறைமுகம் ஏற்பட்டிருப்பது நியூயார்க் பட்டினத்தின் இருப்பி

டத்தை விளக்கும். பாலக்காட்டுக் கணவாய் வழியாக ஈரக்கசிவுள்ள காற்று வீசுவதால் கோயம்புத்தூரைச் சுற்றிப் பருத்தித் தொழிற் சாலைகள் ஏற்பட்டுள்ளன ஒவ்வொரு தேசப்படத்தையும் நாம் பார்த்தோமானால் பலவிதத் தொடர்புகளை அறியக்கூடும்.

(iv) **பல்வேறான விவரங்களை எடுத்துரைத்தல்** (Varied data): பலவேறான விவரங்கள் தேசப்படத்தின்மூலம் மாணவர்களுக்கு எடுத்துக்கூற முடிகின்றது. பல்வேறான இயற்கைத் தாவரங்கள், மழை அளவு, வெப்பநிலை, உலகத்தில் காணப்படும் பல இன மக்களின் தோற்றம், அரசியல் பிரிவுகள், தேர்தலின் முடிவுகள், மக்கள்தொகையின் பகிர்வு போன்றவற்றைத் தேசப்படங்களின் மூலம் விளக்க முடிகின்றது. தேசப்படமானது செய்திகளை எடுத்துரைப்பதோடு, அவற்றை மனத்தில் பதியும்படியும், விளக்கியும் கூறுகின்றன.

(v) **மாறுதல்களைக் காண்பித்தல்:** நிலம், வரலாறு, பொருளாதாரம், அரசியல், போன்ற துறைகளில் ஏற்படும் மாறுதல்களைத் தெரியப்படுத்துவதற்குத் தேசப்படங்கள் உதவுகின்றன. இவ் வேலையைச் செய்து முடிக்கப் பல வண்ணங்கள், அல்லது குறிகள் அல்லது தேதிகளைக் குறிப்பது போன்ற முறைகள் மேற்கொள் ளப்படுகின்றன.

**தேசப்படங்களை அமைப்பதில் மேற்கொள்ளப்படும் நுணுக்க முறைகள்** (Map techniques): தேசப்படங்கள்மூலம் பல விதச் செயல்களை விளக்கப் பல குறிகளும், விளக்க முறைகளும், சாதனங் களும் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றில் **ஐந்து** வித நுணுக்க முறைகளை இங்குக் கூறலாம்.

(i) **திசைகள்** (Directions): பூமியின் மேற்பரப்பிலுள்ள வெவ்வேறு இடங்களின் இருப்பிடங்களைக் குறிப்பிட்டுத் தெரிந்து கொள்ள பூமத்திய ரேகை உதவுகின்றது. மேலும் அவ் இடங்கள் பூமத்திய ரேகையிலிருந்து எவ்வளவு தூரம் வடக்கே அல்லது தெற்கே இருக்கிறதென்பதைச் சரியாக விளக்க அட்ச ரேகைகள் உபயோகப்படுகின்றன. மேலும், வட-துருவத்திலிருந்து தென் துருவம் வரையிலும் அட்சரேகைகளையும், பூமத்திய ரேகை யையும் வெட்டிக்கொண்டு பல ரேகைகள் செல்லுகின்றன. இவற்றிற்குத் தீர்க்கரேகைகள் அல்லது மத்தியான்ன ரேகைகள் என்று பெயர். கிரீனிச் வழியாகச் செல்வது பிரதம மத்தியான்ன ரேகையாகும். கிரீனிச் ரேகைக்கு மேற்கில் 180 ரேகை களும், கிழக்கில் 180 ரேகைகளும் உள்ளன. 180ஆவது கிழக்குத் தீர்க்கரேகையும், 180ஆவது மேற்குத் தீர்க்கரேகையும்

ஒன்றேயாகும் இந்தக் கற்பனைக் கோடுகள் எல்லாம் பூமி உருண்டைகளிலும் (Globes) வரையப்பட்டிருக்கின்றன. எனவே, இக் கோடுகளைக்கொண்டு ஓர் இடத்தைக் குறிப்பிட்டுக் கூற முடிகின்றது.

(iii) **தூரம்** (Distance): ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு இடையில் உள்ள தூரத்தைத் தேசப்படம் கூறுகின்றது. இத் தூரத்தைத் தெளிவுறுத்த மூன்று முறைகள் பின்பற்றப் படுகின்றன. அவையாவன்.

(அ) பல வார்த்தைகளினால் ஆன ஓர் அறிக்கை மூலம் ஓர் இடத்தின் தூரத்தைக் கூற முடிகின்றது. எடுத்துக்காட்டாக 'ஒரு செ.மீ. 100 கி.மீ.ஐக் குறிக்கும்' என்பதைக் குறிப்பிடலாம்.

(ஆ) படத்தின் ஒரு புறத்தில் ஓர் அளவுக்கோடு வரைந்து அதைப் பல பிரிவுகளாக்குதல். ஒவ்வொரு பிரிவும் ஒரு குறிப்பிட்ட தூரத்தைக் குறிக்கும்.

(இ) பிரதிபின்ன முறை: 1/100 என்னும் பிரதிபின்னத்தை எடுத்துக்கொள்வோம். உண்மையான அளவில் 100-ல் ஒரு பங்கு படத்தில் காட்டப்பட்டிருப்பதாகும். இதில் பகுதி எண் (numerator) படத்தின் நீளத்தையும், தொகுதி எண் (denominator) நிலத்தின் மேற்பரப்பின் உண்மையான நீளத்தையும் குறிக்கின்றதைக் கவனிக்கவேண்டும்.

**(3) வண்ணம் தீட்டுதல்:** பல வண்ணங்களைத் தீட்டி அதன் மூலம் நிகழ்ச்சிகள், விவரங்கள், சிறப்புக் கூறுகள் போன்றவற்றைத் தெரியப்படுத்துகின்றனர். ஓர் இடத்தின் உயரம், பொருள் உற்பத்திப் பகுதிகள், அரசியல் பிரிவுகள், தட்ப வெப்ப மண்டலங்கள், மக்கள்தொகை அடர்த்தி, மக்கள் இனங்களின் வகைகள், பயிராகும் பொருள்கள் போன்றவற்றைப் பல வித வண்ணங்களைப் படத்தில் தீட்டி விளக்கப்படுகின்றன.

**(4) குறிகள்** (Symbols): விபரங்களைப் படம்மூலம் விளக்குவர். பசுவின் படம் கறவைமாடுகள் வளர்க்கும் இடத்தையும், ஒரு போர் வீரனின் படம் இராணுவத்தையும், புகைபோக்கித் தொழிற்சாலைகளையும்; கட்டடங்கள் நகரத்தையும் குறிக்கின்றன. நீண்ட சிவப்புக் கோடுகள் சாலை வழிகளையும், நீலக்கோடு ஆறுகளின் போக்குகளையும், பழுப்புப் பகுதி பீடபூமியையும் குறித்துத் தேசப்படங்கள் அமைக்கப்படுகின்றன,

**தேசப்படங்களின் வகைகள் (Kinds of maps)**

(i) **தேசப்படப்புத்தகம்** (Atlas): வரலாறு கற்கும் ஒவ்வொரு மாணவன் கையிலும் தேசப்படப்புத்தகம் (Atlas) இருக்கவேண்டும். 'ஆசிரியரின் மேற்பார்வையில் மாணவர்களை உலகத்தின் பல பகுதிகளுக்கு அழைத்துச் செல்லும் மாயவித்தை சமுக்காளம் போன்றது' தேசப்படப்புத்தகமாகும்.

'மேற்கோள் புத்தகமாக இருக்கின்றது; ஓர் அகராதியாகவும் பயன்டுகின்றது'. புதிய பெயர்கள், புதிய தொடர்புகள் யாவற்றையும் தேசப்படப் புத்தகத்தில் உறுதி செய்து கொள்ளவேண்டும். தேசப் படம் பற்றிய பன்முறைப்பயிற்சி (map drill) அளிக்கவும் தேசப் படப் புத்தகங்கள் வேண்டப்படுகின்றன. மேலும், பாடப்பொருளை வலியுறுத்திக் கூறும்பொழுது தேசப்படப் புத்தகத்தையும் இணைத்து உபயோகிக்கவேண்டும். கற்றலின் நேரமும் சிக்கனப் படுத்தப்பட்டு, மாணவர்களிடத்தில் படிக்கும் திறன் வளரச் செய்ய தேசப்படப் புத்தகங்கள் உதவுகின்றன.

(ii) **பாடப்புத்தகத்திலுள்ள தேசப்படங்கள்** (The maps in text books): பள்ளிக்கூடப் பாடப்புத்தகத்தில் தேசப்படங்கள் உள்ளன. மாணவர்கள் பாடங்களை நன்கு விளங்கிக் கொள்ளும் வகையில் அப் படங்கள் உதவுகின்றன. அவற்றை உபயோகிப்பது பொருத்தமானதாகவும், வசதியானதாகவும் இருக்கின்றது.

அவை பாடத்தோடு சேர்த்து அளிக்கப்படுவதால், அப் படத்தின் தொடர்பை மாணவர்கள் நன்கு விளங்கிக் கொள்வர். அதிகச் செய்திகளை இவ்விதப் படங்களில் நெருக்கமாகக் குறிக்கக் கூடாது. பாடங்களைக் கற்பிக்கும் பொழுது இப் படங்களின்மீது மாணவர்களின் கவனத்தைத் திருப்புதல் வேண்டும்.

(iii) **படங்கள் குறியிடப்பட்டுள்ள தேசப்படங்கள்** (Pictorial maps): பொருளாதாரம், நிலநூல், வரலாறு போன்ற பகுதிகளைக் கற்பிப்பதற்குப் படங்கள் குறியிடப்பட்டுத் தயாரித்திருக்கும் தேசப் படங்கள் வகுப்பறையில் அதிகமாக உபயோகிக்கப்பட்டு வருகின் றன. இளம் மாணவர்களிடத்தில் பாடத்தில் கவர்ச்சியை இப் படங் கள் ஏற்படுத்துகின்றன. கருத்துகளை நன்கு புரிந்துகொள்ளும் படியும் இவை உள்ளன. எடுத்துக்காட்டாகப் பின்வருவன வற்றைக் கூறுவோம். மரம் வெட்டும் தொழில் நடைபெறும் இடத்தில், மரம் வெட்டுவதைப்போன்ற படமும்; மீன் பிடித்தல் அதிகம் நடைபெறும் பகுதிகளை விளக்க அவ்விடங்களில் மீன்கள் படம் வரைந்தும்; தொழிற்சாலைகள் செறிவுற்றிருக்கும் பகுதிகளில்

தொழிற்சாலைப் புகைப்போக்கிகள் அடங்கிய படத்தையும் வரைந்து காட்டும் முறை செய்திகளை எளிய முறையில் குழந்தைகளுக்கு அளிக்கின்றது.

(iv) **சுவரில் மாட்டப்படும் பெரிய அளவுப்படங்கள்** (Wall maps): ஒவ்வொரு ஆசிரியருக்கும் வகுப்புக்குச் செல்லும்பொழுது சுவரில் மாட்டும் தேசப்படத்துடன் செல்லும் வழக்கம் நமக்கு நன்ருகத் தெரியும். பெரிய அளவுப் படத்தில் அரசியல் பிரிவுகளைக் குறிக்கும் படங்கள் (political maps) நமக்கு அதிகப் பலன் அளிக்கவல்லதல்ல. இயற்கை அமைப்புகளைக் கூறும் படங்களை (physical maps) நாம் அதிகமாக வகுப்பறையில் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு கண்டத்தையும் பற்றிய இயற்கை அமைப்புப் படம் வரலாற்றுப்பாட அறையில் இருக்கவேண்டும். சுவரில் மாட்டும் பெருமளவுப்படங்கள் கீழ்க்காணும் பயனுடையனவாக இருக்கின்றன:

(அ) எளிய முறையில் உருவாக்கப்பட்டிருப்பதால் எல்லோருக்கும் நன்ருக விளங்கும்.

(ஆ) வகுப்பில் பாடம் வளர்ச்சியடைந்து கொண்டு செல்லும் பொழுது, சுட்டுக் கோலால் பாடத்துடன்கூடிய இடத்தை அல்லது சுருக்கத்தைப் படத்தில் குறித்துக்காட்டி மாணவர்கள் மனத்தில் பதியும்படிச் செய்யலாம்.

(இ) குழுவின் கவனத்தைப் (group attention) பெற முடிகின்றது.

(v) **எல்லைக்கோடு மட்டும் வரையப்பட்டுள்ள தேசப்படங்கள்:** (Black Board outline maps): கறுப்புத்தாளில் வண்ணத்திஞல் எல்லைக்கோடுகள் தீட்டப்பட்டுள்ள படங்கள் வரலாறு, நிலநூல் கற்பித்தலுக்கு இன்றியமையாதவைகளாக இருக்கின்றன. இப் படங்கள் கருநிறமுடையதாக இருப்பதால் கரும் பலகை தேசப் படம் என்றும் வழங்கப்படுகின்றன. பாடம் முடிந்ததும் சீமைச்சுண்ணக்கட்டியினுல் குறித்தவற்றை அழித்து விடவும் முடிகின்றது. ஒவ்வொரு நாடு பற்றிப்பல எல்லைக் கோடுப் படங்கள் இருக்கவேண்டும். வகுப்பறையில் பாடங்களை விளக்கிக் கூறும்பொழுது, முக்கியப் பாடப்பொருள்களை இப் படத்தில் குறித்தால் நன்ருக விளங்கும். பாடம் வளர்ச்சியடையும்பொழுது, இப் படமும், பூர்த்தியாகிக் கொண்டு வரும். மாணவர்களும் தங்கள் குறிப்புப் புத்தகத்தில் இப்படங்களை வரைந்துகொள்ள முடிகின்றது. தாங்கள் கற்கும் பாடத்தின் பாடப்பொருளை நன்ருக அறிந்து கொள்ளும்படி இப் படங்கள் மாணவர்களுக்கு உதவியாக உள்ளன,

**தேசப்படங்கள் பற்றிய பயிற்சிகள்** (Map Exercises): 'செய்து கற்றல்' என்னும் கொள்கைக்கு ஏற்பப் படங்கள் வரையும்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. தேசப்படங்களை வரைவதினால்தான், அப் படங்களின் கருத்துகளை அறிந்து கொள்ளமுடியும்.

இப் பயிற்சிகளை மாணவர்களுக்கு அளிக்கும்பொழுது ஐந்து விதிகளைப் பின்பற்றவேண்டும்:

(அ) தேசப்படங்கள் எக்காரணம் முன்னிட்டும் 15·24 செ.மீ. நீளம், 15·24 செ.மீ. அகலம் அளவுக்குக் குறைந்திருக்கக்கூடாது.

(ஆ) தேசப்படங்களைச் சுற்றிலும் செவ்வக வடிவில் எல்லைக் கோடுகள் இருக்கவேண்டும்.

(இ) எல்லைக்கோடுகளும், இயற்கைப் பிரிவுகளும் மையினால் குறிக்கப்படவேண்டும்.

(ஈ) ஒவ்வொரு படமும் அளவு விகிதப்படி வரையப்பட வேண்டும்.

(உ) குறுக்குக்கோடுகளும், அதிக எழுத்துகளும் ஒரே படத்தில் அளவுக்கு மீறிய முறையில் குறிப்பிடுதல் கூடாது.

**பயிற்சிகளின் வகைகள்**

**(1) பலமுறை:** ஒப்படைத்த படத்தை ஒட்டி மாணவர்கள் தங்கள் குறிப்புப் புத்தகத்தில்வரைதல். இதனால் தாங்கள் படிக்கும் நாட்டைப் பற்றிய உருவம், அமைப்பு போன்றவற்றை நன்றாக மாணவர்கள் உணருவார்கள். ஆனால், இவ்விதப் பயிற்சிகள் அளவுக்கு மீறியதாக இருக்கக்கூடாது. தேசப்படங்களை வரை தலே நாம் வரலாற்றுப்பாடம் கற்பதன் நோக்கமாக இருக்கக் கூடாது. நம் நோக்கத்தை அடைவதற்கு அது ஒரு வாயிலாக இருப்பதை நாம் உணரவேண்டும்.

நாம் கொடுக்கும் பயிற்சி திட்டவட்டமானதாக இருக்க வேண்டும்.

**(2) எல்லைக்கோட்டுப் படங்களைப் பூர்த்தி செய்தல்:** எல்லைக்கோட்டுப் படங்களின் பிரதிகளை மாணவர்களுக்கு அளித்து, பாடப்பொருளைக் குறிக்கும்படி பயிற்சி அளித்தல் விரும்பத்தக்க முறையாகும். நகரங்களின் இருப்பிடம், ஆறுகளின்

போக்குகள், போர்க்களங்கள், வரலாறுபற்றிய ஞாபகச்சின்னங்கள் உள்ள இடங்கள் போன்றவற்றை மாணவர்களை எல்லைக்கோட்டுப் படத்தில் குறிக்கும்படிப் பயிற்சி அளிக்கவேண்டும்.

**(3) ஞாபகத்திலிருந்து தேசப்படங்களை வரையும் பயிற்சிகள்:** வகுப்பில் பாடம் நடத்திய பிறகு மாணவர்களைத் தேசப்படப் புத்தகத்தையும், மற்ற தேசப்படங்களையும் பார்க்காமல், ஞாபகத்தினால் அப் பாடத்துடன் தொடர்புள்ள படத்தை வரையும்படி கூறுதல். இதனால் கற்ற பாடத்தின் பாடப்பொருளைக் குழந்தைகள் தங்கள் மனத்தில் என்றும் நிறுத்தி வைத்திருக்க முடிகின்றது.

**(4) புதுப்பாங்கான தேசப்படங்களை வரையும்படியான பயிற்சிகள்:** தங்கள் இச்சைப்படி, கற்ற கருத்தை விளக்குவதற்குத் தேசப்படம் வரையும் பயிற்சியை மாணவர்களுக்கு அளிக்கவேண்டும். எடுத்துக்காட்டாகப் பின்வரும் பயிற்சிகளைக் கூறலாம் தங்கள் இராச்சியத்தின் மந்திரிகளின் மாவட்டங்களை தேசப்படத்தில் குறிப்பிடுதல், தங்கள் ஊரில் ஏற்பட்டுள்ள தொழிற்சாலைகள் அல்லது மாணவர்களின் இல்லங்கள் போன்றவற்றையும் படத்தில் குறிப்பிடுதல்.

தேசப்படங்களை உபயோகிப்பதனால் வரலாறு அல்லது நில நூல் அல்லது பொருளாதாரம் போன்ற அறிவைப் பெறும்படி அவை உதவவேண்டும். இப் படங்கள் அழகாக இருப்பதைவிட, திருத்தமுடையதாக இருக்கவேண்டும்.

W. H. மேஸ் (W. H. Mace) கூறுவதுபோல் 'தேசப்படங்களை உபயோகிப்பதன் நோக்கம் எழிலுணர் மனவெழுச்சி (aesthetic emotion) ஏற்படுவதற்குப் பதிலாக வரலாறு அல்லது நிலநூல் பற்றிய கருத்து உருவாக்குவதற்கு உதவுவதாக இருத்தல்வேண்டும்.

## (2) பூமி உருண்டை (Globe)

**சிறப்பு இயல்புகள்:** (i) பூமி உருண்டை என்பது பூமியின் மாதிரி உருவம் ஆகும். அதன்மேல் பூமியின் தேசப்படம் வரையப் பட்டிருக்கும். தட்டையான படத்தில் பூமியின் மேற்பரப்பைத் தெரிவிப்பதைவிட பூமிஉருண்டையில் திருத்தமாகத் தெரிவிக்க முடியும். பூமி உருண்டை நிலநூலின் திறவு கோலாகும். உலகம் உருண்டை வடிவமானது என்னும் அடிப்படையான உண்மையை விளக்குவதற்குப் பூமி உருண்டையைத் தவிர வேறு ஒரு துணைக் கருவியும் இல்லை. தீர்க்கரேகை, அட்சரேகை போன்றவற்றைக் கற்பிப்பதற்கும் பூமி உருண்டை வேண்டியதாகவுள்ளது.

(ii) பூமி உருண்டை எளிமையாக இருப்பதால் மாணவர்களுக்கு உதவியளிக்கக்கூடிய வற்றாத மூலப்பொருளாக இருக்கின்றது. மாதிரி உருவம், தேசப்படமும் சேர்ந்த கட்டுக் கருவிதான் பூமி உருண்டையாகும்.

(ii) குழந்தைகள் அடிக்கடி உபயோகிப்பதால் வீணாகாதபடி இருக்கவல்ல உறுதியான பூமி உருண்டைகளை வாங்கவேண்டும்.

(iii) 30·48 செ.மீ. முதல் 60·96 செ.மீ. வரையிலும் விட்ட அளவு உள்ள பூமி உருண்டை அதிகமாகப் பயனுடையதாக இருப்பதால், அத்தகைய பூமி உருண்டைகளைச் சேகரிக்கவேண்டும்.

(iv) பூமி உருண்டையில் செய்திகள் நெருக்கமாக அளிக்கப் படாமலிருக்கவேண்டும். இயற்கைப் பிரிவுகளைப்பற்றியும், அரசியல் பிரிவுகளைப்பற்றியும் விளக்கம் தரும் தனிபூமி உருண்டைகளை நாம் உபயோகிக்கவேண்டும்.

(v) பூமி உருண்டையில் தீட்டப்பட்டிருக்கும் எண்ணங்கள் உயர்ந்த முறையில் இருத்தல்வேண்டும்.

(vi) பூமி உருண்டையில் எழுதப்பட்டிருப்பவை நன்றாகப் படிக்கமுடியும் முறையில் இருக்கவேண்டும்.

(vii) பூமியின் மறைவுபொருள்களை எளிமைப்படுத்திக் கூறுவதுதான் பூமி உருண்டையெனப்படும்.

(viii) பூமியைப்பற்றி நாம் பெற்றிருக்கும் கருத்துக் கோடலை விவரிப்பதற்குப் பூமி உருண்டைப்போல் உதவக்கூடிய கருவி வேறு ஒன்றை நாம் பெறவே முடியாது.

**உபயோகங்கள்:** வரலாற்றுப் படத்தில் ஓர் இடத்தில் இருப்பிடம், அளவு, தூரம், உருவம் போன்றவற்றை விளக்கிக்கூற பூமி உருண்டை தேவைப்படுகின்றது. இரண்டு இடங்களின் தொடர்புகளை ஒப்பிடும்பொழுது, தேசப்படத்தையும், பூமி உருண்டையையும் சேர்ந்தாற்போல் உபயோகிக்கவேண்டும். ஒரு கண்டத்தின் இயற்கைப் பிரிவுகளை ஒப்பிடும்பொழுது, தேசப் படத்தையும், பூமி உருண்டையையும் சேர்ந்தாற்போல் உபயோகிக்கவேண்டும். ஒரு கண்டத்தின் இயற்கைப் பிரிவுகளைக் கற்பிக்கும்பொழுது, முதலில் அக்கண்டத்தைப் பூமி உருண்டையில் குறிப்பிட்டு மாணவர்களுக்குக் காட்டவேண்டும். பிறகுதான் தேசப்படத்தில் குறிப்பிடவேண்டும்.

**பூமி உருண்டைகளைத் தேர்ந்தெடுப்பதில் கவனிக்கவேண்டிய வைகள்**

(i) கற்பலகைக் கோளம், இயற்கைக் கோளம், அரசியல் கோளம் போன்றவற்றைச் சேகரித்து வரலாற்றுப்பாட அறையில் வைக்கவேண்டும். திசைகள், இரவு, பகல் ஏற்படுதல், பூமியின் சலனம் போன்றவற்றைக் கற்பிக்கக் கற்பலகைக் கோளம் (slated-globe) தேவைப்படுகின்றது.

**(3) கருத்துப்படங்கள்: விளக்கப்படங்கள், வரைபடங்கள்** (Charts, diagrams and Graphs)

(i) **கருத்துப்படங்கள்:** பெரிய அளவு தேசப்படங்களை உபயோகிப்பதால் எவ்விதப்பலன்கள் ஏற்படுகின்றனவோ அவ்வளவும் கருத்துப்படங்களின் மூலமும் ஏற்படுகின்றன.

பாடப்பொருள்களை ஓவியத்துக்குரிய முறையில், படம் போலமைந்த முறையிலும் அமைப்பதைத்தான் கருத்துப்படங்கள் (Charts)என்று கூறுகின்றோம்.

கருத்துப்படங்களில் மூன்று வகைகள் உள்ளன:

**(அ) காலவரிசைப்படி அமைத்த கருத்துப்படங்கள்** (Chronological Charts)

இணையான இரண்டு கோடுகள் அடங்கிய பத்தியைப் பல பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியும் ஒரு குறிப்பிட்ட கால அளவைக்குறிக்கும்படி வரைதல், அப் பகுதியில் முக்கிய நிகழ்ச்சிகளின் தேதியைக் குறித்து அதற்கு இணையாகவுள்ள கோட்டில் அவற்றோடு தொடர்புள்ள அரசர்கள், ஆசிரியர்கள், நாடுகள் அல்லது நிகழ்ச்சிகளைக் குறித்துப்படம் வரைதல். இவ்விதப் படங்கள் கால வரிசையையும், தொடர்புகளையும் கற்க உதவியளிக்கின்றன.

**(ஆ) முறை செய்த கருத்துப்படங்கள்**

அரசாங்கத்தின் அமைப்பு, நகர ஆட்சியின் அமைப்பு மத்திய அரசாங்கம், இராச்சியத்தின் அரசாங்கம், நகராட்சி போன்றவற்றிற்கிடையே அதிகாரங்கள் பகிர்ந்திடப்பட்டிருத்தல் போன்ற பாடப்பொருள்களைப் படங்களின்மூலம் தெரியப் படுத்தலாம். ஐக்கிய நாட்டுச் சங்கத்தின் அமைப்பும் அதன் பல பிரிவுகளையும் கருத்துப்படத்தில் விளக்கப்பட்டிருப்பதை ஓர் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

**(ii) ஓடை அல்லது மரம் வடிவில் அமைந்த கருத்துப் படங்கள்**

ஒரு செயல் முறை (process) அல்லது கருத்து எவ்வாறு விரிவடைகின்றது என்பதையும்; மத்திய அரசாங்கத்தின் வரவு இனங்களை விளக்கவும் மர உருவக் கருத்துப்படம் உபயோகிக்கப்படுகின்றது. இதற்கு மாறாக, பல்கருத்துக்கள் ஒன்று சேர்ந்து எவ்வாறு ஒரு பொருளாக உருவாகின்றது, ஓர் இராச்சியத்தின் வருமானம் எவ்விதம் செலவிடப்படுகின்றது என்பதையும், பல காரணங்கள் ஒன்று சேர்ந்து போர் நிகழ்கின்றது என்பதை விளக்கவும் இவ்விதப்படங்கள் வகுப்பறையில் உபயோகிக்கப்படுகின்றன:

(iii) **வரைபடங்கள்** (Graphs): வரைபடங்களைப் பார்த்தவுடனே அதில் உள்ளடங்கியிருக்கும் கருத்து நம் மனத்தில் வெளிப்படையாகத் தெரியவருகின்றது. வெகு எளிய முறையில் வறண்ட விவரங்களைப் பார்த்ததும் புரிந்துகொள்ளும் முறையில் வரைபடங்களில் மாற்றி அமைக்கப்படுகின்றன. எனவே, வரைபடங்கள் ஒரு வம்சத்தின் எழுச்சி, வீழ்ச்சி, வெப்ப தட்பம், உற்பத்தியின் வளர்ச்சி போன்றவற்றை விளக்க உதவுகின்றன.

**(4) கரும்பலகை** (Black Boards)

வரலாற்றுப்பாடம் கற்பிக்க இன்றியமையாத துணைக்கருவி கரும்பலகையாகும். மற்ற எல்லாத் துணைக்கருவிகளுக்கும் கரும்பலகை ஒரு துணைக்கருவியாக இருக்கின்றது.

பள்ளிகளில் தேவைப்படும் தளவாடப்பொருள்களில் மிகவும் உபயோகமானது கரும்பலகையேயாகும். அது வேலைசெய்ய, நாம் வேலையில் ஈடுபடவேண்டும். அதை ஓர் உயிருள்ள உதவியாளன் என்றுதான் கருதவேண்டும். ஆசிரியரின் எண்ணத்தைச் சுழலும் வேகத்தில் பிரதிபலிக்கச் செய்கின்றது. ஆசிரியருடன் சேர்ந்து உழைக்கின்றது. விளக்கப்படங்கள் போன்றவை நம் முன் வளர்ந்து, முக்கிய கருத்துகளை வலியுறுத்தவும் கரும்பலகை உதவுகின்றது.

**பயன்கள்:** பின்வரும் காரியங்களுக்குக் கரும்பலகை பயன்படுகின்றது:

(i) பலவிதமான வினாக்கள், பாடச்சுருக்கம், தேசப்படங்கள், வரைபடங்கள், குறிப்புத்திட்டங்கள் (Sketches) போன்றவற்றைக் கரும்பலகையில் வரைந்து வகுப்பிலுள்ள மாணவர்கள் எல்லோரும் கற்பதற்கு உதவியாக இருக்கின்றது.

(ii) மாணவர்களுக்கு அறிமுகம் ஆகாத புதிய பொதுமை கருத்துகள் (New concepts) கரும்பலகையில் எழுதப்பட்டு உச்சரிக்கப்படவும் உதவுகின்றது.

(iii) மாணவர்களுக்கு அளிக்கவேண்டிய ஒப்படைப்புகளைக் கரும்பலகையில் எழுதி, மாணவர்கள் செய்யவேண்டியவற்றைத் திட்டமாகத் தெரியும்படி செய்யவும் உதவுகின்றது.

(iv) ஒவ்வொரு மாணவனுக்கும் கரும்பலகையில் எழுதும் வாய்ப்பு அளிக்கவேண்டும். தானாகச் செயல்படுதல், தன் வெளியீடு (Self-expression) போன்ற திறமைகளை ஊக்குவிக்கக் கரும்பலகை உதவுகின்றது. மாணவர்கள் கற்கும் பாடப்பொருளை வகைப்படுத்தி வெளியிடக் கரும்பலகை ஒரு கருவியாக அமைகின்றது. மாணவர்கள் கரும்பலகையில் எழுதும் சுருக்கத்தை மற்ற மாணவர்கள் மதிப்பிட்டுக் கூறும்படிச் செய்யவேண்டும். ஆசிரியரும் இவ்விதச் சொல்லாடுதலில் ஈடுபடுதல் அவசியமானதாகும்.

**கரும்பலகையை பயன்படுத்துவதில் கவனிக்கவேண்டியவைகள்**

(i) வகுப்பில் கரும்பலகை சுத்தம் செய்யப்பட்டு இருக்க வேண்டும். பளபளப்பாகவும் அல்லது பழுப்பு நிறமாக மாறினதுமான கரும்பலகைகள் எண்ணெய் தீட்டப்படுதல் வேண்டும்.

(ii) நாம் நன்றாகவும், தெளிவாகவும் எழுதவேண்டும். கடைசி பெஞ்சியில் இருக்கும் மாணவனுக்கும் தெரியும்படி பெரிய வடிவில் எழுதவேண்டும்.

(iii) கரும்பலகையின் முன் நின்றுகொண்டு அதில் எழுதப்பட்டிருப்பதை ஆசிரியர் மறைத்துக்கொள்ளலாகாது.

(iv) சிக்கல் நிறைந்த தேசப்படங்கள், அல்லது கருத்துப் படங்களை வரைவதற்கு அதிகக்காலம் தேவைப்படுமானால், வகுப்புத் துவங்குவதற்குமுன்பே அவற்றைச் செய்து முடிக்க வேண்டும். அதிக நேரம் மாணவர்கள் காத்திருக்கும்படி கரும்பலகைப் பயிற்சி அமையக்கூடாது. கரும்பலகை விளக்கப்படம் மாணவர்கள் ஒத்துழைப்பின் பேரிலும், அவர்கள் முன்னிலையிலும் வளர்ச்சியடைய வேண்டுமாயின், அத்தகைய செயல்களை வகுப்பிலேயே நடத்தவேண்டும். இதற்காகச் செலவிடப்படும் காலம் வீணாக்கப்பட்டதாகக் கருதக்கூடாது.

(v) படங்களை அழகுபடுத்துவதற்கும், திட்பம் வாய்ந்ததாத ஆக்குவதற்கும் அதிகக்காலம் செலவிடக்கூடாது.

(vi) தேவைப்படாத பாடப்பொருள்களை யெல்லாம் கரும் பலகையில் எழுதுவதைத் தவிர்க்கவேண்டும்.

(vii) வகுப்பறையில் ஆசிரியருக்கு இடப்பக்கத்தில் கரும் பலகை இருத்தல் சிறந்தது. கரும்பலகையின்மீது விழும் ஒளியினுல் எதிரொளி ஏற்படாவண்ணம் அமைந்தால்தான் கரும் பலகையில் எழுதப்பட்டவற்றை மாணவர்கள் எளிதாகக் காணக்கூடும்.

## (5) அறிவிப்புப் பலகை (Bulletin Board)

மாணவர்கள், ஆசிரியர்கள் உபயோகிக்கும் பொருட்டு வகுப்பு அறையில் அறிவிப்புப் பலகைக்கு அதிக இடம் ஒதுக்கவேண்டும். செய்திகளை வெளியிடவும், நாளிதழ் துண்டுகளை ஒட்டவும், சில படங்களைப் பிறர் பார்க்கும்படி காட்டவும் அறிவிப்புப்பலகைகளை உபயோகிக்கவேண்டும்: பின்வருவனவற்றிற்கு அறிவிப்புப் பலகைகள் தேவைப்படுகின்றன:

(அ) பாடத்தில் கவர்ச்சியை ஏற்படுத்தவும்,

(ஆ) மாணவர்களின் கலைஆர்வத்தையும், உருவாக்கும் திறமையையும் வெளியிடவும்,

(இ) வகுப்பில் நடத்திய பாடத்தின் பின்பற்றியச் செயலைச் செய்யவும்,

(ஈ) பொறுப்பு, உடைமை போன்றே வகுப்பு உணர்ச்சியைத் தூண்டவும்,

(உ) நாளிதழ் துண்டுகள், படங்கள், சுவரொட்டி விளம் பரங்கள், உலகத்தின் பலபகுதிகளில் பிரச்சினைகளை ஏற்படுத்தும் செய்திகள் (Hot-spot-map) அறிவிப்புகள், மாணவர்கள் செய்து முடித்த பயிற்சிகள் போன்றவற்றை வெளியிடவும், அறிவிப்புப் பலகைகள் உபயோகிக்கப்படவேண்டும்.

அறிவிப்புப்பலகையில் மூன்று வகைகள் உள்ளன. அவை யாவன:

நிலையான அறிப்புப் பலகை, நகர்த்தும்பலகை கரும் பலகைக்கு மேல்புறத்தில் கம்பிகளை அமைத்துப் படங்களை மாட்டி வைக்கும் முறைபோன்றவை. இவற்றில் நிலையாக ஓர் இடத்தில் அமைக்கப்படும் அறிவுப்புப்பலகை எல்லோராலும் விரும்பப் படுகின்றது.

## (6) படங்கள் (Pictures)

வரலாறு கற்பிப்பதில் படங்களுக்குச் சிறந்த துணைக்கருவியாக உபயோகப்படுகின்றன. பாடப்பொருளை வாய்மொழிமூலம் பத்து தடவைகள் சொல்வதற்குப் பதில் ஒரு படத்தின் மூலம் மாணவர் களுக்கு எளிதில் விளங்க வைத்துவிடலாம். வரலாற்றுப்பாடத்தின் சூத்திரம் என்று படத்தை நாம் கருதலாம். மாணவர்களுக்குப் பாடத்தில் கவர்ச்சியை ஏற்படுத்துவதோடு, அவர்களின் கற்பனு சக்தியையும் படங்கள் வளர்க்கின்றன.

படங்களை உபயோகிக்கும்பொழுது பின்வரும் விதிகளைப் பின்பற்றவேண்டும்:

(i) படங்களைத் தொகுத்து வைக்கவேண்டும். அது பற்றிய அகராதி ஒன்றும் தயாரித்து வைக்கவேண்டும்.

(ii) பெரிய படங்களைச் சட்டங்களில் பொருத்தி வைக்க வேண்டும்; சிறுபடங்களை மெல்லிய துணியில் பதித்து வைக்க வேண்டும்.

(iii) மிகச்சிறு படங்களை படமெறி கருவி மூலம் பெரிதாக்கி மாணவர்களுக்குக் காட்டவேண்டும்.

(iv) படங்களைப் பற்றிய வர்ணனையை வகுப்பில் மாணவர் களுக்கு விவரிக்கவேண்டும். படத்தில் உற்று நோக்கவேண்டிய அம்சங்களை முன்கூட்டியே கூறவேண்டும்.

(v) எல்லா மாணவர்களுக்கும் படங்களைப்பார்க்க வாய்ப்பு அளிக்கவேண்டும்.

(vi) படங்களைப் பார்ப்பது ஒரு பொழுதுபோக்காக மாறிவிடக் கூடாது; அவற்றைப் பற்றிய கேள்விகளைக் கேட்டு மாணவர்களின் ஞாபகசத்தியையும், கற்பனைத் திறமையும் வளர்க்கவேண்டும்.

## (7) மாதிரி உருவங்கள் (Models)

மாணவர்களின் உற்று நோக்கும் திறமையை வளர்க்கவும், கற்றபொருள்களைப் பற்றிய திட்டமான கருத்துகளை அடையவும், மூளையின் ஏற்பப் பணியாளனுகக் கைகளை ஆக்குவதற்கும் மாதிரி உருவங்கள் செய்யும் பயிற்சியையும் மாணவர்களுக்கு அளிக்க வேண்டும். உண்மையான பொருள்களினின்றும் அளவில்தான் மாதிரி உருவங்கள் வேறுபடும்; மற்ற எல்லா அம்சங்களிலும் உண்மையான பொருள்களை ஒட்டியே மாதிரி உருவங்கள் இருக்

கின்றன. எனவே, படங்களை விட மாதிரி உருவங்கள் வரலாறு கற்பிப்பதற்குச் சிறந்த துணைக்கருவியாக உள்ளன.

காகிதத்தை ஊறவைத்து அரைத்து மாவு வகை, களிமண், மணல், சீமை குழைவு மண் (plasticine) போன்றவற்றைக் கொண்டு பலமாதிரி உருவங்களைச் செய்து வரலாற்றுப்பாட அறையில் வைத்திருக்கவேண்டும். மேலும், கடந்த காலத்தில் மக்கள் உபயோகித்து வந்த போர்க்கருவிகள், பாண்டங்கள் போன்றவற்றின் மாதி உருவங்களையும் செய்யலாம்.

**(8) நழுவங்கள்** (Slides)

படவிளக்குக் கருவி (Magic lantern) மூலம் விளக்கப்படும் நழுவங்கள் மாணவர்களுக்கு அதிகப்பயனை அளிக்கின்றன.

பழைய அரிதான பத்திரங்கள் அல்லது படங்களைப் போன்ற வற்றை மாணவர்கள் கையில் கொடுக்கமுடியாது. அத்தகைய படங்களை நழுவங்களாகச் செய்து படவிளக்குமூலம் மாணவர் களுக்குக் காட்டமுடிகின்றது. நழுவங்களை இரண்டுவகையாகப் பிரிக்கலாம். அவையாவன:

(i) பாடப்பொருள்பற்றிய நழுவங்கள்;

(ii) மாணவர்களின் மனவெழுச்சியைத் தூண்டிவிடும் கருத்து கள் அடங்கிய நழுவங்கள்.

நழுவங்களைச் செய்வது மிகவும் எளிதான காரியமாகும். அவற்றை உடைத்துவிடாமல் பயன்படுத்தவேண்டும். அரிதான பாடப்பொருள் அல்லது படங்களை உடையதும், சோதனை பற்றியதும், பாட்டுகள், கருத்துப்படங்கள், விளக்கப்படங்கள் பற்றியதாகவும் நழுவங்கள் உருவாக்கப்படவேண்டும். இவற்றைப் பெரிதாக்கிக்காட்டும் விளக்குகள் (Magic lantern and epidiascope) மூலம் வகுப்பு அறையில் மாணவர்களுக்குக் காட்டமுடிகின்றது. இதனால் அநேக மாணவர்கள ஒரேசமயத்தில் பார்த்து அவற்றைப் பற்றிய சிந்தனையில் ஈடுபட வாய்ப்பு ஏற்படுகின்றது.

**(9) கனத்தோற்றப்படக் கருவி** (Stereographs)

நிழல்படம் விளக்க முடியாத முற்றளவுகளைப் கனத்தோற்றப் படம்மூலம் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டமுடிகின்றது. இப் படங்கள் உள்ள அட்டைகளைக் கனத்தோற்றப்படக் கருவியின் உதவிகொண்டு பார்க்கவேண்டும். ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு கருவியைக் கொடுக்கலாம். பாடத்தோடு தொடர்புள்ள ஒரு

தலைப்புப்பற்றிய படங்களைத் திரட்டி அவற்றைப் பார்க்கும்படிச் செய்யவேண்டும்.

இப் படங்களைப் பாடம் துவங்கும்பொழுது அல்லது பாடத்தின் சில கடினமான பிரச்சினைகளைச் சமாளிக்கவேண்டிய காலத்திலும் இப் படங்களைப் பயன்படுத்தவேண்டும்: ஏற்ற காலமும் அதுவே.

இப் படங்களை ஆசிரியரின் மேசைமீது வைத்துவிட்டு, ஒவ்வொரு மாணவனும் முறையே சென்று பார்த்துவந்ததும், அது பற்றிய சொல்லாடலை நடத்துதல் சிந்த முறையாகும்.

## (10) பொருட்காட்சி நிலையம் (Museum)

வரலாற்றுப்பாடம் கற்பிக்கும் அறையின் ஒரு பகுதி பொருட் காட்சி நிலையமாக இருக்கவேண்டும். பொருட்காட்சி நிலையத் தினுல் மாணவர் அதிகப் பயன்களைப் பெறுவர். அவைகளாவன:

(i) கவர்ச்சி தரும் பொருள்களைச் சேகரித்து வைத்திருக்கும் களஞ்சியமாக இருப்பதைவிட, பொருட்காட்சி நிலையம் தானே ஒரு கல்வி நிலையமாகத் திகழ்கின்றது.

(ii) வகுப்பில் கற்கும்பாடங்களுக்கும் அன்றுட வாழ்க்கையில் நடைபெறும் அனுபவங்களுக்கும் இடையில் காணும் இறுகியத் தொடர்பை மாணவர்களுக்குத் தெரிவிக்கின்றது.

(iii) பலதரப்பட்ட பொருள்களைக் காலவரிசைப்படி சேமித்து வைப்பதால், அத் தொடர்புள்ள பாடங்களைக் கற்பிக்கும்பொழுது, சிறந்த துணைக்கருவிகளாக அப் பொருள்கள் உபயோகப்படு கின்றன.

### பொருட்காட்சி நிலையத்தில் இடம்பெறவேண்டிய பொருள்கள்

(i) உலகத்தின் பல பகுதிகளில் வாழும் மக்களின் படங்கள்;

(ii) மற்றைய நாடுகளில் மக்களின் வாழ்க்கைப் பற்றிய கருத்துகளை விளக்கும் மாதிரி உருவங்கள்.

(iii) உள்ளூரில் காணப்படும் வரலாற்றுச் சின்னங்கள்;

(iv) பலவிதப்பட்ட கல், மண், கனிப்பொருள்கள்.

(v) வரலாற்றுத் தொடர்புள்ள பழமையான இதழ்கள், சுவடிகள், நாணயங்கள், பட்டயங்கள், உருவங்கள், தபால் முத்திரைகள் போன்றவை,

**பொருட்காட்சியை எவ்விதம் பயன்படுத்துதல் வேண்டும்?**

(i) பழைய காலத்தைச் சேர்ந்தவை என்பதற்காகப் பொருள்களை மாணவர்களுக்கு முன் அணிவகுத்து நிற்கும்படி செய்யக்கூடாது. பாடத்திற்கு விளக்கம் தருவதாகவோ அல்லது நல்ல கற்றல் சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு உதவியாகவோ இருந்தால்தான் அவற்றை வகுப்பறையில் பயன்படுத்தவேண்டும்.

(ii) பாடத்தில் மாணவர்கள் கவர்ச்சியைப் பெறும்படி ஊக்குவிப்பதற்காகப் புதிய பொருள்களைப் பாடத்தின் துவக்கத்திலும், சில பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவும்படி இருப்பின், பாடம் நடத்தும் காலத்திலும், கற்ற பாடத்தில் தெளிவு பெறவோ, திருப்பிக் கூறுவதற்கோ உதவுவதாக இருந்தால் பாடமுடிவிலும் பொருள்களை ஆசிரியர் உபயோகிக்கவேண்டும்.

(iii) பொருட்காட்சியை நிர்வகிக்க ஒரு குழு ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு மாணவனும் பொருட்காட்சியோடு தொடர்புடையவனாக இருக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

(iv) எல்லா மாணவர்களும், பெற்றோர்களும் பொருட்காட்சிக்குச் சில பொருள்களைத் திரட்டும்படிச் செய்யவேண்டும். சமூகத்தில் வாழும் மக்கள் தங்கள் விருப்பச்செயல் பற்றிச் சேகரிக்கும் பொருள்கள்களைப் பள்ளிக்குக் கடன்கொடுக்க வருவதைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். மாணவர்களின் கவனத்தைப் பெறும் வகையில் பொருள்களை வரிசைப்படுத்தி வைக்கவும் வேண்டும்.

(v) எல்லாரும் காணுவதற்கும், வளர்ச்சியடையச் செய்வதற்கும், உபயோகிப்பதற்கும் வாய்ப்புகள் அளிக்கவேண்டும்.

**(11) அசைவுப்படங்கள்** (Motion Pictures)

அசைவுப்படங்கள் காட்சி சார்ந்த கற்றலுக்கு முக்கியப் பங்கை அளிக்கின்றன. பள்ளிக்கூடத்தின் நேரத்தைக் குறைத்து விடுமென்றும், ஆழ்ந்த படிப்பையும், பல நூல்களைப் படிக்கும் முறையையும் அழித்துவிட்டு, ஆசிரியர் வகிக்கும் இடத்தையும் அபகரித்துக்கொள்ளுமென்றும் எல்லோரும் அசைவுப் படத்தைப் பற்றி ஐயுறுகின்றனர். எனினும், அவ்விதநிலை ஏற்பட்டுவிடவில்லை.

பேசும்படமும், வெறும் அசைவுப்படமும் கற்றலுக்கு ஏற்ற துணைக் கருவிகளாக இப்பொழுது எல்லோராலும் கருதப்படுகின்றன,

திரைப்படங்களில் இருவகை உள்ளன. ஒன்று பேசும் படம்; மற்றொன்று அசையும் படம். இவையின்றிப் படச்சுருள்களும் உள்ளன.

**அசைவுப்படங்களினால் ஏற்படும் பலன்கள்**

(i) பாடத்தில் ஆர்வம் ஏற்படும் முறையில் மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.

(ii) மாணவர்களுக்கு அளிக்கப்படும் அனுபவங்களின் பரப்பு விரிவடைகின்றது.

(iii) மெதுவாகக் கற்பவருக்கும், கற்றலில் பிந்தியிருப்பவர்களுக்கும் ஏற்ற துணைவனாக இருக்கின்றது.

(iv) புதிய கருத்துகளையும், பொருள்களையும் மாணவர்களுக்கு எளிய முறையில் அளிக்க முடிகின்றது.

(v) ஒரு தொழில் அல்லது செயல் அலுவலகம் போன்றவை இயங்கும் முறையும், கைப்பற்றவேண்டிய நுணுக்கங்களையும் தெளிவுற எடுத்துக்காட்ட முடிகின்றது.

(vi) குறிப்பிட்ட கால அளவில் கற்கும் அளவு அதிகரிக்கப்படுகின்றது.

(vii) கற்றதை மனத்தில் இருத்திவைக்க ஏதுவாகின்றது.

(viii) புலன்காட்சி (Perception), பொதுமைக் கருத்துகள் (Concepts) புரிந்துகொள்ளுதல் போன்றவற்றை அசைவுப்படங்கள் தெளிவாக்குகின்றன.

(ix) மேற்கொண்டு புத்தகங்களைப் படிக்கவும், கற்றலில் ஈடுபடவும் தூண்டுகின்றன.

(x) குழுமுறையில் உரையாடல் நிகழ்த்த வாய்ப்புகளை அதிகமாக ஏற்படுத்தமுடிகின்றன.

**அசைவுப் படங்களை உபயோகிக்கும்பொழுது பின்பற்ற வேண்டிய முன் ஏற்பாடுகள் பின்வருவன:**

(i) அசைவுப்படங்கள் வகுப்பில் அவ்வாரத்தில் நடத்தப்படும் பாடங்களுடன் நேரடியான தொடர்பு பற்றியனவாக இருத்தல் வேண்டும். அவற்றின் பலனைப் பற்றிய முன்கூட்டியே படத்தைப் பார்த்து முடிவு செய்யவேண்டும்.

(ii) புதிய பொதுமைக்கருத்துகள், சமூக பழக்கவழக்கங்கள், மக்களின் வாழ்க்கை முறைகள் போன்றவற்றைப் பல படங்கள் விளக்குகின்றன. அப் பகுதிகளைப் பார்க்கும்பொழுது, மாணவர்களின் கவனத்திற்கு அவற்றைக் கொண்டுவரவேண்டும்.

(iii) குடிமைப் பண்புக்கு ஏற்ற செயல்களைப் பின்பற்றுவதற்கு வேண்டிய சூழ்நிலைகளைப் படங்கள் அளித்தால், அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளும்படிச் செய்யவேண்டும். எடுத்துக்காட்டாக, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, பொறுப்பை ஏற்றல், உதவி செய்தல், பிறர்மீது பரிதாபம் கொள்ளுதல், கூட்டுறவு முறையில் ஒரு செயலில் ஈடுபடுதல் போன்றவற்றைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

(iv) உருவம், இடவெளி கால அளவு போன்றவற்றைப் பற்றிய தவருன எண்ணங்கள் மாணவர்களிடத்தில் ஏற்படாதவாறு கவனித்துக்கொள்ளவேண்டும். ஒரு நாட்டின் சுதந்தரக் கிளர்ச்சி, முன்னேற்றம், ஒரு பெரும் புரட்சியும் அதனுல் ஏற்பட்டபலன்கள் போன்றவற்றை முப்பது நிமிடத்தில் பார்த்துவிட்டு, இவ்வளவு குறுகிய காலத்தில் இப் பெரும் செயலைச் செய்து முடித்துவிட்டனர் என்று குழந்தைகள் தவருக எண்ணிவிடக்கூடும். எனவே, படக்காட்சிக்குப்பின் மற்றைய சாதனங்களை உபயோகித்தும், கலந்து ஆலோசனையை நடத்தியும் நிகழ்ச்சிகளின் காலத்தை உணரும்படிச் செய்யவேண்டும்.

(v) அசைவுப் படக்காட்சியில் வரும் புதிய கருத்துகள், சொல் தொடர்கள் போன்றவற்றைப் பின்பு விளக்கிக் கூறவேண்டும்.

(vi) பாடத்துடன் வரும் ஆசிரியர் குறிப்புப் புத்தகத்தை முன்கூட்டியே ஆசிரியர் படிக்கவேண்டும். படத்தின் உள் கருத்துகளை விளக்கிக்கொண்டு, பின்பு அவற்றை மாணவர்களுக்கு விளக்கவேண்டும்.

(vii) அசைவுப் படக்காட்சிக்குப் பிறகு தொடர்வேலை மாணவர்களுக்கு அளிக்கவேண்டும். படக்காட்சியைப் பார்ப்பது பொழுதுபோக்காக அமைந்து விடக்கூடாது. கல்விப்பயன் உடையதாக இருக்கவேண்டும் என்பதை மறக்கலாகாது.

(viii) படத்தைப் பார்த்ததிற்குப் பின் அதைப் பற்றிய மதிப்பீடு செய்தல் நடைபெறவேண்டும். எந்த நோக்கத்திற்காக அப் படம் காட்டப்பட்டது, அந் நோக்கம் வெற்றி பெற்றதா போன்ற தலைப்பில் மதிப்பீடு செய்து கொள்ளவேண்டும்.

**(12) செவிசார் துணைக்கருவிகள் (Auditory Aids)**

பதிவுகள் (Recordings), வானொலி ஆகிய இரண்டையும் இங்கு நாம் குறிப்பிடுவோம். வானொலியினால் ஏற்படும் பலன்களில் கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

(i) பாடத்தில் ஆர்வத்தை அதிகரிக்கிறது.

(ii) வரலாற்றுப் பாடத்தைக் கற்பிப்பதில் பலதரப்பட்ட முறைகள் அளிக்கப்படுகின்றன.

(iii) கற்றதை மனத்தில் நிலைநிறுத்திக்கொள்ள வானொலி நிகழ்ச்சிகள் உதவுகின்றன.

(iv) கற்றல் நிலை வளமாக்கப்படுகின்றது.

(v) ஆடம்பரக் காட்சிகள், நடித்தல், உரையாடல், உருவாக்குதல், தனிப்பட்ட படிப்பு போன்றவற்றை மாணவர்களிடம் வளர்க்க வானொலிகள் உதவுகின்றன.

(vi) பாடப்பொருளையும், பேச்சுகளையும், இசையையும் கேட்பதினால் வேண்டாதவற்றை நீக்கல், கூர்ந்து கவனித்தல், கேட்டதை மனத்தில் நிலைநிறுத்திக்கொள்ளுதல் போன்றவை நடைபெற உதவுகின்றன.

(vii) வானொலி நிகழ்ச்சிகள் சமூகத்தை மாணவர்களிடத்தில் எளியமுறையில் தொடர்புபடுத்தி அறிமுகப்படுத்துகின்றன.

**கவனிக்கவேண்டியவை**

(அ) நிகழ்ச்சிகளைச் சரிவர ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். பாடத்தோடு தொடர்புகொண்டவைகளா என்று பரிசீலனை செய்யவேண்டும்.

(ஆ) மாணவர்களின் வயதைக் கொண்டு நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

(இ) நிகழ்ச்சியைப் பற்றிய சுருக்கத்தையும், பின்னணியையும் முன்கூட்டியே விளக்கம் செய்யவேண்டும்.

(ஈ) நிகழ்ச்சியின்பொழுது வகுப்பு முழுவதும் கவனத்தோடு கேட்கும்படிச் செய்யவேண்டும். நிகழ்ச்சிக்குப் பிறகு தொடர்வேலை அவசியம் கைக்கொள்ளப்படவேண்டும்.

(உ) ஆசிரியருக்குப் பதிலான இடத்தை வானொலிக்கு அளித்துவிடக் கூடாது. வானொலி நிகழ்ச்சிக்குத் தனி பிரிவேளை அளிக்கவேண்டும். அந்தப் பிரிவேளை ஆசிரியரின் ஓய்வு நேரம் என்று கருதக்கூடாது. வானொலி நிகழ்ச்சி ஆசிரியரின் துணைக் கருவி என்று கருதப்படவேண்டும்.

(ஊ) வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்பது கட்டாயத்திற்கான, தினமும் குறித்த நேரத்தில் கேட்கும்படி மாணவர்களைச் செய்து விடக்கூடாது தேவைப்படும் பொழுதுதான் வானொலியின் உதவியை நாடவேண்டும்.

**வினாக்கள்**

(1) தேசப்படம் என்றால் என்ன?

(அ) அவற்றை அமைப்பதில் மேற்கொள்ளப்படும் நுணுக்க முறைகளைக் கூறுக.

(ஆ) தேசப்படங்களின் வகைகளை விவரித்துக் கூறுக.

(2) பூமி உருண்டை (globe)-எவ்விதம் துணைக்கருவியாக நீவிர் பயன்படுத்துவீர்?

(3) கருத்துப் படங்கள், விளக்கப் படங்கள், வரைபடங்கள் இவற்றை வரலாற்றுப் பாடம் கற்பிக்க எவ்விதம் பயன் படுத்தலாம்?

(4) 'கரும்பலகை—ஒரு சிறந்த துணைக்கருவி'—விளக்குக.

(5) அறிவுப்புப்பலகையை நீவிர் எவ்விதம் பயன்படுத்துவீர்?

(6) பின்வரும் துணைக் கருவிகள் வரலாறு கற்பிப்பதற்கு எவ்வாறு பயன்படுத்தவேண்டுமென்பதைத் தெளிவு படுத்துக:

(i) படங்கள்; (ii) மாதிரி உருவங்கள்;
(iii) நழுவங்கள்; (iv) கனஉருக்காட்டிக்கருவி

(7) பொருட்காட்சி நிலையத்தால் மாணவர்கள் பெறும் பயன்களை எடுத்துரைக்கவும்.

(8) வரலாறு கற்பிக்க அசைவுப் படங்களை ஏன் பயன்படுத்த வேண்டும்?

(9) வரலாறு கற்பிக்க உதவும் செவி சார்துணைக்கருவிகள் யாவை?

## (5) வரலாற்றுப் பாட அறை (The History Room)

அறிவியல் பாடம் கற்பிக்க ஒவ்வொரு பள்ளியிலும் ஆய்வுக் கூடம் இருக்கவேண்டும். அவ்விதமே வரலாறு கற்பிப்பதற்கும் ஒரு தனிக்கூடம் அமைத்துக் கொடுத்தல் இன்றியமையாததாகும். வரலாறு கற்பிப்பதற்கு ஆய்வுக்கூடம் ஏன் தேவைப்படுகின்றது என்பதைக் கவனிப்போம்.

(i) வரலாறு கற்பிப்பதில் மாணவர்களுக்கு ஆர்வம் ஏற்பட வேண்டுமாயின், அவ்வார்வத்தைத் தூண்டும்படியான சாதனங்கள் பொருந்திய ஆய்வுக்கூடம் தேவை என்பதை அப்பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் நன்கு உணர்வார்கள்.

(ii) மாணவர்கள் கற்பதோடு, சிந்திக்கும் திறனையும் வளர்த்துக் கொள்ளவேண்டும். அதற்கு மேற்கோள் புத்தகங்கள், பலவித விவரங்கள், கால வரைபடங்கள் போன்றவற்றை அவர்கள் பயன்படுத்தவேண்டியவர்களாவர். தேசப்படங்களை வரையவும் அதன் விளக்கங்களைப் புரிந்துகொள்ளவும் தனிப்பயிற்சி வேண்டியதாகும். அத் தேவையை வரலாற்று அறை நிறைவேற்ற இயலும்.

(iii) வரலாறு கற்கும் மாணவர்கள் பல வகைப்பட்ட சான்றுகளை மேற்கொள்ளவேண்டியவர்களாவார்கள். மூலக் குறிப்புகள், படங்கள், பழைய சின்னங்கள், நாணயங்கள், கட்டுரைகள், கடந்தகாலத்தில் எழுதப்பட்ட கடிதங்கள், குறிப்புகள் இவை எல்லாவற்றையும் பயன்படுத்தவேண்டிய நிலை மாணவர்களுக்கு அடிக்கடி ஏற்படும். இத் தேவையைப் பூர்த்தி செய்ய வரலாறு அறைவேண்டியதாக இருக்கின்றது.

(iv) வரலாறு கற்பிப்பதில் காட்சி கேள்வி துணைக்கருவிகள் தேவைப்படுகின்றன. இக் காட்சி கேள்விக் கருவிகளைப் பயன்படுத்த அதற்கென்று எல்லா வசதிகளும் கொண்ட தனி அறை தேவை என்பது சொல்லாமலே விளங்கும். படங்கள், மாதிரி உருவங்கள், படச்சுருள்கள், படவிளக்குக் கருவிகள் ஆகியவற்றைப் பயன் படுத்தவும், அவற்றை வைக்கவும் வரலாறு அறை மிகவும் முக்கிய மானதாகிறது.

(v) தொடக்கப்பள்ளிகளில் இளங்குழந்தைகள் முதல் மூன்று ஆண்டுகளில் வரலாறு பற்றிய செய்திகளை ஆசிரியரின் வாய் மொழியால் அறிகின்றனர். உயர் நிலைக்கல்விக்குழு அறிக்கையின் படி மேல்வகுப்பு மாணவர்களுக்கு இயங்கும் முறைகளை (dynamic method) ஆசிரியர்கள் பின்பற்றவேண்டும் என்று தெளிவாகின்றது.

இவ்வித முறைகளைப் பின்பற்றிக் கற்பிப்பதற்குத் தனி அறை அவசியம் என்பது நன்கு விளங்கும்.

**வரலாற்றுப்பாட அறையின் அமைப்பும், தளவாடச்சாமான்களும்**

(i) வரலாற்றுப்பாட அறை 12·19 மீ × 9·14 மீ × 5·49 மீ அளவுகளைப் பெற்றிருப்பது விரும்பத்தக்கது. இம் முறை முப்பது மாணவர்கள் கற்பதற்கு ஏற்றதாயிருக்கவேண்டும். அறையின் கதவுகள், சன்னல்கள் முதலியவை தென்திசையை நோக்கியவைகளாகவும், அறையின் திறந்த பக்கம் விளையாடும் இடத்தை அல்லது திறந்த வெளியை நோக்கியதாகவும் இருக்கவேண்டும். சூரியன், சந்திரன் போன்றவற்றையும், கால நிலைகளையும் வகுப்பில் இருந்தபடியே உற்று நோக்குவதற்கு வசதியாக இருப்பதற்கே இவ்விதம் அறை அமைக்கப்படவேண்டும்.

(ii) ஒளிவேண்டிய காலத்தில் விளக்குகள் போடவும், இருள் சூழ்படும்படிச் செய்யவும் வசதிகள் இருக்கவேண்டும். அறையின் கிழக்குப் புறத்திலுள்ள சுவர் பூராவும் கரும்பலகைக்காக ஒதுக்கப்படவேண்டும். தென்புறத்தில் இரண்டு கதவுகளும், ஒரு சன்னலும் இருந்தால் வேண்டிய அளவு ஒளியைப் பெறமுடியும் அறையின் வடபுறத்தில் இரண்டு கதவுகளும், இரண்டு சன்னல்களும் இருக்கவேண்டும்.

(iii) கிழக்குப் புறத்தில் அமைக்கப்பட்டிருக்கும் கரும் பலகைக்குக்கீழ் நிலையறைப் பெட்டி (cupboard) 91·44 செ.மீ × 106·68 செ.மீ × 60·96 செ.மீ. அளவில் இருக்கவேண்டும். அது படவிளக்குக் கருவி (epidiascope or magic lantern) வைப்பதற்குப் பயன்படவேண்டும். கரும்பலகை இருக்கும் சுவரின் ஒரு புறத்தில் காட்சிப்பெட்டி (show case) 53·34 செ.மீ × 60·96 செ.மீ × 15·24 செ.மீ. அளவில் அமைத்து அதில் பாறைகளின் வகைகள், பழங்கால நாணயங்கள், செப்பேடுகள், புராதனச் சின்னங்களின் மாதிரிகள் போன்றவை சேகரித்து வைக்கப்படவேண்டும். கரும்பலகைக்கு முன்பாக ஆசிரியரின் மேசையும், இதற்கு முன்பாக மாணவர்களின் மேசைகளும், மாணவர்கள் உட்கார நாற்காலிகள் அல்லது முக்காலிகளும் போடப்படவேண்டும். அறையின் மேற்புறத்தில் கண்காட்சிப் பொருள்களை வைக்கும் காட்சிப் பெட்டியும், படங்களைப் பொருத்திவைக்க உதவும் சட்டமும், படங்களின் சுவடுகள் எடுப்பதற்கு உதவும் மேசைகளையும் வைத்திருக்கவேண்டும்.

(iv) அறையின் வடபுறத்தில் மூன்று நிலயறைப் பெட்டிகளில் வானிலையைத் தெரிந்து கொள்ள உதவும் கருவிகளையும்,

கிழக்குப்புறத்தில் இரண்டு அலமாரிகளில் நூலகத்தையும் அமைக்கவேண்டும். மாணவர்கள் பயன்பெறும் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து நூலகத்தில் வைக்கவேண்டும். இணைவழிப் படிப் பிற்கு உதவும் நூல்கள், பயணங்களைப் பற்றிய புத்தகங்கள், வாழ்க்கை வரலாறு பற்றிய நூல்கள், உரையாடல்கள், சுய சரிதைகள், மூலநூல்களின் மொழிபெயர்ப்புகள், நாடக நூல்கள், வரலாற்றுத் தொடர்புள்ள இலக்கியங்கள், வரலாற்றுப் படங்களை வெளியிடும் தொகுப்புகள், வரலாறு நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நவீனங்கள் போன்றவை சேகரித்து வைக்கப்படவேண்டும். ஆசிரியர்களுக்குத் தேவையான புத்தகங் களைத் தனித்து வைத்திருக்கவேண்டும்.

(v) ஆய்வுக்கூட அறையில் ஆசிரியர் அமரும் பக்கத்தினைத் தவிர்த்து மற்ற மூன்று புறச்சுவர்களில் நம் நாட்டு வரலாற்றுப் பகுதியின் கால நிகழ்ச்சியை விளக்க நிலையாக இருக்கும்படியாக காலக்கோடு (Time line) வரைந்திருக்கவேண்டும். இடது புறச் சுவரில் காலக்கோடு 'இந்துக்கள் காலம்' பற்றியதாகவும்; முன்புறம் உள்ள சுவரில் முகம்மதியர் காலம் பற்றியதாகவும்; வலதுபுறச் சுவரில் 'ஆங்கிலேயர் காலம்' பற்றியதாகவும் இருக்கவேண்டும். இக் காலக்கோடுகள் நடுநிலைப் பள்ளி வகுப்பு மாணவர்களுக்குப் பயன்படும் முறையில் செங்குத்தான காலக்கோடுக்குப் பதிலாகக் கிடைக்கோடு வகையினதாக (Horizontal Time line) இருத்தல் நல்லதாகும். இக் கோட்டிற்கு இணையாக நிகழ்ச்சிகளுக்குத் தொடர்பான படங்களைச் சிறிய அளவில் மாட்டி வைப்பதற்கு வசதியாக இருக்கும். வரலாற்றின் சிறப்பு மிக்க நிகழ்ச்சிகள், பேரரசுகளின் எழுச்சி, வீழ்ச்சி போன்றவற்றைப் பற்றிய சில வரலாற்றுப்பாட வரைபடங்கள் ஆகியவற்றைத் (Historical graphs) தயாரித்து அவற்றையும் சுவர்களில் மாட்டி வைக்க வேண்டும். பாடங்களைப் பற்றி மீள்பார்வை செய்யும் பொழுது இவை பயனுடையனவாக இருக்கும்.

(vi) பெரிய அளவில் உலக உருண்டை (globe) ஒன்று எப்பொழுதும் பயன்படும் முறையில் வகுப்பறையிலிருக்க வேண்டும்.

(vii) இந்திய வரலாறு, உலக வரலாறு, இங்கிலாந்து நாட்டின் வரலாறு பற்றிய தலைப்புகளில் பாடங்களை நடத்துவதற்குத் தேவையான தேசப்படங்களைக் காலவரிசைப்படியும்; வமிசாவளி முறையிலும் கற்பிப்பதற்கு உதவும் முறையில் வைக்கவேண்டும்.

(viii) பலநாட்டுத் தேசியக்கொடிகளுடன் நம்நாட்டு தேசியக் கொடியும் அவற்றைப் பற்றிய விளக்கங்களும், செய்தி அறிவிப்புப் பலகையும் வரலாற்று அறையில் சேமித்து வைப்பது அவசிய மாகும். சுருங்கக்கூறின், வரலாற்று அறையின் சாதனங்கள் வரலாற்றைக் கற்பிப்பதைக் கவர்ச்சியுடையதாகவும், உயிர்ப்பிக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும் என்பதை வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்கள் நன்கு உணரவேண்டும்.

**வினுக்கள்**

(1) வரலாறு கற்பிப்பதற்கு ஏன் ஆய்வுக் கூடம் ஒன்று தேவை என்பதை விளக்கவும்.

(2) வரலாற்றுப்பாட அறையின் அமைப்பையும், வேண்டிய தளவாடச் சாமான்களேயும் விவரமாகக் கூறவும்.

(3) வரலாற்றுப்பாட மாதிரி அறையின் கைப்படம் ஒன்று வரைந்து விளக்கவும்.

## (6) சிறுதொலேப் பயணங்கள் (Field Trips)

வெகுகாலந்தொட்டே மக்கள் தாங்கள் பெற்ற அனுபவங்களேப் பகிர்ந்து கொள்ளும்பொருட்டுச் சந்தித்தும் புது அனுபவங்களேப் பெற வெளி இடங்களுக்குச் செல்வதையும் மேற்கொண்டிருந்தனர். சிறுதொலேப்பயணம் என்ற சொல்லுக்குப்பொருள், 'வெளியில் ஓடுதல்' என்பதாகும். எனவே, கல்விப்பயணம் புதியதாகக் கைக் கொள்ளப்பட்டதாகக் கருதவேண்டியதில்லே; சமூகம் ஏற்பட்ட காலத்திலிருந்தே நடந்து வருகின்றது.

**சிறுதொலேப்பயணம் ஏன் மேற்கொள்ளப்படவேண்டும்?**

(1) கற்றலில் மாணவர்கள் நேரடியாக ஈடுபட வாய்ப்பளிக் கின்றது.

(2) வகுப்பில் படிக்கும் செய்திகளில் பல மாணவர்களுக்கு விளங்காமலிருக்கலாம். அவற்றை நேரில் சென்று பார்த்தால் தான் மாணவர்களுக்குத் தெளிவு ஏற்படும். எடுத்துக்காட்டாகப் பின்வருவனவற்றைக் கூறலாம். நிலநூல் ஆசிரியர் இயற்கைத் தேய்வு பற்றியும், அரிமானத்தைப் பற்றியும் எவ்வளவு எடுத்துக் கூறினுலும் மாணவர்கள் சரிவரப் புரிந்துகொள்ள முடியாது. அவை நடைபெறும் இடங்களுக்கு அழைத்துச் சென்றுவந்தோ மானல், அவை எளிதில் விளங்கும். வரலாற்றில் எகிப்தியர்

களின் நாகரிகத்தைப் பற்றிக்கூறும்பொழுது, பிரமிட் பற்றியும், அரசர்கள் உபயோகித்த பொருள்களைப் பற்றியும் படிப்பார்கள். பள்ளிக்கு அருகிலுள்ள கண்காட்சிக்குக் கல்விப் பயணமாகச் சென்றால் அப் பொருள்களைப் பார்த்து அப் பாடச் செய்திகளை நன்றாகப் புரிந்து கொள்வார்கள்.

(3) பள்ளிக்கூடத்தையும், சமூகத்தையும் இணைப்பது சிறு தொலைப் பயணமாகும். பள்ளிச் செயல்களைப் பற்றிச் சமூகத்தினர் சிந்திக்கும்படி சிறுதொலைப்பயணம் தூண்டிவிடுகின்றது.

(4) நேரடியான அனுபவங்களை அளிப்பதும், உற்று நோக்குதலால் கல்வியைப்பெறுவதும், பள்ளிக்கூடத்தில் நடைபெறும் செயல்களில் மாணவர்களுக்குக் கவர்ச்சியையும், ஊக்கத்தையும் சிறுதொலைப்பயணம் ஏற்படுத்துகின்றது.

(5) சிறுதொலைப்பயணங்களை மேற்கொள்ளுவதால் எல்லாக் குழந்தைகளுக்கும், எவ்வித வேறுபாடுகளுமில்லாமல் அனுபவங்களைப் பொதுவாக அளிக்க முடிகின்றது.

(6) மாணவர்களிடத்தில் நல்ல மனப்போக்குகளை வளர்க்க முடிகின்றது. ஆசிரியர்-மாணவர் உறவும் நல்ல முறையில் உருவாகின்றது.

(7) சமூகத்தில் நடைபெறும் பலவிதத் தொழில்களை நேரில் மாணவர் பார்க்கின்றனர். எனவே, அவற்றைப் பற்றிய நல்ல கருத்தை மேற்கொள்கின்றனர். தொழில்களின் பல பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதோடு, சமுதாய வளங்களையும் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது.

(8) மாணவர்களின் குண இயல்பு நல்ல முறையில் வளர்ச்சி பெறுகின்றது. சமூகத்துடன் ஒட்டி வாழ்கின்ற பயிற்சியை மாணவர்கள் பெறுகின்றனர். கூட்டுறவு முறையில் செயலாற்றல், பொறுப்பு ஏற்றுக் காரியங்களை நடத்துதல், கீழ்ப்படிதல், பிறருக்கு உதவி செய்தல் போன்ற பண்புகளையும் சிறுதொலைப்பயணம் மாணவர்களுக்கு அளிக்கவல்லது.

**நடத்தும் முறைகள்**

இவற்றை மூன்று பகுதிகளின்கீழ் விவரிக்கலாம். அவை யாவன:

(i) திட்டமிடுதல் (Planning)

(ii) நடத்துதல் (Conducting)

(iii) தொடர்வேலை (Follow up)

இவற்றை எவ்விதம் ஆசிரியர் கைக்கொள்ளவேண்டுமென்பதைக் கூறுவோம்.

**திட்டமிடுதல்**

(i) தேவையை உணராமல் சிறுதொலைப் பயணத்தை ஏற்பாடு செய்யக்கூடாது. பாடத்தைப் பற்றிய பொருளை அளிக்க வல்லதாக இருக்கவேண்டும். புதிய பாடத்தைத் துவக்குவதற்கு முன் மாணவர்களைப் புதிய கருத்துகளை ஏற்றுக் கொள்ளும்படி ஊக்குவிக்கவேண்டும். அதற்குப் பாடத்தைப் பற்றித் தொடர்புள்ள இடத்திற்குக் கல்விப் பயணம் சென்று வந்தால், மாணவர்களுக்குப் பாடத்தைக் கற்கவேண்டுமென்று ஆவல் ஏற்படும்.

இன்னும் சில சமயங்களில், பாடத்தை நடத்தும்பொழுது சில பகுதிகள் மாணவர்களுக்கு எளிதில் விளங்காமலிருக்கலாம். உதாரணமாக, ஓர் அலுவலகம் இயங்கும் முறை அல்லது ஒரு தொழிற்சாலையில் நடைபெறும் தொழிலைப் பற்றியதாகப் பாடம் இருக்கலாம். அக்காலங்களில் வகுப்பில் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடியதாகவுள்ள இடத்திற்கு மாணவர்களை அழைத்துச் சென்று வரலாம்.

பாடம் முடிந்ததும், கற்ற பாடத்தில் நல்ல தெளிவு பெறுவதற்கும் சிறுதொலைப்பயணம் மேற்கொள்ளலாம். நடத்திய பாடத்தோடு தொடர்புள்ள இடத்திற்கு நேரில் சென்று பார்த்து வந்தால், கற்றல் பூர்த்தியாகும். எனவே, சிறுதொலைப்பயணம் எங்கு, எப்பொழுது நடத்துவது என்பதை ஆசிரியர் திட்டம் செய்ய வேண்டும். எவ்வித நோக்கமுமில்லாமல், சிறுதொலைப் பயணம் மேற்கொள்ளுதல் பயனற்றதாகவே அமையும்.

(ii) எவ்வித இடத்திற்குச் செல்லவேண்டுமென்பதை ஆசிரியர் கூறினதும், அத்தைய இடங்கள் எங்குள்ளன என்பதை ஆராய வேண்டும். அதில் ஓர் இடத்தைத் தேர்ந்தெடுக்கும்படி மாணவர்களுக்குக் கூறலாம். எப்பொழுது, எங்கு எல்லோரும் கூடுவது, எப்படிப் பயணத்தை முடிப்பது போன்றதும், அது பற்றிய ஒழுங்கு விதிகளும் யாவும் மாணவர்களுடன் கலந்து முன் கூட்டியே திட்டம் செய்யப்படவேண்டும்.

(iii) சிறுதொலைப்பயணம் மாணவர்களின் ஒத்துழைப்பின் பேரில் நடைபெறவேண்டும்; எனினும், முழுப்பொறுப்பையும்

மாணவர்களிடம் விட்டுவிடக்கூடாது. திட்டம் செய்வதில் மாணவர்களுக்கும் பங்களிக்கவேண்டுமென்பதே நோக்கமாக இருக்க வேண்டும்.

சிறுதொலைப் பயணம் மேற்கொள்ளும்படியாக இருக்கும் அலுவலகம் அல்லது தொழிற்சாலையின் மேற்பார்வையாளரிடமிருந்து அனுமதி பெறவேண்டும். மாணவர்களின் எண்ணிக்கை, சேரும் நேரம் போன்ற விவரங்களையும் முன்கூட்டியே மேற்பார்வையாளருக்குத் தெரிவித்தல் நல்ல முறையாகும். ஒரு வழிகாட்டியின் சேவையையும் பெறவேண்டும். சிறுதொலைப்பயணத்தை மேற்கொள்ளும் தினத்தன்று மறுபடியும் அலுவலகத்தினருக்குத் தபால் அல்லது தொலைபேசிமூலம் ஞாபகப்படுத்தவும் வேண்டும். அலுவலகத்தினர், மாணவர்களின் வருகையைப்பற்றி தகுந்த ஏற்பாடுகள் செய்ய இது ஓர் எச்சரிக்கைபோல் அமையும்.

(iv) பெற்றோரின் சம்மதமில்லாமல் சிறுதொலைப் பயணத்தில் மாணவர்களை ஈடுபடும்படிச் செய்வது ஏற்றதல்ல. கல்விப் பயணத்தின் முக்கியத்தைக் கூறி, அவர்களின் உடன்பாட்டைப் பெற வேண்டும். பள்ளிக்கூடம் தயார் செய்திருக்கும் விண்ணப்பத்தை மாணவர்வள்மூலம் பெற்றோருக்கு அனுப்பி, அதில் அவர்களின் கையெழுத்தைப் பெற்று வரும்படி மாணவர்களுக்கு அளித்தல் ஒரு முறையாகும்.

(v) மாணவர்களின் போக்குவரத்து முறையை அதிகக் கவனத்துடன் ஏற்பாடு செய்யவேண்டும். மாணவர்களின் பாதுகாப்பு ஆசிரியரின் பொறுப்பாக இருக்கவேண்டும். பள்ளிக்கூடத்திலிருந்து நடந்து சென்று பார்க்கும் இடங்களாக இளம் மாணவர்களுக்கு ஏற்பாடு செய்வது மிகவும் நல்லதாகும். ‘எக்காலமும், ஒவ்வொரு குழந்தையின் பாதுகாப்பையும் கவனித்தல்’ என்பது ஆசிரியரின் குறிக்கோளுரையாக இருக்கவேண்டும்.

(vi) சிறுதொலைப் பயணங்கள் பட்டியல் பள்ளிக்கூடத்தில் தினந்தோறும் நடைமுறையிலிருக்கும் பாட அட்டவணையில் இடம் பெறவேண்டுமென்ற கருத்து இப்பொழுது நிலவி வருகின்றது. பெரிய பள்ளிகளில், பள்ளிக்கூடத் தினத்தில் மாணவர்களைக் கல்விப் பயணத்துக்கு அழைத்துச் செல்லுதல் முடியாத காரியமாக இருக்கின்றது. பிற பாடங்களைக் கற்பிப்பதற்குத் தடை ஏற்படும்; பிற ஆசிரியர்களின் சம்மதத்தையும் பெறவேண்டும். அலுவலகத்தின் வேலை நேரத்தை ஒட்டியே மாணவர்களை அழைத்துச் செல்லவேண்டுமே தவிர, பள்ளி அட்டவணைப்படி அழைத்துச் சென்றால், குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்றுவர இயலாது.

பள்ளி நேரத்தில் சிறுதொலைப்பயணம் நடத்த முடியாவிட்டால் விடுமுறை நாள்களில் நடத்த ஏற்பாடுகள் செய்வது நலமாகும்.

(vii) மாணவர்கள் பயணம் செல்லும்பொழுது எடுத்துக் கொண்டு செல்லவேண்டியவற்றை முன்கூட்டியே திட்டம் செய்ய வேண்டும். மின்பொறிக் கைவிளக்கு, குறிப்புப் புத்தகம், எழுதும் கருவிகள், புகைப்படக்கருவி, தலவிவர நிலப்படம் போன்றவற்றை ஒவ்வொரு மாணவனும் வைத்து இருப்பது விரும்பத்தக்கது.

(viii) பார்க்கவேண்டிய இடம் உள்ளூரில் இருப்பின், ஆசிரியர் முன்கூட்டியே ஒருமுறை சென்று பார்த்து வந்தால், மாணவர்களுடன் செல்லும்பொழுது விளக்கிக் கூறமுடியும். எனவே, ஆசிரியர் அதைப் பற்றிய விளம்பரப் புத்தகம் அல்லது குறிப்புகளைச் சேகரித்து அறிந்து கொள்வதும் எதிர் பார்க்கப் படுகின்றது. நிற்க, ஆசிரியருக்கு உதவிசெய்ய ஒரு வழிகாட்டி இருப்பதும் நன்று.

(ix) சிறுதொலைப்பயணம் மேற்கொள்ளுவதற்கு முன் மாணவர்களும் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும். ஆசிரியர் அதற்குத் திட்டம் வகுக்கவேண்டும். எந்த இடத்திற்கு, எப் பயனைப் பெறப்போகின்றோம் என்று ஒவ்வொரு மாணவனுக்கும் தெரிந்திருக்கவும்வேண்டும். பார்க்கவேண்டிய இடத்தைப் பற்றிய பாடப்பொருளைத் தரும் புத்தகங்கள் நூலகத்திலிருப்பின் அதனை மாணவர்கள் படிக்கவேண்டும். மேலும், தனிப்பட்ட செயல்முறை, குழுவினர் எடுத்துக்கொள்ளும் செயல்முறை அல்லது ஆசிரியர் கொடுத்த ஒப்படைப்புகளுக்கு ஏற்ற செய்திகளைச் சேகரிக்கும் பொருட்டும் சிறுதொலைப்பயணம் மேற்கொள்ளுதல் வேண்டற் பாலது.

**சிறுதொலைப்பயணத்தை நடத்துதல்**

(i) **சேருமிடத்திற்குச் செல்லுதல்:** பயணம் செல்லும் நேரம் கல்விப்பயனுடையதாகவும், பொழுதுபோக்காகவும் இருக்க வேண்டும். புதிய இடங்களின் வழியாகச் சென்றால்; மலைகள், ஆறுகள், பள்ளத்தாக்குகள், பாறைவகைகள், இயற்கைத் தாவரங்கள் போன்றவற்றைக் குறிப்பிட்டு மாணவர்களை உற்றுநோக்கும் பழக்கத்தை மேற்கொள்ளச் செய்யவேண்டும். மாணவர்களின் குழுவில், ஒரு புகைப்படம் எடுக்கும் மாணவன், பாடகன், விடாமல் பேசுகின்றவன் எல்லோரும் இருந்தால் பயணம் மகிழ்ச்சியாக இருக்கும். எனினும், மாணவர்கள் ஒழுக்கம் குறைவாக நடக்க அனுமதிக்கவேகூடாது. பயணம் என்பது, ‘கட்டுப்பாடாகவும்

அமைதியாகவும், மகிழ்வதாகவும்' இருக்கும்படிச் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

(ii) **சேருமிடத்தை அடைதல்:** மாணவர்கள் பார்க்க வேண்டிய கட்டடத்திற்கு எதிர்த் திசை வழியாக நுழையவேண்டும். வெகுதொலைவிலேயே கட்டடத்தைக் கண்ணுற்றால் அதைப்பற்றிய கட்டடக்கலை, அமைப்பு, உருவம் போன்றவற்றைப் பற்றிச் சிந்திப்பார்கள்.

(iii) **நிலையத்தில் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள்:** ஆசிரியருக்கு உதவியாக விளக்கம் கூறுபவர் ஒருவரின் உதவியையும் பெறுவது நல்லதாகும். அவரும், ஆசிரியரும் கலந்து பேசுதல் மிகவும் இன்றியமையாததாகும். மாணவர்களின் தேவையை அவர் நன்கு ஆசிரியர் எடுத்துக்கூறியதற்குப் பிறகே அவருடைய விளக்கங்கள் கூறப்படவேண்டும்.

நிலையத்தைப் பற்றி அறிந்து கொள்ளும் முயற்சியில் மாணவர்களை ஈடுபடுத்த வேண்டும். அவர்களுடன் ஆசிரியர் இருந்தே ஆகவேண்டும். மாணவர்கள் கேட்கும் வினாக்களுக்குப் பதில் கூறி அவர்களின் ஆவலைத் தூண்டவேண்டும். அவர்களின் ஒப்படைப்புகளைப் பற்றிய செய்திகளைச் சேகரிக்க வேண்டிய வசதிகளை ஏற்பாடு செய்தலும் ஆசிரியரின் பொறுப்பேயாகும்.

**எடுத்துக்கூறுதல்**

பள்ளிக்குத் திரும்பிச்சென்றதும் தொடர் வேலைக்காக இரண்டு அல்லது மூன்று பிரிவேளைகளை ஒதுக்கவேண்டும். பின்வரும் செயல்களை நடத்தலாம்:

(i) தாங்கள் மேற்கொண்ட சிறுதொலைப் பயணத்தைப்பற்றிய சொல்லாடல் நடத்துதல்.

(ii) எல்லா மாணவர்களும் தங்கள் அனுபவங்களைக் கூறி, அதனால் தவறுதலாக ஏற்றுக்கொண்ட கருத்தை மாற்றிக்கொள்வார்கள். தங்களுக்கு ஆசிரியரால் கொடுக்கப்பட்ட ஒப்படைப்புகளைப் பூர்த்திசெய்வார்கள்.

(iii) ஒவ்வொரு மாணவனும் வாய்மொழியாக எடுத்துக் கூறியதும், சிறுதொலைப் பயணத்தைப்பற்றிய எழுத்துச் சோதனை ஒன்றையும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(iv) சிறுதொலைப் பயணம் நடத்துவதற்கு உதவிய எல்லோருக்கும் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கடிதங்கள் வரைந்து அனுப்பலாம்.

(v) பள்ளிக்கூடப் பத்திரிகையில் சிறுதொலைப் பயணத்தைப் பற்றிய கட்டுரை ஒன்றையும் வெளியிடலாம்.

(vi) பார்த்த இடங்களைப்பற்றியும், மனத்தைக் கவர்ந்த காட்சிகளையும் படமாக வரைந்தும், மாதிரி உருவப்படம் செய்தும் பிறருக்கு விளக்கிக் கூறலாம்.

(vii) வகுப்பில் பொருள்காட்சி ஏற்பாடு செய்து அதில் தாங்கள் சேகரித்துவந்த படங்கள், புகைப்படங்கள், பொருள்கள், கருவிகள் யாவற்றையும் தகுந்த தலைப்புகளின்கீழ் வரிசைப்படுத்திப் பள்ளி மாணவர்கள் எல்லோருக்கும் பயன்படும்படி ஏற்பாடு செய்தலும் நடைபெறலாம்.

(viii) விளம்பரப் பலகையில் மாணவர்கள் எழுதிய கட்டுரைகள், செய்தித் துணுக்குகள், புகைப்படங்கள் போன்றவற்றைப் பலரறியக் காட்டுதலையும் மேற்கொள்ளலாம்.

(ix) பெற்றோர் சங்கத்தில் சிறுதொலைப் பயணம் பற்றி விவரித்துக்கூறி எவ்வாறு அப் பயணம் கல்விப் பயனுடையதாக இருந்தது என்பதைக் கூறலாம்.

(x) சிறுதொலைப் பயணத்தால் பயன் அடைந்ததைப்பற்றியும், பயண அனுபவங்களைப் பற்றியும் வகுப்பில் நடிக்க ஏற்பாடு செய்யலாம்.

**வினாக்கள்**

(1) வரலாறு கற்பிப்பதற்கு ஏன் சிறுதொலைப் பயணம் மேற்கொள்ளவேண்டும்?

(2) சிறுதொலைப் பயணம் நடத்தும் முறைகளை விவரிக்கவும்.

### (7) சமுதாய வளங்களைப் பயன்படுத்தல் (Utilising Community Resources)

கற்பிக்கும்பொழுது ஆசிரியரால் பயன்படுத்தப்படும் நிலையங்கள், தொழிற்சாலைகள், சங்கங்கள்போன்ற உள்ளூர் சூழ்நிலையில் உள்ளவற்றைத்தான் 'சமுதாய வளங்கள்' என்னும் தொடர் குறிக்கின்றது. 'சமுதாயம் என்பது உலகத்தின் சுருக்கமாகும்' (Epitome of the World) என்று இ. பி. வெஸ்லி (E. B. Wesley) கூறியுள்ளார்.

**பள்ளிக்கும் சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பு**

வரலாறு கற்பிப்பதற்கு உள்ளூர் சமுதாயம் ஒரு மூலப் பொருளாக அமைகின்றது. பள்ளிக்கூடம் என்பது சமூகத்தின் இயங்கும் ஒரு பகுதி என்றுதான் கருதப்படுகின்றது. மேலும் சமூகத்தை அறிந்துகொள்வதற்கு சமூகத்தில் காணப்படும் பொருள்களே தேவைப்படுகின்றன. மாணவன் சமூகத்தில் பார்க்கும் வாழ்க்கை முறைகள் எல்லாம் அவர்களுக்கு நன்கு விளங்குகின்றன. ஏனென்ருல், அவற்றின் தொடர்புகளை நன்ருக மாணவன் புரிந்துகொள்வதேயாகும்.

சமூகம் என்பது மாணவன் வாழ்க்கை நடத்துவதற்கும், கற்பதற்கும் அடிப்படையாக உள்ள ஒரு கருவியாகும். கூட்டு வாழ்க்கை நடத்துவதற்கும், பொதுமைக் கருத்துகளைக் கற்பிக்கவும் சேர்ந்துவாழ உதவும் மனப்பான்மையை வளர்க்கவும் மாண வனுக்குச் சமூகம் துணைபுரிகின்றன. மேலும், சமூகத்தில்தான் ஜனநாயக வாழ்க்கை முறையின் அனுபவங்களைப் பெறுகிருன். சமூகத்திலுள்ள மதநிலையங்கள், கோவில்கள், கடைகள், நாடகக் கொட்டைகள், வீடு, சுற்றுப்புறம், பள்ளி போன்றவற்றை எல்லாம் மாணவனுக்குப் பிற்காலத்திற்குத் தேவைப்படும் அனுபவங்களை அளிக்கின்றன. எனவே, அவற்றைப்பற்றி நினைக்கவும், எடுத் துரைக்கவும் வாய்ப்புகள் ஏற்படுகின்றன. இவ்வித அனுபவங் களால்தான் கூட்டுறவு முறையில் வாழ்க்கை நடத்தவும், சேர்ந்து வாழவும், மனிதத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளமுடிகின்றது.

மனிதனின் வாழ்க்கை முறையை கற்றுக்கொள்ள உதவும் ஆய்வுக்கூடம் என்று சமுதாயத்தைக் கூறலாம். தான் பெறும் வாழ்க்கை அனுபவங்களை மற்ற சமுதாயங்களில் ஏற்படும் அனுபவங்களுடன் ஒப்பிடவும், தன் சமுதாயத்தின் பண்பாட்டை மற்றவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும், அவன் வாழும் சமுதாயம் அவனுக்கு வாய்ப்பு அளிக்கின்றது.

**சமுதாய வளங்கள்**

சமுதாய வளங்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை யாவன:

(i) **இயற்கைத் தோற்றங்கள்** (Physical Phenomena): சமு தாயத்தில் காணப்படும் மலைகள், மண்வகைகள், சாலைவழிகள், தொழிற்சாலைகள், புத்தகங்கள், பொருட்காட்சி நிலையங்கள், ஆறுகள், ஏரிகள், அணைகள், காடுகள் போன்றவை மாணவர்கள் நேரில் சென்று பார்க்கக்கூடியவை.

(ii) **சமூக நிலையங்கள்** (Social Institutions): சமூகநிலையங்கள் என்பன பின்வருபவைகள்: குடும்பம், கட்சிகள், சமுதாய நிறுவனங்கள் நீதிமன்றங்கள், தந்தி, தபால் நிலையங்கள், சங்கங்கள், தல நிறுவனங்கள், நூலகங்கள், கூட்டுறவுக் கழகங்கள் படிப்பகங்கள், கோயில்கள் போன்றவை.

(iii) **தொட்டறிய முடியாதவை** (Intangibles): பழக்க வழக்கங்கள், கருத்துகள், நம்பிக்கைகள், மரபு வழக்குகள், மனப் போக்குகள் ஆகிய இவை யாவும் சமுதாய வளங்களாகும்.

**சமுதாயத்துடன் அறிமுகமாக்கிக் கொள்ளுதல்**

ஒவ்வொரு மாணவனும் தான் வாழும் சமுதாயத்தை நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும். உள்ளூர் நிலநூல் கட்டாயம் பாடத்திட்டத்தில் இடம்பெறவேண்டும். உள்ளூர் ஆட்சிமுறை, பொருளாதார வாழ்க்கை போன்றவற்றையும் கற்பிக்க உற்று நோக்கல், நேரடியாகப் பெறும் அனுபவங்கள் போன்ற முறைகளைப் பின்பற்றவேண்டும்.

சமுதாய வளங்களைக் குழந்தைகள் அறிந்து கொள்ளவேண்டிய முயற்சிகள் பின்வருவன:

(i) **முதல் முயற்சியானது, சமுதாயத்தின் பண்பாட்டை மாணவர்கள் அறிந்துகொள்ளுதல்:** தன் நாட்டின் வரலாற்று அறிவு இன்றியமையாததாகும். அரசியல் கொள்கைகள், சட்ட திட்டங்கள், நில உரிமைச் சட்டங்கள் போன்றவற்றைப் பற்றியும் கற்பிக்கவேண்டும்.

(ii) **சமுதாயத்திலுள்ள தலைவர்களுடன் நேரில் கண்டு பேசுதல்:** சமூகத்திலுள்ள தலைவர்களை மாணவர்கள் கண்டுபேசி செய்திகளைச் சேகரிக்க வேண்டும். தங்கள் துறையில் பெற்றிருக்கும் அனுபவங்களைத் தலைமை அதிகாரிகள் மகிழ்ச்சியோடு கூறுவார்கள். அத்தகைய அனுபவங்களை வேறுமுறையில் பெறுவதைவிட சிறந்தனவாக இருக்கும்.

(iii) **சமுதாயத்தைத் துருவி ஆராய்தல்:** சமுதாயத்திலுள்ள கடைகள், தொழில் நிலையங்கள், மக்கள் வாழும் பகுதிகள், சுற்றுப் புறம், விவசாயப்பண்ணைகள் போன்றவற்றை நேரில் மாணவர்கள் சென்று காணவேண்டும். சமுதாயத்தையும் அதன் சுற்றுப் புறத்தையும் அறிவதற்கு அதுவே சிறந்த முறையாகும்.

(iv) **உள்ளூர் செய்திகளைக் கூறும் நாள் வார இதழ்களைப் படித்தல்:** உள்ளூர் செய்தித்தாள்களைப் படிப்பதால் அதன்

பண்பாடு, கருத்துகள், கொள்கைகள், பழக்க வழக்கங்கள், கலை ஆர்வம், மதம், வாழ்க்கை முறைகள், வரலாறு, நிலநூல் செய்திகள் யாவும் தெரிந்துகொள்ள முடிகின்றது.

(v) **உள்ளூர் பற்றிய வரலாறு புத்தகத்தைப் படித்தல்:** உள்ளூர் பற்றிய வரலாறுநூல், உள்ளூர் கோவில் புராணங்கள் அல்லது அம்மாவட்டத்தைப் பற்றிய நிலநூல், வரலாறு பற்றிய புத்தகங்களை எல்லா மாணவர்களும் படிக்கவேண்டும். அப் புத்தகங் களில் குறைந்த செய்திகளே இருப்பினும் அதைப்படிப்பதும் விரும்பத்தக்க செயலாகும். தான் வாழும் சமுதாயத்தை அறிந்து கொள்வதற்கு இஃது ஒரு சிறந்த முறையாகும்.

(vi) **சமுதாயத்தின் பண்டிகைகள், கொண்டாட்டங்கள் போன்ற காரியங்களில் ஈடுபடுதல்:** ஒவ்வொரு குடிமகனும் தான் வாழும் சமுதாயத்திலிருக்கும் பிற மக்களுடன் தன்னை ஒன்றித்துக் கொள்ளவேண்டும். தன் சுற்றுப்புறத்தில் கூடி வாழத்தெரிந்தவனே தேசக்குடிமகன் அல்லது பன்னாட்டுக்குடிமகனாகத் தன்னை உயர்த்திக் கொள்ளமுடியும் என்பதை மறக்கலாகாது. மாணவர் களுக்கு வழிகாட்டியாக இருக்கும் ஆசிரியர்கள் உள்ளூரில் ஏற்பட் டிருக்கும் சங்கங்கள் குழுக்கள் போன்றவற்றில் கட்சிச்சார்பின்றிக் கலந்துகொண்டு தன்னால் ஆன உதவிகளைச் செய்ய முன்வர வேண்டும். சமூகத்தினருக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும் பழக்கத்தை மாணவர்கள் மேற்கொள்ளவேண்டும். சாலைகள் அமைத்தல், தெருக்களைச் சுத்தம் செய்தல், எழுதப்படிக்கக் கற்றுக் கொடுத்தல், நோய் பரவும் காலத்தில் மருத்துவர்களுடன் சேர்ந்து உழைத்தல் போன்ற சமூகசேவைகளைக் குறிப்பிடலாம்.

(vii) **சமூகத்தின் தனிப்பட்ட இயல்பை நன்கு தெரிந்து கொள்ளுதல்:** ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒரு சிறப்பான வளம் காணப்படும். அவை பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்று பற்றி இருக்கலாம்:

வரலாற்றில் புகழ்பெற்ற பெருந்தலைவர் ஒருவர் பிறந்தஇடம், முக்கிய நிகழ்ச்சி நடைபெற்ற இடம், ஒரு பெரும் கோட்டை அல்லது கோவில் உள்ள இடம், ஒரு குறிப்பிட்ட பொருள் உற்பத்தி நிலையம், இருப்பிடத்தின் முக்கியத்துவத்தினால் சிறப்பு பெற்றுள்ள இடம், அணைக்கட்டு ஏற்பட்டிருக்கும் இடம், அரசாங்க அலுவலகம் போன்றவற்றில் ஒன்றாக இருக்கலாம். அவ்விதச் சிறப்பு அச் சமூகத்தினர் பெருமைப்படக்கூடியதாக இருக்கும். அப்படிப் பெருமை அளிக்கக்கூடிய வளத்தை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டியது அப் பகுதியில் வாழும் மாணவர்களின் கடமையாகும்.

(viii) **சிறுதொலைப்பயணங்களை மேற்கொள்ளுதல்:** மாண வர்கள் கற்கும் பாட அலகு அல்லது தலைப்பு பற்றிய நேரிடைத் தொடர்பு கொண்டுள்ள சமுதாய வளங்கள் உள்ள இடங்களுக்குச் சிறு தொலைப்பயணங்களை மேற்கொள்ளவேண்டும். சமூகத்தில் நடைபெறும் வாழ்க்கையை நேரில் கண்டு நன்கு புரிந்து கொள் வதற்கு இதுவே சிறந்த முறையாகும்.

(ix) **தலைவர்களைப் பள்ளிக்கு அழைத்து வருதல்:** சமூகத்தில் விளங்கும் அரசியல் தலைவர்கள், மதப்பெரியார்கள், கவிஞர்கள், தொழில் நிபுணர்கள், எழுத்தாளர்கள், பண்ணைத் தொழிலில் ஈடு பட்டுள்ளவர், காரியாலயங்களின் தலைவர்கள், அரசியல் அலுவலக அதிகாரிகள், நாட்டுப் பாதுகாவலர்கள், கல்வித்துறையில் ஈடுபட் டிருக்கும் அறிஞர்கள், நாடகம் அல்லது இசையில் திறமையடைந் தவர்கள் போன்றவர்களை வகுப்புக்கு அழைத்து மாணவர்களுக்குச் சொற்பொழிவு நடத்தவும் ஏற்பாடு செய்யவேண்டும். அப் பெரி யோர்களை நேரில் காணவும், பேசவும், கேட்கவும் மாணவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. இவ்வாறு மாணவர்கள் ஊக்குவிக்கப் பட்டுச் சமுதாயத்தைப்பற்றிய செய்திகளை அதிகமாகவும், நுணுக்க மானவற்றையும் பெறமுயற்சி எடுக்கும்பொருட்டுத் தூண்டப்படு கிறார்கள்.

(x) **காட்சி கேள்வித் துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல்:** அசைவுப்படங்கள், படங்கள், நழுவங்கள், பொருட்காட்சிப் பொருள்கள் போன்றவைகளும் சமுதாய வளத்தை மாணவர் களுக்கு எடுத்துரைக்கின்றன. சமுதாயத்தைப் பற்றிய செய்திகள் யாவும் வானொலியாலும் மாணவர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

**சமூகவளத்தைப் பயன்படுத்துதல்**

சமூக வளத்தைக் கணக்கெடுத்தபிறகு, எந்தக்கூறு அதிகப் பயன் உடையதாகக் கருதப்படுகின்றதோ அதை ஆசிரியர் தேர்ந் தெடுக்கவேண்டும். அதைப்பற்றிய முழு விவரத்தையும் அறியும் பொருட்டுக் கல்விச் செலவு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

சமூக வளத்தைப் பயன்படுத்துதல் **மூன்று நிலைகளில்** நடை பெறலாம். அவையாவன:

(i) சமூகத்தின் இயற்கை வளங்களையும், செயல்களையும் நேரில் கண்டு அறிவதால் மாணவர்களின் அறிவு வளர்ச்சியடை கின்றது. இவவாறு நேரடியாகப் பெறும் அறிவு மிகவும் சிறந்த தாகும். இத்தகையஅனுபவங்களை அளிப்பதே பள்ளிக்கூடத்தின்

குறிப்பிடத்தக்க செயலாகும். இந் நிலையில் மாணவர்களின் செயல்கள் சமுதாய வளங்களை உற்று நோக்குவதால் ஏற்படும் அனுபவத்தோடு நின்று விடுகின்றன.

(ii) இரண்டாவது நிலையில், சமுதாயத்தின் நடவடிக்கைகளில் மாணவர்கள் பங்கு கொள்வதாகும். அதாவது, சமுதாயத்தின் சட்ட திட்டத்திற்கு உட்பட்டு நடப்பது, பொதுக்கூட்டங்களுக்குச் செல்வது, சமூகத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள், மாறுதல்களைப் பற்றி அறிந்து கொள்வது போன்ற செயல்களில் மாணவர்களை ஈடுபடும்படிச் செய்வது. இந்த நிலையிலும், மாணவர்களின் பயிற்சி தொடர்ந்து நடைபெறும் முறையிலேயே இருக்கின்றது.

(iii) மூன்றாவது நிலையில், சமுதாயத்தின் நலம்பற்றித் தன்னால் முடிந்த அளவு தொண்டாற்றல். சமூகத்தின் பண்பாட்டை உணர்வதும், அப் பண்பாட்டைப் பாதுகாப்பதும், மாணவர்களின் கடமையாகும். அடுத்தபடியாக அப் பண்பாட்டின் வளர்ச்சிக்காக உழைக்கும் மனப்பான்மையை வளர்க்கவேண்டும். இக் கால சூழ் நிலையில்தான் வாழ்வதற்குத் தன்னைச்சரிப்படுத்திக் கொள்வதோடு, பிற்காலச் சூழ்நிலைக்கும் தன்னைத் தயார் செய்து கொள்ள வேண்டும் என்று ஒவ்வொரு மாணவனும் உணரவேண்டும். இதற்கெல்லாம் சமுதாய வளத்தைப் பற்றிய பரந்த அறிவு ஏற்பட்டால்தான் முடியும்.

சமூக நலனுக்குத் தன்னால் ஆனதைச் செய்யவேண்டும் என்று மனப்பான்மையைக் கொண்டு அவனின் சமுதாய வளத்தைப் பற்றிய அறிவை மதிப்பீடு செய்ய முடிகின்றது. சமூக நலத்திற்கு உழைப்பதால் சிறந்த குடிமகனாக மாணவன் கருதப்படுவான். இத்தகைய மாணவன் பன்னாட்டுக்குடிமகனாக ஆகும் பாதையில் முன்னேறிச் செல்கிறான் என்பதைத் திட்டமாகக் கூற முடிகின்றது.

இதற்குப் பள்ளிக்கூடத்தில் பயிற்சி அளிக்கப்படவேண்டும். பள்ளிக்கூட ஆட்சியில் மாணவன் பங்குகொண்டு, பிறருக்குத் தொண்டு செய்யும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளலாம். இந்தச் 'செய்து கற்றல் முறை' பள்ளிக்கூடத்தின் வாழ்க்கைக்குப் புறம்பாக உள்ள செயல்களுக்கும் உபயோகிக்கும் திறனை மாணவன் பெறுவான். இவ்வாறு சமுதாய வளத்தைப் பற்றிய அறிவை மாணவன் பெறுவதால் சமுதாயமும், மாணவனும் முறையே நல்ல பயன்களை அடைகின்றனர்.

**வினுக்கள்**

(1) பள்ளிக்கும் சமுதாயத்துக்கும் உள்ள தொடர்பை விளக்குக.

(2) சமுதாய வளங்களின் மிகமுக்கியமான பிரிவுகள் யவை?

(3) சமுதாய வளங்களே மாணவர்கள் அறிந்து கொள்வதற்கு எடுத்துக் கொள்ளவேண்டிய முயற்சிகள் யாவை?

(4) சமூகவளத்தை ஆசிரியர் எவ்விதம் பயன்படுத்திக் கொள்ளலாம்?

**(8) மாணவர்களின் பதிவேடுகள்** (Pupils Records)

வரலாறு கற்பிக்கும்பொழுது மாணவர்களிடம் எழுதும் வேலையை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. தாங்கள் பாட சம்பந்தமாக ஈடுபடும் செயல்களேப் பலமுறைகளில் மாணவர்கள் பதிவு செய்து வைக்கப் பயிற்சியளிக்கவேண்டும். அப் பதிவேடுகள் மாணவர்களுக்குப் பயன்படும் முறையில் இருக்கவேண்டும். ஒருவருக்கு வங்கி எவ்விதம் உதவியாயிருக்கின்றதோ, அவ்விதமே குறிப்புப் புத்தகமும் மாணவனுக்கு உதவி வெய்கின்றது. சிறந்த வற்றைக் குறிப்புப் புத்தகத்தில் சேமித்து வைக்கவும், தேவைப் படும்பொழுது அதிலிருந்து ஏற்றதைப் பெற்றுக் கொள்ளவும் முடிகின்றது.

மாணவர்கள் வரலாறு பாடத்தையொட்டி தயார் செய்ய வேண்டிய பதிவேடுகளில் சிலவற்றைக் கீழ்க்கண்டவாறு குறிப் பிடலாம்:

(i) **குறிப்பெடுத்தலும், குறிப்புத் திரட்டலும்** (Note taking and Note making): சிந்தனே பற்றிய செயல்களில் மாணவர்கள் ஈடுபடும்பொழுது, குறிப்பெடுத்தலே அவர்கள் மேற்கொள்ள வேண்டும். **குறிப்பெடுத்தலில்** (Note taking) ஆசிரியர் வாயால் கூறுவதை அல்லது கரும்பலகையில் எழுவதை மாணவன் எழுதிக் கொள்வான்.

குறிப்புப் புத்தகத்தின் பயனேப்பற்றி எல்லா ஆசிரியர் களிடத்தும் கருத்து ஒற்றுமை இருக்கின்றது. ஆனுல், அது குறிப் பெடுக்கும் முறையிலா அல்லது உருவாக்கும் முறையிலா என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

ஐந்து அல்லது ஆருவது வகுப்புகளில் குறிப்பெடுத்தல் நடைபெறவேண்டும். ஆசிரியர் கரும்பலகையில் எழுதும் பாடச்சுருக்கத்தை எல்லா மாணவர்களும் எழுதிக் கொள்வார்கள். வேண்டாத செய்திகளை விட்டுவிட்டு, தேவைப்படும் பாடப்பொருள்களைக் குறித்துக்கொள்ளும் திறமை நாளடைவில் மாணவர்களிடத்தில் ஏற்படும்.

**குறிப்பு உருவாக்குதல்**

சிறு குழந்தைகள் குறிப்பு எடுக்கும் வழக்கத்தைச் சில ஆசிரியர்கள் ஆதரிக்கவில்லை. குறிப்பை உருவாக்குந் திறமையை இளம் மாணவர்கள் பெறவேண்டுமென்பது அவர்கள் கருத்தாகும்.

ஆசிரியர் எடுத்துக்கூறுவதையோ அல்லது கரும்பலகையில் அவர் எழுதும் பாடச்சுருக்கத்தையோ எழுதிக்கொள்ளாமல் தாங்களே பாடத்தைப் படித்து, பல தலைப்பின்கீழ், தெளிவாகப் பாடப்பொருளைக் குறிப்பெடுத்து எழுதுவதுதான் குறிப்பு உருவாக்குவது என்று கூறப்படுகின்றது. இம் முறை சிறந்ததாகக் கருதப்படுவதற்கு காரணங்களாவன:

(i) கருத்துகளை மனத்தில் பொருத்தி வைக்கின்றது.

(ii) பாடப்பொருளின் தொடர்பை மாணவர்கள் உணரும்படி உதவுகின்றது.

(iii) மாணவர்களிடத்தில்தான் தொடங்காற்றல் திறமையை வளர்க்கின்றது.

எனவே, மாணவன் தயாரிக்கும் குறிப்புப் புத்தகத்தை அவன் திருப்புங்கால் உதவி செய்யும். குறிப்பை உருவாக்கும் பயிற்சி அளிக்கப் பின்வரும் முறைகளைப் பின்பற்றலாம்:

(i) பாடத்தின் சுருக்கத்தை ஆசிரியர் கூறி, இணைவழிப் படிப்பை ஏற்று, குறிப்பைத் தயாரித்து வரும்படிக் கூறுதல்.

(ii) பாடச்சுருக்கத்தைப்பற்றி வகுப்பில் கலந்தாலோசிக்க வேண்டும்.

(iii) இச் சுருக்கத்தைப் பின்பற்றி, மாணவர்கள் குறிப்பெழுதி வரவேண்டும்.

(iv) சில சமயங்களில் இக் குறிப்பானது கட்டுரை முறையில் தயாரிக்கப்பட்டதாக இருக்கவேண்டுமென்றும் கூறலாம்,

மாணவர்களைப் பாடத்தின் சுருக்கத்தை எழுதி வரும்படிச் செய்வதால் அவர்களின் நேரமும், சக்தியும் வீணாக்கப்படுகின்றன என்று சிலர் கூறுகிறார்கள். இந்த முயற்சி பலனைக் கருதும் பொழுது வேண்டியதுதான் என்று மற்றும் சிலர் கூறுகின்றார்கள். எனவே, குறிப்பை உருவாக்குதலும், குறிப்பை எடுத்தலும் சேர்ந்த ஒரு முறையை நடுவழியாக நாம் பின்பற்றலாம். ஆரம்ப வகுப்புகளில் மாணவர்களுக்குக் குறிப்பு எடுக்கும் பயிற்சி அளித்தால் போதுமானது. ஆசிரியர் கூறுவதை எழுதிக்கொண்டால், அவை மாணவர்களின் ஞாபக சக்தியை வளரச் செய்யும். நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி வகுப்புகளில் குறிப்பு உருவாக்குதலையே மாணவர்கள் மேற்கொள்ளவேண்டும்.

## குறிப்புப் புத்தகத்தின் பயன்களும், குறைபாடுகளும்

ஆசிரியர் **டிரையான்** குறிப்புப் புத்தகத்தினால் ஏற்படும் பயன்களையும், குறைபாடுகளையும் பின்வருமாறு கூறியிருக்கிறார்:

(i) குறிப்பை மாணவர்கள் உருவாக்கி, அதைத் தங்கள் குறிப்புப் புத்தகத்தில் எழுதிவைப்பது, பளிங்குபோன்று உருப் பெறச் செய்தல், வகைப்படுத்தல் ஒருங்கமைத்தல் போன்றவற்றை மாணவர்கள் கற்கும்படி உதவி செய்கின்றது.

(ii) மீள்நோக்கிற்குக் குறிப்புப் புத்தகம் உதவியாக இருக்கின்றது.

(iii) ஒழுங்கு, உடனுக்குடன் செய்தல், தூய்மையுடன் புத்தகத்தை வைத்திருத்தல், திருத்தமாகச் செய்தல், திட்டவட்டமாகப் பாடப்பொருளைப்பற்றி அறிதல் போன்ற பழக்கவழக்கங்களை மாணவர்களிடத்தில் ஏற்படும்படிச் செய்யமுடிகின்றது.

(iv) மதிப்பிடும் திறமையும் வளர்கின்றது. தாங்கள் படித்தறியும் பாடப்பொருளில் வேண்டாதவற்றை நீக்கிவிட்டு, தேவையானவற்றை எழுதிவைப்பதினால் சீர்தூக்கிப்பார்த்து முடிவை ஏற்கும் திறமையும் வளர்ச்சியுறுகின்றது.

(v) குறிப்புப் புத்தகத்தில் குறிப்புகள் மட்டுமல்லாமல், படங்கள், விளக்கப்படங்கள் போன்றனவும் இடம்பெறுகின்றன. எனவே, சமூகப் பாடத்தை நன்கு புரிந்து கொள்ளச்செய்யும் துணைக்கருவிகளில், குறிப்புப் புத்தகமும் ஒன்றாக அமைவதை மாணவனே உணரும்படிச் செய்கின்றது.

(vi) மாணவர்களின் கருத்துகளை வெளியிடுவதற்கு ஒரு வாயிலாகவும் இருக்கின்றது.

**குறைபாடுகள்**

(i) கல்வித்தொடர்புள்ள வேறு பல செயல்களில் மாணவர்கள் ஈடுபடவேண்டிய நேரம் குறிப்பெடுப்பதில் வீணுகச் செலவழிக்கப் படுகின்றது.

(ii) குறிப்புப் புத்தகத்தின் மீது அளவுக்குமீறிய நம்பிக்கையை மாணவர்கள் வைக்கும்படி ஏற்பட்டுவிடுகின்றது. குறிப்புப்புத்த கத்தில் எழுதிவைத்துவிட்டால் போதுமானது என்றும், அவற்றைக் கற்கத் தேவையில்லை என்றும் கருத ஆரம்பித்து விடுகின்றனர்.

(iii) குறிப்புப் புத்தகங்களைத் திருத்தம் செய்து முடிப்பது என்ருல் ஆசிரியர் அதிக நேரத்தையும், உழைப்பையும் செலவிட வேண்டும்.

(iv) தாங்கள் குறிக்கும் பாடப்பொருள்களைப் புரிந்து கொள் வதற்குப்பதிலாக, மாணவர்கள் பாடப்பொருள்களைச் சேகரித்துக் குறிக்கும் முறையைத்தான் கற்றுக்கொள்வர்.

(v) குறிப்பு உருவாக்கப்படுதல், நாளடைவில் புத்தகங் களிலிருந்து திரும்பவும் எழுதிக் கொள்வதாக ஏற்பட்டுவிடும்.

(vi) குறிப்புப் புத்தகத்தைப் பற்றிய செயலில் உள்ளத்தோடு ஈடுபடாமல், கடமைக்காகச் செய்தாக வேண்டுமேயென்ற சலிப் போடு மாணவர்கள் ஈடுபடுவார்கள்.

(vii) குறிப்புப் புத்தகத்தைச் சோதிப்போமானுல் நிலையான பயனைத் தரும் எச் செய்தியும் அதில் இடம்பெருமையைக் காணலாம். பயனற்ற வெற்றுச் செய்திகள் இருப்பதையே அடிக்கடி ஆசிரியர்கள் காண நேரிடும்.

(viii) குறிப்புப் புத்தகம் பெரும்பாலும் ஆசிரியருக்காக, அவரின் நன்மைக்காக உருவாக்கப் படுகின்றதேயல்லாமல் மாணவர்கள் பயன்பெறும்படி இருப்பதில்லை.

மேற்கூறிய குறைபாடுகள் எல்லாம் குறிப்புப் புத்தகத்தின் உள்ளார்ந்த பண்பானவை அல்ல என்பதை நாம் கவனிக்க வேண்டும். குறிப்புப் புத்தகம் என்பது கற்றலுக்கு உதவும் ஒரு துணைக்கருவியேயாகும். அக் கருவியைத் தவருக உபயோகித்தால் மேற்கூறிய குறைபாடுகள் ஏற்படுவது உண்மை. எனவே, இக் குறைபாடுகள் ஏற்படா வண்ணம் ஆசிரியரின் மேற்பார்வையில்,

மாணவர்கள் குறிப்புப் புத்தகத்தைப் பயன்பெறும் முறையில் உருவாக்கி வைத்துக்கொள்ளப் பயிற்சி பெறவேண்டும்.

**(2) படத்தொகுப்புப் புத்தகம் (Album)**

மாணவர்கள் விரும்பித் தயாரிக்கும் பதிவேடுகளில் சிறப்பாகப் படத்தொகுப்புப் புத்தகத்தைக் கூறலாம். படநோட்டுப் புத்தகத்தில் மாணவர்கள் பாடத்தலைப்புக்கு ஏற்றவாறு பக்கங்களை ஒதுக்கிடுவர். பாடத்தைத் தெளிவுபடுத்தும் முறையில் உதவும் படங்களைப பழைய வார இதழ்கள் போன்றவற்றிலிருந்து சேகரித்து ஒட்டுவார்கள். படங்கள் இறந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளை மறுபடியும் பிள்ளைகளின் மனக்காட்சியில் வைக்க உதவுவனவாக இருக்கவேண்டும். பல விதமான படங்களும், வண்ணப் படங்களும் தொகுப்பில் இடம் பெறவேண்டும். இப் படங்களுக்குப் பொருத்தமாகத் தலைப்புகள் ஒரிரண்டு வார்த்தைகளில் மாணவர்களின் விருப்பத்திற்கிணங்கக் கொடுக்கவேண்டும். இப் படங்கள் வரலாற்று உண்மையைப் பிள்ளைகளின் மனத்தில் நிலைத்து நிற்கும்படி உதவி செய்யும் பத்திரிகைகளில் வரும் கேலிச்சித்திரங்களை ஒட்டி அதற்கு விளக்கம், தலைப்பு, குறிப்பு ஆகியவை தயாரிக்கும்படித் தூண்டலாம். படத்தொகுப்பில் வலப்புறம் அமைந்த பக்கங்களைக் குறிப்புகள், விளக்க உரைகள் போன்றவற்றை எழுதப்பயன் படுத்திக் கொள்ளலாம்.

**(3) தேசப்பட நோட்டுப் புத்தகம் (Map drawing Note book)**

வரலாறு பற்றிய பாடத்தைக் கற்பிப்பதற்கும், கற்பதற்கும் குறிப்பிடத்தக்க சாதனம் தேசப்படமே ஆகும். மாணவர்கள் தொடக்கப்பள்ளி வகுப்புகளில் படிக்கும்பொழுதே தேசப்படத்தைப் பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும். தேசப்படத்தைக் கொண்டு படித்தல், எழுதுதல், சிந்தித்தல் எல்லாம் இளம் மாணவர்களிடம் நடைபெறவேண்டும். தேசப்படத்தைப் பயன்படுத்தும் பொழுது மாணவர்கள் இண்டுவித உண்மைகளைக் கற்கவேண்டும்.

தேசப்படத்தில் குறிப்பிட்டிருக்கும் இடத்தின் பரப்பு உண்மையான பரப்பைவிடக் குறைவாகத் தோன்றும். எனினும், உண்மையான அளவின் வீத முறையில் படத்தின் அளவு இருக்கும் என்பது இரண்டாவது உண்மையாகும். பூமியின் மேலுள்ள இரண்டு இடங்களின் தூரத்திற்கும், தேசப்படத்தில் அவ்விடங்களைக் குறிப்பிட்டிருக்கும் தூரத்திற்கும் உள்ள தொடர்பை ‘அளவு’ விளக்குகின்றது.

அச்சிடப்பட்ட பயிற்சி நோட்டுப் புத்தகங்களில் படம் வரையவும் பாடம் படிக்கவும் வாய்ப்புகள் அதிகம் இல்லை. படத்தை

நிரப்புதல் ஒன்றுதான் இதில் இடம்பெறுகிறது. இதனுல் அதிக நன்மை மாணவர்களுக்கு ஏற்படும் என்று சொல்லமுடியாது. எனவே, மாணவர்களுக்குப் பாடப்புத்தகம், தேசப்படப் புத்தகம் ஆகியவற்றுள் உள்ள படங்களைப்பார்த்து நகல் வரையும் பயிற்சியைக் கொடுக்கலாம். மாணவர்கள் தகுந்த பயிற்சி பெற்ற பின்னர் மேல்வகுப்புகளில் ஞாபகத்தை அடிப்படையாகக் கொண்டு வெளிக் கோட்டுப்படம் வரைந்து ஒரு சில விவரங்களைக் குறிக்கும்படியும் பயிற்சி அளிக்கலாம். இவ்விதம் தேசப்படப்புத்தகத்தில் ஓர் அரசின் இராச்சிய எல்லைகள், படையெடுப்பின் பாதைகள், வென்ற நாடுகள், நாகரிகச் சின்னங்கள் கிடைக்கும் இடங்கள் போன்றவை இடம்பெறும். அரச பரம்பரையின் வம்சாவளிகள், காலக் கோடுகள், வரலாற்றில் நடந்த சண்டைகளைக் கற்பிக்கும்பொழுது, அப் போரில் ஈடுபட்ட இராணுவத்தின் அமைப்புகள் போன்றவற்றைப் பற்றிய படங்கள், படத்தொகுப்பில் இடம்பெறலாம்.

இவ்வாறு மாணவர்கள் தயார் செய்யும் தேசப்பட நோட்டுப் புத்தகத்தை ஆசிரியர் அடிக்கடி மேற்பார்வையிட்டுத் திருத்தம் செய்து கொடுக்கவேண்டும்.

**(4) மாணவர்களின் குறிப்பு ஏடும், பதிவுப் புத்தகமும் (Personal diary and Personal Record book)**

மாணவன் ஈடுபட்டிருக்கும் செயல் திட்டம், அவன் ஆவலுடன் படிக்கும் இணைவழிப்பாடம், அவன் சேகரிக்கும் பாடப்பொருள், செய்தித் துணுக்குகள் போன்றவற்றைத் தன் குறிப்பேட்டில் சேர்த்து வைக்கும்படி பயிற்சியளிக்கவேண்டும்.

தன்பதிவுப் புத்தகத்தில் ஒவ்வொரு மாணவனும் தன்னுல் மேற்கொள்ளப்படும் செயல்கள், செயல்திட்ட முறைகளைத் தொடங்கும் தேதி, படிக்கும் புத்தகங்கள், சிறுதொலைப்பயணம் பற்றிச் செல்லும் இடங்கள், ஆசிரியர் அளிக்கும் செயல்களில் பங்கு பெறுதல், நடித்தலில் ஈடுபடுதல், உரையாடல், கண்காட்சிக்கு வேண்டியவற்றைச் சேகரித்தல் போன்றவற்றை விவரமாகக் குறித்து வைக்க விரும்புவது இயல்பாகும்.

பதிவுப்புத்தகத்தின் இடப்புறத்தில் இவை இடம்பெறவேண்டும். வலப்புறத்தில் பாடச்சுருக்கம், மதிப்பிடும் கருத்துகள் போன்றவற்றை எழுதும்படி அறிவுறுத்தவேண்டும். இப் புத்தகங்களையெல்லாம் ஆசிரியர் சேகரித்துத் திறனுய்வு செய்த பிறகு திருப்பித் தரவேண்டும்.

## (5) துண்டுப் பதிவுப் புத்தகம் (Scrap book)

வரலாற்றுப்பாடத் தலைப்புகள் தொடர்பாக அன்றாடச் செய்தித் தாள்களிலோ, வேறு நூல்களிலோ கருத்துகள் கிடைக்குமாயின், அவற்றைக் கத்தரித்து இப் புத்தகத்தில் ஒட்டுவதோ அல்லது அவற்றைப் பார்த்து இப்படியே எழுதுவதோ செய்யலாம். மற்றும் பாடத்தொடர்பாக வெளியாகும் புகைப்படங்கள், வரைபடங்கள், புள்ளி விவரங்கள் ஆகியவற்றைத் திரட்டித் தொகுத்து இப் புத்தகத்தில் ஒட்டுதல் நல்லது. ஒவ்வொரு மாணவனும் இத்தகைய புத்தகம் வைத்திருப்பது பயன் விளைவிக்கும்.

## (6) இணைவழிப் படிப்புப் புத்தகம்

இணைவழிப் புத்தகங்களில் மாணவர்கள் படித்தறிந்த கருத்துகளை குறித்துவைப்பதுபற்றிச் சென்ற பாடத்தில் பார்த்தோம். இணைவழிப்படிப்பானது வரலாற்றுப் பாடப்பொருள் தொடர்பாகத் தேவையான சிறப்பான கருத்துகளைப் பிறநூல்களிலிருந்து எடுத்துப் பயன்படுத்திக்கொள்ள உதவுகிறது. பொது அறிவை வளர்க்கவும், படிக்கும் பழக்கம் ஏற்படவும் இத்தகைய படிப்பு உதவுகின்றது.

### முடிவுரை

கற்றல் பற்றிய செயல்களில் எவ்விதம் மரணவர்கள் ஈடுபடுகிறார்கள் என்பதை இவ்விதப் பதிவுப்புத்தகங்கள் தெளிவுபடுத்துகின்றன. மாணவர்களின் திறமை, மனப்போக்கு போன்றவற்றை ஆய்ந்தறிவதற்கும் இவை உதவுகின்றன. இப் பதிவுப் புத்தகங்களைப் பயிற்சிப் புத்தகங்களாக எந்த மாணவனும் கருதப்படமாட்டாது. தன் இச்சைப்படி இப் புத்தகங்களை மாணவன் உருவாக்குவதால், அதைப்பற்றி மகிழ்ச்சி அடைவான். இக் குறிப்புப் புத்தகங்களைத் தேர்வுக்குப் பிறகு பயனற்றதாகக் கருதாமல், எப்பொழுதும் தன்னிடம் இருக்கவேண்டும் என்றும் கருத ஆரம்பிப்பான் என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

### வினாக்கள்

(1) 'குறிப்பு எடுத்தல், குறிப்புத் தொகுத்தல்'—ஆகியவற்றைத் தெளிவுபடுத்துக.

(2) வரலாறு கற்கும் மாணவர்கள் பாடத்தையொட்டித் தயார் செய்யவேண்டிய பதிவேடுகளை விவரித்து எழுதுக.

## (9) வரலாறு கற்பிக்கும் ஆசிரியர் (The History Teacher)

ஆசிரியர் பதவியைப் பெற்று அத் தொண்டைச் செய்கின்றவர்களெல்லாம் உயர்தரமான பணியை நடத்துகின்றவர்களாகக் கருதப்படுகின்றனர். ஆசிரியர்தான் பள்ளிக்கூடத்தின் உயர்நிலை என்பதையும் மறப்பதற்கில்லை. நல்ல சூழ்நிலை, வேண்டிய கற்பிக்கும் கருவிகள், திறமையுள்ள மாணவர்கள் போன்றவை எல்லாம் இருப்பினும் நல்ல ஆசிரியர் ஒருவர் இல்லையென்றால் மற்ற வசதிகள் இருந்தும் பயனில்லாமல் போய்விடும்.

வடிவ கணிதத்தைக் (Geometry) கற்பிக்கும் ஆசிரியருக்குப் புதுடில்லியின் இருப்பிடத்தைப்பற்றித் தெரியவில்லை என்றால் அது பெருங்குற்றமாகக் கருதப்படமாட்டாது; மொழி ஆசிரியருக்கு வியட்நாம் பிரச்சினைப்பற்றித் தெரியவில்லை யென்றால், அதைப் பொறுத்துக்கொள்ளலாம்; வரலாற்றுப்பாட ஆசிரியருக்கு இவற்றைப் பற்றி தெரியவில்லையென்றால் இகழ்ச்சிக்குரிய செயலாகும். வரலாற்றுப்பாட ஆசிரியர் இக் கால நிகழ்ச்சிகளை அறிந்தவராக இருக்கவேண்டும்; பாடப்பொருளை விளக்கிக்கூறும் ஆற்றலைப் பெற்றிருப்பதோடு மக்களின் தொடர்புகளை அறிந்திருந்தால்தான் அத் தொடர்புகளைப்பற்றிக் கற்பிக்க முடியும்.

### ஆசிரியரின் கடமைகள்

(i) சமூகத்தில் பல்வேறுபாடுகள் உள்ள பிரிவினர்கள் இருப்பார்கள். ஒவ்வொரு பிரிவைப்பற்றியும் விளக்கிக் கூறவேண்டியவர் வரலாற்றுப்பாட ஆசிரியரேயாவார். மனிதத் தொடர்பைப்பற்றி அதிகம் தெரிந்தவராக இருப்பதால், சமூகத்தைப்பற்றிப்பள்ளிக்கும், பள்ளியைப்பற்றிச் சமூகத்திற்கும் விளக்கிக் கூறவேண்டிய பொறுப்பு வரலாற்றுப்பாட ஆசிரியரைச் சாரும்.

(ii) கடந்த காலத்தை இக் காலத்துடனும்; அயலானவற்றை உள்ளூர்பற்றியவற்றுடனும்; அருகிலுள்ளதைத் தூரத்திலிருப்பவற்றுடனும்; பள்ளிக்கூடத்தைச் சமூகத்திடனும் இணைக்க வேண்டியவர் வரலாற்றுப்பாட ஆசிரியர் என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். எனவே, 'வரலாற்றுப்பாட ஆசிரியர் அறிவில் எடுத்துக்காட்டாகவும் (a paragon of wisdom), நடத்தையில் நயத்திறம் பெற்றவராகவும் (a diplomat in conduct), துணிவில் ஐயத்துக்கிடமின்றி, சிங்கத்திற்கு ஒப்பாகவும் (unequivocating lion in courage) இருக்கவேண்டும்.'

(iii) வரலாற்றுப்பாட ஆசிரியரின் மூன்றுவது கடமை, பாடத்திட்டத்தை உருவாக்குகின்றவராகவும் இருக்கவேண்டுமென்ப

தாகும். வரலாற்று ஆசிரியரின் வரலாறு, பொருளாதார வல்லு நரின் பொருளாதாரம், நிலநூல் ஆசிரியரின் நிலநூல் போன்ற வற்றைச் சுருக்கி மாணவர்களுக்கு ஏற்ப மாற்றி அமைக்க வேண்டு மென்பது அவரின் கடமையாகும்.

**வரலாற்றுப்பாட ஆசிரியரின் சிறந்த பண்புகள்:** வைனிங் ஆசிரியர்கள் கீழ்வரும் பண்புகளைக் கொண்டவராக வரலாற்றுப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் இருக்கவேண்டும் என்று கூறி யுள்ளனர். அவையாவன:

(i) புலமை (Scholarship)

(ii) தொழிற்முறைப் பயிற்சி (Professional Training)

(iii) ஆளுமை (Personality).

(i) **புலமை:** ஆசிரியர் பணிக்குப் புலமை இன்றியமையாத பண்பாகும். தான் கற்பிக்கும் பாடத்தில் ஆழ்ந்த அறிவும், பிற பாடங்களைப் பற்றிய பொது அறிவும் ஆசிரியர் பெற்றிருக்க வேண்டும்.

வரலாறு கற்பிப்பதின் நோக்கத்தையும், குறிக்கோளையும் வரலாற்றுப்பாட ஆசிரியர் நன்கு உணர்ந்திருக்கவேண்டும். அவற்றில் நம்பிக்கையுடையவராகவும் இருக்கவேண்டும். அவ்வித எண்ணம் பற்றிய ஆசிரியர்கள் வரலாறு கற்பிப்பதில் அதிக உற்சாகம் உடையவர்களாகத் திகழ்வது திண்ணம். வரலாறு கற்பிக்கும் ஆசிரியர் உலக வரலாற்றினைப்பற்றி நல்ல புலமை பெற்றிருத்தல் இன்றியமையாத ஒன்றாகும். நாட்டின் வரலாறு உலக வரலாற்றின் அடிப்படையில் அமையவேண்டும் என்பது அறிஞர்களின் கருத்தாகும். எனவே, வரலாறு கற்பிக்கும் ஆசிரி யருக்கு உலக வரலாறு நன்கு தெரிந்திருக்க வேண்டும் என்பது நன்கு விளங்கும். நம் நாட்டின் வரலாறு, உள்ளூர் வரலாறு, நிலநூல் பற்றிய பொது அறிவு, இவற்றைப் பெற்றிருப்பது அவரது நிலையை உயர்த்துவதாக அமையும்.

(ii) **தொழில்முறைப் பயிற்சி:** வரலாற்றுப் பாடத்தில் அடங்கி யுள்ள பாடத்தில் தேர்ச்சி பெறுவதுடன் இதனைக்கற்பிக்கும் முறை யிலும் ஆசிரியர் பயிற்சி பெற்றுத் தேர்ச்சிப்பெற்றவராக இருக்க வேண்டும். பயிற்சிக் கல்லூரியோடு பயிற்சி முடிவு பெற்றதாக எந்த ஆசிரியரும் கருதக்கூடாது. அவரது பயிற்சியானது பயிற்சிக் கல்லூரியில் தொடங்கப் பெற்று, பள்ளியில் பணியாற்றும் பொழு

தும், வாழ்க்கை பூராவும் பயிற்சித் தொடர்ந்து நடந்துகொண் டிருக்கவேண்டுமென்பதை மறக்கலாது. ஆசிரியர் என்றும் மாணவராகவே தன்னைக் கருதிக்கொள்ளவேண்டும்.

பாடத்திட்டத்தின்படி, ஒவ்வொரு பாடத்திற்கும் பாடக்குறிப்பு தயாரித்து, அவ்விதமே வகுப்பறையில் வரலாறு கற்பிக்கவேண்டும், என்பதை வரலாற்று ஆசிரியர் உணரவேண்டும். ஒவ்வொரு தலைப்புக்கும் ஏற்றதுணைக்கருவிகளைப் பயன்படுத்திதான் கற்பிக்கும் பாடம் சுவையுள்ளதாக ஆக்கவேண்டும். புதிய முறைகளைச் சந்தர்ப்பங்கள் அனுகூலமாக இருக்கும் சூழ்நிலையில் பின்பற்றி வரலாறு கற்பிக்க முயலவேண்டும். செயல்திட்ட முறைகள், ஒன்றுகூடி ஆராயும்முறை, நடித்தல், வெளிப்பயணம், ஆய்வுக்கூட முறைகள் போன்றவற்றை நன்குணர்ந்து பாடத்தலைப்பிற்கு ஏற்பப் பாடத்தைக் கற்பிக்கத் திட்டமிடுதல்வேண்டும்.

**வேலையூடுக்கல்வி** நடைபெறவேண்டும். இக் கல்வியைப் பின் வரும் முறைகளைப் பின்பற்றி ஆசிரியர் பெறவேண்டும்:

(i) நாள் இதழ், வார இதழ், தொழில்பற்றிய புத்தகங்கள் போன்றவற்றை ஆசிரியர் வழக்கமாகப் படித்து வரவேண்டும்.

(ii) ஆசிரியர் சங்கத்தில் சேர்ந்து, கல்விபற்றிய கருத்துகளை மற்ற ஆசிரியர்களுடன் கலந்து ஆலோசித்தல் வேண்டும்.

(iii) தான் கற்பிக்கும் பாடத்தில் தெளிவு பெறுவதற்குக் கட்டுரைகள், புத்தகங்கள் போன்றவற்றை ஆசிரியர் எழுத முற்படவேண்டும்.

(iv) வரலாற்றைக் கற்பிப்பதற்கு உதவும் சிறப்பு இடங் களுக்குக் கல்விப் பயணம் மேற்கொள்ளுதல் ஆசிரியரின் அறிவை விரிவுப்படுத்தும். தொழிற்சாலைகள், அரசாங்க அலுவலகங்கள் போன்றவற்றிற்குச் சென்று வருவதால் ஆசிரியர் திறமையும், அறிவும் வளர்ச்சியடையும் என்பதை மறுப்பதற்கில்லை.

(v) சமூகத்தோடு ஒட்டிய வாழ்க்கையையும் ஆசிரியர் நடத்த வேண்டும். சமூகப் பணியில் ஆசிரியர் ஈடுபடுவதால், சமூக வளத்தை நன்கு ஆசிரியர் தெரிந்து கொள்ள வாய்ப்புகள் ஏற்படு கின்றன.

(vi) ஆசிரியர்களுக்காக ஏற்படும் மாநாடுகள், கூட்டங்கள், கருத்தரங்குகள், மறு பயிற்சி முகாம் போன்றவற்றில் ஈடுபடு வதற்கு வரலாற்று ஆசிரியர் முந்திக் கொள்ளவேண்டும்.

(vii) நாடகங்கள், கலைநிகழ்ச்சிகள், வானொலி நிகழ்ச்சிகள், திரைப்படங்கள், விளையாட்டுப் பந்தயங்கள் போன்றவை நடைபெறும்பொழுது அவற்றைக் காணவும், கேட்கவும் ஆசிரியர் தவறக்கூடாது. தன் நாட்டின் பண்பாட்டை உணர்வதற்கும், அறிவை விரிவு படுத்திக்கொள்வதற்கும் இவை பெரிதும் உதவுகின்றன.

(iii) **ஆசிரியரின் ஆளுமை:** ஆசிரியரின் ஆளுமையை விவரிப்பது மிகக் கடினம். ஆயினும், பின்வரும் தன்மைகள் ஆசிரியருக்குத்தேவை:

(i) உடல்பற்றிய கூறுகள் (Physical aspects)

(ii) நற்குணங்கள் (Physical virtues)

(iii) நிர்வாகத் திறமை (Executive abilities)

(i) **உடல் பற்றிய கூறுகள்:** உடல்பற்றிய கூறுகள் எனப் படுபவை பின்வருவன:

(அ) தோற்றப் பொலிவு: ஆசிரியரின் உடை, தோற்றம், சலிப்பு தரும் தனிப்பழக்கம், துப்புரவு போன்றவற்றில் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். தோற்றப்பொலிவு இருந்தால்தான் மாணவர்களுக்கு ஆசிரியர்பால் பற்று ஏற்படும்.

(ஆ) தயாள குணம், பிறர் இடையூறுகளை அறியும் தன்மை, பரந்த மனப்பான்மை போன்ற குணங்களைப் பெற்றிருக்க வேண்டும்.

(இ) ஆசிரியருக்கு நல்ல குரல் அமைதல் அவர் வெற்றிக்குக் காரணமாக அமையும். வெறுப்பூட்டும் குரல் அமைந்திருப்பின், அதை மாற்றிக் கொள்ள முயற்சி எடுக்கவேண்டும்.

(ஈ) நல்ல மொழியில் தன் கருத்தை வெளியிடும் திறமை ஆசிரியருக்கு வேண்டும்.

(உ) ஆசிரியரின் உடல்நிலை நல்லதாக இருக்கவேண்டும். ஆசிரியர் சுறுசுறுப்புடன் கற்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டால், மாணவர்களுக்குப் பாடத்தில் உற்சாகம் ஏற்படும். வகுப்பறையில் ஏற்படும் குழப்பங்களின் பெரும்பான்மை ஆசிரியரின் உடல் நலக் குறைவினால் ஏற்பட்டவையாகத்தான் இருக்கும்.

(ii) **நற்குணங்கள்:** ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களை, அவர் கூறும் செய்திகளையும் மாணவர்கள் நாளடைவில் மறந்துவிடுவார்கள். ஆசிரியரின் நற்குணங்களையும், அவரது நல்ல சொற்களையும், அவர் காட்டும் அன்பையும் வாழ்க்கை பூராவும் மாணவர்கள் நினைவில் இருத்திக் கொள்வார்கள். நற்குண நற்செய்கையுடைய ஆசிரியர் மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவே விளங்குவார். ஆசிரியர் பெற்றிருக்க வேண்டிய நற்குணங்களில் குறிப்பிடத் தக்கவைகளாவன:

(அ) மாணவர்களிடம் தோழமையோடு பழகுதல். கடினமாக வேலை வாங்குபவர் என்று ஆசிரியரைக் கருதாமல் தங்கள் நலத்தைக் கருதுபவர் என்று ஒவ்வொரு மாணவனும் தன் ஆசிரியரைப் பற்றி நினைக்கும்படி ஆசிரியர்கள் மாணவர்களிடம் பழகுதல் வேண்டும்.

(ஆ) மாணவர்களின் குறைகளைக்கண்டு ஆசிரியர் சினம் கொள்ளக்கூடாது. மாணவர்களின் இடையூறுகளைக் கண்டு, அவற்றை நீக்க முற்படுவதே ஆசிரியரின் சிறந்த குணமாகும்.

(இ) நேர்மையாக நடந்து கொள்ளுதல்: தன் தொழிலில் நேர்மையாக நடந்து கொள்வதுதான் ஆசிரியரின் சிறப்பை அதிகரிக்கும்.

(ஈ) வகுப்பறையில் பாடத்தில் எழும் பிரச்சினைகளைப் பற்றிக் கலந்து உரையாடல் நடைபெறும்பொழுது ஒரு புறம் சார்ந்தவராக ஆசிரியர் இருக்ககூடாது. சமயோசித யுக்தியுடையவராக இருப்பது ஆசிரியரியன் குணங்களில் ஒன்ருகும்.

(உ) ஆசிரியர் பாரபட்சமாக இருக்கின்ருர் என்று மாணவர்கள் கருதும்படி நடந்து கொள்ளாமலிருப்பவரே சிறந்த ஆசிரியராவார். எல்லா மாணவர்களையும் சமமாகக் கருதி அன்புடன் அவர்களை நடத்தவேண்டும்.

(ஊ) தன்னடக்கம் உடையவராகவும் இருக்கவேண்டும்

(எ) எல்லாம் நன்மைக்கே என்னும் கொள்கையையும், மாணவர்களின் செயலாற்றும் திறமையில் நம்பிக்கை வைப்பவராகவும் ஆசிரியர் இருக்கவேண்டும்.

(ஏ) மாணவர்கள் உற்சாகமுடன் இருக்கவேண்டுமாயின் ஆசிரியரும் வகுப்பில் உற்சாகமுடன் இருக்கவேண்டும்.

(iii) **நிர்வாகத் திறமை:** வரலாற்றுப் பாடத்தைக் கற்பிக்கும் பொழுது, மாணவர்களுக்குப் பல வேலைகளை அளிக்க நேரிடும்,

அவற்றை மாணவர்கள் பூர்த்தி செய்வது ஆசிரியரின் நிர்வாகத் திறமையைப் பின்பற்றியதாகும். நிர்வாகத்திறமை வாய்ந்த ஆசிரியரால்தான் பாடங்களைச் சரிவரக் கற்பிக்கமுடியும்.

ஆசிரியர் மாணவர்களின் தலைவர். எனவே, தலைவர்களுக்கு வேண்டிய திறமைகள் எல்லாம் ஆசிரியரிடம் காணப்படவேண்டும். அவற்றில் பின்வருவன குறிப்பிடத்தக்கவை:

(அ) தன்னம்பிக்கையும், தன் சார்பும் உடையவராக ஆசிரியர் இருக்கவேண்டும்.

(ஆ) ஆசிரியர் ஒரு தலைவர், பின் செல்கின்றவர் அல்லர். எனவே, மாணவர்களைக் கற்றலில் ஈடுபடுத்தும்பொழுது ஆசிரியரிடம்தான் தொடங்காற்றல் திறமை இருக்கவேண்டும்.

(இ) சூழ்நிலைக்கு ஏற்ப, தான் கற்பிக்கும் முறைகளை மாற்றி அமைத்துக்கொள்ளும் திறமையையும் பெற்றவராக ஆசிரியர் இருக்கவேண்டும்.

(ஈ) மாணவர்கள் பலவிதமான அனுபவங்களைப்பெறுவதற்குப் பலவித செயல்களை மேற்கொள்ள நேரிடும். அவற்றை ஒருங்கமைத்து மாணவர்களுக்கு அளிக்கும் திறமைபும் ஆசிரியரிடம் வேண்டற்பாலது.

(உ) உண்மை உழைப்பும் ஆசிரியருக்குத் தேவைப்படும். தலைவர்களெல்லாம் உழைப்பினுல்தான் உயர்ந்தவர்கள். எனவே, வரலாற்றுப்பாட ஆசிரியரும் உழைப்பினுலேயே தன்னை உயர்த்திக் கொள்ளவேண்டும்.

**முடிவுரை**

மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் தொண்டில் மாணவர்களின் வீடுகளும், பள்ளியும் ஈடுபட்டுள்ளன. பள்ளிக்கும், சமூகத்திற்கும் நெருங்கியத் தொடர்பு ஏற்படவேண்டும். இதைச் செய்து முடிக்கும் பொறுப்பு வரலாற்றுப்பாட ஆசிரியரைச் சாரும். பெற்றோர்களுடன் நெருங்கிய தொடர்பை வரலாற்றுப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் வளர்ச்சியடையச் செய்யவேண்டியவராக இருக்கிறுர்.

வரலாற்றுப்பாட ஆசிரியரின் தகுதி அதிகமானது என்பது முன் கூறியவற்றினின்றும் தெரியவருகின்றது. வரலாற்றுப்பாட ஆசிரியரின் தகுதியைப் பற்றி **இங்கில்மென்** (Engleman) பின்

வருமாறு கூறியுள்ளார்: 'நல்ல புலமை பெற்ற ஆசிரியர்கள் சிறந்த முறைகளைப் பின்பற்றிக் கற்பித்தாலும், மாணவர்களின் மனவெழுச்சியைத் தூண்டும் சூழ்நிலையை வகுப்பில் ஏற்படுத்தத் தவறினால், அவரின் தொண்டு வீணாகும். செடி கொடிகள் வளர்வதற்குக் கதகதப்பு எவ்விதம் தேவைப்படுகின்றதோ, அதே விதமாக மாணவர்களின் வளர்ச்சிக்கும், நல்ல மனவெழுச்சியும் தேவைப்படும். இதை அளிக்க வல்லவர் ஆசிரியரேயாவார்.'

**வினாக்கள்**

(1) நல்ல வரலாற்று ஆசிரியரின் சிறப்பியல்புகளை விவரிக்க.

(2) வரலாற்று ஆசிரியரின் மூன்று சிறந்த பண்புகளைக் கூறுக.

(3) வரலாற்று ஆசிரியரின் ஆளுமை—விவரி.

## (10) இக் கால நிகழ்ச்சிகளைக் கற்பித்தல் (The Teaching of Current events)

**(அ) இக் கால நிகழ்ச்சி—வரையறுத்துக் கூறுதல்:** இக் கால நிகழ்ச்சிகள் என்ற சொல்லானது நாம் வாழும் இக் காலத்தில் நிகழ்கின்ற செய்திகளில் திட்டமிட்டுக் குறிக்கப்பட்டவற்றைக் குறிப்பதாகும். வெகு சமீபகாலத்தில் நடந்த பாடப்பொருள்கள் யாவும் புத்தகத்தில் இடம்பெறுவதற்கு முடியாதவைகளாக இருக்கின்றன. அவ்விதப் பாடப்பொருள்களைத்தான் இக் கால நிகழ்ச்சிகள் என்று எல்லோரும் ஒத்துக்கொள்கின்றனர்.

நம் நாட்டின் பாராளுமன்றத்தில் நடைபெறும் செயல்கள், கவர்னர் அல்லது முதல் மந்திரியின் பேச்சு, ஒரு புதிய தொழிற்சாலை அமைத்தல், புகழ் பெற்ற ஒருவரின் வருகை, பயங்கரக் கொள்ளை, கொலை, வேலை நிறுத்தம், தீப்பிடித்தல், அணை கட்டுதல், மண விலக்குப்போன்ற செய்திகள் யாவும் நாள் இதழ்களில் வெளியிடப்படுகின்றன. எனவே, நாள் இதழ்களில் தற்காலத்திய பயன், நிலைத்த பயன் போன்றவற்றை அளிக்கும் செய்திகளையும், எளிமையானவற்றையும், குறிப்பிடவேண்டியவற்றையும் கூட வெளியிடப்படுவதை நாம் பார்க்கின்றோம். இதனால் எல்லா விதமான இக் கால நிகழ்ச்சிகளும் மாணவர்களுக்குக் கற்பிக்க ஏற்றவை அல்ல என்பது நமக்கு நன்றாக விளங்கும்.

சமூகத்தில் நாம் காணும் இயக்கங்கள், கருத்துகள், போக்குகள், மாறுதல்கள் யாவும் இக் கால நிகழ்ச்சிகளில் இடம்

பெறவேண்டும் என்பதையும் நாம் நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும். **ஆர். எஸ். சிம்பால்** என்னும் ஆசிரியர் பின்வருமாறு இக் கால நிகழ்ச்சியை வரையறுத்துக் கூறியுள்ளர்: 'பற்றுதியும், பணியாற்றுவதும் கொண்ட குடியுரிமையைப் பெறுவதற்கு அடிப் படையாக அமையும் உள்ளூர், பன்னுட்டுத் தொடர்புள்ள செய்திகளும், சமூக, பொருளாதார, அரசியல்பற்றிய அறிவை அளிக்கும் பாடப்பொருள்கள் யாவும் இக் கால நிகழ்ச்சி களாகும்.'

**(ஆ) இக் கால நிகழ்ச்சிகளைக் கற்பிப்பது பற்றி மாறுபட்டக் கருத்துகள்:** வரலாற்றுப் பாடம் கற்பிப்பதில் ஒரு சிறந்த இடத்தை இக் கால நிகழ்ச்சிக்கு அளிக்கவேண்டும். இக் கால நிகழ்ச்சிகள் கொள்கைக்கு உகந்ததா யிருப்பதாலும், கடந்த கால நிகழ்ச்சிகள் எல்லாம் இறந்தவர்களைப் பற்றிய கதையாக இருப்பதாலும், மறைந்த காட்சிகளின் வர்ணனையைக் கொண்டதாக இருப்ப தாலும், இக் கால நிகழ்ச்சிகள்தான் மாணவர்களுக்குக் கற்பிக்கத் தகுதி வாய்ந்தவைகளாகும்.

இக் கொள்கைக்கு மாருக, 'இக் கால நிகழ்ச்சிகளை' இளம் மாணவர்களுக்குக் கற்பிக்கவே கூடாது என்று சிலர் கூறு கின்றனர். கடந்தகாலச் செய்திகளை நன்கு கற்றறியாமல் இக் கால நிகழ்ச்சிகளைக் கற்கவேமுடியாது என்று கூறுகின்ருர்கள். கடந்தகால நிகழ்ச்சிகளைப் புரிந்துகொள்ளாவிட்டால், இக் கால நிகழ்ச்சிகளைக் கற்க மாணவர்கள் முற்பட்டாலும் அவற்றை எளிதில் புரிந்துகொள்ளவே முடியாது என்பது அவர்களின் கூற்ருகும். நம் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள் கடந்தகால நிகழ்ச்சிகளை நன்கு கற்று, அவற்றில் முழுத்திறன் பெறவில்லை; எனவே, அவர்களுக்கு இக் கால நிகழ்ச்சிகளைக் கற்பிக்க முயலவே கூடாது என்று கூறுகின்றனர்.

முடிவாகக் கூறுமிடத்து, கடந்தகால நிகழ்ச்சிகளை ஐயந்திரி பறக் கற்கும் வரையிலும் இக் கால நிகழ்ச்சிகளைக் கற்பிப்பதை ஒத்திவைக்கவேண்டியதில்லை. மக்கள் ஆட்சி நிலவும் நாடுகளில் வாழும் குடிமகன் ஒவ்வொருவனும் எல்லாப் பாடப்பொருளையும் அறிந்தவனுக இருக்கவேண்டும். இக் கால நிகழ்ச்சிகளை அறியும் முறைகளையும் தெரிந்துகொள்ளவேண்டும். எனவே, வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்கள், இளம் மாணவர்கள் இக் கால நிகழ்ச்சி களைத் தேர்ந்தெடுப்பதற்கும், அவற்றைப் பாடங்களுடன் தொடர்பு படுத்திக் கற்பதற்கும் உதவி செய்யவேண்டும்.

**(இ) இக்கால நிகழ்ச்சிகளைக் கற்பிப்பதன் குறிக்கோள்கள்:** இக் கால நிகழ்ச்சிகளைக் கற்பிப்பதன் நோக்கங்கள்பற்றிப் பல

விதமான கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் மூன்று ஆசிரியர்களின் கருத்துகளை இங்குக் கவனிப்போம்.

ஆசிரியர் **பைனிங் (A. C. Bining)** அவர்கள் **மூன்று குறிக்கோள்களைக்** கூறுகின்றார். அவையாவன:

(i) வரலாற்றுப் பாடத்தை மாணவர்கள் கற்பதை இன்றியமையாதனவாக ஆக்கவும்,

(ii) நாள் இதழ்களையும், மாத இதழ்களையும் அறிவுக் கூர்மையுடன் படிக்கும் திறனை வளர்க்கவும்,

(iii) தாங்கள் வாழும் உலகத்தின் கண்காணும் பெரும் பிரச்சினைகளைத் தெரிந்துகொள்ளும்படிக் குழந்தைகளுக்கு உதவவும் இக் கால நிகழ்ச்சிகளைக் கற்பித்தல் பள்ளிகளில் நடைபெற வேண்டும் என்பதாகும்.

ஆசிரியர் **ஆர். எஸ். கிம்பால்** கூறியுள்ள நோக்கங்களில் நான்கு குறிப்பிடத்தக்கவையாகும்:

(i) உள்ளூர் பிரச்சினைகளைத் தெரிந்து கொள்வதனால் குடிமகனுக்குவேண்டிய பண்பு வளர்க்கப்படுகின்றது. வாழ்க்கையில் ஏற்படும் உண்மையான சம்பவங்களைச் சமாளிக்கும் திறமை ஏற்படுகின்றது;

(ii) வாழ்க்கையோடு தொடர்புள்ள செய்திகளைப் பாடங்களுடன் இணைத்துக் கூறும்பொழுது அப் பாடங்களைக் கற்க மாணவர் இன்புறுவர்;

(iii) எந்தப் பிரச்சினையையும் நேர்முகமாகப் பரிசீலிக்கும் ஆற்றலும் அதன் மாறுபட்டக் கருத்துகளை ஆராய்ந்து முடிவு காணும் திறமையையும் இக் கால நிகழ்ச்சிகளைக் கற்கும்பொழுது ஏற்படுகின்றது.

(iv) நாள் இதழ், மாத இதழ்களை அறிவுக் கூர்மையுடன் உபயோகிக்கும் பழக்கமும் ஏற்படுகின்றது.

ஆசிரியர்கள் **வேன்கிளார், கிராபோர்டு** (Fancler and Crawford) ஆகியோர் கீழ்க்காணும் ஐந்து நோக்கங்களைக் கூறுகின்றனர்:

(i) வரலாற்றுப் பாடத்தைக் கற்பிக்கும்பொழுது இக் கால நிகழ்ச்சிகளையும் ஆசிரியர்கள் உபயோகிக்கவேண்டும். சமூகத்

தொடர்புள்ள செய்திகளை நன்கு புரிந்து கொள்ள இக் கால நிகழ்ச்சிகளின் அறிவு உதவுகின்றன.

(ii) மாணவர்கள் வாழ்கின்ற இக் காலத்தில் நடைபெறும் உலக நிகழ்ச்சிகள் மாத இதழ், வாரஇதழ், நாளிதழ்களில் வெளியிடப்படுகின்றன. இதைக் கற்பதனுல் பொதுப் பிரச்சினைகளை அறிவதற்கு ஆவலுறுவதுடன், பரந்த மனப்பானமையையும் பெற்றுச் சிறந்த குடிமைப் பண்பையும் குழந்தைகள் பெறவேண்டும்.

(iii) வரலாற்றுப் பாடத்தினுல் பெறும் அறிவை வாழ்க்கையினுல் பயன்படுத்தும் பொழுது, சமூகத்தில் ஏற்படும் மாறுபாடுகளுக்கு ஏற்ப அவற்றைத் திருத்தி அமைத்துக் கொள்ளக் குழந்தைகளுக்குத் திறமைவேண்டும். சரக்குவரி, மூலதனம், தொழிற்பிரச்சினை, பாதுகாப்பு, குடியிறக்கம் போன்றவற்றைப் பற்றிய கருத்துகள் நிலையாக இருப்பவையல்ல. அவற்றை எவ்வாறு காலப்போக்கிற்குத் தகுந்தபடி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கருத்து இக் கால நிகழ்ச்சியைப் பயிலுவதனுலேயே ஏற்படுகின்றது.

(iv) புதிய பாடங்களில் மாணவர்களை ஊக்குவிப்பதற்கு இக் கால நிகழ்ச்சிகள் பெரிதும் பயன்படுகின்றன. தாங்கள் கற்கும் பாடத்தில் ஒருவிதக் கவர்ச்சியை மாணவர்கள் பெற்று அதில் அதிகக் கவனம் செலுத்துவார்கள்.

(v) வாழ்க்கையில் ஏற்படும் 'உண்மையான நிலைகளை'ச் சாமளிக்க மாணவர்களைத் தயார் செய்வதற்கு 'இக் கால நிகழ்ச்சிகள்' உதவும். ஒரு பிரச்சனையின் இரு புறக் கருத்துகளையும் அறிகின்றவரையிலும் தாங்கள் அடையும் முடிவை ஒத்திவைக்கவும், கொடுக்கப்பட்ட கருத்துகளில் சிறந்ததைத் தேர்ந்தெடுக்கவும் மாணவர்கள் எளிதில் கற்பதற்கு வாய்ப்பளிக்க முடிகின்றது.

**(ஈ) எவ்வாறு இக் கால நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுப்பது?:** இக் கால நிகழ்ச்சிகள் பற்றிய அறிவைப் பெறுவதற்கு முதலாவதாக எடுக்க வேண்டிய செயல் நாள் இதழை முழுநிறைவாகப் படிக்கும் பழக்கத்தை வளர்க்கவேண்டும். நல்ல நாள் இதழ் கிடைக்கவில்லை என்று கூறி ஆசிரியர்கள் தங்கள் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொள்ளக்கூடாது. கிடைக்கும் நாள் இதழை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். நாள் இதழை முழு நிறைவாகப் படிக்க வேண்டுமானுல் பாடப்பொருள்களுக்கு முதல் இடம் அளிக்க வேண்டும். முக்கியமான பாடப்பொருள்களைச் சாதாரண பாடப் பொருள்களினின்றும் பிரிக்க வேண்டும் இதற்குக் மேற்கொள்ள

வேண்டிய 'படிவரிசையை' E.B. வெஸ்லி ஆசிரியர் தந்துள்ளார். அதைப்பின்பற்றிப பாடப்பொருள்களை மதிப்பீடு செய்து, சிறப்பான வற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அவர் குறிப்பிட்டிருக்கும் அட்டவணையில் பாடப்பொருள்கள் அவற்றின் முக்கியதத்துவத் தைக் கொண்டு ஏறுவரிசையில் கொடுக்கப்பட்டுள்ளன. மிகவும் முக்கியமான தலைப்புகள் கடைசியில் இருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.

(1) புதுமை வாய்ந்த செயல்கள்.

(2) எதிர்ப்பாரா இடர்கள்.

(3) தீப்பிடித்தல்

(4) மோசடி பற்றிய செயல்கள்.

(5) விளையாட்டுபற்றிய செயல்கள்.

(6) ஆண், பெண் பற்றிய மணவிலக்கங்கள், குற்றங்கள் போன்றவை.

(7) காலநிலை அறிவிப்புகள், உடல் நலன் பேணும் அலுவலகங்கள்.

(8) இசை, கலை, இலக்கியம்.

(9) இயல்நூல், புதிய கண்டுபிடிப்புகள்.

(10) மதம், கோவில்கள் பற்றிய பாடப்பொருள்கள்.

(11) பொருள்களின் விலைவாசி, வேலைதரும் முயற்சி, வாணிகம், போக்கு வரத்து வழிகள்.

(12) உள்ளூர், இராச்சியம், மத்திய ஆட்சி, அரசாங்கம் இயங்கும் விதம், நிர்வாக முறைகள், நீதி நிர்வாகம்.

(13) ஜனாதிபதி, வெளிநாட்டுக் கொள்கை.

(14) பன்னாட்டுக் செய்திகள்.

(15) ஐ. நா. சங்கத்தின் அலுவல்கள்.

**(உ) இக் கால நிகழ்ச்சிகளைக் கற்பிக்க மேற்கொள்ளப்படும் முறைகள்:** இக் கால நிகழ்ச்சியை அது ஒரு பாடம் அல்லது ஒரு

சேமிப்பு அல்லது ஒரு முறை அல்லது ஊக்குவிக்கும் ஒரு வழி அல்லது ஒரு பிரச்சினை என்று ஒரு மனப்பட்ட தன்மையாக எவராலும் கூற இயலாது.

இக் கால நிகழ்ச்சியைக் கல்வித் திட்டத்தின் ஒரு பகுதியாகச் சிலர் கூறுவர். வரலாறு அல்லது நிலநூல் புத்தகத்தில் இடம் பெருத புதிய நிகழ்ச்சிகளைக் கற்பிக்க ஆசிரியர் சில பிரிவேளைகளை ஒதுக்குவார். அப்பொழுது இக் கால நிகழ்ச்சிகள் என்பது ஒரு தனிப்பாடமாக கருதப்படுவதாகும். இன்னும் சில ஆசிரியர்கள் தாங்கள் கற்பிக்கும் பாடங்களுக்கு, விளக்கங்கூறுவதற்கு இக் கால நிகழ்ச்சிகளை மேற்கொள்ளுவார்கள், ஆசிரியர்கள் இக் கால நிகழ்ச்சிகளை அறிந்து அவர்கள் விரும்பும் சமயத்தில் வகுப்பறையில் பாடத்தின் சில கட்டங்களை விளக்கிக் கூறும் பொழுது உபயோகிப் பார்கள். எனவே, இவர்களால் இக் கால நிகழ்ச்சியானது 'விளக்கங்கள் நிறைந்த களஞ்சியமாக'க் கருதப்படுகின்றது. வேறு சில ஆசிரியர்களால், ஒரு 'கற்பிக்கும் முறையாகவும்', மேற்கொள் ளப்படுகின்றது. அதாவது, தற்கால நிகழ்ச்சியை விவரித்துக் கூறி அதைப் பாடத்தோடு ஒப்பிடுவதாகும். இன்னும் சிலர், புதிய பாடத்தில் மாணவாகளின் மனம் நாடவேண்டுமென்பதற்காக அவர் களுக்கு நன்ருகத் தெரிகின்ற இக் கால நிகழ்ச்சியைக் கூறி, புதிய பாடத்தை ஆரம்பிப்பார்கள். எனவே, இங்கு 'ஊக்குவிக்கும்' கருவியாக அது அமைகின்றது.

இக் கால நிகழ்ச்சியை இவ்வாறு ஒருவிதக் கருத்தாக அமையும் வகையில் ஏற்றுக்கொள்ளக் கூடாது. மேற்கூறிய ஒவ்வொரு கருத்தின் தன்மைகள் யாவும் சேர்ந்த 'ஒன்றுதான்' இக் கால நிகழ்ச்சி என்று நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். அதை எவ்வாறு கருதவேண்டும், எவ்விதம் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதையெல்லாம் ஆசிரியரே திட்டம் செய்யவேண்டும்.

**(ஊ) இக் கால நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுக்கும்பொழுது கவனிக்க வேண்டிய ஒப்பளவுக் கருவிகள்:** நாள் இதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள் போன்றவற்றில் செய்திகளின் தலைப்புகள் வெளியிடப்படுகின்றன. அவற்றின் முக்கியத்துவத்தைக் கொண்டு இ.பி.வேஸ்லி கூறியுள்ளவாறு, 'படிவரிசை'யை மனத்தில் கொண்டு தேர்ந்தெடுக்கும் பொழுதுகூட சில பிரச்சினைகளைச் சமாளிக்கவேண்டியிருக்கின்றது.

செய்திகள் எளிதில் கிடைப்பதால் அவற்றைக் கற்க வேண்டுமென்பதில்லை. எனவே, எளிதில் கிடைக்கின்றது என் பதை ஓர் ஒப்பளவுக் கருவியாக ஏற்றுக் கொள்ளவேண்டியதில்லை.

மாணவர்களின் பார்வைக்கு வரத்தகாத பாடப்பொருள்கள் பல நாள் இதழ்களில் வருகின்றன. அவற்றைக் கற்பிக்கவேண்டு மென்று எவரும் விரும்பமாட்டார்கள்.

சில நிகழ்ச்சிகள் அடிக்கடி நிகழ்வதாலும், அதிகபத்திகள் நாள் இதழ்களில் அவற்றிற்கு அளிக்கப்படுவதாலும் நாம் அவற்றை ஏற்றுக் கொள்ளக்கூடாது. காதலரை உடன் கொண்டு போதல் போன்ற செய்திகள் அடிக்கடியும், அதிக அளவிலும் இதழ்களில் வெளியிடப்படுகின்றன. அவற்றைப் பற்றி நம் மாணவர்களுக்கு இக் கால நிகழ்ச்சியென்று கற்பிக்க முயலுவது தவறான செயலாகும். நம்பிக்கை வைக்கத் தகுந்த பாடப்பொருள்களையும் ஓர் ஒப்பளவுக் கருவியாகக் கருதிவிட முடியாது. ஐக்கிய நாட்டுச் சங்கத்தின் செயல்பற்றிய வெளியீடு எவ்வளவு நம்பிக்கை வாய்ந்ததாக யிருக்கின்றதோ, அவ்விதமே ஒரு கொலை விபத்தின் அறிவிப்பும் இருக்கலாம். கவர்ச்சியும், கற்பதற்கு எளிமையாக இருப்பதும் கூட ஒப்பளவுக் கருவிகளாக ஏற்க முடியாது. ஏனென்றால், அற்புச் செய்திகள் எல்லாம் எளிமையாக இருப்பதோடு, மாணவர்களின் கவர்ச்சியையும் பெறுகின்றன.

எனவே, செய்திகளைத் தேர்ந்தெடுக்கும் பொழுது மாண வர்களின் வயது, அநுவங்கள், புரிந்து கொள்ளும் தன்மை போன்றவையே ஒப்பளவுக் கருவிகளாக இருக்கவேண்டும். சிக்கல் நிறைந்த பொருளாதாரத் தலைப்புகளை இளம் மாணவர்களுக்குக் கற்பிக்கவேண்டியதில்லை. செய்திகளின் பலனைக் கொண்டு அவற் றைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதாகும். கல்வித் திட்ட மானது கடந்த காலத்தில் பலனுள்ளவைகளாக எவை இருந்தனவோ அவற்றை வருங்கால மக்களுக்குக் கற்பிக்கும் முயற்சியென்று எல்லோரும் கூறுவர். சமூகத்தினருக்கு எவ் விதச் செய்திகள் பலனுடையதாகயிருக்கும் என்பதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். எனவே, கல்வித்திட்டத் துடன் நேரிடையாகத் தொடர்புள்ள செய்திகளையே நாம் தேர்ந்தெடுத்தல் சிறந்த காரியமாகும். இவ்விதச் சோதனைக்கு ஒத்துவராத செய்திகளையும் புறக்கணிக்கவேண்டும்.

**(எ) கற்பிக்கத் திட்டமிடுதல்:** இக் கால நிகழ்ச்சியைத் தேர்ந் தெடுத்தலும், அவற்றை எவ்வாறு கற்பிப்பது என்பது பற்றித் திட்ட மிடுதலும் அடுத்து நடக்கவேண்டிய செயலாகும்.

நாள் இதழிலிருந்து செய்திகளின் தலைப்புகளை எழுதி வரச் சொல்லி, அவற்றை வகுப்பில் குழந்தைகள் படித்ததும், அது

பற்றிய ஓர் உரையாடல் நடத்திவிட்டு இக் கால நிகழ்ச்சியைக் கற்பித்துவிட்டேன் என்று கூறுவது அறிஞர்களால் ஒப்புக் கொள்ளக்கூடிய செயலாகாது. ஓர் ஆண்டு பூராவும் கற்பிக்க வேண்டிய தலைப்புகளை வருட ஆரம்பத்திலேயே தேர்ந்தெடுக்க வேண்டும். பிறகு மாணவர்களுடன் கலந்து அவ்வப்பொழுது நடக்கும் செய்திகள் பற்றிய தலைப்புகளையும் சேர்த்துக் கொள்ளவும் வேண்டும்.

தேர்ந்தெடுத்த தலைப்புகளிலிருந்து மாணவ குழுக்கள் விரும்பினவற்றை ஏற்றுக்கொள்வார்கள். தங்கள் தலைப்பைப் பற்றிய செய்திகளைச் சேகரிக்கவேண்டிய கால அளவையும் நிதானிப்பார்கள். எனவே, இக் கால நிகழ்ச்சியைக் கற்பது என்றால் இங்குமங்கும் சில செய்திகளின் தலைப்புகளைக் குறித்து வகுப்பில் படிப்பதோடு நின்றுவிடுவது என்பது அல்ல என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

**(ஏ) தலைப்புகள் பற்றிய செய்திகளைச் சேகரிக்க உதவும் மூலங்கள்:** நாளிதழ்கள், வார, பருவ மாத வெளியீடுகள், வானொலி அறிவிப்பு போன்றவற்றின் மூலமாக இக் கால நிகழ்ச்சிகளை அறியலாம்.

நாள் இதழ்களைத் தேர்ந்தெடுப்பதில் ஆசிரியர் தனிக்கவனம் செலுத்தவேண்டும். தவறுகள் நிறைந்த செய்திகளையும், அரசியல் கருத்துகளைத் திணிக்கும் இதழ்களையும், வேண்டப்படாத மட்டரகமான செய்திகளை வெளியிடும் இதழ்களையும் ஒதுக்கி விட வேண்டும். பல நல்ல இதழ்களைப் படித்துப் பற்பல கருத்துகளை அறிவதற்கு மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தல் வேண்டும்.

வார இதழ்களில், நாள் இதழ்களில் வெளியாகும் செய்திகளின் சுருக்கங்கள் வெளியிடப்படுகின்றன. மாணவர்கள் புரிந்து கொள்ளும் முறையில் இவற்றை நல்லபலனைத் தரத் தகுதியுடையனவாகும்.

பருவ, மாத இதழ்களையும் நம் மாணவர்கள் படிக்கவேண்டும். கட்டுரைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாலும், செய்திகள் விளக்கப்படங்களுடன் தரப்பட்டிருப்பதாலும், எளிய நடையில் எழுதப்பட்டிருப்பதாலும் மாத இதழ்கள் சிறந்தனவாகக் கருதப்படுகின்றன.

வானொலி அறிவிப்புகளும் மாணவர்களுக்கு வேண்டிய செய்திகளை அளிக்கின்றன.

(ஐ) **இதர சாதனங்கள்:** நாள் இதழ், மாத இதழ்களுடன் வேறு சில சாதனங்களேயும், இக் கால நிகழ்ச்சிகளைக் கற்பிக்குங்கால் உபயோகித்தல் நலமெனக் கருதப்படுகின்றது.

பள்ளிகளில் செய்திப்பலகை ஒன்றை அமைத்தல் வேண்டும். இக் கால நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு ஆர்வம் ஏற்பட இச் செய்தி பலகையை உபயோகிக்கவேண்டும். இப் பலகையைப் பல தலைப்பின் கீழ்ப் பிரித்து அவற்றைப்பற்றிய செய்திகள், படங்கள், பாடத் துணுக்குகள் போன்றவற்றை வெளியிடவேண்டும். குறிப்பாக, 'கேள்விப்படங்களின் பகுதி' 'நம் இராச்சியம் செய்தியில் இடம் பெறுகின்றது' 'நிகழ்ச்சிகள் பற்றிய உலகப்படம்' 'நின்று, உற்று நோக்கி, சிந்திக்கவும்' போன்ற தலைப்புகளின்கீழ்க் குறிப்பிடத் தக்க செய்திகள் பற்றிய அறிவிப்பும், படங்களேயும் வெளியிடு வதால் அவற்றைப்பற்றிய முழு விவரங்களை அறிய மாணவர்கள் இயற்கையிலேயே விருப்பங்கொள்வர்.

அசைவுப்படங்கள், உலகப்படங்கள், உலக உருண்டை போன்றவையும், மற்றைய சாதனங்களும், 'இக் கால நிகழ்ச்சி சங்கம்' பள்ளிகளில் ஏற்படுத்தலும் வேண்டற்பாலது.

(ஒ) **இக் கால நிகழ்ச்சிகளைக் கற்பிக்கும் முறைகள்:** இக் கால நிகழ்ச்சிகளைக் கற்பிக்கப் பல முறைகள் உள்ளன. இக் கால நிகழ்ச்சிகளை மற்றையப் பாடங்களுடன் தொடர்புறுத்தாமல் தனித்தலைப்பாக நடத்தும்பொழுது பின்வரும் முறைகள் மேற் கொள்ளப்படுகின்றன.

(i) **தனியாள் ஒப்படைப்பு முறை** (The Individual Assignment Method): எடுத்துக்கொண்ட நிகழ்ச்சியின் தலைப்பின் பல பகுதிகளைச் சில மாணவர்களிடத்தில் பிரித்து ஒப்படைப்பாக அளித்துவிடுவது. ஒவ்வொரு மாணவனும் தனக்கு அளிக்கப்பட்ட ஒப்படைப்பைப் பூர்த்தி செய்வான். அது நாளிதழ் அல்லது மாத இதழ்களைப் படித்துச் செய்திகளைச் சேகரிக்கும் முறையில் அமையலாகும்.

வகுப்பு தினத்தன்று ஒப்படைப்பைப் பெற்ற ஒவ்வொரு மாணவனும் தன் தலைப்பு பற்றிய செய்திகள் சுருக்கத்தை வாய் மொழியாக எடுத்துக்கூறுவான். இதற்குப் பின் வகுப்பு மாணவர்கள் எல்லோரும் ஈடுபடும் உரையாடல் நடைபெறும்.

இம் முறையின் நல்ல பண்பு யாதென்றுல் திட்டமான தலைப்பைப் பற்றிச் செய்திகள் சேகரிப்பதும், அத் தலைப்பைப்

பற்றிய முழுச் செய்திகளையும் வகுப்பு மாணவர்கள் எல்லோரும் நன்கு புரிந்து கொள்ளுதலும் ஆகும்.

குறைகளை நோக்குவோமாயின், பின்வருவனவற்றைக் கூறலாம்:

(அ) தன் அறிக்கையைப் படித்ததும் அந்த மாணவன் மற்றைய அறிக்கையைப் பற்றிக் கவலைப்படாதவனாக இருந்து விடலாம். இதைத் தவிர்க்க எல்லா மாணவர்களும் குறிப்பு எடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தல் வேண்டும்.

(ஆ) அறிக்கையைப் படிக்கவேண்டிய பொறுப்பு அளிக்கப் படாத மாணவர்களும் பாடத்தில் கவனக்குறைவாக இருப்பதையும் இம் முறை நீக்கவல்லதாக இருக்கும்.

(ii) **குழுமுறை** (The Committee Method): ஒரு சில மாணவர்களுக்குச் செய்திகளைச் சேகரிக்கும் பொறுப்பை அளிப்பதற்குப் பதிலாக வகுப்பைப் பல குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு தலைப்பை ஒப்படைப்பது மற்றொரு முறையாகும். மாணவர்களைக் கூட்டுறவு முறையில் கற்கும்படி பழகுவதற்கும் இம் முறை ஏற்றதாகும்.

இதில் உள்ள குறைகளும் தனி ஆள் ஒப்படைப்பு முறையினை ஒட்டியதே ஆகும். ஒவ்வொரு குழுவிலும் உள்ள எல்லா மாணவர்களும் செய்திகளைச் சேகரித்துக் கற்று, மற்றவர்களுக்கு அறிக்கைமூலம் கூறுவர் என்று திட்டமாகக் கூற இயலாது. எனவே, எல்லா மாணவர்களும் கற்றலில் ஈடுபடுகின்றனர்களா வென்று ஆசிரியர் கவனிக்கவேண்டும்.

(iii) **ஒருங்குகூடி ஆராயும் முறை** (The Recitation Method): வகுப்பை நடத்தும் பொறுப்பை மாணவர்களே ஏற்று நடத்துவர். வேண்டிய தருணத்தில் ஆசிரியர் சில கருத்துகளைக் கூறுவார்.

ஒரு மாத இதழ் அல்லது வார இதழ் பாடப்புத்தகமாகக் கருதப் பட்டு, அதில் உள்ள தலைப்புகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கொள் வார்கள். அதைப் பற்றி ஆலோசித்தல் வகுப்பறையில் நடை பெறும்.

(iv) **வரலாற்று முறை** (Historical Method): இம் முறையை **டிரையான்** ஆசிரியர் வகுத்துள்ளார். இக் கால நிகழ்ச்சிகளில் ஒன்றை ஆசிரியர் தேர்ந்தெடுத்து, அதுபற்றிய பயிற்சிகளைத் தயாரித்து மாணவர்களுக்கு ஒப்படைப்புகளாக அளிக்கப்படு

கின்றது. தனி ஆள் ஒப்படைப்பு முறைக்கும் இதற்கும் உள்ள வேறுபாடு யாதெனில், இதில் ஒப்படைப்புகள் சில மாணவர் களுக்கு அளிக்கப்படுவதற்குப் பதிலாக, வகுப்புப் பூராவுக்கும் அளிக்கப்படும்.

(v) **குறிப்புப் புத்தக முறை** (The Notebook Method): வகுப்பில் உள்ள ஒவ்வொரு பாணவனும் தனக்குப் பிடித்த எட்டு அல்லது பத்து இக் கால நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்து வாரத்திற்கு ஒரு முறை தன் குறிப்புப் புத்தகத்தில் அவற்றின் சுருகத்தை எழுதிவரவேண்டும். அவற்றை ஆசிரியர் பரிசீலனை செய்ததும், இக் கால நிகழ்ச்சிக் குறிப்பேட்டில்' தக்க விளக்கப்படங்கள், நாள் அல்லது வார இதழ்களினின்றும் துண்டிக்கப்பட்ட துணுக்குள் போன்றவற்றுடன் எழுதவேண்டும்.

மேற்கூறிய முறைகள் யாவும் வெற்றியடைதல் ஆசிரியரின் உற்சாகம், கிடைக்கும் தளவாடங்கள், வகுப்பில் உரையாடல் செய்ய அளிக்கப்படும் உரிமை, தலைப்புகளைத் தேர்ந்தெடுக்கும் திறமை போன்றவற்றைப் பொறுத்துத்தான் ஏற்படும். வழக்கப்படித் தேர்வுகள் நடத்தல், செய்திகளின் சுருக்கத்தை எழுதும்படிச் செய்வது போன்றவற்றை இயந்திரம்போல் செய்தோமானால், இக் கால நிகழ்ச்சியைக் கற்பதில் மாணவர்களுக்கு ஒருவித உற்சாகமும் ஏற்படாது. மாணவர்களின் ஒத்துழைப்பைக் கொண்டு அவர்களின் இச்சையின் பேரிலேயே இப் பாடப் பிரிவேளைகள் நடைபெற வேண்டும்.

**வினாக்கள்**

(1) இக் கால நிகழ்ச்சிக்கும் வரலாறுக்கும் உள்ள வேறுபாடு யாது? இக் கால நிகழ்ச்சியை வரையறுத்துக் கூறுக.

(2) இக் கால நிகழ்ச்சியை நாம் ஏன் கற்பிக்க வேண்டும்?

(3) இக் கால நிகழ்ச்சிகளைக் கற்பிக்கப் பள்ளிக் கூடங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய முறைகளை விவரிக்க.

## (11) மதிப்பீட்டின் நோக்கும் தேர்வுகளும் (Evaluation approach and Testing)

**கல்வியில் மதிப்பீடு என்றால் என்ன?** பள்ளியில் நிகழும் கற்பித்தல், கற்றல் ஆகியவற்றால் விளையும் பயன்கள் மதிப்பீடு எனப் படுகின்றன. இது விரும்பிய ஒரு திசையில் மாணவன் பெற்றுள்ள

தேர்ச்சியைத் தொடர்ந்து மதிப்பிட்டு வரும் ஒரு முறை. 'தேர்வு' என்ற சொல்லை விட இதன் பொருள் பரந்ததாகும்.

**டாக்டர் பெஞ்சமின் புளூம்** (Dr Benjamin Bloom) என்பவர் மதிப்பீட்டில் அடங்கிய கூறுகளைப் பின்வருமாறு விளக்குகிறார்:

## மதிப்பீட்டின் நோக்கும் தேர்வுகளும்

(EVALUATION APPROACH AND TESTING)




**மதிப்பிடுதல் பற்றிய பொதுகருத்து** (The Concept of Evaluation): பிறர்பெற்ற அனுபவங்களோடு நம் அனுபவங்களையும் ஒட்டியே மதிப்பிடுதல் பற்றிய கருத்து உருவாகியிருக்கின்றது. மதிப்பிடுதலின் பெருங்கூறுகளாவன:

(i) கற்பிப்பதற்கு ஏற்றது எது?

(ii) எவ்வாறு சிறப்பாகக் கற்பிப்பது?

(iii) கற்பித்தல் எவ்விதம் நடைபெற்றுள்ளது?

முதல் கூறு, கற்பிப்பதின் நோக்கத்தைப் பற்றியதாகும். வரலாற்றுப் பாடம் கற்பிப்பதன் நோக்கம் யாவை என்று திட்டப் படுத்துவதாகும். பாடத்திட்டத்தை அமைத்த பிறகு அதை எவ்வித முறைகளால் கற்பிக்கவேண்டுமென்பதாகும். இதைத்தான் இரண்டாவது கூறு குறிப்பிடுகின்றது, மூன்றாவது கூறு, சோதனைகளின் முறைகளைப் பற்றியதாகும்.

மேற்கூறிய மூன்று கூறுகளுக்கிடையே நெருங்கியத் தொடர்புகள் உள்ளன என்பது விளங்கும். ஒரு கூறில் ஏற்பட்ட மாறுதல், பிற இரண்டு கூறுகளிலும் மாறுதல்களை ஏற்படுத்தும். கற்றல் நிலைபற்றிய பலவித உண்மைகளைத் திறன் ஆய்வு கொண்டு ஆராய்வதே மதிப்பிடும் முறைசெய்ய முற்படுகின்றது. எனவே, மதிப்பிடுதல் பின்வருவனவற்றைத் திட்டம் செய்ய முற்படுகின்றது:

(1) மாணவனின் நிலை என்ன?

(2) ஆசிரியரின் நிலை என்ன?

(3) கற்பிக்கும் முறைகளின் நிலை என்ன?

(4) கல்வித் திட்டத்தின் நிலை என்ன?

மேற்கூறிய திறன் ஆய்வில் ஒவ்வொன்றின் நல்ல பண்புகளும், குறைபாடுகளும் வெளிப்படுகின்றன. பள்ளிக்கூடப் பாடங்கள் ஒவ்வொன்றிலும் மாணவன் பெறும் அடைவையும், முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட நோக்கங்களில் மாணவனின் வளர்ச்சியையும் எடையிடு செய்யும் தொடர்பான செயலே மதிப்பிடுதல் ஆகும். தீர்மானிக்கப்பட்ட நோக்கங்களைத் தெளிவுபடுத்துவது மாணவனின் திட்டமான நடத்தையின் மாறுதல்களாகும்.

பள்ளியில் அளவீடுகள் (Measurements) என்பது மாணவன் ஒரு பாடத்தில் பெற்றிருக்கும் தேர்ச்சியைப் பற்றியதுதான். நிறையீடு (Assessment) மாணவனின் ஒழுக்க நெறிகள், மனப்பான்மைகள், குறிக்கோள்கள், பாராட்டுதல் போன்றவற்றை அளக்க முற்படுகின்றது. மதிப்பிடுதல் என்பது இந்த இரண்டு செயல்களையும் உள்ளடங்கப் பெற்றதாகும்.

**மதிப்பிடுதலின் சிறப்பியல்கள்**

(1) நடத்தையில் ஏற்படும் மாறுதல்களே மதிப்பிடுதலின் அடிப்படையாகும்.

(2) தொடர்ச்சியானதும், முழுமை பெற்றதுமான முறையாகும்.

(3) கற்பிப்பதன் நோக்கங்களை ஆரம்பமாகக் கொள்வதே மதிப்பிடுதலின் கருத்தாகும்.

(4) கல்விபற்றிய குறிக்கோள்களை எய்தப்பெறுவதே மதிப்பிடுதலின் கருத்தாகும்.

(5) நன்ருகத் திட்டம் செய்யப்பட்ட பாடம் சொல்லுதலே முழுமைப்படுத்தும் பகுதியாகவும், பலவற்றை உட்கொண்ட பொதுக்கருத்தாக இருப்பதும் மதிப்பிடுதலாகும்.

**மதிப்பிடுதலின் நுட்பங்கள்** (Techiques of Evaluation)

**(1) சோதனைகள்** (Tests):

(அ) அடைவுச் சோதனைகள் (Achievement tests):

(i) முறைப்படி இல்லாதவை ஆசிரியரால் அமைக்கப்படும் சோதனைகள்.

(ii) தரப்படுத்திய சோதனைகள் (standardized). இவற்றில் அகவயச் சோதனைகளும் (Subjective tests), புறவயச் சோதனைகளும் (Objective tests) அடங்கும்

(ஆ) நுண்ணறிவுச் சோதனை.

(இ) குண இயல்பு, ஆளுமைபற்றிய சோதனை.

(ஈ) நாட்டம் (Aptitude) பற்றியவை.

(உ) மனப்பான்மைப் பற்றியவை.

(ஊ) கவர்ச்சிப் பற்றியவை.

(2) தரம் பற்றிய அளவுகள் (Rating Scales) குறிப்பிடு பட்டியல் (Check lists)

( ) உற்று நோக்கிஅறிதல்

(i) கட்டுக்குட்பட்ட உற்று நோக்கல்.

(ii) கட்டுக்குட்படுத்தப்படாத நோக்கல்.

(4) பதிவுகளும், அறிக்கைகளும் (Records and reports)

(i) திறன்பதிவுகள் (Cumulative records)

(ii) வாழ்க்கை துணுக்குப் பதிவுகள் (Anecdotal records)

(5) மாணவர்களின் செயல் திட்டங்கள் (Students projects)

(6) சமூகஇயல் அளவை (Sociometry)

(7) நடிபங்கு (role playing)

(i) சமூக நாடகம் (Sociodrama)

(ii) உளநாடகம் (psychodrama)

(8) தனியாள் ஆராய்ச்சி (Case studies)

(9) வாய்மொழிச் சோதனையும் பேட்டி காணுதலும் (Oral tests and interviews).

(10) வரலாறு பாடம் கற்பிப்பதன் பல விதக் குறிக்கோள்களைப் பற்றிய விளைவுகளை எடையீடு செய்வதற்கு மேற்கூறிய நுணுக்கங்களைப்பயன்படுத்துதல்.

**குறிப்பு:** இது பற்றிய விவரங்களை உளவியல் புத்தகங்களில் கண்டு கொள்ளலாம்.

**மதிப்பீட்டின் தேர்வுகளின் பங்கு:** நாம் எந்த அலுவலைச் செய்தாலும், அவ்வலுவலைச் செய்யும்போதே இடையிடையிலோ அல்லது இறுதியிலோ அதைப்பற்றி மதிப்பிட வேண்டிய அவசியமாகிறது. இதேபோன்று கல்வியறிவுப் புகட்டும்போதும், அவ்வப்போது மதிப்பிடவேண்டிய தேவை ஏற்படுகின்றது.

வழக்கமாகப் பின்பற்றிவரும் பழைய தேர்வு முறைகளில் பல விதக் குறைபாடுகள் உள்ளன. இக் குறைகளை மனத்திற் கொண்டே கல்வியாளரும், பிறரும் தேர்வுகள் பயனற்றவையென்று கண்டிக்கத் தலைப்பட்டனர். தேர்வு தவிர்க்க முடியாத ஒரு தொல்லை என்றே கருதப்பட்டு வந்தது. ஆனால் தேர்வுகளைப் பற்றிய கருத்துகள் இன்று முற்றும் மாறிவிட்டன. கல்வித் திட்டத்தில் தேர்வு மிக இன்றியமையாதது என்பது நன்கு உணரப்பட்டு வருகின்றது.

### (1) தேர்வின் பயன்கள்

(i) தேர்வுகளால் பல விதப் பயனை நாம் அடைந்தாலும், குறிப்பிடவேண்டியது ஒன்றுகும். வரலாற்றுப் பாடத்தைக் கற்பிக்கும் நோக்கங்களை நாம் எய்தப் பெற்றேமா அல்லது இல்லையா என்பதைக் கண்டறிவதற்குத் தேர்வுகள் அவசியமாகத் தேவைப்படுகின்றன. நாம் வரலாற்றுப்பாடத்தைக் கற்பிக்கும் நோக்கங்களில் பின்வருவனவற்றைத் திரும்பவும் கூற வேண்டும்.

செய்திகளைச் சேகரித்து அறிவு பெறுதல், செய்திகளின் உண்மையை ஆராய்ந்து அறிதல், செய்திகளை வாழ்க்கையில் பயன்படுத்துதல்; படிக்கும் பழக்கத்தை வளரச்

செய்தல்; மக்களிடையேயும், நாடுகளிடையேயும் அனுதாபம், நல்லெண்ணம் பரவும்படிச் செய்தல்; உண்மையைக்கண்டறிய ஆவல்; குடிமைக்குவேண்டிய குண இயல்புகளைப் பெறுதல்; ஆய்வுச் சிந்தனையை வளர்த்தல்; சுடந்தகால நிகழ்ச்சிகளைச் சுவைத்தல்; நல்ல பழக்கம், மனப்போக்குகளை வளரச் செய்தல் பேன்றவைகள்.

மேற்கூறிய நோக்கங்களைப் பின்பற்ற வரவாற்றுப்பாடம் கற்பிக்கப்படுகின்றது. இவற்றை எய்தப் பெற்றேமா என்பதைச் சோதிக்கவேண்டியது இன்றியமையாத செயலாகும். இவற்றின் வெறும் பாடப்பொருள்களைக் கற்றுக்கொள்வதை மட்டும் சோதித்தால் போதாது; அவற்றைச் சரிவர புரிந்து கொண்டார்களா என்பதைத்தான் சரிவரத் தெரிந்து கொள்ளவேண்டும்.

(ii) நாம் ஏதாவதொரு காரியத்தைச் செய்துமுடிக்க முற்படும் போது ஒவ்வொரு நிலையிலும் அக் காரியத்தின் முடிவு மட்டுமே மனத்தில் அதிகமாக இடம்பெறும். நமது குறிக்கோளை அடைய இன்னும் செய்யவேண்டிய வேலையை மதிப்பிடுவதற்கு, அதுவரையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் அளவையும் மதிப்பிட்ட வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஒவ்வொரு பாடப்பகுதியிலும் அவ்வப்பொழுது படிக்கும் போதே தேர்ச்சி ஏற்பட்டு வருகிறதா என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே தேர்வுகள் பயன்படுகின்றன.

(iii) ஒரு பகுதியைக் கற்பித்து முடித்ததும் அதில் மாணவன் அடைந்துள்ள தேர்ச்சியைத் தேர்வின்மூலம் அறிகிறோம். அவன் படித்தது போதுமா, போதாதா என்பதை மாணவனுக்கு எடுத்துக் காட்டுவதின் வாயிலாக தேர்வு அவனை ஏற்ற அளவு முயற்சி செய்யத் தூண்டுகிறது. அஃதன்றியும் ஒருவரையொருவர் விஞ்ச வேண்டுமென்ற ஒரு போட்டி மனப்பான்மையை ஏற்படுத்திப் படிப்பில் ஊக்கம் உண்டாக்கச் செய்கிறது. விழிப்புடன் பாடங்களைக் கவனித்து உடனுக்குடன் படித்து முடித்துவிடவேண்டுமென்ற நியதியை ஏற்படுத்துகிறது.

(iv) ஆசிரியரது கண்கொண்டு நோக்கின் மாணவரது தேர்ச்சித் தரத்தைக் கொண்டு மாணவரைத் தர நிர்ணயம் செய்வதற்குத் தேர்வுகள் உதவுகின்றன; பொதுத்தரத்தை முடிவு கட்டவும் இவை உதவுகின்றன.

(v) தனிப்பட்ட ஒவ்வொரு மாணவனுடைய குறையைக் கண்டுபிடிப்பதற்கும், அவரவர் தேவைக்கேற்பப் போதனையை மாற்றியமைப்பதற்கும் தேர்வுகள் பயன்படுகின்றன. பயிற்றல் முறைகளில் குறைபாடுகள் இருந்தால் அவற்றைக் கண்டுபிடித்துத் திருத்திக் கொள்வதற்கும் இவை உதவுகின்றன,

**நல்ல சோதனையின் இன்றியமையாத கூறுகள்:**

**(1) புறவயத்தன்மை** (Objectivity): ஒரு சோதனையின் முடிவுகள் சோதனையாளரின் மனப்போக்குக்கு ஏற்றவாறு மாறு படாது. அதே சோதனையாளர் அந்தச் சோதனையை மறுமுறை செய்து பார்த்தாலும், அல்லது பல சோதனையாளர்கள் தனித் தனியே மதிப்பிட்டாலும் முடிவுகள் பெரும்பாலும் மாறுவதில்லை. இம்மாறுபடாத தன்மையினையே 'புறவடத் தன்மை' என்கிறோம். புறவகை வினாக்களில் மதிப்பிடுகோல் முன்னதாகவே தீர்மானிக்கப் பட்டுவிடுவதால் சோதனையாளர்களின் அகவயக்காரணிகளின் (Subjective factors) குறுக்கீடு வெகுவாகக் குறைக்கப்பட்டு விடுகின்றன.

**(2) நம்பகத் தன்மை** (Reliability): ஒரு குறிப்பிட்ட மாணவர் குழுவிற்கு மீண்டும் மீண்டும் ஒரு சோதனை கொடுக்கப் பட்ட போதிலும் அவர்கள் அளிக்கும் விடைகளின் தரம் மாறுபடா மலிருந்தால் அந்தச் சோதனை நம்பும் தரமானது எனப்படும். சோதனைத் தாள்கள் மிகவும் நம்பும் தரமுடையனவாக இருக்க வேண்டுமென்றால் வினாவமைப்பில் மொழித்தெளிவு, தேவைப்படும் திட்டவட்டமான விடை, மதிப்பிடும் துறையைப் பற்றிய தெளிவான குறிப்புகள் கொடுத்தல் முதலிய முன்னேற்பாடுகள் தேவை. பொது வாக, குறுகிய விடை வினாக்கள் அல்லது பலவின் தேர்தல் வினாக்களை விடக் கட்டுரை வினாக்கள் மிகவும் குறைந்த நம்பும் தரமுடையவை. பொதுத்தேர்வுகளில் வினாத்தாள்களின் நம்பும் தரத்தை முன்னதாக உணர்ந்து கொள்வது இயலாததாகும். ஆகவே படிப்படியாக, கட்டுரை வினாக்களின் எண்ணிக்கையைக் குறைத்து, பலவுள் தேர்தல் வினாக்களைச் சேர்த்துக் கொள்வது மிக்க நன்மை பயக்கும்.

**(3) ஏற்புடைமை அல்லது தகுதி** (Validity): குறிப்பிட்ட ஒரு திறனையோ, பண்பினையோ மதிப்பிட்டறிவதற்காக ஒரு சோதனை அமைக்கிறோம். அளந்தறிய முற்படும் திறனையோ அல்லது பண்பினையோ சரியாக அளக்க அச் சோதனை உதவுமாயின், அது ஏற்புடைமை உள்ளது எனப்படும். அதற்குப் புறம்பாக உள்ள வேறொன்றினைச் சோதிப்பதாக அச் சோதனை அமைந்தால் அது ஏற்புடைமை அற்றதாகும்

சில சிறப்பு நோக்கங்களைக் குறிப்பிடப்பட்ட பாடப்பொருளின் துணைகொண்டு சோதிப்பதற்காகவே ஒவ்வொரு வினாத்தாளும் அமைக்கப்படுகிறது. இவ்விரு செயல்களையும் அத் தாள் நன்கு இயற்றினால் அது தகுதியுள்ள சோதனையாக வினாத்தாள்களின்

தகுதியை அதிகத்படுத்துவதற்கு அதில் நோக்கம் அடங்கலேயும் பாடப்பொருள் அடங்கலேயும் அதிகப்படுத்த வேண்டும்.

**(4) பயனுடமை** (Practicability): நல்ல சோதனையின் பண்பு நடைமுறையில் பயன்படுத்த எளிமையானதாக இருத்தலேயாம். அதாவது அதை அமைக்க எடுக்கும் காலம், பொருள் ஆகியவற்றிலும், மதிப்பிடுதலின் நேரம், முடிவுகாணும் முறைகளில் எளிமை, சிக்கனம் ஆகியவை அனைத்தும் இதில் அடங்கும். இது இல்லாவிட்டால் அச் சோதனை பள்ளியில் பயன்படுத்த முடியாததாக அமையும்.

**(5) தரங்கள்** (Norms): ஒரு சோதனையை வைத்து அதைச் செய்த ஒருவனுக்குக் குறிப்பிட்ட மதிப்பெண் வழங்கினுல் மட்டும் அது பயனற்றது. பிறருடைய சோதனைகளுடன் அதை ஒப்பிட்டுப் பார்க்கின்ற நிலே ஏற்பட்டால்தான் அது பொருளுள்ளதாகவும், பயனுடையதாகவும் ஆகின்றது. இதற்குத் தரங்கள் உதவுகின்றன.

ஒத்த வயது, வகுப்பு அல்லது பள்ளி மாணவர்கள் ஒருதரப்படுத்தப்பட்ட சோதனைகளில் பெரும் சராசரி அடைவையே தர எண்கள் என்கிருேம்.

இவை வயதுத்தரங்கள் (Age Norms) படித்தரங்கள் (Grade Norms), நூற்றுமான தரங்கள் எண்கள் (Percentile Norms) என மூன்று வகைப்படும்.

**அடைவுச் சோதனைகள்** (Achievement Tests)

ஒரு குறிப்பிட்ட காலப்பயிற்சி அல்லது கற்றலுக்குப் பிறகு அத் துறையில் அல்லது அச் செயலில் அல்லது பாடத்தில் மாணவன் எந்த அளவுக்கு முன்னேற்றம் பெற்றிருக்கிருன் என்பதைச் சோதிக்கப் பயன்படும் சோதனை 'அடைவுச் சோதனே' எனப்படும்.

**அடைவுச் சோதனையின் பண்புகள்**

(1) மேல் வகுப்பில் மாற்றப்படுவதற்கு ஆதாரமாக அமைதல்.

(2) ஓர் ஆண்டு அல்லது ஒரு பயிற்சி தொடக்க காலத்தில் பல்வேறுபட்ட கல்விப் பிரிவுகளில் ஒவ்வொரு மாணவனின் நிலையையும் கண்டு கொள்ள உதவுதல்.

(3) ஒரு வகுப்பிலுள்ள மாணவர்களின் நிலையைத் தீர்மானிக்க உதவுதல்.

அவர்கள் மதிப்பீட்டில் ஒற்றுமை காண்பதரிது; வேற்றுமையே மிகுந்தது காணப்படும்.

(iii) கட்டுரைச் சோதனை ஏற்புடைமையிலும் குறைந்து காணப்படுகின்றது. மாணவர்களின் ஞாபக சக்தியைத்தான் சோதிக்க முடிகின்றது. அவர்களின் மற்றையத் திறமைகள் சோதிக்காமல் விடப்படுகின்றன. மேலும், கட்டுரைத் தேர்வுகளைத் திருத்தும்பொழுது, அத்தந்தக் கேள்விக்கான விடைகளில் பாடப் பொருள் அறிவை மட்டும் சோதிக்காமல், மொழிநடை, கையெழுத்தின் தெளிவு, எழுத்துப்பிழைகள் போன்றவை சோதிக்கப்படுகின்றன. பாடப்பொருள் அறிவை மட்டும் சோதிக்க முற்படும்போது மறைமுகமாக மேற்கூறிய திறன்களும் சோதனைக்குட்படுத்தப் படுகின்றன.

**புதுமுறைச் சோதனைகள்**

பொதுவாகப் புதுமுறைச் சோதனைகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

(i) **நினைவு கூர்வகை** (Recall type)

(ii) **மீட்டறிதல் வகை** (Recognition type)

முதல் வகையில் சில சமயங்களில் மாணவர்கள் சிந்தனை செய்து செயலாற்ற வேண்டியிருக்கும். இரண்டாவது வகையில், அத்தகைய சிந்தனை ஈடுபாடு தேவையில்லை. மாணவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் சரியான கருத்துப்பொருளையோ (Concepts) செயல்களையோ, விதிகளையோ ஒன்றுபோல் அமைத்திருக்கும் ஒரு கூட்டத்திலிருந்து தெரிந்தெடுக்க வேண்டியதேயாகும்.

**புதுமுறைச் சோதனையின் நன்மைகள்**

புதுமுறைச் சோதனைகளைப் **புறவயச் சோதனைகளென்றும்** வழங்குகின்றனர்.

(i) இவை புறவய நோக்குக்கு ஏற்ப அமைந்துள்ளன. ஒரு வினாவுக்குரிய விடை இதுவா அல்லது பிறிதொன்றா என ஐயப்படுவதற்கு இடமின்றி, ஒரு வினாவுக்கு ஒரு விடையை மட்டுமே சரியானதாக ஏற்றுக்கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. ஆகையால், விடையை மதிப்பிடுவதில் அகவயக்காரணிகளாகிய ஆய்வாளருடைய சொந்த விருப்பு, வெறுப்புகளுக்கோ அல்லது சொந்தக் கருத்துகளுக்கோ, மனப்போக்குகளுக்கோ இடமில்லை:

(ii) தேர்வுகளின் மதிப்பீடு புறவயத்தன்மை பொருந்தியிருப்பதால், நம்பகமானதாகவும் உள்ளது. நம்பகம் என்பது விடை

களின் மதிப்பீட்டைக் குறிக்கும்; ஒரே விடைத்தாளைப் பல ஆய்வாளர்கள் தனித்தனியே மதிப்பிட்டாலும், அம் மதிப்பீடு களிடையே வேற்றுமையில்லாதிருப்பின் அத் தேர்வை நம்பகமான தென்று கூறலாம்.

(iii) புறவயத்தேர்வுகள் (புதுமுறைச் சோதனைகள்) ஏற்புடை யனவாகவும் உள்ளன. அந்தந்த வினாவுக்கு ஏற்ற விடை என்ன வென்பது திட்டவட்டமாகத் தெரிகிறது. மதிப்பிடும்பொழுது, விடைகளைத் தவிர, மொழிநடை போன்ற வேறு எதையும் கருத்தில் கொள்வதில்லை.

(iv) மேலும், ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள எல்லாப் பொருளையும் உள்ளடக்கி வினாக்கள் கேட்கமுடிகின்றது. அதாவது முழு அறிவையும் சோதிக்க முடிகின்றது.

(v) புதுமுறைச் சோதனைகளின் விடைகளைத் திருத்துவது எளிது. பாரபட்சமின்றி ஆசிரியர் விடைகளைத் திருத்தமுடிவதால், மாணவர்களுக்கு ஆசிரியரைப்பற்றிய மதிப்பு உயர்கின்றது.

(vi) பாடப்பொருளைப் புரிந்துகொள்ளாமல் மனப்பாடஞ் செய்யும் கெட்ட வழக்கம் தானாகவே நின்றுவிடுகின்றது.

(vii) வகுப்பு மாற்றம், மாணவர்களின் பாடத்தேர்ச்சி முறையின்படி வரிசைப்படுத்தல் போன்ற வேலைகளுக்குத் திட்ட மான அளவுகாட்டும் கருவியாகப் புதுமைச் சோதனைகள் பயன்படு கின்றன.

### குறைபாடுகள்

(i) கல்வியறிவின் உயர் இலட்சியங்களாகிய மொழிநடை, சொல்லாக்கவன்மை, கட்டுரைவன்மை, காரிணகாரியத் தொடர்போடு சிந்தித்தல், ஒழுங்குபட வெளியிடுதல் ஆகியவற்றை வளர்ப் பதற்கோ அல்லது அவற்றைச் சோதிப்பதற்கோ வாய்ப்பில்லை. இத் தகைய திறன்களை வளர்ப்பதற்குக் கட்டுரை முறைத் தேர்வையையே நம்பியிருக்கவேண்டியிருக்கின்றது.

(ii) மாணவர்கள் சிந்திக்கும்போது, அவற்றை ஒழுங்கு படுத்துவதற்குச் சமயமில்லை. மாணவர்களின் ஆய்வுச் சிந்தனை எவ்விடத்தில் தவறுகின்றது, எப்பொழுது குத்துமதிப்பாகக் கூற ஆரம்பிக்கின்றான் என்பதை அறியமுடியாது.

(iii) இச் சோதனைகளை மிக்க கவனத்துடன் தயாரிக்க வேண்டும். ஆசிரியர் அதிக நேரம் செலவழித்துத்தான் இவ் வகைச் சோதனையைக் குறிக்கமுடிகின்றது.

**புதுமுறைச் சோதனைகளின் வகைகள்**

**(அ) நினைவு கூர்வகை** (Recall Type): நினைவு கூர்வகையில் இரண்டு பிரிவுகள் உள்ளன:

(i) ஒன்று, சுருக்கமான விடைகளை எதிர்பார்க்கும் சிறிய, எளிய நினைவு கூர்ச்சோதனை (Simple recall).

(எ-டு.) (1) மௌரிய வமிசத்தை நிறுவிய அரசர் யார்?

(2) தாஜ்மகால் யாரால் கட்டப்பட்டது?

(3) எவ்வாண்டு முதல் பானிப்பட் சண்டை ஏற்பட்டது?

**நன்மைகள்**

(1) ஊகித்து விடைகூறும் இயல்பை நீக்கிவிடும்.

(2) வினவுதல் இயற்கையாக அமைகின்றது.

(3) எளிய முறையில் வினாக்கள் அமைக்கப்படுகின்றது.

(4) மாணவர்களைக் கற்றலில் ஈடுபடுத்த ஊக்குவிக்கின்றது.

(ii) மற்றொருவகை, காலியிடங்களைத் தக்கவாறு நிரப்புமாறு அமைக்கப்படும் சோதனை (Completion type)

(அ) தலைக்கோட்டை சண்டை.........ஆண்டில் நிகழ்ந்தது.

(ஆ) ஹர்ஷர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவுக்கு வந்த சீன யாத்திரிகர்—.

**நன்மைகள்**

(1) நினைவு கூர்தலுக்குச் சிறந்த முறைச் சோதனை இதுவே யாகும்.

(2) திட்டவட்டமான விடையை மாணவர்கள் கூறும்படிச் செய்கின்றது.

(3) நம்பகம் இவ்வகையில்தான் அதிகம் ஏற்படுகின்றது.

**(ஆ) மீட்டறிதல் வகை** (Recognition Type): இதைப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன:

(i) மெய் பொய் சோதனைகள்.

(ii) பல்விடைச் சோதனை.

(iii) பொருத்தற் சோதனை.

(iv) கால வரிசைச் சோதனை.

(i) **மெய் பொய் சோதனைகள்** (True-false Tests): கொடுக்கப் பட்டிருக்கும் வாக்கியங்களில் எது மெய்யானவை என்பதைத் தேர்ந் தெடுக்கவேண்டும்.

நீண்ட வாக்கியங்கள், முக்கியமற்ற வாக்கியங்கள், விடையை எடுத்துக்கூறும் வாக்கியங்கள் போன்றவற்றைக் கொடுக்கக்கூடாது. முதல் நான்கு மெய்யானதாகவும், பிந்திய நான்கு பொய்யான தாகவும் கொடுப்பது சரியல்ல.

செய்திகள் பற்றிய அறிவையும், ஆய்வுச் சிந்தனையும் இம் முறைச் சோதனை மதிப்பிடுகின்றது. மனப்பாடம் செய்வதையும் புறக்கணிக்கின்றது.

(ii) **பல்விடைச் சோதனை** (Multiple choice): சரியான வற்றையோ அல்லது சிறந்த விடையையோ தேர்ந்தெடுத்தல். கொடுக்கப்பட்டுள்ள விடைகளெல்லாம் சரியான விடைகள் போல்தான் இருக்கும். ஆனல், அவற்றில் ஒரே ஒரு விடைதான் சரியானதாகும்.

(எ–டு.) கீழ்வரும் கேள்வியை அடுத்து நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. கேள்விக்கு அடுத்துள்ள அடைப்பில் சரியான விடையின் இலக்கத்தைக் குறிப்பிடுக.

அக்பர் ஒரு தேசிய அரசர் என்று புகழப்படுவதற்குக் காரணம் (  )

(அ) அவர் இளமையில் அரசெய்தினர். (  )

(ஆ) அவர் மிகுந்த போர்த்திறமை வாய்ந்தவர். (  )

(இ) அவர் எல்லா மதத்தினரிடமும் ஒன்றுபோல் நடந்து கொண்டார். (  )

(ஈ) தீன் இலாஹி மதத்தை நிறுவினர். (  )

**நன்மைகள்**

(அ) பாடப்பொருளின் தன்மைகளை வேறுபாடு செய்து சரியானதை உணரவும், உய்த்துணரவும் முடியும்.

(ஆ) சரியான விடையைப் பல வகையாகக் குறிப்பிட்டு கூறும்பொழுதும், விடை நீளமானதாக இருக்கும்பொழுதும், எளிய நினைவுகூர் சோதனைகுப் பதிலாகவும் இம் முறையை மேற்கொள்காளலாம்.

(இ) மாற்று விடைகள் குறைந்தது நான்காக இருப்பதால் குத்துமதிப்பாக விடைகளைக் கூறுதல் மிகவும் குறைக்கப்படு கின்றது.

(iii) **பொருத்தற் சோதனை** (Matching type): பலவிடைத் தேர்வுச் சோதனையிலுள்ளதுபோலவே, இங்கும் மாணவர்களுக்கு மீட்டறியும் ஆற்றல் அவசியமாகிறது. குறிப்பாக, திட்டமான பாடப் பொருளை மீட்டறிவதற்கும், பாடப்பொருளின் தொடர்புகளை அறிந்து கொள்வதற்கும் இவ் வகைச் சோதனை ஏற்றதாக இருக்கின்றது. தகுந்த பிரிவுகளில் தகவல்களை வகைப்படுத்தும் திறமையையும் வளர்க்கின்றது. தேதிகளை நிகழ்ச்சிகளுடனும்; படைத் தலைவர் களை அவர்கள் போரிட்ட சண்டைகளுடனும்; புதியன கண்டு பிடித்தவர்களை, கண்டுபிடித்தவற்றுடனும்; எழுத்தாளர்களை, அவர் களின் நூல்களுடனும்; அரசியல்வாதிகளை, அவர்கள் பின்பற்றியக் கொள்கைகளுடனும்; காரணங்களை முடிவுகளுடனும் பொருந்தும் படிச் சோதனையை அமைக்கலாம்.

(எ-டு.) கீழே இரண்டாவது பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள கட்டடம் முதல் பத்தியில் கூறப்பட்டுள்ள ஒரு அரசரால் கட்டப் பட்டது. பொருத்தமான விடையை அடுத்துள்ள அடைப்புகளில் குறிப்பிடுக:

| பத்தி 1. | பத்தி 2. | விடை |
|---|---|---|
| (1) மாமல்லன் | (1) குதுப்மினர் | (   ) |
| (2) அசோகர் | (2) தாஜ்மஹால் | (   ) |
| (3) இராசராசசோழன் | (3) சாரநாத் சிம்மத்தூண் | (   ) |
| (4) அக்பர் | (4) பிரகதீஸ்வரர் ஆலயம் | (   ) |
| (5) ஆல்டாமிஷ் | | |
| (6) ஷாஜஹான் | | |

(iv) **காலவரிசைச் சோதனை** (Time Sequence test) வரலாற்று கால வரையறையைப் பற்றிய சரியான அறிவு மாணவர்களுக்கு ஏற்படுதல் வேண்டும். இவ்வறிவைச் சோதிப்பதற்குக் காலவரிசைச் சோதனை ஏற்றது.

(எ—டு.) கீழ்கொடுக்கப்பட்டிருக்கும் ஐந்து வாக்கியங்களுக்கு முன் காலி இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அவ் வாக்கியங்களைப் படித்து அவற்றைக் காலவரிசைப் படுத்த அதற்கேற்ப 1, 2, 3, 4, 5 என்ற இலக்கங்களை அடைப்புகளில் குறிக்கவும்.

| | |
|---|---|
| பிளாஸி சண்டை | (   ) |
| இந்தியா சுதந்திரம் அடைந்தது | (   ) |
| முதல் சுதந்தர முழக்கம் | (   ) |
| மாண்டகு—செம்ஸ்போர்ட் சட்டம் | (   ) |
| ஒழுங்குமுறைச் சட்டம் | (   ) |

(v) **மனப்பான்மை, சமூகத்திறன் ஆகியவற்றைச்சோதித்தல்:** படிப்பறிவில் மேன்மேலும் தேர்ச்சி காண வேண்டின், அவ்வப்போது தேர்ச்சியைச் சோதிக்கவேண்டியிருக்கின்றது. சமூகப்பாடம் பயிற்றுவதின் நோக்கம் படிப்பறிவனவற்றை வளரச் செய்தல் மட்டு மல்ல; அதன் பயனாகச் சமூகத்திறன்களும், சரியான மனப்பான் மைகளும் வளர்ந்த இறுதியில் ஆளுமை உருவாக வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். இத் திசையில் முன்னேற்றம் காணவேண்டின் மாணவனது சமூகத்திறன்கள், மனப்பான்மைகள் ஆகியவற்றைச் சோதிக்கவேண்டும். உடன்படிக்கும் மாணவர்கள், ஆசிரியர், மற்றவர்களோடு பழகும் தன்மை, சமூகத்தில் அந்தந்தச் சூழ்நிலைக் கேற்பப் பழகத்தெரிந்து கொள்ளுதல் போன்ற சமூகத்திறன்கள், சமூக இயல்பு வாய்ந்த ஒவ்வொருவருக்கும் தேவைப்படுகின்றன. நாம் பெறும் ஏட்டறிவுக் கல்வி, சமூகச் சூழ்நிலையிலிருந்து பெறும் கல்வி ஆகியவற்றால் நமது மனப்பான்மைகள் நாளடைவில் உருவா கின்றன. நாம் பெறும் கல்வியின் தன்மையைப் பொறுத்து, நமது மனப்பான்மைகள் சரியானவையாகவோ, அல்லது தவறானவை யாகவோ அமையலாம். ஒருவனது ஒழுக்கம் பெரிதும் அவனது மனப்பான்மைகளைப் பொறுத்தே அமையும். ஆகையால் மாணவரிடம் சரியான மனப்பான்மைகள் ஏற்படும் வகையில் முயற்சி செய்தல்வேண்டும்.

சமூகத் திறன்களையும், மனப்பான்மைகளைச் சோதிக்க இரண்டு முறைகளைப் பின்பற்றலாம். அவையாவன:

(i) தேர்வு முறை (Paper tests);

(ii) உற்று நோக்கியறியும் முறை (Observation).

**தேர்வுமுறை**

புதுமுறைச் சோதனைகளைக் கொண்டு மனப்பான்மைகளைச் சோதிக்கப் பயன்படுத்தபடுகின்றன. கெல்லி, கிரே (Kelley and Krey) என்னும் ஆசிரியர்கள் இது பற்றிய சோதனைகளை அமைத்துள்ளனர். பல வாக்கியங்களைக் கொடுத்து, அவற்றில் எவற்றை மாணவன் ஒத்துக்கொள்கின்றானோ, அவற்றைக் குறிக்கும்படி வினாக்கள் அளிப்பது.

(எ-டு.)

(i) எவ்விதத் தடைகள் ஏற்படினும் மதுவிலக்கை அமுல் நடத்தவேண்டும்.

(ii) சண்டையைத் துவக்குவதைவிட, அவமதிப்புகளை ஏற்றுக் கொள்ளலாம்.

(iii) முன்னேற்றத்திற்குப் போகும் உடன்படிக்கைகளும் வேண்டும்.

(iv) எல்லா நாடுகளிலும் பொது உடமைக் கொள்கை பரவ வேண்டும்.

(v) வீட்டின் நலன், குடும்ப ஒற்றுமை போன்ற யாவற்றையும் பொதுவுடைமைக் கொள்கை அழித்துவிடும்.

**குறைபாடுகள்**

(அ) ஆசிரியர் விரும்பும் விடைகளை மாணவர்கள் அளித்து விடக் கூடும். மாணவர்களின் உண்மையான மனப்பான்மையை அறிய வாய்ப்பில்லாமல் போய்விடக்கூடும்.

(ஆ) உண்மையான மனப்பான்மை எதுவாக இருக்கவேண்டுமென்பதை மாணவர்கள் அறிந்துகொள்வார்கள். எனவே, அதற்கு ஏற்ப விடையை அளித்துவிட்டு, வாழ்க்கையில் வேறுவிதமாக நடந்து கொள்ளவும் கூடும்.

(எ-டு.) பின்வரும் காரணம்பற்றி வகுப்பு அறையைச் சுற்றிலும், பள்ளியின் சூழலிலும் காகிதத் துண்டுகளை எறிந்துவிடும் பழக்கத்தை நீக்கவேண்டும்.

(அ) ஏவலாள் செய்யும் பணியின் பளுவைக் குறைக்கின்றது.

(ஆ) பள்ளியின் அழகை அதிகரிக்கின்றது.

(இ) நல்ல குடிமைப் பண்பு மாணவர்களிடம் வளர்ச்சியடைய உதவுகின்றது.

இச் சோதனையில் சரியான விடையை அளித்து வகுப்பறையை விட்டு வெளியே வந்ததும், அந்த விடைத்தாளையே பல துண்டுகளாகக் கிழித்துத் தூவிவிட்டு மாணவன் செல்வான். எனவே, இச் சோதனையைப் பின்பற்றி ஒருவரின் ஒழுக்கத்தை உருவாக்கும் தொட்டறிய முடியாத பண்புகளைத் தவறின்றிச் சோதிக்க முடியுமா என்ற சந்தேகம் ஏற்படுகின்றது.

**உற்றுநோக்கியறியும் முறை**

இச் சோதனைகளை நம்பகமாக்குவதற்கு மாணவர்களைப் பேட்டி காணுதலையும், உற்றுநோக்கியறியும் முறையையும் பயன்படுத்த வேண்டும். மாணவர்களைப் பல்வேறு சூழ்நிலைகளில் இயங்குவதற்கான வாய்ப்புகள் பல அளித்து அந்தந்தச் சூழ்நிலையிலும் ஒவ்வொரு மாணவனும் எவ்வாறு இயங்குகின்றான் என்று ஆசிரியர்கள் கண்காணித்து வரவேண்டும். நீண்டகால அடிப்படையில் இவ்வாறு உற்றுநோக்கிச் செய்யப்படும் முடிவே சிறந்ததாகும். ஒரு மாணவனைப்பற்றி ஒவ்வோர் ஆசிரியரும் செய்த முடிவை ஒப்பிட்டுச் செய்யும் பொது முடிவு சாலச் சிறந்ததாகும். இவ்வாறு செய்யப்பட்ட முடிவைக் கொண்டு மாணவனைத் திருத்துவதற்கு ஏற்ற வழிவகைகளைப் பின்பற்றலாம்.

**வினாக்கள்**

(1) கல்வியில் மதிப்பீடு பற்றிய பொதுமைக் கருத்து யாது?

(2) மதிப்பிடுதலின் சிறப்பியல்கள் யாவை?

(3) கல்வித் திட்டத்தில் தேர்வு மிகவும் பயனுடையது என்பதற்குக் காரணங்கள் கூறவும்.

(4) நல்ல சோதனையின் இன்றியமையாத கூறுகள் யாவை?

(5) அடைவுச் சோதனையின் நன்மைகளைக் கூறுக.

(6) சோதனைகளின் வகைகள் யாவை? அவற்றின் நிறைகளையும் குறைகளையும் கூறுக.

# பின்னிணைப்பு

## 1. இங்கிலாந்து—டியூடர், ஸ்டுவர்ட், ஹனேவர் வமிசத்து அரசர்களின் வமிசாவளி



## ஹனோவர் வமிசம்

முதலாம் சார்லஸ்
(1605—49)

எலிசபெத் (m) பேளாட்டின் இளவரசர்

இரண்டாம் சார்லஸ்
(1660—85)

இரண்டாம் ஜேம்ஸ்
(1685—89)

ரூபர்ட் இளவரசர்

ஸோபியா
(m)
ஹனோவர்
இளவரசர்

மூன்ரும் (m) மேரி
வில்லியம்
(1689—1702)

ஆன்
(1702—14)

ஜேம்ஸ் எட்வர்ட்
(பழைய புரட்டன்)

சார்லஸ் எட்வர்ட்
(இளைய புரட்டன்)

முதலாம் ஜார்ஜ்
(1714—27)

இரண்டாம் ஜார்ஜ்
(1727—60)

பிரடரிக்
(வேல்ஸ் இளவரசர்)

மூன்ரும் ஜார்ஜ்
(1760—1820)

## 2. கூர் உருளை அனுபவங்கள்




எட்கார்டேல் அமைத்த கூர் உருளை அனுபவங்கள்

(Edgar Dale's Cone of Experience)

# 3. கற்பிக்க உதவும் துணைக் கருவிகள்




(பட விளக்கம் பின்பக்கம்)

குறிப்பு:

**அச்சிட்டது**

(1) பருவ வெளியீடு

(2) புத்தகங்கள்

(3) நாள் இதழ்கள்

**காட்சிக் கருவிகள்**

(4) நழுவங்கள்

(5) படச்சுருள்கள்

(6) மாதிரி உருவங்கள்

(7) வரைபடங்கள், கருத்துப்படங்கள்

(8) படங்கள்

(9) பூமி உருண்டை, தேசப்படம்

**செவிசார் துணைக்கருவிகள்**

(10) பதிவுகள்

(11) ஒலிபதிப்புத் தட்டுகள்

(12) வானொலி

**காட்சி-கேள்விக் கருவிகள்**

(13) அசைவுப் படங்கள்

(14) தொலைக்காட்சி

# 4. காலக்கோடு – விளக்கப்படம்
## (TIME LINE)
### இந்தியா – ஆங்கிலேயர் காலம்
### (1850 – 1900)




(அளவு: 1 செ.மீ. = 1 ஆண்டு)

# காலக்கோடு - விளக்கப் படம்

## (TIME LINE)

### இந்தியா - ஆங்கிலேயர் காலம்

### (1900 - 1950)



## 5. பாபர் பற்றிய வட்டவடிவ காலக் கோடு

**( TIME LINE OF BABAR )**



## 6. சர்வதேச சங்கத்தில் உலக மக்கள் தொகையின் வீதம்

(The Proportion of the Worlds Population in the League of Nations)

விளக்கப்படம் (Diagramatic Chart)




BLACK = MEMBERS WHITE = NON-MEMBERS

குறிப்பு:- கரிய நிறப் பகுதி — அங்கம் வகித்தோர்.

வெள்ளை நிறப் பகுதி — அங்கம் வகிக்காதவர்கள்,

# 7. ஐக்கிய நாடுகளின் அமைப்பு ( U.N.O ) –

விளக்கப் படம் (CHART)




**தனிச்சிறப்புச் செயலாண்மை நிலையங்கள்**

UNESCO—கல்வி, விஞ்ஞான, பண்பாட்டு நிறுவனம்.

FAO—உணவு, விவசாய நிறுவனம்.

WHO—உலக சுகாதார நிறுவனம்.

ILO—சர்வதேசத் தொழிலாளர் நிறுவனம்.

# 8. மறுமலர்ச்சி

## (THE RENAISSANCE) - DIAGRAMATIC CHART




குறிப்பு: ரோமப் பேரரசு வீழ்ச்சிக்குப் பிறகு ஐரோப்பாவில் இருண்ட காலம் தோன்றியதையும், பல நூற்றாண்டுகள் போராட்டத்திற்குப் பிறகு இடைக்கால மனிதன் உன்னத நிலைக்கு வந்து முன்னேற முடிந்தது என்பதையும் விளக்குகின்றது.

# 9. தொழிற்புரட்சி

## (INDUSTRIAL REVOLUTION)-DIAGRAMATIC CHART




குறிப்பு: தொழிற்புரட்சியும், அதன் விளைவுகளும் விளக்கப்பட்டுள்ளன. படவுருவில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை நினைவிலிறுத்திக்கொள்ள இவ் விளக்கப்படம் உதவும்.

# மேற்கோள் நூற்பட்டியல்

## (Bibliography)


1. Teaching of History in Elementary and Secondary Schools by Henry Johnson (MacMillan, New York).
2. The Approach to History by F. C. Happold (Christophers).
3. How to read History by A. Robertson (C. A. Watts).
4. The Teaching of History by V. D. Ghate (Oxford University Press).
5. Creative Teaching of History by K. D. Ghosh (O. U. P.).
6. The Teaching of History by E. L. Hasluck (Cambridge University Press, London).
7. Suggestions for the Teaching of History by C. T. Hill (UNESCO).
8. The Teaching of History by C. H. Jarvis (O. U. P.).
9. Studies in the Teaching of History by M. W. Keatings (A & C Black).
10. The Teaching of History by P. Klapper, Ph. D. (D. Appleton Century Company, London & New York).
11. History in Schools by H. A. Drummond.
12. The History Lesson by A. A. Cock.
13. History in the Secondary Schools by C. F. Strong (U. L. P.).
14. History and Its Place in Education by G. G. Findlay.
15. How to Study and Teach History by B. A. Hinsdale.
16. Historiography by Prof. N. Subramaniam (Koodal Publishers, Madurai).
17. A Hand Book for History Teachers by R. Vajreswari (Allied Publishers, Madras).

18. The Social Sciences as School Subjects by Rolla M. Tryon (Ginn, Boston).

19. The Teaching of History by S. K. Kochar (Sterling Publishers, New Delhi).

20. Teaching the Social Studies in Secondary Schools by A. C. Bining and D. H. Bining. (McGraw Hill, New York).

21. Teaching the Social Studies by E. B. Wesley (D. C. Heath & Co., Boston).

22. Teaching the Social Studies by Francler, D. G. and Crawford C. C. (C. C. Crawford, Los Angeles).

23. Making History Graphic by D. C. Knowlton (New York, Scribners).

24. The Teaching of History in Schools by Worts, F. R. (London: Heinemann).

25. Current Events Instruction by R. S. Kimball and others (Hougton Mifflin, Boston).

26. Essays on the Teaching of History by Maitland and others.

27. The New History by Robinson, J. H.

28. Encyclopaedia Britannica — Article on History by Shotwell, J. T.